நமது தமிழ் நாடு—4

# தஞ்சாவூர் மாவட்டம்

'சோமலெ'

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற்பதிப்பு: நவம்பர், 1961
உரிமை ஆசிரியர்க்கே

LOCAL LIBRARY AUTHORITY
Date
MADURAI

விலை ரூ. 6-00

ஜெனரல் பிரிண்டர்ஸ், சென்னை-3

# சிறப்புரை

தமிழ் நாட்டில், எழுத்தாளர் ''சோமலெ'' அவர்களை அறியாதவர் இல்லை. தமிழ் வளம் பெற பணிபுரியும் நல்ல தொண்டர் இவர். இவர் எழுதிய நூல்கள் பல முன்னரே வெளிந்துள்ளன. பிறர் அரிதாக எழுதும் துறைகளில் இவர் நுழைந்து சிறந்த நூல்களை எழுதி அளித்துள்ளார்.

இவர் இப்போது எழுதிவரும், தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களின் வரலாற்று வரிசையில் ''தஞ்சாவூர் மாவட்டம்'' என்னும் இந்நூல் வெளிவருகின்றது. தமிழ் மொழியில் இத்தகைய நூல்கள் செவ்விய முறையில் வெளிவருதல் இதுவே முதன் முறையாகும். தஞ்சை மாவட்டத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் ஒருவாறு அறிய விழைவோர்க்கு இந்நூல் பெரிதும் துணைபுரிகின்றது.

சோழ வளநாடு சோறுடைத்து ; தண்ணீரும் காவேரி, தார்வேந்தனும் சோழன், மண்ணுவதும் சோழ மண்டலமே, என்றெல்லாம் பேசப்படும் சோழநாட்டின் சிறந்த பகுதி தஞ்சை மாவட்டம். தஞ்சை மாவட்டத்தைத் தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்ற அளவில்தான் பொதுமக்கள் அறிவர். இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போரும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் ஒருங்கே வாழ்கின்ற இடம் இம் மாவட்டமாகும். பசி நடக்காமல் ஏர் நடக்கும் இம்மாவட்டத்தில், இயல் இசை நாடகம் நடந்தன ; சீர் நடந்தன ; திறம் நடந்தது ; திருவறத்தின் செயல் நடந்தது ; பார் நடந்தது ; படை நடந்தது. வீரச் செருக்கால் வெளிநாடுகளை வென்றும், வாணிபப் பெருக்கால் உலக நாடுகளுடன் உறவு கொண்டும், கலைச் செல்வத்தால் எல்லா மக்களுக்கும் இன்பத்தை வழங்கியும் இம் மாவட்டம் சிறப்புற்றது. அரசியல் வரலாறு, சமய வரலாறு, பண்பாடு, நாகரிகம் ஆகிய பல தனிச் சிறப்புக்கள் இம்மாவட்டத்திற்கு உண்டு. இன்றைய அரசியல் வல்லுநர்களும், ஆட்சித்தலைவர்களும் வியக்கும் வண்ணம் நாட்டின் ஆட்சி முறை பண்டைக் காலத்தில் இங்கு இயங்கியது.

நீர்வளம், நிலவளம், கடல்வளம், கனிவளம், காட்டு வளம் ஆகிய இயற்கை வளம் இங்கு மிக்குள்ளன. சிற்பம்,

ஓவியம், இசை முதலிய கவின்கலைகளுக்கும், கைத்திறத் தொழில்களுக்கும் தஞ்சை மாவட்டமே தாயகமாகும். புலவர், புரவலர், அறிஞர், வீரர், கவிஞர், கலைஞர், துறவிகள், அடியார் பலரையும் ஈன்றெடுத்து இம்மாநிலம் உலகிற்கு வழங்கியுள்ளது. சைவம் வைணவம், பௌத்தம், சமணம், அத்வைதம் முதலிய சமயங்கள் வளர்ந்த இடம் இங்குதான். இன்றும் தமிழ் மணம், தெய்வ மணம், கலை மணம் கமழும் நிலைக்களம், இதுதான்.

சென்ற தேசவிடுதலைப் போரில் இம்மாவட்டம் பெரும் பங்கு எடுத்துக் கொண்டு சிறந்த தொண்டாற்றியுள்ளது. பண்டைப் பெருமைக் கேற்ப இன்றைய நாளிலும் அரசியல் துறைகளிலும், விடுதலையடைந்த நாட்டின் முன்னேற்ற ஆக்க வேலைகளிலும், வட்டார வளர்ச்சியிலும் இம்மாவட்டம் முன்னணியில் நிற்கின்றது.

இவை போன்ற பயன்தரும் செய்திகளையும் மாவட்டத்திற்கான தேவைகளையும் ஆசிரியர் இந்நூலில் ஆங்காங்கே சுவையுடனும், வேண்டும் அளவும் எழுதியுள்ளார். நம் நாட்டிலுள்ள ஊர்களுக்கு, இடைக்காலத்தில் தலபுராணங்கள் எழுதத் தொடங்கியதின் விளைவாகப் பல ஊர்களின் உண்மைப் பெயர்களும், வரலாறுகளும் மறைந்தொழிந்தன. இந்நிலையில் ஆசிரியர் இம்மாவட்டத்திலுள்ள பல ஊர்களின் உண்மைப் பெயர்களையும், வரலாறுகளையும் ஆராய்ந்தறிந்து இந்நூலில் தருகின்றார். இக்காலத்தில் வெளியாகும் நூல்களில் பல, கொச்சைச் சொற்களால் எழுதப்பெற்றும், இலக்கணப் பிழைகள் மலிந்தும் காணப்படுகின்றன. அவை போல் அல்லாமல் இந்நூல் இனிய செந்தமிழில், எளியநடையில் வெளிவருவது பாராட்டற்குரியது.

இந்நூலாசிரியருக்குத் தமிழ் கூறு நல்லுலகும் சிறப்பாகத் தஞ்சை மாவட்டமும் என்றும் கடப்பாடுடையன.

தஞ்சை வரலாறு தந்தான் இலக்குமணன்
செஞ்சொல்தமிழில் தெரிந்து.

மதுரை, 22—11—1961.

S. இராமச்சந்திரப் பத்தர்
டெப்டி கலெக்டர்

# முன்னுரை

தஞ்சை மாவட்டம் பொன்நாடு; புனல் நாடு; தஞ்சம் தரும் வளநாடு; பஞ்சமும் நோயும் அணுகா நாடு.

'உலர்ந்த நெல்லைத் தின்னவரும் கோழிகளை, பெண்கள் தங்கள் காதிலே அணிந்துள்ள பொற் குழையால் எறிந்து விரட்டுவார்களாம். உப்பு வணிகர் நெற்பயிரிலே தங்களின் ஓடத்தைக் கட்டுவார்களாம். அறச்சாலைகளிலே சோறு ஆக்கிய கொழுங்கஞ்சி, தெருவிலே ஆறு போலப் பரந்து செல்லுமாம். என்று சங்க இலக்கியங்கள் இம்மாவட்டத்தைச் சிறப்பிக்கின்றன.

இத்தகைய மாவட்டத்தின் வரலாற்றையும் செய்திகளையும் இந்நூலில் தர முயன்றிருக்கிறேன். இதற்காக மாவட்டத்தின் பல பகுதிகளையும் மிக விரிவாகச் சுற்றிப் பார்த்தேன். இப்பயணத்தின் பயனாக, பாடல் பெற்ற தலங்களையெல்லாம் கண்டு வழிபடும் பேறு பெற்றேன்.

பலதுறைகளில் சிறந்து விளங்கும் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிய நூல் இவ்வரிசையில் பிற நூல்களைவிட மிகப் பெரிதாக அமைந்திருக்கிறது. தஞ்சையின் பெருமையைத் தக்கவாறு உணர்த்த இதைவிடப் பெரியநூல் எழுதவேண்டும்; எழுதவும் இயலும்.

இந்நூலில் விடுபட்ட செய்திகளையும் பிற குறைபாடுகளையும் அன்பர்கள் சுட்டிக்காட்டி எனக்கு எழுதுவார்களாயின், பயனுடையதாக இருக்கும்.

அரிய செய்திகளைத் தெரிவித்தும் யான் சென்ற இடங்களிலெல்லாம் எனக்கு ஒல்லும் வகையால் உதவியும் பல நண்பர்கள் இந்நூலை உருவாக்கத் துணை புரிந்துள்ளனர். அவர்களின் பெயர்ப் பட்டியலை, நூலின் இறுதியில் தந்திருக்கிறேன். அவர்களுடைய பேரன்புக்கு என் நன்றி உரியது.

என் இனிய நண்பரும் இராமநாதபுர மாவட்டத்துத் தனி டெப்டி கலெக்டராக மதுரையில் பணியாற்றி வருபவர்களுமாகிய உயர்திரு. எஸ். இராமச்சந்திரப் பத்தர் அவர்கள் இந் நூலுக்கு ஒரு சிறப்புரையை அன்புடன் அளித்துள்ளார்கள். இவர்கள் சிறந்த தாய் மொழிப் பற்றும், ஆழ்ந்த இலக்கண இலக்கியப் புலமையும், பேச்சு வன்மையும், எழுதும் திறனும், நல்லியல்புகளும் நிரம்பப் பெற்றவர்கள்; தஞ்சை மாவட்டத்தினர். அம் மாவட்டத்திலேயே அரசாங்க அலுவல்கள் பலவற்றில் பல்லாண்டுகளாகப் பணி புரிந்தவர்கள்; சிறு தொழில்கள் அம்மாவட்டத்தில் பெருகவும் தஞ்சைக் கலைக்கூடம் அமையவும் அரும்பாடு பட்டவர்கள். அன்னாருடைய அருமையான சிறப்புரை இந் நூலை அணி செய்வது எனக்குப் பெருமகிழ்வு தருகிறது.

சென்னை
*23—11—1961*

'சோமலெ'

# உள்ளுறை


1. தோற்றுவாய் ... 9
2. கனிவளம் ... 15
3. காட்டுவளம் ... 18
4. வரலாறு ... 20
5. வாழும் மக்கள் ... 36
6. சமய நிறுவனங்கள் ... 43
7. வேளாண்மை ... 64
8. கல்லணை ... 79
9. தொழிலும் வாணிகமும் ... 87
10. போக்குவரத்து வசதிகள் ... 93
11. மருத்துவ வசதிகள் ... 110
12. கல்வி நிலை ... 120
13. சரசுவதி மகால் ... 139
14. கலைகளின் தாயகம் ... 143
15. உரிமைப் போர் ... 176
16. தமிழ்த் தொண்டு ... 183
17. கிழக்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம் ... 195
    1. மன்னார்குடி வட்டம் ... 195
    2. திருத்தருப்பூண்டி வட்டம் ... 200
    3. மாயூரம் வட்டம் ... 210
    4. சீகாழி வட்டம் ... 235
    5. நாகப்பட்டினம் வட்டம் ... 247
    6. நன்னிலம் வட்டம் ... 279
18. மேற்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம் ... 287
    1. தஞ்சாவூர் வட்டம் ... 287
    2. ஒரத்தநாடு வட்டம் ... 303
    3. பட்டுக்கோட்டை வட்டம் ... 312
    4. அறந்தாங்கி வட்டம் ... 330
    5. கும்பகோணம் வட்டம் ... 340
    6. பாபநாசம் வட்டம் ... 377
19. குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ... 383
20. பிற்சேர்க்கை ... 394

# BIBLOGRAPHICAL DATA

Author's Name : S. M. L. Lakshmanan Chettiar, (Somalay, pseud.) b. 1921

Title : Thanjai Maavattam

Vol. No. 4 in a series of BooKs entitled " Namathu Tamilnadu "

Language : Tamil

Edition : First

Place of Publication : Madras

Price : Rs. 6-00

Pages : 400

Size of the Book : 18 c. m.

Month of Publication : November 1961


Brief Indication of Contents :

This is a book giving encyclopaedic information on geography, history, educational institutions, agriculture, industry, mineral resources, development projects, cultural trends, local dialects and information on places of interest in the district of Tanjore in Madras State. Maps of the district, photograps, travel information and statistical particulars are appended.

Library Classification No :

Colon U. 44114 N 6
KO

Dewey 915·482
tL234



தஞ்சாவூர்
மாவட்டம்
சாலைகள்
கொள்ளிடம்
சீர்காழி
திருமுல்லைவாயில்
திருவெண்காடு
காவிரிப்பூம் பட்டினம்
திருக்கடையூர்
தரங்கம்பாடி
கொள்ளிடம் ஆறு
அணைக்கரை
பந்தணைநல்லூர்
மாயூரம்
திருப்பனந்தாள்
குத்தாலம்
தேரழுந்தூர்
திருவாவடுதுறை
ஆடுதுறை
திருவிடைமருதூர்
சுவாமிமலை
கும்பகோணம்
பேரளம்
பூந்தோட்டம்
காரைக்கால்
முடிகொண்டான்
நன்னிலம்
திருவையாறு
பாபநாசம்
கல்லணை
திருக்காட்டுப்பள்ளி
மெலட்டூர்
குடவாசல்
கொரடாச்சேரி
எண்கண்
நாகூர்
பூதலூர்
நீடாமங்கலம்
திருவாரூர்
சிக்கல்
நாகப்பட்டினம்
திருச்சிராப் பள்ளிக்கு
தஞ்சாவூர்
கீவளூர்
செங்கிப்பட்டி
வல்லம்
கூத்தாநல்லூர்
வேளாங்கன்னி
மன்னார்குடி
வலிவலம்
ஒரத்தநாடு
எட்டிக்குடி
கந்தர்வக்கோட்டை
திருத்துறைப்பூண்டி
மதுக்கூர்
பட்டுக்கோட்டை
முத்துப்பேட்டை
வேதாரணியம்
புதுக்கோட்டைக்கு
அதிராம்பட்டினம்
மனோரா
கோடிக்கரை
கோடிக்கரை முனை
பேராவூரணி
சேதுபாவாசத்திரம்
அறந்தாங்கி
காரைக்குடிக்கு
கட்டுமாவடி
சேது ரஸ்தா
ஆவுடையார்கோவில்
மணல்மேற்குடி
பாக் ஜலசந்தி
வங்காளக் குடாக் கடல்

# தஞ்சாவூர் மாவட்டம்

## 1. தோற்றுவாய்

"தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே;
மண்ணாவதும் சோழமண்டலமே"

—தனிப்பாடல்

தமிழ்நாடு பல மாவட்டங்களை உடையது. அவற்றுள் ஒன்றுதான் தஞ்சை. இருப்பினும், பிற மாவட்டங்கள் பலவற்றுக்கு இல்லாத வரலாற்றுப் பெருமை, நீர் வளம், நிலவளம், சமயவாழ்விலும் நாகரிக வாழ்விலும் உயர்நிலை, போக்குவரத்துத் துறையில் பெருவளர்ச்சி ஆகிய சிறப்புக்கள் இம்மாவட்டத்துக்கு உண்டு. புலவர், புரவலர், பேரறிஞர் ஆகியோர் மிகப் பலரைத் தஞ்சை மாவட்டம் ஈன்றெடுத்துத் தமிழ் நாட்டுக்கும் இந்திய நாட்டுக்கும் வழங்கியிருக்கிறது. மக்கள் தொகையில் இம் மாவட்டம் தமிழ் நாட்டில் இரண்டாம் இடம் வகிக்கிறது.

### சோழர் தொடர்பு

தமிழ் நாட்டின் பழமைப் பெருமைக்குக் காரணமான மூவேந்தருள் நடுநாயகமாக வைத்து எண்ணப்படுபவர்கள் சோழ மன்னர்கள் ஆவார். வீரச்செருக்கால் வெளி நாடுகளை வென்றும், வாணிபப் பெருக்கால் உலக நாடுகளுடன் உறவுகொண்டும், கலைச்செல்வத்தால் நாட்டு மக்களுக்கு இன்ப வாழ்க்கையை வழங்கியும், வாயில்லாப் பசுவுங்குக்கூட நீதிவழங்கும் அளவுக்கு நேர்மையான ஆட்சியை நிலைநாட்டியும் சோழப் பேரரசர்கள் சிறப்புற்றார்கள். இவர்களுடைய தலைநகரங்களாக இருந்த திருவாரூர், காவிரிப்பூம்பட்டினம், தேரழுந்தூர், பழையாறை, சோழமாளிகை, மலைக்கூற்றம் (இன்றைய கும்பகோணம்)

தஞ்சை (வல்லம்), ஆகியவை இம்மாவட்டத்தைச் சேர்ந்தவையே ஆகும். சோழர்க்குப்பின் தஞ்சையை ஆண்ட நாயக்க மகாராஷ்டிர மன்னர்களும் இம்மாவட்டத்துக்கு நிலைத்த புகழை நல்கியுள்ளனர். ஐரோப்பியர்களில் போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், டேனிஷ்காரர், ஆங்கிலேயர் ஆகிய பல நாட்டினரும் இம்மாவட்டத்தில் வணிகராகவும் சிறுசிறு பகுதிகளில் சிலகாலம் ஆட்சியாளராகவும் இருந்திருக்கின்றனர்.

**நாட்டு வளம்**

நீர்வளம் இன்றேல் நாடு செழித்து நல்வாழ்வு வாழ இயலாது. "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் கடற் காவிரி", மைசூரைச் சேர்ந்த குடகுநாட்டில் தோன்றி இடையிலுள்ள சிற்ருறுகளின் நீர்களையெல்லாம் தன்பால் ஈர்த்துப் பேராருகித் தஞ்சை மாவட்டத்துள் நுழைந்ததும் பல கிளையாறுகளாகவும், வாய்க்கால்களாவும் இம் மாவட்டத்தில் 40,000 கி.மீ. (25,000 மைல்) நீளத்துக்குச் சென்று பிரிந்து மனித உடலுக்கு இரத்தம் செலுத்தும் இரத்தக்குழாய்களைப்போல அமைந்து மாவட்ட மண்ணுக்கு வற்ருத வளம் வழங்கும் வண்டலையும் நீரையும் வரையாது தருகிறது. இதனல், "மலையாளம் பேய்ந்து விளைகிற சீமை; தஞ்சாவூர் பாய்ந்து விளைகிற சீமை" என்ற சொற்றெடரும் ஏற்பட்டிருக்கிறது.

காவிரியின் நீர்வளத்தால் தஞ்சை மாவட்டம் சோறுடைத்த சோழ வளநாடாக ஆயிற்று. பார்க்குமிடமெல்லாம் பச்சைவயல்கள் அமைந்து அது தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக இருக்கிறது. ஒரு சில பகுதிகளில் மூன்று போகம் விளைவுஉண்டு. இம்மாவட்டத்தில் 1960–61 இல் விளைந்த நெல்லின் மதிப்பு நாற்பதுகோடி ரூபாய் ஆகும். தமிழ் நாட்டில் நெல் அறைக்கும் இயந்திரங்கள் கூடுதலாக உள்ள மாவட்டம் இதுவேயாகும். கரும்பும் இம்மா

வட்டத்தில் பெரிய அளவில் பயிரிடப்படுகிறது. வேதாரணியம் உப்பும் தஞ்சாவூர் கொடை மிளகாயும் தமிழ் நாடெங்கும் புகழ் பெற்றவை. உண்ணக்கஞ்சியோடு உறைக்கும் மிளகாயும் கைக்கு உப்பும் இனிக்கும் கரும்பும் வழங்குவது இம்மாவட்டம் ஒன்றே. மேலும், இம்மாவட்டத்தில் காய்கறியும் மீனும் எளிதில் கிடைக்கின்றன. வாழைத்தோட்டம், வெற்றிலைக்கொடி, தென்னந்தோப்பு ஆகியவற்றைத் திரும்பும் திசையெல்லாம் காணலாம். பசுமையும் செழுமையும் நிறைந்த இம்மாவட்டம் தமிழ் நாடு அரசாங்கத்துக்கு நிலவரியாக ஆண்டுதோறும் ஒரு கோடி 35 லட்சம் ரூபாய் வழங்குகிறது. வேளாண்மை வருவாய்வரி அலுவலர்கள் கூடுதலாக இருப்பதும் இம் மாவட்டத்திலேயே ஆகும். நில விற்பனையை யொட்டி ஆவணக் களரிகளும் நிலங்கள் பற்றிய வழக்குகளும் இங்கு மிகுதியாக உள்ளன.

**சமய வாழ்வு**

சமய வாழ்விலும் தஞ்சை மாவட்டம் சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள கோயில்களின் மொத்த எண்ணிக்கையில் சரிபாதி தஞ்சை மாவட்டத்திலும் மற்றொருபாதி ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் இருக்கின்றன. 19-ஆம் நூற்றாண்டில் லோயர் அணைக் கட்டு என்னுமிடத்தில் கல்லணை கட்டுவதற்குக் கல் கொணராது கங்கை கொண்டச் சோழபுரத்துக் கோயில் மதிற்சுவர்களைப் பிரித்துப் பிரிட்டிஷார் அணையும் பாலமும் அமைத்தனர் என்பதும் மலைவளம் மருந்துக்கும் இல்லாத மாவட்டத்தில் நூற்றுக்கணக்கில் கற்கோயில்கள் கட்டப்பட்டிருப்பதும் ஒப்புநோக்கத் தக்கன. சைவ சமயவர் நால்வர் பாடியுள்ள தலங்கள் 274-ல் தஞ்சை மாவட்டத்திலும் (அதனுள் அமைந்த காரைக்கால் பகுதியிலுமாக) 165 தலங்கள் உள்ளன. நால்வருக்குப் பிற்காலத்தில் சோழ அரசர்களும் அரசிகளும் திருப்பணி

செய்து கட்டிடக் கலைக்கு இலக்கியமாக அமைந்த கோவில்களும் இம்மாவட்டத்திலுள்ளன. மங்கள சாசனம் பெற்ற வைணவ ஆலயங்களும் இருக்கின்றன. திருநாங்கூர் என்னும் ஓர் ஊரிலேயே பல வைணவத் திருப்பதிகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. பங்காரு காமாட்சியும் ஒரே கல்லாலான பெரிய நந்தியும் தஞ்சை மாவட்டத்திலுள்ளன. தேவாராம் பாடிய ஞானசம்பந்தரும், நாயன்மார், ஆழ்வார் ஆகியோரில் பலரும் இம்மாவட்டத்தினரே ஆவர். சைவ, வைணவ ஆதீனங்களும் இம்மாவட்டத்தில் போலப் பெருந்தொகையாக வேறு எங்கும் இல்லை.

பௌத்தவிகாரங்கள் இம்மாவட்டத்தில் ஒரு காலத்தில் வேரூன்றியிருந்தன. சமணர் கோவில்கள் ஓரிரு இடங்களில் இன்றும் உள்ளன. கிறித்தவம் தமிழ் நாட்டின் பெரும்பகுதியில் புகுந்தது தஞ்சை மாவட்டத்தின் வழியேயாகும். கத்தோலிக்கருக்குப் புனிதமான வேளாங்கண்ணி ஆரோக்கியமாதா கோவில் இம்மாவட்டத்தில் இருக்கிறது. பிராடஸ்டண்டு சமூகத்தின் பெரிய பிஷப் திருச்சிராப் பள்ளியில் இருந்த போதிலும் இவரது பட்டப்பெயர் இன்றுங்கூட "தரங்கம்பாடி பிஷப்" என்றே வழங்கி வருகிறது. தரங்கம்பாடி, கிறித்தவர்களுக்குத் தமிழ் நாட்டின் வாயிலாக இருந்தது; நாகப்பட்டினம் இஸ்லாமிய மதத்துக்குத் தமிழ் நாட்டின் தலைவாயிலாக இருந்தது. மாவட்டக் கடற்கரையெங்கும் முஸ்லிம்களைக் காணலாம். நாகூர் கந்தூரி நனி சிறந்த திருவிழாவாக நடப்பதை அறியார் யார்?

### கலைப் பெருமை

நாகரிகம் என்பது வறுமை இன்னதென அறியாத மக்கள் கல்வியின் பயனை அனுபவித்தும் கலையின்பத்தில் மூழ்கியும் வெற்றிலையும் சீவலும் போட்டுத் திண்ணையில்

உட்கார்ந்து ஆற அமர அரட்டையடிப்பது என்று சொல்லத் தோன்றுகிறது. இசை, நாடகம், ஓவியம், சிற்பம், நடனம் முதலிய ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஆதரித்த அருமை தஞ்சை மாவட்டத்துக்கு மட்டுமே உரிய தனிப்பெருமை.

வாணிகப் பெருக்கத்தால் போக்குவரத்து வசதிகள் பெருகியுள்ளன. பட்டினப்பாலை பாடப்பட்ட காலத்திலேயே சோழநாடு கடல் வாணிகத்தில் தலைசிறந்து விளங்கிற்று. தமிழ் நாட்டில் கடற்கரையின் நீளம் தஞ்சை மாவட்டத்திலேயே கூடுதலாக இருக்கிறது. சிறு துறைமுகங்களும் ஏராளமாக உள்ளன. கங்கைச் சமவெளி நீங்கலாக இந்தியாவில் வேறு எங்கும் இம் மாவட்டத்திற்போல மிகுதியான இரயில்பாதைகள் இல்லை. மக்கள் நெருக்கத்தாலும் நெல் ஏற்றுமதியாலும் இரண்டு கிலோமீட்டருக்கொரு இரயில் நிலையம் இருக்கிறது. பகலில் இம்மாவட்டத்தில் இரயில் பயணம் செய்பவர்க்கு இது எளிதிற் புலனாகும். சென்னை நகர்க்கு வெளியே தமிழ் நாட்டில் இரயில் பாதை முதலிற் போடப்பட்டது இம்மாவட்டத்திலேயே ஆகும். உப்பு ஏற்றுமதிக்காக உப்பளப் பகுதியில் வேதாரணியம் கால்வாய் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தொண்டு

தமிழ்மொழிக்கு அச்செழுத்து ஏற்பட்டது இம்மாவட்டத்துத் தரங்கம்பாடியிலேயே ஆகும். இயற்றமிழுக்கு அணி செய்திருக்கும் புலவர் பலர் இம்மாவட்டத்தவரே ஆவர். இசைத்தமிழுக்கு ஏற்றம் தந்தவர்கள் நடனக்கலையைப் பரப்பியவர்கள் ஆகியோர் அனைவரும் இம்மாவட்டத்தினர் என்று கூறினும் குற்றமில்லை. உலகம் வியக்கும் நடராசர் வடிவம் போன்ற அரிய செப்புப் படிமங்கள் தொடங்கித் தஞ்சாவூர்த் தலையாட்டு

பொம்மை வரை கலைப்பொருள்கள் உலோகத்திலும் நெட்டியிலும் மண்ணிலும் கவினுறச் செய்யப்படுவது தமிழ் நாட்டில் இம்மாவட்டம் ஒன்றில் மட்டுமேயாகும். கலைகளும் கதம்பமும் வளரும் மாவட்டமாக இது காட்சி தருகிறது. கரிகால் வளவன் காலந் தொடங்கிக் கலைவேந்தன் சரபோஜி காலம்வரை கலைஞர் களை ஆதரிக்கப் புரவலர்கள் இருந்து வந்திருக்கின்றனர்.

## பிற சிறப்புக்கள்

ஆங்கில ஆட்சியிலும் உரிமை பெற்ற இந்தியா விலும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், முன்னாள் அரசர் பல ரின் திவான்கள், புகழ்பெற்ற ஆட்சியாளர், அறிவுலகம் போற்றி மகிழும் பெருமக்கள், பல இதழ்களின் ஆசிரியர் கள், எண்ணிலும் எழுத்திலும் வல்லவர்கள் ஆகியோரில் பலர் இம்மாட்டத்தினராகவே உள்ளனர். நுண்ணிய அறி வுடையவர்களாக இம்மாவட்டத்து மக்கள் இருப்பதால் சொத்துரிமை பற்றிய வழக்குகளின் எண்ணிக்கை கங்கு கரையின்றி இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மக்கள்தொகைக் கணக்குப்படி *1961*–இல் இம்மா வட்டத்தவர் *32,49,960* பேர் ஆவார்கள். தமிழ் நாட்டி லேயே மிகக்கூடுதலாக மக்கள் வாழும் பெரிய மாவட் டங்களுள் ஒன்றாக இருக்கும் நிலை நெடுங்காலமாகத் தஞ்சைக்கு உண்டு. பெல்ஜியம், ஹாலாந்து, டென் மார்க்கு ஆகிய நாடுகள் ஒவ்வொன்றின் மக்கள் தொகை யையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது, தஞ்சைமாவட் டத்தின் மக்கள்தொகை அவற்றினும் கூடுதலாக இருக்கிறது.

அளவு முறைகளிலும் இம்மாவட்டத்தின் தனித் தன்மை தெரிகிறது. நிலம் வேலிக்கணக்கில் அளக்கப் படுகிறது. தஞ்சாவூர்க் கலம், தஞ்சாவூர்ப்படி என்பன வும் உண்டு. மலை என்பது இம்மாவட்டத்தில்

மருந்துக்கும் இல்லை. காட்டுவளம் மிகமிகக் குறைவாக இருக்கிறது.

சத்திரங்கள் நிறைந்திருப்பதும், கோயிலை ஒட்டிப் பல ஊர்கள் உண்டாகி யிருப்பதும் இம்மாவட்டத்தின் பிற சிறப்புக்களில் சில. மராத்தி மொழியைத் தாய் மொழியாக உடைய மக்கள் தொகுப்பாக வாழுவதும் தமிழ்நாட்டில் இம்மாவட்டத்தில் மட்டுமேயாகும்; தஞ்சாவூர் ரசம் முதல் தயிர்க்கோலா வரை தயாரித்துத் தமிழரின் உணவுக்குச் சுவையூட்டியிருப்பது மராத்தியரின் தொண்டுகளில் ஒன்று.

தமிழ் நாட்டின் வரலாற்றில் நல்லிடம் பெற்றிருப்பதோடு தமிழ் மக்களுக்கு அமுதூட்டியும் வரும் இம்மாவட்டத்தைப் பற்றிய விரிவான செய்திகளை அடுத்துவரும் பக்கங்களில் தெரிவிப்போம்.

## 2. கனி வளம்

### எண்ணெய்

தஞ்சை மாவட்டம் கனிவளம் நிரம்பியது என்று நெடுங்காலமாக ஒருவரும் கருதவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் எந்த மாவட்டத்திலும் கனிவளத்தைப் பற்றிச் செம்மையான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படவில்லை. இதற்கென ஓர் தனித் துறையை விரிவான முறையில் அமைக்கத் தமிழ் நாடு அரசாங்கம் 1961-இல் தான் முன்வந்திருக்கிறது; ஆராய்ச்சி வேலை முற்றுப்பெற 25 ஆண்டுகள் (1986 வரை) ஆகக்கூடுமென்று தொழில் துறை அமைச்சர் தமிழ்நாடு சட்டசபையில் கூறியுள்ளார். இந்திய அரசாங்கத்துக் கனிவள ஆராய்ச்சித் துறையினர் செய்த மேற்போக்கான ஆய்வில் தஞ்சை மாவட்டத்தில் பெட்ரோல் எண்ணெய் இருப்பதாக ஊகித்தனர்; அதன் விளைவாக 1958 முதல் இந்திய அர

சாங்கத்து எண்ணெய்-எரிபொருள்–குழுவினர் (ONGC) இதைப் பற்றி ஆராயும் வேலையை மேற்கொண்டுள்ளனர்.

இக் குழுவின் ஆராய்ச்சியாளர்கள் Y. R. பானு மூர்த்தி என்பவர் தலைமையில் மன்னார்குடி, மாயூரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், நன்னிலம் வட்டங்களில் ஆய்ந்துள்ளனர். (Gravity and Magnetic Investigations) இவர்களுடைய அறிக்கை குறிப்பிடும் இடங்களில் 'போரிங்' போட்டு Seismic Survey நடத்துவதற்குரிய அறிஞர்கள் வரவழைக்கப்படுவார்கள். 1961 இறுதிக்குள் மேலுஞ் சில விவரங்கள் கிடைக்குமென்றும் அதற்குப் பிறகு தோண்டுகுழாய் போடுவது பற்றி முடிவுசெய்யப் படுமென்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

புதுச்சேரி முதல் தொண்டி வரையிலுள்ள கடலோரப் பகுதியில் எண்ணெய் இருக்கும் என்ற கருத்தைக் கனிவள அறிஞர் டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் 1940 இலேயே தெரிவித்தார். 1952 இல் நெய்வேலிப்பகுதியில் பழுப்பு நிலக்கரியை ஆராய்ந்த கனிவளக் குழுவினர் அங்கே 8000 அடி ஆழத்தில் எண்ணெய் இருக்கும் என்று கூறினர். சிதம்பரத்துக்கு அருகே 1500 - 2000 அடி ஆழத்திலும் இன்னும் தெற்கே காரைக்காலிலிருந்து சிவகங்கை வரை கடலோரத்தில் 160 கி. மீ. நீளம் – 30 கி. மீ. அகலமுள்ள பகுதியிலும் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாயும் இப்பகுதியின் அமைப்பு எண்ணெய் வளம் மிக்க குவாயிட்டின் அமைப்பை ஒத்தது என்றும் அறிஞர் கூறுகின்றனர்.

தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் தேடும் முயற்சியில் முனைய அமெரிக்காவிலுள்ள காண்டினண்டல் ஆயில் கம்பெனி முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

இம்முயற்சிகள் வெற்றி பெற்ருல் தமிழ் நாட்டின் வளம் பல்கிப் பெருகும். தொழில் வளர்ச்சியின் அடிப்

படை எண்ணெய் வளமேயாகும். அமெரிக்காவில் ஓர் ஆளுக்கு 3780 லீட்டர் வீதம் எண்ணெய் செலவு ஆவதும் இந்தியாவில் 15 லீட்டர் செலவு ஆவதும் குறிப்பிடத் தக்கது.

மற்றோர் எரிபொருளாகிய இயற்கை 'காஸ்–ம்' இம் மாவட்டத்தில் கிடைக்கிறது. இது இருக்கும் இடம் சீர்காழி வட்டத்திலுள்ள (சீர்காழியிலிருந்து 10 கி. மீ. தொலைவிலுள்ள) நெய்ப்பத்தூர் என்னும் இடமாகும். இதன் தன்மை, அளவு, பயன்படுத்தும் விதம் ஆகியவை பற்றித் தமிழ்நாடு அரசாங்கத்தின் கனிவளப்பகுதி ஆய்ந்து வருகிறது.

## பழுப்பு நிலக்கரி

பழுப்பு நிலக்கரி இம்மாவட்டத்தில் கோடிக் கரையிலிருந்து 30 கி. மீ. தொலைவிலுள்ள சில இடங்களில் 17 அடி (5 மீட்டர்) ஆழத்தில் 1828–இல் அகப்பட்டது. ஆனால் அதன் அளவு குறைவாகவும் வெட்டும் செலவு கூடுதலாகவும் இருந்ததால் இதை எடுக்கும் வேலை கைவிடப் பட்டது.

## இல்மனைட்டு தோரியம் ஜர்க்கான்

தரமான எஃகு செய்வதற்கு உதவும் இல்மனைட் தரங்கம்பாடியிலிருந்து 3 கி. மீ. தொலைவில் கடற்கரையில் கிடைக்கிறது. மீமிசல், அதிராம்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலும் கடற்கரையில் இல்மனைட் காணப்படுகிறது. அணு ஆற்றலுக்கு வேண்டும் தோரிய மணலும் கடலோரத்தில் சிறிதளவு கிடைக்கிறது. கொதிகலச் செங்கல் செய்வதற்குத் துணையாக உள்ளதும், பிளாஸ்டிக் தொழிலுக்குப் பயன்படுவதுமாகிய ஜர்க்கான் என்னும் கனிவளம் தரங்கம்பாடிக் கடற்கரை மணலில் 2 முதல் 5% இருக்கிறது.

**காவி, இரும்புப் படிவங்கள்**

வல்லத்திற்கு மேற்கேயுள்ள பகுதிகளில் மஞ்சள் காவியும், காவிரிக்குத் தெற்கே திருச்சி மாவட்ட எல்லையருகே 'சோடா'வும் (Deposits of Soda) கிடைக்கின்றன. வல்லம் பகுதியில் இரும்புப் படிவங்கள் காணப்படுகின்றன; இங்கு கிடைக்கும் ஒருவகைக் கல் (வல்லம் வயிரம்) மூக்குக் கண்ணாடி செய்யப் பயன்படுகிறது.

**ஜிப்சம்**

நாகூர்ப் பகுதியருகே மட்டமான ஜிப்சம் கிடைக்கிறது. மண்வளமுள்ள படுகைகளில் சுண்ணாம்புக் கல்லும், கந்தர்வகோட்டை, வல்லம் பகுதிகளில் சரளைக் கல்லும், பட்டுக்கோட்டை வட்டத்தில் கடலூர்க் கெட்டி மண்ணும் காணப்படுகின்றன. கடலூர் கெட்டிமண் என்பது பழுப்பு நிலக்கரி முதல் தொழில் வளத்துக்கு வேண்டும் பலவகைக் களிமண்கள் வரை தன்னகத்தே அடக்கியுள்ள ஒரு பொருள் ஆகும்.

## 3. காட்டுவளம்

தமிழ் நாட்டு மாவட்டங்களில் காட்டுவளம் மிகக் குறைவாக உள்ள மாவட்டம் தஞ்சையே ஆகும்.

குறிப்பிடத் தக்க காடு, திருத்தருப் பூண்டி வட்டத்தில் கோடிக்கரைக்கு அருகேயுள்ள கோடியக் காடு என்பதாகும்; இதன் பரப்பு 4,500 ஏக்கர். இங்கு வரையாடு(Black Buck) என்ற ஒருவகை மான் 1900 ம், புள்ளிமான் 2000-ம் இருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது.

இந்தக் காட்டில் காடு வாழ் உயிரினக்கூடம் ஒன்றை மூன்றும் திட்டக் காலத்தில் அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

கோடியக் காடு தவிர இம்மாவட்டத்திலுள்ள பிற காடுகளாவன:—

(1) சீர்காழி வட்டத்திலுள்ள வோட்டான் குடிக் காடு.

(2) திருத்தருப் பூண்டி வட்டத்திலுள்ள தலை ஞாயிறுக்காடு.

(3) பட்டுக்கோட்டை வட்டத்தில் கந்தர்வகோட்டை யருகே உள்ள ரிசர்வு காடு.

(4) முத்துப்பேட்டை ரிசர்வு காடு.

இம்மாவட்டத்திலுள்ள காடுகளின் மொத்தப் பரப்பு 10,000 ஏக்கர் ஆகும்.

இம்மாவட்டத்தில் பயிராகும் மரங்களில் குறிப்பிடத் தக்கவை கடற்கரை ஓரங்களில் சவுக்கு மரங்களும் கந்தர்வ கோட்டைப் பகுதியில் முந்திரிச் செடியும், முத்துப்பேட்டையில் மாமரம் Alathaye மரம், தில்லை மரம் ஆகியவையும் ஆகும்.

படுகை நிலங்களிலும் சவுக்கு பயிரிடவும் முத்துப் பேட்டைக் காடுகளில் புதிய மரங்கள் பலவற்றை உண்டாக்கவும் காடு பேணுந்துறையினர் ஆவன செய்து வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் வேளாண்மைக்காக காடுகள் அழிக்கப்பட்டிருப்பதால் சீர்காழி வட்டத்திலும் புதிதாகக் காடு வளர்க்கும் முயற்சிகளும், ஆற்றங்கரைகளில் மரம் நடும் வேலையும் மாவட்டமெங்கும் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

சீர்காழி வட்டத்துத் திருமுல்லைவாயில் காட்டில் பிரம்புக்கொடிகள் நிறைய உண்டு. இவற்றால் ஆனைக் காரன் சத்திரத்தில் பிரம்பு வேலைகள் நடைபெறுகின்றன. கந்தர்வகோட்டைக் காடுகளில் முந்திரிப் பயிர் செழித்து

வருகிறது; இப்பகுதி முந்திரி ஆராய்ச்சி நிலையம் ஏற்படு வதற்கு ஏற்ற இடம் ஆகும்.

**பறவைச் செல்வம்**

நாரை போன்ற ஒருவகைப் பறவை (Flamingo) இம் மாவட்டத்துக் கோடிக் கரையில் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை நூற்றுக் கணக்கில் தங்குகிறது. இது சிவப்பு நிறமும், அழகிய தோற்றமும் உடையது; நான்கு அடி உயரம், நீண்டு சுருங்கிய கால்கள், குழாய் போன்று வளைந்த கழுத்து, ஆர அமர உண்ணும் தன்மை, ஒற்றைக் காலில் நின்று கொண்டே உறங்கும் ஆற்றல்-இத்தகைய இயல்புகள் நிறைந்தது இப்பறவையினம். கோடிக்கரையில் கடலோ ரத்திலுள்ள நண்டு இனங்களின் சாற்றைக் குடிக்க இவை இங்கு வருகின்றன. உலகில் ஒரு சில நாடுகளி லேயே இவ்வினம் காணப்படுவதாக அறிஞர்கள் கூறுவர். தனிச்சிறப்புக்குரிய பிற பறவைகளும்* கோடிக்கரைக்கு வருகை புரிகின்றன.

விலங்கு நூல் மாணவர் இவற்றைக் காண்பது நலம் பயக்கும்.

## 4. வரலாறு

தஞ்சையின் வரலாறு சோழர் வரலாற்றுடனேயே தொடங்குகிறது. சோழ மன்னர்கள் சங்ககாலச் சோழர், இடைக் காலச் சோழர் பிற்காலச் சோழர் என மூவகைப் படுவர்.

**சங்ககாலச் சோழர்**

சங்ககாலச் சோழர் எப்போது தோன்றினர், அவர் களுள் முதல்வர் யார் என்பன போன்ற விணக்களுக்கு

---

* Green-winged Meal — Ployers little Stints
Blue-winged Meal — Curlew
Laughing gulls Sandpipers — Indian Pittas

முடிந்த முடிபாக ஒரு விடையும் கூறுதற்கில்லை. வரலாற்று நூலோர்க்கு ஓரளவு தெரிந்த சோழன் கி. பி. 50 முதல் 95 வரை ஆண்ட கரிகாலன் என்பான். கரிகாலனுக்கு முன்னர்ப் பத்துச் சோழர்கள் ஆட்சி புரிந்ததாகவும் மநுநீதிச் சோழன் அவருள் ஒருவன் என்றுங் கூறுவர்.

கரிகால் சோழன் சேர பாண்டியரை வென்றவன்; தெற்கே ஈழநாடு வரையும் வடக்கே நெல்லூர் வரையும் தன் செல்வாக்கை நிலைநாட்டியவன்; கல்லணையைக் கட்டியவன்; காவிரிப்பூம்பட்டினத்தைத் தொழிலும் வெளிநாட்டு வாணிகமும் சிறந்த நகராக்கியவன். பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, சிலப்பதிகாரம் முதலிய பழமையான இலக்கியங்கள் இவன் புகழை இயம்புகின்றன. இவன் வரலாற்றை, சுத்தானந்த பாரதியார் பாடியுள்ள பின்வரும் பாடல் சுருங்கக் கூறுகிறது.

"கடற்படை கொண்டிலங்கை வென்று தக்கணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோ சலரைவென்று
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து,
வாகையுடன் புலிக்கொடியை யிமயமேற்றி
அடற்கரிய தமிழ்வீரப் படையால் பொன்னி
அணைகட்ட மன்னர்பணி கொண்ட மன்னன்
சுடர்மணிப் பூம்புகா ராண்ட கரிகாற் சோழன்
துலங்கிய நன்னுடுதித்த சூரச்செய்கோன்".

கரிகாலன் இமயமலைவரையும் சென்று, அங்கே சோழரின் புலி இலச்சினையைப் பொறித்ததாக வரலாற்று நூலோர் கூறுவர். அவன் இமயத்தில் புலி பொறித்த இடம் சிக்கிம், பூட்டான் எனப்படும் சிறு நாடுகளுக்கு இடைப்பட்ட மலைப்பகுதி என்று ஆராய்ச்சியாளர் மு. இராகவ ஐயங்கார் குறித்துள்ளார். அந்த இடத்தில் "சோழன் மலை", "சோழன் கணவாய்" என்ற பெயர்கள்

இன்றும் வழங்குவதாக "இம்பீரியல் கெசட்டியர் ஆப் இந்தியா" என்னும் நூல் தெரிவிக்கிறது.

கரிகால் சோழன் என்ற பெயருடைய அரசர் பலர் இருந்தனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

**இடைக்காலச் சோழர்**

ஐந்தாம் நூற்றுண்டளவில் சோழர் செல்வாக்குக் குறைந்தது. பல்லவர் கை ஓங்கியபோது அவர்களுக்கு அடங்கியிருப்பதும், பல்லவர் செல்வாக்குச் சற்றுக் குறைந்தபோது பாண்டியருடன் சேர்ந்து பல்லவரை எதிர்க்கத் துணிவதும் சோழ வம்சத்து வழக்கமாக இருந்தது.

செந்தலை, நியமம் என்ற ஊர்களில் முத்தரையர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் உள்ளன. முத்தரையர்கள் சந்திரலேகை எனப்படும் செந்தலையைத் தலைநகராகக் கொண்டு–பல்லவர்க்குத் திறை செலுத்திச் சிற்றரசர்களாக–தஞ்சாவூர் வரையுள்ள பகுதிகளை ஆண்டு வந்தனர். முத்தரையர் கொடும்பாளூர் வேளிருடன் சில காலம் உறவாகவும் சில காலம் பகையாகவும் இருந்தனர்.

பல்லவ அரசனை இரண்டாம் நந்திவர்ம பல்லவன் (731–795) என்ற மன்னனின் படைத்தலைவனுக இருந்த பெரும்பிடுகு முத்தரையன் என்ற சுவரன்மாறன் வல்லத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். அவனுக்கு, "தஞ்சைக்கோன்", "வல்லக்கோன்" என்ற பட்டங்களும் இருந்தன.

**பிற்காலச் சோழர்**

850-ஆம் ஆண்டளவில், விஜயாலயச் சோழன் முத்தரையரைத் தாக்கித் தஞ்சையைக் காப்பாற்றியதன்

விளைவாக, பிற்காலச் சோழரின் மேன்மைக்கும் பெருமைக்கும் அடிகோலினன். இவன் தஞ்சையைத் தலைநகராக்கிக் கொண்டான். இதுமுதல் 1279-வரை சோழர் பெருமையும் தஞ்சை நகரின் புகழும் வளர்பிறை போல் வளரலாயின.

விஜயாலயச் சோழன் மகனாகிய ஆதித்தச் சோழன் திருப்புறம்பயம் போரில் பாண்டியரைத் தோற்கடித்தான். அவன் மகனாகிய பராந்தகன் 907 முதல் 953 வரை புகழுடன் ஆண்டு சோழப் பேரரசுக்கு வழி வகுத்தான்.

இவனுக்குப் பிறகு ஆண்டவர்களுள் கண்டராதித்தனும் பல திருப்பணிகள் செய்த அவன் மனைவி செம்பியன் மாதேவியும் முக்கியமானவர்கள். சோழப் பேரரசருள் தலைசிறந்தவன் முதலாம் இராஜராஜன். இவன் ஆட்சிக் காலம் 985 முதல் 1014 வரையாகும். இவன் காலமும் இவன் மகனை முதலாம் இராஜேந்திரன் என்ற கங்கைகொண்ட சோழன் காலமும் தமிழ் மக்களின் பொற்காலம் எனச் சிறப்பிக்கத் தக்கன. அந்நாளில் சோழப் பேரரசு,

"வடதிசை கங்கையும்
தென்திசை இலங்கையும்
குடதிசை மகோதையும்,
குணதிசை கடாரமும்."

என விரிந்து பரந்து கிடந்தது.

முதலாம் இராஜராஜன் தன் தலைநகரமாகிய தஞ்சையின் சிறப்பை உயர்த்தினன். திட்ப நுட்பம் வாய்ந்த இந்தியச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக இன்றும் நிலைத்து நிற்கும் தஞ்சைப் பெரிய கோயிலை 1009-இல் கட்டினன். தில்லைக் கூத்தனுக்குப் பொன் முகடு வேய்ந்தான். தில்லையிலிருந்த சைவத்திருமுறைகளை நம்பி

யாண்டார் நம்பியைக்கொண்டு முறைப்படுத்தியவனும் இவனேயாவான். சமணம், பௌத்தம், வைணவம் போன்ற பிற சமயத்துக்கோயில்களுக்கும் இராஜராஜன் ஒல்லும் வகையாலெல்லாம் ஆதரவு நல்கினன்.

இராஜராஜன் சோழர் ஆட்சிக்குப் புத்துயிரூட்டத் தன் ஆட்சிக்கால முழுவதும் போரிட்டான். தெற்கே பாண்டிய – சேர – ஈழ மன்னர் மூவரும் ஒன்று சேர்ந்து இவனைத் தாக்கினர். இருபெரும் போர்களில் இவன் பாண்டியரை வென்றான். காந்தளூர், விழிஞம் போர் களால் சேரநாட்டை இராஜராஜன் தன் வயப்படுத்தி னன். கடற்படையை அனுப்பி ஈழத்தின் வடபகுதியை வென்று, பொலன்னறுவையையும் தன் தலைநகராக்கிக் கொண்டான். பின்னர், கன்னட நாட்டையும் கைப் பற்றினன். இலங்கையருகேயுள்ள மாலைத்தீவு (Malding) அந்தமான் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றையும் இராஜராஜன் வென்றான். இவற் றுக்கெல்லாம் இவன் மகனும் படைத்தலைவனுமான இராஜேந்திரன் உற்ற துணையாக இருந்தான். முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்திலும் இராஜராஜன் ஆணை சென்றது.

இராஜராஜன் தான் அடைந்த வெற்றிகளால் வரலாறு கண்டிராத ஒரு தமிழ்ப்பேரரசை நிறுவினன். அவன் காலத்து அரசியல் அமைப்பும் உள்நாட்டுப் பிரிவு களும் குடவோலை முறைகளும் சீரியமுறையில் அமைக்கப் பட்டிருந்தன. உலகப் பெருமன்னர்களுள் இராஜராஜ னும் ஒருவன். இது "உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை".

முதலாம் இராஜேந்திரச் சோழன் 1014 முதல் 1044வரை ஆட்சி புரிந்தான். கங்கைவரை படையெடுத் துச் சென்று, கங்கைநீரைக் கொணர்ந்து கங்கைகொண்ட சோழபுரம் என்னும் புதிய நகரத்தை அமைத்து அதைத் தன் தலைநகராக்கிக்கொண்டான். இச்செயலால் தஞ்சை

மாநகரின் முக்கியத்துவம் குறைந்தது. 1911இல் இந்தியத் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்றப் பட்டமையால் கல்கத்தா பொலிவும் செல்வாக்கும் இழந்ததை ஒப்பிட்டுப் பார்த்தால் தஞ்சை நகருக்கேற்பட்ட ஊறு உணரத்தகும்.

கங்கை கொண்டான் என்ற பட்டம் இம்மன்னனுக்கு உண்டு. தமிழ்நாட்டில் பல கோயில்களின் மண்டபங்களுக்குக் 'கங்கைகொண்டான் மண்டபம்' என்று இன்றும் பெயர் வழங்கிவருவது தமிழ் மக்கள் இம்மன்னனைப் போற்றுவதற்கு அடையாளமாகும்.

செயங்கொண்டான், கடாரங் கொண்டான்* என்ற ஊர்களையும் இவன் உண்டாக்கினன். இவன் தோற்றுவித்த செயங் கொண்டச் சோழபுரம் இவனுடைய போர் வெற்றிகளை நினைவூட்டுவதாகும்.

இராஜேந்திரன் தன் கடற்படை வலுவால் மலேயா நாட்டின் நில பகுதிகளைக் கைப்பற்றிக் "கடாரம் கொண்ட சோழன்" ஆயினன்.

சோழப் பேரரசைப்பற்றி, இக்காலத்தில் உலகப் பேரரசருள் ஒருவர் போல உள்ள ஜவஹர்லால் நேரு "உலக வரலாற்றுக் கடிதங்கள்" என்னும் நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> "சோழப் பேரரசு வலிமையடைந்து ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் நிகரின்றி விளங்கியது. சோழர்கள் கடல் ஆதிக்கம் உள்ளவர்கள். அவர்களுடைய பெரிய கடற் படை அரபிக் கடலிலும் வங்காளக் குடாக் கடலிலும் பெருமிதமாக உலவி வந்தது. அவர் களுடைய தலையாய துறைமுகம் காவிரி ஆறு

* Maldives

கடலோடு கலக்கும் சங்கமுகத்தில் விளங்கிய காவிரிப்பூம்பட்டினம். அவர்களுடைய முதல் பெரிய அரசன் விஜயாலயன். வடக்கே பரவிய சோழர்களைத் திடீரென்று ராஷ்டிரகூடர்கள் தோற்கடித்து நிறுத்தினர். ஆனால் இராஜராஜ சோழன் மீண்டும் சோழர்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டினன். இது பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்தது......அவன் இலங்கையை வென்றான். சோழர்கள் அங்கே 70 ஆண்டுகள் அரசாட்சி செய்தனர். அவனுடைய மகன் இராஜேந்திர சோழனும் போர் வலிமையும் வீரமும் உடையவனாக இருந்தான். அவன் தன்னுடைய போர்யானைகளைக் கப்பலில் ஏற்றிச்சென்று பர்மாவை வென்றான். வட இந்தியாவுக்கும் வந்து வங்காள மன்னனைப் புறங்கண்டான். இவ்வாறு சோழப் பேரரசு பெரிதும் பரவிக்கிடந்தது. குப்தர் காலத்துக்குப் பின்னர் இதைத்தான்மிகப்பெரிய பேரரசு என்று சொல்லவேண்டும்......இராஜேந்திரன் கி. பி. 1013–லிருந்து 1044 வரை ஆண்டான். அவனுக்குப் பின்னர், கப்பம் கட்டிவந்த சிற்றரசர்கள் கலகம் செய்ததனால், சோழப் பேரரசு சிதறுண்டது.

சோழர்கள் போரில் வெற்றி அடைந்ததன்றி அவர்கள் நெடுங்காலமாகக் கடலில் வாணிபத்திலும் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் நெய்த மெல்லிய துணிகள் பிற நாட்டினரால் பெரிதும் விரும்பப்பட்டன. காவிரிப் பூம்பட்டினத்தில் கப்பல்கள் பண்டங்களை ஏற்றிக்கொண்டு ஓயாமல் போய்வந்து கொண்டிருந்தன."

முதலாம் இராஜேந்திரனுக்குப்பின் அவன் மக்களான இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரன் என்ற இராஜேந்திரன் தேவன், வீர ராஜேந்திரன் ஆகிய மூவரும் பட்டத்துக்குவந்தனர். இவர்கள் மேலைச் சாளுக்கியரை வென்று சோழப்பேரரசின் பெருமையை நிலைநாட்டிய வீரர்களாவர். வீர சோழியம் என்ற இலக்கண நூலும், வீரசோழன் ஆறும் கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் தென் கிழக்கேயுள்ள வீரசோழபுரம் என்ற ஊரும், வீராணம் ஏரி என மருவி விழங்கி வரும் வீர சோழன் ஏரியும் வீரராஜேந்திரன் புகழை நிலை நிறுத்தி வருகின்றன.

கோதாவரி கிருஷ்ணை ஆகிய பேராறுகள் இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதியைக் கீழைச்சாளுக்கியர் ஆண்டனர். அவருள் ஒருவனை விமலாதித்தனுக்கு முதலாம் இராஜராஜன் தன் மகள் குந்தவ்வையை மணஞ்செய்துவித்தான். இவர்களுக்குப்பிறந்த இராஜ ராஜ நரேந்திரன் முதலாம் இராஜேந்திரன் மகளை மணந்து கொண்டான். இவ்விருவர்க்கும் பிறந்தவனே வரலாறு புகழ்பாடும் முதற்குலோத்துங்கன். இவனே, "சாளுக்கியச் சோழன்" என்று வரலாற்று நூல் வல்லோர் வருணிப்பது வழக்கம்.

இம் முதற்குலோத்துங்கன் காலம் 1070 முதல் 1118 வரை ஆகும். இந்நாளில் ஒரிசா என்று குறிக்கப் படும் கலிங்கநாட்டை இவன் வென்றான்; இவ்வெற்றியைச் சிறப்பிக்க எழுந்த இலக்கியமே கலிங்கத்துப் பரணி என்பது. பல பகுதிகளை வென்று தன் ஆட்சியின் எல்லையை விரித்தபோதிலும், முதற் குலோத்துங்கன் தன் இறுதிக்காலத்தில் தமிழ்நாடல்லாத பிற பகுதிகளையெல்லாம் விடுவித்து, அடக்கமான நாட்டை அமைதியான நிலையில் அவன் பின்னோருக்கு அளித்துச்

சென்றான். தமிழ்நாடு என்று மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பிடப்பெற்ற ஒரு நிலப் பகுதி—இன்று நாம் வாழும் தமிழ்நாடு என்ற பகுதியை மட்டுமே—கொண்ட தனி அரசியல் அமைப்பு ஒரு குடையின்கீழ் உருவானது இவன் காலத்திலேயே ஆகும்.

முதற் குலோத்துங்கனுக்குப் பிறகு 1150 வரை இரண்டாம் குலோத்துங்கனும் 1178 முதல் 1218 வரை மூன்றாம் குலோத்துங்கனும் சோழநாட்டை ஆண்ட அரசருள் முக்கியமானவர்கள். மூன்றாம் குலோததுங்கன் கும்பகோணத்துக்கு அருகேயுள்ள திரிபுவனத்தில் சிவன்கோயில் அமைத்த சிறப்புக் குரியவன்.

மண்டலம், கூற்றம், ஊர் என்று பெரியதும் சிறியது மான பல பிரிவுகளாகச் சோழநாடு பிரிக்கப்பட்டது. ஆங்காங்கு அமைக்கப்பட்ட சபைகளின் மூலமாகவும் அரசாங்கக் கண்காணிப்பாளர் மூலமாகவும் அரசாட்சி இயங்கியது. தலைவன் என்ற முறையில் அவ்வப்போது அரசன் நாட்டைச் சுற்றி வந்து, ஊர்க்கோயில் மண்டபங்களில் தங்கி, இந்தச் சபைகளின் காரியங்களைக் கண்காணித்து வந்தான். கிராமச் சபைகள் வரிகள் விதித்தன. கிராமக் கோயில்களையும், ஏரிகளையும், நீர்ப்பாசன வசதிகளையும் இன்னும் இத்தகைய பல அரசியல் விஷயங்களையும் கவனித்து வந்தன. கிராமச் சபைகள் பொதுத் தேவைக்கு வேண்டிய பணத்தைக் கோயில் சபையிடம் கடன் வாங்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்தது. "அங்காடிக்குழி" என்ற (இக்காலத்திய விற்பனைவரி போன்ற) ஒரு வரியைக் கிராமத்தாரிடம் வசூலித்து அதை வாங்கின கடனுக்கு வட்டியாக அளித்ததாகக் கல்வெட்டுக்கள் உள்ளன. கிராமச் சபைகளில் வயதுவந்த ஆடவர் அனைவரும் உறுப்பினராக இருந்த போதிலும் ஆட்சி அலுவல்களை அன்றாடம் கவனிக்கச் செயற்குழு ஒன்று குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்

பட்டது. இவ்விதமே ஒவ்வொரு செயலையும் செய்ய ஏரிவாரியம், பொன்வாரியம் போன்ற பல குழுக்களும் இருந்தன.

## சோழருக்குப் பின்

1279-இல் சோழப் பேரரசு மறைந்தது. சிலகாலம் பாண்டியர் சோழநாட்டை ஆண்டனர். 14-ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசர்கள் சோழ மண்டலத்தைத் தங்கள் ஆட்சிக்குட்படுத்திக் கொண்டனர். அவர்களுடைய பிரதிநிதிகளாக 1532 முதல் 1675 வரை நாயக்கர்கள் தஞ்சை மாவட்டத்தை ஆண்டு வந்தனர்.

## நாயக்கர் ஆட்சி

தஞ்சை நாயக்க பரம்பரையைத் தோற்றுவித்தவன் சேவப்பநாயக்கன் என்பவன். இவன் காலத்திலேயே ஐரோப்பிய நாட்டினர் பலர் நாகப்பட்டினத்திலும் தரங்கம்பாடியிலும் தங்குவதற்கும் குடியேறுவதற்கும் அநுமதிக்கப்பட்டனர். கிறித்தவமும் இஸ்லாமும் இவன் ஆட்சியில் பரவின. சேவப்பநாயக்கனுக்குப்பின் அவன் மகன் அச்சுதப்பனும் (1560-1600), ரகுநாத நாயக்கனும் (1600-1634) ஆட்சி செலுத்தினர். இம்மூவரிடமும் அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சிதர் மிகப்புகழ் பெற்றவராவார். யாழ்ப்பாணத்து மன்னர் போர்த்துகல் நாட்டினரால் விரட்டப்பட்டபோது அம்மன்னனுக்கு அச்சுதப்பன் தஞ்சம் கொடுத்தான். தந்தை காப்பாற்றிய யாழ்ப்பாண மன்னனுக்குத் தனயன் ரகுநாதன் யாழ்ப்பாண நாட்டை மீட்டுக்கொடுத்தான். ரகுநாத நாயக்கன் செஞ்சிமன்னர்களையும் போரில் தோற்கடித்தான். கலைஞர்களையும் புலவர்களையும் ஊக்குவித்தான். அறிவுத் துறைகள் அனைத்துக்கும் ஆதரவு காட்டினன்.

நாயக்கர் பரம்பரையில் கடைசியாகத் தஞ்சையை ஆட்சி செய்த இம்மன்னரே இப்போது நாம் தஞ்சையில் காணும் அரண்மனைக் கட்டடங்களையும்* மாயூரத்திலுள்ள பூசை மண்டபத்தையும் திருவிடை மருதூரில் வீரசோழன் ஆற்றங்கரையிலுள்ள அழகான மண்டபத்தையும் திருவரங்கநாதனைத் தஞ்சையிலிருந்தே தொழுவதற்கு 12 அடுக்கு மாளிகையும் கட்டினன்.

ரகுநாத நாயக்கருக்குப்பின் மதுரைமன்னனும் பீஜப்பூர் சுல்தானும் தஞ்சை நாயக்கருக்குத் தங்களால் இயன்ற தொல்லைகளெல்லாம் கொடுத்தனர். மதுரைச் சொக்கநாத நாயக்கர் 1673–இல் தஞ்சையைத் தாக்கி, தம்பி அழகிரியிடம் ஒப்புவித்தார். மன்னார்குடி ராஜ கோபாலசாமி கோயில் திருப்பணி செய்த விசயராகவ நாயக்கருடன் தஞ்சை நாயக்கர் பரம்பரை மறைந்தது.

அழகிரி ஆண்டபோது அமைதி நிலவவில்லை; குழப்பங்கள் குறையவில்லை. ஆட்சி சீர்குலைந்ததை அறிந்தவர்கள் அந்நிலையைப் பயன்படுத்திக்கொண்டனர். வீர சிவாஜியின் இளவலும் பீஜப்பூர் வீரனுமான எக்கோஜி 1676-இல் பட்டத்துக்கு வந்தான். இதுமுதல் மஹாராஷ்டிர மன்னர்களின் ஆட்சி தொடங்கிற்று.

மராத்தியர் ஆட்சியில் தஞ்சைச்சீமை தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, மாயூரம், கும்பகோணம், திருவாடி என்ற ஆறு சுபாக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சீமையும் பல மாகாணங்களைக் கொண்டதாகவும் ஒவ்வொரு மாகாணமும் பல சிற்றூர்களைத் தன்னகத்தே உடையதாகவும் இருந்தது.

---

* இம்மாளிகை இன்று அரசாங்க உடைமையாக இருக்கிறது. பொதுப்பணித் துறையினர் இக்கட்டிடங்களைப் பேணி வருகின்றனர். சரபோசி வழியினரான தஞ்சை இளவரசர்களுக்கு இவ்வரண்மனையில் சில பகுதிகளில் வாழும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

பிறப்பாலேயே போர் வீரனுகப் புகழ்பெற்ற எக்கோஜி தஞ்சைக் கோட்டையை பலப்படுத்தினன். பிற்காலத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு ஆக்கம் தந்தான். கல்வித்துறைக்கு ஊக்கம் அளித்தான். அவன் மகன் ஷாஜியும் அறிவுத் துறையில் ஆர்வம் காட்டினன். கலைவளர்த்த காவலன் சரபோஜிக்கு முன்னேடியாக அமைந்தவன் இந்த ஷாஜியே ஆவான். ஷாஜி கவிஞனுகவும் இசைப்புலவனுகவும் அறச் செயல் பல செய்த அரசனுகவும் விளங்கினன்.

அவன் தம்பியான முதலாவது சரபோசி (1712-1728) இராமநாதபுரம் அரசரை அடக்க, சிவக்ங்கை ஜமீனை உண்டாக்கினன்; பட்டுக்கோட்டை அறந்தாங்கி வட்டங்களில் சேதுபதியின் செல்வாக்குக்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

அவனுக்குப்பின் பட்டத்துக்குவந்தவன் அவனுடைய இளவலான துக்கோஜி. மாரியம்மன் கோயிலைக் கட்டியதும் இந்துஸ்தானி இசையைப் பரப்பியதும் இவன் செய்த இருபெருஞ் செயல்கள் எனலாம். "பட்டத்துக்கு உரியவர் யார்?" என்ற போட்டா போட்டி இவனுக்குப் பின் ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு நிலவியது. பிரித்தாளும் கொள்கையில் ஊறித்திளைத்த பிரிட்டிஷார் தஞ்சையில் ஊன்றிக்கொண்டனர். 1773 முதல் 1776 வரை கர்நாடக நவாபு தஞ்சையை ஆள ஆதரவு காட்டியயும் பிறகு மஹாராஷ்டிர மன்னர்களுக்கு ஆளும் உரிமை உண்டு என்று அறிவித்தும் தந்திரத்தாலும் படை வலுவாலும் தம் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொண்டனர். மஹாராஷ்டிர அரச குடும்பத்தினருள் பட்டத்து உரிமை யாருக்கு என்பது ஒரு சிக்கலாகவே இருக்கும் படி நிலைமை நீடிக்கப்பட்டது.

கர்நாடக நவாபுக்கு ஆபத்துக் காலங்களில் தஞ்சை மஹாராஷ்டிர அரசர்கள் உதவி செய்தனர். ஆனால் நன்றிகெட்ட நாவபு 1773-இல் தஞ்சையைப் படையெடுத்தான். அவன் செயலுக்கு, சென்னையிலிருந்த ஆங்கிலேய அலுவலர் உடந்தையாக இருந்தனர். இதை ஸ்குவார்ட்ஸ் பாதிரிவாயிலாகச் சீமையிலுள்ள பெரிய அலுவலர்கள் அறிந்ததும் கர்நாடக நவாபிடமிருந்து 1776 இல் தஞ்சையை மீட்டுக்கொடுத்தனர். கவர்னர்மீது அதிகாரம் செலுத்துவதற்கு வழிசெய்யும் 'ரெகுலேட்டிங் ஆக்ட்' இந்நிகழ்ச்சியாலேயே ஏற்பட்டது. கவர்னர் பிகாட்டும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.* இதிலிருந்து துளஜா மன்னர்க்கும் ஆங்கிலேயர்க்கும் நல்லுறவு உறுதிப்பட்டது. அதன்பயனாக 1798–இல் இரண்டாவது சரபோசி தஞ்சையின் அரசன் ஆக்கப்பட்டான். ஆனால் அதிகாரம் அனைத்தும் ஆங்கிலேயரால் பிடுங்கிக்கொள்ளப்பட்டது.

### சரபோஜி

அரசன் என்று அழைக்கப்படும் உரிமை மட்டுமே சரபோசிக்கு இருந்தது. அரண்மனைக்கு அப்பால் அணுவளவும் அதிகாரமில்லாதிருந்த சரபோசி அரசியலில் தான் அடைந்த அளவு கடந்த ஏமாற்றத்தை மறந்து இலக்கிய உலகிலும் இல்லற இன்பத்திலும் மூழ்கினான். பல்லாயிரம் நூல்களும் ஓர் அரசியும் பணிப்பெண்கள் பலரும் அவன் வாழ்க்கைத் துணைவராயினர். அரிய ஐரோப்பிய அறிஞரிடம் அவன் கல்விபயின்றான். பல்கலைச் செல்வனாகவும் பன்மொழிப் புலவனாகவும் இசை ஆராய்ச்சியாளனாகவும் மருத்துவக்கலை ஆர்வலனாகவும் விஞ்ஞானத்துறையில் வியத்தகுநாட்டமுடையவனாகவும் சரபோசி விளங்கினான். சரசுவதி மகாலை மிகச் சிறந்த

* ஆதாரம் : Tanjore Papers, 3 vols.

அறிவுக்கூடம் என்ற நிலைக்கு உயர்த்தியவன் இவனே ஆவான். புதிய சத்திரங்கள் பலவற்றைக் கட்டினான். பழைய சத்திரங்களுக்கும் அறக்கட்டளைகள் அமைத்தான். இவனுடைய சத்திரங்களில் இந்நாளில் சில நாடுகளில் அரசாங்கங்கள் மேற்கொள்ளும் பொது மக்களின் நல்வாழ்வுக்கான அறச்செயல்கள் நடைபெற்றன.

சரபேசிக்குப்பின் இவன் மகன் சிவாஜியின் ஆட்சி நடைபெற்றபோதிலும் அதிகாரம் யாவும் பிரிட்டிஷாரிடம் இருந்ததால், அவனுக்கும் அவன் வழிவந்தவர்க்கும் ஒரு லட்சம் பகோடாக்கள் "அலவன்சு" கொடுக்கப்பட்டு வந்தது. இன்றும் தஞ்சை இளவரசர்களுக்குச் சிறுதொகைகள் இந்திய அரசாங்கத்தால் "அலவன்சு" ஆக வழங்கப்படுகின்றன.

*1806* முதல் *1813* வரை, அதாவது பிரிட்டிஷ் ஆட்சி செம்மையாக அமைவதற்குமுன், தஞ்சை மாவட்டத்தில் குழப்பமும் கொள்ளையும் கொலையும் நிகழ்ந்தன. வலுவான சமூகங்கள் வைத்ததே சட்டமாக இருந்தது. கொள்ளைக்காரர்களை அடக்க உதவியவர்களுக்குப் பிரிட்டிஷார் ஆதரவு காட்டி அவர்களைப் பெருநிலக்கிழார் ஆக்கினர். தஞ்சை அரசர்கள் பயன்படுத்திய போர்க் கருவிகள் கொள்ளைக்கூட்டத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. அவற்றை இன்றும் சென்னை நகரில் கன்னிமரா காட்சி நிலையத்தில் காணலாம். இராமலிங்க படையாச்சி என்ற பயங்கரக் கொள்ளைக்காரனை உக்கடைத் தேவர் குடும்பத்தில் வாழ்ந்த வேங்கடாசலத் தேவர் அடக்கினார். அவரைப் பாராட்டி கவர்னர் எல்பின்ஸ்டன் பிரபு உக்கடைத் தேவர் குடும்பத்துக்கு வீரச்சங்கிலி ஒன்றை அன்பளித்தார். இதுபோன்ற பல செயல்களால் அமைதியை நிலைநாட்டி, பிரிட்டிஷார் ஆட்சியை மேற்கொண்டனர்.

## பிரிட்டிஷ் ஆட்சி

பிரிட்டிஷ் ஆட்சியில் தஞ்சை மாவட்டம் 150 ஆண்டுகள் இருந்தது. சோழர், நாயக்கர், மஹாராஷ்டிரர் காலங்களில் தனி அரசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த தஞ்சை அயல்நாட்டினரின் ஆட்சிக்குட்பட்ட ஒரு மாவட்டம் ஆயிற்று. ஆங்கிலக் கல்வி பெருகிற்று. படித்தவர்களும் செல்வர்களும் சென்னை நகர்க்குக் குடியேறி அங்கிருந்தவாறே கிராமங்களில் தங்கள் செல்வாக்கை நிலைநாட்டி வந்தனர். கிறித்தவமும், ஓரளவுக்கு இஸ்லாமும் பரவின. இம்மாவட்த்தார் பலர் ஆங்கில அரசாங்கத்தினரிடம் உயர் பதவிகள் பெற்றனர்.

தொடக்கத்தில் பிரிட்டிஷார் திருவையாறு, கும்பகோணம், மாயூரம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை என்னும் 5 இடங்களைத் தலைநகராகக் கொண்ட 'சுபா'க்கள் அமைத்து இம்மாவட்டத்தை ஆண்டனர். அப்போது, வடபகுதிக் கலக்டர் தென்பகுதிக் கலக்டர் என்று இரு கலக்டர்கள் இருந்தனர். 1800–இல் கடலூர் வரையுள்ள பகுதிக்கும் சேர்த்து ஒரே கலக்டர் நியமிக்கப்பட்டார். பிறகு, கடலூர் தென் ஆர்க்காட்டில் சேர்க்கப்பட்டது; 1809–இல் தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் ஒரே கலக்டர் நியமிக்கப்பட்டார்.

பிரிட்டிஷ்ஆட்சியின் முதல் ஐம்பது ஆண்டுகள் நாகப்பட்டினமும் தரங்கம்பாடியும் தஞ்சை மாவட்டத்தின் தலைநகரங்களாக இருந்தன. அதன்பின்னரே தஞ்சாவூர்க்கு இச்சிறப்பு வழங்கப்பெற்றது. ஆங்கிலேயர் வருகையால் சென்னை ஒரு பெருநகரமாகிவிட்டதால், சென்னைக்குத் தெற்கேயுள்ள பெருநகரம் என்ற நிலையே தஞ்சைக்கு இருந்தது. விழுப்புரம் - திருச்சி குறுக்குப் பாதையில் இரயில்போக்குவரத்து ஏற்பட்டபிறகு திருச்சி பெருநகரமாயிற்று. தஞ்சையின் முக்கியத்துவம் மேலும்

குறைந்தது. அதன் விளைவாக, இரயில்வேத்தொழிற்சாலை யும் கல்லூரிகளும் கிறித்தவ மதக்குருக்களின் தலைநகரும் தஞ்சைமாவட்டத்திலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்டன.

*1860* இல்தான் தஞ்சை கலக்டரின் தலைநகரமாயிற்று. *1910*–இல் தஞ்சையில் வட்ட அலுவலகம் ஏற்பட்டது. பிரிட்டிஷார் ஆட்சியில் சில காலம் இருந்து நீக்கப்பட்ட கோட்ட ஆட்சி அலுவலகம் உரிமைபெற்ற இந்தியாவில் தான் மீண்டும் திறக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியில் தஞ்சைக்கு ஏற்பட்ட பெரிய நன்மைகள் இரயில் போக்குவரத்துப் பெருக்கமும், கல்லணையைத் திருத்தியமைத்தும், மேட்டூரில் அணை கட்டிப் புதிய கால்வாய்கள் வெட்டியதுமாகும். சோழ, நாயக்க, மஹாராஷ்டிர மன்னர்களால் இனமாக வழங் கப்பட்ட நிலங்களை மலிவாக வாங்கியும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஆதரவாலும் புதிய நிலச்சுவான்தார்கள் தோன்றினர். பல்லாயிரம் வேலி நிலங்கள் உடையவராக இருந்தமையால் இவர்களுடைய செல்வாக்கு அளவு கடந்திருந்தது. பிரிட்டிஷ் வணிகரின் வருவாய்க்காக, கோடிக்கரை–காங்கேசன்துறை துறைமுகங்களுக் கிடையே நெடுங்காலமாக இருந்துவந்த சிறுகப்பல் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டது, இதே கார ணத்தால், பர்மா அரிசி தஞ்சைத் துறைமுகங்கள் வழி யாகத் தமிழ் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டு, தஞ்சை அரிசி இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இரண்டாம் உலகப்போர் தொடங்கும்வரை, தஞ்சை அரிசிக்குத் தக்கவிலை கிடைக்கவில்லை. உழுதவன் கணக்குப்பார்த் தால் உழக்கும் மிஞ்சாது என்பதைத் தஞ்சை மக்கள் உணர்ந்தனர். பொருளாதார மந்தமும் சேர்ந்து கொண் டது. *1941* இறுதியில் இரங்கூனுக்கும் இந்தியாவுக்கும் போக்குவரத்து அறுந்து போனதாலும் போர்ப் படைகளுக்கு உணவு அனுப்ப வேண்டியிருந்ததாலும்

நாடெங்கும் அடுத்த பல ஆண்டுகளுக்குப் பங்கீட்டு முறையும் கள்ளமார்க்கட்டும் நிலவியதாலும், தஞ்சை மாவட்டம் பிரிட்டிஷ் ஆட்சியின் அந்திமாலையில் செல்வச் செழிப்பில் திளைத்தது.

**உரிமைக்குப் பின்**

உரிமைபெற்ற இந்திய நாட்டில், வளர்ச்சித் திட்டங்கள் உணவு தன்னிறைவுக் குறிக்கோளைக் கொண்டிருக்கின்றன. இதனால் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு ஏற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி நிலையங்கள் தோன்றியுள்ளன. "பாக்கேஜ் ஸ்கீம்" போன்ற புதிய திட்டங்கள் பரவி வருகின்றன. உழுபவனின் உரிமைகள் பேணப்படுகின்றன. பலர் நிலங்களை விற்றுவிட்டுச் சென்னைக்கும் அதற்கப்பாலும் சென்றுள்ளனர். வேளாண்மை வருவாயில் உரிமையாளருக்கு 60 பங்கும் உழவனுக்கு 40 பங்கும் என்று சட்டம் வரையறை செய்திருக்கிறது. நில உடைமைக்கு உச்சவரம்பும் குறிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் விளைவாக நிலங்கள் கைமாறியுள்ளன. சமூக வாழ்க்கையிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கல்வி நிலையங்கள் பெருகி வருகின்றன. கலைத்துறையில் மறுமலர்ச்சி காணப்படுகிறது. புத்தம்புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. புயலால் பாதிக்கப்பட்ட மீன்பிடிக்கும் தொழிலும் தென்னைத் தோட்டத் தொழிலும் புத்துயிர்பெற்றுப் பொலிவுடன் வளர்ந்து வருகின்றன. இம்மாவட்டம் இழந்த பெருமையை மீண்டும் பெறுவதற்கான முன்னேற்றப்பாதையில் முதல்படி எடுத்துவைக்கிறது.

## 5. வாழும் மக்கள்

தஞ்சை மாவட்டத்தின் மக்கள் தொகை 1961-இல் நடைபெற்ற கணக்கெடுப்புப்படி 32,49,960 ஆகும்.

பல சமயத்தவர் பல சாதியினர் இங்கு வாழ்கின்றனர். இவர்கள் அனைவரையும் பற்றிக் கூற இயலாது. இம்மாவட்டத்துக்கே சிறப்பாக உள்ள சில சமூகத்தினரைப் பற்றிய செய்திகளைத் தெரிவிப்பதே நமது நோக்கம்.

**மராட்டியர்**

தஞ்சை மாவட்டத்தில் மராட்டியர் 15,000 பேர் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் இவ்வளவு பெருந்தொகையாக இவர்கள் உள்ள மாவட்டம் இதுவே. இந்நிகழ்ச்சிக்குக் காரணம் 1675 முதல் 1855 வரை தஞ்சையில் மராட்டியரின் ஆட்சி நடைபெற்றதாகும்.

மராட்டிய மன்னர்கள் இங்கு வந்தபோது போர்ப் படையினராகவும் அறுசுவை யுணவு ஆக்குவோராகவும் கணக்கர்களாகவும் தம் நாட்டினரை அழைத்து வந்தனர். அவர்கள் தஞ்சை கும்பகோணம் நகரங்களில் அரச குடும்பத்தையொட்டி வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் ஆட்சி அவர்களிடமிருந்து அயலவர்க்கு மாறியதால், மராட்டியர் ஆற அமர வாழ்ந்த நிலையைக் கைவிட்டு வாழ வழி தேட வேண்டுவதாயிற்று. இன்றும் இவர்கள் பெரும்பாலும் தஞ்சை, குடந்தை நகர்களிலேயே வாழ்கின்றனர். இவர்களுக்கென மராத்திய மொழி புகட்டும் உயர்நிலைப் பள்ளியும் தனி மயானங்களும் (கோரிக்குளம்) உள்ளன. சிலர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சிலர் கலைஞர்களாகவும் சிறந்த இதழ்களை வெளியிடும் ஆசிரியர்களாகவும் உள்ளனர். சுவையான இறைச்சி உணவு சமைப்பவர்கள் இவர்களுள் உண்டு. தமிழ்நாட்டில் பல இடங்களில் இவர்கள் 'மராட்டா ஓட்டல்' என்னும் உணவு விடுதிகளை நடத்தி வருகின்றனர். வாழை நாறுகளையும் தேங்காய் நாறுகளையும் மென்மையாகப் போட்டுக்

கோளாவைக் கட்டி அதில் நெய் ஊற்றிச் சமைத்து, அந்த உருண்டை பிதிர்ந்துவிடாமல் இவர்கள் செய்யும் 'கயிறுகட்டி கோளா', குறிப்பிடத்தக்க ஓர் உணவாகும். தஞ்சாவூர் ரசமும் கத்திரிக்காய் கொத்சும் இவர்களுடையே படைப்புக்களே.*

மராட்டிய நாட்டில் இவர்கள் வேறுபட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தும், வெளி மாநிலத்தில் வந்து நிலைத்துவிட்டபடியால் இவர்களுக்குள் இருந்த இன வேறுபாடுகள் பெரும்பாலும் மறைந்துவிட்டன. ராயர்கள், ராவ்ஜிக்கள் எல்லோருமே 'தேசாஷ்டர்' என்ற பொதுப் பெயரால் குறிப்பிடப்படுகின்றனர். வீட்டில் மராத்தி மொழியை ஓரளவு பேசிய போதிலும் இவர்கள் அனைவரும் தமிழ்ப் பற்றும் தமிழறிவும் உடையவர்களாக உள்ளனர்.

'ராவ்' என்ற இறுதிப் பெயரை இப்போது பலர் போட்டுக் கொள்வதில்லை. 'பான்ஸ்லே', 'சோமசின்ஹா' போன்ற குடும்பப் பெயர்களைப் பயன்படுத்தும் வழக்கமும் குறைந்து வருகிறது. போர்ப்படையிலும், மோட்டார் கார் செப்பனிடுவது போன்ற தொழில்களிலும் தஞ்சை, கும்பகோணம் மராத்தியர் சிறந்து விளங்குகின்றனர்.

---

* கடம்பூர் போளி, காஞ்சிபுரம் இட்டலி, சாத்தூர் வெள்ளரிப் பிஞ்சு, மணப்பாறை முறுக்கு என்பன போன்று தஞ்சை மாவட்டத்துக்கே தனி உரிமையான உணவுப் பொருள்கள் உண்டு. கொள்ளிடம் சுண்டல், பேரளம் வடை, தஞ்சாவூர் ரசம், கயிறுகட்டிக் கோலா ஆகியவை அவ்வகையைச் சேர்ந்தன.

'கொத்தமல்லி சட்டினியும் கத்தரிக்காய்க் கொத்சும் இட்லி தோசைக்கு உப சாதகம்' என்பது தஞ்சை மக்களின் உணவு முறையைத் தெரிவிக்கும் பழமொழியாகும்.

கும்பகோணத்தில் வாழ்ந்த மாராட்டியருள் டி. மாதவராவ், திவான் பகதூர் ரகுநாதராவ், வேங்க சாமி ராவ், கோபால் ராவ், இங்கிலீஷ் சுப்பராவ் ஆகியோர் பல இந்திய மன்னர்களிடம் திவானுகவும் பிற உயர் அலுவலர்களாகவும் இருந்து பெரிதும் மதிக்கப்பட்டனர்.

**கள்ளர்**

தஞ்சை மாவட்டத்தில் இவர்கள் தொகை, 30,000க்கு மேலிருக்கலாம். இவர்கள் தங்களைச் சோழர் வழியினராகக் கருதுகின்றனர். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு இப்போது வளமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் ஆண்மக்கள் தங்கள் வலிமையைப் போரில் காட்ட ஆசைப்பட்டனர். சில நூறு ஆண்டுகளுக்கு முன்னர், போரிடுதலே இவர்களுக்குத் தொழிலாகவும் பொழுது போக்காகவும் இருந்தது. பல்லவர் படையிலும் சோழர் படையிலும் இவர்கள் பணியாற்றியுள்ளனர். அந்த அரசர்கள் வழங்கிய பட்டங்கள், இன்றும் பட்டம் பெற்றவர்களின் வழிவழி வந்தவர்களால் போட்டுக் கொள்ளப்படுகின்றன. இக்காலத்தில் வழங்கிவரும் பட்டங்களின் எண்ணிக்கை 330 இருக்குமென்று தமிழ்ப் பெரும் புலவர் வேங்கடசாமி நாட்டார், 'கள்ளர் சரித்திரம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இப்பட்டங்களில் சில வருமாறு :

| | |
|---|---|
| கொற்றப் பிரியர் | வாள் வெட்டியார் |
| பொறை பொறுத்தார் | வேலுடையார் |
| மானங்காத்தார் | களத்தில் வென்றார் |
| மேற்கொண்டார் | சிறை மீண்டார் |
| வாண்டைப் பிரியர் | சென்னை ஆண்டார் |
| வீரப்புலியர் | ராஜாளியார் |
| | அஞ்சாத சிங்கம் |

**வாண்டையார்**

தொண்டை நாட்டிலுள்ள வண்டலூரே வண்ட நாடு என்றனர் V. கனகசபைப் பிள்ளை (Indian Antiquary). அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் கும்பகோணத்திலிருந்து குடவாசலுக்குப் போகும் பெருவழியிலுள்ள வண்டாழஞ் சேரியே வண்டை நாடு என்பர் (முதற் குலோத்துங்க சோழன் என்னும் நூலில்). ஆனால் சோழமண்டலத்திலும், தொண்ட மண்டலத்திலும் உள்ள உள்நாடுகளில், வண்டைநாடு என்பது கல்வெட்டுக்களில் குறிக்கப்படவில்லை. எனவே அக்கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. தஞ்சை மாவட்டத்தில், மாயூரம் வட்டத்தில் உள்ள சோத்தமங்கலம், செஞ்சி, மாங்குடி என்னும் இம்மூன்று ஊர்களில் வாழும் வாண்டையார்கள், தங்கள் தங்கள் இல்லங்களை 'பெரிய அரண்மனை' 'சின்ன அரண்மனை' என்று வழங்கி வருவதோடு, சேரர் கிளையினராகிய அரியலூர்க் குறுநில மன்னர், சோழர் குடியினராகிய பிச்சைவரம் பாளையக்காரர் இவர்களுக்குச் சம்பந்திகளாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

வண்டைநாட்டு அதிபர் வாண்டையார் ஆவர். இவர் குறுநில மன்னர் குடியினர். தமிழ் நாட்டு மூவேந்தர்க்கு மகட்கொடைக்கு உரியவர். சோழ நாட்டிலுள்ள பாளையக்காரர்கள் இதைக் குடிப்பெயராகவும், கள்ளர் மரபினர் பட்டப் பெயராகவும் கொண்டுள்ளனர். கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவனை முதற்குலோத்துங்கச் சோழனுடைய படைத் தலைவன் கருணாகரத் தொண்டமான் வண்டையர் குடியைச் சேர்ந்தவன். "பல்லவர் கோன் வண்டையர்க்கரசு" என்று அவன் அப்பரணியில் குறிப்பிடப்படுகிறான். பல்லவர்களுக்குத் தலைவனும் வண்டையர்களுக்கு அரசனும் என்பது அத்தொடரின் பொருளாகும்.

இவனைப் பல்லவ குலத்தினர் என்பர் ஆராய்ச்சியாளர். அது தவறு. ஒரு குடியைச் சேர்ந்தவன் பல குலத்தார் களுக்குத் தலைவனாக இருந்ததற்குச்சான்று·

விக்கிரம சோழன் உலா 328–ஆம் கண்ணி–மாடப் புகாருக்கும் வஞ்சிக்கும் காஞ்சிக்கும் கூடற்குங் கோழிக்குங் கோமானே-என்றதில் காண்க. இவ்வழக் கத்தைப் பற்றி ரா. இராகவ அய்யங்கார் 'வஞ்சி மாநகர்' என்ற புத்தகத்தில் எழுதியிருப்பது கவனிக்கத்தக்து.

### பழங்குடி மக்கள்

தமிழ்நாட்டிலேயே முன்னேற்றமும் கல்வி வளர்ச்சி யும் அடைந்துள்ள மாவட்டமாகிய தஞ்சையில் பழங்குடி மக்களும், பள்ளிப் படிப்பில்லா மக்களும் கூட வாழ்கின் றனர். சோறுடைத்த சோழநாட்டில் சோறு உண்ணாத வர்களும் உள்ளனர். இவர்கள் வாழும் இடம் கோடியக் காடு எனப்படும்.

கோடியக்காடு, திருத்தருப்பூண்டி வட்டத்தில் வேதாரணியத்துக்குத் தெற்கே இருக்கிறது. 10 கி. மீ. நீளத்துக்கும் 5 கி. மீ. அகலத்துக்கும் அடர்ந்துள்ள இக் காடு இரு மருங்கிலும் கடலால் சூழப்பட்டிருக்கிறது. இதைச் சுற்றிலும் உவர் மண் இருக்கிறது. மழை குறை வாக இருப்பதால், நீண்ட அகன்ற இலையுள்ள மரங்கள் இங்கு வளருவதில்லை. பாலைப்பழம், துவரம்பழம், கொழுஞ்சிப்பழம் போன்ற சில காட்டுப் பழங்களும், கீரை கிழங்கு வகைகள் சிலவும், சீந்தில் கொடி என்னும் மூலிகையும், கோழி ஆவரை என்ற கொட்டையும், பூனைக் காய்ச்சிக் கொட்டையும் முட்புதர்களும் இக்காட்டில் மண்டிக் கிடக்கின்றன.

இங்கு வாழும் பழங்குடி மக்கள் 'சீந்தி வலையர்' ஆவர். காட்டிலுள்ள சீந்திக் கிழங்குகளைத் தோண்டி

யெடுத்துத் தின்றும் கடல் மீனைத் தின்றும் வாழ்வதால் இவர்கள் இவ்வாறு பெயர் பெற்றனர்.

இக்காட்டில் இவர்கள் 1.75பேர் (35 குடும்பங்கள்) உள்ளனர். இந்த இனத்தவர் முத்துப்பேட்டைக் காடுகளிலும் உள்ளனர். இவர்களுக்குச் சொந்தமான நிலம் கிடையாது; உழவுத் தொழிலும் இவர்களுக்குத் தெரியாது. விறகு விற்றும், காடுகளில் சாணமும் சருகும் சேகரித்துப் புகையிலைக் கொல்லைக்கு உரமாக விற்றும், மீன்பிடி வலைகள் செய்தும் இவர்கள் பிழைக்கின்றனர். பொருளாதார நிலை மிகக் கீழ்ப்பட்டதாக இருப்பதால், எப்போதாவது ஒரு சில நாட்களில்தான் இவர்கள் அரிசி வாங்கிச் சோறு வடிக்கின்றனர். பால், மோர் என்பவற்றை இவர்கள் கண்டதில்லை எனின், உண்டதில்லை என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

முன்னடியன், வீரன், காளி, தூண்டிக்காரன் என்ற கடவுளரை இவர்கள் வழிபடுகின்றனர்.

காந்தி நினைவு நிதியினர் இவ்வினத்தவரின் குழந்தைகளுக்கென உணவு விடுதியும் பள்ளிக்கூடமும் கோடிக்கரையில் சில காலம் நடத்தி வந்தனர்.

## முஸ்லிம்கள்

கும்பகோணம், பாபநாசம், பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம் வட்டங்களில் முஸ்லிம்கள் தொகையாக உள்ளனர். இவர்களுள் அரேபியாவிலிருந்து வந்த வணிகர் லப்பை அல்லது சோணகர் எனப்படுவர். மரக்கலம் செலுத்தியவர் மரக்காயர் எனப்படுவர். இரு பிரிவுகளிலும் தமிழ்நாட்டு வாழ்நராக இருந்து இஸ்லாமியர் ஆனவர் உள்ளனர்.

## 6. சமய நிறுவனங்கள்

பல சமயத்தினரும் வழிபடும் ஆலயங்கள் தஞ்சை மாவட்டத்தில் நிறைந்துள்ளன. வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு இங்கே சிறந்த ஆலயங்களைக் காண இயலுகிறது. இவைபற்றி இக்கட்டுரையில் பொதுவாகக் குறிப்பிடுவோம்.

**சைவ சமயம் :** தேவார திருவாசகப் பாடல்பெற்ற தலங்கள், கருவூர்த் தேவர் திருவிசைப்பா பெற்ற தலங்கள், அருணகிரியார் திருப்புகழ் பெற்ற தலங்கள் ஆகியவை இம்மாவட்டத்திலுள்ளன. பாடல் பெற்ற ஒரு தலத்துக்குள் உள்ள மற்றொரு கோயிலும் பாடல் பெற்றிருக்கும் காட்சியையும் இம்மாவட்டத்தில் காணலாம்.

காரோணங்கள், சப்த விடங்கர் தலங்கள், அஷ்ட வீரட்ட தலங்கள் ஆகியவைகளும் முருகன் தலங்களும் அம்மன் கோயில்களும் (மாவூரில்) கல்கத்தாவில் இருப்பது போன்றகாளி கோயிலும், (திருப்பனந்தாளில்) காசி விநாயகர் கோயிலும் இம்மாவட்டத்தில் இருக்கின்றன.

ஆட்சி அடிப்படையில் பார்த்தால் அரசாங்கக் கோயில்கள், தனியார் கோயில்கள், தஞ்சை இளவரசரின் கோயில்கள், யாழ்ப்பாணத்தாரின் ஆட்சிக்குட்பட்ட கோயில்கள் என்ற பல நிலைகளும் இம்மாவட்டத்தில் உண்டு. அரசியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்தால், இம்மாவட்டத்தில் தஞ்சை இளவரசர் தம் ஆளுகைக் குட்பட்ட 90 கோயில்களை—சட்டமோ கிளர்ச்சியோ இன்றி—அரிசனங்களுக்குத் திறந்துவிட்டது குறிப்பிடத் தக்கதாகும். வரலாற்று உணர்ச்சியுடன் சிந்தித்தால், காஞ்சிபுரத்திலிருந்த பங்காரு காமாட்சி என்னும் தங்க விக்கிரகம் அதற்கென ஏற்பட்ட கோயிலில் தஞ்சை மேலராச வீதியின் வடகோடியில் இருக்கிறது. இக்காமாட்சி

யம்மன் முஸ்லிம் படையெடுப்புக்களின்போது தஞ்சைக்கு வந்து தஞ்சமடைந்த ஆச்சாரிய சுவாமிகளுடன் வந்த அர்ச்சகர்களால் கொண்டுவரப்பட்டது; தஞ்சை அரசர்கள் அந்த அம்மனுக்கு ஒரு கோயில் எடுத்தனர்.

'செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்' என்ற உறுதிப்பாடுடைய செட்டி நாட்டுச் செல்வர்கள் 1860 முதல் 1960 வரை இம்மாவட்டத்தில் மூன்று கோடி ரூபாய் செலவு செய்து (இன்றைய மதிப்பு 12 கோடி) நூற்றுக்கு மேற்பட்ட சிவன் கோயில்களுக்குத் திருப்பணி செய்திருக்கின்றனர்.

தேவாரம் பாடி நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்த ஞானசம்பந்தரும் ஏனைய சைவ நாயன்மார் பலரும் இம்மாவட்டத்தினரே ஆவர். இவ்வாறே சைவ சமய தத்துவங்களைத் தலைமுறை தலைமுறையாகப் பரப்பிவரும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆதீனங்கள் அமைந்திருப்பதும், காஞ்சியில் தோன்றிய காமகோடிபீடம் சங்கராச்சாரிய சுவாமிகளின் மடம் நிலைத்திருப்பதும் இந்த மாவட்டத்திலேயே ஆகும். சோழ அரசர்கள் திருமுறைகளை வகுத்தும் சைவசமயத்தைத் தாம் வென்ற நாடுகளில் பரப்பியும் சிவத்தொண்டு செய்திருக்கின்றனர். அவர்களும் தஞ்சையை ஆண்ட ஏனைய அரசர்களும் வேதத்தில் வல்லவரான பிராமணர்களை நாடெங்குமிருந்து தஞ்சை மாவட்டத்தின் வளமான பகுதிகளுக்கு வரவழைத்தனர்; அவர்களுக்கு நில மானியம் கொடுத்தனர்; பல நகரங்களில் குடியிருப்பதற்கெனத் தெருக்கள் தானமாக அவர்களுக்கு வழங்கப்பட்டு அவற்றில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப் பெற்றன. மாயூரம், திருவிடைமருதூர், திருவையாறு ஆகிய நகரங்களிலுள்ள மகாதானத் தெருக்களும் கும்பகோணத்திலுள்ள யாகசாலைத் தெருவும் இவ்வாறு ஏற்பட்டவையே. கோவிந்தபுரம், கோவிந்தக்குடி, அய்யம்

பேட்டை, அய்யங்கடை என்பன இவ்வாறே, கோவிந்த தீட்சிதர் பெயரால் தஞ்சை அரசர்களால் அமைக்கப் பெற்றவை. ஐயன் என்பது கோவிந்தய்யர் என்ற கோவிந்த தீட்சிதரைக் குறிக்கும்.

புகழ்பெற்ற பல திருவிழாக்களும் இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன. அவை யாவன : மாசிப் பௌர்ணமியில் 12 ஆண்டுகளுக்கொரு முறை கும்பகோணத்தில் நிகழும் மாமாங்கம், மாயூரத்தில் ஐப்பசி மாதத்தில் நடைபெறும் துலா உற்சவம், திருவையாற்றில் சப்த தல விழா, காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறும் பட்டினத்தார் திருவிழா, திருவாரூரில் பங்குனி உத்தரமும் கமலாலயத் தெப்பத் திருவிழாவும், கும்பகோணம் கோயில்களிலுள்ள நவகன்னிகைகளைக் காசி விசுவநாதர் கோயிலுக்குக் கொண்டுவரும் திருவிழா முதலியவை.

இவை தவிர, ஆடி 18-இல் பதினெட்டாம் பெருக்கும் ஆதீனங்களில் நடைபெறும் பட்டினப் பிரவேசம் போன்ற நிகழ்ச்சிகளும் காணத்தக்கவை.

ஒவ்வொரு வகையான கோயில்களிலும் இம்மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க கோயில்கள் உள்ளன. தேவாரப் பாடல் பெற்ற 165 தலங்களும் வைணவ ஆழ்வார்கள் மங்களா சாசனம் பெற்ற 33 தலங்களும் திருப்புகழ் பெற்ற 15 தலங்களும் இருக்கின்றன.

சைவத்தில் ஒரு பிரிவான காரணேசுவரச் சமயம் தமிழ்நாட்டில் தஞ்சையில் மட்டுமே பரவியிருக்கிறது. இம்மாவட்டத்தில் நாகைக் காரோணம், குடந்தைக் காரோணம், (கருஞசாமி கோயில் எனப்படும்) கரந்தைக் காரோணம் ஆகிய மூன்று காரோணங்கள் உள்ளன.

அம்மன் கோயில்களும் அளவில. தஞ்சை, ஒழுகமங்கலம், வீரசிங்கம்பேட்டை, சாக்கோட்டை, வலங்கைமான் ஆகிய ஊர்களில் மாரியம்மன் கோயில்களும், மகா

தேவபட்டினத்தில் எல்லையம்மன் கோயிலும், கும்ப கோணத்தில் திரௌபதை அம்மன் கோயிலும், தேப் பெருமா நல்லூரில் சுந்தர காளியம்மன் கோயிலும், பட்டுக்கோட்டையில் நாடியம்மன் கோயிலும் புகழ் பெற்றவை,

சில நவக்கிரகங்களுக்கு இம்மாவட்டத்தில் தனிக் கோயில்கள் உள்ளன.

சுவாமிமலை, எட்டிக்குடி, சிக்கில், வைத்தீசுவரன் கோயில், எண்கண் ஆகிய ஊர்களில் முருகன் கோயில் கள் சிறப்புடன் அமைந்துள்ளன.

விநாயகர் கோயில்களில் திருச்செங்காட்டாங்குடி நரமுக விநாயகர், திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர், திருப்பனந்தாள் காசி விநாயகர், திருவாவடுதுறையில் துணை வந்த விநாயகர், குடந்தை நாகேசுவரசுவாமி கோயிலில் கங்கை கணபதி, நாகப்பட்டினம் நாகாபரண பிள்ளையார், பஞ்சமுக விநாயகர், சீர்காழி ஆபத் துக்காத்த .விநாயகர், மாயூரம் முக்குறுணி விநாயகர் கோயில்கள் முக்கியமானவை. கணபதி அக்கிரகாரத்தில் கணபதிக்குச் சிறந்த விழா எடுக்கப்படுகிறது. கண்டி யூரில் வரிசை வரிசையாக விநாயக உருவங்கள் உள்ளன.

**வைணவம்:** வைணவர்கள் வழிபடும் பல கோயில் களும் தஞ்சை மாவட்டத்திலுள்ளன. இவற்றுள் முக்கிய மானவை ஏராளமான மங்களா சாசனங்களைப் பெற்ற கும்பகோணம் சாரங்கபாணி கோயில், கும்பகோணம் சக்கரபாணி கோயில், நாச்சியார் கோயில், (நாச்சியார் கோயில் அருகேயுள்ள) திருச்சேறை, வழுவூர், நீடாமங்க லம், திருக்கண்ணமங்கை, தில்லைவிளாகம் ஆகிய வைண வப் பதிகளும், தேரெழுந்தூர் அமருவியப்பர், மன்னார்குடி இராசகோபாலசாமி கோயில் ஆகியவை.

சீர்காழி வட்டத்திலுள்ள திருநாங்கூர் என்ற ஊர் 11 திருப்பதிகள் உள்ள சிறப்புடையது. 11 கருட சேவைகளையும் ஒருங்கே சேவிப்பது ஒரு பேருகக் கருதப் படுகிறது.

வைணவப் பெருமக்களில் திருமங்கை ஆழ்வார் சீர் காழி வட்டத்துத் திருக்குறையலூரினர். திருமழிசை ஆழ் வார் சமாதி அடைந்த இடத்தில் கும்பகோணம் மூர்த்தி செட்டித் தெருவில் ஒரு கோயில் கட்டப்பெற்றிருக்கிறது. வியாக்கியானச் சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை திருவிடைமருதூர் அருகேயுள்ள சேய்ஞ்ஞலூர் என்னும் சிற்றூரிலேயே தோன்றியவர் என்பர்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள வைணவக் கோயில்கள் பெரும்பாலும் வடகலைக் கோயில்கள் என்பதும் பிற மாவட்டங்களில் இருட்பவை தென்கலைக் கோயில்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமயத்தை வளர்த்த அரசர்களை எண்ணும்போது சைவர்களுக்குக் கோயிலாக உள்ள தில்லையில் பொன் வேய்ந்தவன் தஞ்சையை ஆண்ட சோழ அரசன் என்ருல் வைணவப் பதிகளான திருப்பதியிலும் ஸ்ரீசைலத்திலும் கோயில்களின் விமானங்களுக்குப் பொன்முகடு அமைத்த சேவப்ப நாயக்கரும் திருவரங்கத்துக்குத் தங்க முடியும் தங்க சிம்மாசனமும் அளித்த அச்சுதப்ப நாயக்கரும் தஞ் சையை ஆண்ட அரசர்களே என்ற நினைவு ஏற்படுகிறது.

**பௌத்தம்:** பௌத்த மதம் இன்றைய தஞ்சை மாவட்டத்தில் அருகிவிட்டபோதிலும் ஓராயிரம் ஆண்டு களுக்குமுன் அது ஓரளவு இடம் பெற்றிருந்ததற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்துக்கு அடுத்தபடி பௌத்த சமயத் தொடர்பு நிறைந்த ஊர் நாகப்பட்டினம்

ஆகும். பல்லவர் காலத்திலேயே இந்நகரம் சிறந்த துறைமுகமாக இருந்துவந்தது. இங்கு சீன வணிகரின் பொருட்டு ஒரு பௌத்த விகாரம் கி. பி. 720 அளவில் இரண்டாம் நரசிம்ம பல்லவனால் கட்டப்பெற்றது.

இராசராசச் சோழன் காலத்தில் நாகப்பட்டினத்திற்கு வந்த பிறநாட்டவர் வழிபடுவதற்காக, சூடாமணி விகாரம் ஒன்று கட்டப்பெற்றது. அவ்விகாரத்துக்கு ஆனைமங்கலம் என்ற ஊரையும் அதைச் சேர்ந்த பல ஊர்களையும் முற்றூட்டாக (எந்தவிதமான வரியும் இல்லாத நன்கொடைக் கிராமமாக) வழங்கி இச்செய்தியை செப்பேட்டிலும் இராசராசச் சோழன் வெளிப்படுத்தினான். ஆனைமங்கலம் செப்பேடுகளின் எண்ணிக்கை 27. இவை ஒவ்வொன்றும் .14 அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமும் உள்ளவை. இவையாவும் செப்பு வளையத்தால் கோக்கப்பட்டன. இவற்றைக் கண்ட டச்சுக்காரர்கள் உடனே தங்கள் நாடான ஹாலந்துக்குக் கொண்டுபோய் அங்கு லீடன் நகரக்காட்சி நிலையத்தில் பெருமையாக வைத்து இவற்றுக்கு "லீடன் பட்டயங்கள்" என்ற பெயரையும் ஆராய்ச்சியுலகில் புகுத்தி விட்டனர்.

முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் இப்பௌத்த விகாரத்துக்கு நில மானியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நாகப்பட்டினம் தவிர பிற இடங்களிலும் பௌத்தர் கோயில்கள் இருந்திருக்கின்றன. திருவிடைமருதூர் மகாலிங்கசாமி கோயில் ஒருகாலத்தில் பௌத்தர் கோயிலாக இருந்தது என்பர். கும்பகோணத்தில் இருந்த ஒரு பௌத்தர் கோயிலுக்குச் சேவப்ப நாயக்கர் காலத்தில் நில மானியம் கொடுக்கப்பெற்றிருக்கிறது. பௌத்த மித்திரர் தோன்றிய பொன்பற்றி இம்மாவட்டத்தில்

அறந்தாங்கி வட்டத்தில் இருக்கிறது. தரங்கம்பாடிக்குத் தென்மேற்கேயுள்ள திருவிடைக்காளி என்னும் சிற்றூரே பெரிய புராணம் குறிப்பிடும் போதிமங்கலம் ஆகும்; இவ்வூரருகேயுள்ள பெருஞ்சேரியில் பௌத்த விக்கிரகங்கள் காணப்படுகின்றன. பழையாறை நகரும் பௌத்த சமயப் பீடமாக இருந்தது என்பர்.

இம் மர்வட்டத்திற்கும் பௌத்த சமயத்திற்கும் உள்ள தொடர்புகளை வலியுறுத்தும் நிலையில் ஏராளமான பௌத்த விக்கிரகங்கள் இங்கே கண்டெடுக்கப்பெற்றன. இவற்றில் சிலவற்றைப் பற்றிய விவரம் அடுத்த பக்கத்தில் காண்க.

**பிறமதங்கள்:** இஸ்லாம், கிறித்தவம் ஆகிய இரண்டு மதங்களும் நாயக்க மன்னர்கள் மகாராட்டிர மன்னர்கள் காலங்களில் தஞ்சை மாவட்டத்தில் பரவின. அந்த அரசர்கள் மதப்பற்றுடையவர்களாக இருந்தபோதிலும் மத வெறியர்களாக இல்லை. இன்று தஞ்சை நகரில் கிறித்தவர்கள் இருக்கும் இடங்கள், கோயில் கட்டியுள்ள இடங்கள் யாவும் அவர்களுக்குத் தஞ்சை மகாராட்டிர அரசர்களால் அன்பளிக்கப்பட்டவையே ஆகும். இவ்வாறே தஞ்சை இரயில் நிலையத்திற்கும் மணிக்கூண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் பல இடங்கள் மகாராட்டிர அரசர்களால் முஸ்லிம்களுக்கு வழங்கப்பெற்றன. மாவட்டமெங்கும் முஸ்லிம் நிறுவனங்களுக்குப் பல இடங்கள் "தைகா" (முற்றூட்டு நிலங்களாக) வழங்கப்பெற்றிருக்கின்றன.

**கிறித்தவம்:** இந்தியாவில் நான்கு வாயில்கள் வழியாகக் கிறித்தவமதம் பரவிற்று. மேற்குக் கரையிலுள்ள கோவா, கேரளத்திலுள்ள கிராங்கனூர், வங்காளத்திலுள்ள செராம்பூர், தஞ்சை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி ஆகிய நான்குமே இவ்வாயில்களாவன, தரங்கம்

| இடம் | உருவம் | உலோகம் | காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| நாகப்பட்டினம் | புத்தர் | வெண்கலம் | 11–ஆம் நூ. | வடஇந்தியக் கலையைப் பின்பற்றியது. |
| ,, | வைத்திரேய போதி சத்வ | | 12–ஆம் நூ. | இது 75 செ. மீ. உயர முடையது. சென்னை கன்னிமரா காட்சி நிலையத்தில் இருக்கிறது. |
| மானம்பாடி | பத்மாசன புத்தர் | | | |
| பொன்பற்றி<br>எலையூர் | தியான புத்தர் | | | |
| ஏழையூர் ? | பத்மாசன புத்தர் | கல் | | |
| மேலையூர் | மைத்ரேய | தங்கமுலாம் பூசப்பட்ட செம்பு | 9–ஆம் நூ. | |
| மடாகரம் | உட்கார்ந்த நிலையில் புத்தர் | கல் | 11-ஆம் நூ. | தஞ்சைக் கலைக்கூடத்தில் இருக்கிறது. |
| திருவலஞ்சுழி | நின்ற நிலையில் புத்தர் | கல் | 11-ஆம் நூ. | |

பாடியில் டென்மார்க்கு, போர்த்துக்கல், செர்மனி, சுவீடன் ஆகியநாட்டுப் பாதிரிகள் வந்து தங்கிப் பிராடஸ்டண்டு மதத்தைப் பரப்பியுள்ளனர். கல்வி நிலையங்கள் ஏற்படுத்தியும், தமிழில் அச்சகம் அமைத்தும், தொழிற் பள்ளிக்கூடங்கள் தொடங்கியும் பிராடஸ்டண்டு மதம் தரங்கையில் ஊன்றிக்கொண்டது. 1841–இல் தரங்கம் பாடியிலுள்ள பிராடஸ்டண்டு மடத்தின் வாயிலாக சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், கொழும்பு, இரங்கூன், பினங்கு ஆகிய இடங்களிலும் பிராடஸ்டண்டு மதம் பரப்பப்பட்டது. அந்த நகரங்களில் கிளை மடங்கள் நிறுவப்பட்டன. தென் இந்தியாவிலுள்ள பிராடஸ்டண்டு கோயில்கள் அனைத்தும் தரங்கம்பாடி மடத்தின் துணையால்தான் தோன்றின.

தமிழ்ச் சுவிசேஷ திருச்சபை எனப்படும் தமிழ் இவாஞ்சலிகல் லூதரன் சர்ச்சின் தலைமைக் குருவுக்கு "பிஷப் ஆப் டிராங்குபார்" (தரங்கை பிஷப்பு) என்ற பட்டம் உண்டு. அவர் இப்போது திருச்சியில் வாழ்ந்தபோதிலும் பதவியேற்பு விழா தரங்கையிலேயே நடைபெற்று வருகிறது. திருச்சியில் அவருடைய இல்லத்திற்கு "தரங்கை வாசம்" என்ற பெயர் சூட்டப்பெற்றிருக்கிறது. அவர் வழிபடும் கோயிலுக்கு "டிராங்குபார் ஹவுஸ் சேப்பல்" என்ற பெயர் இருந்துவருகிறது. திருச்சி—இருங்களூரிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு "நியூ டிராங்குபார் டிரெயினிங் ஸ்கூல்" என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. 1941–இல் தென்னிந்தியாவிலுள்ள பிராடஸ்டண்டுப் பிரிவுகளை இணைத்து "சர்ச்சு ஆவ் சவுத் இந்தியா" நிறுவப்படுவதற்கான சடங்குகளும் தரங்கம்பாடியிலேயே நடைபெற்றன.

பிராடஸ்டண்டு மதத்தினருக்கு இடம் கொடுத்தவர்கள் நாயக்க அரசர்களே எனினும், அந்த மதம் பெரிதும்

பரவியது மகாராட்டிர அரசரான சரபோசியின் காலத்திலேயே ஆகும். அவருடைய ஆசிரியரும் அவருடைய ஆட்சி உரிமையை வற்புறுத்திப் பிரிட்டிஷ் அலுவலர்களுடன் வாதாடி அவருக்குப் பட்டத்தை மீட்டுக் கொடுத்தவருமான ஸ்குவார்ட்சு (*1726 - 1798*) என்ற டேனிசுப் பாதிரியார் சரபோசியின் அளவுகடந்த அன்பையும் ஆதரவையும் பெற்ளுர். அதனல் தஞ்சை மாவட்டமெங்கும் பிராடஸ்டண்டு மதம் வலுவடைந்தது. அவர் *1769*-இல் தஞ்சை நகரில் சிவகங்கைத் தோட்டத்துக்கு அருகே கட்டிய ஸ்குவார்ட்ஸ் சர்ச்சில் சரபோசி மன்னர், ஸ்குவார்ட்சின் உருவத்தைச் சலவைக்கல்லில் அமைத்து அதில் தம்முடைய நன்றியையும் பாராட்டையும் சில சொற்களால் பொறித்திருக்கிருர். இந்தத் தேவாலயத்துக்கு முன்னே ஒரு அநுமான் கோயிலும், பின்னே ஒரு பிள்ளையார் கோயிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

தரங்கம்பாடியிலுள்ள பிராடஸ்டண்டுக் கோயில்களாவன: *1720* – இல் ஏற்பட்ட லூதரன் சர்ச்சு, அதே ஆண்டில் ஏற்பட்ட டேனிசுச் சர்ச்சு, *1746*-இல் பொறையாரில் ஏற்பட்ட பெதல் ஹாம் சர்ச்சு ஆகியன. "புதிய ஏற்பாடு" (நியூ டெஸ்டமண்டு) தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதும் தரங்கம்பாடியில்தான்.

பிராடஸ்டண்டு மதத்துக்குப் போன்றே கத்தோலிக்கத்துக்கும் தஞ்சை மாவட்டம் மிக முக்கியமான பகுதியாக இருக்கிறது. *1680*–லேயே தரங்கம்பாடியில் முதல் கத்தோலிக்கத் தேவாலயம் கட்டப்பெற்றது. பாண்டி நாட்டிலும் சென்னையின் சுற்றுப் புறப்பகுதியிலும் தவிர, தமிழ் நாட்டின் ஏனைய இடங்களில் கத்தோலிக்கம் பரவியது தஞ்சை வழியேதான் என்று சொல்லலாம். இன்றும் இம்மாவட்டத்தில் *250* கத்தோலிக்கக் கோயில் உள்ளன. இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள

கத்தோலிக்கர்களின் புனிதத் தலமான வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா கோயில் இம்மாவட்டத்திலேயே இருக்கிறது. கும்பகோணம் நகரம் ஒரு பிஷப்பின் தலைமையிடமாக இருந்துவருகிறது.

### இஸ்லாம்

கடலோரப் பகுதியான நாகப்பட்டினம் வட்டத்திலும், கும்பகோணம், பாபநாசம் வட்டங்களிலும் முஸ்லிம்கள் ஓரளவு தொகையாக வாழ்கின்றனர். நாகூரிலும் அதிராம் பட்டினத்திலும் கூத்த நல்லூரிலும் உள்ள மசூதிகள் புகழ்பெற்றவை.

### சமணம்

சமணர் சில நூறு பேர் இம்மாவட்டத்தில் உள்ளனர். கருந்திட்டான்குடி மன்னார்குடி, கும்பகோணம், நன்னிலம் வட்டத்திலுள்ள தீபங்குடி ஆகிய இடங்களில் சமணர் கோயில்கள் உள்ளன. பல்லவ ஆட்சி இங்கே நிலவிய காலத்தில் பழையாறையில் சமணம் பரவியிருந்தது. பழையாறையிலிருந்த பார்சுவதநாதர் கோயில் என்னும்சமண சமயக் கோயிலே இன்று பாசுபதேசுவரர் கோயிலாக மாறியிருப்பதாகக் கூறுவர். பள்ளி அக்கிரகாரம், திருக்காட்டுப்பள்ளி என்னும் ஊர்ப்பெயர்கள் சமணர் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன.

இனி, இம்மாவட்டத்துக்குச் சிறப்பாக உள்ள ஆதீனங்கள், தஞ்சைப் பெரிய கோயில், சத்திரங்கள் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுவோம்.

## ஆதீனங்கள்

### திருவாவடுதுறை ஆதீனம்

தமிழ்நாட்டின் தலைசிறந்த சைவ ஆதீனங்களுள் இது ஒன்று. இவ்வாதீனத்தின் தலைமையிடம் மாயூரம் வட்டத்திலுள்ள திருவாவடுதுறை என்னும் ஊராகும்.

இந்த ஆதினத்துக்கு 360 கிளைகள் உள்ளன. அவற்றுள் 60 பெரிய கிளைகளில் தம்பிரான்கள் உள்ளனர். தஞ்சை தவிர நெல்லை, குமரி மாவட்டங்களிலும் இம் மடத்திற்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளன. ஆவுடையார் கோயில், திருவாவடுதுறை, திருவிடை மருதூர் திருவீழிமிழலை, மாயூரம் முதலிய 13 கோயில்கள் இந்த ஆதீனத்தைச் சேர்ந்தவை.

இந்த ஆதீனம் 15–ஆம் நூற்றுண்டில், ஸ்ரீ நமச்சிவாயச் சுவாமிகளால் தம் குருவாகிய சித்தர் சிவப்பிரகாச தேசிகர் ஆணைப்படி நிறுவப்பட்டது. இவ்வாதீனத்துத் தலைவர்கள் 'கைலாய பரம்பரையின' ராகக் கருதப் படுகின்றனர்.

ஆதீனத்தலைவர் பலர் சிறந்த நூல்களை அருளியுள்ளனர்; சமயநூல் ஆராய்ச்சியும் இலக்கண இலக்கியப் பயிற்சியும் பன்னிரு திருமுறை அறிவும் உடையவர்கள். மந்திர சித்தி பெற்றவர்களும் மருத்துவத் தேர்ச்சியடைந்தவர்களும் அவர்களில் உண்டு. முனிவர், புலவர், ஓதுவார், இசைப்புலவர் ஆகியோரை இந்த ஆதீனத்துத் தலைவர்கள் ஆதரித்து வந்திருக்கின்றனர்.

இவ் ஆதீனத்திலேயே கல்வி கற்றுச் சிறந்தவர் பலர். இவ்வாதீனத்தைச் சேர்ந்த சங்கர நமச்சிவாயர், இலக்கண நூலாகிய நன்னூலுக்கு உரை எழுதியுள்ளார். இவருக்குப் பின் வந்த சிவஞான முனிவர் என்பவர் சங்கர நமச்சிவாயர் உரையைத் தழுவி விரிவுரை எழுதியுள்ளார்; சிவஞான போதத்துக்கு ஓர் உரை வரைந்துள்ளார்; பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார்; காஞ்சிப் புராணத்தை யாத்துள்ளார்.

திருமூலர், திருமந்திரம் இயற்றியது இவ்வூரிலேயே ஆகும். ஆறுமுக நாவலர்க்கு 'நாவலர்' என்ற பட்டம் வழங்கப்பெற்றது இங்கேதான். திரிசிரபுரம்

மீனட்சிசுந்தரம்பிள்ளை, ஆதீன வித்துவானக இருந்ததும் மகாவித்துவான் பட்டம் பெற்றதும் இங்கேயே. இங்கே உள்ள விளக்குகளின் அடியில்தான் டாக்டர் உ. வே.சாமிநாத ஐயர் இளமைக் காலத்தில் ஆதீனத்தின் ஆதரவில் அமைதியாகப் படித்தார்; இங்குள்ள கொலு மண்டபத்தில்தான் பல நாட்கள் மெய்ம்மறந்து தூங்கினர்; இங்குள்ள உக்கிராணம்தான் எந்தப் பண்டம் வேண்டுமானலும் அவர்பெற்றுக்கொள்ளும் இடமாக இருந்தது.

*1888* முதல் *1920* வரை பட்டத்திலிருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர், இயல் இசை நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் முதறிவு உடையவராயும் அருங்கலை விநோதராகவும் விளங்கினர். திருவாவடுதுறையில் சம்மானம் பெற்றவர்கள் வேறு இடங்களில் சென்று சம்மானம் பெற மனமில்லாதபடி வாரி வழங்கினர். நூல்நிலையம் ஒன்றை நிறுவியதும் இவர்கள் காலத்திலேயே.

அம்பலவாண தேசிகர் (*1937* - *1951*) *17* – ஆவது தலைவராக இருந்து இயற்புலவர், இசைப்புலவர் ஆகியோர் பலரைப் போற்றும் வள்ளலாக விளங்கினர். 'இந்தியக் குடியரசு நீடூழி வாழிய' என வாழ்த்தி *14 - 8 - 1947* இல் மணிகள் பதித்த தங்கச் செங்கோலை இவர் ஜவஹர்லால் நேருவுக்கு வழங்கினர்.

*1951* முதல் பட்டத்திலிருந்து வரும் *21*ஆவது சன்னிதானமாகிய சுப்பிரமணிய தேசிக சுவாமிகள், தொடர்ந்து சிவப்பணிகளைச் செய்வதோடு அரிய நூல்களை வெளியிட்டு அன்பளிப்பாக வழங்கி வருகிறார்கள். திருமந்திர மாநாடுகளை நடத்தி வருகிறார்கள்.

**தருமபுர ஆதீனம்**

பல தலைமுறைகளாகச் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிவரும் நிறுவனங்களுள் சிறந்து விளங்கும்

தருமபுர ஆதீனம் ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிய குரு ஞான சம்பந்த தேசிகரால் 16 - ஆம் நூற்றாண்டில் தொடங்கப் பெற்ற பெருமையை உடையது; காசிமடம் என்னும் திருப்பனந்தாள் ஆதீனத்துக்குத் தலைவராக, தருமபுரத்துத் தம்பிரான்களுள் ஒருவரே பட்டத்துக்கு வர இயலும்.

தருமபுர ஆதீனத்தின் தலைமை மடம் மாயூர நகர எல்லையருகேயுள்ள தருமபுரம் என்னும் சிற்றூரில் இருக்கிறது.

இந்த ஆதீனத்துக்குட்பட்ட கோயில்கள் 27. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை சீர்காழி, வைத்தீசுவரன் கோயில், திருப்பனந்தாள், திருநள்ளாறு முதலியன. இந்த ஆதீனத்துக்கு ஏராளமான நிலங்களும் உப்பளங்களும் பிற சொத்துக்களும் உள்ளன.

25-ஆவது மகாசன்னிதானமாகப் பட்டத்தில் அமர்ந் திருக்கும் கயிலை குருமகாசன்னிதானம் சுப்பிரமணிய தேசிகபரமாச்சாரிய சுவாமிகள், சிறந்த முறையில் ஆட்சி செய்தும் திருக்கோயில்களைக் கண்காணித்தும் திருப் பணிகளைச் செய்தும் புலவர்களைப் புரந்தும் கனகாபி டேகம் செய்து கொண்டும் புகழ்பெற்றவர்கள் ஆவர்.

தருமபுரத்தில் சொக்கலிங்கப் பெருமானின் கோயி லும், பல மொழிகளில் அரிய நூல்களையுடைய நூலகமும் தேவாரப் பாடசாலையும் தமிழ்க் கல்லூரியும் வேதசிவாக மப்பாடசாலையும் உள்ளன. சைவசித்தாந்தக் கல்லூரியும் தோன்ற இருக்கிறது. 'ஞானசம்பந்தம்' என்னும் திங்கள் இதழ் இங்கிருந்து வெளிவருகிறது. சிவநெறி நூல்களை யும் 'திருக்குறள் உரைவளம்' போன்ற விழுமிய சில நூல் களையும் தமிழைப் பற்றியும் சைவத்தைப் பற்றியும் ஆங்கில மொழியில் சில நூல்களையும் இந்த ஆதீனத்தார் வெளியிட்டுள்ளனர். ஆண்டுதோறும் இங்கே நிகழும்

ஆவணி மூல விழாவில் புலவர் ஒருவர்க்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. ஆதீனத்தலைவர், சில விழாக்களின்போது பட்டினப் பிரவேசம் வரும் காட்சியும் பல விரல்களிலும் வைர மோதிரம் அணிந்திருப்பதும் இருவர் அக் கைகளைத் தாங்கிக் கொண்டு வருவதும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளின் வர்ணனையை நினைவூட்டும்.

### திருப்பனந்தாள் காசிமடம்

சிறந்த சைவ ஆதீனங்களுள் ஒன்றாக உள்ள திருப்பனந்தாள் காசிமடம் 17-ஆம் நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்து ஸ்ரீ வைகுண்டத்தில் தோன்றிய காசிவாசி ஆதி குமரகுருபர சுவாமிகளால் காசியில் தோற்றுவிக்கப் பட்டது. தமிழ்ப் புலமையோடு இந்திமொழிப் புலமையும் பெற்ற குமரகுருபரர் காசியில் மடம் நிறுவித் தமிழும் சைவமும் தழைக்கச் செய்தார். இந்த ஆதீனத்தின் தலைவர்கள் காசியில் பல மாதங்கள் வாழும் இயல்பினராக இருந்து வருகின்றனர்; இதனால் 'காசி வாசி' என்ற பட்டம் இவர்கட்கு உண்டு.

1730 அளவில்தான் திருப்பனந்தாளில் காசிமடம் ஏற்பட்டது. இதை நிறுவியவர் காசிவாசி தில்லைநாயக சுவாமிகள் ஆவர். இச்சன்னிதானத்தின் காலமுதல் திருப்பனந்தாள் தலைமை மடமாகவும், காசி அதன் கிளை மடமாகவும் கருதப்பெற்று வருகின்றன.

இம்மடத்திற்கு ஏராளமான சொத்துக்கள் உள்ளன. குமரகுருபரர் தோன்றிய ஸ்ரீவைகுண்டத்தில் பல அற நிறுவனங்கள் இவ்வாதீனத்தின் வாயிலாக நடைபெற்று வருகின்றன.

இம்மடத்தின் 19-ஆவது தலைவராக விளங்கிய காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சைவசித்தாந்த வளர்ச்சி


கருதி அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் சில அறக் கட்டளைகளையும், ஒவ்வோராண்டிலும் சென்னைப் பல் கலைக்கழகத்தின் தமிழ்ப்புலவர் தேர்வில் முதலாவதாகத் தேர்ச்சியடைபவர்க்கு ஓராயிரம் வெண் பொற்காசு வழங்கும் அறக்கட்டளையும் நிறுவியுள்ளார்.

1944 முதல் பட்டத்தில் இருந்துவரும் காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் திருமுறை வளர்ச்சி, நூல் வெளியீடு, தமிழ்க்கல்வி, ஆடுதுறையிலும் ஸ்ரீவைகுண்டத்திலும் ஆங்கிலக் கல்லூரிகள், திருக்குறளைச் சலவைக் கல்லில் பொறித்தல்போன்ற அறச் செயல்களுக்கு முக்கால் கோடி ரூபாய்வரை வழங்கியுள்ள வள்ளல் ஆவார்கள்.

இந்த ஆதீனத்தின் கட்டிடங்களும் இங்குள்ள காசி விநாயகர் கோயிலும் காணத்தக்கன. ‘குமரகுருபரன்’ என்னும் இதழ் இங்கிருந்து வெளிவருகிறது.

## தஞ்சைப் பெரிய கோயில்

விண்ணும் மண்ணும் கடந்தவன் இறைவன். எனவே, விண்ணும் மண்ணும் கண்டறியாத அளவு உயர்ந்ததொரு கோயிலைத் தன் பெருமைக்கேற்ப இராசராசச் சோழன் பத்தாம் நூற்றூண்டில் உருவாக்கினன். இதுவே தஞ்சைப் பெரிய கோயில் என்றும் தஞ்சை இராசராசேச்சுரம் என்றும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்றும் குறிப்பிடப்படுகிறது. இது இந்தியாவிலேயே தலைசிறந்த கோயில்களுள் ஒன்றூகவும், வெளிநாட்டார் வியப்படையும் வண்ணம் தமிழ் மக்களின் கலைப்புகழை நிலைநாட்டும் நிறுவனமாகவும் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் மிக உயாந்த விமானத்தோடு அமைக்கப்பட்ட முதற்கோயில் இதுவே. நிலப்பரப்புக்கு மேல் உயர்ந்த மேடையில் நிறுவப் பெற்றிருப்பதும் இக் கோயிலின் சிறப்பு ஆகும்.



தஞ்சைப் பெரிய கோயில்

படம் உதவி:
தமிழ் நாடு அரசாங்கச் செய்தித் துறை.

கோயிலின் கருப்பக் கிரகத்திற்கு மேலே உள்ள விமானம் 13 கோபுர மாடிகள் கொண்டது. அதன் உச்சியில் சதுர வடிவமுள்ள பிரமரந்திரத் தளக் கல்லின்மேல் கலசமும் அதன்மீது அழகிய ஒரு தூபியும் அமைக்கப் பெற்றுள்ளன. இச்சிறந்த விமானம் 216 அடி (65 மீட்டர்) உயரமுடையது. தூபிக்குடம் செம்பினுல் ஆனது; மேலே பொன் தகடு போர்த்தது. செப்புக்குடம் 3083 பலம் நிறை உடையது. அதன்மேல் போர்த்துள்ள பொன் தகடு $2926\frac{1}{2}$ கழஞ்சு நிறை உடையது என்று கல்வெட்டு ஒன்று கூறுகிறது. விமானத்தின் உச்சியில் போடப் பெற்ற பிரமரந்திர தளம் ஒரே கருங்கல்லால் ஆனது; அது $25\frac{1}{2}$ அடி சதுரம். அதன் நிறை 80 டன் (90 மெட்ரிக் டன்) அதைத் தஞ்சைக்கு நான்கு மைலுக்கு ($6\frac{1}{2}$ கி. மீ.) அப்பாலுள்ள சாரப்பள்ளம் என்ற ஊரிலிருந்து சாரம் போட்டு இவ்வளவு உயரத்தில் ஏற்றினர் என்பது ஊரின் பெயரால் ஊகிக்கப் படுகிறது. சதுரக் கல்லின் நான்கு மூலைகளிலும் (ஒவ்வொன்றும் $6\frac{1}{2}$ அடி நீளமும் $5\frac{1}{2}$ அடி அகலமும் உள்ள) நந்திகள் உள்ளன.

இவ்வளவு சிறந்த விமானத்தை அமைக்க, இராசராசன் பல்லாண்டுகள் பாடுபட்டான் என்றும், அளவு கடந்த அன்பால் தொழிலாளரையும் தம் வயப்படுத்தினுன் என்றும், எச்சல் துப்ப விரும்பிய கல்தச்சனின் வேலை தடைப்படாதிருக்க அரசனே கிண்ணம் ஏந்தியதாகவும் பல கதைகள் வழங்கி வருகின்றன.

இறைவன் பெருவுடையார் (பிரஹதீசுவரர்); இறைவி பெரியநாயகி. பெரியநாயகி என்னும் பெயர் தஞ்சை மாவட்டத்தில் பெண்பாலரிடம் பெரு வழக்காகப் பரவியிருக்கிறது.

பெருவுடையார் என்னும் பெயருக்குத் தக்கபடி இக் கோயிலிலுள்ள லிங்கம் இந்தியாவிலேயே உயரமான

லிங்கமாக அமைக்கப்பட்டிருக்கிறது. பெரிய கோயிலுக் கேற்ற நந்தி இங்கு இருக்கிறது. இதன் நிறை 25 டன்; (28 மெட்ரிக் டன்), உயரம் 12 அடி, நீளம் 16 அடி, அகலம் $8\frac{1}{4}$ அடி. இந்நந்தி ஒரேகல்லிலிருந்து உருவாக்கப்பெற்றது; பெரம்பலூர் அருகேயுள்ள பச்சை மலையிலிருந்து இதற் கெனக் கல் கொண்டு வரப்பட்டதாம். ஆந்திர நாட்டில் அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள லேபாச்சி நந்திக்கு அடுத்தபடி பெரிய நந்தியாக இருப்பது இதுவே. பெரிய நந்தியைச் சுற்றியுள்ள மண்டபமும் விமானத்தி லுள்ள வைணவச் சமய வடிவங்களும் நாயக்கர் காலத்தில் ஏற்பட்டவை.

தஞ்சைப் பெரியகோயிலின் துவார பாலகர்களின் சிலை 18 அடி உயரம், அதாவது உயர்ந்த ஆட்களைப்போல மூன்று பங்கு அளவினது. இவ்வளவு பெரிய உருவங்களை ஒரு கல்லிலேயே செய்திருக்கிறார்கள். ஏதோ, பெருமைக் காக இப்படி இரண்டு மட்டும் செய்துவிட்டு இருக்க வில்லை. இது போன்ற 14 துவார பாலகர்கள் இருக் கின்றன.

பெரிய கோயிலினுள் உள்ள (நாயக்கர் காலத்தில் கட்டப்பெற்ற) சுப்பிரமணியர் கோயில் 45 அடி நீளமும் 45 அடி அகலமும் உள்ள மேடைமீது அமைந்தது. 55 அடி உயரமுள்ள கோபுரத்தை உடையது; கற்சிற்ப வேலை யின் உயர்நிலையையும் அருமையையும் விளக்குவதற்கே இக்கோயில் அமைந்ததாக எண்ணலாம்.

தஞ்சையை யார் யார் ஆண்டிருக்கிறார்கள் என்பது பிற்காலத்தவர்க்குத் தெரியுமாறு விமானத்தில் சோழர், நாயக்கர், மராட்டியர், வெள்ளைக்காரர் உருவங்கள் உள்ளன. கோயிலின் தெற்குச் சுவரில் மராத்தியர் தஞ்சைக்கு வந்த வரலாறும் 1802 வரையுள்ள நிகழ்ச்சி களும் மராத்தி மொழிக் கல்வெட்டாகக் காணப்

படுகின்றன. சரபோசி இவற்றை ஏற்பாடு செய்தான் என்பர். இக்கல்வெட்டுக்கள் 'பான்ஸ்லேவ் வம்ச சரித்திரம்' என்ற பெயரில் தமிழில் வெளியாகியுள்ளன.

வைணவ, புத்த சமயங்களை ஒட்டிய சிற்பங்கள் விமானத்திலும் சுவரிலும் அமைந்துள்ளன. கர்ப்பக்கிரகத்துக்கு அருகே சோழர் காலத்தில் சுவர்களில் தீட்டப்பெற்ற அருமையான ஓவியங்கள் உள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றைத் தெரிவிக்கும் ஓவியங்கள், அசுரர்களுக்கிடையே நிகழ்ந்த போர்களைப் படம் பிடித்துக்காட்டும் ஓவியங்கள், சோழர்காலத்து நடன ஓவியங்கள் ஆகியவை இக்கோயிலிற் காணத் தக்கன. சுப்பிரமணியர் கோயிலில், படைத்தலைவனைப் பாசறைக்கு எடுத்துச்செல்லும் யானையின் சிற்பமும் இராஜராஜன் திருவாசலின் இருபுறமும் கற்சுவர்களிலுள்ள சின்னஞ்சிறு சிற்பங்களும் கண்டின்புறத்தக்கவை.

தஞ்சைக் கோவிலின் தனிச் சிறப்புக்களை, அங்குச் செல்லுவோர் நன்ருகக் கவனிக்க வேண்டும். பிற கோயில்களில், மூல விக்கிரகத்தின் மீதுள்ள கோபுரம் சாதாரணமாகவும் நான்கு வாயில்களின்மீது உள்ள கோபுரங்கள் உயரமாகவும் கம்பீரமாகவும் இருக்கும். தஞ்சாவூரிலும் அதனோடு தொடர்புள்ள கங்கைகொண்ட சோழபுரத்திலும் மூலத்தானத்தின் மீதுள்ள விமானம் பெரிதாகவும் உயரமாகவும் இருக்கிறது.

இக்கோயில் நால்வருக்குப் பிற்காலத்தே அமைந்ததால் இது பாடல் பெறவில்லை; எனினும் இத்தலத்திலுள்ள தளிக்குளம் என்னும் தீர்த்தம் அப்பர் தேவாரத்தில் திருத்தாண்டகத்தில் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. கருவூர்த் தேவர் திருவிசைப்பா, அருணகிரியார் திருப்புகழ், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் 'தஞ்சைப்

பெருவுடையார் உலா' ஆகியவை இக் கோயிலைச் சிறப்பிக்கும் இலக்கியங்களுள் சில ஆகும்.

இக்கோயிலின் பெருமையை உணர்ந்து, அரசாங்கத்தார் இதன் புகழைப் பரப்பி வருகின்றனர்; அதற்காக ஒரு திரைப்படமும் வெளியிட்டிருக்கின்றனர். இக் கோயிலை, நன்கு பேணும் பொறுப்பைப் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர் மேற்கொள்ள வேண்டும்.

படையெடுப்புக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் பயன்படுமாறு அகழியுடன் அமைக்கப்பட்ட இக் கோயில், *1961*-இல் வெள்ளச்சேதம் ஏற்பட்ட பகுதிகளிலிருந்து ஓடிவந்தவர்களுக்குத் தஞ்சம் அளித்தது.

## சத்திரங்கள்

இந்தியாவெங்கும் தமிழ்நாடெங்கும் சத்திரங்கள் இருந்தபோதிலும் தஞ்சை மாவட்டத்தில் சத்திரங்கள் ஒரு சிறந்த நிறுவனமாக அமைந்துள்ளன.

பல நூற்றாண்டுகளாகத் தஞ்சை மாவட்டத்தில் சத்திரங்கள் இருந்து வந்திருக்கின்றன. மராத்திய மன்னர்கள் காலத்தில் இவற்றின் எண்ணிக்கை பெருகிற்று. அந்நாளில் மராத்தியரும் ஏனைய வட இந்தியரும் பெருந்தொகையினர் இவ்வழியாகவே இராமேசுவரத்திற்குச் சென்றது ஒரு காரணமாக இருக்கலாம்.

புகழ்பெற்ற சரபோசி மன்னர் காலத்தில் மேலும் பல சத்திரங்கள் கட்டப்பட்டன. அவை அரச குடும்பத்துப் பெண்டிர் பெயராலும் அரசரின் அன்புக்குரிய மங்கையர் பெயராலும் அமைந்தன. சத்திரங்களின் செலவுக்கு மூலதனமாகப் பல சிற்றூர்களை-96 தோட்டம் என்று இவற்றுக்குப்பெயர் – சரபோசி எழுதிவைத்தார்.

சத்திரங்களைத் தொடர்ந்து நடத்தி வரவேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு *28 – 1 – 1810* இல் எழுதிய கடிதத்தில் சரபோசி கேட்டுக்கொண்டார்

ஒவ்வொரு சத்திரத்துக்கும் ஒரு கோயிலும் பள்ளிக் கூடமும் கட்டப்பட்டன. ஒரு குளமும் வெட்டப்பட்டது. பிராமணர் முதல் பறையர் வரை எல்லாச் சாதியார்க்கும் மூன்றுவேளை புழுங்கல் அல்லது பச்சை அரிசிச்சோறு போடப்பட்டது. நள்ளிரவில் மணி அடித்தவுடன் உண்ணு தவர் அனைவரும் உடனே வந்து உணவு உண்ண வேண் டும் என்ற வரையறை இருந்தது. ஒவ்வொரு சத்திரத் திலும் வேத ஆசிரியர்களும் மருத்துவர்களும் இருந்தனர். எண்ணெய் நீராடவும் ஏற்பாடுகள் இருந்தன. ஏழை எளியவர்க்கு உடையும் வழங்கப்பட்டது. மருத்துவ வசதிகள் செய்யப்பட்டன. குழந்தைகளுக்கும் கர்ப்பமாக உள்ள பெண்களுக்கும் பாலும் சத்துணவும் அன்பளிக்கப் பட்டன. இறந்தவர்களின் ஈமச்சடங்குகளுக்கும் பணம் கொடுக்கப்பட்டது.

சுருங்கச் சொன்னால் சமுதாய நலம் என்ற பெயரில் 'தொட்டில் முதல் சுடுகாடுவரை' நல்வாழ்வுத் திட்டங்களை நாளும் பெருக்கிவரும் அரசாங்கங்கள் சிலநாடுகளில் இக் காலத்தில் செய்யும் பல்வேறு உதவிகளும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே சத்திரங்களின் வாயிலாகச் செய்யப்பட்டு வந்தன. இந்த உதவிகள் எவருடைய தயவுமின்றி எல்லோர்க்கும் கிடைத்தன. இதனால் 'சத்திரத்துச் சோத்துக்குச் சுப்பணய்யங்கார் சிபார்சு என்ன?' என்ற பழமொழியும் சோழநாட்டில் வழக்கி லிருந்தது.

இத்தகைய சத்திரங்கள் தஞ்சை மாவட்டத்தின் வடகோடியிலுள்ள ஆனைக்காரன் சத்திரம், அம்மா சத் திரம் முதல் தென்கோடியிலுள்ள மீமிசல் வரை அதற்கப் பால் இராமேசுவரம், தனுசுக்கோடி, சேதுக்கரை ஆகி யவை வரை இருந்தன. குறிப்பாக சேது ரஸ்தா எனப் படும் இராமேசுவரம் சாலையில், 10 கி. மீ. க்கு ஒன்றாக-

அமெரிக்க நெடுஞ்சாலைகளில் 10 கி. மீ. க்கொரு 'மோட்டல்' என்னும் உணவு விடுதியும் பெட்ரோல் கடையும் கார் பழுது பார்க்குமிடமும் இருப்பதுபோல- சத்திரங்கள் கட்டப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தச் சத்திரங்கள் மாவட்டக் குழுவினரிடம் ஒப்படைக்கப் பெற்றன. சத்திரங்களுக்குரிய மூலதனத்திலிருந்து கிடைத்த வருவாயிலிருந்தே தஞ்சை மாவட்டக்கழகம் பல ஊர்களில் கல்வி நிலையங்களும் மருத்துவ நிலையங்களும் தொடங்கிற்று.

ஒரத்தநாடு, ராஜாமடம் போன்ற பல இடங்களில் சத்திரத்துக் கட்டிடங்களே உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்களாக உள்ளன. திருவையாற்றில் அரசர் கல்லூரி அமைந்திருப்பதும் சத்திரத்தில் தான். தஞ்சை சரபோசி கல்லூரியும் சத்திரங்கள் ஆட்சித் துறையினர் அன்பளித்த தொகையின் துணைகொண்டே தொடங்கப் பெற்றது. இன்னும் எத்தனையோ ?

பல சிறந்த சத்திரங்கள் தஞ்சை மாவட்டத்தில் இன்றும் உள்ளன. ஆனால் இவை, இக்கால நிலைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டு வாடகைக்கு விடும் வசதியான விடுதிகளாக இயங்குகின்றன. இத்தகைய விடுதிகளில் ஒப்புயர்வின்றி விளங்குவது தஞ்சை இராசாச் சத்திரம் ஆகும்.

## 7. வேளாண்மைச் சிறப்பு

தஞ்சை மாவட்டம் வேளாண்மைத் துறையில் சிறந்து விளங்குவதற்கு ஆற்றுப் பாசான வசதி இருப்பதே காரணம் ஆகும்.

அரிசிலாறு, விக்கிரமனாறு, முடிகொண்டான் ஆறு குடமுருட்டி ஆறு, வெண்ணாறு, வெட்டாறு, வீரசோழன்

ஆறு, வடவாறு, பாமணி ஆறு, திருமலைராசன் ஆறு என்று பெயர்கள் பல இருந்தாலும் இவை யாவும் ஒரே ஆறு தான். *அந்த ஆறே காவிரி ஆருகும்.

காவிரியின் ஓர் இயல்பு குறிப்பிடத்தக்கது. ஓர் இடத்திலேயே இராமல் அடிக்கடி சிறிது இடம்மாறி ஓடுவதை, காவிரி பாயும் பகுதிகளில் தஞ்சை மாவட்டத்தில் காணலாம். தேவாரத்தில் காவிரிக்குத் தென்பாலுள்ள தலங்கள் என்று குறிப்பிடப் பெற்றிருப்பன வடபாலும், வடபாலுள்ள தலங்கள் தென்பாலும் இருப்பதற்குக் காரணம் இதுவே ஆகும். மேலும், 19–ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் குத்தாலத்தில் காவிரி போய்க் கொண்டிருந்த இடத்தைவிட இப்போது ஒன்றரைப் பர்லாங்குத் தொலைவில் போவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு காவிரி தன் போக்கை மாற்றிக் கொள்ளுவது கிழக்கு வங்காள – மேற்கு வங்காள எல்லையில், பிரமபுத்திரா ஆறு அடிக்கடி தன்போக்கை மாற்றிக் கொள்ளுவதால் இந்தியா - பாகிஸ்தான் எல்லை பற்றிய குழப்பங்கள் ஏற்படுவதுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

காவிரி, அரசியற் குழப்பம் விளைவிப்பதில்லை. காலம் அறிந்து அமுதூட்டி மக்களை மகிழ்விக்கும் தாய் போன்று, காவிரியாறு பயிர் விளையும் காலத்தில் தன் வளம் சுரந்து காப்பதை,

‘வாழி அவன்தன் வளநாடு மகவாய்
வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி’

* கல்கத்தாவில் காசிப்பூர் ரோடு, அப்பர் சிட்பூர் ரோடு, லோயர் சிட்பூர் ரோடு, பெண்டிங் ஸ்ட்ரிட், சௌரங்கி, அஷ்டோஷ் மூகர்ஜி ரோடு, சியாம் பிரசாத் மூக்கர்ஜி ரோடு டாலிகஞ்சு ரோடு என்ற பெயர்கள் ஒரெ தெருவின் பல பகுதிகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது ஒப்புநோக்கத் தக்கது.

என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பாடியுள் ளார். 'காய்த்த செங்நெலின் காடுசூழ் காவிரி நாடு' என்று சேக்கிழாரும், 'காவிரியால் விளை சோழ மண்டலம்' என்று அருணகிரிநாதரும், 'சோழ வளநாடு சோறுடைத்து' என்று ஔவையாரும், காவிரி நாடு செங்நெல், கரும்பு, கமுகு முதலியன விளைந்து கடத்தற்கரிய வழியினை உடையதாக விளங்குகிறது என்று கம்பரும் காவிரியைச் சிறப்பித்துள்ளனர்.

காவிரியின் வளம் தஞ்சை மாவட்டத்து மக்களுக்குப் பயன்படப் பண்டை நாளில் சோழ அரசர்கள் மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து இக் காலத்திலும் அரசாங்கத்தார் பல செயல்களைச் செய்து வருகின்றனர். 1934–இல் மேட்டூர் அணை கட்டப்பெற்று, இதிலிருந்து தஞ்சை மாவட்டத்துக்கு, அளவாக அவ்வப்போது தண்ணீர் விடப்படுகிறது.

தண்ணீர் விடுவதை மேற்பார்க்கவும், பாய்கால் வடிகால் முறைகளை நடத்தி வரவும், ஆறுகளையும் கால்வாய்களையும் சீரான நிலையில் வைத்திருக்கவும் தமிழ்நாடு அரசாங்கத்தாரின் நீர்ப்பாசனத் துறையினர் தஞ்சை மாவட்டத்தில் மூன்று பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளனர். இவற்றுக்குக் காவிரிப் பிரிவு, வெண்ணாற்றுப் பிரிவு, கல்லணைக் கால்வாய்ப் பிரிவு என்று பெயர்.

காவிரிப் பிரிவு, காவிரிப்படுகைப் பகுதியிலும் கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டுப் பகுதியிலும் பாய்கால் வடிகால் வசதிகளைக் கண்காணித்து வருகிறது. இப்பிரிவுக்குட்பட்ட மாயூரம், சீர்காழி, நன்னிலம் வட்டங்களில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களின் வளத்தைப் பெருக்க அழிஞ்சியார் கழுதை வாய்க்கால், நல்லூர் உப்பனாறு, கிட்டியணை உப்பனாறு, மன்னியாறு, தண்டலாறு முதலிய வடிகால்கள் ஆழப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வெண்ணாற்றுப் பிரிவு, வெண்ணாற்றுப் படுகைப் பகுதியிலும் (வடவாறு தவிர) அதன் கிளை ஆறுகள் பாயும் பகுதிகளிலும் பாய்கால் வடிகால் வசதிகளைப் பேணி வருகிறது.

கல்லணைக் கால்வாய்ப் பிரிவு கல்லணைக் கால்வாய் வெண்ணாற்றிலிருந்து பிரியும் வடவாறு, அதன் கிளை ஆறுகள் ஆகியவை பாயும் நிலங்களுக்குப் பாய்கால் வடிகால் ஏற்பாடுகளைக் கண்காணித்து வருகிறது.

இந்தப் பிரிவுகளின் பணியாலும் மேட்டூர் அணை அமைப்பாலும் 'பல நலங்கள் ஏற்பட்டுள்ளன. இவை தோன்றுவதற்கு முன்னர் நிலவிய நிலையும் குறிப்பிடத் தக்கது ஆகும். மேட்டூர் அணை ஏற்படுமுன் ஆனி மாதத்தில் அதிகாலையில் அக்கா குருவி கத்தினால் அதிலிருந்து ஒருவாரத்தில் காவிரியில் தண்ணீர் வருமாம். அக்கா குருவி கத்தியதும் உழவர்கள் புழுதிக்கால் நாத்து நடுவராம். ஆடி 18–இல் நீர்ப்பெருக்கில் அக்காலத்தில் வண்டல் பாயும்.

மேட்டூர் அணை கட்டிய பிறகு,

(1) வண்டல் வருவதில்லை.

(2) சில ஸமயம் குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் விடுவதில்லை.

(3) சேலம், கோவை மாவட்டங்களில் சில பகுதிகளுக்குக் காவிரி நீரை வழங்குகிறார்கள்.

(4) நிலத்தின் தரத்தைக் கூடுதலாகக் கணக்கிட்டு வரியைக் கூட்டியுள்ளனர்.

என்று தஞ்சை மாவட்டத்தார் குறைப்படுகின்றனர். இவற்றில் ஓரளவு உண்மையிருப்பினும் மேட்டூர் அணையால் தஞ்சை மாவட்டம் பெரும் பயன் அடைந்திருப்பதைப் பாராட்டாமலிருத்தற்கில்லை. மேட்டூர் அணை கட்டு

முன்னர் கண்ணம்பாடி அணையைத் தாண்டியதும் காவிரி நீரும் கொள்ளிட நீரும் விரைந்து வந்து தஞ்சை மாவட்டத்தை வெள்ளத்தில் ஆழ்த்திவந்தன. அந்த அச்சம் இன்னும் நீங்கிவிடவில்லை.

குடகு முதல் வழி நெடுக உள்ள சிற்ருறுகளிலிருந்து சேகரித்துக் கொண்டுவந்த தண்ணீரைக் காவிரி, அவை கடலில் வீணுகுமுன், தஞ்சை மாவட்டத்தில் தாராளமாக வழங்குகிருள். பல இடங்களில் ஆறு, கரை இவற்றுக்கு இடையேயுள்ள படுகைகளில் மூங்கில் செழித்து வளர்கிறது. வாழைக் கொல்லைகள்—கரையிலிருந்து ஆற்றை மறைக்கும் அளவு—அடர்த்தியாக உள்ளன. ஓங்கி வளர்ந்த தேக்க மரங்கள். அவற்றின் அருகே நெட்டிலிங்க மரங்கள்—இவற்றையும் காணலாம் காவிரிக் கரையில்.

தஞ்சை, ஒரத்தநடு, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டங்களில் தரிசாகக் கிடந்த நிலங்கள் பயிராகியுள்ளன. இன்ன காலத்தில் காவிரியில் நீர் வரும் என்று அறிந்து நம்பிக்கையாக உழவர்கள் வேளாண்மை வேலையில் ஈடுபட வழி பிறந்திருக்கிறது.

கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கல்லூரியைத் தஞ்சையில் வைத்திருக்க வேண்டும்; பிரிட்டிஷார் செய்யத் தவறிவிட்ட இச்செயலைச் சுதந்திர இந்திய அரசாங்கம் விரைவில் செய்யுமென்று தஞ்சை மக்கள் எதிர்பார்க்கிருர்கள்.

தஞ்சை மாவட்டம் தன் தேவைக்கு மேல் கூடுதலாகச் சில லட்சம் டன் அரிசியை ஆண்டுதோறும் உற்பத்தி செய்கிறது. இதற்குக் காரணமாக இருப்பது நாம் குறிப்பிட்டுள்ள பாய்கால் வடிகால் வசதிகளாகும். வேறு பல உதவிகளையும் அரசாங்கத்தார் செய்து வருகின்றனர். அணைக்கட்டுகளைக் கட்டியும் வாய்க்கால்கள்

அமைத்தும் உரிய காலங்களில் தண்ணீர் விட்டும் வருகின்றனர். இரண்டாவதுபோகம் விளையும் நிலங்களுக்குப் பல சலுகைகள் தரப்படுகின்றன. ஆராய்ச்சிப் பண்ணைகள் வாயிலாகப் புதிய உழவு முறைகளைப் பரப்பியும், புதுவகை நெல் வித்துக்களைக் கண்டுபிடித்து வழங்கியும் வருகின்றனர். இத்தகைய வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பண்ணைகள் இம்மாவட்டத்தில் ஆடுதுறை, பட்டுக்கோட்டை, தலைஞாயிறு, பேராவூருணி என்னும் இடங்களிலுள்ளன. ஆடுதுறையிலும் பட்டுக் கோட்டையிலும் உள்ள பண்ணைகள் பல்லாண்டுகளாக நடைபெற்றுப் பயனுடைய பணியாற்றிப் பெரும்புகழ் பெற்றுள்ளன. இவை பற்றி இந்நூலின் பிற பகுதிகளில் விரிவாகக் கூறியுள்ளோம்.

தலைஞாயிறு விவசாய ஆராய்ச்சி நிலையம், திருத்தருப்பூண்டி வட்டத்தில் செப்டம்பர் அக்டோபர் நவம்பர் மாதங்களில் ஆண்டுதோறும் வெள்ளத்தில் மூழ்கிவிடும் 40,000 ஏக்கர் நிலத்துக்கு ஏற்ற நெல் வித்துக்களை உண்டாக்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

பட்டுக்கோட்டை வட்டத்துப் பேராவூருணியில் 1961-இல் நிறுவப்படும் விவசாய ஆராய்ச்சி நிலையம், அப்பகுதியிலுள்ள மண்ணின் போக்கைத் தாங்கும் ஆற்றலுள்ள புதிய நெல் வித்துக்களை (Capable of resisting alkaline and saline soils) உண்டாக்கும்.

இப்பண்ணைகளை நடத்தி வருவதோடு, உரங்களை வழங்குவது, இன்னின்ன இடங்களில் மூன்று போகம் சாகுபடி செய்யலாம் என்று தெரிவிப்பது, விவசாயக் காட்சி நடத்துவது, புதுமுறைச் சாகுபடித் திட்டங்களைப் பொது மக்களுக்கு விளக்கிக் கூறுவது ஆகிய வேலைகளையும் வேளாண்மைத் துறையினர் செய்து வருகின்றனர். இதற்கென வேளாண்மைத் துறையினர்

தஞ்சைமாவட்டத்தை ஆறு மாவட்டங்களாகப் பிரித்திருக்கின்றனர்.

பட்டுக்கோட்டை (வேளாண்மை) மாவட்டம் 1959 - இலும், மாயூரம், கும்பகோணம் (வேளாண்மை) மாவட்டங்கள் 1954 இலும், நாகப்பட்டினம் மன்னார்குடி (வேளாண்மை,) மாவட்டங்கள் 1961 இலும் ஏற்பட்டன. இந்த மாவட்டங்கள், நில வருவாய்த்துறைக் கோட்ட ஆட்சித் தலைநகர்களில் அமைந்து அவற்றுக்குட்பட்ட இரண்டிரண்டு வட்டங்களில் வேளாண்மைத் துறையின் வேலைகளைச் செய்துவருகின்றன.

மாநில வேளான்மைத் துறையின் துணைத்தலைவர் y. Director of Agriculture) அலுவலகம் தஞ்சாவூரில் இருந்து வருகிறது.

தஞ்சையின் ஆறு வேளாண்மை மாவட்டங்களின் உற்பத்தி நிலையை அடுத்த பக்கத்தில் காண்க.

கால்நடைத் துறையினர் தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு,* ஈச்சங்கோட்டை, கொர்க்கை என்னுமிடங்களில் கால்நடைப் பண்ணைகளை அமைத்துள்ளனர். ஒரத்தநாடு பண்ணை மாநிலத்திலேயே சிறந்த மாட்டுப் பண்ணையாகவும் (அதன் கிளையான ஈச்சங்கோட்டைப் பண்ணை அமைந்தபின்) மாநிலத்திலேயே பெரிய பண்ணையாகவும் விளங்குகிறது. நிலக்கிழார்கள் வலிவலம் போன்றஇடங்களில் மாட்டுப் பண்ணைகள் வைத்துள்ளனர். கும்பகோணத்துக்கு அருகேயுள்ள நீலத்த நல்லூரில் மாசி மாதத்தில் கூடும் மாட்டுப்பண்ணை மிகப்பெரிது.

பனை நாரால் செய்யப்படும் தொம்பைக் கூடுகளில் நெல்லைக்கொட்டிவைப்பது தஞ்சைமாவட்டத்துவழக்கம். இக்கூடு 100கலம்நெல் கூடக் கொள்ளும். மாட்டு இறை

---

*விவரம்: ஒரத்தநாடு வட்டம் என்ற தலைப்பில் காண்க.

| | மாயூரம் | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | கும்பகோணம் |
|---|---|---|---|---|
| | | மன்னார்குடி | நாகப்பட்டினம் | |
| | ஏக்கர் | | | |
| சாகுபடி நிலத்தின் பரப்பு | $2\frac{1}{4}$ லட்சம் | $4\frac{1}{2}$ லட்சம் | $4\frac{1}{2}$ லட்சம் | $2\frac{1}{2}$ லட்சம் |
| நீர்பாசன வசதியுள்ள நிலத்தின் பரப்பு | 2 ,, | $3\frac{3}{4}$ ,, | 4 ,, | $2\frac{1}{2}$ ,, |
| பயிர்கள் | நெல்<br>பாசிப்பயிறு<br>உளுந்து | நெல்<br>பாசிப்பயிறு<br>வரகு<br>மணிலா எள்<br>தென்னை<br>முந்திரி<br>கரும்பு | நெல்<br>வரகு<br>மணிலா எள்<br>கரும்பு<br>தென்னை | நெல்<br>உளுந்து<br>மணிலா எள்<br>வாழை<br>காய்கறிகள் |

முதலியவும்பிறதானியங்களும் வைத்துக் கொள்ள இது பயன்படும். இக்கூட்டின்மீது சாணியைப் பூசி விடுவர்.

ஒரத்தநாட்டில் யான் பார்த்து வியந்தவற்றுள் "நெல்சேர்" குறிப்பிடத்தக்கது. மாவட்டமெங்கும் இவ்வகை நெல்சேர் இருப்பதாக அறிந்தேன். வைக்கோல் பிரியை கயிறுபோல் முறுக்கி மண் மேடை போட்டு வைக்கோல் தாளைப் பரப்பி அதில் நெல்கொட்டி, பிரியால் தாளை வைத்து (நெல் கொட்டி ஏற ஏற, தாளும் பிரியும் ஏறும்) மேலே வைக்கோலால் கூறை மேய்ந்திருக்கிறார்கள். பலமாகக் காற்றடித்தாலும் விழாதபடி, கூறையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளச் சவுக்கக் கழிகளைக் கூறையில் வைத்துக் கட்டுகிறார்கள்.

வெண்மை நிறமுள்ள அரிசி தயாரிக்க, இம்மாவட்டத்தார் நெல்லை அவித்தவுடன் களத்தில் கொட்டிக் காய வைத்துப் பிறகு அறைக்கிறார்கள்.

கேரளத்துக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்கும் விற்கும் பழுப்பு அரிசியும் இங்கு தாயாரிக்கப் படுகிறது. பச்சை நெல்லை அவித்துத் தண்ணீரில் கொட்டி எட்டுமணி நேரத்திற்குப்பிறகு மீண்டுமொரு முறை அவித்து ஆவிபோகாமல் மூடிவைத்துப் பிறகு காயப் போட்டு அறைத்து இவ்வகை அரிசி உண்டாக்குவர்.

**வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்துக்கான இணைப்புத்திட்டம்** (Package scheme)

ஓர் ஏக்கர் நிலத்தில் ஆஸ்திரேலியாவில் 5291 ராத்தல் அரிசிக்குச் சமமான நெல்லும் ஜப்பானில் 3684 ராத்தல் அரிசியும் அமெரிக்காவில் 2150 ராத்தல் அரிசியும் விளைகிறது. ஆனால் இந்தியாவில் சராசரி விளைவு 1000 ராத்தலுக்கும் குறைவாகவே இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு அறிவுரை கூறுமாறு இந்திய

அரசாங்கத்தார் 1959–இல் அமெரிக்காவிலுள்ள போர்டு அற நிறுவனத்தாரை வேண்டினர். அவர்கள் இந்தியா வின் சில பகுதிகளைப் பார்வையிட்டு ஒரு திட்டம் தீட்டி னர். இத்திட்டமே 'பார்க்கேஜ் ஸ்கீம்' எனப்படும் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்துக்கான இணைப்புத் திட்டமாகும்.

பனை நாரால் செய்யப்படும் தொம்பைக் கூடுகளில் நெல்லைக் கொட்டி வைப்பது வழக்கம். இக் கூடு 100 கலம் நெல் கூடக் கொள்ளும். மாட்டு இறை முதலியன வும், பிற தானியங்கள் வைத்துக்கொள்ளவும் இது பயன் படும் இக் கூட்டின் மீது சாணியைப் பூசிவிடுவர்.

ஒரத்த நாட்டில் யான் பார்த்து வியந்தவற்றுள் "நெல்சேர்" குறிப்பிடத் தக்கது. தஞ்சை மாவட்ட மெங்கும் இவ்வகை நெல்சேர் இருப்பதாக அறிந்தேன். வைக்கோல் பிரியை கயிறுபோல் முறுக்கி மண்மேடை போட்டு வைக்கோல் தாளைப் பரப்பி அதில் நெல் கொட்டி, பிரியால் தாளை வைத்து (நெல் கொட்டி ஏற ஏற, தாளும் பிரியும் ஏறும்) மேலே வைக்கோலால் கூரை மேய்ந்திருக்கிறார்கள். பலமாகக் காற்றடித்தாலும் விழாதபடி, கூரையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ள சவுக்குக் கழிகளைக் கூரையில் வைத்துக் கட்டுகிறார்கள். வெண்மை நிறமுள்ள அரிசி தயாரிக்க, இம்மாவட்டத் தார் நெல்லை அவித்தவுடன் களத்தில் கொட்டிக் காய வைத்துப் பிறகு அறைக்கிறார்கள்.

கேரளத்துக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாள ருக்கும் விற்கும் புழுப்பு அரிசியும் இங்கு தயாரிக்கப் படுகிறது. பச்சை நெல்லை அவித்துத் தண்ணீரில் கொட்டி 8 மணி நேரத்திற்குப் பிறகு மீண்டுமொருதரம் அவித்து, ஆவிபோகாமல் மூடிவைத்துப் பிறகு காய வைத்து அறைத்து இவ்வகை அரிசி உண்டாக்குவர்.

---

விவரம்:—ஒரத்த நாடு வட்டம் என்ற தலைப்பில் காண்க.

இத்திட்டம் 1960 முதல் இந்தியாவில் சில மாநிலங்களில் மாநிலத்துக்கொரு மாவட்டத்தில் நிறைவேற்றப்படுகிறது.

தமிழ் நாடு அரசாங்கத்தார் இத்திட்டத்தை நிறைவேற்ற, தஞ்சை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தனர். தமிழ் நாட்டில் நெல் சாகுபடியாகும் 60 லட்சம் ஏக்கர் நிலத்தில் ஏறத்தாழ கால் பங்கு—அதாவது 14 லட்சம் ஏக்கர் நஞ்சை நிலம் — தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. நீர்ப்பாசன வசதியும் போதிய அளவு இருக்கிறது. 1959–60 இல் தஞ்சை மாவட்டத்தில் சராசரி விளைவின் அளவு 1200 ராத்தல் அரிசியாகும்; வேளாண்மைப் போட்டியில் இம்மாவட்டத்தில் ஓரிடத்தில் 5820 ராத்தல் அரிசி உற்பத்தி செய்து காட்டப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் இத்திட்டம் 1960-இல் இம்மாவட்டத்தில் 23 வட்டாரங்களில் நிறைவேற்றப்பட்டது; ஏனை 11 வட்டாரங்களுக்கு 1962–இல் இது பரப்பப்படும்.

இத்திட்டத்தின் நோக்கம், உற்பத்திப் பெருக்கம் ஆகும். இதன் விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1959–60 இல் இம்மாவட்டத்தில் உற்பத்தி | 7,70,000 | டன் அரிசி |
| 1960–61 இல் இத்திட்டத்தால் கூடுதல் விளைவு | 39,000 | ,, |
| 1961-62-இல் மேலும் | 78,000 | ,, |
| 1962-63 ,, | 97,000 | ,, |
| 1963-64 ,, | 1,17,000 | ,, |
| 1964-65 ,, | 1,56,000 | ,, |
| 1965 மார்ச்சு மாதத்தில் | 12,57,000 | டன் அரிசி. |

அதாவது ஒவ்வோர் ஏக்கரிலும் முன்னைவிட மூன்று மூட்டை நெல் உற்பத்தி செய்வது என்பது இலட்சிய அளவாகும். சீர்காழி, மாயூரம், கும்பகோணம், பாப நாசம் வட்டங்களில் தேசிய விரிவுத் திட்டத்தின் கீழ் 1953ஐவிட 1959-இல் ஓர் ஏக்கருக்கு இண்டு மூட்டை அரிசி கூடுதலாக விளைந்திருப்பதால் இத்திட்டத்தையும் மாவட்டமெங்கும் வெற்றியுடன் நிறைவேற்ற இயலு மென்று அரசாங்கத்தார் நம்புகின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்குப் பூச்சிமருந்து, பொறுக்கு விதைகள் ஆகியவையும் தஞ்சை மாவட்டத் துக்கு ஏற்றதென்று வேளாண்மைத் துறை அறிஞர்கள் கருதும் 'மோனோ அம்மோனியம் பாஸ்பேட்' என்ற உரமும் வழங்கப்படும்.

கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக, உழவர்களுக்கு ஓர் ஏக்கருக்கு ரூ. 125/- வீதம் கடன் வழங்கப்படும். இக்கடனை வசூலிப்பதற்காக, உழவர்கள் கூட்டுறவு நிறுவனத்தின் வாயிலாகவே நெல்லை விற்க வேண்டு மென்ற நிபந்தனை இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக் கிறது. கடனாகக் கொடுக்கப்படும் தொகையும் உரம் பூச்சிமருந்து விதைநெல் இவற்றின் விலைகளும் நீங்கலாக இத்திட்டத்துக்கு 1960 முதல் 1965 வரை ஏனைய செலவு மூன்று கோடி ரூபாயாக இருக்கும். இச்செலவில் ஒரு பகுதியைப் போர்டு அற நிறுவனமும் எஞ்சிய பகுதியை இந்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்க மும் ஏற்றுக்கொள்ளுவர்.

இத்திட்டம் 1960-இல் 300 கிராமங்களிலுள்ள இரண்டு லட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலங்களில் நிறை வேற்றப்பட்டு வருகிறது; ஆண்டுதோறும் படிப்படியாக, பிற கிராமங்களிலும் அமல் நடத்தப்படும்.

ஜப்பானிய முறையில் 20 ஏக்கர் பரப்புள்ள இயந்திரப் பண்ணை ஒன்று இம்மாவட்டத்தில் ஏற்படும். இப்பண்ணையில் ஜப்பானிய உழவுக் கருவிகள் பயன்படுத்தப்படும். இதை நடத்திக் காட்ட ஜப்பானியர் ஐவர் தஞ்சை மாவட்டத்துக்கு வருவர்.

**பிற பயிர்கள்**

இம்மாவட்டத்தின் பல பகுதிகளில் இருபுறமும் பொன்னன நெற்கதிர்கள் நிறைந்த வேலிகள்—அவற்றில் தாளடிக் கதிர்கள் தளதள என வளர்ந்து, தலை சாய்ந்து 'வரப்பை முத்தமிட்ட' வண்ணமாக இருக்கும். இதன் விளைவாக அரசாங்கத்துக்கு ஆண்டு தோறும் ஒரு கோடி ரூபாய் நிலவரியும் முப்பது லட்சம் ரூபாய் வேளாண்மை வருமான வரியும் பிற வரிகளும் கிடைக்கின்றன.

நெல் வேளாண்மை சிறப்பாக இல்லாத பகுதிகளில் பிற பொருள்களின் விளைவு பெரிய அளவில் இருக்கிறது. வேதாரணியம் பகுதியில் புகையிலை, முத்துப்பேட்டைப் பகுதியில் தென்னை, வேறு சில பகுதிகளில் பயிறு வகைகள், குடமிளகாய், வெற்றிலை, வாழை— இவற்றின் உற்பத்தி மிகுதியாகும்.

சாம்பார் செய்வதற்கும் வற்றல் போடுவதற்கும் குடமிளகாய் பங்குனி சித்திரை மாதங்களில் இம்மாவட்டத்தில் சாகுபடியாகிறது.

இம்மாவட்டத்தில் வாழைத் தோட்டங்களின் பரப்பு 10,000 ஏக்கர் ஆகும். தமிழ் நாட்டில் மதுரை, திருச்சி மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக இங்கேதான் வாழைத் தோட்டங்கள் பெரிய அளவில் உள்ளன. கும்பகோணம் பகுதியில் ஆற்றோரங்களில் வாழைக் கொல்லைகள் பரந்து கிடக்கின்றன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கும்பகோணத்தில் வாழைப் பயிர் வளமாக வளர்ந்து வந்த செய்தி

ஔவையார் பாடலால் அறியப்படுகிறது. அந்நாளில் திருத்தங்கி என்ற உலோபியும். மருத்தன் என்ற வள்ள லும் வாழ்ந்தனராம். அவர்களைப் பற்றி ஔவையார் பின் வரும் பாடலைப் பாடியுள்ளார்.

"திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை - குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்றும்
உலகில் வருவிருந்தோ ருண்டு."

இப்பாடலில் ஔவையார், மருத்தன் தன் இல்லம் நோக்கி வருபவர்க்கு விருந்து நல்குவதை இகழ்வது போலப் புகழ்வதும் திருத்தங்கியைப் புகழ்வது போல இகழ்வதும் இவ்விரண்டிற்கும் உவமையாக வாழையே அகப்பட்டதும் சிந்தித்தற்குரியன.

திருவையாற்றுப் பகுதியில் இலையாக விற்பனை செய்யவும், கும்பகோணம் - மாயூரம் பகுதிகளில் காயாக விற்பனை செய்யவும் வாழை பயிரிடப்படுகிறது. தாறின் கடைசிவரை தாருக இருக்கும் ஆயிரங்காய் ரஸ்தாளி வகையை இம்மாவட்டத்தினர் விரும்பிப் பயிரிடு கின்றனர்.

வெற்றிலைக் கொடிக்காலில் தேன்கதலி வகை பயிரிடுகின்றனர்; இது அன்பளிப்பாக வழங்க ஏற்றது ஆகும்.

படுகை நிலத்தில் 200 ஆண்டுகளாகத் தொடர்ந்து வாழை பயிரிடப்படுவதும் தஞ்சை மாவட்டத்தின் தனிச் சிறப்பு ஆகும். இது வாழையடி வாழையாக வளரும் பயிர் அல்லவா?

பூவம்பழம், மொந்தன், (சுவை நிறைந்த தஞ்சை) ரஸ்தாளி, $10\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒருதரம் மட்டும் பழுக்கும் மாமாங்க வாழை, நேந்திரப்படத்தி என்ற மலையாளச் சாதி ஆகியவை இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன.

ஆடுதுறையிலுள்ள வாழை ஆராய்ச்சிப் பண்ணை வாழைப் பயிருக்கு ஏற்படும் நோய்களைப் போக்கவும் புயற்காற்றால் பாதிக்கப்படாத குட்டை வாழைகளைப் பரப்பவும் ஆவன செய்து வருகிறது. பல நூறு சாதி வாழைகள் இங்கு உள்ளன. தஞ்சை மாவட்டத்துக்கு வருவோர் காணத்தக்க நிறுவனங்களுள் இது ஒன்று. இங்கு மொந்தன் பழம் ஓர் ஏக்கருக்கு 20,000 பவுண்டு விளைவது குறிப்பிடத்தக்கதாகும்.


மொந்தன் பழத்தில் பிடி மொந்தன். கல்லுமொந்தன், சொர மொந்தன், மலைமொந்தன் என்று பல சாதிகள் உண்டு. மொந்தன் என்பது முகுந்தன் என்பதன் மரூஉவாம்; முகுந்தன் என்பது விஷ்ணுவைக் குறிக்கும். பேயன் பழம் சிவபெருமானையும், பூவன்பழம் பிரம்மாவையும் குறிப்பனவாம்.

**வேளாண்மை ஆராய்ச்சிப்பண்ணை, ஆடுதுறை**


இப்பண்ணை தமிழ்நாடு அரசாங்கத்தாரால் ஆடுதுறை இரயில் நிலயத்தருகேயுள்ள மருத்துவக்குடியில் காவிரிப்பாசனத்தில் 50 ஏக்கர்ப் பரப்பில் 1922–இல் தொடங்கப்பெற்றது. நல்ல விதைநெல் வகைகளை உண்டாக்கி உழவர்க்கு வழங்குவதற்காக இப்பண்ணை ஏற்படுத்தப்பட்டது. ஒருவகை நெல்லைப் பிறிதொரு வகை நெல்லுடன் கலந்து புதுவகை நெல்விதைகளை உண்டாக்கும் முயற்சியும் இங்கு நடைபெற்ற வண்ணமாக இருக்கிறது.

முட்டைக் குறுவை, கறுப்புக் குறுவை, சிவப்புச் சம்பா, செம்பலைச் சம்பா முதலியவற்றுக்குப் பதிலாக ADT 20 (குறுவை சிறுமணி) ADT 25 (சம்பாச் சிறுமணி) போன்ற நெல் வகைகள் புதிதாக ஏற்பட்டுள்ளன.

பூச்சிகளைத் தடுத்தல், அவற்றால் ஏற்படும் நோய்களுக்குத் தீர்வு காணல் ஆகிய வேலைகளும் விவசாயி



மனோரா



கல்லணை

படம் உதவி:
தமிழ் நாடு அரசாங்கச் செய்தித் துறை.

களிடையே புதுமுறைகளைப் பற்றிப் பிரசாரம் செய்வதும் இந்தப் பண்ணையின் வாயிலாக நடைபெறுகின்றன. பசுந்தழை உரம், அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ் பேட் ஆகியவற்றை விவசாயிகள் அதிகமாகப் பயன் படுத்தவும் இந்தப் பண்ணையினர் முயன்று வருகின்றனர்.

வாழை, கரும்பு, பஞ்சு, சோயா பீன்சு ஆகியவை பற்றியும் இங்கே ஆராய்ச்சி நடைபெறுகிறது. ஜப்பானிலும் சீனுவிலும் நெல் வயல்களில் மீன் வளர்க்கும் முறை இருக்கிறதாம். ஓர் ஏக்கரில் 200 கிலோ எடையுள்ள மீன் கிடைக்குமாம்; மேலும், அந்த வயலில் நெல்லுக்குச் சேதம் விளைக்கும் பூச்சிகளும் இல்லாமல் செய்து விடுமாம். நெல் வளத்தோடு மீன் வளத்தையும் பெருக்கும் இந்த முறையை, ஆடுதுறைப் பண்ணையின் வாயிலாகப் பரப்ப அரசாங்கத்தார் ஆவன செய்து வருகின்றனர்.

ஓர் ஏக்கருக்கு 200 ரூபாய் லாபம் தரக்கூடிய ஒரு பருத்தியை இங்கிலையத்தார் கண்டு பிடித்துள்ளனர். இந்தப் பண்ணையுடன் இணைந்த வேளாண்மைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்ற கருத்து நிலவி வருகிறது.

## 8. கல்லணை

(Grand Anicut)

சோழ வளநாட்டைச் சோறுடையதாகச் செய்து வருவன பொன்னியாறும் அவ்வாற்றின் நீரைத் தக்கவாறு தரும் கல்லணையும் ஆகும். கல்லணை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கரிகாலச் சோழனல் கட்டப்பெற்றது என்பதை எண்ணும்போது நம் உள்ளத்தில் எழுச்சியும் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் ஏற்படுகின்றன.

தஞ்சை நகருக்கு மேற்கே ஏறத்தாழ 26 கி.மீ. தொலைவிலும், ஸ்ரீரங்கத்திலிருந்து 15 கி.மீ. (9 மைல்) தொலைவிலும், திருச்சியிலிருந்து தனிச் சாலை வழியாக 16 கி.மீ. (10 மைல்) தொலைவிலும், லால்குடியிலிருந்து 3 கி.மீ. (2 மைல்) தொலைவிலும், காவிரியின் இடது கரையில் கல்லணை கட்டப் பட்டிருக்கிறது. 25 கி.மீ. (16 மைல்) தொலைவிலுள்ள மேலணையில் தொடங்கும் ஸ்ரீரங்கம் தீவின் கிழக்கு எல்லையும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் எல்லையும் இதுவே.

கல்லணை, கரிகாலன் கட்டிய நிலையிலேயே 1600 ஆண்டுகளாகக் காவிரியின் வெள்ளத்தைத் தாங்கி நிற்கும் உறுதி பெற்றதை, தஞ்சை மாவட்டத்தைப் பிடித்ததும் பிரிட்டிஷார் உணர்ந்து வியந்தனர். காவிரியையும் கொள்ளிடத்தையும் இணைக்கும் உள்ளாறு என்னும் வாய்க்கால் அருகே கொள்ளிடத்தின் நீர் மட்டம் காவிரியின் மட்டத்தைவிடத் தாழ்வாக இருப்பதால் வீணே கடலில் சேரும் நீரைத் தடுக்கப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கரிகாலச் சோழன் கல்லணை கட்டியதும், அதனால் காவிரிநீர் கடுகளவும் வீணாகாது பயிர்த்தொழிலுக்குப் பயன்படுவதும் பிரிட்டிஷாருக்கும் ஏனைய வெளிநாட்டு நிபுணர்களுக்கும் ஒரு புதுமையாக இருந்தது; இருக்கிறது.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வருமுன்னர் அவர்களுக்கும் பிற ஐரோப்பியர்க்கும் தெரிந்திருந்த மிகப் பழமையான அணை சீனாவில் இருக்கும் ஓர் அணையாம்: அது ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டு 20,000 ஏக்கருக்கு நீர் வழங்குகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அமைந்து பல நூறாயிரம் ஏக்கர் நிலத்தை வளப்படுத்தும் கல்லணையைக் கண்டதும் பழந்தமிழர் பெருமையை அவர்கள் ஓரளவு உணருவாராயினர்.

கல்லணையைப் பார்த்தே கோதாவரியில் குறுக்கே தவலேசுவரம் அணைக்கட்டு 1836-இல் பிரிட்டிஷாரால் கட்டப்பட்டது.

தென்மேற்குப் பருவமழையால் பெரு வெள்ளம் ஏற்படுவதாலும் வடகிழக்குப் பருவமழை காலம்தாழ்த்திப் பெய்வதாலும் பழைய டெல்டாவின் நிலங்களுக்குப் பல ஆண்டுகள் ஒழுங்காகத் தண்ணீர் கிடைக்கவில்லை. இதை ஒழுங்கு படுத்தவும், புதிய கால்வாய் வாயிலாக 2,71,000 ஏக்கருக்கும் வடவாறு கால்வாய்ப் பிரிவின் வாயிலாக 30,000 ஏக்கருக்கும் நீர்ப்பாசன வசதி செய்யவும் பிரிட்டிஷார் ஏற்பாடு செய்தனர்.

சேலம் திருச்சி தஞ்சை தென்ஆர்க்காடு மாவட்டங்களில் 15 லட்சம் ஏக்கர் நிலத்துக்குக் காவிரி தன் நீரை வழங்குகிறது. இந்த 15 லட்சம் ஏக்கரில் 13 லட்சம் ஏக்கர்க்குக் கல்லணை வழியாகப் பாயும் நீரே பயன்படுகிறது. இதில் இரண்டு லட்சம் ஏக்கர் இரு போகமும் (கல்லணைக்கு அருகேயும் வேறு சில பகுதிகளிலும்) சில ஆயிரம் ஏக்கர் மூன்று போகமும் விளைகிறது. இந்த அரிய சாதனைகளுக்குக் காரணமாக உள்ள கல்லணையைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதும் இவ்வணையைக் காண்பதும் நம் ஒவ்வோருவருக்கும் உரிய கடமைகள் எனலாம்.

மைசூர் மாநிலத்துக் குடகுப் பகுதியில் தோன்றும் காவிரி, சேலம் மாவட்டத்தின் வழியாகத் தமிழ் நாட்டுக்குள் நுழைந்த பின் மேட்டூர் அணையில் அதன் நீர் தேக்கப் படுகிறது. பின்னர் பவானி ஆறும், அமராவதி ஆறும் சேர்ந்து, மேட்டூருக்கு 160 கி.மீ. (100 மைல்) கீழே காவிரி அகண்ட காவிரியாகி இரு ஆறுகளாக, காவிரி கொள்ளிடம் என்ற பெயர்களில் பிரிந்து விடுகிறது. இவ்வாறு பிரியும் இடமே ஸ்ரீரங்கம் தீவு தொடங்கு

மிடமாகும். இந்த இடத்தில் அணைக்கட்டு ஒன்று கட்டினுல்தான் காவிரிக்குள் கொள்ளிடத்து நீர் புகுவதற்கு இருந்த தடைகளை அகற்ற இயலுமென்று வெள்ளைக்காரர்கள் முடிவு செய்தனர்; 1836–இல் சர் அர்தர் காட்டன் என்ற புகழ்பெற்ற பொறியியல் அறிஞர் இதைச் செய்து முடித்தார். இதுவே மேலணை (Upper Anicut) எனப்படும். கால்வாய்களிலும் சிற்றாறுகளிலும் மண்ணை அகற்றவும் அவர் ஆவன செய்தார். 1829-இல் மேஜர் சிம் என்பவர் பல வடிகால்களை (Under sluices) காவிரியெங்கும் அமைத்தார். காவிரியின் நீரோட்டத்தைச் செம்மைப்படுத்த 1845-இல் மேலணையில் ஒழுங்கை (Regulator) அமைக்கப்பட்டது.

மேலணையிலிருந்து 25 கி. மீ. கீழே இருப்பது கல்லணை. இது இரண்டாம் நூற்றுண்டில் கரிகாலச் சோழனுல் கட்டப்பட்டது. 1080 அடி நீளம், 40 முதல் 60 அடி அகலம்; 15 முதல் 18 அடி அகலத்துக்கு உறுதியான கற்களால் அமைந்தது. காவிரியின் எஞ்சிய நீரைக் கொண்டு போவதற்குக் கொள்ளிடத்துக்குச் செலுத்த இந்த அணை கட்டப்படிருக்கிறது. சோழர்கள் இலங்கையை வென்றபோது, 12,000 பேர் இலங்கையிலிருந்து சிறைப் பிடித்துக் கொடுக்கப்பட்டதாகவும் அவர்களைக் கொண்டு இந்த அணை வேலை முடிக்கப்பட்டது என்றும் கூறுவர். * (இன்றைய இலங்கையில் செல்வம் கொழிக்கும் ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் பல நூருயிரம் தமிழரால் பயிராக்கப்பட்டிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது). சோழர்கள் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் பல கால்வாய்களும் வெட்டப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபோது, காவிரியில் போதிய நீர் வராமல் தஞ்சை மாவட்டத்தின் வளம்

* ஆதாரம்—காவிரிக் கரையிலுள்ள திருநெய்த்தானம் கல்வெட்டு

பாதிக்கப்பட்டது. 1804–இல் காப்டன் கோல்டுவல் என்பவர் கல்லணையைச் சிறிது திருத்தியமைத்தார்; காவிரிக் கரைகளின் மட்டத்தை உயர்த்தினர். 1803-இல் 179 அடி உயரமுள்ள மதகுகள் (Sluices) கட்டப்பட்டன. 1840-இல் 735 அடி நீளத்துக்கு ஒரு புதிய பாலம் கட்டப்பட்டது. 1886–இல் காவிரியிலும் பெண்ணாற்றிலும் 'ரெகுலேட்டர்கள்' நிறுவப்பட்டன, 1886–இல் தானே இயங்கும் மடை மூடிகள் பொருத்தப்பட்டன. 1909-இல் அவற்றுக்குப் பதிலாக Radial Shutters போடப்பட்டன.

மேலணை (பிரிட்டிஷ் ஆட்சியில்) கட்டப்பட்டபின் காவிரியில் கூடுதலான நீர் பெருகலாயிற்று. வெள்ளத்தால் காவிரியின் கரைகள் உடைப்பெடுத்துச் சிலசமயம் நிலங்கள் பாழாயின. காவிரியின் நீர் இவ்வாறு வீணாகாமல் தடுக்கவும், வேண்டும்பொழுது தண்ணீரை ஒழுங்குபடுத்தி அனுப்பவும் காவிரியின் குறுக்கே ஓர் அணை தேவைப்பட்டது. அவ்வாறு அமைக்கப்பட்ட அணையே காவிரி—வெண்ணாறு ரெகுலேட்டராகும். இது கல்லணையின் அருகே நேர் கோணத்தில் காவிரிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு மேற்கே காவிரியிலிருந்து வெண்ணாறு என்ற ஆறு பிரிந்து காவிரியை ஒட்டி ஓடிவருகிறது. இவ்வணை கட்டும்பொழுது வெண்ணாற்றின் போக்கைத் திருப்பி இவ்வணை உள்ள இடத்தில் காவிரியுடன் கலக்குமாறும் அணைக்கு அப்பால் பிரியுமாறும் செய்துள்ளனர். இதனால் இங்கு பெரியதொரு நீர்த்தேக்கம் உருவாகியது. இவ்வணையிலிருந்து காவிரி ஒரு புறமும், வெண்ணாறு மற்றொரு புறமும், தென்கோடியில் கல்லணைக் கால்வாய் என்ற ஒரு கால்வாயும் பிரிந்து சோழநாடு முழுவதற்கும் நீரைக் கொண்டு செல்கின்றன. இவ்வணையின் உதவியால் காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் ஆகிய மூன்றிலும் தண்ணீர், தேவைக்குத் தக்கவாறு பிரித்து அனுப்பப்படுகிறது.

காவிரியாற்றின் முக்கிய அணைகளாகிய கல்லணைக்கும், காவிரி—வெண்ணாறு ரெகுலேட்டருக்கும் கிராண்டு அணைக்கட்டு என்ற பொதுப் பெயர் வழங்கிவருகிறது. காவிரியிலும், கிளையாறுகளிலும், கால்வாய்களிலும் தண்ணீரை ஒழுங்குபடுத்துவதற்கும் வெள்ளத்தால் சேதம் நேராமல் தடுப்பதற்கும் பல இடங்களில் சிறு அணைகளும் மதகுகளும் கட்டப்பட்டுள்ளன.

*1924*-இல் பெரு வெள்ளம் ஏற்பட்டது. அதனால் அதுபோன்ற வெள்ளங்களைத் தடுக்க, காவிரியில் இடது கரையில் கீழ்ப்படுகையில் ஒரு மைல் நீளத்துக்குச் சாலை அணை (Road Dam or Bye-wash) கட்டப்பட்டது. இதன் விளைவாக, பெரு வெள்ளம் கல்லணைக்கு ஊறுபயக்கும் நிலை நீக்கப்பட்டது.

கல்லணையிலிருந்து காவிரி திருவையாறு, கும்பகோணம், மாயூரம் பகுதிகளுக்குச் சென்று (சோழர் காலத்திலிருந்தே) அப்பகுதிகளை வளப்படுத்தி வருகிறது. பழைய டெல்டா என்று இப்பகுதிகளுக்குப் பெயர் வழங்கி வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கல்லணையில் காவிரி மூன்றாகப் பிரிக்கப்பட்டது.

(*1*) ஏற்கெனவே சென்று கொண்டிருந்த காவிரி

(*2*) வெண்ணாறு–இது புதிதாக வெட்டப்பட்டது.

(*3*) கல்லணைக் கால்வாய்—இது மேட்டூர் அணை கட்டியபிறகு வெட்டப்பட்டது. இதனால் ஒரத்தநாடு பட்டுக்கோட்டை அறந்தாங்கி வட்டங்களில் சில ஆயிரம் ஏக்கர் நிலங்கள் காவிரி நீர்ப்பாசனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள.

இம்மூன்று ஆறுகளுக்கும் இவற்றின் கிளைகளான கால்வாய்களுக்கும் வேண்டும் நீர் போக எஞ்சியதைக் கொள்ளும் இடம் கொள்ளிடம் எனப்படும் ஆறு ஆகும்.

கல்லணையைக் காண விழைவோர் தஞ்சையிலிருந்து செல்லும் பஸ்களில் செல்லலாம். நீர் நிறைந்த காலங்களில் கல்லணையைக் காண்பதே நன்று. எனவே ஆடி பதினெட்டிலும் ஐப்பசி கார்த்திகைத் திங்கள்களில் முழு நிலா நாட்களிலும் செல்வது சாலச் சிறந்தது. சைக்கிளில் செல்லுபவர்கள் ஞாயிறுதோறும் பெருங்கூட்டமாகக் காணப்படுகின்றனர்.

அணையை அடுத்து அழகாக அமைக்கப்பட்டுள்ள இன்ஸ்பெக்சன் பங்களா என்னும் வசதியான விடுதி கட்டப்பட்டிருக்கிறது. தஞ்சை பொதுப்பணி (ஆட்சித் துறைப்) பொறியியல் அலுவலரிடம் (EE, PWD, Tanjore) இசைவு பெற்று இவ்விடுதியில் வாடகை செலுத்தித் தங்கலாம்.

கல்லணைக்குச் செல்லுவோர் காணவேண்டியவை :

(1) அணைக்கட்டு, பாலங்கள், மதகுகள், மூடிகள், கலிங்குகள் தவிர மணற்போக்கிகள், அறுத்தோடிகளைத் தடுத்தாளுவதற்காக 1100 அடி நீளத்துக்கு ஆற்றினுள் போடப்பட்டுள்ள முட்டுக்கள்

(2) காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய்

(3) உள்ளாறு (இது காவிரியிலிருந்து கொள்ளிடத்துக்குச் செல்லுவது)

(4) கொள்ளிடம் (இது கீழ் அணைக்குச் சென்று, தென் ஆர்க்காடு மாவட்டத்துச் சிதம்பரம் வட்டத்தை வளப்படுத்திக் கொள்ளிடம் பாலத்திலிருந்து 10 கி. மீ. தொலைவில் கலக்கிறது.)

(5) கோயில்

இத்தகைய சிறந்த அணைக்கட்டை இடையூறின்றி எந்நாளும் காப்பதற்கு அரனே துணையாக வேண்டுமாதலால் அர வடிவாக உள்ள நந்தியம் பெருமானின் உருவங்கள் இரண்டு, கல்லணையின் வடபுறத்தில் லால்குடி சிவத் தலத்தை நோக்கியும் அணையின் தென்புரத்தில் திரிசிர புரத் தலத்தை நோக்கியும் வைக்கப்பட்டிருக்கின்றன; கீழ்ப்பகுதியில் இந்த அணைகளால் ஏற்படப்போகும் செல்வ வளத்தைக் குறிக்க, வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் காமதேனு வடிவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வடிவங்கள் இன்றளவும் இவ்வணையில் இருக்கின்றன.

இந்த (ஆஞ்சனேயர்) கோயிலில் மழைக்காலத்தில் தண்ணீர் உள்ளே புகாதவாறு தடுப்பு ஏற்பாடு இருப்பதும் காணத்தக்கது.

(6) இன்ஸ்பெக்சன் பங்களாவிலுள்ள தேன் கதலி மரங்கள். இவை பத்து ஆள் உயரமுள்ளன. கட்டில் கால்கள் கடையப் பயன்படும் உறுதியான பலகை தரும் இம்மரங்களின் வயது 200 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்பர்.

(7) கல்லணை ஓரத்தில் ஒரு பர்லாங்குத் தொலைவில் கிளிக்கூடு என்னும் ஊரருகே 14 கிளைகளுள்ள தென்னை மரம் ஒன்று உளது. இதில் ஒவ்வொரு கிளையிலும் தனித்தனியாகக் குலை உண்டு; மட்கடைளும் உண்டு.

(8) கரிகாலச் சோழன், நாட்டியக்காரி, செம்படவர், உழவர் சிலைகள் முதலியனவும், கீழ் மட்டத்திலுள்ள பூங்காவும் அங்குள்ள சிலைகளும்.

திருச்சி மலைக்கோட்டையின் தோற்றத்தையும் இங்கிருந்து காண இயலும். காற்றும் மழையும் இல்லா

விட்டார் நீர் நிறைந்தபோது, கொள்ளிடத்தைப் பரிசலில் தாண்டி 3 கி. மீ. (2 மைல்) தொலைவிலுள்ள லால்குடிக்குப் போய்ச் சேரலாம்.

காவிரியில் ஏராளமான இடங்களிலுள்ள கல்வாகனைகளும் காணத்தக்கன.

## 9. தொழிலும் வாணிகமும்

### பெருந் தொழில்கள்

பெருந் தொழில்கள் என்று சொல்லக்கூடிய தொழிற்சாலை இம்மாவட்டத்தில் ஒன்றுகூட இல்லை. இம்மாவட்டத்தின் பெருந் தொழில் வேளாண்மையே.

ஏனைய தொழில் துறைகளில், குறிப்பிடத்தக்க அளவு பெரிய தொழிற்சாலைகளாக இருப்பன நாகப்பட்டினம் 'இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ்' (விவரம், இந்நூலின் பிற்பகுதியில் நாகப்பட்டினம் என்ற தலைப்பில் காண்க·) எனப்படும் இரும்புத் தகடு தொழிற்சாலையும், சர்க்கரை ஆலைகள் சிலவும் ஆகும்.

வடபாதிமங்கலம் திருவாரூரான் சர்க்கரை ஆலை இரண்டு கோடி ரூபாய் மூலதனத்துடன் 1956 இல் தொடங்கப்பட்டது; ஆண்டுதோறும் ஒன்றரை லட்சம் டன் கரும்பு இங்கு பிழியப்படுகிறது. குமாரபுரத்திலும் தஞ்சை நகரருகேயுள்ள மாஞேசிப்பட்டியிலும் சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு முறையில் நூல் ஆலை ஒன்று இம்மாவட்டத்தில் மூன்றும் திட்டக் காலத்தில் (1966க்குள்) ஏற்படும் என்றும் அரசாங்கத்தார் அறிவித்துள்ளனர்.

### சிறு தொழில்கள்

சிறு தொழில்களைப் பெருக்குவதற்காக, தஞ்சையில் ஒரு தொழிற் பேட்டை தொடங்கப்பட்டிருக்கிறது.

எலக்ட்ரோ பிளேட்டிங் என்னும் பூச்சுவேலைத் தொழிற் கூடம் ஏற்பட்டிருக்கிறது. வெளியூர்களிலிருந்து வரவழைத்த பொருள்களைக்கொண்டு சைக்கிள் உருவாக்கும் தொழிற்கூடம் தஞ்சையில் நாஞ்சிக்கோட்டைச் சாலையில் நிறுவப்பட்டிருக்கிறது. இங்கு ஆண்டுதோறும் 6,000 சைக்கிள்கள் தயாராகும்.

### பிற தொழில்கள்

வடிமுனைக் குழாய்கள், பர்மீஸ் செட்டுன், எவர் சில்வர் பாத்திரங்கள் முதலியன கும்பகோணம் கூட்டுறவு உலோகத் தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன. வைக்கோல், வாழைப்பட்டை, கோரை, மூங்கில் கூரை ஆகியவற்றின் கழிவுப் பொருள்களைக் கொண்டு வெண்ணாற்றங்கரையில் காகிதம் செய்யப்படுகிறது. கலைப் பொருள்களைச் செய்யும் தொழிற்சாலைகள் சிறு அளவில் சுவாமிமலை, நாச்சியார்கோயில் போன்ற இடங்களிலும் மூங்கிற் பொருள்களைச் செய்யும் குடிசைத் தொழில்கள் ஆனைக்காரன் சத்திரத்திலும் உள்ளன. நறுமணப் பொருள்கள் மன்னார்குடியிலும் பாத்திரங்கள் கும்பகோணத்திலும் செய்யப்படுகின்றன.

இரும்பு உருக்கும் தொழில் பற்றிய 'தாதுசாரம்' என்ற நூல் தஞ்சையிலிருந்து டசல்டார்ப் என்னும் ஜெர்மன் நகர்க்கும் கொண்டு போகப்பட்டதாகவும் ஜெர்மன் அறிஞர்கள் 1813–இல் ஒரு மாநாடு கூட்டி அதைப் பற்றி விவாதித்து, தரமான எஃகு செய்ய முற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இது எந்த அளவில் உண்மை என்று கூறுவதிற்கில்லை. இரும்பை யொட்டிய தொழில்களாக இப்போது நடைபெறுபவை நாகப்பட்டினம் இரும்புப்பெட்டி – தகரப்பெட்டித் தொழில்கள், தரங்கம்பாடியில் ஆணி செய்யும் தொழிற்சாலை, ஆலங்குடியில் பாக்கு வெட்டி செய்யும் தொழில், பட்டுக்

கோட்டை – திருத்தருப்பூண்டி கத்திகள், உம்பளாச்சேரியிலும் தம்பிக்கோட்டையிலும் அரிவாள்கள் செய்தல் ஆகியவையே.

**நெசவுத்தொழில்**

பருத்தித் துணி நெசவும் பட்டுத்துணி நெசவும் இவ்வட்டத்தில் நன்றாக நடைபெறுகின்றன. தஞ்சையிலும் குடைந்தையிலும் பீதாம்பரமும் பொன்னுடைகளும் பட்டுநூல்காரரால் நெய்யப்படுகின்றன. கூறைநாடு புடவைகளும், திருநாகேசுவரம், துகிலி, மானம்புச்சாவடி வேட்டிகளும் புகழ் பெற்றுள்ளன. நாகப்பட்டினத்திலும் மஞ்சக் கொல்லையிலும் சாயத்தொழில் சிறந்து விளங்குகிறது. சிக்கலிலும் நாகூரிலும் உற்பத்தி செய்யப்படும் சிலவகைத் துணிகள் (Printed Table cloth and Bandana Kerchieves) அமெரிக்காவிலும் விற்பனையாயின், அவை பற்றி Uncle Tom's Cabin என்ற புகழ்பெற்ற நூலும் உரைக்கிறது.

**வாணிகம்**

இம்மாவட்டத்தின் வாணிபத்தில் ஒருபகுதி திருச்சிராப்பள்ளி நகரில் நடைபெற்று வருகிறது. இம்மாவட்டத்தில் கும்பகோணம் பெரிய வணிக நகரமாக உள்ளது. திருவாரூர், விசயபுரம் வாணிகத்தில் சிறந்து விளங்குகிறது. ஏற்றுமதி இறக்குமதி நாகையில் நடைபெறுகிறது. குத்தாலத்தில் நெல் விற்பனை மிகுதி.

**மீன் பிடிதொழில்**

தஞ்சை மாவட்டம் 140 மைல் தொலைவுள்ள கடற்கரையை உடையது. கொந்தளிக்கும் வங்கக் கடலையும் வலிய காற்றையும் பொருட்படுத்தாது, மீனவர்கள் கட்டுமரங்களில் சென்று ஆழ்கடலில் கிடைக்கும் சுறு மீன்களையும் சிலசமயம் கரையோரமாக ஒதுங்கும்

(100 அடி வரை நீளமுள்ள) திமிங்கிலங்களையும் பிடிக்கின்றனர்.

அதிராம்பட்டினம் பகுதியில் ஆழ்கடலில் மீன் பிடிக்கின்றனர்; மீன் எண்ணெய்யும் எடுக்கின்றனர்.

காவிரிப்பூம்பட்டினத்திலும் பெருமாள் பேட்டையிலும் மீனவர் குடும்பத்துச் சிறுவர்க்கெனத் தனியே பள்ளிக்கூடங்கள் உள்ளன. மீன் பிடிதொழிலிலும் பயிற்சி கொடுக்கும் நிலையம் நாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது. வேதாரணியம், கோடிக்கரை, முத்துப்பேட்டைப் பகுதிகளில் மீன் பிடிதொழில் நன்கு நடைபெறுகிறது. மீனும் கருவாடும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. வேதாரணியம் கால்வாய்க்கும் கடலுக்கும் இடையேயுள்ள ஆறுகட்டித் தெருவில் செம்படவர் மட்டுமே வாழ்கின்றனர்.

300 ஆண்டுகட்கு முன் இம்மாவட்டத்தில் சில இடங்களில் முத்துக்குளித்தல் நடைபெற்றதாயும் இப்போது அங்கு, கடலில் சிறிது பாறைப் பகுதிகளும் அவைகளையொட்டிச் சிப்பிகளும் தோன்றியிருப்பதாயும் தெரிகிறது. மீண்டும் முத்துக்குளிக்க இங்கு ஓரளவு வாய்ப்பு உண்டு.

**உப்பளங்கள்**

தஞ்சை மாவட்டத்தின் உற்பத்திகளுள் உப்பு மிக முக்கியமானது. வேதாரணியம், தம்பிக்கோட்டை, அதிராம்பட்டினம், கட்டுமாவடி, நெய்தவாசல், தரங்கம்பாடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பெரிய அளவில் உப்புக் காய்ச்சப்படுகிறது. காவிரிப்பூம் பட்டினத்தைச் சிறப்பிக்கும் 'பட்டினப்பாலை' என்னும் சங்க நூலில் 'வெள்ளையுப்பின் கொள்ளை சாற்றி' என்ற வரிகள் காணப்படுவதால், சில ஆயிரம் ஆண்டுகளாக

இப்பகுதியில் உப்புக் காய்ச்சும் தொழில் உயர்நிலை அடைந்திருந்தது உறுதிப்படுகிறது.

வேதாரணியத்துக்கு அருகேயுள்ள உப்பளங்கள் சிறு வணிகர்களாலும் பெரு வணிகர்களாலும் குத்தகைக்கு எடுத்து நடத்தப்படுகின்றன. சில உப்பளங்கள் கூட்டுறவு முறையில் நடத்தப்படுகின்றன.

'மேட்டூர் கெமிகல்' கம்பெனியார் இரசாயனப் பொருள்களின் உற்பத்தியில் பயன்படுத்துவதற்காக 'வெள்ளை உப்பு' (Reined Salt) செய்வதற்கு, வேதாரணியத்திலும் அதிராம்பட்டினத்திலும் உப்பளங்களைக் குத்தகைக்கு எடுத்து மேட்டூருக்கும் ஆல்வாய்க்கும் உப்பு அனுப்புகின்றனர்.

வேதாரணியம் பகுதியில் மட்டும் ஆண்டுதோறும் 20 லட்சம் டன் உப்புக் காய்ச்ச இயலும்; வேதாரணியம் உப்பு 'ஜிப்சம்' செய்ய ஏற்றது. சிமெண்டுத் தொழிற்சாலைக்கு ஜிப்சம் தேவைப்படுவதால், ஜிப்சமும் உரத்தொழிற்சாலைகளுக்கு வேண்டிய தூய்மையான உப்பும் செய்ய இரண்டு கோடி ரூபாய்ச் செலவில் பெரிய தொழிற்சாலையையும் ஆராய்ச்சி நிலையத்தையும் வேதாரணியத்தில் தொடங்க இந்திய அரசாங்கம் 1961-இல் முடிவு செய்திருக்கிறது.

**கூட்டுறவு இயக்கம்**

கூட்டுறவு இயக்கம் தஞ்சைமாவட்டத்தில் பெரு வளர்ச்சி பெற்றிருக்கிறது. பிற மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு நிலையங்களைப்போன்ற நிறுவனங்கள் இருப்பதோடு, தீக்குச்சித் தொழிலாளருக்காகவும், குடிசைத் தொழிலாளருக்காகவும் பட்டுக்கோட்டையிலும், இசைக்

---

உப்பளக் கால்வாய் பற்றிய விவரம் 'போக்குவரத்து' என்ற பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கருவிகள் செய்பவர்களுக்காகவும், கலைப்பொருள்கள் கவினுறு பொருள்கள் செய்பவர்களுக்காகவும் மாவட்டத்தின் பல இடங்களிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களும் உகண்டா பருத்தி பயிரிடுவோர் சங்கமும் குறிப்பிடத்தக்கவை.

சந்திரசேகபுரம் கூட்டுறவு நிறுவனம் கிராமங்களில் பலவகைப் பொருள்களை விற்கும் பண்டக சாலைகளை நடத்தி ஆண்டுதோறும் முப்பது லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்து, தமிழ்நாட்டுக்கே வழிகாட்டியாகவும் கூட்டுறவு இயக்கத்தின் புகழ் பரப்பும் நிலையமாகவும் அமைந்திருக்கிறது.

திருவாரூர் நெல் வாணிகக் கூட்டுறவுச் சங்கம், மிகப் பெரிய அளவில் நெல் கொள்முதல் செய்து சிறந்த முறையில் பல்லாண்டுகளாக நடைபெற்று வருகிறது.

தஞ்சை மாவட்டக் கூட்டுறவு பெடரேசன், விவசாயிகளுக்கு உரவகைகளும் கடலைப் பிண்ணுக்கும் வழங்கும் பணியைச் செம்மையாக நிறைவேற்றி வருகிறது.

சர்க்கரை ஆலை ஒன்றையும் நூலாலை ஒன்றையும் இம்மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் நிறுவ அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

**நிக்கல்சன் டவுன் வங்கி, தஞ்சாவூர்**

இது 9-2-1905-இல் ஏற்பட்டது. தமிழ் நாட்டின் மிகப் பழமையான கூட்டுறவு வங்கிகளில் இது ஒன்று.

கூட்டுறவு இயக்கத்தின் தந்தையும், கூட்டுறவு நாணயச் சங்கச் சட்டம் 1904-இல் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவருமாகிய சர் பிரடரிக் நிக்கல்சன் ஐ. சி. எஸ். பெயரால் இது அமைந்தது. அவரே வந்து இந்த வங்கியைத் தொடங்கி வைத்தார். இவ்வங்கி சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. 4-7-1955-இல்

கவர்னர் ஸ்ரீ பிரகாசா தலைமையில் இதன் பொன்விழா கொண்டாடப் பெற்றது.

## 10 போக்குவரத்துவசதிகள்

மக்கள் நெருக்க மிகுதியாலும் வேளாண்மைச் செழிப்பாலும் தஞ்சை மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகள் மிகுதியாக உள்ளன.

இவ்வசதிகளை சாலை, கால்வாய், ரயில், கப்பல் போக்குவரத்து என்று பிரிக்கலாம்.

**சாலை**

சாலைகளுடைய நீளத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது பரப்பளவு நோக்கித் தமிழ் நாட்டிலிருப்பது போல இரண்டு பங்குச் சாலைகள் இம்மாவட்டத்திலுள்ளன. ஆனால் வேளாண்மை வளத்தால் சாலைகளின் அகலம் மிகவும் குறைவாக இருப்பதும் ஆறு கால்வாய் ஆகியவற்றின் மிகுதியால் எங்கே பார்த்தாலும் குறுகலான பாலங்கள் இருப்பதும் அடிக்கடி பாலங்களைக் கடந்து வேறு திக்கில் செல்லவேண்டியிருப்பதும் இம்மாவட்டத்தில் போக்குவரத்துக்குத் தடையாக உள்ளன.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரை யோரமாகத் தேசிய நெடுஞ்சாலை ஒன்றை அமைக்கும் வேலை மூன்றும் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நடைபெற்று வருகிறது. இந்தச் சாலை தமிழ்நாட்டில் 472 மைல் (790 கி. மீ.)க்கு இருக்கும். இதில் மூன்றில் ஒரு பகுதி தஞ்சை மாவட்டத்தில் கொள்ளிடக்கரையிலுள்ள தேவிகோட்டை முதல் இராமநாதபுர மாவட்ட எல்லையிலுள்ள மீமிசல் வரை அடங்கியிருக்கும். இச்சாலையில் ஏராளமான பாலங்கள் கட்டி முடிக்கப் பெற்றால் தஞ்சை மாவட்டத்தில் போக்கு

வரத்து வசதி பெருகும். இச்சாலையில் ஏராளமான பாலங்கள் கட்டப்பட வேண்டும். பாலங்கள் கட்டி முடிவடைந்தால் தஞ்சை மாவட்டத்தில் போக்குவரத்து வசதி பெருகும் இச்சாலையின் பெரும் பகுதி தலைமுறைகளாக இருந்து வந்து இரயில்பாதை ஏற்பட்டபின் பல சீர்குலைந்த) சேது ரஸ்தாவைப் புதுப்பித்து அமைக்கப் படுவதாகும்.

**பாலங்கள்**

கடலோர மாவட்டமாக இருப்பதால் ஏராளமான பாலங்கள் இங்கு உள்ளன. இவற்றுள் குறிப்பிடத் தக்கவை சில.

**படகுகள் செல்ல வசதியுள்ள மேம்பாலம்**

நாகப்பட்டினத்திற்கும் அதைச்சுற்றியுள்ள கிராமங் களுக்குமிடையே படகுகள் செல்லத்தக்க பாலம் (Lift-span bridge) ஒன்று 1957–இல் கட்டப்பெற்றிருக்கிறது. பெரிய படகுகளும் கடல் மணலை அள்ளும் கருவிகளும் இதன்கீழ் செல்லலாம். இப்பாலத்தின் நீளம் 320 அடி (96மீட்டர்). இத்தகைய அமைப்புள்ள பாலம் தமிழ் நாட்டில் இது ஒன்று மட்டுமே ஆகும். * பாலத்தில் தூக்கப்படும் பகுதி (Lift span)யின் எடை 20 மெட்ரிக் டன்; அதை மின்சார இயந்திரத்தின் மூலம் உயர்த்தவும் தாழ்த்தவும் இயலும். மின்சார ஆற்றல் நின்று விட்ட போது படகுகள் செல்ல வேண்டுமானால் 12 நிமிடங்களில் அப்பகுதியை உயர்த்தி விடுவதற்கு வகை செய்யப் பட்டிருக்கிறது.

**கொள்ளிடம் பாலம்**

தஞ்சை மாவட்டத்தையும் தென்னார்க்காடு மாவட் டத்தையும் இணைக்கும் இப்பாலம் 1903–இல் உடைந்து

---

* பாம்பன் பாலம் வேறு வகையாட அமைப்பை யுடையது.

விட்டது. இப்பாலம் 35 லட்சம் ரூபாய்ச் செலவில்கட்டி முடிக்கப்பெற்றது; இதன் நீளம் 2230 அடி. அகலம் 32 அடி; 57 பெரிய உத்தரங்கள் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன. 1949 முதல் 1957 வரை இப்பாலத்தைக் கட்டும் வேலை நடைபெற்றது. பல புதிய பொறியில் முறைகள் கையாளப்பட்டுள்ளன. இவ்வகைப் பாலத் துக்கு "காண்டி லீவர் டைப்" பாலம் என்று பெயர்.

### விளாங்குடி

திருவையாற்றுக்கு அருகே விளாங்குடி என்னுமிடம் கொள்ளிடக் கரையில் இருக்கிறது. எதிர்க்கரையில் திருச்சிமாவட்டத்துத் திருமானூர் என்னும் சிற்றூர் இருக்கிறது இங்கு ஒரு தரைப் பாலம் கட்டப்பட வேண் டும். இப்போது பரிசலில் தஞ்சை வட்டத்தின் பொருள் கள் யாவும் அரியலூருக்குச் செல்லுகின்றன.

### பஸ் போக்குவரத்து

மக்கள் நெருக்கம் மிகுதியாக இருப்பதாலும், விளை பொருள்களும் வியாபாரமும் கூடுதலாக இருப்பதாலும் தஞ்சை மாவட்டத்தில் பஸ் போக்குவரத்து பெருவளர்ச்சி அடைந்துள்ளது. தஞ்சையிலிருந்து சென்னை நகருக்குத் தமிழ்நாடு அரசாங்கத்தின் பஸ்கள் செல்லுகின்றன தஞ்சை மதுரை பஸ் வசதியும் ஏற்பட்டிருக்கிறது. இம் மாவட்டத்தின் வழியாகப் புதுச்சேரியிலிருந்து காரைக் காலுக்கும் சிதம்பரத்திலிருந்து நாகப்பட்டினத்துக்கும் பஸ் போக்குவரத்து நடைபெறுகிறது. தஞ்சாவூர், கும்ப கோணம், நகை, மாயூரம் ஆகிய நகரங்களில் டவுன் பஸ் வசதி உண்டு.

1941-இல் ஏற்பட்டு தமிழநாட்டின் சிறந்த போக்கு வரத்து நிறுவனங்களுள் ஒன்ருக விளங்கும் 'எஸ். ஆர் வி. எஸ்.' அலுவலகங்கள் கும்பகோணத்திலுள்ளன.

இவர்களுடைய தொழிற்சாலையில் 1960-இல் 'LARVA' என்ற சிறிய கார் செய்யப்பட்டது.

### கால்வாய்ப்போக்குவரத்து

நீர்வளம் நிறைந்த பகுதிகளில் கால்வாய் வெட்டி மலிவான போக்குவரத்து வசதி ஏற்படுத்துவது வழக்கம். இம்மாவட்டத்தில் இரண்டு கால்வாய் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்டன. தரங்கம் பாடிக் கால்வாய் என்றும் வேதாரணியம் கால்வாய் என்றும் இவற்றிற்குப் பெயர் உண்டு.

தரங்கம்பாடிக் கால்வாய் 1850 அளவில் தரங்கம் பாடியிலிருந்து வடக்கே $30\frac{1}{2}$ கி. மீ.(19 மைல் தொலைவில்) (தென்திருமுல்லைவாயிலுக்கு அருகேயுள்ள) தாண்டவன் குளம்வரை ரூ. 50,000,-செலவில் வெட்டப்பட்டது. தரங் கம்பாடித் துறைமுகம் பயன்படாது தூர்ந்து விட்டது. இக்கால்வாய் இருந்ததற்கு அடையாளங்களைக்கூட இந் நாளில் காண்பதற்கில்லை.

வேதாரண்யம் கால்வாய் 1863-67-இல் வெட்டப் பட்டது. 1874-இல் செப்பம் செய்ய ஏற்பட்ட செலவு உட்பட மொத்தம் 1,08,000 ரூபாய் செலவு செய்யப் பட்டது. இதன் நீளம் நாகப்பட்டினத்திலிருந்து வேதா ரணியம் வரை $35\frac{1}{2}$மைல் (57 கி. மீ.). உப்பளங்களிலிருந்து உப்பு ஏற்றி நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு 14 மணி நேரத்தில் கொண்டு போக ஐந்தரை மீட்டர் அகலமுள்ள இக்கால்வாய் வெட்டப்பட்டது. இரயில் போக்குவரத்து ஏற்பட்ட பிறகு இக்கால்வாயைப் பொதுமக்கள். பயணஞ்செய்யப் பயன்படுத்தவில்லை. உப்பு, விறகு, வைக்கோல் ஆகியவை இவ்வழியே செல்லுகின்றன. எனினும், கால்வாய் நன்கு பேணப்படவில்லை. அர

* Traffic Survey Report on Buckingham and Vedaranyam Canals.

சாங்கம் உடனடியாகக் கவனித்து இக் கால்வாயை ஆழப்படுத்தி, அகலப்படுத்த வெண்டுமென்றும் பக்கிங்ஹாம் கால்வாயுடன் இதை இணைக்கக் கடலூர்வரை இதை நீடிக்க வேண்டுமென்றும் நிபுணர்கள் சிபார்சு செய்துள்ளனர். இக்கால்வாயில் இயந்திரத்தால் இயங்கும் படகுகளைப் பயன்படுத்த வேண்டுமென்று தேசிய நலனுக்கான பொருளாதார ஆராய்ச்சிக் குழு (NCAER) கூறியிருக்கிறது.

## இரயில் போக்குவரத்து

இம்மாவட்டத்தில் 302 மைல் (486 கி. மீ.) தொலைவுக்கு இரல்பாதை இருக்கிறது. நாகப்பட்டினம்-தஞ்சை இரயில்பாதை, தமிழ் நாட்டில் (சென்னை நகரப்பகுதிக்கு அடுத்தபடியாகப்) போடப்பட்ட மிகப்பழமையான பாதையாகும்.

கிரேட் சதர்ன் ஆவ் இந்தியா இரல்வே கம்பெனி கர்நாடிக் இரயில்வேகம்பெனி சவுத்இந்தியன் இரயில்வே கம்பெனி ஆகிய கம்பெனிகளால் இம்மாவட்டத்தில் சிறிது சிறிதாக இரயில் பாதைகள் போடப்பட்டன. எனினும் தஞ்சை மாவட்டத்தில் இரயில் போக்குவரத்து அடைந்துள்ள பெருவளர்ச்சிக்குத் தஞ்சை மாவட்டக் கழகமே காரணமாகும். நாகப்பட்டினம் – தஞ்சை, கொள்ளிடம் – மாயூரம் - தஞ்சை-திருச்சி, அறந்தாங்கி – காரைக்குடி ஆகியவை தவிர எஞ்சிய இரயில்பாதைகள் யாவும் இக்கழகத்தாலேயே போடப்பட்டன. தஞ்சையைப் பின்பற்றியே பிற மாவட்டக் கழகங்கள் (குறிப்பாக கோவை, நெல்லை) இரயில் பாதைகள் போடும் வேலையிலும் முனைந்தன.

---

*1856 - இல் சென்னை - வாலாஜாரோடு இரயில்பாதை ஏற்பட்டது. 1859 - இல் நாகப்பட்டினம் - திருச்சி பாதையில் வேலைதொடங்கப்பெற்றது.

தஞ்சை மாவட்டக்குழு, நிலங்களின் மீது விதிக்கப் பட்ட வரிக்கு ரூபாய்க்கு முக்காலணு வீதம் 'செஸ்' வசூலிப்பதற்குப் பதிலாக, ஓர் அணு* வீதம் வசூலித்தது. இவ்வாறு கூடுதலாகக் கிடைத்த வருவாயை மூலதன மாகக் கொண்டும் அரசாங்கத்திடம் கடன் வாங்கியும் 1878 முதல் 1926 வரை பல பகுதிகளில் இரயில் பாதை களைப் போட்டது. 1926 வரை பல பகுதிகளில் இரயில் பாதைகளைப் போட்டது. 1926க்குப் பிறகு 'இரயில்வே போர்டு' ஏற்பட்டது; இரயில் போக்குவரத்து இந்திய அரசாங்கத்து உடைமையாகும் என்று அறிவிக்கப் பட்டது. 1929 அளவில் தஞ்சை மாவட்டக் கழகத்தின் இரயில் பாதைகள் இந்திய அரசாங்கத்தாரல் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுக்கு 1958–இல்தான் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது. இந்த 29 ஆண்டுக் காலத்துக்கு தஞ்சை மாவட்டக் கழகத்தினர் இரயில் போக்குவரத் தில் முடக்கியிருந்த மூலதனத்துக்கு ஆண்டுதோறும் 15 லட்சம் ரூபாய் வட்டியாகக் கொடுக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய வருவாயால் தான், பிற மாவட்டக் கழகங்களைவிடச் சிறப்பான முறையில் தஞ்சை மாவட்டக்கழகம் பணியாற்றி வந்திருக்கிறது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள இரயில் நிலையங்களின் எண்ணிக்கை 111 ஆகும். தரங்கம்பாடி, நாகூர், மன்னார் குடி, கோடிக்கரை ஆகிய இரயில் நிலையங்களில் அந்த ஊர்களுடன் இரயில் பாதை முடிவடைகிறது.

**அவுட் ஏசன்சி உள்ள ஊர்கள்**

திருவையாறு (தஞ்சாவூர் சந்திப்பு)

திருக்காட்டுப்பள்ளி (பூதலூர்)

வல்லம் (தஞ்சை சந்திப்பு)

---

*முக்காலணு - 5 காசு. ஓர் அணு - 6 காசு.

## இரயில் பாதைகளின் விவரம்

| மீட்டர் காஜ் 3' $3\frac{3}{8}$" | | திறந்த தேதி | மைல் | கி. மீ. |
|---|---|---|---|---|
| (1) நாகப்பட்டினம் | — திருவாரூர்* | 15-7-1861 | 14.33 | 23 |
| (2) திருவாரூர் | — தஞ்சாவூர் | 2-12-1861 | 33.92 | 54 |
| (3) தஞ்சாவூர் | — திருச்சி | 11-3-1862 | 30.99 | 50 |
| (4) மாயூரம் | — தஞ்சாவூர் | 15-2-1877 | 43.76 | 70 |
| (5) சீர்காழி | — மயூவரம் | 1-7-1877 | 12.25 | 20 |
| (6) கொள்ளிடம் | — சீர்காழி | 1-1-1878 | 6.06 | 10 |
| (7) மாயூரம் | — முத்துப்பேட்டை | 2-4-1894 | 53.61 | 59 |
| (8) பேரளம் | — காரைக்கால் | 14-3-1898 | 14.65 | 23 |
| (9) நாகப்பட்டினம் | — நாகூர் | 1-12-1899 | 4.67 | 8 |
| (10) முத்துப் பேட்டை. | — பட்டுக்கோட்டை | 20-10-1902 | 17.03 | 27 |
| (11) பட்டுக்கோட்டை | — அறந்தாங்கி | 31-12-1903 | 28.35 | 45 |
| (12) நீடாமங்கலம் | — மன்னார்குடி | 15- 2-1915 | 8.58 | 14 |
| (13) திருத்தருப்பூண்டி | — அகஸ்தியாம் பள்ளி | 15- 5-1919 | 22.94 | 37 |
| (14) மாயூரம் | — தரங்கம்பாடி | 25-11-1926 | 17.98 | 29 |
| (15) அகஸ்தியாம்பள்ளி | — கோடிக்கரை | 1936 | 5.80 | 9 |
| (16) அறந்தாங்கி | — காரைக்குடி | 1953 | 16.92 | 27 |

*முதலில் பிராட்காஜாகப் போடப்பட்டு, பிறகு மீட்டர்காஜாக மாற்றப்பட்டது.

**தேவையான புதிய பாதைகள்**

(1) கும்பகோணம்—நீடாமங்கலம்

(2) தஞ்சாவூர் — ஒரத்தநடு-பட்டுக்கோட்டை

(3) மன்னார்குடி — திருத்தருப்பூண்டி

(4) தஞ்சாவூர் — புதுக்கோட்டை

**கப்பல் போக்குவரத்து**

தமிழ் நாட்டிலேயே மிகக்கூடுதலாகக் கடற்கரையுள்ள மாவட்டம் தஞ்சை மாவட்டம் ஆகும். இப்பகுதி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கடல் வாணிபத்தில் செழித்திருந்தது என்றும் (இப்போது ஹுக்ளி வழியாகக் கல்கத்தா வரையும் தேம்சு வழியாக லண்டன் நகருக்குள்ளும் கப்பல்கள் வருவது போல), காவிரி ஆற்றின் வழியே உறையூருக்குக் கப்பல்கள் வந்ததாகவும் கரிகாலன் கல்லணை கட்டிய பிறகே அவ்வாறு கப்பல்கள் வர இயலாமற் போனதாகவும் அதன் பயனாகச் சோழர் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினத்துக்கு மாற்றப்பட்டதாகவும் கூறுவர்.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட இம்மாவட்டத்தில் கப்பல் போக்கு வரத்தும் அதையொட்டிய தொழில்களும் பெருமுன்னேற்றம் அடைந்திருந்தது பின்வரும் செய்திகளால் தெரிகிறது.

பழைய கப்பல்களைப் புதுப்பிக்கவும், பழுதுபட்ட கப்பல்களைச் செப்பம் செய்யவும் (பட்டுக்கோட்டை வட்டத்து) சரபேந்திரராசன் பட்டினத்தில் சரபோஜி மஹாராஜா ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினார். இராம பிரசாத், மகாதேவ பிரசாத், கணேச பிரசாத், ராஜலட்சுமி, மீனாட்சி என்னும் பெயர் கொண்ட பெரிய கப்பல்கள் இங்கே கட்டப்பெற்று,

சென்னை, கொழும்பு, காங்கேசன் துறைத் துறைமுகங் களுக்குச் சென்று கொண்டிருந்தன.

சிரு கப்பல்கள் கடலோரமாக நாகூர், மீமிசல், நாகப்பட்டினம், கோடிக்கரை ஆகிய சிறு துறைமுகங் களுக்கிடையில் போய்க் கொண்டிருந்தன. கப்பல் கட்டுவதைத் தவிர, தரைதட்டிய கப்பல்களையும் கடலில் புயலால் சேதமடைந்த மற்றவர்களின் கப்பல்களையும் கூட மன்னர் சரபோஜியின் ஆட்கள் துறைமுகத்திலும் கடல் நடுவிலும் சென்று செப்பம் செய்து கொடுத்து வந்தனர். கப்பல் கட்டும் தொழிலுக்குத் தேவையான மரங்கள் அருகேயுள்ள காடுகளிலிருந்தே கொண்டுவரப் பட்டன. உறுதிக்குப் பெயர் பெற்ற பூவரசு, வேம்பு, நாவல், தேக்கு போன்ற மரங்களே பெரிதும் உபயோகிக் கப்பட்டன. கப்பல் கட்டுவதற்குத் தேவையான கயிறு கள்கூடத் தென்னை நாரிலிருந்து இங்கேயே செய்யப் பட்டன. பெரிய அளவிலும், சிறிய அளவிலும் இரும்பு நங்கூரங்கள் இங்குள்ள தொழிலகத்தில் செய்யப் பட்டன. உடைந்து போன நங்கூரங்கள் உருக்கப்பட்டு ஆணிகளாகவும் இணைப்புப் பட்டங்களாகயும் அடிக்கப் பட்டன. இரும்பு உருளைகளும் செய்யப்பட்டன.

இங்கு வேலை செய்த தொழிலாளர்கள் யாவரும் சுற் றுப்புறக் கிராமங்களைச் சேர்ந்தவர்களே. இந்தக் கிரா மத்தில் மாலுமிகளும், கடலோடிகளும், பரதவர்களும் துப்பாக்கியால் சுடும் வீரர்களும் வாழ்ந்து வந்தனர் என் பதற்குக் குறிப்புக்கள் உள்ளன.

இத் துறைமுகத்தின் மூலம் இறக்குமதியான பொருள்களில் பெரும்பாலானவை மரம், குத்து விளக்கு கள், கண்ணாடிச் சாமான்கள், மண் பானைகள், திராட்சை ரசம், பதனிட்ட தோல், உல்லாச வாழ்வுக்குரிய பொருள் கள், பீரங்கிகள், பிற போர்க் கருவிகள், கயிறுகள், நங் கூரங்கள் என்று தெரிகிறது.

வெளிநாட்டுப் பிரயாணச் சீட்டுகள் முதலியனவற்றைக் கவனிப்பதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த ஐரோப்பியப் பிரதிநிதி ஒருவர் இங்கே தங்கியிருந்ததாகவும் தெரிகிறது.

இங்கு பண்டகசாலைகளும், ஆட்சி அலுவலகங்களும், பாசறைகளும், சிறிய நூல் நிலையமும் மன்னர் சரபோஜியால் அமைக்கப்பட்டிருந்தன. இந் நூல் நிலையத்தில் கப்பல் கட்டும் தொழில் பற்றிய பல நூல்கள் இருந்தன. இவற்றைத் திறமையாக 'சர் நிசிந்தே' என்னும் அதிகாரி நிர்வகித்து வந்தார்.

தன் சொந்தக் கடலோடிகளுக்குப் பல நிறக் கொடிகளைச் சைகைமூலம் காட்டிச் செய்தி அனுப்பும் முறைகளையும் மன்னர் பயிற்சியளித்திருந்தார். இந்தச் சைகை முறைகள் யாவும் இவர்கள் எளிதாக நினைவில் கொள்ள உதவியாகப் பாட்டாகத் தொகுக்கப்பட்டிருந்தன.

**துறைமுகங்கள்**

இந்நாளில் இம்மாவட்டத்திலுள்ள துறைமுகங்களாவன :

| | |
|---|---|
| திருமுல்லைவாயில் | தோப்புத்துறை |
| தரங்கம்பாடி | முத்துப்பேட்டை |
| நாகப்பட்டினம் | அதிராம்பட்டினம் |
| கோடிக்கரை | மணல்மேற்குடி |
| வேளாங்கண்ணி | மீமிசல் |

இவையாவும் சிறு துறைமுகங்களேயாகும். தமிழ்நாட்டு அரசாங்கத்தினரின் துறைமுகத் துறையினர் நியமிக்கும் துறைமுக அலுவலர் இவற்றைக் கவனித்து வருகின்றனர்.

### நாகப்பட்டினம் துறைமுகம்

இத் துறைமுகங்களுக்குள் பெரியது நாகப்பட்டினம் துறைமுகம் ஆகும். நாகப்பட்டினம் துறைமுகம் கடுவை யாறு வங்காளக் குடாக்கடலில் விழும் இடத்தில்—சென்னைத் துறைமுகத்திலிருந்து 266 கி. மீ. (165 மைல்) தொலைவிலும் கடலூர் துறைமுகத்திலிருந்து 113 கி. மீ. (70 மைல்) தொலைவிலும் தெற்கே அமைந்திருக்கிறது.

சோழர் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திற்கு அடுத்து நாகை ஒரு சிறந்த துறைமுகமாக இருந்து வந்தது.

17, 18–ஆம் நூற்றுண்டுகளில் நாகை டச்சுக்காரரிடமும், தரங்கம்பாடி டேனிஷ்காரரிடமும், புதுச்சேரி பிரெஞ்சுக்காரரிடமும், சென்னை ஆங்கிலேயரிடமும் இருந்தன. இவற்றால் மேற்கத்திய அரசுகளின் வணிகப் போட்டி, பெருகி, இத்துறைமுகங்கள் யாவும் வளர்ச்சியடைந்தன.

19–ஆம் நூற்றுண்டில் தஞ்சை அரிசி நாகைத் துறைமுகம் வழி இலங்கைக்குச் சென்றது. சம்பா அரிசியும் கும்பாச் சோறும் சாப்பிட்ட பிறகு எஞ்சியதை ஏற்றுமதி செய்த காலம் அது.

“ சங்கு போல் நெல் விளையும்
சமுத்திரம் போல் போர் ஏறும்
எள்ளுப் போல் நெல் விளையும்
இலங்கையெல்லாம் போர் ஏறும்”

இலங்கைப் பாக்கு நாகை வழியாக இந்தியாவுக்கு வந்தது. தனுஷ்கோடி—தலைமன்னார் வழியே படகு—இரயில் போக்குவரத்து ஏற்பட்ட பிறகு இந்த வியாபாரமும் நாகப்பட்டினத்தை விட்டு அகன்றது.

கட்டிடங்களுக்குத் தேக்குமரம் கப்பல் கப்பலாக பர்மாவிலிருந்து நாகையில் வந்து இறங்கியது. இப்போது

பாலாஷா தேக்கு, மலையாளத் தேக்கு இவற்றுடன் அமைதி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். தப்பித் தவறி நாம் பயன்படுத்தும் அந்தமான் தேக்கு சென்னைத் துறைமுகத்தில் அரசாங்க டிப்போவில் ஏலம் போட்டு விற்கப்படுகிறது.

தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களின் நிலக்கடலை முன்னர் நாகையிலிருந்து ஏற்றுமதியாயிற்று. இப்போது கடலூர், புதுச்சேரி துறைமுகங்களிலிருந்து தான் பெரும்பாலும் செல்லுகிறது. இவ்வாறு நாகப்பட்டினம் நசிந்திருப்பதற்குக் காரணம் உண்டு.

நடுக்கடலில் கப்பல்கள் நிற்பதால், படகுகளில் தான் நாகைக் கரையிலிருந்து பொருள்களும் ஆட்களும் கப்பலுக்குச் செல்ல வேண்டும். ஆற்றின் கொடுமை வேறு. பிரயாணிகள் கப்பலிலிருந்து படகில் ஏறிப் பிறகு கரைக்கு வர வேண்டும்; கப்பலேறுவதற்கும் அவ்வாறே முதலில் படகில் செல்ல வேண்டும். 1959 முதல் சில சமயம் பிரயாணிகள் சென்னைக்கு வரவேண்டுமென்று அறிவிக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது.

சென்னை நகரையொட்டிய பகுதிகளுக்கு அடுத்தபடியாக, தென்னிந்தியாவில் ஏற்பட்ட இரயில் பாதை நாகை–தஞ்சைப்பாதை. இது 1861-இல் தொடங்கப்பெற்றது. தூத்துக்குடிக்கு 1876-இல் இரயில் வசதி அமைந்தது. அதன் பிறகு அந்தத் துறைமுகம் வளர்ச்சி அடைந்ததன் விளைவாக நாகைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்தது.

1941 வரை நாகைலிருந்து கல்கத்தா, ரெங்கூன், கராச்சி, பம்பாய்த் துறைமுகங்களுக்குக் கப்பல்கள் போய் வந்தன. இப்போது சென்னைக்கும் மலேயாவுக்கும் இடையே செல்லும் கப்பல்கள் இத்துறைமுகத்தில் தங்கிச் செல்லுகின்றன.

1941 வரை மலேயாவுக்குக் கப்பல் கடிதங்கள் நாகப்பட்டினத்தில் கட்டப்பட்டன. இந்நாளில் இவ் வசதி சென்னை நகரில் மட்டுமே இருந்து வருகிறது.

தமிழ்நாடு, மைசூர், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் பெரும் பகுதியிலிருந்தும் மலேயாவுக்குச் செல்லும் எஃகு, பித்தளைப் பொருள்கள், வெண்கலப் பொருள்கள் நாட்டு மருந்து, துணி, பீடி, மிளகாய் ஆகியன இத் துறைமுக வழியாகச் செல்லுகின்றன.

ஐந்து லட்சம் ரூபாய்ச் செலவில் இரண்டாம் திட்டக் காலத்தில், கடலோரச் சுவர் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது; பத்து லட்சம் ரூபாய்ச் செலவில் வேறு சில திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன. எனினும் இத்துறைமுகம் இன்னும் செப்பனிட வேண்டிய நிலையிலேயே இருக்கிறது. கடலுக்குள் துருத்தும் பாலம் (Pier) கட்டும் வேலை ஆமை வேகத்தில் நடைபெற்று வருகிறது.

புயலால் அடிக்கடி பாதிக்கப்படும் இத்துறைமுகத்தில் புயற் சேதத்தைத் தடுக்கப் பல ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். கப்பல்களுக்கு வானொலி வாயிலாகச் செய்தி அனுப்புவதற்கும், கப்பல்களில் ஒலி பரப்பப்படும் செய்திகளைக் கரையில் கேட்பதற்கும் வசதிகள் (Marine Radio Communication Facility) இன்றியமையாது வேண்டப்படுகின்றன.

## சுங்கமில்லாத் துறைமுகம்

இங்கிருந்து 16 கி. மீ. தொலைவிலுள்ள காரைக்கால் துறைமுகத்தை (குசராத்திலுள்ள கண்ட்லா துறைமுகம் போல) சுங்கமில்லாத் துறைமுகமாக்க ஏற்பாடு செய்வதும் தென் இந்தியாவுக்கும் தஞ்சை மாவட்டத்திற்கும் இன்றியமையாத தேவையாகும்.

## கோடிக்கரைத் துறைமுகம்

இலங்கையின் வடபகுதியிலுள்ள காங்கேசன்துறை என்னும் துறைமுகம் கோடிக்கரையிலிருந்து 45 கி. மீ. தொலைவில்தான் இருக்கிறது. எதிர்காற்று அடிக்காம லிருந்தால், பாய்மரக் கப்பலில் ஆறுமணி நேரத்தில் இலங்கைக் கரையில் இறங்கி விடலாம்.

கோடிக்கரையிலிருந்துதான் இலங்கைக்குக் கப்பல் போக்குவரத்து நடைபெறுவது வழக்கமாக இருந்தது. சேர, சோழ, பாண்டியர் காலத்திலிருந்து 1902 வரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஆட்களும் பொருள்களும் அஞ்சற்கட்டுக்களும் இத்துறைமுகத்தின் வழியாகவே சென்று வந்தன. 1897–இல் இலங்கையில் குவாரண்டைன் சட்டம் (நோய் தடுப்பு ஏற்பாடு) ஏற் பட்டது. அதன் பிறகு தஞ்சை மாவட்டத்திலுள்ள சிறு துறைமுகங்களை மூடிவிடும்படி தென்னிந்திய இரயில்வே கம்பெனியின் ஏசண்டு தஞ்சை மாவட்டக் கலெக்ட ருக்கு எழுதினர். 1902-இல் தென்னிந்திய இரயில்வே கம்பெனி, பிரிட்டிஷ் இந்தியக் கப்பல் கம்பெனி என்ற இரண்டு ஆங்கில வணிகக் குழுக்களும் இரகசிய உடன் பாடு செய்து கொண்டு தாங்கள் பொருளீட்டுவதற்காக இந்தியர் நடத்திய சிறு கப்பல் போக்குவரத்துத் தொழி லுக்கு உலைவைக்க முடிவு செய்தனர். பிரிட்டிஷ் இந்தியக் கம்பெனியார் தங்கள் கப்பல்கள் கடலூருக்குத் தெற்கே யுள்ள துறைமுகங்களுக்கு வருவதை நிறுத்திக் கொண்ட னர்; தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குக் கப்பல் பாதை உள்ளிட்ட டிக்கட்டுகளை இரயில் கம்பெனியார் வழங்கினர். 1915 அளவில் தனுசுகோடித் துறைமுகம் ஏற் பட்டு, இவ்வாறே தலைமன்னருக்கும் இலங்கையிலுள்ள ஏனைய இடங்களுக்கும் ஆங்கிலேயரின் இரயில்வே கம்பெனி டிக்கட்டுகளை வழங்கிற்று; தனுசுகோடி — தலை

மன்னார் கப்பல் போக்குவரத்தையும் அவர்களே நடத்தி வந்தனர்.

கடல் அலைகளால் பாதிக்கப்பட்டு மண் மேடிடுவதால் தனுசுகோடித் துறைமுகத்தை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. காங்கேசன் துறை – கோடிக்கரை தொலைவும் தலைமன்னார் - தனுசுகோடி தொலைவும் ஒரே அளவாக இருப்பதால் தனுசுகோடித் துறைமுகத்தைக் கோடிக்கரைக்கு மாற்ற வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தார் விரும்புகின்றனர். *1954*–இல் நவரத்தினம் என்ற யாழ்ப்பாணத்து இளைஞர் இக்கடலை நீந்திக் கடந்து இந்திய மண்ணில் கோடிக்கரையில் சேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும், ஆண்டுதோறும் இந்த இடத்தில் நிலம் குறைந்து, கடல் பரப்பு கூடுதலாகி வருகிறது.

கோடிக்கரையில் நசித்துவிட்ட பாய்க்கப்பல் – தோணி-படகு போக்கு வரத்து மீண்டும் எழுச்சி பெற இங்கே துறைமுகம் தொடங்குவதற்கு, தெற்கு நோக்கிக் கடலில் ஒரு பாலம் (Pier) கட்ட வேண்டும்; காற்றுக் காலத்தில் அலைகளைத் தடுத்து நிறுத்தப் பெரிய கருங்கற்களைக் கொண்டு கிழக்கு மேற்காக ஓர் அலைத்தடுக்கி (Brake-Water) கட்ட வேண்டும்.

இவ்வாறு செய்தால் ஈழநாட்டில் யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள காங்கேசன் துறைத் துறைமுகமும் பயனடையும்; *1954*–இல் பெரிய மருத்துவமனை கட்டப்பட்டிருப்பதால் குவாரண்டைன் வேலை அங்கே நடைபெறுவதும் எளிது. காங்கேசன் துறைத் துறைமுகம் தமிழர் வாழும் பகுதியிலிருப்பதால், அரசியல் காரணங்களுக்காக இந்தியத் தமிழகத்துக்கும் இலங்கைத் தமிழகத்துக்கும் நேரடியான கப்பல் போக்குவரத்து ஏற்படுவதைச் சிங்கள அமைச்சர்கள் விரும்பவில்லை. அவர்கள் கருத்துக்கு

முரணுகை ஒன்றும் செய்ய இந்திய அரசாங்கம் இணங்க வில்லை.

வடகிழக்குப் பருவக்காற்றின்போது கோடிக்கரையில் ஏற்றுமதி இறக்குமதிகளைச் செய்யலாம்; தென் மேற்குப் பருவக்காற்றின்போது தோப்புத்துறைத் துறைமுகம் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் ஏற்றதாகும். எனவே இவ்விரண்டையும் இணைத்துப் பயன்படுத்திக் கொள்ளுவது சாலச் சிறந்தது.

**கப்பல் கட்டும் தளம்**

கப்பல் கட்டும் தளம் நிறுவுவதற்கு, கோடிக்கரை விசாகப்பட்டினத்திலும் சிறந்தது என்ற கருத்தைச் சென்னை மாநிலத்தின் தலைமைப் பொறியராக இருந்த திரு. எல். வேங்கடகிருஷ்ணன் 16-4-1950-இல் 'இந்து' நாளிதழில் வெளியிட்டிருக்கிறார். இங்கே கடல் அமைதியாக இருப்பதும், காவிரி நீரைக் கொணரும் ஆறுகள் அமைந்திருப்பதும், வண்டல் வாராதிருப்பதும், மீன்பிடிப் படகுகள் கட்டும் சமூகத்தார் தோப்புத்துறை முத்துப் பேட்டைப் பகுதிகளில் வாழ்வதும், கோடிக்கரைக்கு ஆதரவாக இருப்பதை அவர் நிலை நாட்டியுள்ளார்.

படகு கட்டுவதையொட்டி நல்ல தமிழ்ச் சொற்கள் வேதாரணியம் முத்துப் பேட்டைப் பகுதிகளில் வழங்குகின்றன. (Rowing the boat) என்று ஆங்கிலத்தில் கூறுவதைத் 'தண்டு வலித்தல்' என்பர். சிறந்த படகோட்டியை, 'கம்மாரன்' என்பர். படகின் முன்பக்கத்தை 'அணியம்' எனவும் படகின் பின் பக்கத்தைப் 'புறதலை' எனவும் திரும்பும் சுக்கானைக் 'காளுத்தடி' எனவும் படகை வளைக்கும் சட்டத்தை 'வங்குசால்' எனவும் குறிப்பிடுகின்றனர். புதிதாகப் படகுகட்ட முதல்

பலகை அமைத்துப் பூசை செய்வதை 'ஏரு முகூர்த்தம்' என்பர்.

## ஆகாய விமானப் போக்குவரத்து

இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் ஈடுபட்ட போது (1942–1945) ஜப்பானியர் இம்மாவட்டத்துக் கடற்கரைப் பகுதியில் வந்து இறங்கி விடுவர் என்ற நிலை நிலவிற்று. கடலோரமாக உள்ள சேதுபாவா சத்திரம் போன்ற ஊர்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. அந்நாளில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு விமான நிலையம் கட்டும் வேலை மேற்கொள்ளப் பட்டது; மிக மறைவாக—பெரும்பாலும் இரவு நேரத் திலேயே—விமான நிலையம் கட்டும்வேலை நடைபெற்றது. 90 லட்சம் ரூபாய்ச் செலவில் இவ்வாறு கட்டப்பட்டதே தஞ்சை நகருக்கு அருகேயுள்ள வல்லம் விமான நிலையம்.

போர் முடிவடைந்த பிறகு, வல்லம் விமான நிலையம் வாழ்விழந்தது. பயன்படாமையாலும் தக்கவாறு பேணப்படாமையாலும் இது பெரும்பாலும் அழிந்த நிலையில் இருக்கிறது.

வெளிநாட்டுப் பயணிகளை வரவழைக்கும் திட்டத் தின் ஒரு பகுதியாக, தஞ்சை மாவட்டத்திற்கு விமானப் போக்கு வரத்து வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். நான்காவது திட்டக் காலத்திலேனும் இந்திய அரசாங் கத்தார் இதற்கு ஆவன செய்வர் என்று எதிர்பார்க்கப் படுகிறது. தஞ்சை மாவட்டத்துக்கு மிக அருகேயுள்ள விமான நிலையம் திருச்சி செம்பட்டு விமான நிலையம் ஆகும். இது தஞ்சை நகரிலிருந்து 54.7 கி. மீ. (34 மைல்) தொலைவிலுள்ளது.

## 11. மருத்துவ வசதிகள்

மருத்துவத்துறையில் தஞ்சைமாவட்டம் பல சிறப்புக்களையுடையது. சரபோசி காலத்திலிருந்து இத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இக்கட்டுரையில் கூறுவோம். அதற்கு முற்பட்ட காலத்தைப்பற்றிக் கிடைக்கும் கல்வெட்டுச் செய்தி ஒன்றிலிருந்து 12-13ஆம் நூற்றாண்டு அளவில் திருவாவடுதுறையில் மருத்துவக் கல்வி நிலையம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது.

### சரபோசி மன்னர்

சரபோசி காலத்திலேயே தஞ்சை நகரில் கழிவுநீர் அகற்றும் முறை அமைக்கப்பட்டது. சிறு சந்துகளில் கூட கழிவுநீர் தேங்காதவாறு 1825-இல் செய்யப்பட்ட அமைப்பு இன்றளவும் நின்றுநிலவி வருகிறது.

மருத்துவத்துறை வல்லார் பலரைத் தம் அரண்மனைக்கு, சரபோசி வரவழைத்து அவர்களுடைய ஆராய்ச்சிகளையும் அரிய மூலிகைகளின் குணங்களையும் பற்றிக் குறிப்புக்கள் எழுதச் செய்தார். ஆயுர்வேதம், சித்தம், யூனனி என்னும் மூன்று மருத்துவமுறைகளிலும் அறிஞர்கள் கண்ட முடிபுகளுக்கு அட்டவணை வகுத்தார். இவை எல்லோருக்கும் பயன்பட, இவற்றைத் தமிழ்ப் பாடல்களாக ஆக்குமாறு தமிழ்ப் புலவர்களுக்குப் பணித்தார். இப்பாடல்கள், தமிழ்நாடு அரசாங்கத்தின் பொருளுதவியால் சரபேந்திர வைத்திய முறைகள் என்ற பெயரில் 18 தொகுதிகளாக, நம் நாடு உரிமை பெற்ற பிறகு, வெளியிடப்பட்டுள்ளன.

மருந்துகள் பல ஆண்டுகளுக்குக் கெடாதவாறு பக்குவம் செய்து அவற்றைத் தயாரிக்கும் முறையையும் சரபோசி ஆதரித்தார். ஸ்வர்ணமால்ய வசந்தம், வசந்த

குஸுமாகரம், ரசபூபதி, ரத்னுதி மாத்திரை, சந்திர கலா ரசம், சகஸ்ரபுர அப்ரகம் ஆகிய விலைமிக்க மருந்துகளை யும் சரபோசி செய்தார். மருந்து செய்ய உதவும் பச்சிலை களையும் மூலிகைகளையும் அரண்மனைத் தோட்டங்களில் அவர் பயிரிட்டார். பிற்காலத்தவர்க்கு இப்பயிர்களைப் பற்றித் தெள்ளத் தெளியத் தெரிவான்வேண்டி, இயல்பான வண்ணங்களில் இவற்றை வண்ண ஓவியமாக வரைந்துவைத்தார்.

சரபோசி காலத்திலேயே தஞ்சை நகரம் கண் மருத் துவத்தில் புகழ்பெற்றிருந்தது. மேனுட்டு மருத்துவரும் நம் நாட்டு மருத்துவரும் சேர்ந்து அவருடைய மருத்துவ நிலையங்களில் வேலைபார்த்தனர். கண்ணில் அறுவை மருத்துவம் செய்யுமுன்னும் செய்தபின்னும் படங்கள் வரைய அவர் ஏற்பாடுசெய்தார்.

மனித உடலின் உறுப்புக்கள் பலவற்றையும் காட் டும் வண்ணப்படங்களை மேனுடுகளிலிந்து வரவழைத்து உறுப்புக்களின் பெயர்களை அப்படங்களில் தமிழிலும் மராத்தியிலும் எழுதி அப்படங்களை மருத்துவர்களுக் குச் சரபோசி வழங்கினர். குதிரைகளுக்கும் ஏனைய கால்நடைகளுக்கும் ஏற்படும் நோய்களை நீக்கவும் சரபோசி பல முயற்சிகளை மேற்கொண்டார்.

சரபோசி தன் ஆசைநாயகியான முக்தாம்பா பாய் நினைவாக ஒரத்தநாட்டில் ஒரு சத்திரம் கட்டினர். அவள் பிள்ளைப் பேற்றின்போது ஏற்பட்ட நோயால் மரண மடைந்தாள். எனவே, இச்சத்திரத்தில் கர்ப்பமாக உள்ள பெண்கள் பிள்ளைபிறக்க மூன்றுமாதம் முன்ன தாக வந்து, பிள்ளை பிறந்து மூன்றுமாதம் கழிந்தவுடன் செல்லலாமென்றும் சரபோசி ஆணையிட்டார். தாய்க் கும் குழந்தைக்கும் பசும்பாலும் சத்துணவும் மருத்துவ வசதிகளும் அரசர் செலவில் வழங்கப்பெற்றன.

**ஆபிரகாம் பண்டிதர்**

சரபோசிக்குப் பறகு, மருத்துவ ஆராய்ச்சியில் இம் மாவட்டத்தில் சிறந்துவிளங்கியவர் இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த ஆபிரகாம் பண்டிதர் ஆவார். அவர் மருத்துவத்துறை வல்லுநராக இருந்தார். சுருளிமலேயிலிருந்த கருணுநந்த ரிஷியிடமிருந்து 1877–இல் தமக்குக் கிடைத்த மருந்துகளே ஆபிரகாம் பண்டிதர் நாடெங்கும் வழங்கினுர். அவற்றைத் தாமே செய்தும் அதற்கான தாவரங்களே வளர்த்தும் பல நூருயிரம் பேருக்கு பாம்புகடி முதல் பூபானிக் பிளேக் நோய் வரை பல நோய்களேக் குணப்படுத்தியிருக்கிருர். யானேக்கால் நோய் தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் பெரிதும் பரவியிருந்ததால் அதற்கு அவர் மருத்துவம் செய்தார். ஒரு பிடி வேப்பிலேயை அரைச்சேர் வெள்ளாட்டு நீரில் இடித்துச் சாறு எடுத்து, கருணுநந்தர் சஞ்சீவி மாத்திரைகளே அதில் கரைத்துக்கொடுத்தும், ஒரு பலம் நாட்டு ஆளி விதையும் ஒரு கைப்பிடி வேப்பிலேயும் கருணுநந்த சஞ்சீவி மாத்திரை நான்கும் சேர்த்து வெள்ளாட்டு நீரில் அறைத்துக் கொதிக்க வைத்துக் காலேமாலே பத்துப் போட்டும் யானேக்கால் நோயை ஆபிரகாம் பண்டிதர் குணப்படுத்தியிருக்கிருர். அவர் பலவகை பேதி மாத்திரைகளேயும் தைலங்களேயும் செய்திருக்கிருர்.

ஆபிரகாம் பண்டிதர் தோட்டம் பலவகைத் தாவரங்கள் நிறைந்தது. 1950 க்குப்பின் இது நன்கு பேணப் படவில்லே. எனினும் இத்தோட்டம் காணத்தக்கது. இது செல்வம் நகர்க்கும் வல்லத்துக்கும் இடையே இருக்கிறது.

**மலேரியா**

காவிரி–மேட்டுர்த் திட்டத்துக்குப் பிறகு இக்கால் வாய் பாயும் பகுதிகளில் மலேரியா என்னும் முறைக்

காய்ச்சல் பரவியிருக்கிறது. இராக்கிபெல்லர் குழுவினர் அப்பகுதிகளில் ஆராய்ந்து சேகரித்த விவரங்களுக் கேற்ப, தடுப்புமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. காவிரி நீர் மாவட்டமெங்கும் செல்லுவதால், சில சமயத்தில் ஓரிடத்தில் தொத்துநோய் ஏற்பட்டபோது அது எங்கும் பரவிவிடுகிறது. கும்பகோணம் பகுதியில் கொசு தொல் லையும் மிகுதி. அரசாங்கத்தின் முயற்சிகளால் இந்நோய் களின் அளவும் தன்மையும் கடந்த சில ஆண்டுகளில் கும்பகோணம் நீங்கலாக ஏனைய இடங்களில் அடக்கப் பட்டுள்ளன.

## நாட்டு மருத்துவம்

குறிப்பிடத்தகுந்த "நாட்டு மருந்து உற்பத்தி நிலை யத்தை"த் தஞ்சைமாவட்டக் குழுவினர் நடத்திவருகின் றனர். இது சத்திரத்தைச் சேர்ந்த ஒரு கட்டிடத்தில் தஞ்சை நகரில் இருக்கிறது. 1947–முதல் இங்கு நாட்டு மருந்துகள் செய்கிறார்கள். (தனிப் பட்டவர் நடத்தும் அடையாறு கூட்டுறவு நிலையத்தைத் தவிர) தமிழ் நாட் டில் பெரிய அளவில் நாட்டுமருந்து செய்யும் நிலையம் இதுவே. இம்மருந்துகள் சென்னை நகரில் 1959 வரை யிருந்த நாட்டு மருத்துவக் கல்லூரியினர் வகுத்த முறைப் படி செய்யப்படுகின்றன. இவற்றைத் தஞ்சை மாவட்டக் கழகத்தினர் நடத்தும் நாட்டு மருத்துவ நிலையங்கள் பயன்படுத்துகின்றன. எஞ்சியவற்றைப் பொதுமக்க ளுக்கு விற்பனை செய்கின்றனர். இம்மருந்துகள் செய்வ தற்குரிய மூலிகைகளும் வேர்களும் வெளியூர்களிலிருந்து வருகின்றன. 300 வகையான மருந்துகள் செய்யப்படு கின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாவன:—

பித்த வாயு நீங்கவும் பசி உண்டாக்கவும் – கேசரி லேகியம்; இரத்தசுத்திக்கும் தோல்நோய்க்கும் – திக்க

கிரிதம்; கண் நோய்க்கு – (1) இளநீரில் சில மருந்துகளைச் சேர்த்துச் செய்த நரிகௌஞ்சனம்; (2) பன்னீர் கலந்து செய்யப்பட்ட நேத்ரபிந்து. இவை தவிர ஏராளமான சூரணங்கள், பஸ்பங்கள், சிந்தூரம், பானகங்கள், தைலங்கள், திராவகங்கள் ஆகியன செய்யப்படுகின்றன.

திருவாரூர் நகராண்மைக் கழகம், நாட்டு மருத்துவ நிலையம் ஒன்றை நடத்திவருகிறது. மன்னார்குடி நகராண்மைக் கழகம் ஆயுர்வேத மருத்துவ நிலையம் ஒன்றை நடத்திவருகிறது. கும்பகோணத்தில் பல ஆண்டுகளாகத் தனிப்பட்ட ஒருவர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி நடத்திவருகிறார். திருவாரூரில் 1959-இல் ஏற்பட்டுள்ள பெரியதொரு மருத்துவநிலையத்தில் ஓமியோபதி முறை தமிழில் கற்பிக்கப்பட்டு வருகிறது.

நீடாமங்கலம் அருகே பூவனூர்க்கோயிலில் ஊழியம் பார்ப்பவர் ஒருவர் எலிக்கடிக்கு வேர் கட்டுகிறார்.

தென்னமரக்குடியில் முறிந்த எலும்புகளை ஒன்றாக இணைக்கும் மருத்துவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒருவகை எண்ணெய்யைத் தடவுகின்றனர். இந்த எண்ணெய்க்குத் தென்னமரக்குடி எண்ணெய் என்று பெயர்.

திருப்புகலூர் அக்னீசுவரசாமி தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் திலகவதியார் சித்த வைத்தியசாலைக்கு மருந்துகள் செய்ய ஒரு சிறு நிலையம் இருக்கிறது. அங்கு ஆங்கில மருத்துவமுறையால் குணமடையாத நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகள் இங்கே செய்யப்படுகின்றன.

இனி, தஞ்சை மாவட்டத்தின் முக்கியமான மருத்துவமனைகள் சிலவற்றைப் பற்றிக் கூறுவோம்.

## ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்

கண் ஆஸ்பத்திரியாகத் தொடங்கிப் பெண் ஆஸ்பத்திரி வரை நீண்டு தமிழ்நாட்டின் தலை சிறந்த நிறுவனங்களுள் ஒன்ருக இம்மனை விளங்குகிறது. தனிப்பட்டவர்களின் பொருளுதவியால் தோன்றி அரசாங்கத்தின் அளவு கடந்த ஆதரவால் உயர்ந்த நிலை அடைந்துள்ள நிலையம் இது. இதன் தோற்றத்துக்குக் காரணமான தனிப்பட்டவர்கள் அரசர் முதல் சாதாரண மக்கள் வரை பலவகைப்பட்டவர் ஆவர்.

*1878*-இல் மருத்துவமனை கட்டும் திட்டம் இருந்தது. உடனே தஞ்சை மகாராட்டிர அரச குடும்பத்துப் பெண்கள் தங்களுடைய தனிப்பட்ட நலனுக்கு இருந்துவந்த *40* ஏக்கர் பரப்புள்ள பூங்கா ஒன்றை மருத்துவமனை கட்ட வழங்கினர். இந்த இடத்தில் கட்டிடம் கட்ட ரூ. *66,000* செலவாயிற்று. இத்தொகையில் பெரும்பகுதி சரபோசி மன்னரின் அற நிறுவன நிதியிலிருந்து வழங்கப்பெற்றது. இச்செயல்களுக்குக் காரணமாக இருந்தவர் அந்நாளில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த தாமஸ் என்பவர்; இவர் பெயரால் அமைந்த ''தாமஸ் ஹால்'' என்னும் மண்டபம் இம்மருத்துவமனை வாயிலில் இருக்கிறது.

இம்மருத்துவமனை கட்டிமுடிக்கப்பெற்றதும் இதைக் கண்டுமகிழ்ந்த நிலச்சுவான்தார்கள் மருத்துவமனையின் வளர்ச்சிக்கும் நடைமுறைச் செலவுகளுக்கும் பணமும் நிலமும் வழங்கினர். இடமும் கட்டிடத்துக்குப் பணமும் அரசகுடும்பத்தாராலும் பிற்கால வளர்ச்சிக்கு மிராசுதார்களாலும் வழங்கப்பட்டதால் ராஜா மிராசுதார் மருத்துவமனை என்ற பெயர் ஏற்பட்டது.

இவ்வாறு பொருள் வழங்கியுள்ள மிராசுதார்கள், ஆதீனத்தலைவர்கள் ஆகியோருடைய படங்கள் இம்மனை யில் உள்ளன. கையால் வரையப்பட்ட இப்படங்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டுக்கு முன் தமிழ்ப் பெருமக்கள் இருந்த கோலமும் நின்ற கோலமும் இன்னவாறு என்று உணர்த்துகின்றன.

கடந்த 50 ஆண்டுகளில், குறிப்பாக 1947க்குப்பின் இம்மருத்துவ மனை, அரசாங்கத்தின் உதவியால் பல்கிப் பெருகியிருக்கின்றது. எவ்வித நோயையும் நீக்குவதற்கு வேண்டும் கருவிகள் கொண்ட தனித்தனிப் பகுதிகள் அமைக்கப்பட்டு, அரசாங்கத்தின் நேரடியான ஆட்சியில் சீரிய வளர்ச்சியடைந்திருக்கிறது. தொடக்கத்திலிருந்து கண்நோய் மருத்துவம் இங்கே சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனையின் ஒரு பகுதியாக எல். எம். பி. படிப்புக்கு "பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் மெடிகல் ஸ்கூல்" என்ற மருத்துவப்பள்ளி இருந்துவந்தது. 50 ஆண்டுகள் நடைபெற்ற பிறகு, 1933இல் மாநிலமெங்கும் எல்.எம்.பி. படிப்புக்குரிய தனிப்பள்ளிகளை மூடிவிடவேண்டுமென்று அன்றைய சென்னை அரசாங்கம் ஆணையிட்டதால் இந்தப் பள்ளியும் மூடப் பெற்றது.

பிள்ளைப் பேறு மருத்துவம் பற்றி, தாதிமார்களுக்கு இங்கே பல ஆண்டுகளாகப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

ஓராயிரம் படுக்கைகளுள்ள இம்மனையில், தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவரும் மாணுக்கியரும் பயற்சி பெற்று வருகின்றனர்.

இம்மனையில் பின்வரும் பகுதிகள் உள்ளன:—

| | |
|---|---|
| (1) மருத்துவம் | (2) அறுவை சிகிச்சை |
| (3) பிள்ளைப்பேறு | (4) மறைவான தொத்து நோய்கள் |
| (5) கண் | (6) காது, மூக்கு, தொண்டை |
| (7) நுரையீரல் நோய் | (8) குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் |
| (9) தோல்நோய் | (10) குடும்பக் கட்டுப்பாடு |
| (11) பல் நோய் | (12) ஆய்வு (லாபரட்டரி) |
| (13) இரத்த வங்கி | (14) எலும்பு முறிவு |
| (15) எக்ஸ்ரே | (16) மேகநோய் |

மருத்துவக்கல்லூரி ஏற்பட்ட பிறகு மருத்துவக் கல்லூரி உள்ள பகுதியில் கட்டப்படும் புதுக் கட்டிடத்துக்கு இம்மருத்துவமனையை மாற்ற அரசாங்கத்தார் விம்பினர்; ஆனல் அதற்கும் பெரும் எதிர்ப்பு இருந்தது. மக்கள் கருத்தை மதித்து அரசாங்கத்தார், புதிய பகுதிகளைக் கல்லூரிப் பகுதியில் கட்டப்படுமென்றும் வசதிகள் பழைய கட்டிடத்திலேயே தொடர்ந்து இருந்து வருமென்றும் அறிவித்தனர்.

**மகாத்மா காந்தி நினைவு**

**நுரையீரல் மருத்துவமனை, சிங்கிப்பட்டி**

சிங்கிப்பட்டி என்பது தஞ்சை நகருக்குத் தென் மேற்கே 27 கி. மீ. (17 மைல்) தொலைவில் பூதலூருக்கு அருகே உள்ளது. நுரையீரல் நோய் (டி. பி. என்றும் சயரோகம் என்றும் இதனைக் கூறுவர்) நீக்க நிலையம் இங்கே கட்டப்பட்டிருக்கிறது.

இத்தகைய மனை ஒன்றை அமைக்கப் பத்து லட்சம் ரூபாய் தர மாவட்டக்கழகம் முன் வந்தது. வல்லத்தில்

இதை நிறுவ முயற்சி நடைபெற்றது. மக்கள் நெருக்க முள்ள தஞ்சை நகரருகே கொடிய நோயான நுரையீர லால் வாடுபவர் பலரையும் இருக்கச் செய்வது கூடாது என்று சிலர் கூக்குரல் எழுப்பினர். இதன் விளைவாக, இம்மனையைக் கட்ட வேறோர் இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதாயிற்று.

மானும் முயலும் நிறைந்த காட்டின் ஒரு பகுதியை அழித்துச் சிங்கிப்படியில் இம்மனையை நிறுவும் பொறுப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் டி. கே. பழநியப் பன் மேற்கொண்டார். மரங்களடர்ந்த மேட்டு நிலத்தில் 500 ஏக்கர்ப் பரப்பில் 20 லட்சம் ரூபாய்ச் செலவில் இம்மனை கட்டிமுடிக்கப்பெற்று 1951-இல் திறந்து வைக்கப்பெற்றது.

பணம் கொடுத்து மருத்துவம் செய்து கொள்பவர் களுக்கு 260 படுக்கைகளும் ஏழைகளுக்கு, செலவின்றி மருத்துவம் செய்துகொடுக்க 100 படுக்கைகளும் ஆக 360 படுக்கைகள் உள்ளன. குழந்தைகளுக்கென ஒரு வார்டும் கட்டப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டின் தலை சிறந்த மருத்துவமனைகளுள் இதுவும் ஒன்று.

**சேக்ரட் ஹார்ட் குட்ட நோய்**

**மருத்துவமனை, சாக்கோட்டை**

பிரான்சிலிருந்து வந்துள்ள கத்தோலிக்கத் தாய்மார் கள் இம்மனையை 1916-இல் தொடங்கி, கட்டுப்பாட் டுடனும் சிறந்த ஆட்சி அமைப்புடனும் நடத்தி வருகின் றனர். 700 படுக்கைகள் உள்ளன. அறுவை சிகிச்சைக்கு இம்மருத்துவமனை புகழ் பெற்றிருக்கிறது. அணைக்கரை. சோழபுரம், திருப்பனந்தாள் ஆகிய வெளியூர்களுக்குச் செல்லும் நடமாடும் மருத்துவ நிலையமும் (மோபைல் யூனிட்) இங்கு உண்டு. நோயாளிகளில் மிக்க ஏழையாக

உள்ளவர்களுக்குத் தொழிலும் எந்த வேலையும் செய்ய இயலாதவர்க்கு உணவும் வழங்கப்படுகிறது. இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இம்மருத்துவமனையை விரிவுபடுத்த ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

உறவினரும் கைவிடக்கூடிய இக்கொடிய நோயால் வருந்துபவர்களை இங்குள்ள தாய்மார்கள், சாதி என்றும் மதம் என்றும் பாராது, அன்புடன் பேணி வருவதும் இலவச மருத்துவம் செய்வதும் நன்றியுடன் குறிப்பிடத்தக்கன. நோயுற்ற் குழந்தைகளுக்காக ஒரு தொடக்கப்பள்ளி இம்மருத்துவ மனையிலேயே நடத்தப் படுகிறது.

இம்மனையைத் தொடங்கிய சிஸ்டர் கரோலைன் என்ற பிரெஞ்சு அம்மையாரும், சிஸ்டர் மேரி டீ பிரிட்டோ என்ற கோவா அம்மையாரும் குட்ட நோயால் துன்பப் பட்டவர்கள்; தாம் துன்புறுவதுபோலப் பிறரும் துன்பப் படலாகாது என்ற உயரிய எண்ணத்தால் இந் நிலையத்தைத் தொடங்கினர்.

நுரையீரல் மருத்துவப் பகுதி ஒன்று (டி. பி. வார்டு) *1960*–இல் போப்பாண்டவரான *23*–ஆவது ஜான் நன் கொடையால் தொடங்கப்பட்டு அதற்கெனச் சில படுக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள பிற மருத்துவமனைகளுள் குறிப்பிடத்தக்கது கும்பகோணம் சென்ட். ஆன்ஸ் ஹாஸ்பிட்டல் என்பது ஆகும்.

---

*செய்திகள் உதவியர் Mother Superior. Sacred Heart Leprosy Hospital, Saakkottai, Tanjore Dt.

## 12. கல்வி நிலை

கல்வித் துறையில் பல மாவட்டங்களைவிடத் தஞ்சை உயர் நிலையில் இருந்து வந்திருக்கிறது. சிறப்பாக, இம் மாவட்டத்து நகரங்களில் கல்வியறிவுடையோர் தொகை நெடுங்காலமாகவே மிகுதியாகும்.

**சரபோசி காலம்**

சென்னை நகருக்குத் தெற்கே முதலாவதாக ஆங்கிலப் பள்ளிக்கூடம் அமைந்தது தஞ்சை நகரிலேயே ஆகும்; அது திருவாரூர்ச் சாலையில் இருந்தது என்பர். அது அமையக் காரணமாக இருந்தவர் சரபோசி மன்னர் ஆவார்.

மேலை நாட்டுக் கலைகளின் பயனைப் பெறுவதோடு நம் நாட்டுப் பண்பாட்டின் அடிப்படையையும் விடாதபடி கல்விமுறை அமைய வேண்டுமென்று சரபோசி கருதினர். அதற்கேற்ப வடமொழிக் கலாசாலைகள், ஆங்கிலக் கலாசாலைகள், விஞ்ஞானக் கலாசாலைகள் ஆகியவற்றையும் பிரெஞ்சு, பாரசீகம் போன்ற மொழிகளைப் படிப்பதற்கு வசதியுள்ள கல்வி நிலையங்களையும் அவர் நிறுவினர்.

சென்னைப் பல்கலைக் கழகம் 1857-இல் தோன்றிற்று. அதன் முன்னோடியான உயர்நிலைப்பள்ளி (இன்றைய மாநிலக் கல்லூரி) சென்னையில் 1840-இல் ஏற்பட்டது. அதற்குப் பத்தாண்டுகள் முன்னரே காலமானவர் சரபோசி. எனினும், ஆங்கிலக் கல்வியுடன் சேர்ந்த படிப்புத் தேவை என்பதை உணர்ந்து, உணவளித்துக் கல்வி பயிற்றுவிக்கும் கல்வி நிலையங்களைத் தம் சத்திரங்களில் நிறுவினர். இன்றளவும் தஞ்சை மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளிகள் பலவற்றை இச்சத்திரங்களில் காணலாம்.

சரபோசி காலத்தில் மாணவ மாணாக்கியர்க்கு மூன்று வேளைச் சோறு, வாரம் இருமுறை எண்ணெய் நீராட்டு, உணவு செமிப்பதற்கு லேகியம், குளிர் காலத்துக்குப் போர்வை ஆகியவை கொடுக்கப்பட்டன. பூகோள பாடத்தைச் சுவையுடன் கற்பிக்க, 'தேவேந்திர குறவஞ்சி' என்னும் இசை நாடக நூலைச் சரபோசியே எழுதினர். இதுபோன்ற பல நூல்களை அச்சிடுவதற்காக, கற்களால் செய்யப்பட்ட எழுத்துக்களைக்கொண்டு அச்சிடும் அச்சகம் ஒன்றைத் தஞ்சையில் நிறுவினர்.

குத்துச்சண்டை, கர்லா சுழற்றுவது, சிலம்பம் ஆடுவது ஆகிய வீர விளையாட்டுக்களில் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பயிற்சி தரப்பட்டது. அக்காலத்தில் பள்ளி ஆசிரியர்கள் பெற்ற ஊதியம், ஒவ்வொரு தேர்வுக்கும் இருந்த பாடத்திட்டம் போன்ற விவரங்களைச் சரசுவதி மகாலில் 'மோடி' லிபியிலுள்ள நூல்களில் காணலாம்.

இனி, ஆங்கிலேயர் காலத்தில் தஞ்சை மாவட்டத்தின் கல்வி நிலையைக் கூறுவோம்.

**ஆங்கில ஆட்சியில்**

கல்வியுலகில் உலகப் புகழ் பெற்ற நாவலர் மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரும் கணிதமேதை இராமானுசமும் இம் மாவட்டத்தினரே. உயர்நீதி மன்றம் - இறுதி நீதிமன்றம் இவற்றின் நீதிபதிப் பதவிகள், தலைசிறந்த அரசாங்கப் பதவிகள். தலைமை ஆசிரியப் பதவிகள் ஆகியவற்றை இம்மாவட்டத்தினர் பலர், பல தலைமுறைகளாகப் பெற்றுள்ளனர். நெல்லை மாவட்டத்துக்கு அடுத்தபடியாக மாநிலத்திலேயே மிகுதியான அளவு உயர்நிலைப்பள்ளிகள் இம்மாவட்டத்தில் இருந்து வந்திருக்கின்றன. தஞ்சை கல்யாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளி, திருக்காட்டுப் பள்ளி பி. எஸ். சிவசாமி ஐயர் உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப்

பள்ளி, கும்பகோணம் நகர உயர்நிலைப்பள்ளி, மாயூரம் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, சீர்காழி எல். எம். சி. உயர்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம் சி. எஸ். ஐ. உயர்நிலைப்பள்ளி ஆகியவை இம்மாவட்டத்தின் பழமையான உயர்நிலைப்பள்ளிகளில் புகழ் பெற்றன வாகும். பல ஆண்டுகளில் மாயூரம் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளியிலிருந்து எஸ். எஸ். எல். சி. தேர்வுக்குச் செல்லும் மாணவர் அனைவருமே வெற்றி பெற்றிருக்கின்றனர்.

கடற்கரைப் பகுதிகளில் கிறித்தவர்கள் வந்திறங்கியமையால் ஆங்கிலக் கல்வி பயிற்றும் பள்ளிகள் தோன்றலாயின. ஆங்காங்கே சத்திரங்களுக்குக் கட்டிடங்கள் இருந்ததால் மாவட்டக் கழகத்தார் அவற்றில் உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கியதும், படம் வரைதல் போன்ற ஓவியக் கலைகளைக் கற்பிக்கும் பள்ளி ஒன்று சென்ற நூற்றுண்டிலேயே கும்பகோணம் நகராண்மைக் கழகத்தாரால் தொடங்கப்பட்டிருப்பதும் இம்மாவட்டத்தின் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்கனவாகும்.

தமிழ், வடமொழி ஆகியவற்றில் புலமை பெறுதற்குதவும் கல்லூரிகள் இம்மாவட்டத்தில் ஏராளமாக உள்ளன. கும்பகோணமும் திருவையாறும் பண்டு தொட்டு வடமொழிக் கல்விக்கு நிலைக்களங்களாக உள்ளன. 300 ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட கோவிந்த தீட்சிதர் தர்மகலாசாலையில் சம்ஸ்கிருதமும் வேதமும் இன்றும் கற்பிக்கப்படுகின்றன.

தமிழ்க் கல்லூரிகள் தமிழ் நாட்டில் பிற எல்லா மாவட்டங்களிலும் (தெ. ஆ.-2, கோவை-1, திருச்சி-1, மதுரை-1 ஆக) ஐந்தும் இம்மாவட்டத்தில் நான்கும் உள்ளன. இதிலிருந்து இம்மாவட்டத்தில் தமிழ்க்கல்வி தலைசிறந்து விளங்குவது தெளிவாகும்.

தமிழ்க் கல்வியோடு சமயத்துறை அறிவையும் புகட்டும் கல்வி நிறுவனங்களைக் காவிரிப்பூம்பட்டினத் திலும், தேரழுந்தூரிலும் 1962 அளவில் தொடங்கத் தமிழ் நாடு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. சைவ சித்தாந்தக் கல்லூரி ஒன்றை மாயூரத்தில் தொடங்க, தருமபுர ஆதீனத் தலைவர் கயிலைக்குரு மகாசந்நிதானம் திருவுள்ளம் கொண்டிருக்கிறார்கள்.

இசைக் கலையைப் புகட்டும் ஏராளமான நிலையங் கள் இம் மாவட்டத்தில் தஞ்சை, கும்பகோணம், மாயூரம் வட்டங்களில் உள்ளன.

கூட்டுறவுத் துறையில் வேலை பார்ப்பவர்கள் பயிற்சி பெறுவதற்கான ஒரு நிலையம் தஞ்சை செல்வம் நகரில் இருக்கிறது. இதற்கு 'சாமியப்ப முதலியார் கூட்டுறவுக் கல்வி நிலையம்' என்று பெயர்.

காந்தீய முறையில் வேதாரணியத்தில் பெண்களுக் கான குருகுலமும் திருச்சிற்றம்பலத்தில் ஆதாரப் பள்ளியும் நடைபெறுகின்றன. ஆடுதுறையிலும் பட்டுக் கோட்டையிலும் கிராமிய விரிவுப் பணி (RETC) நிலையங் கள் உள்ளன.

பொறியியல் தொழில்களைக் கற்பிக்கும் 'பல் தொழிற் கல்லூரி' ஒன்று நாகப்பட்டினத்திலும், சிறு தொழில்களைப் புகட்டும் தொழில் பள்ளி ஒன்று தஞ்சா வூரிலும் மீனவர்க்கான பள்ளி நாகப்பட்டினத்திலும் இருந்து வருகின்றன. தொழில் கல்விக்குரிய ஏனைய கல்வி நிலையங்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரியும், ஒரத்தநாட்டிலுள்ள ஆதாரக் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரியும் ஆகும்.

வேளாண்மைத் துறையில் இம்மாவட்டம் சிறந்து விளங்குகிறது. ஆடுதுறையிலும் பட்டுக்கோட்டையிலும்

வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணைகளும், ஆடுதுறையில் வாழை ஆராய்ச்சி நிலையமும், வேப்பங்குளத்தில் தென்னை ஆராய்ச்சிப் பண்ணையும் எள் விதைப் பண்ணையும் உள்ளன. எனவே இம்மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று தொடங்கவேண்டுமென்று இம்மாவட்டத்து மக்கள் நெடுங்காலமாக வேண்டிக்கொண்டிருக்கின்றனர். இந்த எண்ணம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேறக் கூடும். சாக்கோட்டையில் 1961 முதல் வேளாண்மைப் பள்ளி ஒன்று தமிழ் நாடு அரசாங்கத்தாரால் நடத்தப் பட்டு வருகிறது.

ஏனைய கல்லூரிகளைப் பொறுத்தவரை இம்மாவட்டத்தில் 19-ஆம் நூற்றுண்டில் அரசாங்கக் கல்லூரியும் ஒன்றும் கிறித்தவர்கள் நடத்திய கல்லூரிகள் மூன்றும் இருந்தன. தூய ஜோசப் கல்லூரி நாகப்பட்டினத்திலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்டது. நாகப்பட்டினத்தில் 1845–இல் தொடங்கி, 1898–இல் அங்கிருந்து மன்னார்குடிக்கு மாற்றப்பட்ட பின்லே கல்லூரி சென்னை கிறித்தவக் கல்லூரி மேலும் பெரிதாக்கப்படுவதற்காக, 1907–இல் மூடப்பற்றது. தஞ்சை தூய பீட்டர்ஸ் கல்லூரியும் மூடப்பட்டது; இச்கல்லூரியில் முதல்வராக இருந்த மார்ஷ் என்பவர் நினைவாக யூனியன் கிளப் கட்டிடத்தில் 'மார்ஷ் ஹால்' கட்டப்பட்டிருக்கிறது. 1908 முதல் 1955 வரை கும்பகோணம் அரசாங்கக் கல்லூரி ஒன்று மட்டுமே இம்மாவட்டத்தில் நடந்து வந்தது.

1955-க்குப் பின் நான்கு புதிய கல்லூரிகள்–மாயூரம், அதிராம்பட்டினம், தஞ்சாவூர், பூண்டி ஆகிய ஊர்களில் ஏற்பட்டுள்ளன. எனவே இந்தியா உரிமை பெற்றபிறகு தஞ்சை மாவட்டத்தில் கல்வி நிலையங்கள் பெருகியுள்ளன; இவை மேலும் வளர்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இனி, முக்கியமான கல்வி நிலையங்களைப் பற்றித் தனித்தனியே கூறுவோம்.

**மராட்டா பள்ளி**

இது தஞ்சை அரண்மனைக் கட்டிடத்துக்குள் (கிழக்கு வாயிலருகே) உளது. முதல்வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை இங்கு கற்பிக்கப்படுகின்றன. பல இன மாணவ மாணவிகளும் இங்கே கல்வி பயிலுகின்றனர். மராத்திய மொழி இங்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சை இளவரசராக இருந்த சிவாஜி ராஜே சாகிப் பான்ஸ்லேயின் முயற்சியாலும் ஏனைய மகாராட்டிரப் பெருமக்களின் ஒத்துழைப்பாலும் இது 26 – 1 – 1920-இல் தொடங்கப் பெற்றது. இப்பள்ளியை நடத்துவதற்கென்று தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னர்கள் மானியம் வழங்கியுள்ளனர். இப்பள்ளியின் ஆட்சி இப்போது 'சத்திரம் டிப்பார்ட்மெண்டாரால்' நடத்தப்படுகிறது.

**கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம், மாகாராசபுரம். வேதாரணியம்**

திக்கற்ற மாணுக்கியர்களுக்காகத் தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆதார உயர்நிலைப்பள்ளி இது ஒன்று மட்டுமேயாகும்.

சர்தார் அ. வேதரத்தினம் (1897–1961) தொடங்கிய இந்நிலையம் அவர் மகன் அப்பாக்குட்டியால் நடத்தப்படுகிறது. இக்குருகுலம் 7 - 2 - 1946 - இல் தொடங்கப்பெற்றது. இரண்டு வயதுமுதல் 16 வயது வரையுள்ளவர்கள் இங்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். எல்லாச் சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளும், இந்தி மொழியும், துணி நெசவு முதலியனவும் இங்கே கற்பிக்கப்படுகின்றன. வெள்ளிக்கிழமைகளில்

சர்வோதயப் பிரார்த்தனை உண்டு. 10-ஆம் வகுப்புவரை இங்கே படிக்கலாம். மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடை பெறும் கல்வி நிலையங்களுள் இது ஒன்று.

இக்குருகுலத்தின் கட்டிடங்கள் புயலால் பலமுறை சேதப்பட்டு, பின்னர்ப் பொதுமக்களின் உதவியாலும் அரசாங்கத்தின் ஆதரவாலும் புதுப்பிக்கப்பெற்றிருக் கின்றன.

**இ. டி. தாமஸ் நினைவு உயர்நிலைப்பள்ளி, குடிக்காடு**
(பாபநாசம் வட்டம்)

'செவன்த் டே அட்வென்டெஸ்டு மிசன்' என்னும் அமெரிக்க நிறுவனத்தார் 1952-இல் இப்பள்ளியைத் தொடங்கினர். 1958-வரை அமெரிக்கக் கல்வி முறைப் படி, பாடத் திட்டங்கள் அமைக்கப் பெற்றிருந்தன.

1958-க்குப் பிறகு, தமிழ்நாட்டிலுள்ள ஏனைய உயர் நிலைப்பள்ளிகளைப் போன்றே இப்பள்ளியிலும் பாடத் திட்டம் இருந்து வருகிறது. ஆயினும் ஒரு சில வேறு பாடுகள் உண்டு. அவையாவன :

(1) இப்பள்ளிக்கூடம் அரசாங்க உதவி பெறுவ தில்லை.

(2) இது, ஓர் ஆசிரமம் போன்று நடத்தப்படுகிறது.

(3) மாணவ, மாணுக்கியர் ஒவ்வொருவரும் நாள் தோறும் ஒருமணி நேரம் கட்டாயமாக உடலுழைப்புக் குரிய வேலையில் ஈடுபடவேண்டும். விறகு வெட்டுவது, பள்ளிக்குச் சொந்தமான 45 ஏக்கர் நிலத்தில் உழுவது போன்ற வேலைகளை மாணவர்களும் சமையல் வேலை, தோட்டவேலை ஆகியவற்றை மாணுக்கியரும் செய்ய வேண்டும். இவ்வாறு பார்க்கும் வேலைக்கு, (ஒரு மணி நேர வேலைக்கு ரூ. 3-60 ந. பை.) சம்பளம் கொடுக்கப் படுகிறது.

(4) உணவு விடுதியில் சைவ உணவு மட்டுமே உண்டு. காப்பிக்குப் பதில் கோதுமை மா கொடுக்கப் படுகிறது.

**அரசாங்கக் கல்லூரி, கும்பகோணம்**

தஞ்சை ராணிகள் வழங்கிய கட்டிடம் ஒன்றில் காவிரிக் கரையில் 1854 அக்டோபரில் மாகாண அரசாங் கத்தார் 'புரவின்சியல் ஸ்கூல்' என்ற பெயரில் ஆங்கிலப் பள்ளி ஒன்றைத் தொடங்கினர். இது 1864 - இல் கல்லூரி ஆக்கப்பெற்று, 1867–இல் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

தமிழ் நாட்டில் சென்னை நகருக்கப்பால் அரசாங்கத் தாரால் தொடங்கப்பெற்ற முதற் கல்லூரி இதுவே. இக் கல்லூரி தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்ருக இருந்து வருகிறது. பி. யு. சி., பி. ஏ., பி. எஸ். சி. வகுப்புக்கள் இங்கு நடைபெறுகின்றன.

இக்கல்லூரியை, 'தென் இந்தியாவின் கேம்பிரிட்ஜ்' என்று குறிப்பிடுவது வழக்கம். இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற் போல இங்கும் பட கோட்டி மகிழ இக்கல்லூரியும் ஆற்றின் கரையில் அமைந் திருந்து, அங்கே ஆசிரியராக இருந்த போர்ட்டர் துரை இக்கல்லூரியின் முதல் பிரின்சிபாலாக இருந்த தாலும் இவ்வாறு பெயர் ஏற்பட்டது.

போர்ட்டர், கோபால் ராவ், ஸ்டோன், டங்கன், ஹன்ஸ்மன் போன்ற சிறந்த ஆசிரியர்களை இக்கல்லூரி பெற்றிருந்தது. திருவாசகத்துக்கு உரை எழுதிய போப் துரையும் மகாவித்துவான் தியாகராாசச் செட்டியாரும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரும் தமிழாசிரியராக இருந்த பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. இவ்வாறு புகழ்பெற்ற பலர் இக்கல்லூரியில் பயின்ற மாணவரிலும்

உள்ளனர்; இவர்களில் சிலர் பல சம்ஸ்தானங்களில் திவான்களாகவும் இருந்திருக்கின்றனர்.

1910–இல் இக்கல்லூரி பெருவளர்ச்சியடைந்தது. 1952-இல் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. 1955–இல் இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற்றது.

1903–இல் இக்கல்லூரி நூல் நிலையத்திலிருந்து Carrs Synopsis of pure Mathematics என்ற நூலை ஓர் அன்பர் இராமானுசம் என்ற பத்தாம் வகுப்பு மாணவருக்கு எடுத்துக்கொடுத்தார். இதன் பின்னரே கணித உலகின் சிறப்புக்களை இராமானுசம் உணர்ந்து, அத்துறையில் பேரார்வம் காட்டிக் கும்பகோணம் கல்லூரியில் மாணவ ராகச் சேர்ந்தார். இவருடைய வாழ்க்கைத் தொடர் புடைய தாள்களும் நூல்களும் இன்றும் இக்கல்லூரி நூல் நிலையத்தில் காணத்தக்கன.

இக்கல்லூரியை அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துடன் இணைத்து ஆட்சிப் பொறுப்பையும் அப் பல்கலைக் கழகத்தில் ஒப்புவித்துவிடும் திட்டம் 1936-இல் இருந்தது. ஆனுல் அது நிறைவேறவில்லை.

**அன்பநாதபுரம் வகையரு அறநிறுவனக் கல்லூரி, மன்னம்பந்தல், மாயூரம்**

இக்கல்லூரி, மேற்கண்ட அறநிறுவனக் குழுவின ரான மருதவாணம் பிள்ளை, திருஞானம் பிள்ளை, சோம சுந்தரம் பிள்ளை, ஏ. இராமநாதப்பிள்ளை ஆகிய பெரு மக்களால் 1954 - இல் மாயூரம் நகர எல்லையிலுள்ள மன்னம் பந்தலில் காவிரிக் கரையில் தொடங்கப்பட்டது.

இங்கு பி. யு. சி., பி. ஏ., பி. எஸ். சி., வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**காதர் முகையதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்**

இக்கல்லூரி ஹாஜி எம். கே. என். காதர் முகைய தீன் ராவுத்தராலும் அவர் சகோதரர்களாலும் ஏற்படுத்

தப்பட்ட எம். கே. என். மதர்சா அறக் குழுவினரால் 1955–இல் அமைக்கப்பட்டது.

கடற்கரையருகே இக்கல்லூரி இருப்பது குறிப்பிடத் தக்கது. மாணவர் விடுதியும் உண்டு.

**ராஜா சரபோஜி கல்லூரி, தஞ்சாவூர்**

மாவட்டக் கலெக்டரைத் தலைவராகக் கொண்ட உள்ளூர்ப் பெருமக்கள் குழுவினரால் இக்கல்லூரி 1955-இல் தொடங்கப் பெற்றது. சத்திரம் நிதிக்கு ராஜா சரபோஜி வழங்கிய ரூ. 4,93,700ஐக் கல்லூரிக்குப் பயன் படுத்திக் கொள்ள மாநில அரசாங்கம் இசைந்தது. பொருட்காட்சி நடத்திப் பொதுமக்களிடம் இரண்டு லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டது. தஞ்சைக்கும் வல்லத் துக்கும் இடையேயுள்ள ரோட்டரி நகரில் தஞ்சை ரோட்டரி கிளப் 156 ஏக்கர் நிலம் வழங்கிற்று. டி. கே. பழநியப்பன், ஆர். எம். சுந்தரம் ஆகியோர் மாவட் டக் கலெக்டர்களாக இருந்தபோது கல்லூரி தொடங்கும் திட்டம் உருவாயிற்று. கலெக்டர் சி. ஏ. இராம கிருஷ்ணன் முயற்சியால் கல்லூரி தொடங்கப்பட்டது; கலெக்டர் கார்த்திகேயன் காலத்தில் உறுதியான கட்டிடங்கள் கட்டப்பட்டன.

1947க்குப்பின் தமிழ் நாட்டில் ஏற்பட்ட கல்லூரி களில் இக்கல்லூரிபெரு வளர்ச்சியடைந்து நன்கு நடை பெற்றுவருகிறது. கல்லூரி முதல்வர் முருகையனின் முயற் சிகள் பாராட்டுக்குரியன.

1959-60 முதல் இக்கல்லூரியில் இருபாலாரும் கல்வி பயிலுகின்றனர். இக்கல்லூரியில் அஞ்சல் நிலைய மும் உணவு விடுதியும் உள்ளன. இயற்கை விஞ்ஞான ஆய்வுக்கூடத்தில் கல்லூரி இடத்தில் கிடைத்த நட்டு வாய்க்காலி, பூரான் (Centipedes Giant Size) ஆகியன வைக் கப்பட்டுள்ளன. தஞ்சை நகரின் சுற்றுப் புறத்தில் நண்டு,

கெண்டைமீன், விலாங்கு, தென்னை மரத்து வண்டு, பொன் வண்டு ஆகியவையும் மிகுதி என்பது குறிப்பிடத் தக்கது.

**ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி**

இது பூண்டி வாண்டையார் என்னும் புகழ்பெற்ற நிலப் பெருங்கிழார் குடும்பத்தினரால் தஞ்சையிலிருந்து 10 கி. மீ. தொலைவிலுள்ள பூண்டி என்னுஞ் சிற்றூரில் நெல் வயல்கள் சூழ்ந்த நிலையில் 1956-இல் தொடங்கப் பட்டிருக்கிறது. பூண்டியில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ புஷ்பவனேசுவர சுவாமி பெயரே இக்கல்லூரிக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

**ஆதாரப் பயிற்சிக் கல்லூரி, ஒரத்தநாடு**
(Post Graduate Basic Training College)

இது 1955 அளவில் தமிழ்நாட்டு அரசாங்கத்தாரால் தொடங்கப் பெற்றது. அதற்கு முன்னர் இங்கு ஆதாரப் பள்ளி இருந்து வந்தது. இது சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. பட்டதாரிகள் B. T. பயிற்சி பெற இங்கு வந்து பயிலுகின்றனர். விவசாயம், தோட்ட வேலை, நூல் நூற்றல், நெசவு ஆகியவையும் கற்பிக்கப் படுகின்றன. இத்தகைய கல்லூரி தமிழ் நாட்டில் இது ஒன்று மட்டுமேயாம். அரசாங்கத்தார் இக்கல்லூரிக்கு இருபது லட்சம் ரூபாய்வரை செலவிட்டுள்ளனர்.

**அரசாங்க மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்**

இது 1958-இல் தமிழ்நாடு அரசாங்கத்தாரால் தொடங்கப்பட்டதாக அறிவிக்கப்பெற்றது. பெயரளவில் அந்த ஆண்டில் கல்லூரி ஏற்பட்டதால் 1958 முதல் 1960 வரை சேர்க்கப்பட்ட மாணவர்கள் வெவ்வேறு கல்லூரிகளில் பயின்று வந்தனர். 1961-இல் கட்டிடங்களில் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பெற்று, தஞ்சையிலேயே கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டக் கழகம் நடத்திவந்த இரயில்களுக்கு நட்ட ஈட்டுத் தொகையாக அக்கழகத்துக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய ரூ. 80 லட்சத்தை மாவட்டத்துக்குப் பயன்படுத்த வேண்டுமென்று தஞ்சை மாவட்டத் தலைவர்கள் இடைவிடாது கிளர்ச்சி செய்த தன்பயனாக இக்கல்லூரியைத் தஞ்சையில் நிறுவத் தமிழ்நாடு அரசாங்கம் முன் வந்தது. 1930-க்கு முன் சிறு அளவில் மருத்துவப்பள்ளி ஒன்று தஞ்சாவூரில் இருந்தது.

மருத்துவக் கல்லூரிக்கு வேண்டும் இடம் நகருக்குள் இல்லாமையால் கல்லூரியும் பெரிய மருத்துவமனையும் நகரின் வெளிப்புறத்தில் திருச்சிச் சாலையில் கட்டப்பட்டுள்ளன.

இக்கல்லூரியில் மாணவர் சேர்க்கை முறை, படிப்பு முறை முதலிய யாவும் ஏனைய அரசாங்க மருத்துவக் கல்லூரிகளிற் போலவே நடந்து வருகிறது. எம்.பி., பி.எஸ்., படிப்பு மட்டும் இங்கு உண்டு.

### அரசர் கல்லூரி, திருவையாறு

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் ஓரத்தநாடு. ராஜா மடம், நீடாமங்கலம், மீமிசல், விளாங்குடம் ஆகிய இடங்களில் வடமொழிப் பயிற்சிக்குப் பள்ளிகள் நிறுவி மாணவர்க்கு அமுது படைக்க அங்கெல்லாம் சத்திரங்களும் அமைத்தார். இச்சத்திரங்கள் பலவற்றில் இன்று உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. வடமொழிப் பள்ளிகள் காலப்போக்கில் மறைந்து அவற்றுக்குப் பதிலாக, திருவையாற்றில் 1880-இல் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த தாமஸ்துரையின் முயற்சியால் வடமொழிக் கல்லூரி தொடங்கப்பட்டது. பிற்காலத்தில், பிராமணரல்லாதவரும் சேர்த்துக் கொள்ளப்படலாயினர். 1954 முதல் தமிழ்ப் புலவர் பட்டத்துக்குரிய பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. சத்திரம் நிதியிலிருந்து,

மாவட்டக் கழகத்தார் இக்கல்லூரியை நடத்திவருகின்றனர்.

**கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை, தஞ்சை**

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரன் பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க, சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் பட்டம் விழைவார், அழுத்தமான தமிழ்க் கல்விபெற இங்கு பயிலுதற்குப் பல்கலைக் கழகத்தார் 1941–இல் இசைந்தனர். தவத்திரு. ஞானியாரடிகளால் தொடங்கி வைக்கப் பெற்ற பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. பாடத்துடன், புகுமுகு வகுப்பில் கல்வெட்டுப் பகுதிக்குச் சதாசிவப் பண்டாரத்தாரும் வரலாற்றுப் பகுதிக்கு எஸ். கே. கோவிந்தசாமியும் தனியே வகுப்புக்கள் நடத்தினர்.

1949 முதல் 1953 வரை திருவாவடுதுறை ஆதீனத்தார் இக்கல்லூரியை நடத்தி வந்தனர்.

திரைப்பட உலகில் புகழ் பெற்றுள்ள ஏ. கே. வேலன் இக்கல்லூரிக்கு நன்கொடை வழங்கியுள்ளார்.

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்**

இக்கல்லூரி திருப்பனந்தாள் ஆதீனத்தின் தலைவர் அருள்நந்தித் தம்பிரான் அவர்களின் கொடை வளத்தால் ஏற்பட்டு 1946 முதல் தமிழ்ப் புலவர்களை உருவாக்கி நாட்டுக்கு வழங்கி வருகிறது. ஏழை மாணவர்க்குச் சம்பளச் சலுகையும் உணவுச் செலவுக்குப் பொருளுதவியும் தரப்படுகின்றன. இசை பயிலும் வாய்ப்பும் இக்கல்லூரி மாணவர்க்கு உண்டு.

கல்லூரியின் தொடக்கத்திலிருந்து திரு. கே. எம். வேங்கட ராமையா இதன் முதல்வராக இருந்து வருகிறார்.

இக்கல்லூரி நிறுவிய பெருங்கொடை வள்ளலாகிய அருள் நாந்தித்தம்பிரான் தமிழ்ப்புலவர் தேர்வில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதல்வராகத் தேர்ச்சி பெறுபவர்க்கு ஆயிரம் வெண்பொற்காசுப் பரிசு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

## தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்

தருமபுர ஆதீனத்துத் தலைவர் கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் இக்கல்லூரி 1946–இல் தோற்றுவிக்கப்பெற்றது.

இக்கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வித்துவான், வடமொழி சாகித்திய சிரோமணி பட்டத் தேர்வுகளுக்குரிய பாடங்களைப் பயிற்றுவிக்கிறது. ஒவ்வொரு பட்டத் தேர்வும் நான்காண்டுகள் படித்தற் குரியன.

தமிழிலும் சைவசித்தாந்தத்திலும் புலமை பெற்ற மாணவர் பலரை இக்கல்லூரி தமிழ் நாட்டுக்கு வழங்கி யிருக்கிறது. சிறந்த நூலகம் ஒன்று இக்கல்லூரியில் உளது.

இதனோடு இணைந்த வேத சிவாகமப் பாடசாலையில் வேதம், சிவாகமம், காவ்யம், அலங்காரம், வியாகரணம் தேவாரம் ஆகிய பாடங்களில் ஆறு ஆண்டுகளுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. தேவாரப் பாடசாலையில் திருமுறை, இசை, இலக்கணம், சமயம் முதலிய பாடங்கள் ஐந்து ஆண்டுகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. உணவு, உறையுள், உடை யாவும் அன்பளிக்கப் படுகின்றன. சமயப் பற்றும் சமய ஒழுக்கமும் உடைய மாணவர்களே இக்கல்வி நிலையங்களில் சேர்ந்து பயிலு தற்கு உரியர்.

**வலிவலம் தேசிகர் பல்தொழிற் கல்லூரி, நாகப்பட்டினம்**

வலிவலம் மனைத்துணைநாத தேசிகரின் கொடையாலும் மாநில, இந்திய அரசாங்கங்களின் பெரும் பொருளுதவியாலும் இக் கல்லூரி 1958-இல் ஏற்பட்டது. 1958-இல் தஞ்சையிலும் 1959 முதல் நாகப்பட்டினத்திலும் இக்கல்லூரி நடைபெற்று வருகிறது. இதற்குரிய புதிய கட்டிடங்கள் கட்டப்படுவதால் 1962-63 முதல் இக்கல்லூரி நாகூர்க்கு அருகேயுள்ள பால்பண்ணைச் சேரியில் நடைபெறும்.

கட்டிடப் பொறியியல், இயந்திரப் பொறியியல், மின்சாரப் பொறியியல்-மூன்று துறையிலும் சான்றிதழ் (Diploma) பெறுவதற்கான மூன்றுண்டுப் படிப்பு இங்கு கற்பிக்கப்படுகிறது.

**பல் தொழிற் கல்லூரி, சீர்காழி**

இது 1960 முதல் நடைபெற்றுவருகிறது. மேலே குறிப்பிடப் படிப்புக்கள் இங்கும் உண்டு.

**(பெண்களுக்கான) கிராமியக் கல்லூரி, தஞ்சை ***

இது, அரசியலாரால், மாதர் நலத் துறையினர் வாயிலாக 1950 முதல் நடத்தப்பட்டது. வரலாறு, பூகோளம், பொருளாதாரம், கூட்டுறவு, உணவு, சத்துணவு, குழந்தைகளைப் பேணல், உணவு-உடை முதலியவை பற்றிய பாடல்கள் தமிழில் ஈராண்டுகளுக்குக் கற்பிக்கப்பட்டன. கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றில் பணியாற்றுவோரும் வழக்கறிஞர், மருத்துவர், விவசாயத்துறை அறிஞர் ஆகியோரும் இங்குவந்து சொற்பொழிவாற்றினர்.

---

* இக்கல்லூரி சில ஆண்டுகள் மட்டுமே நடைபெற்றது.

**வேளாண்மைப் பள்ளி, சாக்கோட்டை**

சாக்கோட்டையிலுள்ள அரசாங்க விதைப் பண்ணையில் இப்பள்ளி 1961–இல் தமிழ்நாடு அரசாங்கத்தாரால் தொடங்கப்பெற்றிருக்கிறது. மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**மாவட்டக்கழகத் தொழிற்பள்ளி, தஞ்சாவூர்**
(District Board Industrial School)

இது 1935–இல் தஞ்சை மாவட்டக் கழகத்தாரால் தொடங்கப் பெற்றது. தச்சுவேலை, கையால் காகிதம் செய்தல், புத்தகங்களைப் பைண்டு செய்வது, தறிநெசவு, பித்தளை - இரும்பு முதலியவற்றின் வார்ப்பு வேலையில் பயிற்சியளித்தல், மோட்டார் கார் பழுதுபார்த்தல் போன்ற துறைகளில் இப்பள்ளி மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இவ்வேலைகளுக்கேற்ற தொழிற்கூடங்கள் இப்பள்ளியில் உள்ளன.

**தூய சவேவரியார் தொழிற்பள்ளி, பூக்காரத்தெரு, தஞ்சாவூர்**
(St. Xavier's Industrial School)

இங்கு தச்சுக் கல்வியும் நெசவு வேலையும் கற்பிக்கப்படுகின்றன. பள்ளிக்கூடங்களுக்கும் அலுவலகங்களுக்கும் வேண்டிய மரச்சாமான்களும் கைத்தறித்துணிகளும் விற்கப்படுகின்றன.

**கை கால்களை இழந்து வருந்துவோருக்கான தொழிற் பள்ளி, தஞ்சாவூர்**

இது, மாநில அரசாங்கத்தாரின் உதவியுடன் நடைபெற்று வருகிறது.

**சாமியப்பா கூட்டுறவு பயிற்சிக் கழகம் லிமிடெட் தஞ்சாவூர்**
(Samiappa Cooperative Institute)

இது ஹுட் இன்ஸ்ட்டியூட் என்ற பெயரில் 1926-இல் ஏற்பட்டு, 7-5–1927-இல் கூட்டுறவு நிறுவனமாகப் பதிவு

செய்யப்பட்டது. கூட்டுறவு இயக்கத்துக்குப் பெரும் பணியாற்றிய என். ஆர். சாமியப்ப முதலியார் பெயர் இந்நிறுவனத்துக்கு இப்போது வழங்கி வருகிறது.

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் கூட்டுறவு நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள் பயிற்சி பெறுவதற்காக இக்கழகம் ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத்துறையின் இளம் சுற்றுலா அலுவலர்களைப் (Junior Inspectors) பயிற்றுவிக்கும் பொறுப்பையும் இக்கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தஞ்சைமாவட்டத்துக் கூட்டுறவு துணைப்பதிவாளர் இக்கல்லூரியின் முதல்வராக இருந்து வருகிறார். மாநிலத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளும் தமிழ் நாடு கூட்டுறவு நிறுவனமும் இக்கழகத்திற்குப் பொருளுதவி செய்கின்றனர். அவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சிக்குழு இக்கல்வி நிலையத்தை நடத்தி வருகிறது. மாணவர் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம் மாதம் 40 ரூபாய் உபகாரச்சம்பளம் வழங்கி வருகிறது.

சூப்பர்வைசர் வேலைக்கு ஒன்பது மாதப்படிப்பும் கூட்டுறவு நிலையத்தில் இரண்டு மாதப் பயிற்சியுமாக 11 மாதம் கல்வி கற்பிக்கப்படுகிறது. கூட்டுறவு, கணக்குத்தணிக்கை, கணக்கு வைத்திருக்கும் முறை, வங்கி முறை, கிராமியப் பொருளாதாரம் ஆகியன சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. தேர்வுகள் தமிழ்நாடு கூட்டுறவு நிலையத்தாரால் நடத்தப்படுகின்றன. இந் நிலையம் கல்லூரியாக உயர்த்தப் பெறவேண்டுமென்று பொது மக்கள் விரும்புகின்றனர்.

இக்கழகத்தில் 1960–வரை 4,500 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இக்கழகத்துக்குச் சொந்தக் கட்டிடமும் உணவு விடுதியும் கூட்டுறவுத் துறைபற்றி 3,000 நூல்களுள்ள நூல் நிலையமும் உள்ளன.

## அச்சுக்கலை

தமிழ் நூல் வெளியீட்டுக்கு அடிப்படையான தமிழ் அச்செழுத்து முதலில் தோன்றியது இம்மாவட்டத்துத் தரங்கம்பாடியிலேயே யாகும்.

இன்றும் சிறந்த அச்சகங்கள் இம்மாவட்டத்தி லுள்ளன. சதர்ன் ரயில்வே மாகசின், இந்தியன் ரயில்வே வர்க்ஷாப்ஸ் மாகசின், ஜர்னல் ஆவ் இண்டஸ்ட்ரியல் எஞ்சியனிரிங், இந்தியன் ரயில்வே எஞ்சினியர், சர்ஜிகல் அண்டு மெடிகல் நியூஸ் ஆகியவையும் பம்பாயி லிருந்து வெளிவரும் புகழ்பெற்ற தொழில் நுணுக்க இதழ்கள் சிலவும் இம்மாவட்டத்தில் அச்சாகின்றன.

'காவேரி' என்னும் புகழ்பெற்ற திங்களிருமுறை வெளியீடும், தமிழ்ப்பொழில், ஞானசம்பந்தன், குமரகுரு பரன், காமகோடி என்ற இலக்கிய சமய-இதழ்களும் செய்திக் கதிர், புதுமைக்குரல், சர்வோதயம் முதலிய செய்தி, அரசியல், இலக்கிய இதழ்களும் சட்டங்களை விளக்கும் 'வக்கீல்' என்னும் திங்கள் இதழும் சௌராஷ்டிரமணி என்னும் சமூக இதழும், தஞ்சையிலிருந்து 1961 முதல் 'மாலை முரசு' என்னும் ஒரு நாளிதழும் இம்மாவட்டத்தினின்றும் வெளிவருகின்றன.

நூல் வெளியீட்டு நிலையங்கள் கும்பகோணத்திலும் மன்னார்குடியிலும் நாகப்பட்டினத்திலும் ஓரிரண்டு உள்ளன. திருவாவடுதுறை, தருமபுரம் ஆதீனங்கள் பல சிறந்த நூல்களை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றன.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் சிலர் ஒன்று சேர்ந்து, "எழுத்தாளர் பதிப்பகம்" என்ற வெளியீட்டு நிலையத்தை 1961-இல் தொடங்கியுள்ளனர்.

## நூல் நிலையங்கள்

இம்மாவட்டத்தில் எண்ணற்ற நூல்நிலையங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் தனிப்பட்டவர்களைச் சேர்ந்தன. நூல்கள் யாருக்கும் பயன்படா வண்ணம் பூட்டிக் கிடப்பதும் அவற்றுக்கு உரிமையுடையவர்கள் வெளியூர்களில் இருப்பதும் பல கிராமங்களின் நிலை யாகும்.

பொது நூலக இயக்கம் இம்மாவட்டத்தில் 1958க் குப் பிறகு பெரிதும் பரவியிருக்கிறது. தஞ்சை மாவட்டத் தலைமை நூலகம் தஞ்சைமாநகரில் தெற்கு ராஜ வீதியில் இருக்கிறது; இதற்குரிய கட்டிடங்களும் கட்டப்பட்டுள் ளன. தமிழ்நாட்டில் சிறந்துவிளங்கும் மாவட்ட நூல் நிலை யங்களுள் இதுவும் ஒன்று. இந்த நூலகம் 1952–இல் தொடங்கப்பெற்றது. 25 கிளை நூல் நிலையங்களும் 51 நூல் வழங்கு நிலையங்களும் தஞ்சை மாவட்டத்தில் நடத் தப்படுகின்றன.

தலைமை நூலகத்தில் 8,000 நூல்கள் உள்ளன; பணம் கட்டிப் படிக்கும் வாசகர் 682 பேர் இருக்கின்ற னர். வீட்டுவரி செஸ் வாயிலாக 63,000ரூபாயும் அரசாங்க மான்யம் 63,000ம் ஆக ஆண்டுதோறும் இந்நூலகத்துக்கு 1,26,000 ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

புகழ்பெற்ற பல நூலகங்கள் இம்மாவட்டத்தி லுள்ளன. அவையாவன :—

(1) சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்.

(2) கும்பகோணம் கல்லூரி நூல்நிலையம், கும்ப கோணம்.

(3) கோபால் ராவ் பொது நூல்நிலையம், கும்ப கோணம்.

(4) ரகுநாத ராவ் பொது நூல்நிலையம், கும்ப கோணம்.

(5) சாது சேஷய்யா பொது நூல்நிலையம், கும்ப கோணம்.

(6) திருவாவடுதுறை ஆதீன நூல்நிலையம், திருவா வடுதுறை.

(7) கோட்டூர் இரங்கசாமி முதலியார் இலவச நூல் நிலையம், மன்னார்குடி.

இம்மாவட்டத்தின் பெரியகோயில்கள் பலவற்றிலும் நூல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**கோட்டூர் இரங்கசாமி முதலியார் இலவச நூல்நிலையம் மன்னார்குடி**

இது, தெப்பக்குளத்துத் தென்கிழக்கு மூலை அருகே இருக்கிறது. ஆங்கிலம் தமிழ் வடமொழி ஆகியவற்றில் சிலஆயிரம் நூல்கள் உள்ளன. தமிழ்நாட்டின் சிறந்த நூலகங்களில் இது ஒன்று. இரங்கசாமி முதலியார் சில நூறு வேலி நிலங்களை அறச்செயலுக்கு எழுதி வைத்தார். இவர் பெயரால் மாணவர்க்கு இலவச உணவுவிடுதி முதலியன நடைபெறுகின்றன. இந்த அறச் செயல் களுள் ஒன்றே இந்நூலகம். இதன் ஆதரவில் சிலசமயம் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

## 13. சரசுவதி மகால்

தமிழ் நாட்டின் அறிவுக் கோயிலாக விளங்கும் பெரு நூலகமே தஞ்சை சரசுவதி மகால் எனப்படுவது. இது காணவும் பயன்படுத்தவும் வேண்டிய ஒரு பெரிய நிலை யம் ஆகும்.

இந்நூலகம் பத்தாம் நூற்றாண்டிலேயே ஓரளவு இருந்து வந்தது; பிற்காலத்தில் தஞ்சையை ஆண்ட நாயக்கர்கள் தெலுங்கு வடமொழி நூல்களுக்கும் இங்கே இடம் தந்தனர்; அவர்களை அடுத்து ஆட்சிக்கு

வந்த மகாராட்டிர அரசர் காலத்தில் புதிய தமிழ் இலக்கியங்களும் மராத்தி மொழி நூல்களும் சேகரித்து வைக்கப்பெற்றன. இவ்வாறு பல தலைமுறைகளில் பல்கிப் பெருகிய இந்நூலகம், மகாராட்டிர மன்னரான சரபோசி காலத்தில் புத்துருவம் பெற்றது; அரசுரிமையை இழந்த அம்மன்னர் அறிவுத் துறையிலேயே ஆர்வம் காட்டினார்; பல மொழிகளைப் பயின்றார்; புது நூல்களைச் சில சமயம் பொன்னும் மணியும் கொடுத்து வாங்கினார்.

12 வயது முதல் 24 வயது வரை ஸ்குவார்சிடமும் ஸ்குவார்ட்சு தேர்ந்தெடுத்த அறிஞர்களிடமும் சரபோசி பயின்றார். ஒரு நூல் தவறாது அனைத்தையும் அவர் படித்தார். ஒவ்வொரு நூலையும் படித்த தேதியைக் குறிப்பிட்டுத் தம் கையெழுத்தைச் சரபோசி மன்னர் போட்டிருப்பதைச் சரசுவதி மகாலிலுள்ள நூல்களில் காணலாம். சரபோசி, மகாராட்டிர மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலமையும் தமிழ் தெலுங்கு உருது பாரசீகம் போன்ற மொழிகளில் ஓரளவு பயிற்சியும் ஆங்கிலம் பிரெஞ்சு, ஜெர்மன், டேனிஷ், டச்சு, கிரேக்கம், இலத்தீன் ஆகியவற்றில் நல்ல அறிவும் பெற்றிருந்தார்.

ஐரோப்பிய அறிஞர், அரசியல் அலுவலர் ஆகியோரின் நட்பு அவருக்கு இருந்தமையால் அவர்கள் வாயிலாக ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம், இத்தாலியம், ஜெர்மன், டேனிஷ் போன்ற ஐரோப்பிய மொழிகளில் கிடைத்த நூல்களையெல்லாம் சேகரித்தார். இதற்கென்றே 1820 முதல் 1832 வரை 12 ஆண்டுகளைச் செலவிட்டார். லண்டன், பாரிஸ், மியூனிக், லீப்சிக், ஆம்ஸ்டர்டாம், கோப்பன்ஹேகன் போன்ற ஐரோப்பிய நகரங்களிலிருந்து பல துறை நூல்களை வரவழைத்தார். இவ்வாறே ஆசிய நாடுகளின் மொழிகள் பலவற்றிலுள்ள நூல்களையும் வாங்கினார். அரிய நூல்களின் முதற் பதிப்புக்களும்

இங்கிலாந்தில் வெளிவந்த பல சஞ்சிகைகளின் தொகுப்புக்களும் இங்கு உள்ளன.

தெலுங்குமொழி 14-ஆம் நூற்றுண்டு முதல் 17-ஆம் நூற்றுண்டு வரை தஞ்சையில் பெருவளர்ச்சியடைந்தது என்பது இங்குள்ள நூல்களிலிருந்தும் சுவடிகளிலிருந்தும் உறுதிப்படுகிறது. ஆந்திரப் பல்கலைக் கழகத்தினர் தக்கவர் பலரை இங்கே அனுப்பிப் பத்தாண்டுகள் அவர்கள் இங்கே இருக்கச் செய்து இவற்றைப் படியெடுத்திருக்கின்றனர்.

பலமொழிகளின் இலக்கண நூல்களும் அகராதிகளும் உள்ளன.

பல மொழியாளரும் பாராட்டத்தக்க ஒரு சிறந்த கலைக் கோயிலாக இச்சரசுவதி மகால் விளங்குகிறது. இதன் பெரு வளர்ச்சிக்கும் இன்றைய நிலைக்கும் காரணரான சரபோசி அறிவுத் தெய்வத்தை வணங்கிய நிலையில் கூப்பிய கரங்களுடனேயே தம் சிலை அமைய வேண்டுமென்று விரும்பினாராம். அவ்வாறே அவர் சிலை இங்கே காணப்படுகிறது.

இனி, இங்குள்ள நூல்களின் பொருள்கள் இன்ன இன்ன என்று வகைப்படுத்தியும் தொகைப்படுத்தியும் பார்ப்போம். இலக்கியம், இசை, தத்துவம்,மருத்துவம் ஆகியவை பற்றி எண்ணற்ற நூல்கள் காணப்படுகின்றன. இலக்கியம், இசை, பரத நாட்டியம் போன்ற துறைகளில் இங்குள்ள நூல்கள் மிக அரிய கலைச்செல்வங்களாகும். விஞ்ஞானத் துறையில் பிற இடங்களில் காணமுடியாத பழமையான நூல்கள் இங்கே உள்ளன. இங்கிருந்து எண்ணற்ற நூல்கள் மேலைநாடுகளுக்குத் திருடிச் செல்லப்பட்டன என்பதையும் குறிப்பிடாதிருப்பதற்கில்லை.

புராண இதிகாச நூல்களைச் சித்திரப் படங்களுடன் விளக்கும் சீரிய நூல்கள் சில இங்குள்ளன. இவற்றைக் காணும்போது வியப்படையாமலிருக்க இயலாது. வேதம், மந்திரம், சாத்திரம் ஆகியவை பற்றி வட மொழியில் பல்லாயிரம் நூல்களும் சுவடிகளும் உள்ளன.

மருத்துவ ஆராய்ச்சியில் சரபோசிக்கு மிகுதியான ஈடுபாடு இருந்து வந்தது. நோய்களைக் கண்டறியும் முறையும் அவற்றைக் குணப்படுத்தும் முறையும் தமிழ்ப் பாடல்கள் வாயிலாக விளக்கி எழுதப்பட்டிருக்கின்றன. இவை 1950–க்குப் பிறகு, தமிழ்நாடு அரசாங்கத்தின் முயற்சியால் சில தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

பிற நாடுகளிலும் அவற்றின் பண்பாடுகளிலும் சரபோசி அக்கறை காட்டி வந்தார். அவை பற்றி அறிய விரும்புபவர்க்குப் பயன்படும் பல நூல்கள் சரசுவதி மகாலில் உள்ளன. பல நாடுகளைப்பற்றிய பாடல்கள் அடங்கிய ‘தேவேந்திரக் குறவஞ்சி’ என்னும் கவிதை நூலைச் சரபோசி இயற்றியிருக்கிறார்.

இரசாயன சாத்திரத்தின் தந்தை என்று ஐரோப்பியர் மதிக்கும் லவாய்சியர் இயற்றிய இரசாயன நூலும் உயிர்த் தத்துவத்தைப்பற்றிய ஆராய்ச்சியாளருள் முதல்வரான பபன் இயற்றிய நூல்களும் தாவர சாத்திர நூல்களும் விஞ்ஞானத்தின் பிற துறைகள் பற்றிய நூல்களும் சரசுவதி மகாலில் உள்ளன.

இங்குள்ள ஏட்டுச் சுவடிகளின் எண்ணிக்கை 49,000 ஆகும். தமிழ் எழுத்துக்களில் எழுதப்பெற்ற தெலுங்கு நூல்களும் தெலுங்குநாகரி எழுத்துக்களில் எழுதப்பெற்ற தமிழ் நூல்களும் இங்கே காணப்படுகின்றன. தஞ்சையில் மகாராட்டிரர் ஆட்சி நடத்தியது பற்றிய செய்திகளும் கணக்குகளும் மோடி (என்னும் ஒருவகை மராத்தி

எழுத்தில் எழுதப் பெற்றிருக்கின்றன. தஞ்சைத் தொடர்புடைய தென் இந்திய வரலாறு பற்றி ஏராள மான குறிப்புக்கள் இந்நிலையத்தில் பல மொழிகளில் உள்ளன.

நூல்களும் சுவடிகளும் ஒருபுறமிருக்க, படங்களும் இந்த நூலகத்தின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன. எழில் மிக்கக் காட்சிகள், வண்ணப்படங்கள், உயிரினங் களின் சித்திரங்கள், உடற்கூற்றுப் படங்கள், செடி கொடி பூ பழம் மரங்கள் இவற்றின் படங்கள்,. உள்ளத் தைக் கிளறும் பிற படங்கள் முதலியவற்றைப் பல நாடு களிலிருந்து சரபோசி வரவழைத்திருக்கிறார்.

இந்நிலையம் இப்போது தமிழ்நாடு அரசாங்கத்தின் மேற்பார்வையிலும் பொருளுதவியாலும் ஒரு குழுவின ரால் நடத்தப்பட்டு வருகிறது. ஆராய்ச்சி நூல்களும், ஓர் இதழும் (Journal of the Saraswathi Mahal Library) இங் கிருந்து வெளியிடப்படுகின்றன.

## 14. கலைகளின் தாயகம்

தஞ்சை மாவட்டம் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் மட்டும் அன்று; கலைக்களஞ்சியமாகவும் இருக்கிறது.

இசைப் புரவலர்கள், அவர்களால் ஆதரிக்கப்பெற்ற இசைப்புலவர்கள், இசைவிழாக்கள், இசை அரங்கங் களுக்கென்றே கட்டப்பெற்ற மாளிகைகள், இசைக் கருவிகளைச் செய்யும் தொழில்கள், இசைப் பள்ளிகள் இன்னபிற சிறப்புக்கள் இம்மாவட்டத்துக்கு இருக் கின்றன.

நாடகம், நடனம், சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளை யும் பலவகையான மாலைகள், முத்துப் பல்லக்குகள், நெட்டிப் பொருள்கள், கூழாலான உருட்டுப் பொம்மை மைகள், தசாவதார வேலைப்பாடுள்ள தாம்பாளங்கள்,

நடராச விக்கிரகங்கள் ஆகியவைபோன்று கண்ணையும் கருத்தையும் கவரவல்ல கலைப்பொருள்களை உருவாக்கும் கலைகளையும் பல தலைமுறைகளாக வளர்த்துவரும் தனிச் சிறப்புத் தஞ்சை மாவட்டத்துக்கு உரியது.

### புரவலர்கள்

சோழப் பேரரசர்கள் இசைக்கலையையும் இதனோடு இணைந்த பிற கலைகளையும் போற்றி வளர்த்து வந்தனர். தமிழ்நாட்டில் கலைஞர்களைக் காத்த முதற் காவலன் கரிகாற் சோழன் ஆவான். ஒரு நாட்டின்மீது படையெடுத்ததும் அந்நாட்டிலுள்ள இசைப் புலவர்களைச் சிறைப் பிடித்துத் தன் நாட்டுக்குக்கொண்டுவருவது அவனுடைய வழக்கமாக இருந்ததாம்.

நாட்டியத்தில் வல்ல மாதவியும் வீணை வாசிப்பதில் வியத்தகு புலமை பெற்றிருந்த மாதவியும் கோவலனும் வாழ்ந்ததும் ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் நம் உள்ளத்தை ஈர்க்கும் கானல்வரிப் பாடல் பாடியதும் இம்மாவட்டத்துக் காவிரிப்பூம்பட்டினத்தின் கண்ணுள்ள கடற்கரையிலேயே ஆகும். இவற்றிலிருந்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இப்பகுதியில் ஆடலும் பாடலும் அழகுக் கலைகளாக அமைந்து உயர்நிலை பெற்றிருந்தது உறுதிப்படுகிறது. அந்நாளில் ஆடல் மகளிர்க்குப் பரிசம் வகுப்பது அரசியல் முறையாக இருந்தது. கூத்தர், குழலர், யாழர், பாணர் போன்ற பல்கலைவாணர் பலரும் சோழர்ப் பெருநகரான பூம்புகாரில் வாழ்ந்து வந்தனர்.

இராசராசச் சோழன் இசைப் புலவர்களைத் தன் நாட்டுக்கு வரவழைத்து அவர்களுக்கு மனை, மானியம், உம்பளம், சப்பளம் கொடுத்து ஆதரித்தான். ஆடுவோர், பாடுவோர், உடுக்கை வாசிப்பவர், கெட்டி மத்தளம்

வாசிப்பவர் ஆகியோருக்கு ஆண்டுதோறும் நெல் வழங்கினான். அவன், பல ஊர்களிலிருந்து நடன கன்னிகைகளைக் கொண்டு வந்து கோயில் ஊழியத்துக்கு நியமித்தான். தஞ்சைப் பெரிய கோயிலில் மட்டும் இசைவாணரும் நடனமங்கையரும் நானூறு பேர் இருந்தனர்; தேவார ஓதுவார் 48 பேர் அமர்த்தப்பட்டிருந்தனர். அக்காலத்தில் குழல், வீணை, யாழ் ஆகிய இசைக்கருவிகளை இயக்குபவர் பலரும் இருந்துவந்தனர்.

நாயக்க மன்னர்களில் ஒருவனை இரகுநாத நாயக்கன் இசைப்புலமை மிக்கவனாக இருந்தான். இசைவாணர் சிலருக்கு இவன் வீணை கற்றுக் கொடுத்தான் என்றும் தன் பெயரால் புதிய மேளம் ஒன்றை அமைத்தான் என்றும் கூறுவர். இவன் காலத்தில் கலைமகள் நடமாடும் இல்லமாகத் தஞ்சை நகரம் இருந்ததென்றும் இவனும் கோவிந்த திட்சிதரும் சேர்ந்தே "சங்கீத சுதா" என்று நூலை யாத்தனர் என்றும் கூறப்படுகிறது.

அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் (1572-1614) கோவிந்த தீட்சிதர் மகன் வேங்கடமகி என்பவர் ஆயப்பாலையில் வரும் பன்னிரு சுரங்களையும் அவைகள் சுருதி மாறும்போது உண்டாகும் 72 மேளகர்த்தாவையும் அரசன் அச்சுதப்பன் ஆதரவில் அமைத்தார்.

திருநெல்வேலியில் செந்தில் வேல அண்ணாவி பரதத்திலும் பாட்டிலும் வல்லவனாக இருப்பதைக் கேள்விப்பட்டுமராத்திய மன்னரான துளஜாஜி மஹாராஜா (1763-1787) பல்லக்கனுப்பி அவனையும் அவன் மகன் மகாதேவனையும் தஞ்சைக்குத் தருவித்தார்.

இம்மன்னன் காலத்திற்குப் பின்னர் தியாகராசர், முத்துசாமி தீட்சிதர், சாமா சாஸ்திரி என்ற இசை மும்மூர்த்திகள் வாழ்ந்தனர். மராத்திய மன்னர்கள் இவர்களைப் பெரிதும் ஆதரித்தனர்; ஏனைய இசைப் புலவர்

களுக்கும் வளமான பகுதிகளில் 5 வேலி முதல் 10 வேலி வரை நிலங்கள் வழங்கினர்.

மராத்திய மன்னர்களின் புகழ் இன்றும் ஒளி வீசும் படி செய்த சரபோசி மன்னர் இசைத்துறைக்கும் ஏனைய கலைகளுக்கும் செய்திருக்கும் தொண்டு அளவு கடந்தது; கங்குகரை இல்லாதது; ஒப்பும் உயர்வும் அற்றது. சரபோசியின் அவைக் களத்துப் புலவராக இருந்து புகழ் பெற்றுப் பின்னர் குவாலியர், ஐதராபாத் போன்ற அரசர்களின் அரண்மனைகளில் இடம் பெற்றவர் மிகப்பலர் ஆவர். இசைக்கலைஞருக்குப் பரிசில் வழங்கியும் இசைப் போட்டிகள் நடத்தியும் சரபோசி இசைக் கலைக்கு ஏற்றம் தந்தார். சாகித்திய கர்த்தாக்களான வேங்கடசுப்பய்யர், ஆனை அய்யா சகோதரர்கள், வெய் தாள குருமூர்த்தி, வீணை அண்ணுச்சி ஐயர், வீணை சுப்புக் குட்டி ஐயர், வீணை காளாத்தி ஐயர், தலைஞாயிறு கிருஷ் ணய்யர், பல்லவி சோமு, பல்லவி கோபால ஐயர், தோடி சீத்தாராம ஐயர், சாமா சாஸ்திரி, சுப்பராய சாஸ்திரி, வையச்சேரி துரைசாமி ஐயர், சவுக்கம் சீனு ஐயங்கார், இரட்டைப் பல்லவி ஜெயராம ஐயர் போன்றவர்கள் சரபோசியின் ஆதரவு பெற்ற கலைஞர்களில் சிலர் ஆவர். இசைப்புலமை மிக்க சுவாதி திருநாள் மன்னர், சரபோசி யின் பாராட்டுப் பெற்றவர்களைத் தம் அவைக்களத்துப் புலவராக இருக்கும்படி கேட்டு அவர்களைத் திருவனந்த புரத்துக்கு அழைத்துக் கொண்டார்.

வீணை பெருமாள் ஐயங்கார் 10 நாட்கள் பைரவி ரக்தி ராகத்தை ஆலாபனை செய்ததைப்பாராட்டி அவ ருக்குச் சரபோசி, மகிபாலை என்ற கிராமத்தை முற்றூட்டு மானியமாக வழங்கினராம். மராத்தி, தெலுங்கு மொழி களில் பாடுவதற்கும் நடனம் செய்வதற்கும் ஏற்ற பல நூறு பாடல்களைச் சரபோசி இயற்றியிருக்கிறார்.

எனவே, சரபோசி புரவலர் மட்டும் அல்லர்; புலவரும் ஆவார்.

இசைப்புலவர் தஞ்சைப் பொன்னையா விருப்பப்படி சரபோசி மன்னர் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு எதிரில் தண்ணீர்ப்பந்தரும் நர்த்தன விநாயகர் ஆலயமும் அமைத்தார். இந்த இடம், "நட்டுவனூர் சாவடி" என்று பெயர்பெற்று இன்றும் இப்பெயராலேயே நிலவி வருகிறது.

நந்தனர் சரித்திரம், காரைக்கால் அம்மையார் சரித்திரம் ஆகியவற்றை இசையோடு ஆக்கிய கோபால கிருஷ்ணபாரதி (*1810-1896*) இம்மாவட்டத்து முடி கொண்டான் ஊரினர். கோபால கிருஷ்ண பாரதியாரை யும் ஏனைய இசை அறிஞர்களையும் (மாயூரம் வேத நாயகம் பிள்ளை குடும்பத்தவரான) தரங்கம்பாடி சுந்தர நாயகர் என்ற வள்ளல் ஆதரித்து வந்தார்.

இவ்வாறு புரவலர் பலர் இருந்தமையால், தெலுங்கர் மலையாளத்தார் கன்னடர் ஆகியோரும் காவிரிக்கரையில் தங்கிப் பயிற்சிபெற்றுத் தங்கள் மொழிகளில் சாகித்தி யம் செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. * ஆனல், இதன் விளைவாக, தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் தழைத்த தமிழிசை நாளடைவில் தளர்ச்சியடைந்தது.

இக்காலத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆதீனங் களின் தலைவர்கள், கலைஞர்களை ஆதீனப்புலவர்களாக நியமித்தும் பிற வகைகளில் ஓரளவு ஆதரித்தும் இசைத்தமிழ் வளர்க்கும் வள்ளல்களாகவும் விளங்கு கின்றனர்.

---

* தெலுங்கு - தியாகராசர், சாமாசாஸ்திரி, பட்டினம் சுப்பிரமணிய ஐயர். சம்ஸ்கிருதம் - முத்துசாமி தீட்சிதர்.

## இசைப் புலவர்கள்

பாடல்பெற்ற கோயில்களாலும் பாடிவரும் புலவர்களாலும் தஞ்சை மாவட்டத்து ஊர்கள் புகழ்பெற்றுள்ளன.

குறிப்பிட்ட சிற்றூர்கள் சிலவற்றில் இசைப் புலவர்கள் தோன்றிவருவதும் குறிப்பிடத் தக்கது. கும்பகோணம் நகர எல்லைக்குட்பட்ட கொட்டையூரில் நெடுங்காலமாக இசைப்புலவர் பலர் இருந்திருக்கின்றனர். சரபோசி காலத்தவரும் தஞ்சைப்பெருவுடையார் உலாப் பாடியவருமான சிவக்கொழுந்து தேசிகரும் (அவர் பரம்பரையில் வந்தவரும் திருப்பனந்தாள் ஆதீனத்துத் தலைவராக விளங்கியவரும் ஆகிய) சாமிநாத தேசிகரும் கொட்டையூர் ஈந்த இசையறிஞருள் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

சுவாமிமலை அருகேயுள்ள உமையாள்புரமும் இசைப் புலவர் பலரை ஈன்றெடுத்திருக்கிறது.

முத்துசாமி தீட்சிதர், சாமா சாஸ்திரி, தியாகராாசர் மூவரும் பிறந்த பெருமை திருவாரூரைச் சேரும்.

பிற மாவட்டத்தினராக இருந்தும் கும்பகோணம் பகுதியில் வாழ்ந்து இசைத்துறையில் தேர்ச்சிபெற்றவர்கள் புகழேணியின் உச்சிக்கு வந்துள்ள அரியக்குடி இராமானுச ஐயங்கார் முதல் புகழேணியில் முதற்படி எடுத்து வைத்துள்ள இளம் பாடகர் ஈருகப் பல நூறு பேர் ஆவார்கள். இவ்வாறே நாகசுரம் வாசிப்பதில் சிறந்தவர்கள் தோன்றியுள்ள ஊர்களும் உண்டு.

இனி, இம்மாவட்டத்தவரில் இசைத்துறையில் புகழ்பெற்றுள்ளவர்கள்—குறிப்பாகக் கடந்த சில தலைமுறையினர் – சிலரைக் குறிப்பிடுவோம்.

**நாகசுரம்**

தமிழ்நாட்டு இசைக்கருவியென்ற சிறப்புக்குரியதும் மங்கல நிகழ்ச்சிகளனைத்திலும் முதலிடம் பெறுவதும் ஆகிய நாகசுரத்தை நன்கு வாசிப்பவர் அனைவருமே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொதுப் படையாகச் சொல்லலாம். பழைய சம்பிரதாயப்படி பாரிநாயனம் ஊதுவதில் வல்லுநராக விளங்கிய திருவாரூர் நடேசப்பிள்ளை, அவர் தம்பி கிருஷ்ணப்பிள்ளை, அகில இந்திய நாகசுரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம் பிள்ளை, அவருடைய குருவும் தாய்மாமனுமான திருமகருகல் நடேசப்பிள்ளை ஆகியோர் நாடறிந்த நாகசுரப் புலவராவர். ஏனையோர் சிலர் பெயர்கள் வருமாறு :

குப்பகோணம் சிவக்கொழுந்து
குளிக்கரை பிச்சப்பா
வேதாரணியம் வேதமூர்த்தி
கூறைநாடு நடேசப் பிள்ளை
மன்னார்குடி சின்னப்பக்கிரியா பிள்ளை
செம்பொன்னார்கோயில் இராமசாமிப் பிள்ளை
செம்பொன்னார் கோயில் கோவிந்தசாமிப் பிள்ளை
திருவிடைமருதூர் வீருசாமிப் பிள்ளை
திருவெண்காடு சுப்பிரமணியப் பிள்ளை
திருவீழிமழலை சகோதரர்கள்
காக்காயி நடராச சுந்தரம்
நாகப்பட்டினம் வைத்தியநாதன்
நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

**பாண்டு**

மங்கல நிகழ்ச்சிகளில் நாகசுரத்தை அடுத்து ஒலிப்பது பாண்டு என்னும் வாத்தியம் ஆகும். தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றிருக்கும் தஞ்சாவூர் பாண்டு என்னும்

கலை பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டது. இங்கிலாந்தின் இசைக் கருவிகளுடன் இந்தியாவின் இன்னிசைக் கருவிகளை இசைப்பொருத்தத்துடன் இணைத்து இந்தக் குழு இசை (ஆர்கஸ்டரா) உருவாக்கப் பட்டிருக்கிறது. மேலைநாட்டு இசைக்கருவிகளில் இயக்குவதற்கேற்றவாறு, நம் நாட்டு மெட்டுக்களையும் இராகங்களையும் அமைத்துத் தஞ்சாவூர் பாண்டுக்குழுவினரைக் கொண்டு வாசிக்கப்பட்டது. மேலைநாட்டு இசையின் விறுவிறுப்பும் நம் நாட்டு இசையின் குழைவும் சேர்ந்ததே "தஞ்சாவூர் பாண்டு" என்னும் புதிய கலையாகும். இவ்வகை இசையைப் பரப்பும் குழுவினர் 1776-இல் சென்னைக் கவர்னர் பிகாட் துரையின் பாராட்டைப் பெற்றனர். இக்காலத்தில் தஞ்சை பாண்டுக் குழுக்களில் புகழ்பெற்றவை ஆவன: தஞ்சாவூர் டி. ஜி. ராமதாஸ், தஞ்சாவூர் டி. என். பாலகிருஷ்ணன், டி. ஆர். பாலகிருஷ்ணன், டி. பி. ராமதாஸ், புருடோத்தம ரெட்டியார்.

**சாகித்திய கர்த்தாக்கள்**

நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பிய (சீர்காழி) ஞானசம்பந்தர் முதல் நம் காலத்தில் திரைப்பாடல்களைப் பாடி மக்கள் உள்ளங்களை மகிழ்வித்தவர்கள்வரை இசைப்பாடல்களை இயற்றியவர்கள் எத்தனையோ பேர் தஞ்சைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இசைத் தமிழுக்கு உரம் ஊட்டியவர்கள் என்று சொல்லத்தக்கவர்களின் பட்டியலில் முதல் இடம் பெறத் தக்கவர் சீர்காழி முத்துத்தாண்டவர், சிர்காழி அருணாசலக் கவிராயர், ஆனதாண்டவபுரம் கோபலகிருஷ்ண பாரதி, தில்லையாடி மாரிமுத்தா பிள்ளை ஆகியோர் ஆவர்.

சங்கீத மும்மூர்த்திகளான தியாகராசர், சாமா சாஸ்திரி, தீட்சிதர் ஆகியோரின் தொண்டும் புகழும் நாம் அனைவரும் நன்கு அறிந்தவையே. தியாகராசரின்

கீர்த்தனைகளை வெளியிட்ட (டைகர் வரதாச்சாரியாரின் சகோதரர்) சீனிவாசய்யரும் இம்மாவட்டத்தவரே.

சரபேந்திர பூபாலக் குறவஞ்சியையும் வேறு பல இசைநூல்களையும் இயற்றிய கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர், இன்று பலரும் இசையரங்குகளில் பாடிவரும் சர்வசமயக் கீர்த்தனைகளை இயற்றிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை, ஈராயிரம் கீர்த்தனைகளை இயற்றிய பாபநாசம் சிவன், திரைப்படப் பாடல்கள் இயற்றிப் புகழ்பெற்ற பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் ஆகியோர் சாகித்திய கர்த்தாக்களில் நாம் நினைவுகூரத்தக்க சிலராவர்.

### வாய்ப்பாட்டுப் பாடுநர்

இந்நூற்றாண்டில் வாய்ப்பாட்டுப் பாடிப் புகழ் பெற்றுள்ளவர்கள் தஞ்சாவூர் கே. பொன்னையா பிள்ளை, மகாராசபுரம் விசுவநாத ஐயர், கோனேரிராசபுரம் வைத்தியநாத ஐயர், திருவிடைமருதூர் பவானி அம்மாள், செம்மங்குடி சீனிவாச ஐயர், திருவாரூர் டி. வி. நமச்சிவாயம், தஞ்சாவூர் டி. எம். தியாகராசன், சீர்காழி கோவிந்தராசன், மாயூரம் வேணுகோபாலய்யர், மாயூரம் எஸ். ராசம், நாகூர் அனிபா ஆகியோர் ஆவர்.

இராசமன்னார்குடியை அடுத்த செங்கணார்கோயில் ஊரினரும் சிறந்த இசைவாணரும் ஆகியவர்கள் தஞ்சை பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு என்ற நான்கு சகோதரர்கள் (இவர்கள் 1880-இல் பிறந்தவர்கள்) ஆவர். இவர்களில் பொன்னையா இக்காலத்து நாட்டியக் கச்சேரி முறையை உருவாக்கி அலாரிப்பு முதல் தில்லானா வரை பலவகைப்பாடல்களை இயற்றினார்; வாழ்நாள் முழுவதும் நாட்டியக் கலைக்கும் மாணவர்களைத் தோற்றுவிக்கவும் பாடுபட்டார். இவரும் இவர் சகோதரர்களும் திருவிதாங்கூர் அரசரின்

அவைக்களத்துப் புலவராக இருந்தனர். அவ்வரசர் அன்பளித்த "தந்தப் பிடில்" ஒன்று இன்றும் இவர்கள் இல்லத்தில் குடும்பப் பெருமை கூறும் கலைச்செல்வ மாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

ஓதுவார்களில் சிறந்து விளங்குபவர்களும் பண் ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டிவருபவர்களும் ஆகியோரில் பலர் இம்மாவட்டத்தினரே. குறிப்பாக வேதாரணியத் திலும் திருவாரூரிலும் உள்ள ஓதுவார்களையும், இசைத் தொடர்பான நூல்களை எழுதியுள்ள புலவர் க. வெள்ளை வாரணம், கும்பகோணம் சுந்தரேசன் ஆகியோரையும் சுட்டிக் காட்டலாம்.

தேவாரப் புகழ் வளர்த்தும் தமிழ் இசை பரப்பியும் கீர்த்தனைகள் செய்தும் தமிழ் மக்களின் மதிப்புக்கும் நன்றிக்கும் உரியவரான இசையரசு எம். எம். தண்ட பாணிதேசிகர் நன்னிலம் வட்டத்துத் திருச்செங்காட்டங் குடியினர்.

**மிருதங்கம்**

தஞ்சை மாவட்டம் ஈந்த மிருதங்கப் புலவர்களுள் முக்கியமானவர்கள் கும்பகோணம் அழகன் நம்பிப் பிள்ளை, குற்றாலம் குப்புசாமிப் பிள்ளை, அவர் மகன் குற்றாலம் சிவவடிவேல் பிள்ளை, நாராயணசாமி அப்பா, தஞ்சாவூர் கே. பொன்னையா பிள்ளை ஆகியோர் ஆவர்.

**டோலக்**

டோலக் வாசிப்பதில் கும்பகோணம் வேணு செட்டியாரும் (தஞ்சை மாவட்டத்தில் உருவானவரான) பாலக்காட்டு மணியும் புகழ்பெற்றிருக்கின்றனர்.

**பிடில்**

வயலின் என்றும் பிடில் என்றும் கூறப்படும் இந்நாளைய இசைக்கருவியைத் தமிழ் நாட்டுக்குத்

தந்தது தஞ்சை நகரமே ஆகும். தஞ்சை அரண்மனையில் ஆங்கிலேயர் தங்கள் பாண்டுடன் சேர்த்துப் பிடிலை வாசித்தபோது, தமிழ் இசைக்கும் அதைப் பயன்படுத்தலாம் என்பதை தஞ்சை அரண்மனையில் இசைப்புலவராக இருந்த வடிவேலுப்பிள்ளை உணர்ந்தார். அவர் அதைக் கற்றுத் திறமையாகப் பிடில் வாசித்ததன் விளைவாக இக்காலத்தில் தமிழ் நாட்டில் வாய்ப் பாட்டுக்குத் துணைக் கருவியாகவும் தனியே வாசிக்கும் இசைக் கருவியாகவும் பிடில் பயன்படுகிறது.

பிடில் வாசிப்பதில் கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளை, மாயூரம் கோவிந்தராசப் பிள்ளை, திருக்கொடிக் காவல் கிருஷ்ணய்யர், அவருடைய சீடரான வயலின் கோவிந்தசாமிப் பிள்ளை (*1878–1931*) ஆகியோர் சிறந்து விளங்குகின்றனர். ஆபிரகாம் பண்டிதர் மக்களான மரகதவல்லி அம்மாளும் கனகவல்லி அம்மாளும் பிடில் கலையில் தேர்ச்சிபெற்றவர்கள் ஆவர்.

**வீணை**

தமிழ் நாட்டின் தலைசிறந்த வீணைப் புலவர்கள் (டைகர் வரதாச்சாரியின் சகோதரரான) கிருஷ்ணமாச்சாரியும் (தஞ்சை பொன்னையா பிள்ளையின் மகனரான) வீணை சிவானந்தமும் (ஆபிரகாம் பண்டிதரின் மனைவியாரான) வீணை பாக்கியம் அம்மாளும் ஆவர்.

**தவுல்**

தவுல் என்று சொன்னவுடனேயே நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருச்செங்காட்டங்குடி உத்தராபதி பிள்ளை, திருக்கடையூர் சின்னையா பிள்ளை, நாச்சியார் கோயில் ராகவ பிள்ளை, வழுவூர் முத்துவீரு பிள்ளை ஆகியோர் பெயர் நினைவுக்கு வருகிறது. தவுல் வாசிப்பதில் சிறந்து விளங்கிய ஏனையோர் ஸ்ரீ வாஞ்சியம் கோவிந்தப் பிள்ளை, இஞ்கிக்குடி கோவிந்த பிள்ளை,

அம்மாசத்திரம் கன்னிச்சாமி பிள்ளை, அறமும் புறமும் பேசும் அம்மாபேட்டை பக்கிரிசாமி பிள்ளை, நாச்சியார் கோயில் சக்திவேல் பிள்ளை, வழூவூர் முத்துவீரு பிள்ளை, நீடாமங்கலம் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, காரைக்கால் பழநிவேல் பிள்ளை ஆவர்.

**கொன்னக்கோல்**

மன்னுர்குடி வல்லுப் பக்கிரியா பிள்ளையும் அவர் மகன் நடேசப்பிள்ளையும் இக்கருவியை இசைப்பதில் இணையற்றவர்கள் ஆவர்.

**மோர்சிங், கடம்**

மன்னுர்குடி நடேசப் பிள்ளையும் சீத்தாராமய்யரும் மோர்சிங் வாசிப்பதிலும் கடம் வாசிப்பதில் இம் மாவட்டத்தினரான சுந்தரம் ஐயரும் வல்லுநர் ஆவர்.

**புல்லாங்குழல்**

மூங்கில்களில் வண்டுகள் இட்ட துளைவழியே காற்றுப் புகுந்து தேனூறும் குழலிசை பிறந்ததை அறிந்த மனிதன் வேய்ங்குழலை அறுத்துத் துளையிட்டு, விரும்பும் வண்ணம் இசையெழுப்பினுன். புல்லாங்குழல் எனப் படும் இக்கலையில் இளமையிலேயே தலைசிறந்து விளங்கிய டி. ஆர். மகாலிங்கம் இம்மாவட்டத்தினரே ஆவார்.

இக்கலையில் புவியெல்லாம் போற்றும் புகழ்பெற்ற திருப்பாம்பரம் டி. என். சாமிநாதப் பிள்ளை, இந்தியக் குடியரசுத் தலைவர் வழங்கும் தேசிய விருதுக்குரிய சிறந்த கலைஞராக இந்திய சங்கீத நாடக மன்றத்தாரால் 1961–இல் அவர் உயிர்நீப்பதற்குச் சில நாட்கள் முன்னர்–தேர்ந்தெடுக்கப் பெற்ருர்.

**இசை ஆராய்ச்சி**

தமிழ் இசைக்கு அரும்பணியாற்றியவரும், உண்மையிலேயே தமிழ் இசை இயக்கத்தின் தந்தை என்று சொல்லத் தக்கவரும் ஆகியவர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர். சிறந்த புலமைமிக்காரான இவர் தென்னிந்திய இசையின் சிறப்புக்களைப்பற்றி 1914-இல் பரோடாவில் நடைபெற்ற அனைத்திந்திய இசை மாநாட்டில் விரிவாகச் சொற்பொழிவாற்றியிருக்கிறார். தமிழ் மக்களின் கான முறை உலக இசையிலேயே மேலானது என்பதை இவர் நிலைநாட்டியுள்ளார். தஞ்சையில் சங்கீத மகாசன சங்கம் நிறுவியும், இசையறிஞர் மாநாடுகளைக் கூட்டியும், இசைபற்றிய நூல்களை வெளியிட்டும் இவர் ஆற்றியுள்ள தொண்டுகளைத் தமிழ்நாடும் தமிழ் மக்களும் தக்கவாறு உணரவில்லை. இவருடைய நாளைக் கொண்டாடுவதும் இவருடைய நூல்களை மீண்டும் அச்சிடுவதும் தமிழ் இசையில் உண்மையான ஆர்வம் உடையவர்களின் முதற்கடமையாகும்.

இவர் 1917-இல் இயற்றிய "கருணாமிர்தசாகரம்" என்னும் இசைத்தமிழ்நூல், தமிழ் இசைக்கு உயிர்நாடியான நூலாகும். சிலப்பதிகாரம் முதலிய பல நூல்களிலிருந்து பாடல்களைத் திரட்டி, தாமும் பிற புலவர்களுமாக இருந்து அவற்றை ஆராய்வதற்காக இவர் ஒரு நூறாயிரம் ரூபாய்வரை செலவுசெய்துள்ளார். பல்லாண்டு உழைப்பின் விளைவாக, இசைத்தமிழ் நுணுக்கங்களையும் பிற்காலத்து இசை வளர்ச்சிகளையும் நன்கு விளக்கிக் கூறும் அரியதோர் ஆராய்ச்சிப் பெருநூலாகக் கருணாமிர்தசாகரத்தை இவர் வெளியிட்டுள்ளார். இந் நூலில் (1) தமிழின் தொன்மை (2) இசைத்தமிழ் வளர்ந்த விவரம் (3) இசைவல்லோர் பற்றிய செய்திகள் (4) சுரம், சுருதிகள் பற்றிய கருத்துக்கள் (5) தமிழ்ப்பண் முறைகள் – இவைபற்றிய குறிப்புக்கள் உள்ளன.

இசை ஆராய்ச்சி நூல்களில் ஆபிரகாம் பண்டிதர் மகன் வரகுண பாண்டியர் எழுதிய நூல்களும் தஞ்சை ஜோதி பாண்டியன் எழுதிய "பாணர் கைவழியும்" க. வெள்ளைவாரணர் ஆக்கிய "பரதசங்கிரகமும்", கும்ப கோணம் சுந்தரேசன் இயற்றிய இசை யாராய்ச்சி நூல் களும் குறிப்பிடத்தக்கன. இந்த அறிஞர்கள் அனைவரும் இம்மாவட்டத்தினரே ஆவர்.

ஈழநாட்டு விபுலானந்த அடிகள் ஆக்கிய யாழ் நூல் என்னும் அரிய ஆராய்ச்சிப்பெருநூல் தஞ்சை மாவட்டத் துத் திருகொள்ளம்புதூரிலேயே அரங்கேற்றப்பட்டது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இசை விமர்சகராக விளங்கிய 'கல்கி' கிருஷ்ண மூர்த்தி மாயூரம் அருகேயுள்ள மணல்மேட்டினரே.

சென்னை, அண்ணமலைப் பல்கலைக்கழகங்களில் இசைப் பேராசிரியர்களாக இருந்திருப்பவர் பலரும் இம்மாவட்டத்தினரே ஆவர்.

**இசை விழாக்கள்**

திருவையாற்றில் தியாகராசர் சமாதியருகே நடை பெறும் இசைவிழா பெரும்புகழ் பெற்றதாகும். பகுல பஞ்சமி நாளில் தமிழ்நாட்டு இசைவாணர் பலரும் ஒருங்கேகூடி, தியாகராசருக்கு அபிடேக ஆராதனைகள் செய்துவணங்கி, பஞ்சரத்ன கீர்த்தனங்களைப் பாடிக் கொண்டாடுவர். மூன்று நாட்களும் இசையரங்குகள் நடந்த வண்ணமாக இருக்கும். புகழ்பெற்ற வித்துவான் களும் புதிய வித்துவான்களும் இதில் கலந்துகொள்ளு வர். இந்நிகழ்ச்சிகள் யாவும் ஆண்டுதோறும் வானொலி யில் ஒலிபரப்பப்படுகின்றன.

திருவாரூர்ப் பங்குனி உத்தரத்திலும் சிக்கல் கந்தர் சட்டிவிழாவின்போதும் ஆதீனங்களின் விழாக்களிலும்

நடைபெறும் இசைநிகழ்ச்சிகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

திருவாரூர்க் கோயிலில் தியாகராசர் ஆண்டுக்கொரு முறை திருத்தேரில் எழுந்தருளித் திருவீதி உலா வருவார். அவ்வாறு இறைவன் உலா வருங்காலத்துப் பாரி நாயனம், சுத்தமத்தளம், எக்காளம், வாங்கா, திருச்சின்னம் என்னும் பஞ்சவாத்தியங்கள் வாசிக்கப்படும். இங்கு பஞ்சமுக வாத்தியம் ஒன்று இருந்து வருகிறது.

இம்மாவட்டத்தில் தோன்றியுள்ள சில விழாக்கள் இசைத் தொடர்புடையவை. அவையாவன: (1) காதகாலட்சேபம் (2) பாகவத மேளம் (3) லாவணி (4) குறவஞ்சி.

## கதாகாலட்சேபம்

கல்விப் பயிற்சி இல்லாதவர்க்குக் கேள்விவாயிலாக அறிவுபுகட்டுவதற்காகத் தஞ்சையில் சில நூற்றாண்டுகளாகக் கதாகாலட்சேபம் பயன்பட்டு வந்திருக்கிறது. மராத்திய மன்னர்கள் தஞ்சையை ஆண்டபோது, மகாராட்டிரத்தில் வழங்கும் கதாகாலட்சேப முறையின் இயல்புகள் சிலவும் தஞ்சைக் கதா காலட்சேபத்தில் இடம்பெற்றன.

கதா காலட்சேபம் இந்நாளில், கேட்பவர்களைப் பாகவதர் பால் ஈர்க்கும் ஒரு பதத்துடன் தொடங்குகிறது. அடுத்தது ஒரு நீளமான பாட்டு, பின்னர் சுருதி, பிறகு சொற்பொழிவின் உட்கருத்து அமைந்த பகுதி அல்லது "உபக்ரமம்" (கதையிலிருந்து தெரிந்துகொண்ட சிறந்த நீதி) என்றவகையில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

கதா காலட்சேபம் இசையில் ஆர்வம் உடையவரேயன்றிக் கதை கேட்க ஆவலுடைய (சிறிதளவே கல்வியறிவுடைய) பொதுமக்களும் கேட்டின்புறத்தக்கது. பாக

வதம், பாரதம் ஆகியவை இவ்வாறு பரப்பப்பட்டன. பாகவதர்களில் பலர் நகைச் சுவை மிளிர உலகியல் உவமைகள் சொல்ல அவ்வப்போது நாளிதழ்களில் வெளிவரும் செய்திகளை விளக்குவதுடன் கீர்த்தனைகள் பாடி அவற்றுக்குப் பொருளும் சொல்லுவர்; பசனை செய்வர்.

திருவையாறு கிருஷ்ணச்சார், கும்பகோணம் பஞ்சாப கேச பாகவதர், தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர், (*1847–1903*) அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், ராசா மடம் சுந்தர பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், விஷ்ணுபுரம் பாப்பா, திருவையாறு அண்ணுசாமி பாக வதர் ஆகியோர் கதா காலட்சேபக் கலையில் சிறந்த வர்கள் ஆவர்.

**பாகவத மேளா**

இக்கலை நான்காம் நூற்றுண்டில் தோன்றியது. பதினோராம் நூற்றுண்டில் தஞ்சை மாவட்டத்தில் பெரிதும் பரவியது. இங்கிருந்து இராசராசச் சோழன் காலத்தில் இந்தோனேசியத் தீவுகளான பாலிக்கும் சாவகத்திற்கும் பரவி அங்கு இக்கலை இன்றும் நிலவி வருகிறது.

இடையே சில நூற்றுண்டுகள் மறைந்துவிட்ட இக் கலை *18—19* ஆம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த மிலட்டூர் வெங்கட்டராம சாத்திரியாரால் புதுப்பிக்கப்பட்ட தென்பர்.

இக்கலையின் தாயகம் தஞ்சையிருந்து 15 கி. மீ. (*9* மைல்) தொலைவிலும் பசுபதிகோயிலுக்கு அருகேயும் உள்ள மிலட்டூர் என்னும் சிற்றூராகும். தேப்பெருமாள் நல்லூர், சூலமங்கலம், ஒரத்தநாடு, ஊத்துக்காடு, சாலிய மங்கலம், நீடாமங்கலம் போன்ற ஊர்கள் பலவற்றில்

பாகவதமேளாக்கலை வேரூன்றிற்று. அக்கலைஞர்களுக்குச் சரபோசி பொன்னும் மண்ணும் வாரி வழங்கினர். மிலட்டூரில் இப்போதும் ஸ்ரீ வரதராசப்பெருமாள் கோயில் வாயிலில் லெட்சுமிநரசிம்ம சுவாமி செயந்தியில் பாகவதமேளா விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. விடியும்வரை இவ்விழா நடைபெறும். பாலு பாகவதர், பி. கே. சுப்பையர், நட்டுவாங்கம் ரமணி ஐயர் ஆகியோர் கொண்ட குழு, இக்கலையில் புகழ்பெற்றிருக்கிறது.

பாகவத மேளா இசை நாடக நிகழ்ச்சியில் பிரகலாதன் கதைதான் அடிக்கடி நடைபெறுகிறது. நாடகத்தின் இடையே நடிகர்கள் பொழுதுபோக்குப் பாடல்களையும் பாடுவர். இப்பாடல்களுக்கு "தரு" (துவபதா என்பதன் திரிபு) என்று பெயர். நடிகர்களை அறிமுகப்படுத்த நர்த்தனம், அபிநயம் இரண்டும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

பசுபதிகோயில் அருகேயுள்ள சூலமங்கலத்திலும் தஞ்சை – நீடாமங்கலம் வழியிலுள்ள சாலியமங்கலத்திலும் பாகவதமேளா நடிக்கப்படுகிறது.

வடுவூருக்கருகில் உள்ள பாகவதமேளம் என்ற ஊர் இக்கலைஞர்களுக்கு முற்றூட்டாகத் தரப் பெற்ற ஊர்களில் ஒன்று.

**லாவணி**

இக்கலை மகாராட்டிரத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்ததாகக் கருதப்படுகிறது. இக்கலையில் இசைக்குச் சிறிதளவும், சொல் திறமைக்குப் பேரளவும் சிறப்பிடம் தரப்படுகிறது. காமன் பண்டிகை என்று கொண்டாடப் படும் வசந்த உற்சவத்தின்போது மக்களின் பொழுது போக்குக்காக அமைந்த லாவணி, தமிழ்நாட்டில் தஞ்சை திருச்சி மாவட்டங்களில் நிலவிவருகிறது.

மன்மதன் உடலோடு எரிந்தான் என்று ஒரு கட்சியினரும், "எரிந்தது அவன் அல்லன், காமன் என்னும் மலமே" என்று மற்ருெரு கட்சியினரும் இசையோடு வாதாடுவர்.

## குறவஞ்சி

தஞ்சைப் பெரிய கோயிலின் உட்சுற்றுவட்டத்தில் **குறவஞ்சி மேடை** ஒன்று இருக்கிறது. இங்கு இராசராசச் சோழன் காலத்தில் மன்னரைப்பற்றிய இசை நாடக நிகழ்ச்சி திருவிழாக்காலங்களில் நடைபெற்று வந்தது. விசயராகவ நாயக்கர் (1634–1673) காலத்திலும் இம்முறை பின்பற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து சரபோசி மன்னர் சிவக்கொழுந்து தேசிகரை, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி இயற்றச்செய்தார். இந்நாடகம் தஞ்சைப் பெரிய கோயிலில் சிவானந்தம், வடிவேலு, பொன்னையா ஆகிய பெருமக்களால் நான்கு தலைமுறைகளாக ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவில் எட்டாம் நாளில் நடிக்கப்பட்டு வந்தது. அவர்கள் வழிவந்தவரும், இசைப்பேராசியருமான கலாநிதி கே. பொன்னையா பிள்ளை அதனைத் தொடர்ந்து நடத்திவந்திருக்கிருர்.

இம்மேடை இப்போது அஷ்டக்கொடி குறவஞ்சி மேடை என்று பிரம்மோத்சவக் காலத்தில் வழங்கிவருகிறது. "குறவஞ்சி மேடை" என்று இங்கு ஓர் அறிவிப்புப் பலகை தொங்கவிடவேண்டுவது ஆட்சியாளரின் கடமையாகும்.

தேவதாசி ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வரும்வரை இங்கு சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நடிக்கப்பட்டுவந்தது. இப்போது இம்மேடையில் சில சமயம் சமயச் சொற்பொழிவுகள் நிகழுகின்றன.

## இசை மன்றங்கள்

### சங்கீத மகால்

நாட்டிய சாத்திர இலக்கண முறையினின்றும் ஒரு சிறிதும் வழுவாது கட்டப்பட்ட "சங்கீத மகால்" என்னும் இசைமன்றம் தஞ்சை அரண்மனைக் கோட்டையினுள் இருக்கிறது. இம்மன்றம் பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில், தஞ்சையை ஆண்ட சேவப்பநாயக்கரால் கட்டப்பெற்றது.

நாயக்கமன்னர்களில் கடைசிமன்னரான விசயராகவ நாயக்கர் தம் தந்தையாரான இரகுநாத நாயக்கரைப் போற்றி எழுதிய "ரகுநாத அத்பூதயம்" என்ற நூலில் "நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட ஈடிலா மண்டபம் இது" என்று சங்கீத மகாலைச் சிறப்பித்திருக்கிறார்.

இக்கட்டிடத்தினுள் எந்தக்கோணத்திலிருந்து கேட்டாலும் ஒலி ஒரே படித்தாக இருக்கிறது. இந்நாளையக் கட்டிடக் கலைஞரும் ஒலி இயல் நிபுணர்களும் சங்கீத மகாலைக்கண்டு களிப்பும் வியப்பும் அடைகின்றனர்.

இசை நாடக நடன நிகழ்ச்சிகளுக்கென நிறுவப் பெற்ற இந்த எழில்மிக்க அரங்கு, ஆங்கிலேயரது ஆட்சியில் அரசாங்க அலுவலகமாக ஆக்கப்பட்டது. பகலில் கையச்சுக்கருவிகளின் இசையும் இரவில் எலிகளின் ஓசையும் இம்மன்றத்தில் ஒரு நூறாண்டுகளுக்கு ஒலித்தன. கலைநிகழ்ச்சிகளுக்கு மட்டுமே இம்மன்றம் பயன்படும் காட்சியை உரிமைபெற்ற இந்தியநாட்டில் இப்போது காணுகிறோம்.

### திறந்தவெளி அரங்கு

தஞ்சை அரண்மனைக் கோட்டையில் கலைக்கூடத்தையொட்டியுள்ள சரபோசி மண்டபம், நாயக்கர் பூசை மண்டபம் இவையிரண்டுக்கும் இடையே நான்கு திக்கு

களிலும் உயர்ந்த சுவர்களை எல்லைகளாக உடைய வெளி யிடம் திறந்தவெளி அரங்காக 1951-இல் புதிதாக அமைக்கப்பட்டது. ஓசை மாறுபாடு இன்றியும், ஒலி பரப்புக்கருவியின்றியும் இசை நடன நிகழ்ச்சிகளைக் கேட்கவும் காணவும் இவ்வரங்கு பயன்படுகிறது. ஈரா யிரம் பேர் இருப்பதற்கேற்பப் பழைய படிக்கட்டுகள் அர்த்தசந்திர வடிவத்தில் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. கூடியிருக்கும் மக்கள் இந்த அரங்கில் எந்த இடத்தில் இருந்தபோதிலும் அங்கிருந்தவாறே எந்த நிகழ்ச்சியை யும் காணவும், எத்துணை நுண்ணிய ஓசையையும் கேட்க வும் இயலும்.

இந்த அரங்கு அமைவதற்குக் காரணமாக இருந்த அரசாங்க அலுவலர்கள் நம் பாராட்டுக்கு உரியவர்கள் ஆவர்.

### இசைக்கருவிகள் செய்தல்

தஞ்சாவூர் வீணை, தஞ்சாவூர்த் தம்புரா, திருவாரூரி லும், மாயூரத்திலும் செய்யப்படும் மிருதங்கம், திருவிடை மருதூர் நாகசுரம் ஆகிய இசைக்கருவிகள் கலையுலகில் பெரிதும் மதிக்கப்படுகின்றன. காவிரி, கொள்ளிடம் ஆறுகளின் ஓரங்களிலுள்ள நாணல் குறுத்தால் நாகசுரம் செய்யப்படுகிறது.

தஞ்சாவூர் வீணை, தம்புரா, கோட்டு வாத்தியம் மிருதங்கம், டோலக், கஞ்சிரா, புல்லாங்குழல், தபோலா, மோர்சிங், தவுல், நாகசுரம், சாலரா, சுருதிப்பெட்டி, சிப்ளா, ஆர்மோனியம், கால் சலங்கை போன்ற இசைக் கருவிகள் நல்ல நாதத்துடனும், சுருதி சுத்தமான மேளத் துடனும், உயர்ந்த வேலைப்பாடுடனும் செய்வதற்கு அரசாங்க ஆதரவுடன் தொழிலாளர்கள், "கூட்டுறவுச் சங்கீத வாத்தியங்கள் உற்பத்தி விற்பனைச் சங்கம்" ஒன்றைத் தஞ்சாவூரில் நடத்திவருகின்றனர்.

### இசைப் பள்ளிகள்

கும்பகோணம் நகரின் சுற்றுப்புறங்களிலும், மாவட்டத்தின் பிற பகுதிகள் சில இடங்களிலும் பரம்பரைமுறைப்படி பெரிய வித்துவான்களிடம் வாய்ப்பாட்டு, வீணை, நாகசுரம் ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள இளம் வித்துவான்கள் பல ஆண்டுக்காலம் தங்குகின்றனர். திருப்பனந்தாள் ஆதீனத்துச் செந்தமிழ்க் கல்லூரியில் இசையும் கற்பிக்கப்படுகிறது. சுவாமிமலையில் தேவஸ்தானத்தார் அரசாங்க ஆதரவுடன் நாகசுரப் பள்ளி ஒன்றை 1958 முதல் நடத்திவருகின்றனர்.

## நாடகம்

### பொம்மலாட்டம்

தமிழ் நாடகத்துறை வளர்ச்சியின் முதற் கட்டங்களில் பொம்மலாட்டமும், தோற்பாவைக்கூத்தும் இருந்ததாக நாடக அறிஞர் கூறுவர்.

மரத்தால் பாவைகள் செய்து அவற்றைவைத்துக் கொண்டு ஓடியாடி விளையாடச் செய்யும் கலை "மரப் பாவைக்கூத்து" எனப்படும். இதில் படிப்படியாக மாறுதல் ஏற்பட்டது. மண்ணாலும் துணியாலும் மனிதர்களைப் போல அழகான பொம்மைகளைச்செய்து அவற்றின் உறுப்புக்களைக் கயிற்றால் கட்டிப் பின்னால் மறைய இருந்து கயிற்றை இழுத்துத் திறமையாகப் பொம்மைகளை ஆடவும்பாடவும் செய்து விளையாட்டுக்காட்டினர். அதற்குப் பொம்மலாட்டம் என்று பெயரிட்டனர். அரிச்சந்திரன் கதையும் சீதா கல்யாணமும் பொம்மலாட்டத்தில் நன்கு காட்டப் படுகின்றன. தருமபுர ஆதீன விழாக்களில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுவது உண்டு. இந்த ஆட்டத்தில் தேர்ச்சிபெற்ற கலைஞர்கள் கும்பகோணத்தில் வாழ்கின்றனர்.

## நாடகக் கலைஞர்கள்

1565-இல் தலைக்கோட்டைச் சண்டையில் விசய நகரம் அழிந்தது. முஸ்லிம் ஆட்சியால் ஆதரவிழந்த கலைஞர்கள் பலரை விசயநகரத்து அமைச்சர் வித்யாரண்ய சாமி வரவழைத்து ஒவ்வொரு துறையிலும் ஒரு மறு மலர்ச்சி தோன்ற வகைசெய்தார். விசயநகருக்குக் கட்டுப்பட்ட நாயக்கராட்சி தஞ்சையில் நடைபெற்ற போது விசயநகரக் கலைஞர்கள் தஞ்சைக்கு வருவாரா யினர். விசயநகரின் அழிவுக்குப்பிறகு, கலைஞர்கள் அனைவருக்கும் தஞ்சை ஒன்றே புகலிடமாக இருந்தது. இவ்வாறுவந்த கலைஞர்களில் நாடகக் கலைஞர்களே தலை சிறந்த கலைஞர்களாக இருந்தனர்.

மகாராட்டிர நாடகக் குழுக்கள் தஞ்சாவூருக்கு வந்த தன் பயனாக, கோவிந்தராவ் என்பவர் மன்மமோகன நாடகக்குழுவைத் தொடங்கினர். அதே சமயத்தில் கும்பகோணம் நடேச தீட்சிதர் "கலியாணராமய்யர் நாடகக்குழு" வைத் தோற்றுவித்தார். தமிழ்நாடக மேடைக்கு உயிரூட்டிய குழுக்கள் என்று இவ்விரண் டையும் சிறப்பாகச் சொல்லலாம்.

## திருமூல நாயனர் நாடகம்

இப்பெயர் பெற்ற நாடகம் முதலாம் இராசராசன் காலத்தில் நடிக்கப்பெற்றதாகத் திருவாவடுதுறை மாசிலாமணி ஈசர் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. இதைப் பற்றிய விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை.

## மாவெலி நாடகம்

தஞ்சை மாவட்டத்துக்கே உரிய சிலவகை நாடக விழாக்களைப்பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். வேதாரணியம் மாவெலி நாடகமும் இவ்வகையில் முக்கிய மானது ஆகும்.

இந்நாடகத்தின் தோற்றத்துக்குக் காரணமான ஒரு நிகழ்ச்சி திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடப் படுகிறது. கோயிலில் இருந்த விளக்கு ஒன்றின் ஒளி குறைவதைக் கண்ட ஓர் எலி, விளக்குத் திரியைத் தூண்டிவிட்டது. அப்போது எலி, தன் மூக்கைச் சுட்டுக் கொள்ள நேரிட்டது. இறைவன் மூவுலக ஆட்சியையுமே அந்த எலிக்கு வழங்கி அதைச்சக்கரவர்த்தியாகப் பிறக் கச் செய்தார். கார்த்திகை மாதத்தில் தீபம் ஏற்றி வைப்பவர்கட்காக மாவெலி வரம் கேட்டார்.

இந்நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் மாவெலி நாடகத் தில் தாசிகள் நடிக்கலாகாது என்று அரசாங்கம் தடை செய்ததால் இந்நாடகங்கள் இப்போது நடிக்கப்படுவ தில்லை.

**இக்கால நடிகர்**

திரைப்பட உலகில் புகழ்பெற்றுள்ள நடிகர் கும்ப கோணம் சாரங்கபாணியும், ஆசிய ஆப்பிரிக்க நடிகர் களில் தலைசிறந்தவரான சிவாஜி கணேசனும் இம்மா வட்டத்தினரே ஆவர்.

**நடனம்**

செல்வரிடம் சென்று தம்முடைய ஆடற்புலமை தோன்றவும் உள்ளக்குறிப்பை உணர்த்தும் மெய்ப்பாட் டோடும் ஆடும் நடனமகள் "விறலி" எனப்படுவாள். விறலியரைச் சோழ மன்னர்கள் ஆதரித்தமை "சோழ நலங்கிள்ளி விறலியர்க்கு மாடமதுரையையும், வஞ்சி மாநகரையும் தருவான்" என்று கோவூர்கிழார் கூறியிருப் பதிலிருந்து தெரிகிறது.

பிற்காலச் சோழர் ஆட்சியில் "கணிகையர்", "மாணிக்கத்தார்" என்ற பெயர்களில் நாடகமகளிர் பலர் இருந்தனர். அந்த மன்னர்கள் நடன ஆசிரியர்களைப்

பெரிதும் மதித்து அவர்களுக்குப் பட்டங்களும் நில மானியங்களும் நல்கினர்.

தஞ்சை அரண்மனையிலுள்ள எழுநிலை மாடத்தில் முதல் மாடத்தில் சிவனுடைய 71 நடனக் காட்சிகள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இவையும் தஞ்சைக் கோயிலில் காணப்படுபவையும் ஆடவர் நடனத்தைத் தெரிவிப்பன. தில்லைத் திருக்கோயிலிலுள்ள 108 தாண்டவங்கள் பெண்டிரின் நடனக்கலைக்கு உரியன.

மகாராட்டிர மன்னரான சரபோசி, சோழருக்குப் பின்னர், நடனக் கலையை ஆதரித்த பெரும் புலவர் ஆவார். கங்கைமுத்து, சபாபதி, சுப்பராயன், மகாதேவ அண்ணுச்சி, சின்னையா, வடிவேலு ஆகியோர் சரபோசியின் ஆதரவு பெற்றவரில் சிலராவர். நடனப்போட்டி ஒன்றில் சிறந்து விளங்கிய சுந்தரி என்னும் எழிலரசிக்குச் சரபோசி ஒரு நல்ல பல்லக்கு ஈந்தான். அரச குடும்பத்துப் பெண்டிர்க்கு மட்டுமே உரிய சில நகைகளை அவளும் அணிந்துகொள்ள அவளுக்கு இசைவும் வழங்கினன்.

நடனத்திற்கேற்ப அலாரிப்பு, ஜதிசுரம், சப்தம், வர்ணம், பதம் ஆகியவற்றைச் சரபோசி உருவாக்கியிருக்கிருர். வேறு எங்கும் காணுதற்கரிய பரதநாட்டிய சாத்திர நூல்களை அவர் சரசுவதி மகாலில் சேகரித்து வைத்துள்ளார். இப்போது மறைந்துவிட்ட ஜக்கிணி, பேரணி, துருபதம், தேசி, நவபாதம், குறவை என்னும் நடனங்கள் சரபோசி காலத்தில் ஆடப்பெற்றன.

நடனம் ஆடுவதில் இருபதாம் நூற்றுண்டில் புகழ் பெற்றுள்ளவர்களில் அடையாறு உருக்குமிணி அம்மையாரும், திருவாரூர் ஞானத்தம்மாளும் தஞ்சாவூர் வீணு பாஷிணி அம்மாளும் இம்மாவட்டத்தினரே.

நடனம் ஆடுபவர் பலர் பிற மாவட்டத்தினராக இருப்பினும் அவர்களுக்கு நாட்டியக்கல்வி புகட்டிய பெருமை தஞ்சைமாவட்டத்திலுள்ள பரதநாட்டிய ஆசிரியர்களுக்கே உரியது. இவர்களில் பலர் இந்நாளில் தம் சீடர்களால் புகழ்பெற்றிருப்பதும் சென்னையில் தங்கிவிடுவதும் வழக்கமாகி வருகிறது. தொடர்ந்து தஞ்சை மாவட்டத்திலேயே நடனப்பள்ளி நடத்திவருபவர் ஒரு சிலரே. இவ்வாறு இப்போது பரதநாட்டியப்பள்ளி நடத்திவருபவருள் தஞ்சாவூர் பிச்சையா பிள்ளை குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

கந்தப்பா பிள்ளை, தஞ்சாவூர் கே. பொன்னையா பிள்ளை, வழுவூர் சாமு நட்டுவனார், வழுவூர் மாணிக்க நட்டுவனார், வழுவூர் ஆறுமுக நட்டுவனார் ஆகியோரும் பரதநாட்டிய ஆசிரியர்களில் முக்கியமானவர் ஆவர். வழுவூர்ப் பரம்பரையில் வந்த நாட்டியகலாகேசரி வழுவூர் இராமையா பிள்ளையிடம் கல்வி பயின்றவர்களே கமலா லெட்சுமணன், ஹேமா மாலினி, ஈ. வி. சரோஜா ஆகியோர்.

இந்நூற்றாண்டில் பரதநாட்டியக்கலைக்கு உறைவிடமாக இருந்திருப்பது கும்பகோணம் வட்டத்திலுள்ள பந்தணைநல்லூர் என்னும் சிற்றூர் ஆகும். இவ்வூரினரான காலஞ்சென்ற கலாநிதி மீனாட்சிசுந்தரம் பிள்ளை பரதநாட்டியக் கலையில் பெரும் புலவர் ஆவார். உருக்குமிணி அருண்டேல் அம்மையாரின் ஆசிரியர் இவரே.

பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பரதநாட்டியக் கலையை முறையாகக் கற்றுத்தேர்ந்து, முதிய பருவத்திலும் தம் சிற்றூரில் இருந்தவாறே இந்தியாவெங்குமுள்ள கலைஞர்களுக்கும் மேனாட்டு மாணவமாணாக்கியர்க்கும், பரதநாட்டியத்தைக் கற்பித்திருக்கிறார். அந்தக் கலைக்குப் புத்துயிரூட்டியதோடன்றித்

தமிழ்நாட்டுக்கு உலகப்புகழையும் அவர் பெற்றுத்தந்திருக்கிறார். அவர் புகட்டிய நடனக்கலையைப் பற்றி அரிய பெருநூலொன்று இலண்டனில் வெளிவந்திருக்கிறது. *

**பொய்க்கால் குதிரை ஆட்டம்**

பரதநடனக் கலையில் புகழ்பெற்றுள்ள தஞ்சை, பொய்க்கால் குதிரை நடனத்திலும் பெயர் பெற்றிருக்கிறது. 20 கிலோகிராம் எடையுள்ளதும், பல வண்ணங்களில் தீட்டப்பட்டதுமான மரக்குதிரைக் கூடுகளைப் போட்டுக்கொண்டு, புராணக்கதைகளைக் கூறி இசைப் பாடல்களுக்கேற்பத் திறமையுடன் ஆடும் இந்த ஆட்டம் தஞ்சை மாவட்டத்துத் திருவிழாக்களில் கண்டு இன்புறத்தக்கது.

**சிற்பம்**

சிற்பக்கலை தஞ்சையை ஆண்ட அரசர்களால் பெரிதும் வளர்க்கப்பட்டது. தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தை இந்தியாவின் இணையற்ற சிற்பக்கலையின் உயர்நிலைக்குச் சான்றாகக் கூறலாம். நீலரசவிளக்குகள் பலவற்றின் துணையால் இக்கோபுரத்தைக் கீழிருந்து மேலே பார்த்தால்தான், இதன் சிறப்பை நன்கு உணரலாம். செங்கல், சாந்து, காரை, களிமண், சிமிண்டு என்னும் பொருள்கள் எவையுமின்றிக் கல்லின்மேல் கல் வைத்துப் பொருத்தியது இக்கோபுரம். கோபுரத்தின் அளவுகடந்த கனத்தைத் தாங்கும் சுவர்களின் வேலைப்பாடு – 10 ஆம் நூற்றாண்டு வேலைப்பாடு – இருபதாம் நூற்றாண்டுப் பொறியியல் அறிஞரும் போற்றிப் புனைந்துரை கூறத்தக்கவாறு அமைந்திருக்கிறது.

---

*The other mind - A study of Dance and Life in South India by Beryl de Zoeta, Dance Critic of the Daily Telegraph (Victor Gollancz, London 1953)

விமானத்திலுள்ள சிற்பங்களேயன்றி இக்கோயிலின் சுவர்களிலுள்ள உருவங்களும் காணத்தக்கவை. கங்கை கொண்ட சோழபுரம், தாராசுரம், பழையாறைக்கோயில்கள் சிற்பக்கலைக் களஞ்சியங்களாக உள்ளன.

மகாராட்டிரர் காலத்துச் சிற்பத்திறமைக்குச் சான்ருக இருப்பது சலவைக் கல்லிலுள்ள சரபோசியின் உருவமாகும்.

**ஓவியம்**

தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள சுவர் ஓவியங்கள் மிகப் புகழ்பெற்றவை. இவற்ருல் சோழர் காலத்திலிருந்து பல்வேறு நாகரிகங்களின் நிலையையும் மக்களுடைய உடலமைப்பு, ஆடை வகைகள், அணிகலன்கள் ஆகியவை எவ்வாறிருந்தன என்பதையும் நாம் அறிய இயலுகிறது. இந்த ஓவியங்கள் பதினேராம் நூற்ருண்டில் வரையப்பெற்றவை. பெருவுடையார் விமானத்தின் கீழ், மூலத்தானத்தைச் சுற்றியுள்ள சிறு உள்மாளிகை ஒன்றின் சுவர்கள்மீதும் மண்டப மேற்கட்டியிலும் சில நூற்ருண்டுகளாக மறைந்துகிடந்த ஓவியங்களை 1930-31–இல் வரலாற்றுத்துறை அறிஞர் ச. க. கோவிந்தசாமிப் பிள்ளை வெளிப்படுத்தினர். சோழர் காலத்து ஓவியங்களுக்குமேல் நாயக்கர்காலத்தில் காரை பூசப்பெற்று, அக்காரைமீது நாயக்கர் காலத்து ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. சில இடங்களில் காரை பெயர்ந்து விழுந்தபோது அறிஞர் கோவிந்தசாமி கீழே இருந்த ஓவியங்களைப் படமெடுத்துச் சோழர் கலையைப் புலப்படுத்தினர்.

மகாரட்டிரர் காலத்து ஓவியங்கள் தஞ்சை அரண்மனையில் உள்ளன. எனினும், இந்த அரசர்களின் காலத்தில் வரையப்பெற்ற மிகப்பல ஓவியங்கள் ஐரோப்பிய

நாடான டென்மார்க்கிலுள்ளன.* இவற்றை நம் நாட்டுக்குக் கொண்டுவர அல்லது இவற்றின் படியை எடுக்க நமது அரசாங்கம் ஆவனசெய்யவேண்டும்.

**வெண்கல உருவங்கள்**

வெண்கல உருவங்கள் தமிழ்நாட்டுக்குப் பெரும் புகழ் தந்துள்ளன. தமிழரின் கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் வித்திட்டவர்கள் பல்லவர்களே எனினும் கல்லிலும் வெண்கலத்திலும் கவினுறு கடவுளுருவங்களை அழகுற அமைத்தவர்கள் சோழர்களே ஆவர்.

சைவசமயத்துப் பெருமக்களும் வைணவசமயத்துப் பெருமக்களுமாகிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் பரப்பிய பக்திப் பெருவெள்ளமானது 9-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டுவரை பெருக்கெடுத்துப் பாய்ந்தது. சைவசமய நூல்கள் தேவதானத்தையும் அதனினும் பார்க்க மூர்த்திதானத்தையும் சிறப்பித்துக் கூறின. திருவிழாக்கள் பெருகின. அவற்றில் வலம் வருதற்கென வார்க்கப்பட்ட வெண்கல உருவங்களைப் பற்றிய கோட்பாடுகள், தத்துவங்கள், சிற்பச் சாத்திரங்கள் ஆகியன தெளிவுபெற்றன.

செப்பு, வெள்ளி, பொன், பித்தளை, ஈயம் என்னும் ஐவகை உலோகங்களின் கலவையினால் செய்யப்படுவதால் வெண்கல உருவங்களுக்குப் "பஞ்சலோக உருவங்கள்" என்றும் பெயர் ஏற்பட்டன.

எந்த உருவம் வெண்கலத்தில் உருவாக்கப்பட வேண்டுமோ அந்த உருவம் முதலில் மெழுகில் தயாரிக்கப்

---

*The largest collection of Tanjore paintings of the Mahratta period are in Denmark, in the National Museum at Copenhagen. These and Chola Bronzes, like a Somaskanda and a Nataraja, came here through the Danes in Tranquebar.
Sanskrit and Allied Indological Studies in Europe.
—Dr. V. Raghavan, University of Madras. 1956

படுகிறது. மெழுகாலாகிய இந்த உருவத்தின்மீது களி மண் ஒட்டப்படுகிறது. தேவையான சில இடங்களில் கம்பிகள் பின்னப்பட்டுக் களிமண் பூசப்படுகிறது. இக் களிமண் நன்ருகக் காய்ந்தபிறகு, மெழுகு உருக்கி யெடுக்கப்படுகிறது. மெழுகு எடுக்கப்பட்ட இடை வெளியில் உருக்கப்பட்ட உலோகம் வார்க்கப்படுகிறது. உலோகம் நன்கு இறுகிக் காய்ந்தபிறகு, களிமண் உடைக்கப்படுகிறது. பின்னர், கூர்மையான உளிபோன்ற பல கருவிகள் கொண்டு சிற்பி இவ்வுருவங்களில் அலங் கார வேலைப்பாடு செய்கிருன். ஓர் உருவம் நன்கு அமைய எத்துணையோ நாட்கள் - மாதங்கள் கூடப் - பிடிக்கும். இறைப்பற்ருலும் சிற்பச்சாத்திர அறிவாலும் தொழில் அநுபவத்தாலும் சிற்பி இறையுருவங்களைத் தன் அகக் கண்களால் காணுகிருன். அச்சிந்தனையால் அவன் எண்ணிய உருவங்களைச் சமைக்கிருன். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரந் திருநாமம் பாடித் தென்னேணங் கொட்டாமோ" என்ற திருவாசகச் சொற்ருெடர் போன்று திருநாமத்துடன் திருப்தியடை யாது திருவுருவங்களுங் கண்டனர், சோழநாட்டுக் கலை ஞர்கள். அவர்கள் சைவசித்தாந்தத்தின் சிறப்பியல்பு களை உணர்ந்து அவ்வியல்புகளைத் தாம் வடித்த உருவங் களின் கரங்களிலும் விரல்களிலும் காட்டினர்.

இத்தகு பெருமைக்குரிய சோழர்கால வெண்கல உருவங்கள் தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம், திருபு வனம், கோனேரிராசபுரம் ஆகிய கோயில்களிலும் தஞ்சைக் கலைக்கூடம், புது தில்லி இந்திய தேசியப் பொருட்காட்சி நிலையம், லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியம், இலங்கையில் கொழும்புப் பொருட்காட்சி யிலுள்ள பொலன்னறுவைப்பகுதி ஆகியவற்றிலும் அமெரிக்கச்செல்வர் இல்லங்களிலும் சிறப்பிடம் பெற்றுச் சோழர் புகழைப் பரப்பியவண்ணமாக உள்ளன.

**கலைக்கூடம்**

வெண்கல உருவங்களும் கல் உருவங்களும் தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளில் காற்றிலும் மழையிலும் அடிபட்டுப் பொலிவிழந்து துருவும் பாசியும் பிடித்துக் கிடந்தன. கவனிப்பாரின்றிவாய்க்கால்களிலும் குளக்கரை களிலும் கிடந்த கலைப்பொருள்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் டி. கே. பழநியப்பன், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ். இராமச்சந்திரப்பத்தர், தஞ்சை இளவரசர் ஆகியோரது முயற்சியால் சேகரிக்கப்பட்டு 1951–இல் அரண்மனைக் கட்டிடத்தில் கலைக்கூடம் தொடங்கப்பெற்றது.

வெண்கல வேலைப்பாட்டில் உலகிற் சிறந்த காட்சிப் பொருள்கள் அடங்கிய நிலையமாக இக்கலைக்கூடம் இருந்து வருகிறது.

**கட்டடக்கலை**

கலைக்கூடத்தின் செப்பு விக்கிரகங்களுள்ள சரபோசி உருவமாடம், கற்சிலைகளுள்ள ஆயுதச்சாலை, நாயக்கர் களின் பூசை மண்டபம், (பகைவர் உள்ளே புகுவராயின், தம் மீது வடுப்படாமலேயே அவர்களுடன் போராடுவதற் குரிய நிலைகளை உள்ளடக்கி வெளியே கோபுரம் போல் தோற்றம் தரும்) காவல்கூடம் ஆகியவை காணத்தக்கன. தஞ்சை அரண்மனையிலுள்ள இக்கட்டடங்கள் தவிர கும்பகோணம் கல்லூரியின் பழைய கட்டடங்களும், அதிராம்பட்டினத்திற்கு அருகேயுள்ள மனோரா என்னும் வெற்றிமண்டபமும் தரங்கம்பாடிக் கோட்டையினுளுள்ள கட்டடங்களும் பல்வேறு கோயில்களும் கல்லணையும் வெவ்வேறு காலங்களில் நிலவிய கட்டடக் கலையை நினைவூட்டுகின்றன.

மகாராட்டிரர் காலத்தில் கட்டப்பெற்ற பல நூறு வீடுகள் தஞ்சைக் கோட்டைப்பகுதியிலுள்ளன. இவற்

றில் சுவரை இடிக்கவோ சன்னல் வைக்கவோ இயலாது. சிறந்த வகையான கலவை மண்ணைப் பயன்படுத்திக் கட்டப்பட்டிருப்பது இவற்றின் உறுதிக்குக் காரணமாகும்.

**பிற கலைகள்**

மோடி நடனம், கிஞ்சின் நடனம், தெருக்கூத்துக்கள் ஆகிய கலைகளையும் சரபோசி மன்னன் ஆதரித்தான். ஐம்பதுவகைப் பின்னல் கோலாட்டங்களைப்பற்றிய நூல் ஒன்றையும் அவன் வெளியிட்டான்.

தஞ்சாவூர்த் தாம்பாளம் என்பது தனியழகு உள்ள ஒரு கலைப் பொருளாகும். இத்தாம்பாளங்களின் நடுவே நகாசுவேலையை நன்குசெய்து பொன்னிலும் வெள்ளியிலும் தகடாகப் பதிப்பர். இவற்றில் பல உருவங்களை (வெள்ளி செம்பு பொன் இம்மூன்றுங் கலந்து) உருவாக்கும் கலைஞர்கள் இன்றும் தஞ்சை நாணயக்காரச் செட்டித்தெருவில் உள்ளனர்.

சித்திரப்படங்கள் வரையும் கலை தஞ்சையில் பல தலைமுறைகளாக அரசர்களின் ஆதரவில் வளர்ந்திருக்கிறது. மரப்பலகைகளில் அட்டையும் துணியும் போட்டுப் படம் வரைந்து, கண்ணாடியால் தேய்த்து, பிறகு கண்ணாடியில் வஜ்ரம் வைத்துச் சுக்கான்பிடித்து "ரேக்" போட்டு வண்ணம் தீட்டுவர். இத்துறையில் பயிற்சி கொடுக்கும் நிலையம் ஒன்றைத் தமிழ்நாடு அரசாங்கத்தார் தஞ்சை அரண்மனைக் கட்டிடத்தில் நடத்தி வருகின்றனர். இக்கலையில் வல்லவரான ராஜுக்கள் முத்துப்பல்லக்கு என்ற திருவிழாவின்போது, பீங்கான் துண்டுகளால் அழகான விமானம் செய்து வலமாக எடுத்துச்செல்லுவர்.

சரபோசியின் அரண்மனையில் இருந்த பல ஓவியங்கள், காட்சிக்கூடங்களில் உள்ளன. இங்கிருந்த ரவிவர்மா

படங்கள் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்பட்டு விட்ட தாகத் தெரிகிறது. தந்தத்தில் செய்த பல்லக்கு முதலி யன மராத்திய அரசகுடும்பத்தார்க்கும் சரபோசியின் ஏனைய கலைப்பொருள்கள் பொதுமக்களுக்கும் 1925–இல் தஞ்சை மாவட்ட நீதிபதியால் ஏலம் போடப்பட்டன. இவற்றுக்கு ஈடான பொருள்கள் மைசூர் அரண்மனையில் கூட இல்லை என்பது இவற்றைக் கண்டவர்களின் கருத்து ஆகும்.

இறை உருவங்களுக்கு அணிவிப்பதற்கு நகைசெய் யும் கலை பல நூற்றுண்டுகளாக வளர்ந்துவந்திருக்கிறது. முதலாம் இராசராசன் கல்வெட்டுக்கள் அவன்காலத்தில் நகை செய்யும் தொழில் அடைந்திருந்த உயர்நிலையை யும் பலவகையான வைரங்கள், நவரத்தினங்கள், முத்துக் கள் பற்றியும் அவற்றிலுள்ள மாசு, கறுப்பு, குற்றங்குறை களைக் கண்டுபிடிப்பதற்குரிய செய்திகளையும் கூறுகின் றன. கோயில்களுக்கு அவன் வழங்கிய பலவகை அணிகள், ஆபரணங்கள் அவற்றின் எடை போன்ற விவரங்கள் படித்தால் வியப்பூட்டுவனவாக உள்ளன.

பொன்நகை செய்வதில் வல்லுநர்களும், "முன்னக் கச்சி" வேலைசெய்பவரும், வயிரவேலை செய்வதில் இணையற்ற கொண்டங்கார்ரர்களும், தங்கவேலை செய் வதில் சிறந்த தட்டார்களும் வெள்ளிவாகனம் செய்வதில் பழக்கமுள்ள வெள்ளிக்கன்னரும், பித்தளைப் பாத்திரம் செய்வதில் பயிற்சி பெற்ற கலைஞர்களும் பல்லக்கு போன்ற பொருள்களை மரத்தில் செய்வதில் சிறந்த மான் குட்டி ஆசாரிகளும் இன்றும் தஞ்சை மாவட்டத்தில் - குறிப்பாகக் கும்பகோணம் பகுதியில் - உள்ளனர்.

இரும்பு வேலையில் சிறந்த தொழிலாளர் நாகப்பட்டி னத்திலும் கொட்டகை, மணப்பந்தல் ஆகியவற்றை அழகுபட அமைக்கும் ஒப்பனைக் கலைஞர் தஞ்சாவூரிலும்

கோயில்களையும் மாளிகைகளையும் நெட்டியில் சிறப்பாக அமைக்கும் திறனுடையார் திருத்தருப்பூண்டியிலும் "ஆட்டிவிட்டால் ஆடுகின்ற தஞ்சாவூர்ப் பொம்மை, உருட்டி விளையாடுகின்ற தஞ்சாவூர்ப் பொம்மை" செய்யும் கலைஞர்கள் தஞ்சையிலும் உள்ளனர்.

பலவகைப்பூக்கள் பல்கிக் கிடைக்கும் தஞ்சை மாவட்டத்தில் மணமுள்ள மலர் மாலைகளைப் போன்றே, பிற நறுமணப்பொருள்களாலான மாலைகளையும், நெல்லால் செய்யப்பெற்ற விலையுயர்ந்த மாலைகளையும் கலையழகுடன் செய்கின்றனர். பெரிய மாநாடுகளுக்காகவும் உலகப் புகழ்பெற்றவர்களுக்கு அணிவிக்கவும் இவை தயாரிக்கப் படுகின்றன.

**நெட்டி** (Pith)

நெரிநெட்டி, கல்நெட்டி, மரநெட்டி என்று பல வகையான நீர்ப்பூண்டுகள் உள்ளன. இவற்றுள் வெண்மையும் கனமில்லாத்தன்மையும் உடையனவாகவும், கிளைகளுள்ள சிறிய மரங்களைப்போன்று அமைந்துள்ள குளங்களில்வளரும் பூண்டுகளுக்கே நெட்டி என்ற பெயர் சிறப்பாக ஏற்பட்டது.

சித்திரவேலைக்கும் பொம்மை செய்யவும் நெட்டி பயன்படுகிறது. தலைப்பாகை, தொப்பி ஆகியவற்றை அணிபவரின் உருவம் பெரிதாகத் தெரியவும் அதேநேரத்தில் தலைப்பாகை கனமில்லாமல் இருக்கவும் அதில் நெட்டி பயன்படுத்தப்படுகிறது. 'ஸ்பாஞ்சு' போல, தண்ணீரை உறிஞ்சும் ஆற்றல் நெட்டிக்கு உண்டு. கோயில்கள், கட்டடங்கள் ஆகியவற்றின் அமைப்புப் பொம்மைகள் நெட்டியில் அழகாகச் செய்யப்படுகின்றன. நெட்டிப் பொருள்கள் செய்யும் கலை திருத்தருப்பூண்டி வட்டத்தில் திருத்தமுடன் நடைபெறுகிறது.

**எழுதும் கலை**

அச்செழுத்தினும் அழகுபெற எழுதும் கலை (Caligraphy) தஞ்சை மகாராட்டிர மன்னர்களின் காலத்தில் பேணி வளர்க்கப்பட்டது. கையெழுத்து மிக நன்ருக எழுதக்கூடியவர் பலரைச் சரபோசி வரவழைத்துப் பல நூல்களைப் படியெடுக்க ஏற்பாடு செய்தார். 100 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டிருந்துங்கூட, இவற்றை இன்று காண்பவரும் வியப்படையும் நிலையில் எழுத்தும் தாளும் உள்ளன. இத்தாள்களுக்குத் தஞ்சாவூர்த் தங்க ரேக்குப் பட்டை என்று பெயர்; இவை இன்றும் தஞ்சாவூரில் செய்யப்படுகின்றன.

## 15. உரிமைப்போர்

ஆங்கிலேயரது ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிக்க நடைபெற்ற முயற்சிகள் பலவகைப்படும். இவை யாவன :-

(1) படித்தவர்களிடையே பிரசாரம்

(2) கிலாபத் இயக்கம்

(3) உப்பு சத்தியாக்கிரகம்

(4) வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம்.

இவை அனைத்தும் நடத்தி, தஞ்சை மாவட்டம் இந்திய விடுதலைப்போரில் பங்கு கொண்டிருக்கிறது.

**படித்தவர்களிடையே பிரசாரம்**

படித்தவர்களிடையே மட்டும் சுதந்தரஉணர்வு காணப்பட்ட காலத்தில் காங்கிரசு இயக்கமும் தேசிய உணர்ச்சியூட்டும் கொள்கைகளும் கல்வித் துறையில் மேம்பட்ட மக்கள் பெருவாரியாக வாழும் இம்மாவட்டத்தில் பரவின. வழக்கறிஞர்கள் சமுதாயத்தின் தலைவர்களாக இருந்ததால், இம்மாவட்டத்தினர் பலர் சென்னையிலும் பிற இடங்களிலும் வழக்கறிஞராகப் புகழ்பெற்ற

தோடு தேசிய இயக்கத்துக்கு ஆதரவு நல்கியும் புகழ் பெற்றனர். பத்திரிகைகள் வாயிலாக மக்களுடைய எண்ணங்களை உருவாக்கிய பணியில் இம்மாவட்டத்தின ரான "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆசிரியர் க. சந்தானம், "ஆனந்த விகடன்" "கல்கி" இரண்டிலும் ஆசிரியராக இருந்த ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்களுக்கும் நூற்றுக் கணக்கான ஏனையோருக்கும் பங்கு உண்டு.

"சென்னை இராசதானி அரசியல் மாநாடு" 1912-இல் இம்மாவட்டத்தில் கும்பகோணத்தில் நடைபெற்றது. அதுவே அரசியல் நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைந்தது. அதைத் தொடர்ந்து 1918வரை பலதடவை கும்பகோணத்துக்கும் தஞ்சாவூருக்கும் டாக்டர் அன்னி பெசண்டு அம்மையார் வருகைபுரிந்து பிரசாரம் செய்தார். அதன்விளைவாக "ஹோம் ரூல்" இயக்கத்துக்கு இம் மாவட்டத்துப் பெருநகரங்களில் செல்வாக்குள்ள வட்டங் களில் வலுவான ஆதரவு இருந்தது.

1926 அளவில் தமிழ்நாட்டில் தொழிற் சங்கங்கள் உருவாயின. அப்போது தென்னிந்திய இரயில்வேயின் தொழிற்சாலை நாகப்பட்டினத்தில் இருந்ததால் திரு.வி.க., டாக்டர் ப. வரதராசலு நாயுடு போன்றோர் அங்குவந்து சொற்பொழிவுகள் செய்து, தொழிலாளரிடையேயும் பொதுமக்களிடையேயும் நாட்டுணர்ச்சியை ஊட்டினர்.

## கிலாபத் இயக்கம்

அண்டை மாவட்டங்களைவிட, தஞ்சையில் முஸ்லிம் களின் தொகை கூடுதலாக இருக்கிறது. அவர்களில் பல ருக்கு "கௌரவ மாசிஸ்திரேட்டு", நகராண்மைக் கழகங் களில் நியமன உறுப்பினர் என்ற பதவிகளை வழங்கிய தன் மூலம், பிரிட்டிஷார் தங்களுக்கு ஆதரவு தேடிக்கொண் டனர். இங்கிலையில் 1920-இல் மௌலானா சவுகத் அலியு

டன் மகாத்மா காந்தி தஞ்சை மாவட்டத்துக்கு வந்து ஒத்துழையாமை இயக்கத்தைப் பரப்பினர். கிலாபாத் இயக்கத்தைப்பற்றியும், அயலவர் ஆட்சி அடியோடு மறையவேண்டியதன் இன்றியமையாமையையும் அடிகள் அப்போது வற்புறுத்தினர். இதன்பின்னர், தஞ்சையில் 1921-இல் மாநில அரசியல் மாநாடு யாகுப் ஹசேன் தலைமையில் நடத்தப்பட்டது; அப்போது முஸ்லிம்கள் பெருவாரியாகத் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டனர். வலங்கைமான் அப்துல்சத்தார், நாகை அகமத்தம்பி மரக்காயர், கும்பகோணம் எஸ். ஏ. ரஹீம் ஆகிய தேசிய முஸ்லிம் தலைவர்கள் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

"மூன்று மாதத்தில் சுயராஜ்யம் கிடைக்கும்'' என்ற கருத்தை 1921-இல் காந்தியடிகள் வெளியிட்டு, அதற்காக மக்கள் இன்னின்ன செய்யவேண்டுமென்று சொன்னர். அந்நாட்களில் இம்மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் தெருக்கள்தோறும் தேசிய நிதிக்கு உண்டியல் வாயிலாகப் பணம் திரட்டப்பட்டது.

1924-இல் மன்னர்குடியில் கூடிய காங்கிரஸ் மாநாடு, 1925-இல் மிராசுதார்களின் வரி கொடா இயக்கம், பின்னர் திருச்சிக்கு நாகை ரயில் தொழிற்சாலையை மாற்றியதை எதிர்த்துக் கிளர்ச்சி, 1928-இல் சைமன் கமிஷனுக்கு எதிராகத் திருவாரூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், 1929-இல் வேதாரணியத்தில் வல்லபாய் பட்டேல் தலைமையில் நடைபெற்ற அரசியல் மாநாடு — இவ்வாறு ஒன்றன்பின் ஒன்ருக நடைபெற்ற பல நிகழ்ச்சிகளால் தஞ்சை மாவட்டத்தில் தேசிய இயக்கம் வலுவடைந்தது.

**உப்பு சத்தியாக்கிரகம்**

இம்மாவட்டத்தின்நிலை இவ்வாறிருக்க, இந்தியாவில் அரசியல் சூழ்நிலை ஓரளவாக உருவாகி உப்பு சத்தியாக்

கிரகத்துக்கு வழிவகுத்தது. 1930மார்ச் 12–இல் காந்தியடிகள் குசராத் மாநிலத்தில் தண்டி என்னும் இடத்தில் உப்புக் காய்ச்சும் இயக்கத்தைமேற்கொண்டார். தமிழ் நாட்டிலும் இப்போராட்டத்தை நடத்தவேண்டு மென்று திட்டமிடப்பட்டது. உப்புக்குப் புகழ்பெற்றது தூத்துக்குடியே என்றும் அங்கு உப்பு சத்தியாக்கிரகம் நடத்த வேண்டுமென்றும் அப்பகுதியினர் வேண்டினர். ஆனால், தஞ்சை மாவட்டத்தில் தேசிய உணர்ச்சி பரவியிருந்ததாலும், கட்டுப்பாடாக இயக்கத்தை நடத்தக்கூடிய தலைவர் வேதரத்தினம் வேதாரணியத்தில் இருந்தமையாலும் உப்பு சத்தியாக்கிரகம் தமிழ்நாட்டில் வேதாரணியத்தில் மட்டுமே நடத்தப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

காந்தியடிகள் தண்டிப்பயணம் புறப்பட்டவுடன் வேதாரணியம் வேள்வியில் கலந்துகொள்ளத் தமிழ் நாடெங்குமிருந்து தொண்டர்கள் முன் வந்தனர். 13-4-1930 பிரமோதூத சித்திரை முதல்நாளில் திருச்சியிலிருந்து இராசகோபாலாச்சாரியார் (ராஜாஜி) தலைமையில் 100 சீடர்கள் அவரவர் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு, "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" போன்ற வீரப்பாடல்களை முழங்கிக்கொண்டு வேதாரணியத்தை நோக்கி நடந்து சென்றனர்.

இந்த 100 தொண்டர்களுக்கும் உணவு உறைவிடம் கொடுப்பது குற்றமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அறிவித்தனர். இந்த ஆணையால் தொண்டர்களைப் பட்டினி போட்டு முறியடிக்க அதிகாரிகள் முனைந்தனர். ஆனால் தஞ்சை மாவட்ட மக்கள் இந்த மிரட்டல்களுக்கு அஞ்சவில்லை. பலர் எல்லோரும் அறிய ஊர்ப்பொதுவில் விருந்துவைத்தனர். சில இடங்களில் தொண்டர்களுக்கு உணவு சமைத்து ஆலமரத்தடியில் வைத்துவிட்டுச் சென்

றனர். "42-ஆம் நம்பர் ஆலமரம்" என்று ஒருவர் உரக்கக் கத்திக்கொண்டு செல்லுவார்; அங்கே போய்ப் பார்த்தால் அறுசுவை உணவு காத்திருக்கும்.

இவ்வாறு நல்ல உணவு உண்டும் செல்லுமிடமெல்லாம் பிரசாரம் செய்து கொண்டும் தொண்டர் படை திருவையாறு, தஞ்சை, கும்பகோணம், மன்னார்குடி, திருத்தருப்பூண்டி ஆகிய இடங்களில் பெரிய வரவேற்புப்பெற்றுப் பின்னரே வேதாரணியத்தை நோக்கிப் புறப்பட்டது. வழிநெடுக மக்களுடைய உணர்ச்சி வெள்ளப்பெருக்கெடுத்தது.

தஞ்சை மணிக்கூண்டு மைதானத்தில், அரசாங்கத்தின் தடை உத்தரவை மீறி வேதாரணியம் வீரர்களுக்கு வரவேற்பு நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களைப் பார்த்து ராஜாஜி கேட்ட கேள்விகளும் மக்கள் அளித்த விடைகளும் வருமாறு :—

"நீங்கள் தஞ்சை கலெக்டர் வெளியிட்ட அறிக்கையைத் தெரிந்துகொண்டு இங்கு வந்திருக்கிறீர்களா? அல்லது தெரியாமல் வந்திருக்கிறீர்களா?"

"தெரிந்துதான் வந்தோம்"

"ஒரு போலீஸ் சேவகர் இந்த மேடைக்குவந்து உங்கள் எல்லோரையும் கைது செய்திருக்கிறேன் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்.?"

"கைதாகத் தயாராக இருக்கிறோம்"

"தொண்டர்களை வரவேற்றதற்குக் கலெக்டர் உத்தரவுப்படி ஆறுமாத சிறைத் தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா ?"

"6 மாத சிறைத் தண்டனையை ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருக்கிறோம்"

இந்த விடைகளைக் கேட்ட ராஜாஜி, "தஞ்சை மகா ஜனங்களின் வீரமே நாம் நிச்சயம் சுயராஜ்யம் அடைவோம் என்பதற்கு அறிகுறியாகும்" என்று அப்போது சொன்னார்.

வேதாரணியம் நகரமே தொண்டர்களும், வேடிக்கை பார்க்கவந்த பல்லாயிரம் பொதுமக்களும், போலீஸ்காரர்களும், அரசாங்க அலுவலர்களும் அவர்களுடைய ஐந்தாம் படை ஆட்களும் நிறைந்து ஒரு போர்க்களம்போலக் காட்சி அளித்தது. சென்னையிலுள்ள மேலதிகாரிகளுக்கு அவ்வப்போது நிலைமையைத் தெரிவிப்பதற்காக வேதாரணியத்தில் வயர்லஸ் டெலிபோன் நிலையம் நிறுவப் பட்டது.

போலீஸ் பாதுகாப்பும் கண்காணிப்பும் பலமாக இருந்தும், அவர்கள் எதிர்பாராத ஒருவழியில் அகஸ்தியாம் பள்ளிக் கடற்கரைக்கு குறித்த நாளாகிய 1930 ஏப்ரல் 30-ஆம் நாளில் போய் காலைக் கதிரவன் கிளம்பு முன்னரே ராஜாஜியும் அவருடன் சென்ற சிலரும் சட்டத்தைமீறி உப்பை அள்ளிவிட்டனர். இந்த இடத்தில் ஒரு நினைவுத்தூண் 1959-இல் எழுப்பப் பட்டிருக்கிறது.

வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த இந்நிகழ்ச்சியால், தமிழ்நாட்டுக்கு ஒரு பெருமையும் வேதாரணியத்துக்கு ஒரு மதிப்பும் ஏற்பட்டன. வேதங்களைப் பூசித்து, சமயாசாரியார்கள் பாடி மறைக் கதவினைத் திறந்து, நசிகேதன் போன்ற ரிஷிகள் தவம் கிடந்து, பரஞ்சோதி தாயுமானவர் போன்ற பெரியோர்கள் பிறந்து புனிதமடைந்த வேதாரணியத்தின் ஒளி மங்காது நம் தலைமுறையில் மேலும் பரவிற்று.

ஏப்ரல் 30-லேயே ராஜாஜி கைது செய்யப்பட்டார். அதன்பின் க. சந்தானம், சர்தார் வேதரத்தினம், ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் ஒருவருக்குப்பின் ஒருவ

ராகச் சர்வாதிகாரிகளாக இருந்து இயக்கத்தை நடத்தி வந்தனர். மொத்தம் 375 பேர் சிறைசென்றனர். பல நூறுயிரம் மக்கள் உணர்ச்சி பெற்றனர். தொண்டர்களுக்கு உதவியவர்கள் அலுவலர்கள் விளைத்த இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டனர். கள்ளுக் கடை மறியலும் நடைபெற்றது. காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்படும்வரை கிளர்ச்சிநிலை நீடித்தது.

1932–இல் வரிகொடா இயக்கம் நடைபெற்றது. கதர் உண்டியல்கள் வசூலிக்கப்பெற்றன.

1933–இல் சட்டத்தை மீறி, பல்லாயிரம் மக்கள் உப்பெடுத்தனர். இதற்குப் பிறகு நடைபெற்ற இயக்கங்களில் சி. மருதவாணம் பிள்ளை, வி. நாடிமுத்துப் பிள்ளை, டி. வி. சடகோபாச்சாரியார் ஆகியோர் பெரிதும் ஈடுபட்டனர்.

**வெள்ளையனே வெளியேறு**

1942–இல் வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் தொடங்கியதன் எதிரொலியாக நாடெங்கும் பெரிய அளவில் கலகங்களும் வன்முறை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அப்போது மன்னார்குடியில் ஓராயிரம் மக்கள் திரண்டெழுந்து கம்பு, கத்தி, வாட்கள் ஏந்திச்சென்று தந்திக் கம்பிகளை அறுத்தனர்; இரயில் நிலையத்துக்குத் தீ வைத்தனர். பஸ் போக்குவரத்து நடைபெறாதவாறு தடுத்தனர். அரசாங்க அலுவகங்களைத் தரைமட்டம் ஆக்கினர்.

கும்பகோணத்தில் பத்தாயிரம் மக்கள் தடை உத்தரவை மீறி, காந்திமைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்தினர். துப்பாக்கியால் சுட்டும், தடியால் அடித்தும் போலீசார் கூட்டத்தைக் கலைத்தனர்.

நாச்சியார்கோயில் அருகே ஒரு பாலம் உடைக்கப் பட்டது. திருத்தருப்பூண்டிக்கு அருகே ஓர் இரயிலைக் கவிழ்க்கச் சதி நடைபெற்றது. சீர்காழி வட்டத்தில் உப்பனாறு பாலத்துக்கு வெடிவைக்கப்பட்டது. தஞ்சாவூர், திருவையாறு, நீடூர் போன்ற இடங்களில் பொது மக்களின் குமுறல் பலவகையாக வெளிப்பட்டது.

## தென் ஆப்பிரிக்காவில்

டர்பனில் மகாத்மா காந்தியடிகளின் உற்ற நண்பராக இருந்தவரும், நேட்டால் இந்தியக் காங்கிரசின் துணைத்தலைவராக இருந்தவரும் ஆகிய பொறையார் ஆர். பி. செட்டி (*1874-1961*) இம்மாவட்டத்தினரே. இவரைக்காண, காந்தியடிகளும் கஸ்தூரிபாய் அம்மையாரும் *1914*–இல் பொறையாருக்கு வந்தனர். அதுவே, தமிழ் நாட்டுக்குக் காந்தியடிகளின் முதல் வருகையாகும்.

தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய அறப்போரில் கலந்துகொண்ட வள்ளியம்மை அம்மையார் இந்த மாவட்டத்தவரே ஆவார்.

எனவே, உரிமைப் போரில் தஞ்சைமாவட்டம் குறிப்பிடத்தக்க பங்கு கொண்டிருக்கிறது என்று கூறலாம்.

## தமிழ்த் தொண்டு

தஞ்சை மாவட்டத்தின் தமிழ்த்தொண்டு மிகப் பெரியது. தமிழ் வளர்த்த சோழர்கள் ஆண்ட இப்பகுதியில் எழுந்த இலக்கியங்கள் பல. அவற்றுள் அழிந்தன சில. அழியாது எஞ்சியவற்றுள் பெரிய புராணம், கம்பராமாயணம், வீரசோழியம், தண்டியலங்காரம், கலிங்கத்துப் பரணி, மூவருலா, குலோத்துங்கன் கோவை என்பன குறிப்பிடத்தக்கன. கம்பனும், ஒட்டக்கூத்தனும், செயங்கொண்டானும் வாழ்ந்த பெருமை இம்மாவட்டத்தைச் சேரும்.

19–ஆம் நூற்றுண்டில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை யும் இருபதாம் நூற்றுண்டில் புகழ்பெற்ற புலவர்களாக விளங்கிய மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமி நாத ஐயர், மறைமலையடிகள், நடுக்காவிரி ந. மு. வேங்கட சாமி நாட்டார், தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை ஆகி யோரும் செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியாரும் தங்களுடைய சீரிய தொண்டால் இம் மாவட்டத்துக்குப் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இசைத் தமிழ்க்கும் நாடகத் தமிழ்க்கும் இம்மாவட் டம் செய்திருக்கும் தொண்டு ஈடு இணையற்றது; இவை பற்றிப் பிறிதோரிடத்தில் கூறியுள்ளோம். ஆதீனங்கள் செய்துள்ள தொண்டும் இவ்வாறே போற்றத்தக்கது; பக்தி இலக்கியங்கள் பல தோன்றியதும் இம்மாவட்டத் திலேயே ஆகும். வட இந்தியாவின் பல நகரங்களில் தமிழ்ச் சங்கங்களைத் திறம்பட நடத்தி வருபவர்களும், ‘கல்கி’ கிருஷ்ணமூர்த்தி, மலேயா ‘தமிழ் முரசு’ ஆசிரியர் சாரங்கபாணி போன்ற பத்திரிகை ஆசிரியர்களும் தென் ஆப்பிரிக்காவில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரும்பாடு பட்ட பொறையார் ஆர். பி. செட்டியும் இலங்கையில் இன்பத் தமிழ் வளர்க்கும் சு. நடேசப்பிள்ளையும் தமிழ் மக்களின் உள்ளங்களை ஈர்த்த எழுத்தாளர் பலரும் தஞ்சாவூர் மாவட்டத்தினர் ஆவர்.

**ஊர்ப்பெயர்கள்**

இம்மாவட்டத்தில் சமயத் தொடர்புடைய தலங்கள் மிகுதியாக இருப்பதால், ‘திரு’ என்னும் அடைமொழி ஊர்ப்பெயர்களில் இடம் பெற்றிருக்கிறது. தரங்கம்பாடி, திருமழப்பாடி, எதிர்கொள்பாடி என்று ‘பாடி’ என்னும் இறுதிச் சொல்லுடைய ஊர்களும், குருவிக்காரன் ஏந் தல், பயமறியான் ஏந்தல் என்று ‘ஏந்தல்’ என்னும் இறுதிச் சொல்லுடைய ஊர்களும், அமரடக்கி, மரம்

அடக்கி என 'அடக்கி' என்னும் இறுதிச் சொல்லுடைய ஊர்களும் உள்ளன.

நெல்குத்தகை ஆலங்குடி, தம்பிக்கு நல்லான் கோட்டை, எடுத்துக்காட்டு, ஏழுமகளூர், கண்கொடுத்த வாணிகம், நாலில் ஒன்று, சிமிழி, ஆறுபாதி, அம்மையப்பன், தெலுங்குக் குடிக்காடு, மேலப் பெருமழை என்னும் பெயருடைய ஊர்களும் தஞ்சை மாவட்டத்தில் உள்ளன.

சஹாஜிபுரம், சரபோசிபுரம், சரபோசிராசன் பட்டினம் போன்ற ஊர்ப் பெயர்களும் மானோஜியப்பா தெரு போன்ற தெருப் பெயர்களும் மராத்திய மன்னர்களின் தொடர்பை நினைவூட்டுகின்றன. சோழ அரசர் தொடர்பை நினைவூட்டும் கடாரங்கொண்டான், திரிபுவனம் போன்ற ஊர்களும் இருக்கின்றன.

இம்மாவட்டத்திலுள்ள சில ஊர்களின் பெயர்கள் பிற மாவட்டங்களிலும் நிலவுகின்றன. சான்றாக நெல்லை மாவட்டத்திலுள்ள குற்றாலம், பாபநாசம், வல்லம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இம்மாவட்டத்திலேயே கோனேரிராசபுரம், ஆலத்தம்பாடி, கொருக்கை, கோடிக்கரை, நல்லூர், ஆவுடையார் கோயில் என்னும் பெயர்களைக் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்கள் உள்ளன.

ஊர்களின் பெயரைச் சுருங்கக்கூறும் மரபு இங்கு மிகவும் பரவியிருக்கிறது. சான்று:—

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | — | தஞ்சை |
| நாகப்பட்டினம் | — | நாகை |
| கருந்தட்டான்குடி | — | கரந்தை |
| தரங்கம்பாடி | — | தரங்கை |
| திருப்பனந்தாள் | — | பனசை |
| தருமபுரம் | — | தருமை |

| | | |
|---|---|---|
| கும்பகோணம் | — | குடந்தை |
| அறந்தாங்கி | — | அறந்தை |

சில ஊர்களின் பழைய பெயர்கள் மறைந்து புதிய பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

| பழைய பெயர்கள் | | புதிய பெயர்கள் |
|---|---|---|
| குடந்தை | — | கும்பகோணம் |
| நந்திபுர விண்ணகரம் | — | நாதன்கோயில் |
| திருமேற்றளி | — | திருமத்தாடி |
| சுந்தரசோழ விண்ணகரம் | — | சுந்தரப் பெருமாள் கோயில் |
| கோபிநாதப் பெருமாள் கோயில் | — | கோணப்பெருமாள் கோயில் |
| ராஜராஜேசுவரம் | — | தாராசுரம் |
| சந்திரலேகை | — | செந்தலை |

தமிழ்ப்பணியில் சிறந்து விளங்கும் சங்கங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

**கரந்தைத் தமிழ்ச் சங்கம்**

இச்சங்கம் 1911 மே 14-இல் நிறுவப்பெற்றது. தமிழ் அறிஞர் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தும் தமிழ்ப்பொழில் என்னும் இலக்கியத் திங்கள் இதழை வெளியிட்டும் திக்கற்ற மாணவர் இல்லம் நடத்தியும் இச்சங்கம் தொண்டாற்றி வருகிறது.

1916 முதல் தொடக்கப்பள்ளியும் 1944 முதல் கரந்தைப் புலவர் கல்லூரியும் நடைபெற்று வருகின்றன. 10,000 நூல்களுள்ள நூல் நிலையம் இருக்கிறது.

இச்சங்கத்தின் பெருவளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் தமிழ் மொழியின் நலம் நாடிப் பலவாறு பணியாற்றிய தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை

ஆவார். சங்க வெளியீடுகளில் குறிப்பிடத்தக்கவை—விபுலானந்த அடிகளின் யாழ்நூல், கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர் முதலியன. இப்போது சங்கத்தின் தலைவராக இருப்பவர் ச. சுயம்பிரகாசம் ஆவார்.

இனி, இம்மாவட்டத்தில் பேச்சு வழக்கிலுள்ள சொற்களின் பட்டியல் ஒன்றைத் தருவோம் :

நகிடி பண்ணுதல் – கேலி பண்ணுதல் (பகிடி பண்ணுதல் என்று யாழ்ப்பாணத்தில் கூறுவர்.)

நெல் பத்தாயம் – நெல் கொட்டி வைக்கும் மரப்பெட்டி. இதனை "நெல் குதிர்" என்றுங் கூறுவர். மண்ணால் வனையப்பெற்ற கூடுக்கு "குதிர்" என்றும் மரத்தால் செய்யப்பெற்ற பெட்டிக்குப் "பத்தாயம்" என்றும் பெயர் உண்டு.

பட்டி - வாயாடி

பரம்பாட்டல் அடித்தல் - வீணைகப் பரபரப்பு ஏற்படச் செய்வது

படிமால் - குறிப்புச்சிட்டை

பிலாக்கணம் பாடுவது - ஒப்பாரி வைத்தல்

ராயசம்* – ஆதீன மகாசன்னிதானத்தின் அந்தரங்கச் செயலர்

லவணம் – உப்பு. இரவில் உப்பை, சர்க்கரை என்று குறிப்பிடுவர்.

வாங்கல் – சண்டை. மனத்தாங்கல் என்னும் சொல்லின் சுருக்கமாகிய தாங்கல் என்பதன் திரிபு.

வாழக்கொல்லை - வீட்டின் பின்புறமுள்ள தோட்டம்

மஞ்சம் - திருவிழாக்களில் உற்சவமூர்த்தியைத் தூக்க உதவும் கேடயம்

---

*இது நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட ஒரு பதவியின் பெயர். அரசர்களின் ஆணைகளை எழுதிவைத்து நிறைவேற்றும் அலுவலர் அந்நாளில் 'ராயசம்' எனப்பட்டனர்.

மாகாணி – பட்டினம் படி

மோரி - சாக்கடை (மோரி வாய்க்கால் - சிறு வடிகால். அவன் வயலுக்கு மோரி வெட்டிக் கொண்டிருக்கிறான்.)

அமுது படைத்தல் - ஏழைகளுக்குச் சோறு போடுதல்

அலங்கம் - கோட்டை அரண். இது நீர் அரண் ஆகிய அகழிக்கும் மதில் அரணுக்கும் இடைப்பட்ட பகுதி.

ஆள் தள்ளுகிற ஆள் - ஆள் திரட்டும் ஆற்றல் பெற்றவர்

ஆளோடி - தெருவின் ஓரம்; மக்கள் நடக்கும் பகுதி. (ஆளோடியில் புகையிலையைத் துப்பு)

ஆமானே - ஆமாம் தானே?

ஈருயிர்க்காரி - கருவுற்ற பெண் (ஈருயிர்ப் பிளவு – புறநானூறு)

உளாக்கட்டிக்கு இல்லை - ஏமாற்றுக்குச் சொல்லுவதில்லை

உடான்சுவிடறயே - ஏமாற்றுகிறாயே

எக்கச்சக்கம் - சிக்கல் (எக்கச்சக்கமான கூட்டம் என்ற சொற்றொடருக்கு, “பெரிய கூட்டம்” என்று பாண்டி நாட்டிலும் “சிக்கலான கூட்டம்” என்று சோழநாட்டிலும் பொருள் உண்டு.)

எதேச்சையாக – தனி ஒருவர் தாமே செய்தல் (இந்தக் கோயில் எதேச்சையாகக் கட்டப்பட்டது.)

எண்ப்ளது – எண்பது

எம்மாங்காசு - என்ன விலை?

ஒக்கப்பண்ணுதல் – செப்பனிடுதல், சீராக்குதல்

ஒழுங்கை – சிறு தெரு (யாழ்ப்பாணத்திலும் இவ்வழக்கு உண்டு)

காரியம், பெரிய காரியம் - சாவு

கிடுக்கு - மூலை முடுக்கு

குத்து – ஊற்று (சாம்பார் குத்து)

கும்மாணம் – கும்பகோணம் (கும்மாணம் போயிருந்தீங்களாமே?)

சார்வு, வாரி - வாரம், தாழ்வாரம்

சிரி - பெண் குறி

சீர் பண்ணுவது, செப்பம் செய்வது - வீட்டைப் பழுது பார்த்தல்

டன்னக்கால் - யானைக்கால்

துப்புரவு - சுத்தப்படுத்துவது

தொண்டி - கடலின் கழி (கடலினின்றும் உட்பாய்ந்த கழி). காயலென்றும் இதனைக் கூறுவர்.

தொன்னை - பெண் குறி. (பாயசம் முதலியன குடிக்க உதவும் பொருளை "இலை ஏனம்" என்பர்.)

இவருக்கு மாஸ்கோவும் வாஷிங்டனும் கொல்லைத் தலைமாடு.

அந்தக் கேள்வி சக்கியிலே நிக்குது.

வில்வண்டியைத் தாண்டச்சே சக்கரத்திலே சாட்டையைக் கொடுத்துக்கிட்டு "ஜமா"விலே போருனே போன்ற சொற்றொடர்களைத் தஞ்சை மாவட்டத்து எழுத்தாளர்கள் எழுதுகின்றனர்.

**கல்வெட்டுக்கள்**

சில ஆயிரம் கல்வெட்டுக்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இவற்ருல் தமிழ்நாட்டு வரலாறு விளக்கம் பெற்றிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்துக் கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்திகளைப் பற்றிப் பொதுப்படையாகத் தெரிந்து கொள்வதற்காக, திருவையாறு வடகயிலாயம்

கல்வெட்டைப்பற்றிய விளக்கத்தைக் கீழே தந்திருக்கிறேன்.

## திருவையாறு ஒலோக மாதேவச்சரம் கல்வெட்டு ஆய்வுரை

**இடமும் எடுப்பித்தவரும் காலமும் :**—ஒலோகமாதேவீச்சரம் என்பது, திருவையாற்றில் ஐயாறப்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் வடபாற் பெரிய புறத் திருச்சுற்றுலேயின் கண் இருக்கும் ஒரு கற்கோயிலாகும். இதனை எடுப்பித்தவர் இஞ்சி சூழ் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு, சோழ மண்டலத்தைக் கி. பி. 985 முதல் 1014 வரை ஈடும் எடுப்பு மின்றி ஆண்ட முதல் இராச ராச மன்னனுடைய முதன் மனைவியாராகிய ஒலோகமா தேவியாராவர்.

இக்கோயில் கி. பி. 1005-இல் கட்டப்பட்டது. எனவே இது தஞ்சை இராசராசேச்சுரத்தைக் காட்டிலும் பழமை வாய்ந்தது.

**கோயிலின் பாகுபாடு :** இக்கோயில் உண்ணாழிகை அல்லது கர்ப்ப இல், இடை நாழிகை அல்லது அர்த்த மண்டபம், பெருநாழிகை அல்லது மகா மண்டபம் என்ற மூன்று பகுதிகளை உடையது.

**சிற்பச் சிறப்பு :** தட்சிணாமூர்த்தி திருமேனி இக்கோயிலின் சிற்ப வன்மையை உணர்த்துவதாகும்.

**சாசனச் சொற்கள் :** திருவமுது, திருப்பரிகலம், திருப்பரி சட்டம், திருப்பள்ளித் தர்மம் என்னும் சொற்கள் கல்வெட்டுக்களில் உள்ளன. இவைகளுள் திருப்பரி சட்டம் என்பது கடவுட்குச் சாத்தும் ஆடையாகும். இச்செய்தி '' திருப்பரி சட்டம் கழுவும் வண்ணானுக்கு ''; '' திருப்பரி சட்டம் ஒலிக்கும் வண்ணத்தானுக்கு '' என்னும் இக்கோயில் கல்வெட்டுப் பகுதிகளால் அறியலாகும். இக்காலம் இச்சொல் திருப்பரி வட்டம் என்று வழங்கப்படுகிறது. திருப்பள்ளித்தாமம் பறிப்பார்க்கும் என்றும் வேற்றிடங்களிலுள்ள

கல்வெட்டுக்களினுலும் ''திருப்பள்ளித்தாமம் கொய்து'' என்னும் எறிபத்த நாயனுர் புராணத்தின் ஒன்பதாம் பாடல் அடியாலும் இச்செய்தி நன்கு விளங்கும்.

**வரலாற்றுச் செய்திகள் :** முதல் இராசராச மன்ன னுக்கு மாதேவடிகளார், இரண்டாம் குந்தவையார் என்னும் இவர்களோடு மற்ருெரு பெண்ணும் இருந்திருக்க வேண்டுமென்ற கருத்து இக்கோயில் கல்வெட்டால் உறுதி எய்துகின்றது. அப்பெண்ணின் பெயர் **அருமொழி சந்திர மல்லியரான கங்கா மாதேவியார்** என்பதாம்.

முதல் இராச ராசனது கல்வெட்டுப் பகுதியிற் குறிக்கப் பெறும் **''அதிகாரிச்சி சோமயன் அமித்திரவல்லியும்''** என்னும் தொடரிலிருந்து பெண்மக்களுக்கும் அரசியலில் உரிமை கொடுத்து ஆண்ட செய்தி தெரிகிறது.

கோயிலே எடுப்பித்த திரு ஒலோகமாதேவியாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களும் இக் கல்வெட்டுக் களால் கிடைக்கின்றன.

**பூசை முதலியன :** இக்கோயிற் சிவபெருமானுக்கு நான்கு காலம் பூசைகள் நடைபெற்று வந்தன. நெய் கொண்டு நுந்தாவிளக்குகளும் சந்திவிளக்குகளும் பல ஏற்றப் பட்டு வந்தன. பருப்பமுது, கறியமுது, போனகம், பொறிக் கறியமுது, தயிரமுது, சர்க்கரையமுது, அப்ப அமுது இவை கள் கொண்டு திருவமுது செய்விக்கப்பெற்றன.

**விசேட பூசைகள் :** அயன சங்கிரமணம் இரண்டு, விஷு சங்கிரமணம் இரண்டு, திங்கட்டொடக்கம் எட்டு, இவைகளில் விசேட பூசைகள் நடைபெற்றன. கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் மிகுதியான விளக்குகள் ஏற்றப் பட்டு வந்தன.

**திருவிழாக்கள் :** இவ்வம்மையார் தம் கணவனுர் பிறந்த நாளாகிய சதயத் திருவிழாப் பன்னிரண்டும், சித்தி ரைப் பெருந்திரு விழா ஒன்றும் ஆகப்பதின் மூன்று திருவிழாக் களையும் இத்தலத்து நடத்துவித்தார். இவைகளுள் சதயத் திருவிழா திங்கள்தோறும் நடைபெற்று வந்தமையால்

ஆண்டு விழா என்று பெயர் பெறும். இவைகளுக்குத் தக்க நிவந்தங்கள் விடப்பட்டிருக்கின்றன.

**திருவாபரணங்களும் திருப்பரிகலங்களும் :** இவ்வம்மையாரும் இவர் குடும்பத்தார்களும் கொடுத்துள்ள பொன்னாற் செய்து மணிகள் பதித்த அணிகலன்களையும், வெள்ளியாற் செய்த பரிகலங்களையும், எவரும் மாற்றிவிடாவண்ணம் நிறையெடுத்து அவற்றில் மணிகள் சேர்க்கப்பெற்றிருந்தபின் அவை இத்துணை என்று உரைத்திருப்பது மகிழ்தற்குரியதாகும். (பரிகலம் - இறைவர் முதலியோர் திருவமுது செய்தருளும் பாத்திரம்).

**அணிகலன் வகைகள் :** இக்காலத்தில் வழக்கத்தில் இல்லாத பல அணிகலன்களின் பெயர்கள் இக்கோயில் கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன. அவைகள் கோளகை, தாழ்க்கூட்டுக் கம்பி, ஒரணை, திரிசரம், பஞ்சசரி, ஸ்ரீசந்தம், முத்தின் வளையல், முத்தின் பட்டிகை, குதம்பை, நீலத்தின் உழுத்தோரணை, திருச்சன்னவடம், முத்தின்காற்காறை, சுட்டி, இடுக்குவளையல் முதலிய.

**பரிகலன் வகைகள் :** மானவட்டில், வெள்ளித்தளிகை, வெள்ளிமண்டை, வெள்ளிக் கலசம், வெள்ளிச் சட்டுவம், வெள்ளிக் கச்சோலம், முதலியன.

**பலவகை இசைக் கருவிகள் :** இக்கோயிலில் வழிபாடு நடக்குங்கால் உடுக்கை, உவச்சன் தலைப்பறை, கண்டை, திமிலை, மத்தளம், வீணை, கறடிகை முதலியவைகளைக் கொண்டு இசைகள் இயக்கப்பட்டு வந்தன.

**கோயிற் பணிப்பெண்கள் :** இக்கோயில் ஆடல், பாடல் முதலிய பணிகளைச் செய்வதற்குப் பதியிலார் முப்பத்திருவர் இருந்தனர். அவர்களுக்கு மொத்தத்தில் பதினறு வேலி நிலங்கள் விடப்பட்டிருந்தன. இக்கோயிற் கல்வெட்டுப் பகுதியிற் காணப்பெறும் ' நக்கன் ஜயாநன் கலியுக சுந்தரத் தலைக்கோலியும் உள்ளிட்ட முப்பத்திருவர்'' என்னும் தொடரால் இவர் தலைக்கோற்பட்டம் பெற்றவர்கள் என்று தெரிகின்றது. தலைக்கோல் என்பது ஆடல் பாடல்களிற் சிறந்த

பதியிலார்களுக்கு அரசனுற் கொடுக்கப்படும் பட்டமாகும். இச்செய்தியைச் சிலப்பதிகாரமும் விளக்கும். இப்பதியிலார் பெயர்களின் முன் நக்கன் என்னும் அடைமொழி கொடுக்கப் பட்டதிலிருந்து இவர்கள் சிவப்பணிக்கு உரியவர்கள் என்பதும் தெரியவருகிறது. நக்கன் என்பது சிவபெருமானுக்குரிய பெயர்களில் ஒன்ருகும்.


**இத்தளி செய்தவன் பெயர் :** சிற்ப நுட்பம் வாய்ந்த இக்கோயிலைச் செய்தவன் நக்கன் நச்சனுன கலியுக ரம்பைப் பெருந்தச்சன் ஆவன். இச்செய்தி கங்கை கொண்ட சோழனின் மூன்ரும் ஆண்டுக்கல்வெட்டுப் பகுதியிற் காணப்பெறும் 'மேற்படி தளிசெய்த நக்கன் நச்சனுந கலியுக ரம்பைப் பெருந்தச்சனுக்கும் மரத்தச்சக் காணியால் நிலன் காலும்''— என்னும் தொடரால் அறியலாம்.

**நிலநிவந்தம் :** இக்கோயிலுக்கு ஒலோகமாதேவியார் இராசேந்திர சிங்க வளநாட்டு மிறைக் கூற்றத்துக் கலவாய்த் தலை என்னும் ஊரில் வீர நாராயண சதுர்வேதி மங்கலத் தார்க்கு நீர் போகும் குஞ்சரமல்லி வாய்க்காலுக்கு வடபாற் சற்றேறக்குறைய 102 வேலி நிலத்தை நிவந்தமாகவிட்டிருந் தார்.

தஞ்சை மாவட்டத்து நாட்டுப் பாடல்களுக்குச் சான்ருக ஒரு பாடலைத் தருவோம் :

## சிறுவர் பாடல்

காக்கைக்கும் காக்கைக்கும் கல்யாணமாம் !
கருத்த பெட்டியில் மஞ்சளாம் !
அள்ளித் தெளி, சந்தனம் !
அழகு போல மாப்பிள்ளை !
கொட்டுக் காரன் சப்பட்டை !
குதிரைக் காரன் வீரப்பன்,
எங்க(ள்) மச்சான் பேயாடி,
எல்லோரும் வந்து பாருங்க !


தஞ்சாவூர்
மாவட்டம்
வட்டங்கள்
தென் ஆர்க்காடு
சீர்காழி
வங்காளக் குடாக் கடல்
மாயூரம்
கும்பகோணம்
திருச்சிராப்பள்ளி
காரைக்கால் பகுதி
நன்னிலம்
பாபநாசம்
தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
மன்னார்குடி
ஒரத்தநாடு
திருச்சிராப்பள்ளி
பட்டுக்கோட்டை
திருத்துறைப்பூண்டி
பாக் ஜலசந்தி
அறந்தாங்கி
இராமநாதபுரம்

## 17. கிழக்குத்தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்

### 1. மன்னார்குடி வட்டம்.

இவ்வட்டம் காவிரியின் கழிமுகப் பகுதியைச் சேர்ந்தது; எனவே, வளம் மிக்கது. மேட்டூர் அணை கட்டியபிறகு வடவாற்றுக் கால்வாயால் இவ்வட்டம் பெரும்பயன் அடைந்திருக்கிறது. நன்னிலம் வட்டத்தையொட்டிய பகுதிகள் மிக வளமாகவும், பட்டுக்கோட்டை வட்டத்தின் எல்லையிலுள்ள பகுதிகள் வளம் குறைந்ததாகவும் உள்ளன. சர்க்கரை ஆலையொன்று இவ்வட்டத்தில் இருப்பதால் கரும்பு பயிரிடுவோர் தொகை பெருகி வருகிறது.

இவ்வட்டத்தின் பரப்பு 750 சதுர கி. மீ ; மக்கள் தொகை இரண்டரை லட்சத்துக்குக் கூடுதலாகவே இருக்கிறது.

**மன்னார்குடி.**

வட்டத்தலைநகரான இவ்வூர், கோட்ட ஆட்சித் தலைமை அலுவலகங்கள் உள்ள ஊராகவும் (1866 முதல்) நகராண்மைக்கழகம் உள்ள ஊராகவும் இருந்துவருகிறது. மக்கள் தொகை, ஏறத்தாழ 33,000. நீடாமங்கலத்திலிருந்து இவ்வூர் வரை இரயில் போக்குவரத்து உண்டு.

சிதம்பரத்துக்கு அருகேயுள்ள காட்டுமன்னார்குடியினின்றும் வேறுபடுத்திக்காட்ட இவ்வூர் ‘ராஜமன்னார்குடி’ என்று குறிப்பிடப்படுகிறது. இங்குள்ள கோயிலின் சில பகுதிகள் முதற்குலோத்துங்கச் சோழனால் கட்டப் பெற்றதால் ‘ராஜ’ என்ற அடைமொழி ஊரின் பெயருக்கு வழங்கப் பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில் இவ்வூர், ஒய்சாளரின் தலைநகராக இருந்ததென்பர். சோழர் கட்டிய மூன்று கோயில்கள் மன்னார்குடியில் உள்ளன.

ராஜகோபாலசாமி கோயில் ஆதியில் சமணர் கோயிலாக இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. இப்போது இது வைணவக் கோயிலாக இருந்துவருகிறது. 16 கோபுரங்கள், 7 பிரகாரங்கள், ஒற்றைக்கருங்கல்லால் 16.5 மீட்டர் உயரமுள்ள கருடத்தூண், வரலாற்றுச் செய்திகள் அடங்கிய கல்வெட்டுக்கள், ஓவியச் சிறப்பு நிறைந்த பழங்காலத்துப் பாவை விளக்குகள் (திருவிளக்கு நாச்சியார்), ஆங்கிலேய அலுவலர் ஒருவர் செய்து வைத்த கருடவாகனம் ஆகியவை இக்கோயிலில் இருக்கின்றன. இக்கோயிலுக்குச் சற்று தொலைவில் 23 ஏக்கர் பரப்புள்ள ஒரு தெப்பக்குளம் இருக்கிறது.

சமணர் சிலர் இன்றும் இவ்வூரில் வாழ்கின்றனர்' சமணர் கோயில் ஒன்று இருக்கிறது. 'வெஸ்லி மிசன்' என்னும் நிறுவனம் இவ்வூரில் வேரூன்றிக் கிறித்தவ சமயத்தைப் பரப்பி வருகிறது; சில ஆண்டுகள் இந்நிறுவனத்தார் இந்நகரில் 'பின்லே கல்லூரி'யை நடத்தினர். இரண்டு கிறித்தவ தேவாலயங்கள் இவ்வூரில் உள்ளன.

1942-இல் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கம் நடைபெற்றபோது, இவ்வூர் நீதிமன்றம் தீக்கிரையாக்கப்பட்டது. மன்னார்குடி மக்கள் பல்லாண்டுகளாக அரசியல் உணர்ச்சி மிக்கவராக இருந்து வருகின்றனர்.

பித்தளைப் பாத்திரங்களும் இருப்புச் சட்டிகளும் ஓரளவு செய்யப்படுகின்றன. மன்னார்குடி வேட்டி எங்கும் புகழ்பெற்றிருக்கிறது. அரசாங்கத்தார் தொடங்கியுள்ள தச்சு-இரும்புத் தொழிற்சாலையில் விவசாயக் கருவிகள் செய்யப்படுகின்றன.

கோட்டூர் அரங்கசாமி முதலியார் நூலகம் இந்நகரில் காணத்தக்கது. சிறந்த உயர்நிலைப் பள்ளிகள் மன்னார்குடியில் உள்ளன. இந்நகரில் மேற்குக் கோடி

யிலுள்ள மேலவாசல், ஒய்சாளர் கட்டிய அரண்மனையின் மேலவாயிலாக இருந்தது என்பர்.

**கூத்தா நல்லூர்**

அயல்நாட்டு வாணிபத்திலும் அரிசி வாணிபத்திலும் சிறந்து விளங்கிவருவதால் ஜாவா, மலேயா, இந்தோச் சீன நாடுகளில் இவ்வூர் முஸ்லிம்கள் பலர் பெரும் பொருள் திரட்டியுள்ளனர். வெளிநாடுகளில் கிடைக்கும் பொருள்களை இங்கு வாங்க இயலும். இவ்வூரில் பெரிய மசூதி இருக்கிறது.

**கோட்டூர்**

தேவாரம்பெற்ற ஒருகோயிலும் திருவிசைப்பாபெற்ற ஒருகோயிலும் இவ்வூரில் இருக்கின்றன. சோழ, நாயக்க, மராட்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. இவ்வூர் கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டே சேக்கிழார் காலம் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

இவ்வூரினரான வள்ளல் அரங்கசாமி முதலியார் (1805—1907) 200 வேலி நிலமும், 12 லட்சம் ரூபாய் ரொக்கமும் அறச்செயல்களுக்கு எழுதிவைத்தார். மாணவர் இல்லம், நூல்நிலையம், புலவர் மன்றம், ராஜகோபால சாமி கோயில் கட்டளைகள் முதலியன இவர்பெயரால் மன்னார்குடியில் நடைபெறுகின்றன. இவரது அறத்தால் முதலியார் மரபினரில் சில ஆயிரம் மாணவர் உணவும் கல்வியும் உறையுளும் பெற்றுள்ளனர்.

இவ்வூரிலிருந்து திருவண்டுதுறை திருக்களர் (என்ற பாடல் பெற்ற) தலங்களுக்குச் செல்லலாம்.

**கோயில் வெண்ணி**

பாடல்பெற்ற இத்தலம் இவ்வூர் இரயில் நிலையத்துக்கு அருகே இருக்கிறது. தேவாரத்தில் இவ்வூர்ப்

பெயர் வெண்ணி' என்று சம்பந்தராலும், அப்பராலும் குறிப்பிடப்பெற்றிருக்கிறது.

**நீடாமங்கலம்**

5,000 மக்கள் வாழும் இவ்வூர் இரயில் சந்திப்பாலும் நெல் ஏற்றுமதியாலும் புகழடைந்திருக்கிறது. ராஜபிர தாப் சிங் 1761-ல் கட்டிய 'யமுனைபாய் சத்திரம்' இவ் வூரில் இருக்கிறது.

**திருக்களர்**

இச்சிற்றூர் திருத்தருப்பூண்டி வட்டத்தின் எல்லை யில் இருக்கிறது. சம்பந்தர் இத்தலத்தைப்பாடியுள்ளார். நடராசர், முருகன், வலம்புரி விநாயகர் சன்னிதிகள் காணத்தக்கவை. இவ்வூரில் கிடைக்கப் பெற்ற சோழர் காலத்துச் செப்பேடுகள் சென்னை எழும்பூரில் அரசாங்கப் பொருட்காட்சி மண்டபத்தில் வைக்கப் பட்டுள்ளன.

**திரு நாட்டியத்தான்குடி**

இது சுந்தரர் பாடல் பெற்ற பதி; கோட்புலி நாய னார் தலம்; இங்குள்ள விநாயகருக்கு, 'கை காட்டி மூர்த்தி' என்று பெயர். இறைவன் மாணிக்கவண்ணர்; இறைவி மலை மங்கையம்மை.

இவ்வூர் இரயில் நிலையத்தின் பெயர் திருநாட்டியத் தான்குடி என்று இருந்தது; பிரிட்டிஷ் ஆட்சியில். செல்வாக்குப் பெற்றிருந்த சர் ஆர். எஸ். சர்மா முயற்சி யால் அவருடைய ஊர்ப்பெயராகிய மாவூர்க்குச் சிறப்புச் செய்ய இரயில் நிலையத்தின் பெயர் 'மாவூர்ச்சாலை' என்று மாற்றப்பட்டது.

திருநாட்டித்தான்குடியிலிருந்த கோட்புலியார், சோழர்களின் சேனைத்தலைவராக இருந்ததாகப் பெரிய புராணத்திலிருந்து தெரிகிறது.

பௌத்த சமண ஆலயங்கள் இங்கே இருந்ததாகச் சுந்தரர் தேவாரம் கூறுகிறது.

**பெருக வாழ்ந்தான்**

இவ்வூரில் ஏற்பட்டுள்ள ஒரு சத்திரத்தில் காயல் நோயையும் கால் நடைகளுக்கு ஏற்படும் நோயையும் போக்கும் 'காடிக் கஞ்சி' வடித்து அன்பளிக்கப் படுகிறது.

**மகாதேவப்பட்டினம்**

இவ்வூர் மன்னார்குடியிலிருந்து 10 கி. மீ. தொலைவில் இருக்கிறது. இங்கு ஐதருக்கும் பிரிட்டிஷ் தளபதி பிரெய்த்வெயிட்டுக்கும் 1781-ல் போர் நடைபெற்றது; சிதைந்த கோட்டையில் இப்போரின் சின்னங்கள் காணப்படுகின்றன.

மாம்பழத்துக்கும் பலாப்பழத்துக்கும் இவ்வூர் பெயர்பெற்றிருக்கிறது.

**லெட்சுமாங்குடி**

இவ்வூரில் சர்க்கரை ஆலையும் கரும்பு ஆராய்ச்சி நிலையமும் உள்ளன.

**வடுவூர்**

ஊர் சிறிது; ஆயினும் இங்குள்ள வைணவக் கோயில் பெரும்புகழ் பெற்றது; நரம்புகூடத்தெரியுமாறு அமைந்துள்ள, இராமரின் வெண்கலச் சிலை காணத் தக்கது.

**பிற ஊர்கள்**

களப்பல், திருமாக்கோட்டை, திருவராமேசுவரம் என்னும் ஊர்கள் இவ்வட்டத்தின் தொன்மையான ஊர் களுள் சில ஆகும்.

## 2 திருத்தருப்பூண்டி வட்டம்

கடற்கரையோரத்தில் இந்த வட்டம் அமைந்திருக்கிறது. இதன் பரப்பளவு 1280 சதுர கிலோமீட்டர்; இங்குவாழும் மக்கள் தொகை இரண்டரை லட்சம்.

வெண்ணாற்றுக் கால்வாய் இவ்வழியே கடலில் சேருகிறது; ஆனால் இவ்வட்டத்துக்கு வருமுன்னரே தண்ணீர் அனைத்தும் பாசனத்துக்குப் பயன்படுத்தப் பட்டுவிடுகிறது; எனவே, இவ்வட்டம் பெரும்பாலும் 'வானம் பார்த்த பூமி'யாகவே இருக்கிறது. வளம் குறைந்த இந்நிலங்களைப் பண்படுத்தப் பசுந்தழை உரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. காட்டுப் பகுதியில் ஆற்றுநீரைக் குழாய் வழியாகப் பாய்ச்சுகின்றனர். இங்கு சராசரி 460 மி. மீ. (18 அங்குலம்) மழை பெய்கிறது; சில ஆண்டுகளில் கார்த்திகை மாதத்தில் புயல் காற்றோடு பெருமழை பெய்யும். கடல் மட்டத்தைவிட நில மட்டம் உயர்ந்ததாக இல்லாமையால், கடல்நீர் இவ்வட்டத்துள் புகுவதும் வழக்கமாகிவிட்டது. இப்பகுதிகளில் உப்புக் காய்ச்சுவதும், படகு கட்டுவதும் மேட்டுப் பகுதிகளில் மிளகாய் வேளாண்மையும் மிகுதியாக நடைபெறுகின்றன. 1200 ஏக்கரில் புகையிலையும், (1950க்குப் பிறகு) 2000 ஏக்கரில் கரும்பும் பயிரிடப்படுகின்றன. வேதாரணியம் வட்டாரத்தில் காடுகளும் உப்பளங்களும் தலைஞாயிறு வட்டாரத்தில் கடலோரத்தில் மானவாரி நிலங்களும் ஆலத்தம்பாடி, திருத்தருப்பூண்டி வட்டாரங்களில் நன்செய் நிலங்களும் நாச்சிகுளம் முத்துப் பேட்டை வட்டாரங்களில் தென்னந்தோப்புக்களும் உள்ளன. இவ்வட்டத்தில் அரசாங்கத்துக்கு ஆண்டு தோறும் பத்துலட்சம் ரூபாய் நிலவரி கிடைக்கிறது.

ஒரு காலத்தில் தீவுகளாக இருந்த பகுதிகளை, கடல் தன் ஆற்றலால் நிலப்பகுதியோடு ஒன்றுபடுத்திவிட்டது.

இவ்வாறு இக்காலத்தில் ஒன்றுபட்டிருக்கும் இடங்கள் இன்றும் 'தீவு' என்ற பழைய பெயரால் வழங்கி வருகின்றன. சான்று :- மணியந்தீவு, ஓணன் தீவு, புலிபாய்ந்தான் தீவு, தாழையடித் தீவு. தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதியைப் 'புலம்' என்று குறிப்பிடுவது பழந்தமிழர் வழக்கம்; வேதாரணியம் பகுதியில் கத்திரிப்புலம், குறுவப்புலம், கருப்பம்புலம், அம்பலகாரப்புலம் என்று பல சிற்றூர்களின் பெயரில் 'புலம்' என்னும் ஈற்றுச் சொல் காணப்படுகிறது.

இவ்வட்டத்தில் மரக்கலக்கோரை ஆறு என்ற சிற்ருறு ஓடுகிறது. இது கடல்கரையிலிருந்து நிலப்பரப்புக்குள் 16 கிலோமீட்டர் தொலைவுக்கு வருகிறது; கடல் நீர் இந்த ஆற்றின் வழி வந்ததாகவும், மரக்கலங்களை நிறுத்தி வைக்கச் சோழ அரசர்கள் இந்தக் கோரை ஆற்றைப் பயன்படுத்தினர் என்றும் கூறுவர். பல்லவர் காலத்தில் திருத்தருப்பூண்டியில் துறைமுகம் இருந்ததாகக் கருதப்படுகிறது. 1952இலும் 1955இலும் உருவான புயல்களால், கடல்நீர் இவ்வட்டத்துக்குள் புகுந்து பெருஞ்சேதம் உண்டாயிற்று.

இவ்வட்டத்தில் 210 சதுர கிலோமீட்டர் பரப்புக்குக் காடுகள் உள்ளன. தஞ்சை மாவட்டத்தில் இவ்வட்டத்தில் மட்டுமே காடுகளைக் காண இயலும். 'திருத்தருப்பூண்டி' என்பது வில்வவனத்தைக் குறிக்கும். இடும்பாவனம், புஷ்பவனம், கோடியக்காடு, வெட்டியக்காடு, தீபக்காடு என்பனவும் இவ்வாறே காடுகளைக் குறிப்பன.

கோடிக்கரை அருகேயுள்ள கோடியக்காட்டில் ஒடை மரங்கள், விராலி, கட்டாங்கி, வெள்ளைபாவட்டா, தோணி, வெடத்தலம், மாவலிங்கம், பிஞ்சில் என்ற பல வகை மரங்கள் உள்ளன. பாலைமரங்களும் மிகுதியாக இருக்கின்றன. இரண்டாம் ஐந்தாண்டுத்திட்ட காலத்

திலிருந்து சவுக்கை மரம் பயிரிடும் வேலையை அரசாங்கக் காட்டியல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

கோடியக்காட்டில் வலுவுள்ள சிறு குதிரைகள் (Pony) நூற்றுக்கணக்கிலும், திருகைக் கொம்புள்ள வரையாடுகள் (Black Buck) ஆயிரக்கணக்கிலும் உள்ளன. இவை தவிர நரிகளும் புள்ளிமான்களும் காட்டு மாடுகளும் காணப்படுகின்றன.

உம்பளாச்சேரி மாடு என்ற கால்நடை இனம் இவ்வட்டத்து உம்பளாச்சேரி என்ற ஊரைத் தாயகமாக உடையது. இதைச் சீராக வளர்க்க, இவ்வட்டத்தில் திருத்தருப்பூண்டியிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள கொருக்கை என்னுமிடத்தில் அரசாங்கத்தினரால் கால்நடைப்பண்ணை அமைக்கப்பட்டிருக்கிறது. திருத்தருப்பூண்டி – திருவாரூர்ச் சாலையிலுள்ள ஆலத்தாம்பாடியில் தனிப்பட்டவர்கள் நடத்திவரும் பசுமடத்திலும் உம்பளாச்சேரி மாடுகள் பேணி வளர்க்கப்படுகின்றன. குதிரைப்பண்ணை அமைப்பதற்கும் இவ்வட்டம் ஏற்ற பகுதியாகும். சோழமன்னர் காலத்தில் இங்கே குதிரைகள் வளர்க்கப்பட்டன; குதிரைகளுக்காகக் கொள் விளைவிக்கப்பட்டது. சென்னை கிண்டியிலுள்ள குதிரைப் பந்தயச் சங்கத்தினர் அரசாங்கக் கால்நடைத் துறையினருடன் சேர்ந்து இவ்வட்டத்தில் குதிரைப்பண்ணை தொடங்குவது நலம் பயக்கும்.

முத்துப்பேட்டையில் ஆறுகளுக்கும் கடலுக்கும் இடைப்பட்ட உப்பங்கழிகளில் பூநாரை, செங்கா நாரை, வக்கா, கூழைக்கடா, சிரவி, உல்லான் போன்ற பறவை இனங்கள் * ஐப்பசித் திங்கள் முதல் தைத்திங்கள் வரை பல்லாயிரக் கணக்கில் வந்து செல்லுகின்றன. இவற்றை வேட்டையாடுபவரும் வலை போட்டுப் பிடிப்பவரும்

* Sea water birds of the penguin series

கோரையாற்றிலும் வளவன் ஆற்றிலும் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவுவரை படகில் செல்லுவர். கோடிக்கரை யிலும் பறவை இனங்களைக் காணலாம்.

மீன்பிடிகாரருக்கான வலைகள், புகையிலையும் கறுப் புக்கட்டியும் வைப்பதற்கேற்ற தாழ ஓலைப்பாய்கள், அற்புதமான நெட்டிவேலைகள் ஆகியன இவ்வட்டத்தில் கோடிக்கரையிலும், வேதாரண்யத்திலும், திருத்தருப் பூண்டியிலும் முறையோ செய்யப்பெற்றுச் சிறந்த கைத் தொழில்களாக வளர்ந்துள்ளன.

**திருத்தருப்பூண்டி**

இது இவ்வட்டத்தின் தலைநகரம். கோடிக்கரை, திருவாரூர், காரைக்குடி ஆகிய மூன்று திக்குகளிலும் செல்லும் இரயில்கள் சந்திக்கும் நிலையமாகவும் இவ்வூர் இருக்கிறது. திருத்தருப்பூண்டி என்பது இந்நாளில் திருத்துறைப்பூண்டி என மருவி வழங்கிவருகிறது. இவ் வூரின் மக்கள் தொகை 12,000.

**அகத்தியாம்பள்ளி**

இது வேதாரணியத்திலிருந்து இரண்டரைக் கிலோ மீட்டர் தொலைவில் உப்பளத்தை அடுத்துள்ள சிற்றூர். இங்கு அகத்தியர் கோயில் இருக்கிறது. இக்கோயில் சம்பந்தர் பாடல் பெற்றது; அகத்தியர் இவ்வூரில் தங்கி யிருந்ததாக வரலாறு உண்டு. 1930–இல் இங்கு நடை பெற்ற உப்புச்சத்தியாக்கிரக இயக்கத்தின் நினைவாக ஒரு தூண் கட்டப்பட்டிருக்கிறது.

18 சித்தர்களின் ஆசிரமங்கள் இவ்வூரருகே இருந்த தாகக் கூறுவர்.

**இராமர்பாதம்**

இது அகத்தியாம்பள்ளியிலிருந்து கோடிக்கரைக்குச் செல்லும் வழியில் 3 கி. மீ. தொலைவில் இருக்கிறது

இங்கு உயர்ந்த மேட்டில், (சாலையிலிருந்து 15 மீட்டர் உயரத்தில்) இராமருடைய பாதத்தின் கல்லுருவம் பேணிவைக்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்து காடு, கடல், கலங்கரை விளக்கு, உப்பளங்கள் ஆகியவை தெரிகின்றன.

இராமர் பாதத்திற்குத் தெற்கே இரண்டு கி. மீ. தொலைவில் மோடிமண்டபம் இடிந்தநிலையில் இருக்கிறது. வேதாரணியத்தில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் திருவிழாக் காலத்தில் இங்கு வருவது வழக்கம்.

**இடும்பாவனம்**

இவ்வூர் முத்துப்பேட்டைக்கு அருகேயிருக்கிறது. மக்கள்தொகை ஏறத்தாழ 4, 500.

மகாபாரதக் கதையில் குறிப்பிடப்பட்ட இடும்பன் பெயரால் அமைந்த பெரிய கோயில் ஒன்று இவ்வூரில் இருக்கிறது. இக்கோயிலுக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. இவ்வூரில் உயிர் நீர்ப்பவர்கள் உடல்வலி எதுவுமின்றி அமைதியாக இயற்கை நிலை அடைவர் என்பது நம்பிக்கை.

**உம்பளாச்சேரி**

இவ்வூர், இதைத் தாயகமாக உள்ள மாடுகளால் புகழ்பெற்றிருக்கிறது.

இந்த மாடுகள் அடக்கமான உடற்கட்டும் கறுமயிலை நிறமும் உள்ளவை; மணற்பாங்கான பகுதிகளில் பாரம் இழுக்கப் பயன்படுகின்றன ; நஞ்சை நிலங்களில் உழுகவும் உதவுகின்றன; கடிப்பதும் உதைப்பதும் இவற்றின் இயல்பு.

இவற்றின் கொம்பு ஒழுங்காக வளருவதில்லை. ஊட்டச்சத்து அனைத்தும் கொம்புக்கே போய்விடுகிறது. இம்மாடுகள் மூர்க்கக் குணமுள்ளவனவாகவும் இருக்

கின்றன. ஆகையால், கன்றுகளாக இருக்கும்போதே இரும்பைப் பழுக்கக் காய்ச்சிக் கொம்புகளைச் சுட்டு, இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி அவற்றைத் தீய்த்துவிடுவர். கொம்பை மட்டும் எடுத்தால் விகாரமாக இருப்பதால் காதையும் அறுத்துவிடுகின்றனர்.

இந்த இனத்தின் பசுக்கள் குறைந்த அளவில் பால் கறக்கின்றன.

உம்பளாச்சேரி மாடுகள் இவ்வட்டத்திலுள்ள ஆலத்தாம்பாடி கொருக்கையில் அரசாங்கக் கால்நடைத் துறைப் பண்ணையில் பேணி வளர்க்கப்பட்டு வருகின்றன.

**குழகர் கோயில்**

இது கோடியக்கரைக்கு அருகேயுள்ளது; குழக முனிவர் இத்தலத்தில் பூசை செய்ததாக ஒரு வரலாறு உண்டு.

**கோடிக்கரை**

வேதாரணியத்திலிருந்து 11 கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது.

வேதாரணியத்திலிருந்து கோடிக்கரைக்குச் செல்லும் வழியில் இடதுபுறத்தில் ஒரு மேடு இருக்கிறது. அதில் இராமபிரானின் பாதச்சுவடுகள் பழம்பொருள் துறையினரால் மேடுகட்டிப் பாதுகாக்கப்பட்டுள்ளன. சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்ற இராமபிரான், கோடிக்கரையில் பாலம் கட்டும் முயற்சியைக் கைவிட்டு, சேது சமுத்திரம் வழியே பாலம் கட்டினார் என்பர். பிரிட்டிஷாரும் இராமபிரானைப் பின்பற்றி, கோடிக்கரை — காங்கேசன்துறைக் கப்பல் போக்குவரத்தை ஒழித்துக்கட்டித் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்குக் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தினர். இராமபிரான் கோடிக்கரையில் பாலம் கட்டியிருந்தால்,

இராமேசுவரத் தலத்திற்கு இருந்துவரும் புகழ் அனைத்தும் கோடிக்கரைக்குப் போயிருக்கும். காசி—இராமேசுவரம் என்ற சொற்றொடர் காசி - கோடிக்கரை என்று வழங்கி வந்திருக்கும். டாலமி (என்னும் யவன ஆசிரியர்) இவ்வூரைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளது இவ்வூரின் தொன்மைக்குச் சான்றாகும்.

கோடிக்கரையில் கலங்கரை விளக்கு இருக்குமிடத்திற்கு அருகே ஒரு முனை உள்ளது. வெள்ளைக்காரர்கள் பாயிண்டு காலிமோர் என்று இதற்குப் பெயரிட்டிருக்கின்றனர். வடக்கே இருந்து தெற்கு நோக்கிச் செங்குத்தாக வந்து கொண்டிருக்கும் நமது கடற்கரை இந்த முனையில் நேர் கோணமாக மேற்கு நோக்கிச் செல்லத் தொடங்குகிறது (ஒகனேக்கலில் காவிரி திசை மாறுவது போல). கோடிக் கரையில் காலையில் கீழைக் கடலில் சூரியன் தோன்றுவதையும், மாலையில் தெற்குக் கடலில் சூரியன் மறைவதையும் பார்க்கலாம். இது அரிய காட்சி. எனவே, கன்னியாகுமரியிலும் சிறப்புடையது. ஆனால் இந்த இடத்திற்குச் செல்லும் வழியில் சேறும் காடும் இருக்கின்றன. பாதையும் தங்குமிடமும் இல்லை. இக்குறைகளால் இயற்கைச் சிறப்பைப் பலரும் அனுபவிக்க இயலாதவர்களாக இருக்கிறோம்.

திருத்தருப்பூண்டி இரயில் சந்திப்பிலிருந்து இவ்வூர் வரை இரயில் போக்குவரத்து இருக்கிறது. கோடிக்கரையில் கடல் நீராடவும், கோடிக்கரைக் குழகரை வழிபடவும், ஆடி, தை அமாவாசை நாட்களில் கோடிக்கரைக்கு மிகுதியான மக்கள் செல்லுகின்றனர். 22 ஆண்டுகளுக்கொரு முறை நிகழும் அர்த்தோத்திரய விழாவன்று கடல் நீராடுவது சிறப்பாகக் கருதப்படுகிறது. அடுத்த அர்த்தோத்திரயம் 1962 இல் நடைபெறும். அதையொட்டி, கோடிக்கரைக்கு நல்ல சாலைகள் போடப்பட்டு வருகின்றன:

இவ்வூரில், கடல்முனையில் கலங்கரை விளக்கம் இருக்கிறது. போர்க்காலத்தில் இந்த இடத்தில் ராடார்க் கருவி பொருத்தப்பட்டிருந்தது.

பழுப்புச் சணல் நாரிலும் நைலான் நூலிலும் இவ்வூரில் செய்யப்படும் வலைகள் தமிழ்நாடு, கேரள அரசாங்கங்களால் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றன; இலங்கைக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மெல்லிய நூலில் 200 க்கு மேற்பட்ட அளவுகளில் உருமாற்று வலைகள் செய்யப்பட்டு அவையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வூரார் ஊரின் பெயரை, 'கோடியக்கரை' என்று கூறுகின்றனர்.

**முத்துப்பேட்டை**

இது ஒரு சிறு துறைமுகம்; படகுகள் கட்டும் தொழில் இவ்வூரில் சிறந்து விளங்குகிறது; மக்கள் தொகை ஏறத்தாழ 10,000. கடல் வாணிபத்தில் சிறந்த பாட்டை முஸ்லிம் வணிகர் பலர் இவ்வூரினர் ஆவர். சேது எனப்படும் காசி-இராமேசுவரம்சாலை இவ்வூர் வழியே செல்லுகிறது.

இவ்வூரருகேயுள்ள சம்புவாஞேடையில் புகழ் பெற்ற இரண்டு தர்க்காக்கள் உள்ளன. இவற்றில் நிகழும் திருவிழாவுக்குத் தமிழ்நாடெங்குமிருந்து ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் வந்து உடல்நலமும் உளநலமும் பெறுகின்றன.

மூன்ரும் இராஜராஜச் சோழன் காலத்தில் புகழ் பெற்ற கோயிலூர் சிவன்கோவில் முத்துப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கி. மீ தொலைவில் இருக்கிறது.

**தில்லை விளாகம்**

தில்லை விளாகம் இரயில் நிலையத்திலிருந்து 5 கி. மீ. தெற்கே இவ்வூர் இருக்கிறது. மக்கள் தொகை 5,000.

இங்குள்ள கோயில் வைணவர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. இக் கோயிலில் அமைந்துள்ள ராம சாமி வடிவமும் பூமிக்குள்ளிருந்து எடுக்கப்பெற்ற நடராச வடிவமும் வேலைப்பாடுடன் கூடியன.

**வேதாரணியம்** (மக்கள் தொகை 18,000)

இந்நாளில் வேதாரணியமாகிவிட்ட திருமறைக்காடு தமிழ்நாட்டின் தொன்மையான சிறுநகரமாகும். தாயுமானசுவாமிகளும் திருவிளையாடற்புராண ஆசிரியரான பரஞ்சோதி முனிவரும் பிறந்த பதி.

இவ்வூர்த் திருக்கோயிலில் இறைவன் மணக்கோலத்தில் இருப்பதால் மணவாளசுவாமி என்று பெயர் பெற்றிருக்கிறார். பிற கோயில்களில் காணப்படும் மணக்கோலத்துக்கு வித்து இதுவே என்பர். இக்கோயில் வேதங்களால் பூட்டப் பெற்றிருந்ததாகவும், திருநாவுக்கரசர் பதிகமாகிய பதினொரு பாடல்களைப்பாடிக் கடவுளின் மனத்தை மாற்றியதும் கோயில் திறக்கப் பெற்றதாகவும், சம்பந்தர் பாடிய பாட்டால் மீண்டும் பூட்டிக் கொண்டதாகவும் வரலாறு உண்டு. இந்நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் திறந்து பூட்டும்விழா (அடைக்கத் திறக்கப்பாடும் உற்சவம்) மாசி மாதத்தில் நடைபெறுகிறது.

இராமபிரான் இக்கோயிலுக்கு வந்து வேத பூசை நடத்தியதாகவும் மக்கள் நம்புகின்றனர். இதை யொட்டிய விழா மார்கழித் திங்கள்தோறும் நிகழ்கிறது.

பஞ்ச பாண்டவர் கதையை ஒட்டிய பெயர்களுள் 'விழுந்தெழுந்த மாவடி' 'வேட்டைக்காரன் இருப்பு' (வேட்டாருப்பு) என்னும் ஊர்கள் இப்பகுதியில் உள்ளன. வேதாரணியம் கோயில் திருப்பணி ஓராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. யாழ்ப்பாணத்தார்களால் இது கட்டப்பெற்றது. ஈழநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட வெள்ளைக்கல் கீழக்கோபுர வாயிலுக்கும் அனுப்பு மண்ட

பத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் தளமாகப் போடப் பட்டிருக்கிறது. யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள வரணி என்னுஞ் சிற்றுரிலுள்ள பண்டாரத்தார்கள் இக்கோயி லின் தருமகர்த்தாக்களாக உள்ளனர். அவருள் ஒருவர் இங்கே வந்திருப்பது வழக்கம்.

யாழ்ப்பாணத்தாருக்கு இவ்வூர்க்கோயிலில் தனித்த ஈடுபாடு உண்டு. அவர்களில் 300 பேர் இவ்வூரில் உள்ள னர்; காலப்போக்கில் இங்கேயே மணஞ்செய்து கொண்டு நம்மோடு இரண்டறக் கலந்துவிட்டனர். வ்வூரில் 'யாழ்ப்பாணத்தார் வீதி' இருக்கிறது. யாழ்ப் பாணத்திலுள்ள ஓதுவார்கள், பஞ்சாங்கம் கணிப்போர் ஆகியோரின் முன்னோர் இவ்வூரினின்றுஞ் சென்றவர்களே ஆவர்.

இக்கோயிலுக்குத் தனிச்சிறப்புக்கள் பல உண்டு. அவற்றைச் சுருங்கக் கூறுவோம். சரசுவதி கையில் வீணை யின்றி ஏடுமட்டும் இருப்பது, சனி பகவான் தனி விக்கிர மாக இருப்பது, நவக்கிரகங்கள் வக்கிரகமாக இன்றி கிழமை வரிசைப்படி ஒரே நேர்கோட்டில் அடுத்தடுத்து அமர்ந்திருப்பது ஆகியன. சோழர் வரலாற்றைத் தெரிந்துகொள்ள உதவும் 84 கல்வெட்டுக்கள் இக்கோயி லில் உள்ளன.

முதலாம் குலோத்துங்கச் சோழனும் ஏனைய சோழ அரசர்களும் இங்கிருந்து சென்று தான் ஈழநாட்டைப் படையெடுத்தனர். படையெடுப்பில் வெற்றி பெற வேண்டுமென்று அவர்கள் வேதாரணியத்தில் வழிபட்டு, கோயிலுக்கு நெய் விளக்குப் போடுவர்; நெய் விளக்கைப் பராமரிக்க 90 ஆடுகளும், வேதாரணியத்துக்கு அருகே யுள்ள நெய்விளக்கு என்ற சிற்றுரையும் கோயிலுக்கு மானியமாக விட்டிருக்கின்றனர். கோயில் நிலங்களுக்கு

வடகட்டளை, ஆறுமுகக் கட்டளை போன்ற பெயர்கள் உள்ளன.

சித்திரை மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் பார்வதி பரமேசுவரன் திருமணம் இங்கு நடைபெறுகிறது. இறைவன் இறைவிக்கு நிகழும் இம்மணவிழாவுக்கு வருவோர் அனைவர்க்கும் கோயில் செலவில் திருமணச் சாப்பாடு போடப்படுகிறது.

இங்கே காணத்தக்கன :- இருப்புப் பெட்டகத்திலுள்ள மரகத புவனி விடங்கர், இராமர் வழிபட்ட லிங்கம், கதோபநிஷத்தை இயற்றிய நச்சிகேதர் தவம் செய்த இடம் (இவ்விடத்தைக் கண்டதும் ஆச்சாரியா விநோபா பாவே மெய் மறந்தார் என்பர்), விசுவாமித்திர தீர்த்தம் (இதன் நீர் கனமில்லாதது; எவ்விதத் தொத்து நோயும் இந்நீரால் பரவாது என்ற ஐரோப்பிய அறிஞர் ஆராய்ந்து அறிவித்துள்ளனராம்), ஓராண்டுகூட நிறுத்தாமல் ஓடிய வண்ணமாக இருக்கும் தேர்.

1930-இல் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகம் இவ்வூரின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். அப்போது, பல்லாயிரம் போலீசார் இங்கு வந்திருந்தனர்; இந்திய நாடெங்கும் வேதாரணியத்தின் புகழ் பரவிற்று.

மீன், உப்பு, மிளகாய், சவுக்குக்கட்டை, பறங்கி, பூசனி புடலை ஆகிய காய்கறிகள், கவுதாரி மாம்பழம் முதலியன இவ்வூரிலிருந்து ஏற்றுமதியாகின்றன. புகையிலைத் தொழிற்சாலைகளும் சர்தார் வேதரத்தினம் தொடங்கிய பெண்கள் பள்ளியும் இவ்வூரில் உள்ளன. இலங்கைக் கப்பல் போக்குவரத்து இருந்தபோது (1904 வரை) இவ்வூரில் 40 அரிசிக்கடைகள் இருந்தன.

## 3. மாயூரம் வட்டம்

தஞ்சை மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியில் கடலோரத்தில் மாயூரம் வட்டம் அமைந்திருக்கிறது. இதன்

பரப்பு ஏறத்தாழ 700 கி. மீ. இவ்வட்டத்தின் வழியே காவிரி பாய்ந்து வளம் கொழிப்பதால், இங்கு மக்கள் நெருக்கடி மிகுதி. ஏறத்தாழ நான்கு இலட்சம் மக்கள் இங்குவாழ்கின்றனர். கடலோரத்தில் இருப்பதால் ஆண்டு தோறும் சராசரி 1400 மில்லிமீட்டர் மழை பெய்கிறது; பிற வட்டங்களைவிட இங்கு மழை கூடுதலாக இருக்கிறது.

கல்வித்துறையில் இவ்வட்டம் வளர்ச்சியடைந்துள்ளது; வேளாண்மைத்துறையில் இன்னும் வளர்ச்சியடைய வாய்ப்பு இருக்கிறது. பல இடங்களில் வெற்றிலைக் கொடிக்கால் போடப்பட்டிருக்கிறது. இலுப்பை மரங்களும் பங்களூர்-ருமானி-பாதிரி மாம்பழம் காய்க்கும் மாமரங்களும் இவ்வட்டத்தில் மிகுதியாக உள்ளன. ஏராளமான நெசவாளர்களும் இங்கே வாழ்கின்றனர். நாதசுரக் கலைஞர் பலர் இவ்வட்டத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை–தஞ்சை, மாயூரம்-காரைக்குடி, மாயூரம்-தரங்கம்பாடி இரயில் பாதைகள் இவ்வடத்தின் வழியே செல்லுகின்றன.

**மாயூரம்**

(மக்கள் தொகை 50,000).

காவிரிக்கரையிலுள்ள இந்நகரம் மாயூரம் வட்டத்தின் தலைநகரமாகவும், மாயூரம் சீர்காழி என்னும் இரு வட்டங்களையும் கொண்ட மாயூரம் கோட்ட ஆட்சியின் தலைநகரமாகவும் இருக்கிறது. இங்கு நகராண்மைக் கழகமும் இரயில் சந்திப்பு நிலையமும் கல்லூரிகளும் உள்ளன.

மாயூரம், ஆங்கிலேயர் ஆட்சியில் மாயவரம் என்ற பெயர் பெற்றிருந்தது. இந்நகரின் பழையபெயர் மயிலாடுதுறை; அம்மை மயிலாக ஆடிய காவிரித்துறை

யில் அமைந்ததால் மயிலாடுதுறை என்னும் பெயர் ஏற்பட்டது.

'பூவார் சோலை மயில் ஆட
புரிந்து குயில்கள் இசை பாட
காமர் மாலை அருக சைய'

என்று இலக்கியங்கள் காவிரிக்கரையின் சிறப்பை இயம்பும்.

ஆடி 18-இலும் ஐப்பசி மாதத்தில் 30 நாட்களிலும் இங்கே காவிரிக்கரையில் பல்லாயிரம் மக்கள் நீராடுவர். ஐப்பசி மாதத்தின் கடைசிநாளில் - கடை முகத்தன்று நீராடினல் பாவம்யாவும் பறந்துபோம் என்பர். ஐப்பசியில் வர இயலாதவர், கார்த்திகை முதல் நாளில் முழுகலாம்; அந்நாள் 'முடவன் முழுக்கு நாள்' என்று பெயர் பெறும்.

காவிரியின் வடகரையில் வள்ளலார் கோயில், துலாக்கட்ட மண்டபத்தருகேயுள்ள விசுவநாதர் கோயில். சம்பந்தர் பாடிய மயூரநாதர் கோயில், அதன் உட்கோயிலும் அருணகிரி பாடல் பெற்றதுமாகிய குமரக் கட்டளை என்னும் பல சிறு கோயில்களும் திருஇந்தளூரில் ஒரு வைணவக்கோயிலும் உள்ளன. தருமபுர மடமும் மூவலூர் என்னும் வைப்புத்தலமும் இவ்வூரருகே இருக்கின்றன. வள்ளலார் கோயிலிலுள்ள தட்சிணமூர்த்தி, நந்திக்கு உபதேசம் செய்த சிறப்புடையது. நீடாமங்கலத்துக்கு அருகேயுள்ள ஆலங்குடியில் மற்றொரு தட்சிணமூர்த்தி இருக்கிறது.

20, 30 ஆண்டுகளுக்கு முன்பு வெண்ணெய் வியாபாரத்தில் மாயூரம் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் தனி அரசு செலுத்தி வந்தது. காசி, ஹல்வா, நெல்லூர்ப் பச்சை அரிசி, மைசூர் போண்டா, மைசூர் ரசம், பம்பாய் மிக்சர், மலபார் பப்படம், பஞ்சாப் லஸ்ஸி, பெங்களூர்

தக்காளிப்பழம், கொள்ளேகாலம் பட்டுச்சேலே, பூஞ் சோளி, மங்களூர் சீமை ஓடு ஆகியவை போல மாயூரத் தின் பெயர் வெண்ணெய்யுடன் இரண்டறக் கலந்திருக் கிறது. ஆயிரம் ஆனுலும் மாயவரம் வெண்ணெய் ஆகுமா? என்ற பழமொழியும் ஏற்பட்டுவிட்டது.

இப்போது மாயூரத்தில் வெண்ணெய் வியாபாரம் என்பது மறைந்துவரும் தொழில் ஆகும். கோயம்புத் தூர், பொள்ளாச்சி, தாராபுரம், இராசிபுரம் ஆகிய இடங்களிலிருந்து மணமும் குணமும் நிறைந்த வெண் ணெய் பெரிய அளவில் விற்பனேயாகிறது. எனினும் அந்த ஊர் வெண்ணெய்களேச் சில இடங்களில் 'மாய வரம் வெண்ணெய்' என்ற பெயரில் விற்ருல்தான் அவை உடனே விலேப்படுவதாக அனுபவம் நிறைந்த வியாபாரி கள் கூறுவர்.

'பாதிரி' மாம்பழம் காய்க்கும் தோப்புக்கள் இவ் வூரகே உள்ளன. இரும்புப் பெட்டிகள் செய்யும் தொழில் சிறு அளவில் நடைபெறுகிறது. தச்சர்களுக் கும் கருமான்களுக்கும் பயிற்சி கொடுக்கும் நிலேயங்கள் அரசாங்கத்தாரால் நடத்தப்படுகின்றன.

இந்நகரம் பள்ளமான இடத்தில் இருப்பதால் கழிவு நீர் போக இயலாதிருப்பது இவ்வூரில் ஒரு குறைபாடு ஆகும்.

மாயூரம் நகரிலிருந்து கும்பகோணம் சாலேயில் மூன்று கி. மீ. தொலேவில் மூவலூர் ஒரு வைப்புத்தலம் இருக்கிறது.

மாயூரம் நகரிலிருந்து கும்பகோணம் சாலேயில் ஒரு கி. மீ. தொலேவுள்ள சித்தர் காடு என்னும் ஊரில் சித்தர் சிவப்பிரகாசர் சமாதி இருக்கிறது.

**ஆக்கூர்**

தரங்கம்பாடிக்குச் செல்லும் வழியில் இவ்வூர் இருக்கிறது. சம்பந்தர் பாடல்பெற்ற இத்தலம் சேக்கிழார் வழிபட்டதாலும், சோழர் திருப்பணி செய்ததாலும் புகழ் பெற்றிருக்கிறது. இங்குள்ள 'ஆயிரத்துள் ஒருவர்' சிலை மிக அருமையான செப்பு விக்கிரகம்; வார்ப்புக் கலையின் பெருமைக்கு இது எடுத்துக்காட்டாக உள்ளது. 1000 இலைகள் போடப்பட்ட ஒரு விருந்துக்கு 999 பேரே வந்திருந்ததால் குறைவை நிறையாக்க இறைவன் தாமே வயோதிகர் வடிவமாக வந்து எஞ்சிய இடத்தில் அமர்ந்து உணவு உண்ட நிகழ்ச்சியால் ஆயிரத்தில் ஒருவர் என்று பெயர் ஏற்பட்டதாக வரலாறு உண்டு.

'தான்தோன்றி மாடம்' என்பது இங்குள்ள திருக்கோயிலின் பெயர். 'தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே' என்று திருமுறை பாடுகிறது. இன்றும் இத்தகு பெருமையுடைய வேளாளர்கள் இங்கே வாழ்ந்து வருகின்றனர்.

**கடவூர் மயானம்**

இது திருக்கடையூரருகேயுள்ளது; மூவர் தேவாரம் உடையது.

பிரமதேவனை இங்குள்ள மயானத்தில் இறக்கச் செய்து மீண்டும் அந்த மயானத்திலேயே அவரைப் பிறக்கச் செய்து சிவபெருமான் திருவிளையாடல் புரிந்த இடம் இதுவாகும். வைணவக்கோயில் ஒன்றும் இங்கு உண்டு

**குத்தாலம்**

இவ்வூர், மாயூரத்துக்குத் தென்மேற்கே 10 கி.மீ. தொலைவிலிருக்கிறது; மக்கள் தொகை ஏறத்தாழ 8,000

இருக்கும். நெல் வாணிகம் இவ்வூரில் மிகப்பெரிய அளவில் நடைபெறுகிறது.

சிலர் இவ்வூரின் பெயரைக் 'குற்ருலம்' என்று தவருக எழுதிவருகின்றனர். குற்ருலம் என்றும் திருக்குற்ருலம் என்றும் குறிப்பிடப்படும் ஊர் நெல்லை மாவட்டத்தில் உள்ளது; அருவியால் புகழ்பெற்றது. தஞ்சை மாவட்டத்துக் குத்தாலம் ஆத்தி மர வகையான 'உத்தாலம்' என்ற பெயர் பெற்று மருவி, குத்தாலமாகியிருக்கிறது.

தேவாரத்தில் இவ்வூர் திருத்துருத்தி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது

சோழர் கட்டிய மூன்று கோயில்கள் இங்கே உள்ளன. 1 விக்கிரமச் சோழீச்சுரம்; இது சோனேச்சுரர் கோயில் என்று இக்காலத்தில் வழங்குகிறது. (2) மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பெற்ற ஓங்கரேச்சுரம் (3) இவ்விரண்டையும்விட முக்கியமான, 'சொன்னவாறு அறிவார் கோயில்.'

இக்கோயில் மூவர் தேவாரமும் பெற்றது. வரலாற்றுப் புகழ்பெற்ற செம்பியன் மாதேவியால் திருப்பணி செய்யப் பெற்ற பெருமையுடையது; தருமபுர ஆதீனத்தின் சீரிய மேற்பார்வையிலுள்ளது; மணக்கோலத்தில் இறைவனும் இறைவியும் காணப்படும் சிறப்பைப் பெற்றது; எழில் நிறைந்த சண்டிசுவரர் செப்புப் படிமம் உடையது.

குத்தாலத்துக்குச் செல்லுபவர்கள் அருகேயுள்ள வேள்விக்குடி, திருமணஞ்சேரி, எதிர்கொள்பாடி என்ற மூன்று தலங்களுக்கும் செல்லுவது நன்று. இவையாவும் திருமணக்கோலத்தில் இறைவனின் அழகிய வடிவங்களை யுடைய பதிகளாகும்.

வேள்விக்குடியில் திருமணக்கோலத்திலுள்ள பார்வதி-கல்யாணசுந்தரர், தமிழ்நாட்டுச் சிற்பக்கலையின்

மிக அரியபடைப்பு. இச்சிற்பத்தின் படத்தையே சிற்பக் கலை அறிஞர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் மண மக்களுக்கு அன்பளிப்பது வழக்கம். இச்சிற்பம் தரை மட்டத்திற்குக் கீழே புதைந்து கிடந்து எடுக்கப்பெற்ற தாகவும், இதன் மதிப்பு ஐந்து இலட்சம் ரூபாய் என்று பொருட்காட்சி அலுவலர் கணக்கிட்டிருப்பதாகவும் கூறுவர். வேள்விக்குடி, குத்தாலத்திலிருந்து 5 கி. மீ. தொலைவில் காவிரியின் மறுகரையிலுளது. இவ்வூருக்கு அருகேயே திருமணஞ்சேரி இருக்கிறது. மேலைத் திருமணஞ்சேரி என்பதே எதிர்கொள்பாடி.

### குறுக்கை

இது மன்மதனை எரித்த இடம்; மாயூரத்திலிருந்து மேற்கே எட்டு கி. மீ. யில் இருக்கிறது.

### கூத்தனூர்

பூந்தோட்டம் இரயில் நிலையத்திலிருந்து 4 கி. மீ. தொலைவிலும், ஊரிலிருந்து திருவீழிமிழலைச் சாலையில் ஒன்றரை கி. மீ. தொலைவிலும் ஒட்டக்கூத்தர் அமைத்த சரசுவதி கோவில் காணத்தக்கது. தலையும் முண்டமும் ஒட்டுவதற்காகக் கூத்துச்செய்ததால் அப்புலவர் பெயர் ஒட்டக்கூத்தர் ஆயிற்றும். ஒட்டக்கூத்தர் பிறந்த ஊர் இதுவே என்று சிலர் கூறுவர். இக்கருத்துக்கு மாறுபட' மலரி என்பதே அவர் ஊரென்று தண்டியலங்காரப் பாடல் காட்டி நிலைநாட்டுவோரும் உண்டு.

### கூறைநாடு

இது மாயூரத்தின் ஒருபகுதி. இரயில் சந்திப்புக்கு அருகேயுள்ளது. இவ்வூர்க்குத் தனியூர் என்றும் இங் குள்ள கோயிலுக்குப் புழுகீசம் என்றும் பெயர். மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை 'தனி யூர்ப் புராணம்' பாடியுள்ளார்.

தஞ்சை மாவட்டம் ஆடவர்க்கு அழகூட்டும் மென்மையான துகிலி அங்கவஸ்திரம் நெய்யும் துகிலி* என்னும் ஊரைத் தன்னகத்தே கொண்டிருப்பதுபோல பெண்டிருக்கு விருப்பமான கூறை செய்யும் 'கூரைநாடு' என்னும் ஊரையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இவ்வூரில் சிறந்த பட்டுச்சாலியர் மிகுதியாக உள்ளனர். கூறை என்பது புடவைக்குப் பெயர். திருமணத்தில் தாலிகட்டும்போது மணமகள் உடுத்திக்கொள்ளும் சேலைக்குக் 'கூறைப் புடவை' என்று பெயர். 'கூறையும் தாலியும்' என்ற சொற்றொடரும் வழங்கி வருகிறது.

கூறை நாடு இப்போது 'கொற நாடு' என்று மருவி வழங்கி வருகிறது. கொச்சி மஞ்சளும் கொற நாட்டுப் புடவையும் தமிழ் நாட்டில் பெண்களுக்கு மிக்க விருப்பமான பொருள்களாக உள்ளன. தஞ்சை, கும்பகோணம் வலங்கைமான், அம்மாபேட்டை, ஆகிய ஊர்களில் நெய்யப்படும் புடவைகளைக் 'கொறநாடு புடவை' என்றே பெயர் பெற்றுள்ளனர்.

## கோனேரிராசபுரம்

கும்பகோணம் - காரைக்கால் சாலையிலுள்ள புதூருக்குத் தெற்கே மூன்று கிலோமீட்டர் தொலைவில் இச் சிற்றூர் இருக்கிறது. இதையடுத்த வடமட்டத்துக்குச் செல்லும் பஸ்ஸில் வடமட்டத்துக்குச் சற்றுமுன்னரே இறங்கி, கிளைச் சாலையில் சிறிது நடந்து இவ்வூரை அடையலாம்.

வடமட்டமும் கோனேரிராசபுரமும் ஒரே ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்தன. அக்கிரகாரம் உள்ள பகுதி

---

* துகில் - மெல்லிய ஆடை
பட்டு நீக்கித் துகில் - பட்டினப்பாலை
'இம்மையே தரும் சோறும் கூறையும்'
—சுந்தரர் தேவாரம்.

கோனேரிராசபுரம். ஏனையோர் வாழுமிடம் வடமட்டம். வடமட்டம் நன்னிலம் வட்டத்தைச் சேர்ந்தது.

வடமட்டத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் திருவீழிமிழலை இருக்கிறது. இவ்வூருக்கு நன்னிலத்திலிருந்தாவது பூந்தோட்டத்திலிருந்தாவது வருவதே சாலச் சிறந்தது.

கோனேரிராசபுரம் பாடல் பெற்ற பதி; திருநல்லம் என்று தேவாரம் குறிப்பிடும் நல்லூர். அப்பர் சுவாமிகளால் ஒன்பது பாடல்களும் சம்பந்தரால் 11 பாடல்களும் பாடப்பெற்றதோடு மாணிக்கவாசகராலும் குறிப்பிடப் பெற்ற பெருமை இத்தலத்துக்கு உண்டு. இங்குள்ள இறைவனுக்கு உமாமகேசுவரர் என்றும் இறைவிக்குத் தேகசுந்தரி என்றும் பெயர். இறைவனும் இறைவியும் எதிரும் புதிருமாக அமைந்து வீற்றிருப்பது இக்கோயிலில் ஒரு சிறப்பு.

வேறுசில சிறப்புக்களும் இக்கோயிலுக்கு உண்டு. பஞ்சலோகங்களால் செய்யப்பெற்றதும் ஓர் ஆள் உயரம் உள்ளதுமான நடராச விக்கிரகம் இங்கு இருக்கிறது. இதன் பீடமும் உலோகமே. சோழ அரசர்களின் கொடை வன்மையால் சிறந்த சிற்பிகளால் வார்க்கப்பட்ட இந்த உருவம் கண்டின்புறத்தக்க ஒரு கலைப்பொருள். அரிய சிற்பத்தன்மையுள்ள இவ்வடிவத்தை உற்சவமூர்த்தியாக வெளியே எடுத்துச் சென்றால் ஊறுவிளைவதைத் தடுக்க அஞ்சி, விக்கிரகத்தை வெளியே எடுக்க இயலாத நிலையில் அதைச் சுற்றிக் கற்சுவர் நிலையுடன் கட்டப்பட்டிருக்கிறது.

இக்கோயிலுக்குத் தருமகர்த்தர்கள் இருந்தபோதிலும், நடராச விக்கிரகத்துக்கு மட்டும் தனியே ஒரு தருமகர்த்தா இருப்பதும் ஒரு சிறப்பு.

செப்பு வடிவிலுள்ள கலியாணசுந்தரரின் மணக் கோல வடிவமும் திரிபுர நாதர் வடிவமும் அருமையான விக்கிரகங்கள் ஆகும்.

சோழப் பேரரசியான செம்பியன் மாதேவியார், கோனேரிராசபுரத்திலும், இதன் மேற்புறத்தில் கோச் செங்கச்சோழன் கட்டிய வைகை மாடக்கோயில் என்ற சிவத்தலத்திலும் திருப்பணி செய்திருக்கிருர். அந்த அரசியார் வழிபடுவதையும், கோனேரிராசபுரம் கோயி லில் கல் தச்சர்கள் படம் பிடித்துக் காட்டியிருக்கின்ற னர்; சண்டிகேசுவரர் கோயிலின் மேல்புறச் சுவரில் கண்டராதித்தச் சோழனின் சிலை இருக்கிறது.

கோனேரிராசபுரம், இசைவாணர் சிலரை ஈன்றெடுத் திருக்கிறது. வாய்ப்பாட்டில் புகழ்பெற்ற வைத்தியநாத ஐயரும் நாதசுவரக் கலைஞர் வையாபுரியும் குறிப்பிடத் தக்கவர்கள்.

கோனேரிராசபுரத்து ஐயர்கள் வாத்திமார் வகுப் பினர். சேங்காலிபுரம், ஆனதண்டாபுரம், திப்பிராச புரம், முடிகொண்டான் விஷ்ணுபுரம் முதலிய 18 கிராமங் களில் மட்டுமே இவர்களுக்குக் கொள்வினை கொடுப் பினை உண்டு. மத்திய நாட்டிலிருந்து குடியேறிய இவர் களை 'மாத்திமார்' என்பர்; இது மருவி 'வாத்திமார்' ஆயிற்று. இவர்களில் பலர் செட்டிநாட்டு வீடுகளைப் போன்று உறுதியான வீடுகளைக் கட்டியிருப்பது தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்களில் காண இயலாத காட்சி யாகும்.

**தரங்கம்பாடி**

தமிழ்நாட்டின் வரலாற்றிலும் தமிழ்மொழியின் வர லாற்றிலும் பொன் எழுத்துக்களில் பொறிக்கப் பெற வேண்டும் ஊர் தரங்கம்பாடி.

இவ்வூர் நாகப்பட்டினத்துக்கு 40 கி. மீ. வடக்கே யும் மாயூரத்துக்கு 30 கி. மீ. கிழக்கேயும், வங்காளக் குடாக் கடலோரத்திலுள்ள துறைமுக நகரம். மாயூரம் வட்டத்தில், மாயூரத்துக்கு அடுத்தபடி பெரிய நகரம், தரங்கம்பாடி, உடல் நலத்துடன் வாழ்வதற்குரிய சிறந்த ஊராகவும் இருந்து வருகிறது. இவ்வூரைச் சேர்ந்த பொறையார் இந்நாளில் வணிகச் செழிப்புடைய பகுதி யாக விளங்குகிறது.

தரங்கம் என்பது அலைகளைக் குறிக்கும். இவ்வூரில், கடல் அலைகள் ஓசை நயத்துடன் பாடிக்கொண்டு கரையை மோதுகின்றனவாம். அல்லும் பகலும் அலை பாடும் கரையருகே அமைந்த இனிமையை இவ்வூரின் பெயர் இயம்புகிறது. இப்பொருள்பட ஐரோப்பியர் சிலரும் இவ்வூரைப்பற்றி Song of Tranquebar, Waves of Tranquebar என்ற தலைப்புக்களில் நூல்களும் கட்டுரை களும் யாத்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் தொடர்பு இந் நகருக்கு உண்டு; அந்த நாடுகளின் பொன்னுசையும் மண்ணுசையும் தரங்கம்பாடியின் வரலாற்றுடன் பின்னிக் கிடக்கின்றன. டேனிஷ்காரர்கள் கட்டிய கோட்டை, தமிழ்நாட்டின் பிறகோட்டைகளிலிருந்து வேறுபட்ட சிறப்புடையதாகும். கிறித்தவ சமயத்தை உலகின் பல பகுதிகளில் பரப்பிய பெருமையும் இந்நகர்க்கு உரியது. மாவட்ட கலெக்டரின் அலுவலகங்களும் இங்கே இருந்தன. தரங்கையில்தான் தமிழ் எழுத்துக்களுக்கு அச்சுவடிவம் அமைக்கப்பட்டது. தொழில் துறையிலும் வாணிபத்துறையிலும் கூட, தரங்கைக்குப் பங்கு உண்டு. தொழிலும் வேண்டாம் வாணிபமும் வேண்டாம் என்று கருதி, அமைதியாக வாழ விழைபவரும் விரும்பும் இடம் இது. இச்சிறப்புக்களை, இனி விரிவாகக் கூறுவோம்.

**அச்சுக்கலையும் தமிழ் எழுத்தும்*** கிறித்தவ சமயத்தைப் பரப்பும் பணியைச் செய்ய, பார்த்த லோமஸ் ஜீகன்பால்க் என்ற ஜெர்மானியார் 1706-இல் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தார்; தமிழைப் பயின்றார்; தமிழிலேயே கிறித்தவ வேதத்தை எடுத்துச் சொல்லி வழிபாடு நடத்தியவர் அவரே; அந்த அரிய நிகழ்ச்சி நடந்த இடம் தரங்கையே. 'புதிய ஏற்பாடு' (New Testament) என்னும் நூலைத் தமிழாக்கும் வேலையை 1708-இல் தொடங்கி 1711-இல் முடித்தார். தமிழ் எழுத்துக்களின் வடிவத்தை ஜெர்மனிக்கு அனுப்பி, அங்கு அவற்றை மரத்தில் வெட்ட ஆவன செய்தார்; தரங்கம்பாடிக்கு அருகேயுள்ள பொறையாரில் (இந்தியாவிலேயே முதல் தடவையாக) ஒரு காகித ஆலை அமைத்தார்; ஜெர்மனியிலிருந்து வந்த தமிழ் எழுத்துக்களைக் கொண்டு தரங்கம்பாடியில் அச்சகம் தொடங்கினர். 1715-இல் அந்த நூல் அச்சிடப்பெற்றது.

தமிழில் (இந்தியாவில்) அச்சிடப்பெற்ற முதல் நூல்** அதுவே; நம் நாட்டில் முதல் அச்சகம் அமைந்ததும் தரங்கையிலேயே. ஜீகன்பால்க், 1723-இல் வேதப் புத்தகத்தின் முதலாம் வகுப்பு என்ற நூலைத் தரங்கையிலிருந்து வெளியிட்டார்.

40,000 தமிழ்ச் சொற்களுள்ள அகராதியையும் அவர் உருவாக்கினர். 'கிராம்மாடிக்கா தாமுலிக்கா' (தமிழ் இலக்கணம்) என்ற நூலை அவர் ஜெர்மன் மொழியில் வெளியிட்டார். 'தமிழர்களைக் கிறித்தவராக்க

---

* ஆதாரம்: The Carey Exhibition of Early Printing and fine printing-a souvenir issued in 1955 by the National Library, Calcutta.

**1577-இல் கிறித்துவ வணக்கம் என்ற நூலும் அதன் பிறகு தமிழ் போர்த்துகீஸ் அகராதியும் போர்த்துகல் நாட்டில் அச்சிடப்பெற்றதாகவும், இவையே தமிழில் அச்சான முதல் நூல்கள் என்றும் கூறுவர்,

உம்மை அனுப்பினேம்; தமிழ் மொழியை ஜெர்மனியில் பரப்புவதற்கு அன்று' என்று ஜெர்மானியர் அவர்மீது கோபப்பட்டனராம்.

தரங்கையில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றிய மேனாட்டாருள் குறிப்பிடத்தக்க மற்றொருவர் அகராதி யாத்த டாக்டர் ராட்லர் ஆவார்.



சறவததுககுமவலலவருமாய அனாதியாயி
ருககிறவருமாயயெஙகுமநிறைநதிருக
கிறவருமாயிருககிற

பராபரவஸதது
வானவா

பூறவகாலததிலெபரமணடலததிலெயிரு
நது திருவிளமபததின சததியமான

வேத

பொஸதகததின

முதலாமபகுபபு

அதிலெ

அறசியசிஷடமோசெசெனகிறவாசஙவெசுரா
னுடையதிருவாயிலெநினறுகெடடுஙாயஙகளாயுஙகத
தானவா ஆதியிலெபரலோகததையுமபூலோகததையு
மபெபபடியணடாககினனெனகிறததையுமவாசகல
செனஙகளுககுளளெஒருஙகொஷததிாநறைததமுமடை
டசொநதமானசெனஙகளாககதெரிநதுகொணடாரெ
னகிறததையுமவெளிபபடுததுகிறமொசெசுவினவுகுசு
பொஷததகஙகளுநமயொசுவாவெனகிறவருறையஞான
பொஷததகமுமநிதிககாறாகளுறையவததமான
ஙகளாககாணபிககிறபொஷததகமும
அடஙகியிருககுது.

படம் உதவியவர் ; திரு. பி. என். வேங்கடாச்சாரி,
தேசிய நூலகம், கல்கத்தா.

பிளாக் உதவியவர் : திரு. மா. சு. சம்பந்தம், M.C,
ஆசிரியர், 'அச்சுக்கலை'.

அச்சுக்கலை இந்தியாவில் பரவியபோது, அதை வளர்த்த வரலாற்றில் தரங்கைக்குத் தனிப்பெருமை உண்டு. இன்று சென்னை நகரில் வேப்பேரியில் சிறந்து விளங்கும் பழமையான அச்சகங்கள் தரங்கம்பாடியி லிருந்தனவே; சில அச்சகங்கள் தம்பெயரிலும் தரங்கை யைச் சேர்த்துக்கொண்டுள்ளன.

**ஆட்சித்துறை :** தரங்கம்பாடியையும் டான்ஸ்பர்க் கோட்டையையும் டேனிஷ்காரரர்களிடமிருந்து 1845-இல் பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டனர்; இந்நகரைத் தஞ்சை மாவட்டத்தின் தலைநகராக ஆக்கினர். 1860-வரை இந்தச் சிறப்பு தரங்கம்பாடிக்கு இருந்தது. தஞ்சை மாவட்டக் கலெக்டரின் மாளிகையே இன்று 'நாடார் பங்களா' என்ற பெயரில் இருந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்துத் தலைமை நீதிபதியின் அலுவலகம் 1884 இவ்வூரில் இருந்தது.

**இன்றைய தரங்கை :** இந்நாளில் இந்நகரம் சிற்றூ ராக இருப்பினும், பழைய கட்டிடங்கள், பாழடைந் துள்ள சின்னங்கள், டேனிஷ்காரரின் புகழ்பரப்பும் கோட்டை, மசூதி, கோயில்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவை இவ்வூரின் தொன்மையைத் தெரிவிக்கின்றன.

கடல்நீர் ஊருக்குள் புகுந்து வருவதால் சில நூற் றூண்டுகளாக இவ்வூரார் இன்னல் அடைந்துள்ளனர். கடற்கரையிலுள்ள மாசிலாமணி கோயிலின் ஒருபகுதி 1952-இல் ஏற்பட்ட புயலில் சேதமடைந்தது. 1955–இல் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் இவ்வூர் வயல்கள் வளம் இழந்தன.

**ஐரோப்பியரின் தொடர்பு :** டென்மார்க்கு, ஜெர்மனி, பிரிட்டன், போர்த்துகல் ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு இவ்வூர்த் தொடர்பு உண்டு. டென்மார்க்கு நாட்டினர் எதிர்பாராத நிலையில் இங்கு வந்து சேர்ந்

தனர். இவ்வூரைச் சீர்ப்படுத்தி நேருக்கு நேரான சாலைகளை நீண்ட சதுரவடிவில் அமைத்து மாடமாளிகைகளையும் கவினுறு கோட்டையையும் கட்டியவர்கள் இவர்களே. இவர்களுடன் சேர்ந்து இங்குவந்து மதத்தைப் பரப்பும் பணியில் ஜெர்மானியர் சிலர் ஈடுபட்டனர். டென்மார்க்கு நாட்டினரிடம் தஞ்சம் அடைந்து தங்கிய போர்த்துகல் நாட்டினர் சிலர் டென்மார்க் நாட்டினரின் ஒப்புதல் பெற்றுத் தங்கள் சமயத்தின் (கத்தோலிக்க) ஆலயங்களை அமைத்தனர். இறுதியாக, டென்மார்க் நாட்டினர் இவ்வூரையும் கோட்டையையும் பிரிட்டிஷாரிடம் ஒப்புவித்தனர்.

இலங்கையை ஆண்ட கண்டி அரசனின் வேண்டுகோளுக்கிணங்க, போர்த்துகல் நாட்டினரை எதிர்ப்பதற்காக டென்மார்க்கின் கடற்படையின் ஒரு பகுதி இலங்கைக்குச் சென்றது. அங்கு நடைபெற்ற கைகலப்பில் தப்பியோடிய சிலர் 1619-இல் தஞ்சைக்கு வந்தனர். தஞ்சை நாயக்க மன்னரான இரகுநாத நாயக்கன் வணிகர்களுக்குத் தரங்கம்பாடியை 1620-இல் ஆண்டொன்றுக்கு ரூபாய் 3,111 வாடகைக்குவிட்டான். உடனே அவர்கள் ஒவிகிஜெடே என்ற கடற்படைத் தளபதி தலைமையில் தங்கள் நாட்டின் கொடியைப் பறக்கவிட்டனர்; கோட்டை கட்டத் தொடங்கினர்; சில சிறு தொழிற்சாலைகளை நிறுவினர்; டேனிஷ் கிழக்கிந்திய வணிகக் குழுவின் அலுவலகத்தைத் தரங்கையில் அமைத்தனர்.

தரங்கம்பாடி நகரம் டென்மார்க்கின் தொடர்பை நினைவூட்டும் சின்னமாக என்றும் இருந்துவரும். இவ்வூர்ச் சாலைகளின் பெயர்களில் 'நியூ ஸ்ட்ரீட்' 'கிங்ஸ் ஸ்ட்ரீட்', 'பிரின்ஸ் ஜார்ஜ் ஸ்ட்ரீட்' 'அட்மிரல் ஸ்ட்ரீட்' 'குயின்ஸ் ஸ்ட்ரீட்', 'கல்நெய்ன் ஸ்ட்ரீட்', 'பிரின்ஸ் கிறிஸ்டியன் ஸ்ட்ரீட்' என்பன யாவும் அவர்

களால் இடப்பட்டவையே. அவர்கள் கட்டிய மாளிகைகளில் அவர்கள் நாட்டின் சிற்பக்கலையை இன்றுங் காணலாம். டேனிஷ் கவர்னர் வாழ்ந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள உப்பள அலுவலகமும், டேனிஷ் தளபதியுடைய இல்லத்தின் கனத்த சுவர்களும், டேன்ஸ்பர்க் கோட்டையின் கிழக்கு மதிலில் வைக்கப்பட்டுள்ள பழைய காலத்துத் துப்பாக்கியும், கோட்டையருகே கடலோரத்தில் (தமிழ் வளர்த்த) ஜீகன்பால்க் நினைவுச் சின்னமும் காணத்தக்கன.

டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியார் கட்டிய கோட்டைக்கு '**டேன்ஸ்பர்க்**' என்று பெயர். தரங்கம்பாடியில் காணத்தக்க கட்டடமாகவும் வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்ற களமாகவும் இது இருக்கிறது,

1624-ல் இக்கோட்டை, டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் டென்மார்க் அரசருக்கு விற்கப்பட்டது. இக்கோட்டை ஐரோப்பாவிலுள்ள கோட்டைகளைப் போன்றது. நடுவே ஒரு முற்றம், சுற்றிலும் பல கட்டிடங்கள். அவற்றையடுத்துச் செங்கற்களால் உறுதியாகக் கட்டப்பெற்ற மதில்கள், மதில்களின் நான்கு மூலைகளிலும் (இன்றும் நல்ல நிலையிலுள்ள) காவல் அரண்கள், அவற்றையடுத்து அகழிகள் என்ற அமைப்பில் அது கட்டப்பெற்றிருக்கிறது. கோட்டைக்குள் டேனிஷ் கவர்னரின் மாளிகையும், படைத் தலைவரின் மாளிகையும், வெடிமருந்துக் கிடங்கும், கிறித்தவ ஆலயங்களும், சுங்க அலுவலகமும் சிறைச்சாலையும் இருந்தன. அவர்களுடைய தேவைக்கேற்ப, 1791 வரை பல தடவை இக்கோட்டை திருத்தியமைக்கப்பட்டது.

நெப்போலியனுடைய ஆட்சியில் ஐரோப்பாவில் போர் ஏற்பட்டபோது, 1801-இலும் மீண்டும் 1807-இலும் இந்நகரம் பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது; 1815-இல் இது மீண்டும் டென்மார்க் வயப்பட்டது;

ஆனல் இறுதியாக இதை 1845–இல் டேனிஷ்காரர் பிரிட்டிஷாருக்கு $12\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்கு விற்று, அந்த நிகழ்ச்சியோடு இந்தியாவுடன் தங்களுடைய அரசியல் வாணிக உறவுகளை அறுத்துக்கொண்டனர். டேனிஷ் ஆட்சியிலிருந்த காலம் தரங்கம்பாடியின் பொற் காலமாகும். பிரிட்டிஷ் ஆட்சியில் இவ்வூரின் பெருமை படிப்படியாகக் குறைந்து இது 'வாழ்ந்து முறிந்த ஊர்' ஆயிற்று.

**கிறித்தவம்:** இந்நூலின் முற்பகுதியில் நாம் கூறியிருப்பதுபோல, இந்தியாவில் கிறித்தவ மதத்தைப் பரப்பிய நான்கு ஊர்களில் தரங்கையும் ஒன்று. பர்மா, இலங்கை, மலாயா நாடுகளுக்கும் கிறித்தவ மதம் இங்கிருந்துதான் பரவியது. இம்மாவட்டத்தில் சீர்காழி, கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி, தஞ்சாவூர், ஆகிய இடங்களில் முதலிலும் பின்னர், சுற்றியுள்ள மாவட்டங்களிலும் கிறித்தவம் வேரூன்றத் தரங்கையே தலைமையிடமாக இருந்தது.

கத்தோலிக்கம், பிராடஸ்டண்டு என்னும் இரு சமயங்களுக்கும் தரங்கம்பாடி முக்கியமான ஊராகும். நாகப்பட்டினத்தில் வகையாக வளர்ந்துவந்த கத்தோலிக்கர் 1623 அளவில் இங்கு ஒரு தேவாலயம் நிறுவியதாகத் தெரிகிறது. 1644–45 இல் அவர்களிற் பலர் போர்த்துகல் நாட்டிலிருந்துவந்து இங்கு மேலும்பல தேவாலயங்களைக் கட்டினர். 1730-இல் சாத்தங்குடியில் சவேரியார் கோயிலும் 19-ஆம் நூற்றுண்டின் இறுதியில் மாயூரத்துக்குச் செல்லும் சாலையருகேயுள்ள வெளிப்பாளையம் மாதா கோயிலும் கட்டப்பெற்றன.

பிராடஸ்டண்டு மதத்தைச்சேர்ந்த லூத்தரன் சர்ச்சும் டேனிஷ் சர்ச்சும் பல தேவாலயங்களை 17–ஆம் நூற்

ரூண்டு முதல் இங்கே கட்டியிருக்கின்றனர். 1845–இல் டென்மார்க் நாட்டவர் தரங்கம்பாடியை ஆங்கிலேய ரிடம் ஒப்புவித்தபோது, டேனிஷ் தேவாலயங்களும் ஆங்கிலேயர் நடத்திய நிறுவனத்திடம் (Anglican Society for the Propagation of the Gospel) ஒப்புவிக்கப்பட்டன. மதத்தைப் பரப்பும் நூல்கள் தமிழில் ஆக்கப்பட்டதும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப் பெற்றதும் இந்நகரி லேயே ஆகும். இந்நாளில் சிறந்துவிளங்கும் தமிழ்ச் சுவி சேஷ லூத்தரன் சபை (T. E. L. C.) வளர்ச்சி பெற்ற இடமும் இதுவே; 'தரங்கம்பாடி பிஷப்' என்ற பட்டப் பெயர் அவருக்கு இன்றும் உண்டு; அவரது அலுவலகங் கள் 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் திருச்சிராப்பள் ளிக்கு மாற்றப்பட்டன. பிராடஸ்டண்டு மதத்தைச் சேர்ந்த பல பிரிவுகளையும் ஐக்கியப்படுத்தி, 'தென் இந் தியச் சர்ச்சு' உருவாக்கும் பெரு முயற்சிக்கான முதல் மாநாடு 1919-இலும் இறுதி ஏற்பாடுகள் 1941-இலும் தரங்கையில்தான் நடைபெற்றன. புனித இடமாகிய தரங்கைக்குத் தமிழ் நாடெங்குமிருந்து கிறித்தவர்கள் வருகை புரிகின்றனர். கிறித்தவ மதத்தைப் பற்றிப் பயிற்சி பெறுதற்குரிய பள்ளிக்கூடங்கள் இங்கு நடை பெறுகின்றன.

**தொழில்**: தரங்கைப் பொறையாரில்தான் இந்தி யாவிலேயே முதல் தடவையாகக் காகித உற்பத்தி, சோப் செய்தல் ஆகிய தொழில்கள் தொடங்கப்பட்டன. கடதாசிப்பட்டறை, சவுக்காரமேடு என்ற இடங்கள் இன்னும் உள்ளன. அங்கு ஜெர்மானியர் தொடங்கிய தொழில்கள் அருகிவிட்டன. எருக்கட்டாஞ்சேரி என்னு மிடத்தில் காட்பாடி மேசை நாற்காலி முதலிய மரச் சாமான்களைச் செய்ய சோக்ஸ்மன் என்ற ஜெர்மன்காரர் ஒரு தொழிற்சாலை நடத்தி வந்தார். திராட்சை பயிரிடும் தொழிலும் நன்கு நடைபெற்று வந்தது.

**வாணிபம்:** 17, 18-ஆம் நூற்றுண்டுகளில் தரங்கம் பாடியில் வெளிநாட்டு வாணிபம் பெரிய அளவில் நடை பெற்றது. சீர்காழிப் பகுதிப் பொருள்கள் வருவதற்கு வாய்ப்பாக, தரங்கையிலிருந்து திருமுல்லைவாயில்வரை கால்வாய் வெட்டப்பட்டது.

நெப்போலியன் ஐரோப்பாவில் நடத்திய போர் களால், தரங்கையில் வியாபார மந்தம் ஏற்பட்டது. அதையடுத்து நாகப்பட்டினத்துக்கு இரயில் பாதை ஏற் பட்டதால் அந்தத் துறைமுகத்தின் வளர்ச்சி தரங்கைக் குத் தடையாயிற்று.

### தருமபுரம்

தருமபுரம் என்ற பாடல் பெற்ற தலம் வேறு; அது காரைக்காலிலிருந்து ஐந்து கி. மீ. தொலைவில் இருக் கிறது.

மாயூரம் தருமபுரம் திருக்கடவூர்ப் புராணத்தை யொட்டிய நிகழ்ச்சிகளின் தொடர்புடையது; எமன் பெயரால் ஏற்பட்ட தருமபுரீசுவரர் கோயில் என்ற ஆதி கோயிலும் தருமை ஆதீனமும், ஆதீனத்தைத் தோற்று வித்தவர் பெயரால் ஞானபுரீசுவரர் கோயிலும் சொக்க லிங்கப்பெருமான் கோயிலும் இங்கே உள்ளன. ஆகம விதிப்படி பூசை நடைபெறுவது ஞானபுரீசுவரர் கோயி லில் ஒரு சிறப்பு.

### திரு அழுந்தூர் (தேர் அழுந்தூர்)

மாயூரத்திலிருந்து 12 கி. மீ. தொலைவிலும் தேரழுந் தூர் இரயில் நிலையத்திலிருந்து 3 கி. மீ. தொலைவிலும் இவ்வூர் இருக்கிறது. சம்பந்தரின் பாடல்பெற்ற சிவன் கோயிலும் திருமங்கையாழ்வாரின் மங்கள சாசனம் பெற்ற வைணவக்கோயிலும் எதிரெதிரில் இருக்கின்றன.

'கம்பன் பிறந்த ஊர்
காவிரி தங்கும் ஊர்
கும்பமுனி சாபம் குலைந்த ஊர்'

என்று இவ்வூரைச் சிறப்பிப்பதுண்டு. இங்கே தேர் அழுந்தியதாகக் கூறுவர்.

நீர்வளமும் நிலவளமும் மிக்க இவ்வழகிய ஊர் வீரம் செறிந்த ஊர்; செந்தமிழும் வடமொழியும் வளர்ந்த ஊர்; கலைகள் செழித்த ஊர்; கம்பனும் கரிகாற் சோழனும் கரிகாலனின் தாய்மாமனை இரும்பிடர்த்தலையரும் பிறந்த ஊர். அகநானூற்றிலும் பழமொழி நானூற்றிலும் இவ்வூரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

முதலாம் கரிகாற் சோழனின் தலைநகராக இத்திரு அழுந்தூர் இருந்தது என்பர்; அவனுக்குப் பிற்காலத்தில் ஆண்ட இளம்சேட்சென்னி என்பவனுக்குத் தித்தியன் தன் மகளை மணம் செய்வித்தபோது 'மகள்கொடை' (திருமண அன்பளிப்பு)யாக இவ்வூரையும் வழங்கினன் என்றும் தெரிகிறது. இவன் (தித்தியன்) இவ்வூரருகே நடந்த போர்களில் மௌரியரையும் கோசரையும் தோற்கடித்துச் சோழருக்கு வெற்றி நாட்டிய வீரன் ஆவான்.

இவ்வூரில் திருவாவடுதுறைச் சாலைக்குத் தெற்கே மூன்று ஏக்கர்ப் பரப்புள்ள ஒரு பகுதி 'கம்பன் மேடு' எனப்படுகிறது; இடிந்த மாளிகையின் அறிகுறிகள் இங்கே காணப்படுகின்றன. கம்பர் வழிபட்டதாகக் கூறப்படும் காளிகோயிலும் இவ்வூரில் உளது. பெருமாள் கோயிலின் மதில்சுவரில் கம்பனின் திருவுருவமும் அவர் மனைவியின் திருவுருவமும் காணப்படுகின்றன. கோசகர் (அல்லது அமாருவி அப்பர்) கோயிலில் கம்பன் வடிவமுள்ள கல்லுருவம் காணப்படுகிறது. பல நூற்றுண்டுகளாகக் கம்பன் கட்டளை என்ற இறைவடிவத்

துக்கு விநாயகச் சதுர்த்தியன்று வழிபாடுகள் நிகழு கின்றன.

1959 முதல் இவ்வூரில் கம்பன் திருநாள் கொண் டாடப்பட்டு வருகிறது. பெருமாள் கோயிலுக்கும் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலுக்கும் இடையே யுள்ள இடத்தில் கம்பன் நினைவுநிலையம் ஒன்றை நிறுவத் தமிழன்பர் சிலர் ஏற்பாடு செய்துள்ளனர்; இந்து அற நிலையக் குழுவினர் இவ்வூரில் கம்பன் பெயரால் ஒரு கல்வி நிலையம் தொடங்க முடிவு செய்துள்ளனர்.

**திருக்கடவூர்**

மாயூரம்-தரங்கம்பாடிச் சாலையிலுள்ள இந்த இரயில் நிலையத்துக்குத் திருக்கடையூர் என்றும் தலத்துக்குத் திருக்கடவூர் என்றும் பெயர். இது மூவர் தேவாரமும் பெற்றது. குங்கிலியக்கலய நாயனார் அவதரித்த தலம் இதுவே. இது அஷ்ட வீரட்ட தலங்களுள் ஒன்று.

மார்க்கண்டன் என்றும் பதினாறாக இருக்க, காலன் அவனை ஆட்கொள்ளுவதை வீரட்டனார் தடுத்த இடம் இது; எனவே, நீண்ட ஆயுளை விழைவோர் இங்குவந்து ஆயுள்ஹோமம் செய்து கொள்ளுகின்றனர்.

காலசம்ஹாரர் சன்னிதியும், எருமை ஊர்தியுடன் கூப்பிய கையொடு நிற்கும் யமனும், அபிராமி அம்மன் கோயிலும் இங்கே காணத்தக்கவை. 54 கல்வெட்டுக் கள் உள்ளன. ராஜராஜன் முதலிய பல அரசர்களின் நிபந்தங்கள் இக்கோயிலுக்கு உண்டு. தருமபுர ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட கோயில்களுள் இதுவும் ஒன்று.

'அபிராமி அந்தாதி' என்ற இலக்கியம் இத் தலத்தையொட்டி இவ்வூர் அபிராம பட்டரால் இயற்றப் பெற்றதாகும். "திருக்கடையூர் என்பதும் இது தானே?

தேரோடு வீதி என்பதும் இதுதானே? ” என்று பாடிக் கொண்டே கோவலன் மாதவியைத் தேடி இங்கு வந்த தாக ஒருவரலாறு உண்டு.

**திருவாவடுதுறை :**

கும்பகோணத்துக்குக் கிழக்கே 19 கி. மீ. தொலைவி லும் மாயூரத்துக்கு மேற்கே 19 கி. மீ. தொலைவிலும் நரசிங்கம் பேட்டை இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் கி. மீ. தொலைவிலும் இவ்வூர் இருக்கிறது.

இங்குள்ள மாசிலாமணி ஈசுவரர் கோயில் மூவர் தேவாரமும் அருணகிரியர் பாடலும் பெற்றது; திருமூல ருக்குத் தனிக்கோயில் உடையது. திருஞானசம்பந் தர்க்குப் பொற்காசு வழஙகப் பெற்றதும் மாணிக்கவாச கர் உபதேசம் பெற்றதும் இங்கேயே ஆகும். உயரத்திலும் நீளத்திலும் மூன்று மீட்டர் உள்ள பெரிய கல் நந்தி இங்கு இருக்கிறது.

இக்கோயிலில் மதிலில் நந்தி இல்லை. உள்ளேயுள்ள முதல்மதிலும் இரண்டாவது மதிலும் முற்றும் கருங்கல் லால் கட்டப்பட்டிருப்பதும், மூன்ருவது மதில் பாதிக்கு மேல் கருங்கல்லாலும் மேல் அலங்கம் செங்கல்லாலும் கட்டப்பட்டிருப்பதும், வெளி மதில் முற்றிலும் செங்கல் லால் கட்டப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

புரட்டாசி மாதத்தில் இக்கோயிலில் நடைபெற்ற விழாவில் ஆரியக்கூத்து ஆடப்பெற்று வந்ததாக இக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது.

திருவாவடுதுறை ஆதீனத்தார் இங்கு நாள்தோறும் தேவாரப் பாராயணம் ஏற்பாடு செய்து மாலைப்பொழு தில் அதை ஒலிபரப்பி வருகின்றனர்.

திருவாவடுதுறை மடத்தின் மாளிகைகளும் அச்சக மும் ஏட்டுச் சுவடி நிலையமும் நூல் நிலையமும் காணத்

தக்கன. நூல் நிலையத்திலுள்ள **கோடி பஞ்சாக்கரம்** ஐந்து தொகுதிகளுடையது; ஒரு நூற்றுண்டுக்கு முன் வெளியிடப் பெற்றது: ஒவ்வொரு தொகுதியிலும் இருபது இலட்சம் தடவையாக மொத்தம் ஒருகோடித் தடவை **நமசிவாய** என்ற ஐந்தெழுத்துக்கள் அச்சிடப் பட்டுள்ளன.

மடத்திலிருந்து சிறிது தொலைவில் இலட்சம் மரங்களுள்ள **லட்சத்தோப்பு,** தென்னை, மா, பலா, தேக்கு, விலா, நாக மரங்களுள்ள சோலையாகக் காட்சி தருகிறது.

**தில்லையாடி**

இவ்வூர் தரங்கம்பாடியருகே இருக்கிறது. இயற்றமிழ்ப் பாடல்களும் இசைத் தமிழ்ப் பாடல்களும் இயற்றிய சீர்காழி அருணசலக் கவிராயர் தோன்றிய ஊர் இதுவே.

**பறியலூர் :** (பறசலூர்)

செம்பொன்னர் கோயிலுக்குத் தெற்கே ஒன்றரை கி. மீ. தொலைவில் பறியலூர் இருக்கிறது: தக்கனுடைய தலையைக் கொய்த இடம் இது. இங்குள்ள வீரட்டேசுவரர் கோயில் தருமை ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்டது.

**புன்செய் கிடாரம் கொண்டான்**

இவ்வூர், செம்பொன்னர் கோயிலுக்கும் திருவெண்காட்டுக்கும் இடையேயுள்ள புன்செய் என்ற சிற்றூரருகே இருக்கிறது. தேவாரம், இத்தலத்தை நனிபள்ளி என்று கூறு. திருஞானசம்பந்தருடைய தாயார் பிறந்த தலம் இது.

மலாயா நாட்டிலுள்ள கெடா, தமிழில் கடாரம் எனப் பட்டது. அதை வென்றதால் இராஜேந்திரன் கடாரங்

கொண்டான் என்ற சிறப்புப் பெயரைப் பெற்ருன். இந் நிகழ்ச்சியை நினைவுகூரும் நிலையில் அமைந்த ஊர் இது. இப்பெயருள்ள ஊர்கள் இம்மாவட்டத்தில் திருவாரூர்-நாகை நெடுஞ்சாலையிலும், மணல் மேட்டுக்கு அண்மையிலும் (ஆக மூன்று இடங்களில்) உள்ளன. அருண்மொழித் தேவன் என்ற பெயருடைய இரு ஊர்கள் மாயூரம் வட்டத்தில் உள்ளன.

**பெருஞ்சேரி**

மங்கைநல்லூர் இரயில் நிலையத்திலிருந்து ஒன்றரை கி. மீ. தொலைவில் உள்ள இவ்வூரில் வீரசோழன் ஆற்றுக்கு வடபால் சோலைகளினூடே சிவன்கோயில் ஒன்று இருக்கிறது. இங்குள்ள சோமாஸ்கந்தர் திருவுருவம் மிக அழகியது.

**வழுவூர்**

(மக்கள் தொகை ஏறத்தாழ 3,000).

மாயூரத்திலிருந்து தெற்கே எட்டு கி. மீ. தொலைவில் திருவாரூர்ச் சாலையில் இவ்வூர் இருக்கிறது.

நாட்டியக்கலையாசிரியர் வழுவூர் இராமையாபிள்ளை இவ்வூரினரே ஆவார். எலந்தங்குடி, மங்கைநல்லூர் என்னும் இரண்டு இரயில் நிலையங்களிலிருந்தும் இவ்வூரை அடையலாம்.

கபிலபரணரால் பாடப்பெற்ற இத்தலம் மூவர் தேவாரத்திலும் குறிப்பிடப்பெற்ற வைப்புத்தலம் ஆகும். இங்குள்ள கோயிலில் பிட்சாடணர் திருவுருவமும் முருகன் திருவுருவமும் ஐந்து தீர்த்தங்களும் மாசி மகத்தன்று நிகழும் கஜ சம்ஹாரத் திருவிழாவும் காணத் தக்கவை.

உலகம் யாவும் அழிந்த பிரளயக் காலத்திலும் அழியாது வழுவிய ஊராதலால் இது வழுவூர் என்ற பெயர் பெற்றிருக்கிறது. வழுவூர் என்பது வாதவூரின் மரூஉ

என்றும், இதுவே மாணிக்கவாசகர் பிறந்தபதி என்றும் சிலர் கூறுவதை ஆராய்ச்சியாளர் ஏற்றுக் கொள்ளவில்லை.

## செம்பொன்னர் கோயில்

இது மாயூரத்திலிருந்து தரங்கை வழியில் 8 கி மீ. தொலைவில் இருக்கிறது. இத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் நனிபள்ளி அப்பரைத் தேவாரம் பாடிய மூவரும் பாடியுள்ளனர். சோழ மன்னர்களின் வெற்றி நினைவாக அமைந்து, நாயக்கர்களால் நன்கு புதுப்பிக்கப்பட்ட இக்கோயிலில் அழகிய செப்பு விக்கிரகங்களும் கொடி வட்டமும் கல்வெட்டுக்களும் காணத்தக்கன. இவ்வூரைத் திருச்செம்பொன் பள்ளி என்றும் கூறுவர்.

## திருவீழிமலை

பூந்தோட்டம் இரயில் நிலயத்திலிருந்து 10 கி. மீ. (6 மைல்); கோனேரிராசபுரத்திலிருந்து 3 கி. மீ. (2 மைல்); நாச்சியார்கோயிலருகே உள்ள ஏரிச்சத்திரத்திலிருந்து பூந்தோட்டம் செல்லும் பஸ்ஸில் திருவீழிமிழலைக் கோயிலருகேயே இறங்கிக் கொள்ளலாம். இத்தலம் மூவர் பாடலும் பெற்றது. திருமால் தம் கண்ணையே இடந்து சாத்திய இடம்; சம்பந்தர்க்கும் அப்பர்க்கும் இறைவன் படிக்காசு வழங்கிய பதி. இவ்விருவரும் அமைத்த மடங்கள் இவ்வூரிலுள்ளன. கல்லால் அமைந்த கொடுங்கைகள் – வளைவு நிறைந்த கற்றூண்கள் – வௌவால் நெற்றி மண்டபம் ஆகிய கட்டிடக்கலைச் சிறப்புக்கள், இக்கோயிலுக்கு உண்டு. வௌவால் நெற்றி மண்டபத்தில் பொறியியல் கலையின் திறமை பொலிவுடன் காணப்படுகிறது. தூணின்றி நிற்கும் மண்டபம் ஒன்றும் இக்கோயிலில் இருக்கிறது.

இறைவன் இங்கே திருமணக்கோலத்தில் இருப்பதால் 'மாப்பிள்ளைச்சாமி' என்ற பெயர் பெற்றிருக்கிருர். கலையன்பர் சிலர், இங்கு இறைவன் வீற்றிருக்கும் கோலத்தைப் படம் எடுத்து மணமக்களுக்கு வழங்குவர்.

பல அரசர்கள் - சோழரும் பாண்டியரும்-இக்கோயிலில் திருப்பணி செய்திருக்கின்றனர். கல்வெட்டுக்கள் இங்கு கோயில்கொண்டிருக்கும் இறைவனை, **திருவீழிமிழலை உடையான்** என்று குறிப்பிடுகின்றன ; ஆனல் உலக வழக்கில் இவ்விறைவன் 'நேத்திர அர்ப்பன ஈசுவரர்' ஆகிவிட்டார். இங்கு சந்நிதி கிழக்கு நோக்கியிருப்பதும் கோனேரிராசபுரத்து உமா மகேசுவரர் சந்நிதி மேற்கு நோக்கியிருப்பதும், கவனிக்கத்தக்கது.

இத்தலம் விஷ்ணு வழிபட்ட சிவத்தலம் என்று கூறுவர். விஷ்ணு தங்கித்தவம் செய்த இடம் ஆகையால் இன்றும் 'விஷ்ணுபுரம்' என்ற பெயரால் இவ்வூரின் ஒருபகுதி வழங்கி வருகிறது, இறைவனைத் திருமஞ்சனம் ஆட்ட அரியாகிய விஷ்ணு சொல்லி உண்டான ஆறு ஆதலால், இத்தலத்துக்குத் தென்புறம் ஓடும் (காவிரியின் கிளை) ஆறு 'அரி சொல் ஆறு' என்று பெயர் பெற்றது என்பர்.

தில்லை அந்தணர் மூவாயிரவர் போல இங்குள்ள அந்தணர் 'வீழிஐந்நூற்றுவர்' எனப்படுவர்.

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குட்பட்டது ; இந்த ஆதீனத்தின் கிளைமடம் இவ்வூரில் இருக்கிறது. ஊரின் மக்கட்தொகை ஈராயிரத்துக்குக் குறைவு.

## 4. சீகாழி வட்டம்

இது ஒரு சிறியவட்டம் ; மக்கள் தொகை ஒன்றேமுக்கால் லட்சம்.

காவிரியின் கழிமுகப்பகுதியிலிருந்த போதிலும், இங்குள்ளநிலங்களுக்கு வண்டல் வராததால் இவ்வட்டத்

தின் வளம் குடந்தை பாபநாசம் வட்டங்களைவிடக் குறைவு. கொள்ளிடம் கால்வாய்கள் பாயும் நிலங்களுக்கு வண்டல்பாய்கிறது. ராஜன் வாய்க்கால் பாசனம் உள்ள பகுதிகளில் குறுவை, சம்பா, குள்ளக்கார் என்னும் முப் போகச்சாகுபடி உண்டு.

பள்ளம் நிறைந்த பகுதியாக இருப்பதால் மழை பெய்யும்போது, இங்கு தண்ணீர் தேங்கிவிடுகிறது. 1600 மில்லிமீட்டர் (64 அங்.) மழைபெய்வதால், வயலில் தேங்கி நிற்கும் நீரை வெளியேற்றுவது ஒரு பிரச்சினை யாக இருக்கிறது.

பாய் முடையும் தொழிலும் ஓரிரு மிட்டாய்த் தொழிற்சாலைகளும் இங்கு நடைபெறுகின்றன. சென்னை-மாயூரம் இரயில்பாதை இவ்வழியே செல்லுகிறது.

**சீகாழி**

சீகாழி வட்டத்தின் தலைநகராகவும் காவிரிப்பூம் பட்டினத்துக்குச் செல்லும் வாயில் நகராகவும் உள்ள இந்நகரம் 'நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பிய திருஞானசம்பந்தர்' பிறந்த பதியும் ஆகும்; எனவே, இது ஞான பூமியாகக் கருதப்படுகிறது. வைத்தீசுவரன் கோயிலுக்கு 7 கி. மீ. வடக்கேயும் சிதம்பரத்துக்கு 18 கி. மீ. தெற்கேயும் இத்தலம் இருக்கிறது.

இவ்வூர் வணிகர் ஒருவர் 9-ஆம் நூற்றாண்டில் மூன்றும் நந்திவர்மன் பெயரால் தாய்லந்து எனப்படும் சயாம் நாட்டில் ஒரு குளம் வெட்டியதாகக் கல்வெட்டு உண்டு.

16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கடவுள் மணம்கமழும் பாடல்களை இனிய தமிழில் இலக்கண வரம்புடன் இயற்றிய முத்துத்தாண்டவரும் 18-ஆம் நூற்றாண்டில் இசைத் தமிழ் வளர்த்த அருணாசலக்கவிராயரும் இவ்வூரினரே.

சீகாழிக் கோயில் மூவராலும் பாடப்பெற்றது. இக் கோயிலின் விமானத்தின் மீதுள்ள சட்டநாதன் திருவுருவத்துக்கு அபிடேகம் கிடையாது ; பெண்டிர் இவ்விக்கிரகத்துக்கு மலர்களுடன் செல்லக்கூடாது ; அந்திமாலைக் குப் பின்னும் செல்லலாகாது.

இங்கே, திருஞானசம்பந்தருக்குத் தனியாக உட் கோயில் இருக்கிறது. இக்கோயிலில் சித்திரை மாதத்தில் நிகழும் திருவிழாவில் சம்பந்தர் ஞானப்பால் உண்ணும் காட்சியைக் காணலாம். அறுபத்து மூவருள் ஒருவராகிய கணநாதர் என்ற அடியார் இவ்வூரினர்; இவர் இங்கே திருப்பணி செய்து முத்திபெற்றவர்.

இசைஒலியால், வேளாண்மைத்துறையில் உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவது பற்றிய ஆராய்ச்சிகள் இவ்வூரருகே 1955 முதல் நடைபெற்றுப் பலன் தந்துள்ளன.

இவ்வூரில் ஒரு தொழிற் கல்லூரி இருக்கிறது. பிராடஸ்டண்டு கிறித்தவர்களுக்கு இது ஒரு முக்கிய மான ஊராகும். நூலகத் துறையில் உலகப் புகழ்பெற்றவரும், இந்திய நூலக இயக்கத்தின் தந்தையுமான டாக்டர் எஸ். ஆர். ரெங்கநாதன் இவ்வூரினர் ஆவார்.

**அருள்மொழிவர்மன்**

இது ஒரு சிற்றூர். நீடூரிலிருந்து 2 கி. மீ. தொலைவில் இருக்கிறது. ராஜ ராஜ சோழனின் மறுபெயர் அருள்மொழிவர்மன் ; அப்பெயரை உடையது இவ்வூர்.

**ஆச்சாள்புரம்** : கொள்ளிடம் இரயில் நிலையத்திலிருந்து இவ்வூர் 6 கி. மீ. கிழக்கே கொள்ளிடம் ஆற்றின் தென் கரையில் இருக்கிறது.

திருஞானசம்பந்தர்க்கு இவ்வூரில் திருமணம் நடைபெற்றதாகக் கூறுவர். அதையொட்டி வைகாசி மூலத்தில் ஒரு திருவிழா நடைபெறுகிறது. இவ்வூருக்கு நல்லூர்ப் பெருமணம் என்னும் பெயரும் உண்டு. நல்லூர்

என்னும் சிற்றூர் இவ்வூர் அருகே இருக்கிறது. ஆச்சாள் புரத்தில் ஞானசம்பந்தர் பெயரால் ஒரு மடம் இருந்து வருகிறது.

ஆச்சாள்புரத்திலுள்ள சிவலோகத் தியாகராசர் கோயில் சம்பந்தர் தேவாரம் பெற்றது; திருநல்லூர்ப் பெருமணம் எனப்படுவது; இக்கோயில் தருமை ஆதீனத்துக்குட்பட்டது.

திருஞான சம்பந்தர் காலத்தவரான திருநீல நக்கர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் போன்ருேர் இங்கே சோதியில் கலந்ததாகக் கருதப்படுகிறது.

**காவிரிப்பூம்பட்டினம் :** காவிரி கடலுடன் கலக்கும் இடத்தே அமைந்து, துறைமுகமுள்ள அழகிய நகரம் என்ற பெருளில் இவ்வூர் 'காவிரிப்பூம்பட்டினம்' என்னும் பெயரைப் பெற்றது. ஆறு கடலுள் புகும் ஊர் என்பதை, 'புகார்' என்னுஞ் சொல் குறிக்கிறது. புகார் என்னும் பெயருள்ள ஓர் ஊர் சோழர் ஆட்சி நடைபெற்ற இந்தோனேசியாவிலும் இருக்கிறது.

சோழர் தலைநகராக இருந்த சிறப்புத் தவிர 'மாசறு பொன்னே வலம்புரி முத்தே' என்ற கானல் வரிப்பாடல்களைக் கோவலனும் மாதவியும் பாடிய கடற்கரையையும் இப்பட்டினம் பெற்றிருக்கிறது.

காவிரிப்பூம்பட்டினம் – பட்டினப்பாக்கம், மருவூர்ப் பாக்கம் என்ற இருபகுதிகளைக்கொண்டதாக இருந்தது. பட்டினப்பாக்கத்தில் சோழ அரசர்கள் வீற்றிருந்தனர். மருவூர்ப்பாக்கத்தில் கடல்வாழ்நர் ஆகிய பரதவரும் வெளிநாட்டு வணிகரும் - சென்ற தலைமுறையில் சேன்

* இவ்விவரங்களைப் பட்டினப்பாலையில் காண்க. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் எழுதி மேலப்பெரும்பள்ளம் மாதவி மன்றத்தினர் வெளியிட்டுள்ள "காவிரிப்பூம்பட்டினம்" என்னும் நூலிலும் காண்க.

தோமில் வாழ்ந்ததுபோல - வாழ்ந்தனர். நரம் புகைக் குரிய மணப்பொருள்களை விற்போர் விலை கூறித்திரியும் பெருந்தெருக்களும், ஆடைகளை அழகுற நெய்யவல்ல பட்டுச் சாலியர் இருப்பிடங்களும், பவளமும் மணியும் வாணிபம் செய்வோர் மலிந்த வீதிகளும், நெல், வரகு முதலிய தானியங்களை நிறையக் குவித்து வைத்துள்ள கூலக்கடைத் தெருவும், பிட்டு அப்பம் முதலிய சிற் றுண்டிகளைச் செய்து விற்போர், கள், மீன் முதலியன விற்பவர், உலோகத் தொழில்களில் சிறந்தோர், இசை வளர்க்கும் குழலர், பாணர் இன்னும் பல்வகைத் தொழி லாளர் வாழ்வதற்குரிய இடங்களும் அமைந்திருந்தன.

இவ்விரு பாக்கங்களுக்கும் இடைப்பட்ட பகுதியே நாளங்காடி. அங்கு பலிபீடம் அமைந்திருந்தது. இந்திர விழாவும் அங்குதான் கொண்டாடப் பெற்றது.

பழமையான இப்பட்டினம் சிதைந்துபோய்க் கட லின் ஒரு பகுதியாகவும், தொடர்பில்லாத சிற்றூர்களாக வும் காட்சி தந்தபோதிலும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் உயர்நிலையிலிருந்ததைப் பட்டினப்பாலை, சிலப்பதி காரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்கள் உரைக் கின்றன. இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே இந் நகர் புகழ்பெற்ற துறைமுகமாக இருந்தது 'பெரிப்ளுஸ்' என்ற நூலிலிருந்தும் அறிஞர் டாலமியின் பூகோளக் குறிப்புக்களிலிருந்தும் பாலி மொழியில் எழுதப்பட்ட 'மிலிந்த அரசரின் கேள்விகள்' என்ற நூலிலிருந்தும் தெரிய வருகிறது.

காவிரியாறு கடலில் கலக்குமிடத்தில் உள்ள கப்ப கரப்பு என இப்போது வழங்கிவரும் இடத்தில், புயலில் ஒரு கப்பல் சிக்கியதாயும், அங்கு ஒருகாலத்தில் துறை முகம் இருந்ததாயும் பரதவர் கூறுகின்றனர்.

அங்கு மீன்பிடிக்கும்போது வலையில் 1950–இல் சிக்கிய சில அருமையான திருவுருவங்கள் திருவெண்காடு, திருச்சாயக்காடு, அன்னப்பன்பேட்டைக் கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன.

காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகேயுள்ள திருவலம்புரியில் பிட்சாண்டார் வடிவத்தை இன்றுங் காணலாம். இது தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களால் செய்யப்பெற்றது.

இப்போது கடலோரத்துள்ள நெய்தவாசலே, இலக்கியங்களில் கூறப்பெற்ற நெய்தலங்கானல் என்றும், இன்றைய வாணகிரியே அன்றைய வணிகபுரி என்றுங் கூறுவர். ஊர்காவல் தெய்வமாகிய சம்பாதி அம்மன் கோவில் இன்றளவும் இருக்கிறது. இக்கோயில் தஞ்சைக் கோயிலுக்கு முற்பட்டதென்பது கல்லும் சுண்ணம்பும் உள்ளநிலை கொண்டு அறியலாம். இக்கோயிலின் மண்டபங்கள் இப்போது பிளவுபட்டுள்ளன. இக்கோயிலை, சமபாதி அம்மன் கோயில் என்று சிலர் குறிப்பிடுகின்றனர்; ஊரின் நடுவே இருந்தமையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

உறைக்கிணறுகளினின்றும் நிலத்தினின்றும் உருவங்களும், முதுமக்கள் தாழிகளும், பழைய பொற்காசுகளும் கிடைத்திருக்கின்றன.

கரையிலிருந்து 11கி. மீ. தொலைவில் கடற்பகுதியில் பழைய கோயிற் கோபுரத்தின் உச்சி நான்கு பாக அளவிலும் 17 பாக அளவில் அதன் அடித்தளமும் தட்டுப்படுவதாகக் கட்டுமரத்தில் சென்று பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

மோஹஞ்சதாரோ, ஹாரப்பா, டாக்சிலா, சாஞ்சி, மண்டு, டில்லி ஆக்ரா, முல்டான் ஆகிய இடங்களைத் தோண்டிப் பார்த்த சர்ஜான் மார்ஷல் போல, பூம்புகா

ரின் புதைப்பொருள்களை ஆராயும் ஆவல்படைத்த அறிஞர் தோன்றும் நாள் எந்நாளோ?

சோழரின் புகழ்பெற்ற துறைமுகமாகக் காவிரிப்பூம் பட்டினம் விளங்கியதை டாக்டர் ராதா குமுத் முக்கர்ஜி போன்ற வரலாற்றுவல்லுனர்களும் வாயாரப் புகழ்ந்துள் ளனர். *ஆயினும், இங்குள்ள கடற்பகுதியைத் தோண் டிப் பார்க்க வேண்டுமென்று ரா. க. சண்முகம் செட்டி யார், டாக்டர் மணவாள இராமானுசம் ஆகியோர் முயன் றும்கூட அரசாங்க ஆதரவு இல்லாமையால் இதுவரை இப்பணி மேற்கொள்ளப்படவில்லை.

இன்றைய காவிரிப்பூம்பட்டினம் சிற்றூராக இருக் கிறது. அதில் பெரிய கட்டிடம் நகரவிடுதியே. இவ் விடுதியினரான நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத் திலிருந்து இராமநாதபுர மாவட்டத்துக்குக் குடியேறிய வர்கள் ஆவர். இவர் மரபினரே பட்டினத்தடிகள். பட்டி னத்தடிகள் கோயிலில் ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் பட்டினத்தடிகள் திருவிழா 12 நாட்களுக்கு நடைபெறு கிறது. ஐந்தாம் நாள் விழா 'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்பதை விளக்குகிறது. கண் ணகி சிலையும் கண்ணகி பெயரால் அமைக்கப்பெற்ற பூங்காவும் இவ்வூரில் உள்ளன.

சம்பந்நர் பாடல் பெற்றதும் பல்லவ அரசர்களால் திருப்பணி செய்யப்பட்டதுமாகிய பல்லவனீச்சுவரர் கோயிலிலும், இதன் அருகேயுள்ள சாயாவனமும் காவிரி நீர்கடலில் வீணுகாது மேட்டுக்குப் பாய்வதற்குக் கால் வாயும் கடலோர அணையும் உள்ள மேலையூரும் காணத் தக்கன.

---

* Indian Shipping: Radha Kumud Mookerji. p. 95/96

### கொள்ளிடம்

கொள்ளிடக்கரையில் இவ்வூர் இருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தைத் தஞ்சை மாவட்டத்துடன் இணைக்கும் இரயில், சாலைப் பாலங்கள் இங்கே உள்ளன.

நறுமணப் பொருள்களும் தைலங்களும் செய்யவும் இறைவன் திருவுருவங்களுக்குப் போடவும் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் ஆற்றுப்படுகையில் மிகுந்துகிடக்கும் வெட்டிவேர் இங்கிருந்து ஏற்றுமதியாகிறது.

நெல் அறைக்கும் இயந்திரங்கள் இவ்வூரில் ஏராளமாக உள்ளன.

ஆங்கிலேயர் இவ்வூருக்குக் 'கொலரூன்' என்று பெயரிட்டனர்.

### தேவி கோட்டை

இது, சீர்காழிக்கு 16 கி. மீ. வடகிழக்கேயுள்ளது. இவ்வூர்ப்பெயர் தீவுக்கோட்டை என்பதன் சிதைவு என்பர். காவிரிப்பூம்பட்டினத்து நகரத்தார் தெற்கே குடிபோன போது, இவ்வூர்ப் பெயரால் அங்கு ஒரு தேவிகோட்டை ஏற்படுத்தினர் என்பர் வேறு சிலர்.

மேஜர் லாரன்சும் ராபர்ட் கிளைவும் 1755-இல் சில காலம் இங்கே வாழ்ந்தனர்.

### திருநகரி

(மக்கள்தொகை 3,000)

வைணவத் தலம். இங்குள்ள திருமங்கையாழ்வார் செப்புருவம் சிறப்புச் சிறப்புடையது. நெல்லை மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரி என்னும் ஓர் ஊர் உளது.

### திருநாங்கூர்

இவ்வூர் சீர்காழியிலிருந்து 10 கி. மீ. தொலைவில் இருக்கிறது. மக்கள்தொகை 3,000. திருமங்கை ஆழ்வார் பிறந்த குறையலூர் இவ்வூரருகே இருக்கிறது.

இவ்வூரில் வாழ்ந்த பன்னிரு வேளிர் குலப்பெண்களையே சோழ அரசர்கள் மணந்து கொண்டதாக வரலாறு உண்டு. 12 சிவாலயங்களும் 12 வைணவ ஆலயங்களும் நாங்கூரில் இருந்ததாகக் கூறுவர்.

மணிமாடக்கோயில் என்ற பெயரும் இவ்வூருக்கு உண்டு. தை அமாவாசை நாளில் பதினொரு கருடசேவை உண்டு. ஒருமுறை சேவித்தால், இந்நிகழ்ச்சி நெஞ்சை விட்டு அகலாது. இங்கு கருடசேவைக்கு வரும்கோயில் மூர்த்திகளின் பெயர்கள் வருமாறு:-

1. மணிமாடக்கோயில் —நந்தாவிளக்குப் பெருமாள்
2. வைகுந்த விண்ணகரம் — தாமரைக் கண்ணுடைய பிரான்
3. அரிமேய விண்ணகரம் —குடமாடுங் கூத்தி
4. வண்புருடோத்தமம் —புருடோத்தமன்
5. செம்பொன்செய் கோயில்—பேரருளாளன்
6. திருத்தெற்றியம்பலம் —செங்கண்மால்
7. திருமணிக்கூடம் —மணிக்கூடநாயகன்
8. பார்த்தன்பள்ளி —தாமரையாள் கேள்வன்
9. திருக்காவளம்பாடி —கோபால கிருஷ்ணன்
10. திருவெள்ளக்குளம் —நாராயணன்
11. திருத்தேவனார்தொகை —தெய்வநாயகப் பெருமாள்

**திருப்புன்கூர்**

சீகாழியருகே இவ்வூர் இருக்கிறது.

திருப்புன்கூர்க்கு அருகேயுள்ள ஆதனூரில் தோன்றியநந்தனார் (திருநாளைப் போவார்), பறையர் குலத்தவராகையால் திருப்புன்கூர்க் கோயிலுக்கு

வெளியே நின்று கும்பிட்டார்; அப்போது, அவர் இறைவனைக் காண வசதியாக

'சற்றே விலகியிரும் பிள்ளாய்
சன்னிதானம் மறைக்குதாம்'

என்று சிவபெருமான் ஆணையிட, நந்தி சற்று விலகிய இடம் இது. நந்தி விலகியிருப்பதை இன்றும் காணலாம்.

கோயிலுக்கு மேற்கேயுள்ள நந்தன் குளம், நந்தனாரின் திருப்பணி என்பர்.

**திருவெண்காடு**

(மக்கள்தொகை 4,000)

சீகாழியிலிருந்து 11 கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகேயுள்ள சிறப் போடு, மூவர் தேவாரத்தையும் பட்டினத்தார் தொடர் பையும் உடையது இவ்வூர் பெரியநாயகி அம்மன்கோயில். கீர்த்தித் திருஅகவலிலும் திருக்கோவையாரிலும் மாணிக்கவாசகர் இத்தலத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தில்லையிற் போலவே இங்கும் நடராசசபை அமைந் திருக்கிறது. புதனுக்குத் தனிக்கோயிலும், சிலப்பதிகாரம் குறிப்பிடும் சூரியகுண்டம் - சோமகுண்டம் என்னும் குளங்களும் இத்தலத்தில் உள்ளன.

1950 அளவில், இக்கோயிலுக்குள் கீழே தோண்டிய போது புதன், அர்த்தநாரீசுவர் திருவுருவங்கள் எடுக்கப் பெற்றன. இவையும் இறைவன் சந்நிதியின் முன் மண்டபத்திலுள்ள ஆனந்தத் தாண்டவக் காட்சி ஓவியங் களும் மெய்கண்டார் தேவாரப் பாடசாலையும் காணத் தக்கன.

12 மாதங்களிலும் திருவெண்காடு திருவிழாக்கோலம் பூண்டிருக்கிறது. ஆடியில் பட்டினத்தார் எழுந்தருளு

வதும், மாசியில் இந்திர விழாவும் பெரிய அளவில் நிகழ்வன. இக்கோயிலிலுள்ள அகோர வீரபத்திரருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் நள்ளிரவில் பூசை நடைபெறுகிறது.

### தென் திருமுல்லைவாயில்

சம்பந்தர்பாடிய இத்தலம் சீர்காழியிலிருந்து 15கி.மீ. தொலைவில் கடற்கரையில் இருக்கிறது. 1941 வரை கப்பல்வழி, அரிசி ஏற்றுமதி இறக்குமதி இவ்வூரில் நடைபெற்று வந்தது. ஆசிரியர்களுக்கான ஆதாரப்பயிற்சிப் பள்ளி இங்கு நடைபெற்று வருகிறது.

பித்தளைத் தாம்பாளங்களில் கிருஷ்ணதேவராயர் காலத்தில் பொறிக்கப்பெற்ற சாசனங்கள் இங்கு உள்ளன. அமாவாசை, கிரகண நாட்களில் தொகையான மக்கள் இங்கு வருகின்றனர். இறைவன் முல்லைவன நாதர்; இறைவி கோதையம்மை.

வட திருமுல்லைவாயில், சென்னை நகரையொட்டிய அம்பத்தூர், ஆவடி என்னும் தொழில் நகரங்களுக்கு அருகே அமைந்திருக்கிறது.

### நீடூர்

இவ்வூரில் பல கல்வெட்டுக்கள் உள்ளன.

### மாதாணம்

திருமயிலாடி இரயில் நிலையத்திலிருந்து இவ்வூர் 8 கி. மீ. தொலைவில் இருக்கிறது. இங்கு கோயில் கொண்டிருக்கும் அம்மன், ஆற்றல் வாய்ந்தது.

### மகேந்திரப்பள்ளி

இது கொள்ளிடக் கரையிலுள்ள வைணவத்தலம்.

**வடரெங்கம்**

கொள்ளிடம் இரயில் நிலையத்திலிருந்து 10 கி. மீ. தொலைவில் வடரெங்கத்தில் ஒரு பெருமாள்கோயில் இருக்கிறது. கொள்ளிட நீர் இக்கோயிலுக்குள் செல்லும் காட்சி காணத்தக்கது.

**வைத்தீசுவரன் கோயில்**

(மக்கள் தொகை 5,000)

இவ்வட்டத்தின் பெரிய ஊர்களில் இதுவும் ஒன்று. 'புள்ளிருக்கும் வேளூர்' என்று தேவாரம் இவ்வூரைக் குறிப்பிடுகிறது. இராமாயணக் கதைத் தொடர்புள்ள தலங்களுள் இதுவும் ஒன்று; வழிபட்டவர்கள் பெயரால் இது அமைந்தது.

இங்குள்ள இறைவனுக்கு வைத்தியநாதர் என்று பெயர். 'பிரிவிலா அடியார்க்கு என்றும் தீராதநோய் தீர்த்தருள வல்லான்' என்று இவ்விறைவனை அப்பர் பாடியுள்ளார். 'மருத்துவரில் தலைசிறந்த மருத்துவன்; வன்பிணியையும் போக்கும் வன்மை பெற்றோன்' என்று மக்கள் நம்புகின்றனர். மருந்தாக உதவும் பட்டை, பூ, பிஞ்சு, பழம், கொட்டை ஆகியவற்றையுடைய வேப்ப மரத்தடியில் வைத்தியநாதன் கோயில் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள முருகனுக்கு, செல்வமுத்துக்குமாரசாமி என்று பெயர். கார்த்திகை நாட்களில் இவ்வூருக்குத் திரளான மக்கள் வருகின்றனர்.

செவ்வாய்க்கிரகமாகிய அங்காரகனுக்கு உரிய தலம் என்று இது கருதப்படுகிறது; செவ்வாய்தோறும் அங்காரகன் ஆட்டுக்கடா வாகனத்தில் பிரகாரம் வரும் நிகழ்ச்சி இக்கோயிலில் நடைபெறுகிறது.

தருமை ஆதீனத்தின் சீரிய மேற்பார்வையில் இக்கோயில் இருந்து வருகிறது; இந்த ஆதீனத்துத்தலைவர்



வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா கோயில்



நாகூர் தர்கா

இக்கோயிலுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள நவரத்தினக் கவசத்தை அன்பளித்துள்ளார்; மருத்துவ மனை ஒன்றை இவ்வூரில் கட்டியுள்ளனர்.

நந்தனார்க்குச் சிவன் தரிசனம் கொடுத்த திருப்புங்கூர் இங்கிருந்து 6 கி. மீ. தொலைவில் இருக்கிறது.

## 5. நாகப்பட்டினம் வட்டம்

இவ்வட்டத்தின் பரப்பளவு 620 சதுர கி. மீ. மக்கள் தொகை 1951-இல் 2, 61,235 ஆக இருந்தது.

இவ்வட்டத்தின் பெரும்பகுதி பாசன வசதியில்லாத தாக இருக்கிறது. நெடுந்தொலைவு பாய்ந்த பிறகு, கடலோரப்பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. இவ்வட்டத்தில் வண்டல் நிலமும் இல்லை. சிலஇடங்கள் மேடாக இருப்பதால் தண்ணீர் ஏறிப்பாயவில்லை.

நீர்வளமுள்ள பகுதிகளில் நெடுங்காலமாக நெல் வேளாண்மையும் 1950க்குப் பிறகு சில இடங்களில் கரும்பு வேளாண்மையும் செய்யப்படுகிறது.

இவ்வட்டத்தின் சிறப்பு அனைத்தும் நாகப்பட்டின நகரம், துறைமுகம் ஆகியவற்றை ஒட்டியனவாக உள்ளன. கல்விநிலையங்கள் மிகுதியாக இல்லாவிடினும், வெளி நாட்டு தொடர்பு இருப்பதாலும் சென்ற தலைமுறையினர் கல்வி பயில இங்கே பல கல்லூரிகள் இருந்தமையாலும் இவ்வட்டத்து மக்கள் கல்வித்துறையில் மேம்பட்டு விளங்குகின்றனர்.

நாகூர், நாகப்பட்டினம் அடியாக்கிமங்கலம், திருப்பூண்டி ஆகிய ஊர்களில் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

### நாகப்பட்டினம்

இலக்கிய வழக்கில் இவ்வூர் நாகைப்பட்டினம் எனப்படுகிறது.

கோட்டத் தலைநகராகவும் வட்டத்தலைநகராகவும் நகராண்மைக்கழகம் உள்ள ஊராகவும் உள்ள நாகப் பட்டினம் தஞ்சை மாவட்டத்தின் பெருநகரங்களுள் ஒன்ருகவும், வரலாற்றுப்புகழ் பெற்றதாகவும் இருக் கிறது. இந்நகரின் மக்கள்தொகை 1951-இல் 57,854. 1961-இல் 55,138.

சோழப் பேரரசின் தலைநகராகவும், பௌத்த சமயம் வேரூன்றியிருந்த நகராகவும் வணிகப் பேரூராகவும் வெளிநாட்டினருக்குத் தமிழ்நாட்டின் வாயிலாகவும் நாகப்பட்டினம் இருந்திருக்கிறது. தேவாரம், பெரிய புராணம் போன்ற நூல்களில் இவ்வூர் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 13-ஆம் நூற்ருண்டில் இத்தாலியி லிருந்து இங்கு வந்த மார்கோ போலோ என்ற பிரயாணக் கலைமன்னன், நாகையைப் புகழ்ந்து கூறி யுள்ளார். இத்தகைய ஊர் ஏதோ ஒருபோரில் அழிந்த நகரம் போன்று, அவலக் காட்சி நல்குகிறது. குறுகலான கடைத்தெருக்களும் புதுக்குளம் என்னும் அசுத்தமான குளமும் சுகாதார வசதியில்லாத சூழ்நிலையும் இருப்பது பெரிய குறைபாடாகும்.

**ஊர்ப்பெயர் :**

திருநாகை என்றும் நாகைக் காரோணம் என்றும் பழந்தமிழ் இலக்கியங்கள் இவ்வூரை இயம்புகின்றன. பட்டினம் என்னும் இறுதிச்சொல் இவ்வூரின் பெயரில் இடம் பெற்றிருப்பதும் இவ்வூரின் சிறப்பை உணர்த்துவ தாகும். பட்டினம், பாக்கம் என்பன கடற்கரையைச் சார்ந்த ஊர்களின் பெயர்களாகும். தஞ்சை மாவட் டத்தில் இத்தகைய பெருமைபெற்ற பழமையான ஊர்கள் காவிரிப்பூம்பட்டினம், அதிராம்பட்டினம், நாகப் பட்டினம் என்னும் மூன்றேயாகும்.

"நாக அரசன் ஒருவன் உண்டாக்கிய பட்டினம் இது; அதனுலேயே நாகப்பட்டினம் என்ற பெயர் ஏற்பட்டது" என்று சிலர் கூறுவர்.

இந்நகரிலுள்ள பாடல்பெற்ற தலமாகிய காரோணர் கோயிலில் இறைவனின் திருவுருவம் இந்த நாக அரசனுலேயே அமைக்கப்பட்டதென்று சிலர் கருதுகின்றனர். தல விநாயகரின் பெயர் நாகாபரணப் பிள்ளையார் என்பதாகும்; அப்பிள்ளையாருக்குப் பின்னுல் ஐந்து தலைப் பாம்பொன்று குடை பிடிக்கிறது.

நாகர் என்ற காட்டுமக்கள் ஒருகாலத்தில் வாழ்ந்ததால் இவ்வூர் நாகப்பட்டினம் என்று பெயர் பெற்றதாகவும் சிலர் கருதுகின்றனர்.

**வரலாறு :**

இலங்கை, பர்மா போன்ற அண்டை நாடுகளுடனும் அரபு நாடுகளுடனும் நாகப்பட்டினத் துறைமுகத்துக்கு வணிகத் தொடர்புகள் வரலாறு தொடங்கிய காலத்திலேயே இருந்தன. 'மலேபட்டான்" என்று அரபு நாடுகளில் நாகப்பட்டினத்தைக் குறிப்பிட்டு வந்தனர். சோழர்காலத்தில் நாகை பெருஞ்சிறப்புடன் இருந்தது. நாயக்க அரசர்களின் காலத்தில் நாகை பொலிவு இழந்தது. அப்போது கடற்கரைப்பகுதிகளில் அயல் நாட்டார் ஆதிக்கம் தொடங்கிற்று. 1612-முதல் 1660-வரை நாகப்பட்டினத்தில் போத்துக்கீசியர் குடியேறினர். பிறகு இந்நகர் டச்சுக்காரர் வயப்பட்டது. இடையிடையே ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் போர்வீரரும் வணிகரும் வேவுபார்ப்பவர்களும் இங்கு வந்த வண்ணமாக இருந்தனர். தஞ்சை நாயக்கமன்னர்கள் சிலசமயம் அவர்களை எதிர்த்தும் பெரும்பாலும் தழுவியும் ஆட்சியை நடத்திவந்தனர். பெயரளவுக்கு வாடகையும் அராபியக்குதிரைகள் போன்ற சலுகைகளையும் பெற்று வந்தனர்.

மராத்திய மன்னர்கள் தஞ்சையை ஆண்டபோது, நாகப்பட்டினம் 1660-முதல் 1718-வரை டச்சுக்காரரிடம் இருந்தது. 1759-முதல் 1781-வரை இப்பகுதியில் பல ஐரோப்பிய நாடுகளுக்கிடையே போர் நடைபெற்றது.

1781க்குப்பின் நாகப்பட்டினம் ஆங்கிலேயர் ஆட்சியில் அமைந்தது. 1845வரை மாவட்டத்தின் தலைநகராக இருந்தது. 1875-வரை மாவட்ட நீதிபதி ஒருவர் நாகையில் இருந்தார். ஐரோப்பியர்கள் நாகையில் சில ஆயிரம் பேர் வாழ்ந்ததால், மாவட்ட மருத்துவ அலுவலருக்குச் சமமான சிவில் சர்ஜன் ஒருவரும் நாகையில் இருந்துவந்தார். பிரிட்டிஷ் ஆட்சியின் பிற்பகுதியில் நாகப்பட்டினம் இப்பெருமைகளை யெல்லாம் இழந்தது.

இப்போது நாகப்பட்டினம் தஞ்சைமாவட்டத்தின் கிழக்குப்பகுதியின் முக்கிய நகரமாகவும் துறைமுக நகரமாகவும் தஞ்சைமாவட்டத்தின் வருமான வரி வட்டாரங்கள் இரண்டில்ஒன்றின் தலைநகராகவும் இருந்துவருகிறது.

புகழ்பெற்ற கல்லூரிகளும் தென்இந்திய இரயில்வேயின் தொழிற்சாலையும் நாகையில் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இருந்தன. எனவே, இழந்துபோன பெருமையுடைய ஊர் என்று நாகையைக் குறிப்பிடலாம். இக்காரணங்களாலும் சுகாதாரக் குறைபாட்டாலும் புயலாலும் இந்நகரில் மக்கள்தொகை பெருகுவதில்லை.

**நினைவுச் சின்னங்கள்**

டச்சு ஆட்சியின் அறிகுறிகளாக சென்ட் பீட்டர் தேவாலயம், ஹாலண்டு பங்களா, 20 அடி உயரமுள்ள கொடி மரம், டச்சு மார்க்கட், ஹாலண்டு ரோடு என்பவை இன்றளவும் உள்ளன. டச்சுக்காரரின் பழைய மயானத்தில், ஹாலண்டு நாட்டிலிருந்து கல்வெட்டாக வெட்டப் பெற்றுக் கொண்டுவரப்பட்ட கல்லறைகள் உள்ளன. காடம்பாடியில் வெளிநாட்டார் கட்டிய மாளிகைகள்

சிதைந்து காணப்படுகின்றன. சப்கலெக்டர் அலுவலகமும் நகராண்மைக்கழக அலுவலகமும் ஏனைய பல அரசாங்க அலுவலகங்களும் இப்பகுதியில் உள்ளன.

நாகையின் பழைய கோட்டையையும் அதன் பரப்பையும் நினைவூட்டும் மேலவாயில், வடக்கு வாயில், வெளிப்பாளையம் (வெளிவை என்று இதைச் சுருக்கிக் கூறுகின்றனர்) என்பன இன்றும் சிதைந்த நிலையில் உள்ளன.

**சமயச் சிறப்பு:**

எல்லாச் சமயத்தவரும் வணங்கும் பெருமைக்குரிய நிறுவனங்களையுடைய சிறப்பு நாகைக்கு உண்டு.

காஞ்சிக் காரோணமும் குடந்தைக் காரோணமும் போலவே நாகைக் காரோணமும் சைவர்களுக்கு மிக முக்கியமானது. காரோணம் என்பது ஊரின் பெயர். இறைவன் காயாரோகணசாமி; அம்மன் நீலாயதாட்சி. இக்கோயில் காயாரோகணர் கோயில் என்று கல்வியாளர்களாலும் நீலாகோயில் என்று பொதுமக்களாலும் குறிப்பிடப்படுகிறது. மூவர் பாடலும் பெற்ற சிறப்பு இக்கோயிலுக்கு உண்டு. சுந்தரர் தாம் விரும்பிய யாவும் பெற்ற பதி இது. சப்த விடங்கர் தலங்களுள் இது ஒன்று. இக்கோயிலில் நவக்கிரகங்கள் யாவும் மேற்கு நோக்கியிருக்கின்றன. ஆறுகாலப் பூசை உண்டு. வைகாசி பிரமோற்சவமும், ஆடிப்பூரத்தன்று (தேரின் அடிப்பீடத்தில் பீங்கான் போன்று வண்ணம் தீட்டிய) பீங்கான் ரதவிழாவும் இங்கே காணத் தக்கவை.

டச்சுக்காரர்கள் புதுப்பித்துத் திருப்பணி செய்த மல்லேசுவர சுவாமி கோயில், காயாரோகணசுவாமி கோயிலுக்கு அருகே இருக்கிறது. இது கட்டுமலைமீது அமைந்தது.

அமரநந்தீசர் கோயில், கட்டியப்பர்கோயில், குமார கோயில், விசுவநாதர் கோயில் ஆகியனவும் இவ்வூரில் உள்ளன. 63 நாயன்மார்களில் ஒருவரான அதிபத்த நாயனர் இவ்வூரினர் என்றும் செம்படவர் சமூகத்தினர் என்றும் அவர் நினைவாக எடுக்கப்பெற்ற அதிபத்தர் கோயில் நம்பியாங்குப்பத்து மணல் மேட்டுக்குள் புதைந்து விட்டதாகவும் கூறுவர்.

வைணவர்களுக்கும் நாகை ஒரு சிறந்த பதியாக இருக்கிறது. திருமங்கை மன்னனின் பாசுரம் பெற்ற திருநாகை சௌந்தரியராசப் பெருமாள் கோயில் இருப்பது இவ்வூரிலேயே ஆகும். இங்கே கோயிலில் கொண்டுள்ள சௌந்தரியராசன், திருமங்கை யாழ்வார்க்கும் நாகராசனுக்கும் பிரத்தியட்சம். இக்கோயில் பழைய கோயில். கல்வெட்டுக்கள் 16 ஆம் நூண்ருண்டு முதல் உள்ளள. கைலாசநாதர் கோயில் ஒன்றும் இவ்வூரில் உண்டு.

பௌத்த சமயத்தார் வழிபடும் கோயில் ஒன்று பல்லவ அரசன் ஒருவனுல் எட்டாம் நூற்ருண்டில் இங்கே கட்டப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. இதைப் பற்றிய குறிப்புக்கள் மார்க்கோபோலோவின் நூல்களில் காணப்படுகின்றன. இக்கோயிலில் புத்தரின் தங்க விக்கிரகம் இருந்ததாகவும் இதை எடுத்துக் கொண்டுபோய் அழித்துத்தான் திருவரங்கம் கோயிலின் நான்காவது பிரகாரத்தை (இப்போது அழிநாதன் திருவீதி எனப்படுவதை) திருமங்கையாழ்வார் அமைத்தார் என்றும் ஒரு வரலாறு உண்டு.

இராசராசச் சோழனும் அவனுக்குட்பட்ட வெளிநாட்டு அரசன் ஒருவனும் சூடாமணி விக்கிரகம் என்ற புத்தர் கோயிலை நாகையில் கட்டினர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. (விவரம் இந்நூலின் பிறிதொரு

பகுதியில் காண்க) 15–ஆம் நூற்றுண்டுவரை இக்கோயில் சிறந்துவிளங்கிற்று. 'ராஜராஜப் பெரும்பள்ளி', 'ராஜேந்திரச் சோழப் பெரும்பள்ளி' 'சோழப் பெரும்பள்ளி' என்ற புத்த விகாரங்கள் இங்கே இருந்தன. 1856க்கும் 1870க்கும் இடையே இவ்வூரில் வெளிப்பாளையம், நாணயக் காரத்தெரு என்ற இடங்களில் 350 புத்த விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை 871 முதல் 1250 வரை உட்பட்ட காலத்தவை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இந்த உருவங்களை, கல்கத்தாவிலுள்ள இந்தியப் பொருட்காட்சி மண்டபத்தில் காணலாம். 17 – ஆம் நூற்றுண்டின் இறுதியில் இக்கோயில் இடிக்கப்பட்டு இந்த இடத்தில் செண்ட் ஜோசப்ஸ் கல்லூரி கட்டப் பட்டதென்பர்.

நாகையின் ஒரு பகுதியான நாகூர் முஸ்லிம்கள் வழிபடும் முக்கியமான இடங்களுள் ஒன்று; இதைப் பிறிதோரிடத்தில் விரிவாகக் கூறியிருக்கிறோம்.

நாகப்பட்டினத்தில் கத்தோலிக்கருக்கும் பிராடஸ்டண்டுகளுக்கும் புனிதமான கோயில்களும் உள்ளன. நாகைக்குத் தெற்கேயுள்ள வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா கோயில் புகழ்மிக்க ஒரு தலமாக விளங்கி வருகிறது.

## மழை

தஞ்சை மாவட்டத்தின் ஏனைய பகுதிகளைவிட இங்கே மழை மிகுதியாக உண்டு. ஆண்டுக்கு 54 அங்குலம் (1350 செ. மீ.) பெய்வதாயும் அதில் 40 அங் (1040 செ. மீ. ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பெய்வதாகவும் கணக்கிட்டுள்ளனர். தமிழ்நாட்டின் பிற நகரங்களை நோக்க நாகப்பட்டினத்தில் வெப்பம் குறைவாக உளது.

## புயல்

புயலால் நாகப்பட்டினம் அடிக்கடி அல்லற்படுகிறது. 1681-இல் ஏற்பட்ட புயல் டச்சுக்காரர்களின் கோட்டையின் பகுதிகளை அழித்தது. 1935-இல் வீசிய புயல் துறைமுகத்தைச் சேதப்படுத்தியது. 1952 – இலும் 1955-இலும் புயலால் இந்நகர் அடைந்த இன்னலும் சேதமும் அளவுகடந்தன. நவம்பர் மாதத்திலேயே புயல் ஏற்படுவதால், அது அச்சமூட்டும் மாதமாக இருக்கிறது.

## நகராண்மைக் கழகம்

நாகப்பட்டினமும் நாகூரும் சேர்ந்து ஒரு நகராண்மைக் கழகமாக 1866–இல் ஏற்படுத்தப்பட்டது. 1911-வரை இந்நகரம் வளர்ச்சி யடைந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் சிலர் மலேயா நாட்டுக்குச் சென்றதாலும் கல்வி நிலையங்களும் இரயில்வேத் தொழிற்சாலையும் இவ்வூரிலிருந்து மாற்றப்பட்டதாலும் இந்நகரின் சிறப்புக் குன்றியிருக்கிறது.

## சமூக அமைப்பு

எல்லாச் சமயத்தவரும் பெருந்தொகையாக வாழும் நகரம் நாகை நகரமாகும். நாகர்கோயில், தூத்துக்குடி நகர்களுக்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் கிறித்தவர்கள் முக்கியமாக உள்ள நகரம் இது. கடல் வாணிபத்தையொட்டி அராபிய நாடுகளிலிருந்து நாகையில் குடியேறியவர்களின் வழித்தோன்றல்களான லப்பை சமூகத்தாரும் இன்றும் மலேயாவின் இறு துறைமுகங்களுக்கு மரக்கலம் ஓட்டும் மரக்காயர் சமூகத்தாரும் இங்கே ஆயிரக்கணக்கில் வாழ்கின்றனர். இந்துக்கள் நாகை நகரிலும் அதன் சுற்றுப்புறச் சிற்றூர்களிலும் ஏராளமாக உள்ளனர்.

**துறைமுகம்**

நாகைத் துறைமுகத்தைப் பற்றிய விவரங்களை "போக்குவரத்துவசதிகள்" என்ற கட்டுரையில் காண்க.

**தொழில்வளம்**

நாகையின் பண்டைத் தொழில்கள் கப்பலோட்டுவதும் மீன் பிடிப்பதும் ஆகும். இருபதாம் நூற்றாண்டில் கப்பலோட்டுபவர்கள் "மதுரை கம்பெனி" என்னும் ஆங்கிலேய வாணிப நிலையத்தில் படகோட்டிகளாக வேலைபார்க்கும் ஒருசிலரே என்ற நிலைஏற்பட்டிருக்கிறது.

மீன்பிடி தொழிலை நம்பி வாழ்க்கைப் படகைச் செலுத்தும் 40 சிற்றூர்கள் நாகை வட்டத்திலுள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை பட்டணச்சேரி, நம்பியன் குப்பம் என்னும் இரண்டும் ஆகும். மீன்பிடிப்பவர்க்குப் "பட்டணவர்" என்ற பெயர் வழங்கிவருகிறது.

1952-இலும் 1955–இலும் ஏற்பட்ட புயல்கள் பட்டணவரைப் பெரிதும் பாதித்தன. புயலின் கொடுமையால் அரசாங்கத்தாரின் அருள் இவர்கள்பால் திரும்பியது; கூட்டுறவு நிறுவனங்களின் வாயிலாக இவர்களுக்குப் பல நூறாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

1957 ஏப்ரல் 5–இல் கிழக்குக் கடற்கரை மீனவர் பயிற்சி நிலையம் நாகப்பட்டினத்தில் தொடங்கப் பெற்றது.

தஞ்சை, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை மாவட்டத்து மீனவர்களுக்கு இப் பயிற்சிப் பள்ளி நடைபெற்று வருகிறது.

மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட (தமிழ்ப்) படித்த இளைஞர்களுக்கு ஆறுமாத காலத்துக்கு இங்கே உதவிச் சம்பளம் வழங்கிப் பயிற்சி தரப்படுகிறது. பெரிய வலை

களையும் புதுவகை மீன்பிடி கருவிகளையும் பயன்படுத்திக் கூடுதலாக மீன்களைப் பிடிக்கும் முறை சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இயந்திரப் படகுகளையும் விசை களையும் கொண்டு கடலில் நெடுந்தொலைவு தங்கி மீன் பிடிக்குங்கால் கடலில் சென்ற பாதையையும், திசை கருவியால் கடலில் சென்ற இடத்தையும் தெரிந்துகொள் வதும் இங்கே கற்பிக்கப்படுகிறது. மீன்பிடிக்கும் ஏற் பாடுகளும் செய்யப்படுகின்றன.

இவ்வட்டத்து மீனவர்கள் கிழிஞ்சல்களில் மீன் எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றி வருவது, சங்க இலக் கியங்களில் குறிப்பிடப்படும் நிகழ்ச்சியை நினைவூட்டும். இவர்கள் பனைமட்டையால் செருப்புச் செய்து காய்கறிக் கூடையில் செருகி வைத்துக்கொள்ளுவது கூர்ந்து கவனித்து இன்புறத்தக்கது ஆகும்.

## இரயில்வே தொழிற்கூடம்

இரயில்வே தொழிற்கூடம் தென்னிந்திய இரயில்வே யின் தொழிற்கூடம் பல ஆண்டுகள் நாகையில் இருந்தது. 1928-இல் இத்தொழிற்கூடம் திருச்சியை அடுத்த பொன் மலைக்கு மாற்றப்பட்டது. இதன் விளைவாகத் தொழிலா ளர்கள் நாகையிலிருந்து பொன்மலைக்குச் சென்றனர்.

இரயில்வே கம்பெனியார் விட்டுச்சென்ற கட்டிடங் கள், இயந்திரங்கள் ஆகியவற்றை விலைக்கு வாங்கிச் சிலர் நாகையில் புதிய தொழில்களைத் தொடங்கினர். இவ்வாறு வளர்ச்சியடைந்த தொழில்களுள் ஒன்று இப் போது பெரும்புகழ் பெற்றுள்ள நாகப்பட்டினம் எஃகு- தகரப்பெட்டித் தொழில். இத்தொழில் இந்நாளில் அரசாங்க உதவியுடன் கூட்டுறவு முறையில் நடைபெற்று வருகிறது. மற்றொன்று இரும்பு வார்ப்படத் தொழில்.

**இரும்புத் தொழிற்சாலை:** (இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ்)

இது இரயில்வேத் தொழிற்கூடம் இருந்த இடத்தில் 1934-இல், சி. இராசம் என்ற தொழில் அதிபரால் தொடங்கப்பெற்றது. இங்கு 900 தொழிலாளர் வேலை செய்கின்றனர். 1939 முதல் டாட்டா இரும்பு எஃகுத் தொழிற்சாலையினரின் உதவியுடன் இங்கே இரும்புக் கம்பிகளும், சதுரக் கம்பிகளும், முள் கம்பி ஆணி, நீளக் கம்பிகள், வார்ப்படப் பொருள்கள் ஆகியனவும் செய் யப்படுகின்றன. இப்போது உற்பத்தி அளவு 8 மணி நேரத்துக்கு 70 டன் ஆகும். மூலப்பொருள்கள் ஜாம் ஷெட்பூரிலிருந்தும் பீலாயிலிருந்தும் வரவழைக்கப்படு கின்றன.

பல ஆண்டுகள் இத்தொழிற்சாலையை நடத்தும் பொறுப்பை டாட்டா கம்பெனியார் மேற்கொண் டிருந்தனர். டாட்டா கம்பெனியாரின் மேற்பார்வையில் இத்தொழிற்சாலை சிறப்பாகவும் திறமையாகவும் நடை பெற்று வந்தது. 1961 ஏப்ரல் முதல் நிறுவிய வரின் மகனரான சி. ஆர். இராமசாமியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினர் இத்தொழிற்சாலையின் ஆட்சி யைக் கவனித்து வருகின்றனர். இத்தொழிற்சாலையை விரிவாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொழிலாளர்க்கு வீட்டு வசதி செய்யாதிருப்பதும் பார்வையிடுபவர்க்கு வசதிகள் வழங்காததும் இந்த ஆலையின் பெரிய குறைபாடுகளாகும்.

**வாணிகம்:** ஏற்றுமதி இறக்குமதி வணிகர் பலர் இவ்வூரில் உள்ளனர். எனவே, வெளிநாட்டுப் பொருள் கள் இங்கிருந்து வட இந்திய வணிகர்க்குச் செல்லு கின்றன. நெல் (இலங்கைக்கு) ஏற்றுமதி, (பர்மாவிலி ருந்து) இறக்குமதி 1941-வரை பெரிய அளவில் நடை

பெற்றது. பர்மா தேக்கை வரவழைத்து மரம் அறுத்து விற்பனை செய்யும் பல மரவாடிகள் இங்கு இருந்தன. இவை இப்போது, மலையாளத்து மரங்களை வரவழைத்து வருகின்றன. வெங்காயம், கசகசா, பீடி ஏற்று மதியும் பாக்கு இறக்குமதியும் மிகுதி. கிராம்பு, இறக்கு மதி இங்கு மிகுதி. மாதந்தோறும் 3,000 மூட்டை பாக்கு வரவழைக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள கோயில்களின் தேவையை நிறைவேற்றக் கல்கத்தா விலிருந்து பட்டாணிக்கடலை பெரிய அளவில் இறக்குமதி யாகிறது. மலேயா நாட்டில் விற்பனையாகும் கண்கவர் பொருள்களும் இங்கு கிடைக்கின்றன.

ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகளின் அலுவலகத் துக்குப் பண்டகசாலை என்று பெயர். இவர்கள் தொழில் நடத்தும் தெருக்கள் பண்டகசாலைத் தெரு, பின் பண்டக சாலைத் தெரு என்ற பெயர்களால் தமிழிலும், First Line Beach, Second Line Beach என்ற மதிப்பான பெயர் களால் ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுகின்றன. இத்தெருக்களைப் பார்த்த பிறகு, ஆங்கிலப் பெயர்கள் இவற்றுக்குப் பொருந்தாது என்ற கருத்து எனக்கு ஏற்பட்டது.

## பிற தொழில்கள்

மலேயாவிலிருந்து வரும் பொருள்களைப் பல இடங் களுக்குக் கொண்டு செல்ல, சாலைபோக்குவரத்துத் தொழில் ஓரளவு வளர்ச்சியடைந்திருக்கிறது.

**பல்சுவை**

நாகையில் இருப்பவை: 162 கோயில்கள், 25 மசூ திகள், 30 தேவாலயங்கள், சில உயர்நிலைப்பள்ளிகள், பால் பண்ணைச்சேரியில் இரு தொழிற்கல்வி நிலையங்கள், குறுகலான தெருக்கள், பழைய கட்டிடங்கள், கொசு,

நாகை - நாகூர் டவுன்பஸ்வசதி, ஏராளமான (இந்திய) அரசாங்க அலுவலகங்கள்.

நாகையில் இல்லாதவை :—சுத்தம், சுகாதாரம்.

நாகையில் மலிந்தது :—கடல்மீன்

நாகையின் தேவை :—நாகை - சென்னை, நாகை - பட்டுக்கோட்டை - புதுக்கோட்டை - மதுரை பஸ் போக்கு வரத்து

நாகையில் நடப்பவை :—கள்ளக்கடத்தல், சாமான்கள் பறிமுதல், சில் ஆண்டுகளுக்கொருமுறை புயல். (கிழக்கத்திக் காற்று 15 நிமிடங்களுக்கு அடித்தால் வெள்ளம் ஏற்பட்டு, படகுகள் உள்நாட்டுக்குள் நான்கு மைல் தொலைவுக்கு வந்துவிடும்) இந்திய நாணயத்துக்குப் பதில் மலேயா நாணயங்களைக் கொடுத்து ஏமாற்றுவது.

நாகையில் வீசுவது:—மாலையில் காரைக்கால் மணம், மற்ற நேரத்தில் கடற்காற்று.

**நாகையும் இந்திய அரசாங்கமும்:** நாகையில் தமிழ்நாடு அரசாங்க அலுவலகங்களைவிட, இந்திய அரசாங்க அலுவலகங்களின் எண்ணிக்கையே கூடுதலாக இருக்கிறது. உப்பு அலுவலர், குடியேற்றக் கட்டுப்பாடு அலுவலர், சுங்க அலுவலர், மத்திய கலால்வரி அலுவலர், வருமானவரி அலுவலர், துறைமுக அலுவலர் போன்ற பலருடைய அலுவலகங்களும் உள்ளன. நாகைத் துறைமுகத்தின் வாயிலாக இந்திய அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 80 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது, எனவே இத்துறைமுக விரிவு வேலையை விரைவாக மேற்கொள்ளுவதும் நாகை நகரின் நல்வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைவேறத் தமிழ்நாடு அரசாங்கத்திற்குப் பொருளுதவி செய்வதும் இந்திய அரசாங்கத்தின் கடமைகளாகும்.

நாகைக்கும் காரைக்கும் (காரைக்காலுக்கும்) ஒரு காத தூரமே. (காதம்–*16* கி. மீ.) காரைக்கால் பிரெஞ்சு ஆட்சியில் இருந்தபோது காரைக்காலில் கிடைக்கும் மலிவான பொருள்கள் நாகை வழியாக (அக்காலத்தில் பிரிட்டிஷ்) இந்தியாவுக்குக் கள்ளத்தனமாக வந்த வண்ணமாக இருந்தன. பிரெஞ்சு ஆட்சி முடிவடைந்ததும் இத்தொழிலும் அருகிவிட்டது.

**கல்வித்துறை**

வெள்ளைக்காரர்கள் பெரிய அளவில் இருந்தபோது, நாகப்பட்டினத்தில் கல்விநிலையங்கள் சிறந்து விளங்கின. திருச்சி சென் ஜோசப் கல்லூரியும் மன்னார்குடி பின்லே கல்லூரியும் இங்கேதான் தோன்றின. இப்போது நாகப்பட்டினத்தில் சிறந்த உயர்நிலைப்பள்ளிகளும், வலிவலம் தேசிகர் பல்தொழிற் கல்லூரியும், மீனவர் பயிற்சி நிலையமும் இண்டஸ்டிரியல் டிரெயினிங் இண்ஸ்டிட்டியூட், கிராப்ட்ஸ்மன் டிரெயினிங் ஸ்கூல் ஆகியவையும் நடைபெற்று வருகின்றன.

கல்வியாளரான காளமேகப்புலவர் பாடல் ஒன்று குறிப்பிடத்தக்கது. நாகப்பட்டினத்தில் (கடல் வாணிகத்தில் சிறந்துவிளங்கிய) காத்தான் என்னுஞ்செல்வன் ஓர் அன்ன சத்திரம் வைத்திருந்தான். பசிக்கொடுமையால் காளமேகப்புலவர் அங்கே சென்றபோது, சத்திரத்து அலுவலர் அவருக்குக் காலந்தாழ்த்தி உணவளித்தாராம். அப்போது காளமேகப் புலவர் பாடிய வசைப்பாட்டு சுவைமிக்கது :–

கத்துகடல்சூழ் நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் - குத்தி
உலையில்இட ஊர்அடங்கும்; ஓர்அகப்பை அன்னம்
இலையில்இட வெள்ளி எழும்.

**நாகூர்**

நாகப்பட்டினத்துக்கு வடக்கே நான்குமைல் (ஆறரை கி. மீ) தொலைவில் நாகூர் உள்ளது. இது நாகப்பட்டினம் நகராண்மைக்கழக எல்லைக்குட்பட்டது. இவ்வூருடன் இரயில்பாதை முடிவடைந்துவிடுகிறது. இப்பகுதிக்குப் "புன்னாகவனம்" என்ற பெயர் பழங்காலத்தில் வழங்கி வந்தது.

நாகூர் என்பது நகரம் என்பதன் மரூஉவாக இருக்கலாம். பிரெஞ்சுக்காரர்கள் காரைக்கால்பகுதிக்கு வந்தபோது இவ்வூரை நாகூர் என்று அழைக்கத் தொடங்கியிருக்கக்கூடும். மேற்குவங்காளத்தில் பிரெஞ்சு ஆட்சியிலிருந்த ஊரின் பெயர் சந்திரநாகூர் என்பதும் அதையடுத்த ஊர்கள் பாராநாகூர், கோநகூர் என்ற பெயர்களுடன் இருப்பதும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

*1758* முதல் *1800* வரையில் நாகூரில் பல போர்கள் நிகழ்ந்தன. டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், ஐதர்அலி ஆகியோர் அவற்றில் கலந்துகொண்டனர்.

இந்தியாவிலேயே இந்து – முஸ்லிம் ஒற்றுமைக்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பது நாகூர். ஹஜாரத் சையது ஷாகுல் ஹமீது குவாதிர் அலி கஞ்சசவாய் என்ற முஸ்லிம் பெரியார் *17*–ஆம் நூற்றாண்டில் அடக்கமாகிய இடம் "தர்கா" எனப்படுகிறது. பக்திப் பெருக்குடன் இந்தத் தர்காவுக்கு இந்துக்களும் வருகின்றனர். இங்கே அடங்கியிருக்கும் பெரியாரை இந்துக்கள் "நாகூர் ஆண்டவர்" என்று குறிப்பிடுகின்றனர். இவருடைய வாழ்க்கையை "நாகூர்ப் புராணம்" என்று பாடியுள்ளனர். முஸ்லிம்கள் இப்பெரியாரை "நாகூர் மீரான்" என்பர்.

நாகூர் கந்தூரி விழா முஸ்லிம் ஆண்டு தொடங்கும் போது நடைபெறுகிறது. நாகூர் ஆண்டவர் இறந்த நாள் முதல் *14* நாட்களுக்கு இவ்விழா நடைபெறுகிறது.

# கந்தூரி மகோற்சவ விளம்பரம்

நாகூர் ஹஜரத்து குத்துபுல் அக்தாபு பர்துல் அஹ்பாபு செய்யதுஸ் ஸாதாத்து செய்யதினு ஷாஹுல்மீது காதிர் ஒலி கஞ்சஸ்வாய் கஞ்சபக்ஷ் பாத்துஷா ஸாஹிபு ஆண்டவரவர்கள் தர்கா ஷரீபில் பரம்பரை நாட்டாமைக்காரர்களாகிய (போர்டு ஆப் டிரஸ்டிகள்) எங்களால் நடத்தப்படப்போகிற பெரிய கந்தூரி என்னும் வருஷ மகோற்சவமானது ஹிஜரி 1580 ஜமாத்துலாஹிர் மாசப்பிரவேசகாலமாகிய நாளது 1960-ஹூ நவம்பர் மீ 20வ தொடங்கி டிசம்பர்-மீ 3வ யோடு முடிவுபெறும்.

## நாகூர் தர்கா கந்தூரியின் விசேஷ தினங்களாவன :

| | | |
|---|---|---|
| 1. ஜமாத்துல்லவ்வல் மீ 30வ<br>சார்வரி-கார்த்திகை மீ 5வ<br>1990 நவம்பர் மீ 20வ | ஞாயிறு<br>திங்கள்<br>இரவு | இன்று பகல் நாகப்பட்டின மிருந்து கொடி ஊர்வலம் வந்து இரவு 6-30 மணிக்கு துவஜாரோகணம் என்னும் **கொடி ஏற்றுதல்.** |
| 2. ஜமாத்துலாஹிர் மீ 8வ<br>கார்த்திகை மீ 12வ<br>நவம்பர் மீ 27வ | ஞாயிறு<br>திங்கள்<br>இரவு | இரவு 8 மணிக்கு **வாண வேடிக்கை** |
| 3. ஜமாத்துலாஹிர்மீ 9வ<br>கார்த்திகை மீ 13வ<br>நவம்பர் மீ 28வ | திங்கள்<br>செவ்வா<br>இரவு | இரவு 8 மணிக்கு **பீர் வைக்குதல்** |
| 4. ஜமாத்துலாஹிர்மீ 10வ<br>கார்த்திகை மீ 14வ<br>நவம்பர் மீ 20வ | செவ்வாய்<br>புதன்<br>இரவு | இரவு தாபூத்து என்னும் சந்தனக்கூடு நாகப்பட்டின மிருந்துவந்து 4-30 மணிக்கு ஹஜரத்து ஆண்டவரவர்கள் ரவ்லாஷாபுக்கு **சந்தனம் பூசுதல்.** |
| 5. ஜமாத்துலாஹிர்மீ 11வ<br>கார்த்திகை மீ 16வ<br>டிசம்பர் மீ 1வ | வியாழன் | மாலை 5 மணிக்கு **கடற்கரைக்கு பீர் ஏகுதல்** |
| 6. ஜமாத்துலாஹிர்மீ 14வ<br>கார்த்திகை மீ 18வ<br>டிசம்பர் மீ 3வ | சனி<br>ஞாயிறு<br>இரவு | இரவு 8-30 மணிக்கு குஆன் ஷரீபு ஹதியா (வேத பாராயணம்) செய்து துவஜா அவரோகணம் என்னும் **கொடி இறக்குதல்.** |

இந்நாள் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் வரும். விழாத்தேதி ஆண்டுதோறும் மாறும். அக்காலத்தில், சில நாட்கள் முன்னதாகப் பின்வரும் விளம்பரம் நாளிதழ் களில் வெளியிடப்படும்.

கந்தூரித்திருவிழாவில் பாய்மரக் கப்பல் போலவும் தோணி போலவும் மரத்தாலும் காகிதத்தாலும் செய்த பதுமைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறன. கடலில் செல்லும் கப்பல்களைப் புயலினின்றும்காற்றினின் றும் நாகூர் ஆண்டவரே காப்பாற்றி அவைகளைக் கரையில் சேர்க்கிறார் என்ற நம்பிக்கை இவ்வூர் மக்களாகிய மரக் காயரிடம் வேரூன்றியிருப்பதாலேயே இவ்வாறு ஊர்வலம் அமைக்கப்படுகிறது. ஒன்பதாம் நாள் விழாவில் சந்தனக் கூடு ஊர்வலம் நிகழும். தர்காவைப்போன்ற வடிவத்தில் அமைத்த ஒரு தேரில் சந்தனம் முதலிய நறுமணப் பொருள்கள் சேமித்துவைக்கப்பெற்று, பிறகு அவை யாவும் நாகூர் ஆண்டவர் சமாதியின்மீது போடப்பட்டு வழிபட வந்திருப்பவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

முஸ்லிம்கள் இத்திருவிழாவின்போது உண்ணு நோன்பு மேற்கொள்வர்; இறுதிநாளில் கடலிற் சென்று தம் கரங்களைக் கழுவுவர். இத்திருவிழாவுக்கு இந்தியா வின் பல பகுதிகளிலிருந்தும் இலங்கை, பர்மா, மலேயா, அரபு நாடுகள் ஆகியவற்றிலிருந்தும் இருநூறாயிரம் பேர் நாகூருக்கு வருகின்றனர். இவர்களால் நாகூர் தர்காவுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் பணமும் பொருள்களும் இரண்டு லட்சம் ரூபாய் அளவினதாக உள்ளன. செலவுபோக வருவாயில் எஞ்சும் தொகை நாகூர் ஆண்டவரின் வளர்ப்புக் குழந்தையான யூசூப் என்பாரின் வாரிசுகளால் 640 பங்காகப் பகிர்ந்து எடுத் துக் கொள்ளப்படுகிறது.

சாஹுல் ஹமீது சமாதி தவிர அவருடைய மனைவி மக்களின் சமாதிகளும் இந்தத் தர்காவில் உள்ளன.

வியாழக்கிழமைகளில் இங்கு மக்கள்கூட்டம் மிகுதியாக இருக்கிறது. புருக்களைப் பறக்கவிட்டு வழிபடும் முறையும் இங்கு உண்டு.

நாகூர் ஆண்டவராகிய சாஹுல் ஹமீது, முகமது நபியின் வழித்தோன்றல் என்பது வரலாறு. உத்தரப் பிரதேசத்திலுள்ள அயோத்தியாவுக்கு அருகே மணிக்பூர் என்னுமிடத்தில் அவர் ஹிஜ்ரி 910–ஆம் ஆண்டு (கி. பி. 1500) அளவில் பிறந்ததாகக் கூறப்படுகிறது. இளமையிலேயே சமய அறிவும் அரபு மொழிப் பயிற்சியும் பெற்று 400 சீடர்களை உருவாக்கினர். பிறகு அவர் பலுசிஸ்தானம், ஆப்கனிஸ்தானம், பெர்சியா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து மெக்காவை அடைந்தாரென்பர். அங்கிருந்து இலங்கைக்கு வந்து அயோத்திக்குத் திரும்பும் வழியில் தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கரின் வயிற்றுவலியைப்போக்கி அவனுடைய பேராதரவைப் பெற்று அவன் நாட்டிலேயே தங்குவாராயினர். சாஹுல் ஹமீது உயிர்நீத்தபிறகு நாகூரில் அவருக்குத் தர்கா கட்ட இடம் அன்பளித்து, தர்காவைக் கட்டிவைத்த தோடு கந்தூரிவிழாச் செலவுக்காக நிலங்களையும் அச்சுதப்ப நாயக்கரே மானியம் விட்டிருக்கிருர்.

தஞ்சையை ஆண்ட மகாராட்டிர அரசரான மஹாராஜா பிரதாப்சிங் இந்த தர்காவின் முன்னுலுள்ள 90 அடி (28 மீட்டர்) உயரமுள்ள கூண்டு ஒன்றை நல்ல வேலைப்பாடுகளுடன் அமைத்திருக்கிருர். இது தவிர, இன்னும் நான்கு கூண்டுகள் உள்ளன. கடலிலிருந்து பார்த்தால் இவை நன்ருகத் தெரியும். தர்காவுக்குள் இந்துக்களின் கோயில்களில் காணப்படுவதுபோன்ற மண்டபங்களும் புஷ்கரணி போன்ற குளமும் உள்ளன.

காரைக்காலுக்குச் செல்லும் சாலையில் வாஞ்சூரில் சாஹுல் ஹமீதுக்கு மற்ருெரு தர்கா இருக்கிறது.

நாகூர் ஆண்டவரை நேரில் அறிந்திருந்த நாகைக் கவர்னராக இருந்த டச்சுக்காரர் ஒருவர் அவர் நினைவாகப் "பீர் மண்டபம்" என்ற மன்றத்தைக் கட்டியுள்ளார்.

மஹாராஜா பிரதாப் சிங் மகனான மஹாராஜா துளசாஜி, பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த தர்காவின் நடைமுறைச் செலவுகளுக்காக 6,000 ஏக்கர் நன்செய் நிலத்தை வழங்கியுள்ளார். நாகூர் ஆண்டவர் சமாதிமீது பொன்னாடை போர்த்தும் உரிமை தஞ்சை அரசர்களுக்கு இருந்தது; அவர்களுக்குப் பிறகு இந்த உரிமையை (நாகூரில் சிறந்த சத்திரம் ஒன்றைக்கட்டியுள்ள) இந்து வணிகர் ஒருவர் பெற்றிருக்கிறார். காந்தியடிகளின் "ஈசுவர அல்லா தேர நாம்" என்ற தத்துவம் செயல்படுவது நாகூரிலேயே ஆகும்.

**திருவாரூர்**

ஏறத்தாழ 30,000 மக்கள் வாழும் இந்நகர் தஞ்சை மாவட்டத்தில் முக்கியமானதொரு இரயில் நிலையமாக இருந்து வருகிறது. இங்கிருந்து தஞ்சை, மாயூரம், நாகை, காரைக்குடி ஆகிய ஊர்களுக்கு நான்கு திக்குகளில் இரயில்கள் செல்லுகின்றன.

சோழ அரசர்கள் முடிசூட்டிக்கொள்ளும் ஐந்து ஊர்களுள் இதுவும் ஒன்று.* மக்களைப் போல மன்னுயிர்களையும் தம் கண் எனக்காத்த காவலரான மனுநீதிச் சோழன்—தன் மகனென்றும் நினையாது நீதி வழுவாது அவன்மீது தேர்க்காலோட்டிய பெருந்தகை—ஆட்சி புரிந்த ஊர்; திருமுறைகளை வெளிப்படுத்திய அபய குலசேகர சோழன் ஆண்டதும் இவ்வூரிலிந்தேயாகும்.

பல்லாற்றானும் பெருமையுடைய ஊர் திருவாரூர். ஆறு சிவத்தலங்களை விராடபுருடனின் ஆறு ஆதாரங்கள்

*ஏனைய ஊர்கள் - காவிரிப்பூம்பட்டினம், உறையூர், செய்ஞலூர், கருவூர்.

என்று போற்றுவது சைவமரபு. அம்முறையில் திருவாரூர் மூலாதாரத்தலம் என்று மதிக்கப் பெறுவது. சமய குரவர் நால்வராலும் பாடப் பெற்றது. தன்னிடத்தே பிறந்தவர்களுக்கு முத்திதரும் ஆற்றலுள்ளது இவ்வூர் என்ற நம்பிக்கை பலருக்கு உண்டு. அதனாலேயே 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்று சுந்தரர் தேவாரம் இவ்வூரைச் சிறப்பிக்கிறது. பெரிய புராணத்திலும் இத்தலம் சிறந்த் இடம் பெற்றிருக்கிறது.

இந்நகரில் வழிபடும் பொருட்டு எப்பொழுதுமே திருமகளாகிய இலக்குமி தங்கியிருக்கிருள் என்ற பொருளில் ஊர்ப் பெயர் அமைந்துளது. திரு - ஆர்- ஊர். ஆர்தல் - தங்குதல்.

இவ்வூர்த் தியாகராசர் கோயில் இந்தியாவிலுள்ள மிகப்பெரிய கோயில்களுள் ஒன்று. இதன் சிறுவடிவம் சென்னையிலுள்ள பொருட்காட்சி நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இத்தலத்தில் கோயில், கமலாலயக் குளம், இறைவனுக்குச் சார்த்தப் பெறும் செங்கழுநீர் மலரோடை இவை ஒவ்வொன்றும் ஐயைந்துவேலி (1,000 அடி நீளம் 700 அடி அகலம்) பரப்புடையனவாக இருப்பதால் "கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, ஓடை ஐந்து வேலி" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. மறை ஞானசம்பந்த நாயனார் ஆக்கிய 'கமலாலயச் சிறப்பு' என்னும் புராணம் 1066 செய்யுட்களை உடையது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தொடங்கிய இந்நூலின் பதிப்பு வேலை 1961–இல் முடிவடைந்து வெளியிடப்பெற்றது.

விடங்கர் தலங்கள் ஏழில் திருநள்ளாறு, நாகை, திருக்காருயில், திருக்கோளிலி, திருவாய்மூர், வேதாரணியம் என்ற ஏனைய விடங்கர் தலங்கள் சூழ அவற்றுள்

நடுநாயகமாக அமைந்த சிறப்புடைய விடங்கர் தலம் ஆரூர்.

தேவாரத்தில் ஏழு திருமுறைகளிலும் இப்பதிக்கே அதிகமான பாடல்கள் உண்டு. தியாகராசர் கோயிலுக்குப் பூங்கோயில் என்று பெயருண்டு. இக்கோயிலுக்குள் உள்ள அறநெறி என்ற உட்கோயிலும் பாடல் பெற்றது.

"சீரார் திருவாரூர் தென்னுகை நள்ளாறு
காரார் மறைக்காடு காருயில் - பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்"

தேவாசிரிய மண்டபம், பக்த காட்சி மண்டபம், ஊஞ்சல் மண்டபம், சபாபதி மண்டபம், வசந்த மண்டபம் முதலியன இக்கோயிலில் உள்ளன.

இரண்டாம் இராஜாதிராஜன் பெரிய கோபுரத்தையும் சபாபதி மண்டபத்தையும் கட்டினன் என்பதும், இரண்டாம் இராஜேந்திரன் வீதிவிடங்கர் எழுந்தருளியுள்ள கருப்பக்கிருகத்தையும் வன்மீகநாதர் கருப்பக்கிருகத்தையும் பொன்வேய்ந்தான் என்பதும், திருமுறை ஆசிரியர்களின் திருநாட்களைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன என்பதும், திருவிளக்குப் பணிக்காகவும் பூசை முதலியவற்றுக்காகவும் சோழ மன்னர் நிலம் அளித்தனர் என்பதும் இங்குள்ள கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கின்றன.

திருவாரூர்த் தேரழகு என்னும் பழமொழியும் திருவாரூர்த்தேரசைவது போல் அசைகின்ருன் என்னும் உவமையும் தமிழகத்தில் வழங்கி வருவதை அனைவரும் அறிவர். "ஆழித்தேர் வித்தகனே நான் கண்டது ஆரூரே" என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. இவற்ருல் இவ்வூர்த் திருத்தேர்ப் பெருவிழாவின் சிறப்பினை நன்கு தெரியலாம். இங்குள்ள தேர் முழுத்தேராகும். மற்றத்தலங்

களில் உள்ள தேர்களெல்லாம் முக்கால் தேர், அரைத்தேர் முதலான அளவு குறைவு உடையனவேயாம். இதனாலும், ஆரூர்த்தேரின் அழகு இனிது விளங்கும். இத்தகைய பெருமை வாய்ந்த திருத்தேர்த் திருவிழா தேரை இழுப்ப தற்குப் போதிய பல்லாயிர மக்கள் கூடாமையால் 1947 முதல் நின்றுவிட்டது. மீண்டும் தேர் இழுக்கும் முயற்சி தொடங்க வேண்டும் என்ற கருத்து 1960-இல் திருப் பணி ஏற்பாடு நடைபெற்றபோது தெரிவிக்கப்பட்டது. இனி, இத்தகைய பெரிய தேரை மின்சார ஆற்றலின் துணையுடன் இழுப்பது பற்றி இந்து அறநிலையக் குழு ஆராய்ந்து வருகிறது.

இங்கு கோயில்கொண்டுள்ள தியாகராசருடைய 'அசபா நடனம்' இவ்வூர்த் திருவிழாக்களில் சிறப்பாக நடைபெறுகிறது.

இக்கோயிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபம், கல் தூண்களை மட்டுமே உடையது; விழாக்களின்போது அவற்றின்மீது பந்தல் அமைத்துக்கொள்வர். இம்மண்ட பத்தைச் சேக்கிழார் பாடியுள்ளார். சண்டீசர் இருக்கு மிடத்தில் எமன் இருப்பதும் நின்ற நிலையில் நந்தி அமைந் திருப்பதும் இக்கோயிலின் பிற சிறப்புக்களாகும்.

இத்தலத்திற்கு மிகவும் பெருமை கொடுப்பது மனு முறைகண்ட சோழனின் வரலாறு. மனுச்சோழன் மகன் தேரிலே வருகையில் பசுங்கன்று ஒன்று துள்ளி ஓடி வந்து தேர்க்காலில் அறைபட்டது. தாய்ப்பசு அரண் மனை வாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியை அடித்து அறிவிக்க அரசன் மகனைத் தேர்க்காலில் அறைப்பதே சரியான முறையென்று முடிவுசெய்து அவ் வாறே செய்தான். கறவைக்கு முறைசெய்த மன்னவன் புகழை 1800 ஆண்டுகளுக்கு முன் எழுந்த சிலப்பதிகா ரத்தில் "வாயில் கடைமணி நடு நா நடுங்க ஆவின் கடை மணி உடுநீர் நெஞ்சுசுடத்தான் தன் அரும்பெறல் புதல்

வனை ஆழியின் மடித்தோன்" என்று கூறுகிறது. இவ் வரலாறு அழகிய கல் சித்திரமாகக் கீழைக்கோபுர வாயிலருகே காணப்படுகிறது.

சுந்தரருடைய திருத்தொண்டத் தொகையைச் சைவ உலகத்துக்கு ஈந்த பெருமையும் இவ்வூருக்கு உண்டு. இரண்டு கண்களையும் இழந்த சுந்தரர் காஞ்சிபுரத்தில் பதிகம்பாடி ஒரு கண்ணைப் பெற்றார். மற்றொரு கண்ணை இத்தலத்தில் பதிகம்பாடிப் பெற்றார். அவருடைய மனைவியாரான பரவையார் பிறந்த ஊர் இதுவே. பரவை நாச்சியாருக்கென தியாகராசர் கோயில் தெற்குக் கோபுரத்தின் தென்புறத்தில் தனி ஆலயம் உளது.

இத்தலத்தில் கிருஷ்ணதேவராயர் ஏற்படுத்திய ராஜாங்கக் கட்டளை இப்பொழுது தருமபுர ஆதீனத் தாரின் மேற்பார்வையில் நாள்தோறும் நன்கு நடை பெற்று வருகிறது.

தண்டபாணிகோயில், இராஜதுர்க்கைகோயில், மாணிக்கநாச்சியார்கோயில், திருவாரூர்ப் பரைவையுண் மண்டளி முதலியன இவ்வூரில் காணத்தக்கவை.

முத்துசாமி தீட்சதர், சாமா சாத்திரிகள், தியாகை யர் (ஸ்ரீ தியாகப்பிரமம்) என்ற சங்கீத மூர்த்திகள் மூவரும் பிறந்த இடம் திருவாரூரே. இவர்கள் பிறந்த வீடுகளைப் பேணுவதற்காக இவற்றை ஒரு பொதுக்குழு விலைக்கு வாங்கியிருக்கிறது.

திருவாரூர்க் கோயிலைச் சுற்றிய தெருக்கள் மிக அகலமானவை; தஞ்சை மாவட்டத்தின் அடங்கி ஒடுங் கிய தெருக்களுக்கு விதி விலக்காக அமைந்தவை. டிப்டி தாசில்தார் அலுவலகமும், கூட்டுறவுத்துறையில் உயர் அலுவலர்களின் அலுவலகங்களும், இவ்வூர்த் தொடர் புடைய குடும்பத்தின் வழியினரான தமிழ்தென்றல் இராயப்பேட்டை முனிவர் திரு. வி. க. (திருவாரூர்

வி. கலியாணசுந்தர முதலியார் என்பதன் சுருக்கமே திரு. வி. க.) பெயரால் ஒரு நூலகமும் உள்ளன. ஓடம்போக்கியின் கரையில் திருவாரூர் அமைந்திருக்கிறது. அதன் மறுகரையில் வாணிபத்துறையில் வளர்ச்சியடைந்துள்ள விசயபுரம் இருக்கிறது. நூற்றுக்கணக்கான சிறு கடைகளும், (நாகைச்சாலையில்) விருதுநகர் நாடார் மன்றமும் விசயபுரத்தில் உள்ளன.

### ஆபரணதரி

இது சிக்கலுக்கு அருகேயுள்ள வைணவத்தலம்.

### ஆனைமங்கலம்

இச்சிற்றூர் வரலாற்றுப் புகழ்பெற்றது. நாகையில் இருந்த ஒரு பௌத்த விகாரத்தின் நடைமுறைச் செலவுகளுக்காக இவ்வூர் முதலாம் இராஜேந்திரச் சோழனல் மானியமாக விடப்பட்டது. இதைத் தெரிவிக்கும் ஆதாரங்களுக்கு ஆனைமங்கலம் பட்டயங்கள் என்று பெயர். இவை ஹாலந்து நாட்டிலுள்ள லெய்டன் பொருட்காட்சி நிலையத்தில் இருப்பதால் இவற்றுக்கு "லெய்டன் செப்பேடுகள்" என்ற பெயரும் உண்டு. இவ்வூர், கீவளூருக்குத் தென்கிழக்கே இருக்கிறது. இறையிலியாகவிட்ட இடம் பள்ளிச்சந்தம் என்ற பெயரில் இன்றும் வழங்குகின்றது.

### எட்டுக்குடி

இவ்வூர் நாகைக்குத் தென்மேற்கே 25 கி. மீ. (15மைல்) தொலைவில் இருக்கிறது. இங்குள்ள முருகன் கோயில், அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல் பெற்றது.

நாகையிலிருந்து 25. கி. மீ. தொலைவிலும் திருத்தருப்பூண்டியிலிருந்து 15 கி. மீ. தொலைவிலுமுள்ள சீராவட்டம் என்னுமிடத்திலிருந்து 4 கி. மீ. தூரத்தில் எட்டிக்குடி

இருக்கிறது. இந்த 4 கி.மீ.–ம் வளைந்தும் நெளிந்தும் வயல் வழி செல்லும் சாலையில் போய், 500 மக்களுள்ள இச்சிற்றூரை அடையவேண்டும். நாகை, திருவாரூர், திருத்தருப்பூண்டி ஆகிய ஊர்களிலிருந்து நாள்தோறும் பஸ்கள் செல்லுகின்றன. வருவாயிலும் தோற்றத்திலும் எட்டிக்குடி நடுத்தரமான கோயிலாக இருக்கிறது. சிறுசிறு மடங்கள் உள்ளன. உணவு விடுதிகள் வசதிக் குறைவானவை.

எட்டிமரங்கள் நிறைந்த காடுகள் இருந்ததால் எட்டிக்குடி என்ற என்ற பெயர் ஏற்பட்டதாகவும் அதுவே எட்டுக்குடி எனமருவி வழங்கி வருவதாகவும் கூறுவர். "எட்டி என்பது அரசர்கள் வணிகர்க்கு வழங்கிய பட்டமாகும்; பெருந்தொகையை எட்டியவர்கள் (அடைந்தவர்கள்) என்ற பொருளில் இப்பட்டம் வழங்கப் பெற்றது; எட்டிகள் பலர் வாழ்ந்த ஊர் எட்டிக்குடி என்றும் சொல்லுவர்.

எட்டிக்குடிக் கோயிலில் முருகனைத் தாங்கும் மயிலின் உருவம் கல்லில் இருந்தபோதிலும் மயிலின் கால்கள் கனமின்றி மென்மையாக இருப்பது காணத்தக்கது. இது ஓர் அரிய வேலைப்பாடாகும்.

இக்கோயில் வேதாரணியம் கோயிலின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இப்போது தனிக்கோயிலாக இருந்து வருகிறது. இலங்கையிலுள்ள கதிர்காமம், திருக்கேதீச்சுரம், திருக்கோணமலை மூன்றும் இந்தியத் தமிழரின் ஈடுபாட்டுக்குரிய தலங்களாக இருப்பவை போல, ஈழத் தமிழர் வழிபடும் தமிழ்நாட்டுக்கோயில்களுள் சிதம்பரம், வேதாரணியம், எட்டிக்குடி, திருவாலங்காடு ஆகிய நான்கும் அவர்களுக்கு நெருங்கிய தொடர்புடைய கோயில்களாக உள்ளன.

இங்கிருந்து ஒருமைல் தொலேவில் (சீராவட்டம் செல்லும் வழியில்) தேவாரப் பாடல்பெற்ற திருவாய்மூர் என்ற தலம் இருக்கிறது.

**கீவளூர்**

கீழ் வேளூர் என்பதே இவ்வாறு மருவியிருக்கிறது. நாகையிலிருந்து 13 கி. மீ. (8 மைல்) தொலேவில் இவ்வூர் இருக்கிறது. பழமையான சுப்பிரமணியர் கோயிலும் அதன் கருங்கற் கோபுரமும் காணத்தக்கன. இக் கோயிலில் நடராசர் கால்மாறி ஆடியதாக ஐதீகம்.

லாலி என்ற பிரெஞ்சுத் தளபதி 1758-இல் இவ்வூரில் தங்கியபோது, இக்கோயிலேக் கொள்ளேயடித்ததாக வரலாறு உண்டு. இவ்வூரருகேயுள்ள ராதா நல்லூரில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி நடைபெற்று வருகிறது.

**சிக்கல்**

நாகை - திருவாரூர் வழியில் நாகைலிருந்து 5 கி. மீ. தொலேவில் இருக்கிறது. இவ்வூர் சம்பந்தர் பாடல்பெற்ற தலமாகும். “சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சம் காரம்” என்பது ஒரு பழமொழி. சூரனே சம்கரிக்க முருகன் வேல் வாங்கி, சிங்கார வேலவனுக நின்ற இடம் சிக்கல்.

சிங்கார வடிவேலரின் கோயில் 80 அடி உயரமுள்ள எழுநிலே மாடமாகிய கோபுரத்தை உடையது. இங்குள்ள தங்க மயிலும் தங்க ஆட்டுக்கடாவும் பிற வாகனங்களும் கண்டின்புறத்தக்க எழிலுடையவை ஆகும். ஆண்டு தோறும் கந்தர்சட்டி விழா சிறப்பாக நடைபெறுகிறது. சிவ பெருமான் திருவுருவமும், சிங்கார வேலவர் திருவுரு வமும் கட்டுமலே மேலுள்ளன. இக்கோயிலின் திருப் பணியாளர் கருமுத்து அழகப்பச் செட்டியார் செய்து வைத்துள்ள நகைகளின் வேலேப்பாடு மிகமிக அரிய தாகும். இவற்றின் மதிப்பு 10 லட்சத்துக்கு மேற்பட்டது.

சிங்கார வேலர்க்குக் கார்த்திகைதோறும் சிறப்பானஅபிடேகம் நடைபெறுகிறது. திருமங்கை ஆழ்வார் மங்களசாசனம் பெற்ற பெருமாள்கோயில் இக்கோயிலுள் இருக்கிறது. ஏழைப் பெண்களுக்குப் புண்ணிய விடுதி ஒன்றை இத்தேவத்தானத்தார் நடத்தி வருகின்றனர்.

**செம்பியன் மாதேவி**

நாகையிலிருந்து தென்மேற்கே 13 கி. மீ. (8 மைல்) தொலைவிலும், கீழ் வேளூர் இரயில் நிலையத்திற்குத் தென் கிழக்கில் (தேவூர் வழியாக) 10 கி. மீ. அல்லது 6 மைல் தொலைவிலும் இச்சிற்றூர் இருக்கிறது. இவ்வூரின் மக்கள் தொகை ஓராயிரம் இருக்கலாம்.

திருக்குவளை (திருக்கோளிலி) வலிவலம், கன்றுப்பூர் சிக்கல், நாகைக்காரோணம், தேவூர் என்ற பாடல்பெற்ற தலங்கள், திருப்புகழ் பெற்ற எட்டிக்குடி, திருவிசைப்பா பெற்ற சாட்டியக்குடி சோழவித்தியாபுரம் என்ற தலங்களினூடே செம்பியன்மாதேவி அமைந்திருக்கிறது.

இவ்வூர்க் கோயிலுக்கு, கயிலாசநாதசுவாமி கோயில் என்று பெயர் உண்டு. முதல் சுற்றில் மூன்று நிலைக் கோபுரமும், இரண்டாம் சுற்றில் முடிவு பெறாத இருநிலைக் கோபுரமும் உள்ளன.

இக்கோயிலிலுள்ள "செம்பியன் மாதேவியார் பெரு மண்டபம்" கிராமசபை கூடும் இடமாக இருந்தது.

இக்கோயிற் கல்வெட்டுக்களால் பத்தாம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டுவரை ஆண்ட சோழ அரசர் பலரைப்பற்றிய அரிய செய்திகள் கிடைத்துள்ளன. சோழப் பேரரசியான செம்பியன் மாதேவியார் இக்கோயிலைக் கட்டியதாகவும் அவர் மகனான உத்தமச்சோழன் (970-985) இவ்வூரை அமைத்ததாகவும் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது.

செம்பியன்மாதேவியார், கண்டராதித்தச் சோழனின் இரண்டாவது மனைவியார் ஆவார்; கணவன் இறந்தபின் 45 ஆண்டுகள் உயிர்வாழ்ந்தவள்; நாள் வழிபாட்டுக்கும் திருவிழாக்களுக்கும் மூவர் தேவாரம் பாடுவோர்க்கும், நுந்தா விளக்குகளுக்கும், பல நிவந்தங்கள் ஏற்படுத்தியவர்; ஆடுதுறை, திருநல்லம், திருமணஞ்சேரி, செம்பியன் மாதேவி போன்ற ஒன்பது கோயில்களைக் கற்கோயிலாகக் கட்டியவள்; சிவப்பணிக்கே அர்ப்பணித்துப் பெருவாழ்வு வாழ்ந்தவர்; இராசராசச் சோழனின் சமயப் பணிகளுக்கு வழிகாட்டியாக விளங்கிய பெருமை இவருக்கு உண்டு.

செம்பியன்மாதேவி என்ற பெயருள்ள மற்றோர் ஊர் திருவையாறு அருகே இருக்கிறது.

## திருக்கோளிலி

இது திருநெல்லிக்காவல், கீழ்வேளூர் இரயில் நிலையங்களிலிருந்து 11 கி. மீ. தொலைவிலும், எட்டிக்குடியிலிருந்து ஒன்றரை கி. மீ. தொலைவிலும் இருக்கிறது. இது ஒரு சப்த விடங்கத் தலம். பாடல் பெற்ற தலமும் ஆகும். இங்கு நவக்கிரகங்கள் ஒரு தீங்கும் செய்ய இயலாதவாறு கோணமின்றி ஒரே திசையில் நேராக வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் இராஜராஜச் சோழன், மூன்றும் இராஜராஜச்சோழன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் இவ்வூர்க் கோயிலில் உள்ளன. இவ்வூர்ப் பெயர் திருக்குவளை என்று மருவி வழங்கிவருகிறது.

இப்பதி பல்லவரால் கட்டப்பெற்று, தருமபுர ஆதீனத்தாரின் ஆட்சியில் இருந்துவருகிறது. ஆற்றின் பெருக்கால் அழிந்துபோன வீதியை கி. பி. 1259-இல் மீளச்செய்தவன் பெயரால், அவ்வீதி 'திருமறைக்காடன் திருவீதி' என்று பெயர் பெற்றிருக்கிறது.

**திருவாய்மூர்**

பாடல் பெற்ற இப்பதி புகழ்பெற்ற எட்டிக்குடிக்கு அருகே இருக்கிறது. இது ஒரு தியாகராச தலம். கிராமம் முழுவதும் வளமாக இருப்பதும், இக்கிராமத்தின் நிலங்கள் யாவும் கோயிலுக்கு உரிமையாக இருப்பதும் குறிப்பிடத்தக்கன.

**பொருள்வைத்தசேரி**

இது புறவசேரி என்று மருவி வழங்குகிறது. இச்சிற்றூர் சிக்கலுக்கு அருகே இருக்கிறது. இங்குள்ள சிவன் கோயில் (காரைக்குடி) கோயிலூர் மடத்தைச் சேர்ந்தது.

**மஞ்சக்கொல்லை**

இது நாகை நகரை ஒட்டிய சிற்றூர்; வளம் நிறைந்தது. வாணிபத்தில் சிறந்த செங்குந்த முதலியார்கள் வாழும் ஊர்.

**மாவூர்**

இது மாவூர்ரோடு இரயில் நிலையத்துக்கு அருகேயுள்ளது. கல்கத்தாவில் உள்ள காளி கோயிலைப் போன்ற ஒரு கோயில் இங்கு இவ்வூரினரான சர் ஆர். எஸ். சர்மாவால் கட்டப் பெற்றிருக்கிறது.

சர் ஆர். எஸ். சர்மா (இ. 1953) கல்கத்தாவில் பத்திரிகை நடத்தியவர், பிரிட்டிஷ் வைஸ்ராய்களின் ஆதரவு பெற்றவர்; இந்தியாவிலிருந்து லண்டனுக்கு ஆகாய விமானத்தில் சென்ற முதல் இந்தியர் இவரே ஆவார்.

**வலிவலம்**

மூவர் தேவாரமும் பெற்ற தலம். செம்மையான ஆட்சியில் இக்கோயில் நடைபெற்று வருகிறது. இவ்வூர்,

கரும்பு வேளாண்மையாலும் இங்குள்ள நிலக்கிழாரின் மாட்டுப் பண்ணையாலும் புகழ்பெற்றது. சில பஸ்களே இவ்வூருக்குச் செல்லுகின்றன. திருவாரூரிலிருந்து கொளப்பாமுக்குச் சென்று, பிறகு ஒருமைல் நடப்பது நன்று; இவ்வூரிலிருந்து எட்டிக்குடி எட்டு கி. மீ. தொலை வில் இருக்கிறது. வேளூரிலிருந்து 15 கி. மீ. யில் இவ் வூர் இருக்கிறது. மக்கள் தொகை 1,000.

**வேளாங்கண்ணி**

இச்சிற்றூர் திருத்தருப்பூண்டி - நாகைச்சாலையில் நாகப்பட்டினத்திற்குத் தெற்கே 10 கி. மீ. (6 மைல்) தொலைவில் கடுவையாறு கடலுடன் கலக்குமிடத்தில் உள்ளது. கடல்மீன் கிடைப்பதால் இந்த இடம் நெடுங் காலமாகப் புகழ்பெற்றிருக்கிறது.

இங்கே 1565-இல் ஏற்பட்ட மாதாகோயில் வேளாங் கண்ணிக்கு நிலைத்த பெருமையைத் தந்திருக்கிறது. "அவர் லேடீஸ் டாங்க்" என்ற குளமும், நடுத்திட்டும் அழகுற அமைந்த ஆரோக்கிய மாதா ஆலயமும் காணத் தக்கவை.

ஆண்டுதோறும் ஆகஸ்டு 30 தொடங்கி, செப்டம்பர் 8 வரை ஆரோக்கியமாதாவின் நினைவாக இவ்வூரில் பெரியதொரு திருவிழா நடைபெறுகிறது. இந்தியா வெங்குமிருந்து கத்தோலிக்கர்கள் பெருந்திரளாக இவ் விழாவுக்கு வருகின்றனர். பார்சிகள், இந்துக்கள் ஆகியோரும் வருகை புரிகின்றனர். இதனால் அந்நாட் களில் மிகப்பெருங்கூட்டத்தை இரயில்களிலும் வேளாங் கண்ணிப் பகுதியிலும் காணலாம்.

ஆரோக்கியமாதா கோயிலிலுள்ள பொருட்காட்சி மண்டபத்தில் குழந்தை வடிவத்தில் வெள்ளியால் செய் யப்பெற்ற பொம்மை உள்ளது. பார்சிச் செல்வி ஒருத்தி மூன்றாவது மாடியிலிருந்து கைதவறிக் கீழேவிட்ட தம்

குழந்தை உயிர்பிழைக்க வேண்டுமென்று ஆரோக்கிய மாதாவை வேண்டிக்கொண்டாளாம். அவளுடைய வேண்டுகோள் நிறைவேறியதால், அன்னையின் அருளை எண்ணிக் குழந்தையின் எடைக்கு எடை வெள்ளியில் பொம்மை செய்துவழங்கினராம்.

ஆரோக்கியமாதா ஆலயம் அமைந்தது பற்றி ஒரு வரலாறு கூறப்படுகிறது. போர்த்துகீசியரின் கப்பல் ஒன்று சீனவிலிருந்து இந்தியா வழியாகப் போர்த்து கலுக்குச் சென்றபோது, புயல்காற்றில் சிக்கிச் சின்ன பின்னமடையும் தறுவாயில் இருந்தது. எப்படியேனும் ஒரு கரைக்குச் சேர்ந்து தப்பிவிட்டால், கரைகண்ட இடத்தில் கன்னியம்மைக்குக் கற்கோயில் எடுப்போம் என்று கப்பல்வாழ்நர் கடவுள் கருணையை வேண்டினர். புயல் அடங்கிற்று. கப்பல் கரை சேர்ந்தது. கரை சேர்ந்த இடமே வேளாங்கண்ணி.

கப்பலில் இருந்த நீலநிற ஓடுகளும் பிற பொருள் களும் கோயில் அமைக்க உதவியாக இருந்தன. கன்னி யம்மையான ஆரோக்கியமாதாவின் உருவச்சிலை, தான் தோன்றியாக எதிர்பாராதவிதத்தில் ஓரிரவில் காணப் பட்டதாம்.

வேளாங்கண்ணி ஆரோக்கியமாதாவின் அருட் செயல்களைப்பற்றிப் பல செய்திகள் வழங்குகின்றன. மலேயாநாட்டில் கடற்கரையில் போட்டுவிடும் பொருள் கள் வேளாங்கண்ணிக் கரையில் வந்து சேர்ந்துவிடுவ தாகவும் கூறப்படுகிறது.

வேளாங்கண்ணிக்கு, "கீழைநாட்டு லூர்டீஸ்" (Lourdes of the East) என்ற பெயர் உண்டு. லூர்டீஸ் என் னும் ஊர் பிரான்சின் தென்மேற்குப் பகுதியில் இருக் கிறது. அங்குள்ள புனித மாதாகோயிலில்வழிபட ஆண்டு

தோறும் ஆகஸ்டு மாதத்தில் ஆறு லட்சம் பேர் வந்து வருகின்றனர்.

வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா ஆலயம் போர்த்துகீசிய பிரான்சிஸ்கன்ஸ் என்ற மதக் குருக் களின் மேற்பார்வையில் இருந்துவந்தது. 1847 முதல் மயிலாப்பூரிலுள்ள ரோமன் கத்தோலிக்கப் பாதிரி மார்களின் மேற்பார்வையில் இந்த ஆலயம் இருந்து வருகிறது.

திருவிழாக்காலத்தில் இவ்வூரிலுள்ள வீடுகளைக் காலிசெய்து, வெளியூர்க்காரர்களுக்கு வாடகைக்கு விட்டுச் செல்வரானவர் பலர் ஆவர். அப்போது வழிபட அயலூர்களிலிருந்தும் கோவாவிலிருந்தும் வரு பவர்கள் தொகை இரண்டு மூன்று லட்சம் ஆகும். அந்தப் பத்து நாட்களிலும் ஆரோக்கிய மாதா அலங் காரத் தேரில் பவனிவருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இந்த மாதாகோயிலின் காணிக்கை வருவாய் 52 மாதா கோயில்களை வாழவைக்கிறது. இவ்வூரில் ஒரு பெரிய மருத்துவமனை அமைக்கப் பாதிரிகள் ஆவன செய்துவருகின்றனர்.

இவ்வூரினர் 5,000 பேர். எல்லாச் சமயத்தினரும் இங்கு வாழ்கின்றனர். மிகப் பெரும்பாலோர் ஏழைகள், குடிசை வாழ்நர். கத்தரிக்காய், புடலை போன்ற காய் கறிகளைப் பயிரிட்டும் மீன்பிடித்தும் அவற்றை அருகே யுள்ள பறவையில் கூடும் சந்தையில் நாள்தோறும் கொண்டுபோய் விற்று வாழ்க்கை நடத்துகின்றனர்.

வேளாங்கண்ணியில் இருப்பவை : உயர்தொடக்கப் பள்ளி போலீசு நிலையம், தந்தி அலுவலகம், காமராசர் தெரு, ஏழைகளுக்கான தூய ஜோசப்பு இல்லம்.

நாகையிலிருந்து திருத்தருப்பூண்டிச் சாலையில் செல்லும் எல்லா பஸ்களும் வேளாங்கண்ணி ஊருக்குள் சென்று மீண்டும் நெடுஞ்சாலைக்கு வருகின்றன .

## 6, நன்னிலம் வட்டம்

இம்மாவட்டத்தின் நடுவே அமைந்து, நல்ல மழையும் நிலவளமும் ஆற்று வளமும் ஒருங்கே பெற்று, நன்னிலம் வட்டம் செல்வம் கொழிக்கிறது. தமிழ்நாட்டிலேயே மிகக் கூடுதலாக நிலவரி (ஏறத்தாழ ரூ. 20 லட்சம்) வசூலாகும் வட்டம் இதுவேயாகும் ; பாடல் பெற்ற தலங்கள் மிகுதியாக இருப்பதும் இந்த வட்டத்திலேயே ஆகும். புகழ் பெற்ற இசைவாணர் பலர் இவ்வட்டத்தினர் ஆவர்.

மாயூரம் - அறந்தாங்கி, தஞ்சை - திருவாரூர், பேரளம் – காரைக்கால் இரயில் பாதைகள் இவ்வட்டத்தின் வழியே செல்லுகின்றன.

வட்டத் தலைநகரான நன்னிலம், மக்கள் தொகையில் எட்டாயிரத்துக்கு மேற்பட்டது. இங்குள்ள மதுவனீசுவரர் கோயிலில், சிவபெருமானின் விக்கிரகத்துக்குப் பின்னால் தேன் கூண்டு இருக்கிறது. இக்கோயில் மிகப் பெரிய கோயிலாகும்.

இவ்வூர், திருவாரூரிலிருந்து 16 கி. மீ., நாகூரிலிருந்து 29 கி. மீ., நாச்சியார் கோயிலிலிருந்து 19 கி.மீ. தொலைவுகளில் இருக்கிறது. நன்னிலத்துக்கு அணித்தேயுள்ள ஓர் ஊரின் பெயர் மாப்பிள்ளைக்குப்பம் என்பதாகும்.

### அம்பர்

அம்பர் மாகாளத்துக்கு ஒரு கி. மீ. தொலைவில் உளது ; இங்குள்ள சிவாலயம் ‘பெருந்திருக்கோயில்’ என்று பெயர் பெற்றது.

**எண்கண்**

இவ்வூரின் முருகன் கோயில் மிகவும் புகழ்பெற்றது.

**கடாரங்கொண்டான்**

இவ்வூர் திருவாரூர் - நாகப்பட்டினம் சாலையிலிருக்கிறது. இங்குள்ள கோயிலுக்கு அழகான மதில் சுவர்கள் உள்ளன. இது தருமையாதீனத்தைச் சேர்ந்தது. இத்தகைய மதில்களை இந்நாளில் அமைப்பது அரிது.

**குடவாயில்** (மக்கள் தொகை ஏறத்தாழ 8,000.)

இவ்வூரின் பெயர் இப்போது கொடவாசல் என்று மருவி வழங்கி வருகிறது.

கும்பகோணத்திலிருந்து திருவாரூர்க்குச் செல்லும் வழியில் 16 கி. மீ. தொலைவில் குடவாயில் இருக்கிறது. குடம் என்பது மேற்கைக் குறிக்கிறது. குடவாயில் ஒரு நகரின் மேற்குப் பகுதி; இங்கே குடந்தையைத் தலைநகராகக் கொண்ட அரசர்களின் அரண்மனையிருந்ததாகக் கூறுவர்.

'தண் குடவாயில் அன்னோள்' என்று அகநானூறு கூறுவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

கும்பகோணம் மகாமகத்துக்கு வருபவர்கள் இவ்வூரிலும் நீராடுகின்றனர். இவ்வூரருகே திருச்சேறை என்ற தலமும் திருநாவலூர் மயானம் என்ற பாடல் பெற்ற தலமும் இருக்கின்றன.

**கோயில் திருமாகாளம்**

அம்பர் மாகாளம் எனப்படும் இவ்வூர் பாடல்பெற்ற தலத்தால் புகழ் பெற்றிருக்கிறது. மாகாளர் வழிபட்ட இடங்கள் மாகாளம் எனப்படும்.

**தலையாலங்காடு**

தலையாலங்கானம் என்பதும் இவ்வூரேயாகும். சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் பெரும்போர்க்

களம் இதுவே. நெடுநெல்வாடையும் மதுரைக் காஞ்சியும் இவ்வூரில் நிகழ்ந்த போர் வெற்றியைப் புகழ்கின்றன. இவ்வூர் குடவாசலிலிருந்து 8 கி. மீ. தொலைவில் இருக்கிறது. பெருவேளூர், திருக்கரவீரம் என்ற பாடல் பெற்ற தலங்களும் எண்கண் என்ற முருகன் தலமும் தலையாலங்காட்டுக்கு அருகே உள்ளன.

**திருக்கண்ணபுரம்**

இவ்வூர் திருப்புகலூருக்குத் தென்புறத்தில் நாகைக்கு செல்லும் வழியில் உள்ளது. திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணன்குடி என்ற மூன்று வைணவத்தலங்களும் இவ்வட்டாரத்தில் உள்ளன. இவை யாவும் திருமங்கையாழ்வார் பாடல் பெற்றவை. இக் கோயில் 12-ஆம் நூற்றுண்டில் கட்டப்பெற்றது. இங்கு வழங்கப்படும் முனியதரயன் பொங்கல் (போர் முனையில் நின்ற முனையதரயன் என்ற சிற்றரசன் ஏற்படுத்திய வெண்பொங்கல் நெய்வேத்தியம்) மிகச் சுவையானது.

திருக்கண்ணபுரம் பொங்கலைப்பற்றி சோழ மண்டல சதகப் பாடல் ஒன்று உண்டு.

புனையுங் குழலாள் பரிந்தளித்த
பொங்கலமுதும் பொரிக்கறியும்
அனைய சவரிராயருக்கே* யாமென்று
அருந்தும் ஆதரவின்
முனைய தரயன் பொங்கலென்று
முகந்தற் கோதும் அமுது ஈந்து
வனையும் பெருமை எப்போதும்
வளஞ்சேர் சோழ மண்டலமே.

**திருக்கண்ணங்குடி**

கீழ்வேளூர் (கீவளூர்) இரயில் நிலையத்திலிருந்து 3 கி. மீ. தொலைவில் இவ் வைணவத்தலம் இருக்கிறது.

* இறைவனின் பெயர் சவுரிராசப் பெருமாள்.

பஞ்சலோகங்களால் செய்யப்பட்ட கருடாழ்வார் திருவுருவம் இக்கோயிலில் இருக்கிறது. அவ் வுருவம் கைகளை ஒன்றன்மேல் ஒன்ருகக் குறுக்கே மடக்கிவைத்த நிலையில் அமைந்து தோற்றப்பொலிவு பெற்றது.

இரவில் மூடாத இலைகளையுடைய புளியமரம், பூத்துக்காய்த்தாலும் விதையை நட்டால் முளைக்காத வகுளமரம், வேறு எங்கும் நல்ல நீர் இல்லாவிட்டாலும் ஓர் இடத்தில் மட்டும் நன்னீர் கிடைக்கும் கிணறு, ஆகியவை இங்கு உள்ளன. நாகையிலிருந்த பொன்னு லான பௌத்த விக்கிரகம் ஒன்றைத் திருமங்கை மன்னன் கவர்ந்து வரும்போது இத்தலத்தில் ஒரு வய லில் அதைப் புதைத்து வைத்து ஒரு நாள் முழுவதும் வயல்காரனுடன் வழக்காடியதாக வரலாறு உண்டு. இவற்ருல் 'உறங்காப்புளி ஊருக்கிணறு, காயாவகுளம், தோரா வழக்கு திருக்கண்ணங்குடி' என்று ஒரு பழ மொழி உண்டு.

### திருக்கொள்ளம்பூதூர்

இவ்வூர் வெட்டாற்றின் வடகரையிலிருக்கிறது. இது ஞானசம்பந்தர் தேவாரம் ஓதி ஓடம் செலுத்தி ஆற்றைக் கடந்த பெருமைக்குரிய செயல் நிகழ்ந்த தலம். இவ் விழா ஐப்பசி அமாவாசை நாளில் நடைபெறுகிறது.

விபுலானந்த அடிகள் யாத்த யாழ்நூல், இவ்வூர்க் கோயில் திருப்பணியாளரான பெ. ராம. ராம. சிதம்பரம் செட்டியாரின் ஆதரவால், இங்கே அரங்கேற்றம் செய்யப் பெற்றது.

### திருச்செங்காட்டங்குடி

இச்சிற்றூர் நன்னிலத்திலிருந்து 12 கி.மீ. தொலைவி லுள்ளது; திருப்புகலூர் வழியேயும் இவ்வூரை அடைய லாம்.

திருஞானசம்பந்தர் காலத்தவரும், 'தம் பெருமான் திருத்தொண்டர் சிறுத் தொண்டர்' என்று சேக்கிழாரால் பெரிய புராணத்தில் சிறப்பிக்கப் படுபவருமான சிறுத் தொண்டர் தொடர்பால் இவ்வூர் புகழ் பெற்றிருக்கிறது. சிறுத்தொண்டரின் இயற்பெயர் பரஞ்சோதி என்பதாகும். இவர், பல்லவ மன்னனான மகேந்திரவர்மனின் சேனாதிபதியாக இருந்தபோது, கி. பி. 642-இல் வாதாபிக் கோட்டை வாயிலில் இருந்த கணபதியைத் தம் சொந்த ஊரான திருச் செங்காட்டங்குடியில் கொண்டு வந்து கோயில் கட்டினார்; தமிழ்நாட்டில் கணபதி வழிபாட்டைப் பரப்பியவர் இவரே என்றகருத்து நிலவுகிறது.

இவர் நினைவாக இக்கோயிலில் முதலாம் ராஜராஜன் சிறுத்தொண்டர் மண்டபம் கட்டியிருக்கிறான்; இவ்வூரின் மேலைக்கோடியில் சிறுத்தொண்டர் பெயரால் ஓர் மடம் இருக்கிறது; ஆண்டுதோறும் இவ்வூர்த் திருவிழாவில் சிறுத்தொண்டர் வரலாறு நாடகமாக நடிக்கப் பெறுகிறது. சிறுத்தொண்டர், சிவனுக்குப் பிள்ளைக் கறியமுது படைத்த தலமும் இதுவே.

இவ்வூருக்குக் கணபதீச்சுரம் என்ற பெயரும் உண்டு. இக்கோயிலிலுள்ள நவதாண்டவங்கள் அழகான சிலை வடிவங்களாக உள்ளன. இக்கோயிலில் காலையில் தொழுதால் வினை அகலும்; உச்சி வேளையில் வழிபட்டால் இப் பிறப்பின் துயர் நீங்கும்; அந்தி மாலையில் வணங்கினால் ஏழ் பிறப்பின் வெந்துயர் யாவும் விடும் என்பது மக்களின் நம்பிக்கை.

### திருப்பாம்புரம்

சம்பந்தர் பாடல்பெற்ற கோயில் இங்கு இருக்கிறது. இதனருகே திருமீயச்சூர், சிறுகுடி போன்ற தலங்கள் உள்ளன.

**திருப்புகலூர்**

இது நன்னிலத்திலிருந்து நாகை செல்லும் வழியில் 10 கி. மீ. தொலேவிலுள்ள சிற்றூர். மக்கள் தொகை ஏறத்தாழ ஈராயிரம் ஆகும்.

திரும்பூம் புகலூர் என்பதே திருப்புகலூர் என்று சுருக்கமாகவும் தவருகவும் வழங்கிவருகிறது என்பர்.

அப்பர் முத்தி பெற்ற சிறப்பும் மூவர் தேவாரமும் உடைய பெருமையும் இத்தலத்துக்கு உண்டு. இங்குள்ள கோயில் உருவிற் பெரியது; இதைச் சுற்றி மூன்று பக்கமும் அகன்ற அகழிகள் உள்ளன; ஊருக்குத் தென் பக்கத்திலுள்ள முடிகொண்டான் ஆற்றிலிருந்து பாய் காலும் வடிகாலும் இருப்பதால் அகழி எப்போதும் தெளிந்த நீர் உடையதாக இருக்கிறது.

இக்கோயிலுக்குள் கருந்தாழ் குழலி அம்மனுக்குத் தனிக்கோயில் இருக்கிறது; திருப்புகலூர்க் கோயிலுக்குள் உள்ள திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் என்னும் உட்கோயிலும் தேவாரம் பெற்றது. நவக்கிரகங்கள் ‘ட’ என்ற அமைப்பில் உள்ளன; நாவுக்கரசருக்குத் தனிச் சந்நிதி உண்டு. நாவுக்கரசர் பெயரால் திருமடமும் நந்தவனமும் உள்ளன. அவர் முத்தி பெற்ற சித்திரைச் சதய நாளேயொட்டிப் பத்து நாட்களுக்குத் திருவிழா நடைபெறுகிறது.

67 பழமையான கல்வெட்டுக்கள் இக்கோயிலில் இருக்கின்றன. நெற்குன்றவாணர் என்ற புலவர் பாடியுள்ள ‘திருப்புகலூர் அந்தாதி’ என்ற இலக்கியம் இக்கோயிலால் எழுந்தது.

இறைவனுக்குச் செய்யப்படும் அபிடேகப்பால், எண்ணெய்க் கலப்பின்றிக் குழந்தைகளுக்கு அன்பளிக்கப் படுவது இக்கோயிலில் கண்டின்புறத்தக்க காட்சியாகும்.

இக்கோயில் தேவஸ்தானத்தார் நடத்திவரும் நிறுவனங்களுள் நூல் நிலையம், சித்த வைத்தியசாலை, மருந்து செய்யும் நிலையம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. கண் தைலம், எண்ணெய், விஷக்கடி மருந்து, தேள் கொட்டு மருந்து போன்ற பல மருந்துகள் இங்கே செய்யப்படுகின்றன.

இக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வேளாக்குறிச்சி மடத்தைச் சேர்ந்தது. இந்த ஆதீனத்துக்குரிய கோயில்களில் இவ்வூர்க்கோயிலே பெரும் புகழ் பெற்றது. எனவே ஆதீனத்தலைமையிடம் இவ்வூருக்கே வந்துவிட்டது. ஏனைய துறவிகள் எவருமின்றி, மகாசந்நிதானம் மட்டுமே இந்த மடத்திற்கு உண்டு. திருச்செங்காட்டங்குடி, திருமீயச்சூர், திருப்புகலூர், ராமநதீசுவரம் ஆகிய திருக்கோயில்களும் இந்த ஆதீனத்தைச் சேர்ந்தன. திருவாரூர்க்கோயிலில் இந்த ஆதீனத்தார் அன்னதானக் கட்டளை அபிஷேகக் கட்டளைகளை நடத்தி வருகின்றனர்.

திருமருகல், திருச்சாத்த மங்கை என்ற பாடல் பெற்ற தலங்கள் இவ்வூரருகே உள்ளன.

**திருமருகல்**

இது நன்னிலத்திலிருந்து நாகூர் செல்லும் வழியில் திருச்செங்காட்டங்குடியருகே இருக்கிறது. அப்பரும் சம்பந்தரும் இங்கு கோயில்கொண்டுள்ள மாணிக்க வண்ணரையும் வண்டுவார் குழலியையும் வணங்கியுள்ளனர். சோழன் செங்கணன் கட்டிய மாடக்கோயில்களுள் திருமருகல் கோயிலும் ஒன்று. இவ்வூரைச் சுற்றியுள்ள பகுதிக்கு ‘திருமருகல் நாடு’ என்ற பெயர் சோழர் காலத்தில் வழங்கிவந்தது.

**திருவாஞ்சியம்**

நன்னிலத்துக்கு 6கி.மீ. தொலைவிலுள்ள இச்சிற்றூர் மூவர் தேவாரத்தாலும் திருப்புகழாலும், ராஜராஜன்

கட்டிய கோயிலாலும் அதிலுள்ள யமன் சந்நிதியாலும் இறைவனுக்கு உள்ள யமன் வாகனத்தாலும் புகழ் பெற்றிருக்கிறது. கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கு வழிபடுவது சிறப்பாகக் கருதப்படுகிறது.

**திருவிற்குடி**

விற்குடி இரயில் நிலையத்திலிருந்து இவ்வூர் 2 கி. மீ. தொலைவிலுள்ளது. சிவபெருமானுக்குப் பின்னால் விஷ்ணு வடிவம் இருப்பது இங்குள்ள கோயிலின் சிறப்பு. இத் தலம் அட்ட வீரத்தலங்களுள் ஒன்று. துளசிச்செடி இத் தலத்திற்றான் தோன்றியது என்று சிலர் கருதுவர்.

**தீபங்குடி**


இது சமணர் கோயிலுள்ள இடம். இவ்வாலயம் சிறந்த முறையில் அமைந்திருக்கிறது. இது 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றதென்றும் ஏற்கெனவே இருந்த சமணக்கோயில் ஆற்றால் அழிக்கப்பட்டதாகவும் கூறுவர். இங்கு இன்றும் சமணர் வாழ்கின்றனர்.

கலிங்கத்துப்பரணி பாடிய கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டான் பிறந்த ஊர் இதுவே. கலிங்கப் போரில் வெற்றிகொண்ட கருணாகரத் தொண்டைமான் (குலோத்துங்கனின் படைத்தலைவன்) பிறந்த வண்டை என்னும் வண்டுவாஞ்சேரி இவ்வூரகே இருக்கிறது.

தீபங்குடி, நன்னிலத்திற்குத் தென்மேற்கே எட்டுக் கி. மீ. தொலைவில் இருக்கிறது.

**பேரளம்**

இவ்வூர் (பிரெஞ்சு ஆட்சியிலிருந்த) காரைக்காலுக் குச் செல்லும் வாயிலாக அமைந்திருக்கிறது. தருமபுர ஆதீனத்துக் குட்பட்ட சுயம்புநாதசுவாமி கோயில் இவ்வூரில் இருக்கிறது. இது மேற்குப் பார்த்தகோயில். அம்பிகை-பவானி அம்பிகை; தெற்குப் பார்த்த சந்நிதி.


தஞ்சாவூர்
நகரம்
ஜம்பு காவேரி கால்வாய்
திருவையாறு
கும்பகோணம்
வெண்ணாறு
கரந்தைத்
தமிழ் சங்கம்
வடவாறு
பூதலூர்
1. வடக்கு ராஜ வீதி
2. மார்க்கெட்
3. சங்கீத மகால்
4. சரஸ்வதி மகால்
5. கலைக்கூடம்
6. தெற்கு ராஜ வீதி
7. ஆஸ்பத்திரி ரோடு
8. பஸ் நிலையம்
9. மணிக்கூண்டு
10. ராஜா மிராசுதார்
மருத்துவ விடுதி
11. சிவகங்கை பூங்கா
12. பெரிய கோயில்
கீழ வெளி வீதி
மேல ராஜ வீதி
கீழ ராஜ வீதி
கோட்டை
சீனிவாசபுரம்
காந்திஜி ரோடு
கிராண்ட் அணைக்கட்டு கால்வாய்
(புதுக்காவேரி)
கோர்ட்டு ரோடு
நகராட்சி
மன்றம்
ராஜா சத்திரம்
கணபதி நகர்
மாரியம்மன் கோயில்
கும்பகோணம்
ரயில்
நிலையம்
திருச்சிராப்பள்ளி
வல்லம் ரோடு
திருச்சிராப்பள்ளி
நாஞ்சிக்கோட்டை
செல்வம் நகர்
ராஜப்பா நகர்

# 18. மேற்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்

## 1. தஞ்சாவூர் வட்டம்

**தஞ்சாவூர்**

ஏறத்தாழ ஓர் இலட்சம் மக்களுள்ள தஞ்சாவூர் தமிழ்நாட்டின் தலைசிறந்த நகரங்களுள் ஒன்று. வரலாற்றை உருவாக்கிய பல நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றிருக்கின்றன.

இரு கோட்டைகளும் அவற்றைச் சுற்றிய நகரும் புதிதாகத் தோன்றியுள்ள கணபதி நகர், வ. உ. சி. நகர், பன்னீர்ச் செல்வம் நகர், ராஜப்பா நகர், டேனியல் தாமஸ் நகர் என்பனவும் சேர்ந்து முதல்தர நகராண்மைக் கழகம் உள்ள ஊராக, இன்றைய தஞ்சை விளங்குகிறது.

அடைக்கலம் (தஞ்சம்) புகுவோரை ஏற்றுக்கொள்ளும் ஊர் ஆதலின் 'தஞ்சாவூர்' என்று இது பெயர் பெற்றது என்பது ஒரு கருத்து; தஞ்சன் என்ற அரசன் பெயரால் அமைந்தது என்பது சிலருடைய கூற்று; ஆறை (மதில் அரண் அல்லது கோட்டை)யிருந்த இடம் என்றும் தஞ்சாறை தஞ்சாவூர் ஆயிற்று என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவது ஏற்கத் தக்கதாகும்.

தஞ்சாவூர்க்குத் தலைமையான சிறப்புத் தருவது தஞ்சைப் பெரிய கோயில். இவ்வாறே, இந்நகர்க்குப் புகழ் தருவன மாடமாளிகையும் சரசுவதி மகாலும். இவை மூன்றும் முறையே சோழ, நாயக்க, மராத்திய மன்னர்களின் ஆட்சிகளை நினைவூட்டுவனவாகும்.

அலுவலகங்களும் கல்லூரிகளும் இரயில் போக்குவரத்து வசதிகளும் இன்றைய தஞ்சையைக் காண்பார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த போதிலும், நான்கு

பக்கங்களிலும் இறக்கமாக ஊர் அமைக்கப்பட்டு மழை நீர் தங்காதவாறு செய்திருக்கும் அருமையும் ஆராயத் தக்கது.

சந்தின் அகலமும் வீட்டின் அகலமும் ஒரே அளவின தாக இருக்கும். சந்துக்குள் சந்தும், அதற்குள் பிறிதொரு சந்தும் இருக்கும். இவற்றின் இயல்பு இங்குச் சென்ற வர்க்கே தெரியும்; பெருஞ்சாலைகளில் நடந்தோ வாகனத்திலோ செல்லுவோர்க்குப் புலனுகா. சந்து களின் அமைப்பால், எல்லா வீடுகளுக்கும் காற்ரேட்டம் உண்டு. மதுரையில் இரும்புக் கதவு போட்டு இரவில் உறங்குவர்; தஞ்சைநகரில் இரும்புக் கதவும் இல்லை; திண்ணையில் படுக்க வேண்டுவதுமில்லை. காரணம், வீட்டினுள்ளேயே காற்றுப் புகுவதாகும்.

'நானும் எத்தனையோ ஊர்களில் சந்துகளைப் பார்த் திருக்கிறேன். ஆனல் தஞ்சாவூர் சந்துகளைப் போல் பார்த்ததில்லை. பச்சைக் குதிரை என்னும் விளையாட்டு (ஒருவர் கீழே படுத்துக்கொண்டால் இன்னெருவர் தாண்டிப் போகலாம்) இந்தச் சந்துகளில்தான் முதல் முதல் தோன்றியிருக்க வேண்டும்' என்று கல்கி கிருஷ்ணமூர்த்தி ஒருமுறை எழுதினர்.

தஞ்சையின் கோட்டைகளும் தனித்த சிறப் புடையன. சிறிய கோட்டையில் சிவன் கோயிலும், கிறித்தவத் தேவாலயமும், பெரிய அரச மரமும், அக்கோட்டைக்குள் அமைந்த சிவகங்கைத் தோட்டத் தில் பூங்காவும் புருக்கூடும் நீந்தி விளையாடுவதற்குக் குளமும் உள்ளன.

பழைய அரண்மனையுள்ள பெரிய கோட்டை 530 ஏக்கர் பரப்புடையது. ஐதர்அலி படையெடுத்தபோது திருவாரூர் தியாகராஜ சுவாமி, மன்ஞர்குடி ராஜகோபால சாமி, காஞ்சி காமாட்சியம்மன் போன்ற பல கடவுளர்

களின் உருவங்கள் இங்கேதான் பத்திரமாகப் பாது காக்கப்பட்டன. இங்குள்ள மாட மாளிகை, திருவரங் கத்தை நோக்கி வழிபடுவதற்காக ஒரு நாயக்க மன்ன ரால் கட்டப்பட்டது. நாயக்கர்களின் தர்பார் மண்டபம், கலைக்கூடம், சங்கீத மகால், சரசுவதி மகால், ஆகியவன வும் இங்கே காணத்தக்கன.

மராத்திய மன்னருக்கே உரிய குடும்பக் கோயில்—சந்திர மவுலீசுவர சுவாமி கோயில்-கோட்டைக்குள் இருக்கிறது. மராத்திய அரசர்களின் மணச்சடங்குகள் இங்கேதான் நடைபெற்றன. சந்திர மவுலீசுவரரின் மரகதலிங்கம், இறந்த அரசர்களின் திருவுருவங்கள் (தங்கத்தால் செய்யப் பெற்றவை) ஆகியவை இங்கே காணத்தக்கன.

தஞ்சை நகரின்

பரப்பு - 9·08 சதுர மைல் (23·5 சதுர கி. மீ.)

மக்கள் - 100, 680 (1951)

உயரம் - 194·85 அடி., அல்லது 59 மீட்டர்.

கூடுதலான வெப்பம் - தை மாதம் 32 C. சித்திரை - வைகாசி மாதம் 37·6 C.

மழை – தெ. மே. பருவக் காற்று ஆடி-புரட்டாசி 2·88" (73 மி. மீ.)

வ. கி. பருவக் காற்று, ஐப்பசி - மார்கழி 5·28" (134 மி. மீ.)

கலைக்கூடம்

திறந்திருக்கும் நேரம் : காலை 8–30 முதல் 12
மாலை 3–00 முதல் 6
விடுமுறை நாள் - புதன்

சரசுவதி மகால்

திறந்திருக்கும் நேரம் : காலை 8 முதல் மாலை 5 வரை
விடுமுறை நாள் - புதன்

**கண்டியூர்**

(மக்கள் தொகை 3,500)

தஞ்சைக்கு வடக்கே எட்டு கி. மீ. தொலைவிலுள்ள இவ்வூர் இங்குள்ள சிவன், விஷ்ணு, பிரமா கோயில் களாலும், 1751-இல் பிரஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேய வீரரான கிளைவின் படைக்குமிடையே நடைபெற்ற போராலும் புகழ்பெற்றது.

சிவன் கோயிலில் பலவகையான விநாயகர் திருவுருவங்கள் வரிசையாக இருப்பது காணவேண்டிய காட்சியாகும்; வட பிரகாரத்தில் பிரமன் சிலை இருக் கிறது; கீழைப் பிரகாரத்தில் (பிற இடங்களில் நின்ற கோலத்தில் மட்டுமே காணப்படும்) அர்த்தநாரீசுவரர் திருவுருவம் அமர்ந்த கோலத்தில் கவினுறு உருவமாகக் கல்லில் வடிக்கப்பட்டிருக்கிறது.

பொய்யாமொழிப் புலவரின் உற்ற நண்பனை சீநக்கன் என்னும் குறுநில மன்னரின் தலைநகரமாக இவ்வூர் இருந்தது என்றும் அவனுடைய அரண்மனை இருந்த இடமே இன்றைய அரசூர் என்றும் கூறுவர்.

**கரந்தை**

தஞ்சை நகரின் வடபுறத்தில் வெட்டாற்றின் வட கரையில் இவ்வூர் இருக்கிறது. கருந்திட்டைக்குடி, கருத்தட்டான்குடி என்ற பெயர்களும் இவ்வூருக்கு உள்ளன. ஊர் சிறிதாயிருப்பினும் நெடுங்காலமாக்ச் சீரும் சிறப்பும் பெற்றது. இங்கு கரந்தைத் தமிழ்ச் சங்கமும் தமிழ்க் கல்லூரியும் இருந்து வருகின்றன.

இவ்வூர்க்கோயில் தஞ்சைப் பெரிய கோயில் கட்டு வதற்கு முன்னரே கட்டப்பெற்றது; இதைக் கட்டியவன் கரிகாற்சோழன் என்பர். இக்கோயிலில் பிட்சாண மூர்த்தி, நடராசர், அர்த்தநாரீசுவரர் திருவுருவங்கள்

காணத்தக்கன. இக்கோயில் தஞ்சை அரண்மனை தேவஸ்தானத்துக்கு உட்பட்டது.

**கோனேரிராசபுரம்***

நடுக்காவேரியருகேயுள்ள சிற்றூர்களில் இது குறிப்பிடத்தக்கது; தஞ்சை—திருக்காட்டுப்பள்ளி வழியில் குடமுருட்டி ஆற்றின் கரையில் வண்டல்படிந்த செழிப்பு, பருவந்தவரு மழை என்னும் இவ்விரு நலங்களோடு அமைந்திருக்கிறது.

சோழ மன்னர்களின் ஆட்சியில் இவ்வூர் உயர்நிலையிலிருந்துஞ் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. சைவ, வைணவக் கோவில்கள் இங்கு இருக்கின்றன. 'மணத்திடல்' எனும் பகுதி, கிறித்தவர்களின் உறைவிடமாக இருந்து வருகிறது.

இலிங்கப்ப நாயக்கர் என்ற பாளையக்காரர் இங்கு ஆட்சிசெய்தார். அவர் இறந்தபோது அவரது மனைவியார் உடன்கட்டை ஏறிய நிகழ்ச்சி நடைபெற்ற 'தீப் பாய்ந்த மண்டபம்' இன்றும் காணத்தக்க நிலையில் – ஆனல் பாழ்பட்டு–இருக்கிறது.

**கோயிலடி**

இவ்வூரின் மக்கள் தொகை 3000க்குச் சற்று குறைவு. காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் இடையில், இம்மாவட்டத்தின் எல்லையில் கல்லணைக்கு அருகே இவ்வூர் இருக்கிறது. பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கு ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்க்கும் பல போர்கள் நிகழ்ந்தன. பண்டைத் தமிழரசனுன கோச்செங்கச் சோழன் காலத்

---

*இதன் பெயர் கரும்பூர் - கோனேரிராசபுரம். நடராச விக்கிரகப் புகழ்பெற்ற திருநல்லம் என்னும் கோனேரிராசபுரம் மாயூரம் வட்டத்தில் இருக்கிறது.

திலும் போர் நடைபெற்றது, 1924-இல் காவிரியும் கொள்ளிடமும் கலந்து ஓடியதால் இவ்வூர், பெரிதும் சேதப்பட்டது. 1961 - இல் வெள்ளப்பெருக்கால் இராணுவத்தினருக்கும் இயற்கைக்கும் போர் நிகழ்ந்ததும் இவ்வூரிலேயே ஆகும்.

இவ்வூருக்குச் சடைமுடி திருப்புறம் என்ற பழைய பெயர் உண்டு. சடைமுடி நாதர் கோயில் கோயிலடிப் பெருமாள் கோயிலுக்குக் கிழக்கே சிறிது தொலைவில் இருக்கிறது. பெருமாள் கோயில், உயரமாக மலை போலக் கட்டப்பெற்றிருக்கிறது. இப்பெருமாளுக்கு நெய்வேத்தியம் 'அப்பம்' ஆகும்; அவர் வயோதிகராக இருப்பதால் பல் இல்லாத நிலையில் உண்ண இதமாக அப்பம் படைக்கப்படுகிறது. இவ்வூரருகே அழகுற அமைக்கப்பெற்ற திருவள்ளுவர் திருவுருவம் இருக்கிறது. இப்பகுதி மாந்தோப்புக்களில் மல்கோவா, பிந்து, நீலம், பீட்டர், குண்டு என்னும் மாம்பழ வகைகள் மிகுதியாகக் காய்க்கின்றன.

**சமுத்திரம்**

இது தஞ்சைக்கு வடகிழக்கே இருக்கிறது. இங்கு 5 கி. மீ. நீளமும் 0·8 கி. மீ. அகலமும் உள்ள ஓர் ஏரி மராட்டிய மன்னர் ஒருவர் காலத்தில் வெட்டப்பெற்றது. சமுத்திரத்தைப் பார்க்காத அரச குடும்பத்து ஆரணங்குகள் சமுத்திரம் எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ளுவதற்காக இது வெட்டப்பட்டதாம்.

**சுங்கத்திடல்**

இது கரந்தைக்கு வடபுறம் வெண்ணியாற்றங் கரையில் இருக்கும் ஊர். சுங்கம் தவிர்த்தான்திடல் என்பது இதன் சரியான பெயர். சுங்கம் தவிர்த்த சோழ அரசன் ஒருவன் இவ்வூரை அமைத்தான்.

**செங்கிபட்டி**

(மக்கள்தொகை 2,500)

இவ்வூர் திருச்சி-தஞ்சைச் சாலையருகே, இரு நகரங்களிலிருந்தும் ஒரே தொலைவில் இருக்கிறது; இங்குள்ள மருத்துவ மனையைப் பற்றி 'மருத்துவ வசதிகள்' என்ற பகுதியில் கூறியுள்ளோம்.

**செந்தலை**

இன்று ஈராயிரம் மக்கள் வாழும் இவ்வூர் வரலாற்றுப் புகழ்மிக்கது; மன்னூர் சமுத்திரம், சந்திரலேகை என்ற பெயர்களும் இவ்வூருக்கு உண்டு; **சந்திரலேகை** என்பதன் சிதைவே 'செந்தலை' என்பது ஆராய்ச்சியாளர் அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கும் முடிபு ஆகும்.

இவ்வூர், திருக்காட்டுப்பள்ளியிலிருந்து நேர்கிழக்கே மூன்று கி. மீ. தொலைவில் குடமுருட்டியாற்றின் தென்கரையில் இருக்கிறது.

இவ்வூர்ச் சிவன் கோயிலிலுள்ள அரிய கல்வெட்டுக்கள் சோழநாட்டு வரலாற்றை அறியத் துணைசெய்வதால், செந்தலை முக்கியத்தும் பெற்றிருக்கிறது.

இரண்டாம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரையும் தென்னிந்தியாவை ஆண்ட களப்பிரர் என்ற அயலவர்கள் புத்த சமயத்தைப் பரப்பியும் சைவசமயக் கோயில்களை அழித்தும் வந்தனர். அவர்களை விரட்டிய முத்தரையர்கள், செந்தலையில் வாழ்ந்தனர். நாலடியாரில் முத்தரையர் பற்றிய பல பாடல்கள் உள்ளன. செந்தலைக்கோவில் தூண்களில் முத்தரையரைப் பற்றிக் கல்வெட்டுச் செய்யுட்கள்–வெண்பாக்களாக–உள்ளன.

செந்தலை மிகப்பெரிய ஊராக இருந்தது என்பதும் குடவோலை முறைப்படி ஊராட்சி மன்றத்தார் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதும் இவ்வூர்க் கல்வெட்டு

ஒன்றால் தெளிவாகத் தெரிகின்றன. பயனுள்ள பிற செய்திகளைக் கூறும் ஏராளமான கல்வெட்டுக்களும் இங்கு உள்ளன.

மேற்குத் தொடர்ச்சிமலை முதல் வங்காளக்குடாக் கடல் வரை காவிரியின் இருமருங்கிலும் நீண்டுயர்ந்த கல்திருப்பணிகளைச் செய்தவன் என்று அன்பில் செப்பேடுகள் அருமையாகப் போற்றும் முதலாம் ஆதித்தச் சோழன் (871 – 907) இவ்வூர்க் கோயிலைக் கட்டியதாகக் கருதப்படுகிறது. அவன் காலத்திய கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இக்கோயிலுக்குத் திருப்பெருந்துறை என்ற பெயர் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

நாச்சியார் கோயிலருகே திருப்பந்துறை என வழங்கும் பேணு பெருந்துறை என்ற பாடல்பெற்ற தலம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

செந்தலையில் வாழ்ந்த தாசி சந்திரலேகை என்பாள், இறைவனின் விக்கிரகத்தை ஸ்தபதி வார்த்து எடுத்த போது விக்கிரகத்தின் அழகில் ஈடுபட்டு இரு கைகளாலும் அணைத்த காரணத்தால் அவள் கைவிரல் ரேகை இறைவனின் திருமேனியில் காணப்படுகிறது.

**நடுக்காவிரி**

திருக்காட்டுப் பள்ளியிலிருந்து 8 கி. மீ. தொலைவில் குடமுருட்டியின் தென்கரையில் இவ்வளமான ஊர் உளது. பெரும்புலவர் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் சமாதி இங்கே காணத்தக்கது.

**நேமம்**

1500 மக்களுள்ள இச்சிற்றூர் தஞ்சைக்கு வடமேற்கே 29 கி. மீ. தொலைவிலும் திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 5 கி. மீ. தொலைவிலும் இருக்கிறது. இவ்வூரி

லுள்ள ஐராவதீசுவரர் கோயிலுக்குச் சோழ அரசர் சிலர் மானியங்கள் கொடுத்துள்ளனர்.

இவ்வூரைச் சுற்றியுள்ள வயல்களில் பல பெரிய லிங்கங்கள் காணப்படுகின்றன. களப்பிரரால் சிதைக்கப் பட்ட ஆலயங்களில் இவை இருந்திருக்கவேண்டும். சிதைந்த கோயில்களின் பகுதிகளைக்கொண்டே செந் தலைக்கோட்டை கட்டப்பெற்றிருக்கவேண்டும்.

இவ்வூரும் இவ்வூரருகேயுள்ள ஆர்க்காடு என்னும் ஊரும் முத்தரையர் தலை நகரங்களாக இருந்தவை. இவ் விடங்களையும், கும்பகோணத்தைச் சுற்றிய பகுதிகளை யும் காவிரிப்பூம்பட்டினக் கடற்பகுதியையும் அரசாங்கப் புதைபொருள் துறையினர் தோண்டிப் பார்ப்பது இன்றி யமையாதது.

நேமம், கருப்பூர் போன்ற இடங்களிலிருந்த சிவன் கோயில்கள் இடிந்த பிறகு அவற்றைக்கொண்டு திருப் பெருந்துறைக்கோயில் கட்டப்பட்டதாகச் செந்தலைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

**திருக்காட்டுப்பள்ளி**

(மக்கள் தொகை 8,000)

தஞ்சையிலிருந்து 21 கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது. பூதலூர் இரயில் நிலையத்திலிருந்தும் இவ் வூருக்குச் செல்லலாம். இவ்வூரில் காவிரியிலிருந்து குட முருட்டி பிரிகிறது.

சம்பந்தரும் அப்பரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். மேலைக்காட்டுப் பள்ளி என்றும் இவ்வூருக்குப் பெயர் உண்டு. இவ்வூரைச் சேர்ந்த ஒன்பத்துவேலி என்னும் பகுதியைப் பற்றிக் கல்வெட்டுக்களில் கூறப்பட்டிருக் கிறது. புதுச்சத்திரம் என்னும் பகுதி காவிரியின் வட கரையில் இருக்கிறது. நெல், கரும்பு, தென்னை, வாழைப் பயிர்களால் செழித்து இவ்வூர் வளம் பெருகியிருக்கிறது.

இவ்வூரின் சுற்றுவட்டாரத்தில் தமிழ்ப் புலவர் மிகுதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

குறுக்கு வழியில் இங்கிருந்து டால்மியாபுரம் 11 கி. மீ. தொலைவிலேயே இருக்கிறது.

இவ்வூரிலுள்ள கோட்டை 1771-இல் ஆங்கிலேயரால் பிடிக்கப்பட்டது; 1781-இல் இது ஐதர் அலி வயப்பட்டது; இப்போது பாழடைந்த நிலையில் இருக்கிறது. இப்பகுதியிலுள்ள பழமார் நேரி எனப்படும் பழையமாறன் ஏரி ஊரினரும் சென்னை இராசதானியில் 1917-இல் கவர்னரின் நிர்வாக சபையில் உறுப்பினராக இருந்தவருமாகிய சர். பி. எஸ். சிவசாமி ஐயர் நிறுவியுள்ள உயர்நிலைப் பள்ளி இவ்வூரில் இருக்கிறது. பல இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகங்கள் இப்பள்ளியில் உள்ளன.

இவ்வூரிலிருந்து 5 கி. மீ. தொலைவில் சாஸ்தா கோயில் ஒன்று இருக்கிறது; சமணர் வழிபட்ட பள்ளி ஒன்று முன்னொரு காலத்தில் இருந்தமையால் பள்ளி என்ற ஈற்றுச்சொல் இவ்வூரின் பெயரில் இடம் பெற்றிருக்கக்கூடும்.

**திருக்கானூர்**

திருக்காட்டுப்பள்ளியருகே கொள்ளிடத்தின் தென்கரையில் சோலை சூழ்ந்த மணற்பரப்பில் பாடல் பெற்ற இத்தலம் இருக்கிறது. கொள்ளிடத்தின் போக்கு மாறியதால், 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு கோயில் இங்கு புதைந்து கிடக்கிறது. 1850 அளவில் இது தோண்டிப் பார்க்கப்பட்டது.

**திருமழபாடி**

பாடல் பெற்ற இத்தலத்துக்கு அருகே குலமாணிக்கம், செம்பியக்குடி என மருவி வழங்கும் செம்பியன்

மாதேவி என்னும் இரு சிற்றூர்கள் இருக்கின்றன. இவை சோழப் பேரரசியான செம்பியன்மாதேவியார் பெயரால் அமைந்தவை.

கிழக்கு மேற்கில் உள்ள நீண்ட தெருவின் ஒரு பகுதிக்குக் குலமாணிக்கம் என்றும் அதே தெருவின் மற்றொரு பகுதிக்குச் செம்பியக்குடி என்றும் பெயர்கள் இருப்பதால் இந்நாளில் இரண்டு ஊர்களாகக் காட்சி தரும் இவ்வூர், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் **குலமாணிக்கம் செம்பியன்மாதேவி** என்னும் ஒரே பெயருடன் திகழ்ந்திருக்க வேண்டும். முதலாம் இராச ராசச் சோழன், இச்சோழப் பேரரசியை, குலமாணிக்க மாகிய நம் பிராட்டியார் செம்பியன் மாதேவியார் என்று பாராட்டியுள்ளார்.

**திருநெய்த்தானம்**

இது திருவையாற்றுக்கு அருகேயுள்ள பாடல்பெற்ற தலம். முதற் பராந்தகன் முதலாகச் சோழமன்னர் சிலரின் கல்வெட்டுக்களும் நந்திவர்மன் காலத்துக் கல் வெட்டுக்களும் இங்கே உள்ளன.

**திருவாலம் பொழில்**

இது பாடல்பெற்ற தலம். தலவிருட்சமாகிய ஆல மரங்கள் மிகுந்து அழகிய சோலையாக அமைந்து அதனுல் பெயர் பெற்றது. திருவையாற்றுக்கு அருகே இருக்கிறது.

**புதகிரி**

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து 3 கி. மீ. தொலேவில் கொள்ளிடக்கரையில் வரலாற்றுச் சிறப்புடைய இச் சிற்றூர் இருக்கிறது. செவ்வந்தி புராண நூலில் இவ்வூ ரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. 'மாவலியார்' என்ற பட்டம் உடையவர்கள் சிலர் இப்பகுதியில் வாழ்கின் றனர்; வலிமையுடன் போரிட்டவர்களுக்குச் சோழ

அரசர்கள் இத்தகைய பட்டங்களை நல்கினர். வானராங்குடி என்றும் இவ்வூருக்குப் பெயருண்டு.

**பூதலூர்**

(மக்கள் தொகை ஏறத்தாழ 3,000)

தஞ்சை—திருச்சி இரயில் பாதையில் இவ்வூர் இருக்கிறது. உய்யக்கொண்டான் கால்வாயின் தொடர்ச்சி இப்பகுதியில் இருந்தது என்பதற்கு இவ்வூரில் அறிகுறிகள் உள்ளன.

**வல்லம்**

(மக்கள் தொகை ஏறத்தாழ 10,000)

தஞ்சை நகரினின்றும் தென்மேற்கே 11 கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது.* தஞ்சை மாவட்டத்தில் மிக உயர்ந்த இடம் இதுவே. உயர்ந்த இடமாக இருப்பதால், இங்கிருந்து பார்த்தால் சுற்றிலுமுள்ள பகுதிகள் நன்றாகத் தெரியும். இங்கே ஈரக்காற்றுக் கிடையாது. வாழ்க்கை வசதியுள்ளவர்கள் இங்கு வீடு கட்டிக் கொண்டிருக்கின்றனர். தஞ்சை மாவட்டக் கலெக்டரின் மாளிகை இங்கு இருக்கிறது.

வல்லம், தமிழ்நாட்டு வரலாற்றிலும் சங்க இலக்கியங்களிலும் இடம் பெற்றிருக்கிறது. முத்தரையர்க்கு 'வல்லம் ஆண்டார்' என்ற பெயர் உண்டு. அவர்களுக்கு வல்லத்தில் ஒரு கோட்டை இருந்தது. மதுரை நாயக்கர்கள், பீஜப்பூர் படையினர், ஆங்கிலேயர் ஆகியோரால் இக்கோட்டை சிலகாலம் கைப்பற்றப் பெற்றிருந்தது.

---

* நெல்லை, சேலம், வ. ஆ. மாவட்டங்களிலும் வல்லம் என்ற பெயருடைய ஊர்கள் உள்ளன. வட ஆர்க்காட்டுத் திருவல்லம் சோழர் தொடர்புடையது; ராஜராஜன் தமக்கையான குந்தவையை மணந்து கொண்ட வல்லரையன் வந்தியத் தேவனின் ஊர் அதுவே.

இக்கோட்டையின் சின்னங்களும் அகழிகளும் இன்றும் உள்ளன. கோட்டைக்குள் சிவன் கோயிலும் பெருமாள் கோயிலும் வஜ்ரதீர்த்தமும் உள்ளன. இத்தீர்த்தத்தில் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாசிமக நாளிலும் நீராடுவது ஒரு பேருகக் கருதப்படுகிறது.

மழைக்காலத்தில் காவிக்கல் சரளை ஆகியவற்றில் கூழாங்கல் கட்டி உருண்டைகள் உண்டாகின்றன. அவற்றைச் சாணையில் தேய்த்து 'வல்லம் மூக்குக் கண்ணுடி' செய்யப்படுகிறது. சுத்தமான துவரைக்கு இவ்வூர் பெயர் பெற்றிருக்கிறது.

இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் (1941–1945) இங்கு ஓர் ஆகாய விமானநிலையம் அமைக்கப் பெற்றது. இப்போது இங்கு கலப்பை செய்யும் தொழிற்சாலையும், தொழிற் பேட்டையும் ஏற்பட்டிருக்கின்றன.

**வளப்பக்குடி**

திருக்காட்டுப்பள்ளிக்குக் கிழக்கே 6கி.மீ.தொலைவில் வளமான இவ்வூர் இருக்கிறது. காவிரிக்கும் குடமுருட்டிக்கும் இடையே இவ்வூர் அமைந்துள்ளது. முத்தரையர் என்ற குலத்தவர் இங்கு இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர். தூக்குணம் பாளையம் என்ற பெயர் இப்பொது இவ்வூருக்கு வழங்கி வருகிறது.

**விளாங்குடி**

திருவையாறு நகரருகே இவ்வூர் இருக்கிறது. பாய் மிடையும் தொழில் இவ்வூரிலும் இதையடுத்த வைத்தியநாதம் பேட்டையிலும் சிறப்பாக நடை பெறுகிறது.

**திருவையாறு**

இவ்வூர் தஞ்சைக்கு வடக்கே பத்துக் கிலோமீட்டர் (6 மைல்) தொலைவிலுள்ளது. ஏறத்தாழ 13,000 மக்கள்

இங்கே வாழ்கின்றனர். தஞ்சை நகரிலிருந்து இவ்வூருக்கு எந்த நேரமும் பஸ் போக்குவரத்து உண்டு. இவ்வூர் இரயில் அவுட் ஏசன்சி உடையது; தஞ்சை இரயில் சந்திப்புடன் தொடர்புடையது.

'ஆறை' என்னுஞ் சொல் மதில்களையுடைய கோட்டையைக் குறிக்கும். தலைமையான கோட்டை அல்லது அழகிய கோட்டை என்னும் பொருளில் ஏற்பட்ட ஐயாறை என்பது ஐயாறு என மருவியிருக்கிறது.

ஐயாறு என்பது அகன்ற ஆற்றுறையுடைய ஊர் என்று பொருள்படும். வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி, கொள்ளிடம் ஆகிய ஐந்து ஆறுகளும் இவ்வூரருகே செல்லுகின்றன. ஐந்து ஆறுகள் பாயும் பஞ்சாபு (பாஞ்ச், ஆப். பாஞ்ச்—5. ஆப்—ஆறு) என்று பெயர் பெற்றது ஈண்டு நினைவுக்கு வருகிறது. சூரிய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி, கங்கை, பாலாறு, நந்தி தீர்த்தம் என்ற ஐந்து ஆறுகள் பாயும் இடம் இதுவே என்று நெடுங்காலமாகச் சமயப்பற்று மிக்கவர் சிலர் நம்பி வருகின்றனர்.

அழகும் வளமும் அமைந்த நல்லூர் என்று இவ்வூரைக் கூறலாம். காவிரிக் கரையின் அமைப்பும், ஆங்குள்ள பல படித்துறைகளும், பூசை மண்டபங்களும், அரசர் கல்லூரியின் கட்டிடங்களும், கவினுறு மாளிகைகளாக உள்ள சத்திரங்களும் தோற்றத்தில் காசிநகரை நம் கண்முன் நிறுத்துந்தன்மையன. "காசிக்குத் திருவையாறு அதிகம்" என்று ஒரு பழமொழி வழங்கி வருகிறது. தென் கயிலாயம் என்றும் திருவையாற்றைக் குறிப்பிடுவர். இறந்தவர்களின் இறுதிச் சாம்பல்களைக் கங்கையாற்றில் கரைக்கக் காசிக்குச் செல்லுவதுபோல, இங்கேவந்து காவிரியில் கரைப்பவர் பலரை நாள் தோறும் காணலாம்.

பூசப்படித்துறை: இது பூச நட்சத்திரத்தில் இறைவர் தீர்த்தம் கொடுப்பதற்காகக் கட்டப்பட்டது. இங்குள்ள படித்துறைக்குக் கல்யாணச் சிந்து என்று பெயர். இதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உண்டு.

காவிரியும் அதன் கிளைகளும் இவ்வூரைச் சுற்றி ஓடுவதால், நெல்லும் கரும்பும் மிகுதியாக விளைகின்றன. காய்கறித் தோட்டங்களும் தோப்புக்களும் இங்கு ஏராள மாக உள்ளன. புதிய காய்கறிகள் தட்டின்றிக் கிடைக் கின்றன. இக்காரணங்களால் முதிர்ந்த வயதில் இங்கு வந்து வாழ்பவர் தொகை பெருகி வருகிறது.

முப்பதுக்கு மேற்பட்ட சத்திரங்கள் இவ்வூரில் உள் ளன. இவை மகாராட்டிர அரசர்களாலும் பலசமூகத்தின ராலும் கட்டப்பெற்றுள்ளன. இவற்றில் வந்து தங்கித் திருமணம் நடத்துபவர்கள் மிகப் பலர் ஆவர்.

பிராமணர்களுக்கு இது ஒரு முக்கியமான ஊராகும். அக்கிரகாரங்கள் உள்ள தெருக்கள் மிகப் பலவாகும். அவற்றுள் பல, வேறுபட்ட அரசர்களால் வழங்கப் பெற் றவை. மகாதானத்தெரு என்பது நாயக்க அரசர் ஒருவரின் காலத்தில் (அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் வேண்டுகோளுக்கிணங்க) பிராமணர்களுக்குத் தான மாகக் கொடுக்கப்பெற்றது.

திருவையாற்றுத் திருவையாறுடையார் கோயிலில் கோயில் கொண்டுள்ள இறைவனுக்கு "ஐயாறப்பன்" என்று பெயர்; இதை, வடமொழியாளர் பஞ்ச நதீசு வரர் என்பர். அப்பர் சுவாமிகளுக்கு ஆடி அமாவாசை யன்று சிவபெருமான் கைலாசக் காட்சி தந்து அவரை ஆட்கொண்டது இங்கேயே ஆகும். "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று அவர் பாடியதும் இங்கே தான்.

ஐயாறப்பன் கோயிலில் சோழ, பாண்டிய, விசய நகர அரசர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. வில்லேந்தி நிற்கும் சுப்பிரமணியர் உருவம் காணத்தக்கது.

சைவப்பயிர் வளர்த்த தாய்மார்களுள் ஒருவரான ஒலோக மாதேவியாரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக் களைத் தெரிவிக்கும் 'திருவையாறு ஒலோக மாவீச்சரக் கல்வெட்டுக்கள்' இங்கே உள்ளன.

திருவையாறுடையார் கோயில் திருவையாற்றில் இருப்பதோடு, மாயூரத்தில் (திருமயிலாடுதுறையில்) மாயூர நாதசாமி கோயிலுக்கு மேல்பால், நான்கு வீதிகளுடன் நடுவிலும், இருக்கிறது. இது கற்கோயில். மேற்கு நோக்கி சந்நிதியையுடையது. இதைக் கட்டியவன் கெயமாணிக்க வளநாட்டுப் பட்டினக்கூற்றத்து, குற்றாலமுடையான் ரிஷபதேவன் திருச்சிற்றம்பலமுடையானை காராணை விழுப்பரையன் ஆவான். இக்கோயிலை இவன் கட்டியது மூன்றுங்குலோத்துங்கன் காலத்தில் ஆகும். இக்கோயிலில் 12 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளில் இறைவர் திருவையாறுடையார் என்றே கூறப்பெற்றுள்ளது. திருவையாற்றில் இருப்பதுபோல், அம்மனுக்கு அறம் வளர்த்த நாயகி என்றே பெயர். இங்கும், திருக்கயிலாய நாதர் திருமேனி இருக்கிறது.

புதுக்கோட்டைப் பகுதியில் ஆலங்குடி வட்டம் செம்பாட்டூரில் திருவையாறுடையார் கோயில் இருக்கிறது. இச்செய்தியடங்கிய கல்வெட்டுள்ள திருநெய்த்தானம் (பாடல் பெற்றபதி) திருவையாற்றுக்கு மேற்கில் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது.

திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்னும் ஏழு தலங்களிலுமுள்ள

இறையுருவங்கள் சித்திரா பவுர்ணமியன்று கொண்டு வரப்படுகின்றன. அவ்விழா காணத்தக்க ஒன்ருகும்.

திருவையாறு, வரலாற்றுச் சிறப்புடைய ஊராகவும் இருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னர் இது ஒரு "சுபா"வின் தலைநகராக இருந்து வந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்தில் இவ்வூரைத் தலைநகராகக் கொண்ட ஒரு "தாலூகா" இருந்தது. அலுவலகங்கள் இப்போது தஞ்சை நகரிலுள்ளன. மாவட்ட முன்சீபு நீதிமன்றம் இன்றும் திருவையாற்றில் இருந்து வருகிறது.

கலைத்துறையில் திருவையாற்றுக்கு நிலைத்த புகழ் உண்டு. தமிழும் வடமொழியும் கற்பிக்கும் அரசர் கல்லூரி இவ்வூரின்கண் இருக்கிறது. கர்நாடக இசையின் இணையற்ற மேதையான ஸ்ரீதியாகப்பிரம்மம் எனப்படும் தியாகராாசரின் சமாதி இவ்வூரில் இருக்கிறது. இச் சமாதியருகே ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் பெரியதொரு இசைவிழா நடைபெற்று வருகிறது. பட்டினம் சுப்பிரமணிய ஐயர், மகா வைத்தியநாதையர் ஆகிய இசைப்புலவர்களும் இவ்வூரினரே ஆவர்.

தியாகராசர் சமாதியருகே கட்டப்பட்டுள்ள வால்மீகி மண்டபத்தில் இருநூறு சலவைக் கற்களில் தியாகராசரின் கீர்த்தனைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இசையுலகம் மதிக்கும் ரிஷிகளின் உருவச்சிலைகளும் இங்கு நிறுவப்பட்டு வருகின்றன. இம்மண்டபத்தில் வாரம் ஒரு முறை பசனைகளும் கச்சேரிகளும் செய்யப்படும்.

## 2. ஒரத்தநாடு வட்டம்

பட்டுக்கோட்டை வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, 1954 முதல் ஒரத்தநாடு தனிவட்டமாக ஏற்பட்டிருக்கிறது. 1934இல் டிப்டி தாசில்தார் அலுவலகம் இங்கு

ஏற்பட்டது. 1954இல் ஒரத்தநாடு 'தாலுகா' அலுவலகம் பட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டது. 1957 இல் அந்த அலுவலகம் ஒரத்தநாடுக்கு மாற்றப்பட்டது. ஒரத்த நாடு வட்டம் தஞ்சாவூரிலுள்ள கோட்ட ஆட்சி அலுவல கத்துக்கு உட்பட்டது. வேளாண்மைத் துறையில் வள மும் பிற துறைகளிலும் பெருமுன்னேற்றமும் இவ்வட்டத் தில் ஏற்பட்டுள்ளன. இதன் தலைநகரம் ஒரத்தநாடு. தலைநகரைத் தவிர ஏனைய ஊர்கள் யாவும் மிகச்சிறிய ஊர்களே ஆகும். தஞ்சை மாவட்டத்தில் இரயில் போக்குவரத்து வசதி இல்லாத வட்டம் இது ஒன்று மட்டுமே.

உறந்தைநாடு என்ற தொடர் திரிந்து உறத்தைநாடு என்று ஆயிற்று. உறந்தை என்பது உறையூர் என்ற ஊரின் மரூஉ. சோழர்களின் பழைய தலைநகரம் உறை யூர். அவ்வூரின் நினைவாக இப்பெயர் அமைந்துள்ளது. இவ்வூரையடுத்து, தென்னவன் நாடு என்ற ஊர் உள் ளது. தென்னவன் என்பது பாண்டியரைக் குறிக்கும். பாண்டிய அரசன் ஒருவன் வழிபட்ட ஒரு லிங்கம் 'பாண்டிய லிங்கம்' என்ற பெயரில் இன்றும் இருக் கிறது. பாப்பா நாடு என்ற பகுதியும், (உளூர், பகுதி யப்பர் கோயில் முதலியன உள்ள) வெங்கிநாடும் இப் பக்கத்தில் உள்ளன. இவ்வூர்க்குத் தென்புறம் உள்ள ஒரு சிற்றூர் உறந்தைராயன் குடிக்காடு என்ற பெயரை இன்றும் தாங்கி நிற்கிறது.

உரத்தூர் என்ற பெயருடைய சிற்றூர் இவ்வூரருகே இருப்பதால் உரம் உள்ளவர் நாடு, உரமானவர் நாடு என்று பொருள்கள் கற்பிக்கப்பட்டு, ஊர்ப் பெயர்க்குக் காரணங்கள் ஊகிக்கப்படுகின்றன. 'உறந்தை நாடு' என்பதே ஏற்றுக்கொள்ளத்தக்கது.

**ஒரத்தநாடு**

ஊர்கள் பலவகைப்படும் - கோயிலால் புகழ் பெ
றவை (இராமேசுவரம், பழநி), கோட்டையால் பெ
அடைந்தவை (செஞ்சி, சங்கரிதுர்க்கம்), சந்
பிரபலமானவை (பொள்ளாச்சி, தேனி), துறைமு
முக்கியத்துவம் பெற்றது (தூத்துக்குடி), அ
சிறப்படைந்தவை (சுருளி, ஒகனேக்கல், கு
மருத்துவ மனையால் எங்கும் தெரிந்
(வேலூர், செங்கிப்பட்டி, பெருந்துறை) இவ்வா
னையோ, வரலாற்றால் புகழடைந்த ஊர்களும் உ
அவற்றுள் குறிப்பிடத்தக்கது ஒரத்தநாடு. அண்
காலம்வரை அவ்வூருக்குச் செல்லுபவர்கள் பஸ்
டிக்கட் எடுக்க, "சத்திரம்" என்றே அவ்வூரைக் குறி
பிட்டனர்.

சத்திரம் - சத்திரத்தை மேற்பார்க்க ஓர் அலுவல கம் – அரசரின் இருக்கையும் சோலைகளும் – விவசாயப் பள்ளி - விவசாயப் பண்ணை - கால்நடைப் பண்ணை - அடிப்படைக் கல்விக்குரிய ஆசிரியர் கல்லூரி (Post Graduate Basic Training College) இவ்வாறு ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு நிறுவனமாகப் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ள கிராமம் ஒரத்தநாடு. நிலையாக வாழும் மக்கள் ஒரு சிலரே இருந்தமையால், 1937-இல் கல்லணைக் கால்வாய் (G. A. Canal) நீர் வரும் வரை இப்பகுதியில் மாடு களவு போவது அன்றாட நிகழ்ச்சியாக இருந்தது. ஓர் அடி தோண்டினால் மண்டைஓடு கிடைக்கும் என்று சொல்லும் அளவுக்குக் கொலைகளும் நடந்தன. அவ்வளவு பிற்பட்ட பகுதியாக, வானம் பார்த்த பூமியாக இருந்த ஒரத்தநாடு 1950-க்குப் பின் விரைந்து முன்னேறி இப்போது ஒரு சிறு நகரமாக உருவாகி, மூன்றுபோகம் விளைச்சலுள்ள செழிப்பான நிலையை அடைந்து நாள்தோறும் வளர்ச்சியடைந்து

வருகிறது. மலேயாநாட்டை நம்பி வாழ்பவர் தொகையும் ...றைந்திருக்கிறது. ஆவின் பாலும் நெய்யும் முட்டையும் ...மக்களுக்குத் தட்டின்றிக் கிடைக்கின்றன.

...த்தநாடு தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூர் - ...ாட்டை நகரங்களுக்கு நடுவே (25வது கிலோ ... கடல்மட்டத்திலிருந்து 45 மீட்டர் உயரத்தி... நகரம்.

...மேசுவரத்திற்குச் செல்லும் வழியில் இருப்ப... ...சாழ அரசர்களும் தஞ்சையை ஆண்ட ஏனைய ...களும் அவரவர் ஆட்சிகளில் இராமேசுவரத்திற் ...செல்லுபவர்கள் தங்குவதற்காகச் சத்திரங்களும், ...டுவதற்காகக் குளங்களும், வழிபடுவதற்காகச் சிறு ...கோயில்களும் கட்டியிருக்கின்றனர்.

19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் ஒரத்தநாட்டில் முத்தம்மாள் என்ற தம் அரசியின் பெயரால் அன்ன சத்திரம் கட்டி, அமுது படைத்து வந்திருக்கிருர். இதனுல் இவ்வூருக்கு முத்தம்மாள்புரம் என்றும் பெயர் வழங்கி வருகிறது. அமுதுபடைத்தல் என்ற சொற்ருெடரும் பாமர மக்கள் வாயிலும் பழகு தமிழாய்ப் பெருவழக்காக இருந்து வருகிறது. சித்திரை மாதத்தில் திருத்தொண்டர் புராணம் கிராமங்களில் ஒவ்வொரு தெருவிலும் பெருவிழாவாக படிக்கப்பட்டும் நாடகமாக நடிக்கப்பட்டும் நடைபெற்று வருகிறது.

முத்தம்மாள் சத்திரம் ஒரு கல்கட்டிடம். அங்கு தேர்க்காலும், உயிரினங்கள் பலவற்றின் வடிவங்களும் நன்ருக அமைந்துள்ளன. அவற்றை நான் கண்டபோது பெரு வியப்படைந்தேன். சத்திரத்தின் ஏனைய பகுதிகளில் இப்போது 1961-ல் உயர்நிலைப் பள்ளியும், மாணவர் சத்திரமும் (உணவு விடுதி), கைக்

குத்தலரிசி அலுவலகமும் உள்ளன. மாடியிலே மரத் தூணும், கீழே உள்ள மிகப்பெரிய மண் தூணும், சுவர்களிலுள்ள வண்ணப்படங்களும் என் உள்ளத்தை ஈர்த்தன. சத்திரத்துக் கட்டிடம் கண்டிராக்டர்களால் கட்டப்படவில்லை என்பது அதன் உறுதியால் தெரிந்தது. பல கும்பங்கள் வைத்து ஒரு கோயில்போல் அது அமைந்து அதை நிறுவிய சரபோஜியின் புகழைப் பரப்பி வருகிறது. எதிரிலே ஒரு குளமும் வெட்டியிருக்கிறார் சரபோஜி. குளத்தின் மேற்குக் கரையில் விக்கிரக மில்லாத கோயிலும், அதையடுத்துப் பாழடைந்த ஒரு மண்டபமும் உள்ளன. இப்பெருமாள் கோயிலுக் குச் செய்துவந்த விக்கிரகம் வழியிலுள்ள வடுவூர் மக்களின் வேண்டுகோளுக்குக்கிணங்க அவ்வூரிலேயே வைத்துக் கோயில் கட்டப் பெற்றதாம்.

சரபோஜி அமைத்த சிவன்கோயில் ஒன்று ஒரத்த நாட்டில் இன்றும் இருந்து வருகிறது. இதற்குக் காசி விசாலாட்சி அம்மன் கோயில் என்று பெயர்.

மாரியம்மன் கோயில், காளியம்மன் கோயில் என்று பல அம்மன்கோயில்கள் இருப்பதும் ஒரத்தநாட்டின் சிறப்பாக எனக்குத் தோன்றுகிறது. இக்கோயில்கள் ஒவ்வொன்றின் பெயராலும் ஒரு தெரு இருக்கிறது. அவ்வாறே ஒவ்வொரு சாதியின் பெயராலும் இவ்வூரில் ஒரு தெரு இருக்கிறது. இந்த வட்டத் தில் கள்ளர் சமூகத்தினர் பலர் வாழ்கின்றனர். இவர்கள் தம் பெயரின் ஒரு பகுதியாக (தங்கள் முன் னோர்க்குச் சில தலைமுறைகளுக்குமுன் அரசர்களால் வழங்கப்பெற்ற) பட்டங்களைச் சேர்த்துக் கொள்ளு கின்றனர். காளிங்கராயர், பின்னுண்டார், பொன் ஆபரணம் பூண்டார், நல்லிப் பிரியர், அலங்காரப் பிரியர், தொண்டாப் பிரியர் என்பன பட்டப் பெயர்களில் சில.

இவர்களுடைய இயற்பெயர்களில் பெரும்பாலும் 'ஐயன்' என்ற ஈற்றுச்சொல் இருக்கும். சான்று; சின்னையன், கருப்பையன், முத்தையன், மைசூரிலும் குடகிலும் கரியப்பா, மேடப்பா, சின்னபாசப்பா, திம்மையா, விசுவேசுவரையா, சௌடையா என "ஐயா" என்ற இறுதிச் சொல்லுடனும், செட்டிநாட்டில் வீரப்பன், முத்தப்பன், செட்டியப்பன், மெய்யப்பன் என "அப்பன்" என்று இறுதிச்சொல்லுடனும் பெயர்கள் வழங்கிவருவது ஒப்புநோக்கத் தக்கது.

1825-இல் பழைய ஊரை அழித்து, அழகாகப் புதி தாக உண்டாக்கப்பெற்றது புதுக்கோட்டை நகர். அந் நகரில் போலவே ஒரத்த நாட்டிலும் நேருக்கு நேரான சாலைகளைக் காணலாம். எனவே, ஊரின் அமைப்புச் சிறப்பு இவ்வழியே ஏனைய ஊர்களுக்குச் செல்லுவோர்க் கும் நன்குகத் தெரியும். சரபோஜி மன்னரே தம் குடும் பத்துடன் இடையிடையே வந்து இவ்வூரில் தங்கியதாக வரலாறு உண்டு. ஊரை அடுத்து மேற்கேயும் கிழக்கேயும் உள்ள மேலத்தோப்பு கீழைத்தோப்பு இரண்டும் அவர் அமைத்தவையே. மேலத் தோப்பிலுள்ள சரபோஜியின் வசந்த மண்டபத் திற்குச் சௌகண்டி என்ற மராத்திப் பெயர் வழங்கி வருகிறது. இரும்புத் தூண்களோ என்று ஐயப் படத்தக்க தோற்றமும் உறுதியும் உள்ள கருங்காலி, வாகு மரங்களால் இந்த வசந்த மண்டபம் உருவாக்கப் பட்டிருக்கிறது. காண்பவர் அனைவருடைய மனத்தை யும் தம் வயப்படுத்தும் பேரழகு இந்த வசந்த மண்ட பத்திற்கு உண்டு. இதனருகே இருந்த சில கட்டிடங் கள் கடந்த இரண்டு மூன்று புயல்களில் அழிந்துவிட்டன. வசந்த மண்டபத்தைச் சுற்றி இலுப்பை, புளி, பலா, பூசரை, மால்டா இலுமிச்சை, மா முதலிய பலவகை மரங் கள் ஏராளமாக உள்ளன. பரந்துபட்ட மிகப்பெரிய

மாமரம் ஒன்றும் இருக்கிறது; இன்பச் சுற்றுலாவருவோர் உண்டு மகிழ்தற்கு ஏற்ற இடம் இதன் நிழல். இத் தகைய கீழைத்தோப்பில் போலவே மேலத்தோப்பிலும் விவசாய வளமும் பலவகை மரங்களும் மிகுந்திருக் கின்றன. சத்திர நிர்வாகத்திற்கென அலுவலகக் கட்டிடம் ஒன்றும் (இப்போதுள்ள ஆஸ்பத்திரி அருகே) இருந்தது. இவற்றைப் பேணிவந்த தஞ்சை மாவட்டக் கழகத்தினர், தஞ்சாவூரிலுள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளி (Borstal School) மாணவர்களுக்கென வேளாண் மைப்பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்றை இங்கே 1948-இல் தொடங்கினர். பள்ளிக்கூடக் கட்டிடமாகச் சத்திர அலுவலகமும், பயிற்சி பெறும் பண்ணைகளாக இரு தோப்புகளும் பயன்படுத்தப் பெற்றன. சில ஆண்டு களுக்குப் பிறகு, தக்க ஆசிரியர் கிடைக்காமையால், பள்ளிக்கூடத்தை மாவட்டக் கழகத்தாரால் தொடர்ந்து நடத்த இயலவில்லை. அதன் விளைவாகத் தமிழ்நாடு அரசாங்கத்தார் அந்தத் தோப்புகளையும், கட்டிடங்களை யும் மாவட்டக் கழகத்திடமிருந்து ஒப்புக்கொண்டு 1954 ஜூன் மாதத்தில் மாட்டுப்பண்ணை ஒன்றைத் தொடங்கினர். சத்திர அலுவலகம் இப்போது கால் நடைப் பண்ணை அலுவலகமாக இருந்துவருகிறது. கீழைத் தோட்டம் கால்நடைப்பண்ணையாகக் காட்சி தருகிறது. கோழி வளர்ப்பு, மீன்வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகிய வையும் நடந்து வருகின்றன. ஏழுலட்சம் ரூபாய்ச் செல வில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலத் தோப்பில் பலவகையான புல் வளர்கிறார்கள்; நெற்பயிரும் கட லைப் பயிரும் போட்டிபோட்டுக்கொண்டு விளைகின்றன. கால்நடைத்துறையினரின் "தங்கும் விடுதி" அளவில் சிறியதாக இருந்தாலும் வசதி நிறைந்து விளங்குகிறது. இதைப் பார்த்த பிறகு "கவர்னர் ஸ்கொயர்"க்குச் செல்லவேண்டும் என்று கால்நடைப் பண்ணை அலுவலர்

கள் கூறினர். இது நான்கு கி. மீ. நீளமுள்ள சாலே. சதுரம் போல அமைந்தது ; இந்தச் சாலேயில் இருபுறமும் பசுந்தழை மரம் (இரட்டைக் கொழுஞ்சி) நடப்பட்டு ஒவ்வொரு மரமும் சாலேயின் எதிர்ப்புறத்திலுள்ள மரத்தோடு போய்ச் சேர்ந்து வளேவு உண்டாக்கிச் சாலேயை சோலேயாக்குகின்றன. இந்தச் சதுரம் கவர்னர் ஸ்ரீபிரகாசா பார்வையிட வந்தபோது அமைக்கப்பட்டதால் "கவர்னர் ஸ்கொயர்" என்று பெயர் பெற்றிருக்கிறது. கவர்னர் ஸ்கொயரைச் சுற்றிலும் சட்டிகாச்சி (நாறு நிறைந்த ஒருவகைப் பழம்) மாமரம் மிகுந்திருக்கிறது ; அடர்த்தியான முள்களும் புதர்களும் அளவு கடந்துள்ளன ; இயற்கையான நிலேயில் 1½ அடி ஆழமான வேர் உள்ள நன்னரி மனிதர்களுக்காகவும், கால்நடைப் பண்ணேயினரின் முயற்சியால் கோழிகளுக்கு உணவாக வழங்குவதற்குப் பசலிக் கீரையும் படர்ந்து கிடக்கின்றன.

கீழைத்தோட்டத்தில் ஏறத்தாழ 650 மாடுகள் உள்ளன. இங்கே பொலி காளே போட்டுக் கொடுக்கின்றனர். உம்பளாச்சேரி மாடு என்ற ஒரு சாதியை வளர்ப்பதற்காகவே ஒரத்தநாடு பண்ணே ஏற்பட்டது. இவை நல்ல உடற்கட்டுடைய மாடுகளாக இருந்தும் இவற்றுக்கு "மொட்டை மாடுகள்" என்றே பெயர் வழங்குகிறது. மூர்க்கத்தனமாக இருப்பதாலும், இவற்றின் கொம்புகள் ஒழுங்காக வளராததாலும், ஊட்டச் சத்து அனேத்தும் கொம்புக்கே போய்விடுவதாலும், கன்றுகளாக இருக்கும்போது இவற்றின் கொம்புகளே இரும்பைப் பழுக்கக் காய்ச்சிச் சுட்டு இரசாயனப் பொருள்களேப் பயன்படுத்தித் தீய்த்து விடுகிருர்கள். கொம்பை மட்டும் எடுத்தால் விகாரமாக இருக்கும். அதனல் காதையும் அறுத்து விடுகின்றனர் !

உம்பளாச்சேரி மாடுகளுக்கெனத் தனியாக ஒரு பண்ணையைத் திருத்தருப்பூண்டியிலிருந்து (25 கி. மீ.) தொலைவிலுள்ள கொர்க்கை என்னுமிடத்தில் அமைத்து அவற்றை அங்கே சீராக வளர்த்து வருகின்றனர். உம்பளாச்சேரி இனப் பசுக்களுடன் சிந்தி காளைமாடுகளைக் கலந்து, கலப்பு இனம் உண்டாக்க ஒரத்தநாட்டில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இதற்காக இந்திய அரசாங்கத்துக் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தார் இரண்டரை லட்சம் ரூபாய் செலவிட்டு வருகின்றனர்.

கால்நடை கண்காணிப்பாளர் (Stockman) படிப்பு இந்தப் பண்ணையில் உயர்நிலைப் பள்ளிப்படிப்பு முடித்தவர்களுக்கு, 11 மாதங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. கால்நடைகளைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெருக்கிக் கொண்ட பிறகு, இந்த இளைஞர்கள் கால்நடைமருத்துவ மனைகளிலும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் பணிபுரிகின்றனர். சென்னைநகரிலுள்ளகல்லூரியில் கால்நடை மருத்துவர் வேலைக்குப் படிக்கும் மாணவர்களும் ஆண்டுதோறும் 45 நாட்கள் இங்கு தங்கி அனுபவம் அடைகின்றனர்.

ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையின் பரப்பு 278 ஏக்கர்தான்; இங்கு பெரிய பிரச்னை போதிய இடமின்மை. 200 மாடுகளைப் பேணுவதற்கு வேண்டிய இடமே இருக்கிறது. ஆகையால் ஒரத்தநாடு—வல்லம் சாலையில் ஈச்சங்கோட்டை என்னுமிடத்தில் 2000 ஏக்கர்ப் பரப்பில் 700 ஏக்கரில் காட்டு நிலத்தைச் சீர்திருத்திச் சிந்தி, முரா மாடுகளை வளர்க்கவும் அவை மேய்வதற்கான மேய்ச்சல் நிலத்தை ஏற்படுத்தவும் 1960 முதல் முயற்சிகள் தொடங்கப் பெற்று நிறைவேறி வருகின்றன. இதன் விளைவாக ஒரத்தநாடு கால்நடைப் பண்ணை தென்னிந்தியாவிலேயே மிகச் சிறந்த பண்ணையாகவும், மிகப் பெரிய பண்ணையாகவும்

இருந்து வருகிறது. இதற்குக் காரணமாக உள்ள தமிழ் நாடு கால்நடைத் துறைத் தலைவர் டாக்டர் பட்டாபி ராமன், அலுவலர் திரு. பெஞ்சமின், சட்டசபை உறுப் பினர் திரு. சீனிவாச ஐயர் ஆகியோர் தமிழ் மக்களின் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள் ஆவர்.

ஒரத்தநாட்டில் இருப்பவை: தமிழ்நாட்டிலேயே சிறந்த திரைப்பட மாளிகை, ஊராட்சி மன்றத்துக்குப் பெரு வருவாய்தரும் "மயான வண்டி", விவசாயம் – தோட்டக்கலை – நூல் நூற்றல் – நெசவு ஆகியவற்றைச் சொல்லிக் கொடுத்து அடிப்படைக் கல்வி முறையில் நடைபெறும் தமிழ்நாட்டிலுள்ள ஒரே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. ஒரத்த நாட்டில் இல்லாதவை: பெரிய கடைகள், இரயில் பாதை.

## 3. பட்டுக்கோட்டை வட்டம்

*1910*–இல் இது தஞ்சாவூர் மாவட்டத்தின் தனிப் பெரும் வட்டமாக இருந்தது. அறந்தாங்கி வட்டமும் ஒரத்தநாடு வட்டமும் இவ்வட்டத்திலிருந்து உருவான வையே. பேராவூருணி என்ற புதுவட்டம் உண்டாக்கும் திட்டமும் ஆலோசனையில் உளது.

மாவட்டத்தின் பிற்பட்ட பகுதிகளில் இது ஒன்று. மாவட்டத்தின் ஏனைய பகுதிகளைப் போலன்றி, இங்கு ஜமீன்கள் * மிகக்குறைவு; நீர்வளமும் குறைவு; எனவே மக்கள் நெருக்கடியும் குறைவு.

காரைக்குடிக்கு இரயில் பாதையும், இராமேசுர யாத் திரீகர்களுக்கான அதிராம்பட்டினம்–மீமிசல் வழியாகக் கரையோரச்சாலையும் இவ் வட்டத்து வழியே செல்லு கின்றன. ஒரத்தநாடு – அறந்தாங்கி வழியாகப்

---

* கந்தர்வகோட்டை, மதுக்கூர் இரண்டுமே முக்கியமானவை.

பிறிதொரு சாலையும் உண்டு. இவ்வட்டத்தின் பெரிய ஊர்கள் தலைநகராகிய பட்டுக்கோட்டையும், சிறு துறைமுக நகராகிய அதிராம்பட்டினமும் ஆகும். பட்டுக் கோட்டையில் அடுத்த சில ஆண்டுகளில் நகராண்மைக் கழகம் ஏற்படக்கூடும்.

1934-இல் காவிரி மேட்டூர்க் கால்வாயும் 1959-இல் பாட்டுவாநாச்சி வடிகால் திட்டமும் நிறைவேறிய பிறகு, இவ்வட்டத்தின் சில பகுதிகளில் வளம் பெருகியிருக் கிறது. கால்வாயின் கோடியில் கடற்கரையருகேயுள்ள பகுதிகளுக்குப் போதிய தண்ணீர் வராதது பெரிய தொரு குறைபாடாக இருக்கிறது.

இவ்வட்டத்திலும் திருத்தருப்பூண்டி வட்டத்திலும் எல்லாக் கிராமங்களிலும் தெறகத்தியார் எனப்படும் இராமநாதபுர மாவட்டத்தினரைச் சாகுபடி காலத்தில் காணலாம். இராமநாதபுரம் பகுதிக்குச் சில மாதங்கள் முன்னரே வேளாண்மை இங்கு நடைபெறுவதால், இங்கு வந்து வேலைபார்த்துவிட்டுப் பிறகு தங்கள் ஊரில் சாகு படி தொடங்கும் காலத்தில் இவர்கள் தஞ்சை மாவட் டத்திலிருந்து தாய் மாவட்டத்துக்கு மீண்டுவிடுவர். சேது ரஸ்தா வழியாக, குடும்பத்தோடு கூட்டம் கூட்ட மாக இவர்கள் செல்லுவதை என் பயணங்களில் பார்த்திருக்கிறேன்.

கடலோர வட்டமாக இருப்பதால் சேதுரஸ்தாவில் பல இடங்களில் காட்டாறுகள் மீது பாலம் கட்ட வேண் டியதிருக்கிறது. இவ்வேலை 1955-க்குப் பிறகு அரசாங் கத்தாரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வட்டத்தில் பல இடங்களில் கோட்டைகள் உள்ளன. ஊர்ப் பெயர்களிலும் பட்டுக்கோட்டை, தாமரன்கோட்டை தம்பிக்கோட்டை, பரக்கலக் கோட்டை என்று 'கோட்டை' என்னும் இறுதிச்சொல் இருக்கிறது.

## தென்னை

உலகத்திலேயே தென்னை மிகுந்தது பிலிப்பைன்சு நாடு. இரண்டாம் இடம் வகிப்பது இந்தியா. இந்தியா வின் தென்னை வளத்தில் 69% கேரளத்திலும் அதற்கு அதற்கு அடுத்தபடியாக (8%) தமிழ்நாட்டிலும் இருக் கிறது.*

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் 35,779 ஏக்க ரிலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 27,579 ஏக்கரிலும் கோயம்புத்தூரில் 11,715 ஏக்கரிலும் வட ஆர்காட்டில் 11,158 ஏக்கரிலும் தென்னை பயிரிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தின் தேங்காய் உற்பத்தி ஓராண்டுக்கு 14 கோடி தேங்காய் ஆகும்.

பட்டுக்கோட்டை வட்டத்தில் அதிராம்பட்டினம், தம்பிக்கோட்டை, முத்துப்பேட்டை முதலிய பகுதிகளில் தென்னை மிகுதி. புயலால் சேதம் விளைந்த பின்னர், 3, 4 ஆண்டுகளில் பலன் தரக்கூடிய குட்டையான வகை கள் அந்தமான் தீவு, யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து புதிதாக வரவழைத்துப் பயிரிடப்பட்டிருக்கின்றன.

1952-55 புயலுக்கு முன் எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகளில் பலன்தரும் தென்னைகளே பயிரிடப் பட்டன. தென்னையால் பெருஞ் செல்வம் பெற்றவர் பலர். நஞ்சையைத் தூர்த்துத் தென்னை போட்டு வந்தனர். தோப்புக் காவல்காரனுக்கு மட்டையும் ஒரு தென்னை மரமும் கொடுப்பது வழக்கம்.

தேங்காயை உலரவைத்து அதிலுள்ள பருப்பைப் பக்குவப்படுத்தி ரொட்டி சாக்லட் ஆகியவை செய்வ தற்குப் பயன்படுத்தும் தொழிலை (Dessicated Coconut

---

* ஆதாரம்—The Coconut Palm : A Monograph.

Industry *) இப்பகுதியில் தொடங்கலாம். இலங்கையில் இது ஒரு பெரிய தொழிலாக இருந்துவருகிறது.

பனைமரம் இப்பகுதியில் பயன்தராது. பனை வெல்லம் அல்லது கருப்புக்கட்டி காய்ச்சுவதும் இப்பகுதியில் அருமையே.

## தென்னை ஆராய்ச்சி நிலையம் வேப்பங்குளம்

இது, பட்டுக்கோட்டையிலிருந்து 8 கி. மீ. தொலைவில் மதுக்கூர்—மன்னார்குடிச் சாலையில் 30.85 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 1958 ஏப்ரலில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இடம் கடற்கரையிலிருந்து 20 கி. மீ. தொலைவிலுள்ளது.

மொழிவழி மாநிலம் அமையுமுன்னர், தென் கன்னட மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருந்தது. அது 1956 நவம்பரில் மைசூர் அரசுக்குச் சென்றதால், தமிழ்நாட்டு அரசாங்கம் தஞ்சை மாவட்டத்தில் தென்னை நிறைந்த பட்டுக்கோட்டை வட்டத்தில் தனியாரிடமிருந்த தோப்பை வாங்கி ஓர் ஆராய்ச்சி நிலையத்தைப் புதிதாகத் தோற்றுவித்தது.

இதன் அலுவலர் மாவட்ட முழுவதும் சுற்றுப்பயணஞ் செய்து தரமான தென்னம்பிள்ளைகளை வழங்கி,

---

*Dessicated Coconut is prepared from Coconut by first removing the husk and shell, then paring off the brown skin from the Kernel and passing the white meat through cutting or shredding machines to produce chips or threads of varying degrees of fineness. These are finally dried in hot air driers and packed for export in tin-lined cases similar to tea-chests. Dessicated Coconut finds use in the preparation of Confectionery, Cakes, Biscuits, pastry, puddings etc.

6900 nuts yield one ton of dessicated coconut.

தென்னைப்பயிர் பற்றிப் பிரசாரஞ் செய்து, அப்பயிர்களைப் பார்வையிட்டு வருகிறார்.

இப்பகுதிக்கு ஏற்ற துணைப்பயிர்கள் (நிலக்கடலை, கரும்பு, வாழை, பருத்தி, உளுந்து, கொள்ளு, சர்க்கரை வள்ளி) எவை? ஒரு தென்னைக்கு ஒரு தென்னை 25 அடி (7.5 மீட்டர்) இடம் விட்டுப் பயிரிட்டால் கூடுதலான பலன் கிடைக்கிறதா? இப்பகுதியின் மண் வளத்துக் கேற்பக் கேணித் தண்ணீரைக் கொண்டு தென்னை வளர்ப்பதன் விளைவுகள் என்ன? என்பவைபற்றி ஆராய்கின்றனர்.

தென்னைப் பொருட்காட்சி நிலையம் ஒன்று இங்கு நிறுவப்படுமாம். தேங்காயைக் கொண்டு செய்யக்கூடிய உணவுப் பொருள்களை விற்கும் சிற்றுண்டிச் சாலையும் அமைந்தால் நலமாக இருக்கும். இலங்கையில் போல தென்னையையொட்டி துணைத்தொழில்களைத் தொடங்க இந்த நிலையம் ஆவன செய்யலாம்,

**அரசாங்க எள்விதைப் பண்ணை, வேப்பங்குளம்**

கடலை எண்ணெய், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் – இவற்றின் உற்பத்திக்கு உதவும் தரமான எள் விதைகளைப் பெருக்குதற்காக இந்த நிலையம் 1958-இல் தமிழ்நாடு அரசாங்கத்தாரால் தொடங்கப் பெற்றது.

இதற்கு வேண்டும் புதுவகை எள் விதைகள் பற்றிய ஆராய்ச்சி திண்டிவனம் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறுகிறது. அங்கு ஆராய்ச்சியாளர் அறிவிக்கும் முடிபுக்கு ஏற்ப, விதைகளைப் பெருக்கும் வேலை இப் பண்ணையில் நடைபெறுகிறது.

பட்டுக்கோட்டை வட்டத்தில் நன்செய்யிலும் ஒரு போகத்திற்குக் கடலை பயிரிடுகின்றனர்.

## வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணை, பட்டுக்கோட்டை

பட்டுக்கோட்டை அறந்தாங்கி வட்டங்கள் வானம் பார்த்த பூமியர்க இருந்தன. 1934-இல் காவிரி—மேட்டூர்க்கால்வாய் வந்த பிறகு இவ்வட்டங்களிலும் சில இடங்களில் 8 அடி (2.4 மீட்டர்) ஆழத்தில் கிணறுகளில் நீர் கிடைக்கிறது; நெல்லும் பயிரிடப்படுகிறது. (மாவட்டத்தின் ஏனைய வட்டங்களை நோக்க) வளம் குறைந்த இவ்வட்டங்களுக்குப் பொருத்தமான கடலை, கரும்பு, வாழை, மஞ்சள், நெல் வகைகள் இன்னின்ன என்று முடிவுசெய்ய 1935-இல் இந்தப்பண்ணை மாநில அரசாங்கத்தால் தொடங்கப்பெற்றது.

கரும்பு ஆராய்ச்சிக்குக் கடலூரிலும் வாழை ஆராய்ச்சிக்கு ஆடுதுறையிலும் தனித்தனியே பண்ணைகள் நிறுவப் பெற்ற பின், பட்டுக்கோட்டைப் பண்ணையில் நெல்வித்து ஆராய்ச்சியே முக்கிய இடம் பெற்றிருக்கிறது. ஆடுதுறை விதை அறந்தாங்கிப் பகுதிக்குப் பயன்படுவதில்லை. தண்ணீர்த் தட்டுள்ள நிலங்களுக்கு வேண்டும் முரட்டு விதை இங்கு பெருக்கப்படுகிறது.

வெண்டை, புடலை போன்ற காய்கறி விதைகள், நீண்ட இழைப்பருத்தி விதைகள் ஆகியனவும் இங்கு பயிரிடப்படுகின்றன.

இப்பண்ணையிலுள்ள உருண்டை வடிவமான நேப்பாளத்து எலுமிச்சை, பாக்குச்செடி, கவர்ச்சியான தோற்றமுள்ள மரவள்ளிக்கிழங்கு, பன்னீர் (மணமுள்ள) கொய்யா, ஊறுகாய்க்கும் சர்பத்துக்கும் பயன்படும் துறிஞ்சி, நீண்டு வளர்ந்த அகத்தி மரங்கள் நீலகிரி மரங்கள் காணத்தக்கவை. இப்பண்ணையின் பரப்பு 40 ஏக்கர். தஞ்சை திருச்சி மாவட்டங்களுக்கு வேண்டும் தென்னம்பிள்ளைகள் இங்கிருந்து அனுப்பப்படுகின்றன.

## கிராமிய விரிவுப் பணிக்கான பயிற்சி நிலையம்* (RETC) பட்டுக்கோட்டை

விவசாயப் பயிற்சி நிலையமாக இங்கு இருந்த நிலையம் கி. வி. ப. ப. நிலையமாக 1954–இல் மாற்றப் பட்டது. விவசாயம், கால்நடைகள், கதர் கிராமியத் தொழில்கள் பற்றி 50 பேருக்கு இங்கு ஈராண்டுகளுக் குப் பயிற்றுவிக்கப்படுகிறது. பட்டுக்கோட்டை விவசாய ஆராய்ச்சிப் பண்ணைக்கு எதிரில் அமைந் திருப்பதால் மாணவர்கள் அதையும் பயன்படுத்திப் பயனடைகின்றனர். இப்பயிற்சி நிலையத்திலும் 'மாதிரிப் பண்ணை' ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது; மாணவர்கள் வெளியூர்ப் பண்ணைகளுக்கும் செல்லு கின்றனர்.

இங்குள்ள மாதிரிப் பண்ணையில் **'கோவக்காய்'** என்னும் காய்கறி பயிராகிறது. இதைத் தெலுங்கில் தொண்டைக்காய் என்பர். பழுத்தால், இது சிவப்பாக இருக்கும். ஆனல் காயாகவே பயன்படுத்தப்படுகிறது. மங்களூர்ப் பகுதியில் இது மிகுதி. சமைத்தால், ஒரு பர்லாங்குச் சுற்றளவுக்கு இதன் மணத்தை நுகரலாம். 'கோவைக் கனி ஒத்த இதழ்' என்றும் 'பாவைதன் கோவை இதழ்' என்றும் புலவர்கள் புனைந்துரைப்பது இக்காயை உவமையாகு பொருளாகக் கொண்டே யாகும்.

365 நாளும் பயிரிடக்கூடிய ஒருவகைக் காயும் (COCCINEA) இங்கு படருகிறது. மூன்ரும் ஆண்டில் பலன்தரும் நேப்பாள இலுமிச்சை மரமும் மூன்ருண்டுக்

---

*இத்தகைய நிலையங்கள் கோயில்பட்டி, கல்லுப்பட்டி, ஆடுதுறை, பவானிசர்கர், கிருஷ்ணகிரி, ஆறணி ஆகிய இடங் களிலும் உள்ளன.

கொருமுறை தார்ப்போடும் மாமாங்க வாழையும் இங்கு இருக்கின்றன.

உணவு விடுதியில் புகையில்லாத "மகன்சுளா அடுப்பு" பயன் படுத்தப்படுகிறது. ஓர் அடுப்பிலிருந்து மூன்று அடுப்புகளுக்கு விறகு செல்லுகிறது. ஒன்று மிக நீளம். அடுத்தது சற்று உயரம். மற்றொன்று இன்னும் உயரம். பிறகு குழாய் வாயிலாகப் புகை மேலே செல்லு கிறது. எல்லாத் தீயும் உணவுப் பொருளுக்குப் பயன் படுகிறது; நெருப்பு வீணாவதில்லை.

### பட்டுக்கோட்டை

இந்நகரம் ஒரு கோட்ட ஆட்சித் தலைநகராகவும், வட்டத்தின் தலை நகராகவும் இருக்கிறது. திங்கட் கிழமையில் பெரிய சந்தை கூடுகிறது. கொம்பில்லாத மாடுகளும் கொசுக்களும் இங்கு மிகுதி. 1955க்குப் பிறகு சுற்றுப்புறத்தில் பாசன வசதி பெருகியிருக்கிறது. அதற்குமுன் இவ்வூரினர் பலர் மலாயா நாட்டுக்குச் சென்று கூலிகளாக வேலை பார்த்து வந்தனர். வியா பாரம் பெருகிவருகிறது. தஞ்சாவூருக்கும் இவ்வூருக்கும் பஸ் போக்கு வரத்து மிகுதி. தொழில்துறையில் இங்கு அரசாங்கம் நடத்தும் தீப்பெட்டித் தொழிற்சாலை மட்டுமே குறிப்பிடத்தக்கது. விவசாய ஆராய்ச்சிப் பண்ணையும், கிராமிய விரிவுப் பயிற்சி நிலையமும் இவ் வூருக்குப் புகழ்தருகின்றன. இவ்வூர் அரசியல் விழிச்சி யுள்ள ஊர். பல்லாண்டுக் காலம் தஞ்சை மாவட்டத்தின் முடிசூடா மன்னராக இருந்த நாடிமுத்துப்பிள்ளையும், பேச்சுத் துறையில் நிகரற்று விளங்கிய அஞ்சா நெஞ்சம் கே. வி. அழகிரிசாமியும், மாநிலத் தொழில் அமைச்சராக இருந்துவரும் ஆர். வெங்கட்டராமனும், நாவலர் இரா. நெடுஞ்செழியனும் இவ்வூரினரே. பல சமூகத் தினரும் வாழ்ந்தபோதிலும், கள்ளர்களும் கத்தோலிக்க

மதத்தைப் பின்பற்றும் உடையார்களும் இப்பகுதியில் குறிப்பிடத்தக்கவர்கள்.

பட்டுக்கோட்டையின் புகழ்பெற்ற கோயில் ஊருக்கு அப்பாலுள்ள நாடி அம்மன் கோயில். இக் கோயில் திருவிழாவில் வரகரிசி மாலை செய்து போடும் நிகழ்ச்சி உண்டு.

பட்டு மழவராயர் கட்டிய கோட்டையின் சிதைவு கள் இவ்வூரிலுள்ளன. பழைய கோட்டை என்ற பெயரே பட்டுக்கோட்டையாக மருவியது என்பர். இவ்வூரைச் சுற்றிலும் புளிய மரங்களும் பலா மரங்களும் மிகுதி. ஆற்றுக்கால் பாசனம் வந்த பிறகு, பலா காய்ப்பு குறைந்துவிட்டது.

**அதிராம்பட்டினம்:** பட்டுக்கோட்டையிலிருந்து 13 கி. மீ. தொலைவில் இது கடற்கரையிலுள்ள சிறு நகரம். இங்கு வாழும் 15,000 மக்களில் பெருந் தொகை யினர் முஸ்லிம்கள் ஆவர். பெரிய மசூதி, கல்லூரி, உப் பளங்கள், தேங்காய் எண்ணெய் ஆலை ஆகியன உள்ளன. மேட்டூர் கெமிகல் கம்பெனியைச் சேர்ந்த உப்பளம் ஒன்றும் இந்நகரிலுள்ளது. இவ்வூர்க் கந்தூரி விழா மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது. இவ்வூரினர் சிலர் செய்கோனில் பெரும்பொருளீட்டியுள்ளனர்.

இத்துறைமுகத்திலிருந்து 1940-க்கு முன்னர் இலங் கைக்கு அரிசி ஏற்றுமதியாயிற்று. இப்போது கொழும் புக்கு ஆடுகள் 'டிங்கி' என்னும் பாய்மரக் கப்பல் களில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சில சமயம் இங்கு முத்துக் குளிப்பு நடைபெறுகிறது. முத்துக் குளிக்க இராமநாதபுர மாவட்டத்துக் கீழக்கரையிலிருந்து மீனவர் வருகின்றனர். ஆழ்கடலில் மீன் பிடிக்க 'அதிராம் பட்டினம்' என்னும் இயந்திரக் கப்பல் பயன்பட்டு வருகிறது; பல்லாயிரம் பவுண்டு எடையுள்ள சுறு

மீன்கள் ஆண்டுதோறும் பிடிக்கப்படுகின்றன; மீன் எண்ணெய்யும் காய்ச்சப்படுகிறது.

அதிவீரராம பாண்டியன் பட்டினம் என்பதே அதிராம்பட்டினமாக மருவியது என்றும் அதிவீரராம பாண்டியன் (1562-1567) அமைத்த ஊர் இதுவே என்றும் கூறுவர். அவன் காலத்திய பீரங்கிமேடு ஒன்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. இப்போது இவ்வூரார் சிலர் ஊரின் பெயரை 'அதிரை' என்று குறிப்பிட்டு வருகின்றனர்.

**மருங்கப்பள்ளம்:** குருவிக்கரம்பைக்கும் நாடியத்திற்கும் இடையே மருங்கப்ப்ள்ளம் என்ற ஊர் இருக்கிறது. அங்கு ஒரு சிவன் கோவில் இருக்கிறது. அதிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து அந்தப் பகுதியில் "பசும் பொன்" எழுபது கோடி இருப்பதாகத் தெரிகிறது. இதற்கு ஆதரவாக இந்த வட்டாரத்தில் பொற்குட்டான் (தங்கம் உருக்கும்போது வீணுகும் தூள்) ஏராளமாக இருக்கிறது.

"காக்காய் மூக்கு நிழலிலே கண்டாலும் கம்மாளன் கண்ணிலே எழுபது கோடி பசும்பொன் படும்" என்ற ஒரு சொற்ருெடர் இங்கே வழங்குவதற்கேற்ப, மண் வெட்டும்போது வயல்களில் தங்கப்பொடிகள் ஒட்டிக் கிடப்பதைக் காணலாம். சோகை பிடித்தவர்களுக்கு இதை மருந்தாகப் பயன்படுத்துகிருர்கள்.

**ஏகணிவயல்** (எடுத்தணிவயல்): பட்டுக்கோட்டையிலிருந்து 10 கி. மீ. தொலேவில் பேராவூருணிக்குச் செல்லும் வழியில் இச்சிற்றூர் உளது. இது திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தது. ஆதீனத்தார் நிலங்களேச் சீர் செய்து திருவாவடுதுறை மக்கள் சிலரைக் குடியேற்றி, வளப்படுத்திப் புதிய ஊர் உண்டாக்கியுள்ளனர்.

1955–இல் பஞ்சாட்சர விநாயகர் கோயிலைக் கட்டியுள்ளனர். மின்சார விளக்குகளின் ஒளி கண்ணைப் பறிக்கும் தன்மையது. திருவாவடுதுறையிலிருந்து ஆவுடையார் கோயிலுக்குச் செல்லும் வழியிலிருப்பதால் இவ்வூர், ஆதீனத் தலைவரின் கண் பார்வையில் அமைந்திருக்கிறது.

**தம்பிக்கோட்டை :** தம்பிக்கு நல்லவன் கோட்டை என்ற பெயரின் சுருக்கம் இது. கடற்கரையிலிருந்து 8 கி. மீ. தொலைவிலுள்ளது. இவ்வூர் தென்னை வளம் மிக்கது. ஊர் கீழைக்காடு, மேலக்காடு, வடகாடு என்று மூன்று பகுதிகளுடையது. கீழைக்காடு திருத்தருப்பூண்டி வட்டத்தைச் சேர்ந்தது; மேலக்காடும் வடகாடும் பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ளன.

புயலால் மிகவும் சேதமடைந்த ஊர்களில் இதுவும் ஒன்று.

**பரக்கலாக் கோட்டை :** பட்டுக்கோட்டை முத்துப்பேட்டைச் சாலையில் இவ்வூர் உளது. இங்குள்ள ஆல மரமும் அதனடியிலுள்ள புது ஆவுடையார் கோயிலும் மிகப் புகழ் பெற்றவை.

**திருச்சிற்றம்பலம்:** இவ்வூரைச் சுற்றிய பகுதி 15–ஆம் நூற்றூண்டில் மாழவராயரால் ஆளப்பெற்றதாக இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. கோயிலில் ஏராளமான திருமணங்கள் நிகழ்கின்றன. இது சம்பந்தர் பாடல் பெற்ற தலம். இங்கே நடராசருக்கே முக்கியத்துவம் உண்டு.

**சேதுபாவா சத்திரம் :** புகழ் பெற்ற 'மனோரா' அருகே கடற்கரையிலுள்ள இச்சிற்றூரில் மராத்திய அரசர்கள் கல்லால் கட்டிய சத்திரமும் அநுமார் கோயிலும் உள்ளன; உப்பளங்களும் இருக்கின்றன.

அந்த அரசர்கள் தங்கள் குருவாக இருந்த சேதுபாவா பெயரால் இவ்வூரையும் சத்திரத்தையும் உண்டாக்கினர்.

**மதுக்கூர்** (மக்கள் தொகை 7,000)

பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள ஊர்களில் இது குறிப்பிடத் தக்க ஓர் ஊராகும். செவ்வாய்க்கிழமைச் சந்தையில் இங்கு பெரிய அளவில் வியாபாரம் நடை பெறுகிறது. கடல்கடந்த நாடுகள் பலவற்றுடன் இவ் வூரார் தொடர்பு கொண்டுள்ளனர். இங்கு வாழும் மக்களில் மூன்றிலொரு பங்கினர் முஸ்லிம்கள். கயிறு பின்னுவது, பாய் மிடைவது ஆகிய தொழில்கள் இங்கு சீராக நடைபெறுகின்றன.

**பேராவூருணி**

பத்து நிமிஷத்துக்கு எல்லா ரயில்களும் நிற்கும் ஒரு ரயில் நிலையம், ரயில் நிலையத்தை அடுத்துத் தபால், தந்தி, டெலிபோன் அலுவலகம், அதற்கு அணித்தாக வரிசை வரிசையாக அமைந்த கடைகளும் கடைத் தெருவும், எடுப்பான தோற்றமுள்ள கட்டடங்கள், அகலமான சாலைகள், இவ்வாறு அமைந்த ஓர் ஊரை—இது வரையிலே நான் கேள்விப்படாத ஊர்-பதினாயிரம் மக்கள் வாழும் சிறு நகரத்தைச் சில மாதங்களுக்கு முன் பார்த்தேன். எழில் மிகும் ஈழ நாட்டின் வளமிகு கண்டிச் சீமையை அந்தக் காட்சி நினைவுபடுத்தியது. ஆனால் நான் பார்த்த ஊர் அறந்தாங்கிக்கும் பட்டுக்கோட்டைக்கும் இடையேதான் உள்ளது என்பதை நினைத்தபோது வியப்பாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளில் தமிழ் நாட்டில் குறிப்பிட்ட சில இடங்கள் அடைந்துள்ள பெரு வளர்ச்சிக்கு அளவுகோலாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்குவது பேராவூருணி.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இவ்வூரில் ரயில் நிலையமும், ஒரு காப்பிக் கிளப்பும்தான் இருந்தன

வாம். சுற்றிலும் காடு. அதனால் ரயிலிலிருந்து இறங்குவோர் நலமாக வீடு போய்ச் சேருவோம் என்று நம்புவதற்கு இல்லை. அந்த இடத்திலே இன்று சுவிட்சர்லந்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பதைப் போல ரயில் நிலையத்துக்கு அடுத்து அஞ்சல் நிலையத்தைக் காண்கிறோம். அஞ்சல் நிலையத்திலிருந்து சில அடிகள் காலெடுத்து வைத்தால் அணி அணியாகக் கடைகள் உள்ளன. இந்தக் கடைகளுக்கெனப் பெரிய கட்டடங்களும் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்டடத்திலும் பல கடைகள் உள்ளன. இந்தக் காட்சியை இலங்கையில் "கடைப் போலிங்" என்பர். தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பதிய வாக்காளர் வரிசை முறையாக வாக்குச் சாவடியில் நின்று கொண்டிருப்பதுபோல், ஒவ்வொரு வகையான பொருளையும் விற்கும் கடைகள் தொகுப்பாக, பொருள் வாங்குவோருக்கு வசதியாக அமைந்துள்ளன என்பது இந்தச் சொல்லின் பொருள். கடைகள் மட்டும் இருப்பது சிறப்பாகி விடாது. சில கடைகளிலே நள்ளிரவுவரை கூட வியாபாரம் நடைபெறுகிறது. காவேரி மேட்டூர் வாய்க்கால் திட்டம் ஏற்பட்ட பிறகு இந்தப் பகுதியில் வளம் கொழிக்கிறது. நெல் வேளாண்மை மட்டுமின்றி, கடலையும், எள்ளும், பெரு அளவில் விளைகின்றன. சுற்றுக் கிராமங்களிலே வலுவான மிராசுதார்' பலர் இருக்கின்றனர். இதன் விளைவாக வியாபாரத்திற்கு நல்ல ஊர் என்று பேராவூருணி பெயர் வாங்கிவிட்டது. இதனால் அந்த ஊரில் இப்போது கட்டடம் கட்ட மனைவாங்க வேண்டுமானால் செண்டுக்கு 300 ரூபாய் கொடுக்க வேண்டும். மதுரைமாநகரின் புதிய குடியிருப்புகளின் இடவிலையைவிடக் கூடுதலான விலை இது.

பேராவூருணியிலிருந்து புதுக்கோட்டை, தஞ்சை, அறந்தாங்கி முதலிய இடங்களுக்குப்

பஸ் வசதி ஏற்பட்ருடிக்கிறது. முன்னர் ரயில் போக்கு வரத்து மட்டுமே இருந்தது. பத்து கி. மீ. தொலே வில் கடற்கரை இருப்பதாலும், காவிரி நீர் கிடைப் பதாலும், எங்கு பார்த்தாலும் தென்னந் தோப்புக் கள் நிறைந்திருப்பதாலும் பேராவூருணி, வாழ்வதற்கு ஏற்ற ஊராக இருக்கிறது. ‘தெற்கத்தியார்’ வேலே பார்க்கவும், குடியிருக்கவும் இங்கே வந்த வண்ணமாக இருக்கின்றனர். சாலே போடுவதற்குப் பயன்படும் சரளேக்கல் இப்பகுதியில் ஏராளமாகக் கிடைப்ப தால் அதையொட்டித் தொழில் நடத்பதுவர்களும் உள்ளனர். தென்னங்தோப்புக்கள் மிகுதியாக இருக் கின்றன.

பேராவூருணியில் இருப்பவை: ஓர் உயர்நிலேப்பள்ளி, பத்திரப்பதிவு அலுவலகம், பதின்மூன்று நெல் அறைக் கும் இயந்திரங்கள், ஒரு திரைப்பட மாளிகை, ஒரே ஒரு வாடகை வண்டி. (மீசைக்காரர் வண்டி என்ருல் இந்த வட்டத்தில் தெரியும்).

பேராவூருணியைத் தலேநகராகக் கொண்ட ஒரு வட்டத்தை ஏற்படுத்தும் திட்டம் அரசியலாரின் யோசனேயில் இருந்து வருகிறது. இப்போது பேரா வூருணிப் பகுதிக்கென ஒரு துணேத் தாசில்தார் பட்டுக் கோட்டையில் இருந்து வருகிருர். பேராவூருணியில் வாணிபத்தில் ஈடுபட்டு வகையாகப் பலர் பொருள் சேர்த்திருப்பதைப் பற்றிய ஒரு செய்தியைச் சொல்லா விட்டால் பேராவூருணி அறிமுகம் முற்றுப் பெருது. இங்கு நடைபெறும் திருமணங்களுக்கு அச்சிடப்பெறும் திருமண அழைப்பு மடலில் **“திருமணத்துக்கும், இரவு பெண் வீட்டில் பெண் பரிசத்துக்கும், தாங்கள் சுற்ற மும் நட்பும் சூழ வருகை தந்து, விருந்துண்டு, மொய் பெய்து, மணமக்களே வாழ்த்த”** வேண்டுவதாகக் குறிப் பிட்டிருக்கும். இவ்வாறு சேரும் மொய்ப்பணம் சாதா

ரணமாக 10,000 ரூபாய் இருக்குமாம். நல்ல பொருள் நிலையில் அல்லது செல்வாக்குடன் இருப்பவர்களுக்கு ரூ. 50,000, ஒரு லட்சம் கூடக் கிடைக்குமாம். மொய்ப் பணம் எழுதியவர்களுடைய வீட்டில் ஒரு மங்கல நிகழ்ச்சி நடைபெறும்போது அதே தொகையை மீண்டும் திருப்பிக் கொடுக்கவேண்டுமாம். மொய்ப்பணம் எழுதிய ஒருவருடைய வீட்டில் மூன்று ஆண்டுகள் வரையில் ஒரு நிகழ்ச்சியும் நிகழா விட்டால், பணத்தை அவரிடம் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமாம். எனவே இது வட்டி யில்லாக் கடன். ஆனால் இந்த ஏற்பாட்டின் வாயிலாக ஓரளவு மூலதனம் சேகரித்துப் புதிய தொழிலைத் தொடங்குவதற்குப் பலருக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஓரளவு பொருள் வசதி உடையவர் கூட இப் பகுதியில் உடனே ஒரு வியாபாரத்தைத் தொடங்காமல், முதலில் தங்கள் பணத்தைப் போட்டு ஒரு வீடு கட்டுவார்களாம். பின்னர் அந்த வீட்டில் குடிபுக ஒருவிழா நடத்துவர். மொய்ப்பணம் வந்து விழும். அதைப் பயன்படுத்தித் தொழில் நடத்துவர். இந்த ஏற்பாட்டை ஏனைய ஊர்களிலும் பின் பற்றலாகாதா ?

பேராவூருணி வரை போய் மனோராவைப் பார்க்காமல் யாராவது வந்தால் அவர்களைக் காசிக்குப்போய்க் கங்கையைக் காணாதவர் பட்டியலில் சேர்க்கவேண்டும். பேராவூருணியிலிருந்து ஆறு மைல் தொலைவில் கடற்கரையில் இருக்கிறது, சேதுபாவா சத்திரம் என்ற சிற்றூர். தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர அரசர்களால் கடற்கரை ஓரத்தில் சேதுரஸ்தா என்ற இராமேசுவரம் சாலை போடப்பட்டு, அந்தச் சாலைநெடுக மூன்று மைலுக்கு ஒரு சத்திரம், மடம், தண்ணீர்ப் பந்தர், கோயில் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய சத்திரங்களில் ஒன்றையொட்டி அமைந்த ஊர் சேதுபாவா சத்திரம். அங்குள்ள கருங்கல் கட்டடமும் சத்திரத்தைச்

சேர்ந்த ஏனைய பகுதிகளும் இப்போது பேணுவார் இன்றி, காண்போர் மனம் வருந்தத்தக்க நிலையில், இருக்கின்றன. சேதுபாவா சத்திரத்திலிருந்து ராஜாமடம் செல்லும் வழியில் இரண்டுமைல் தொலைவில் மனோரா இருக்கிறது. அந்த இடத்தை 'சாலுவ நாய்க்கன் பட்டினம்' என்றும் கூறுவர். வண்டியில் சென்றால் 100 கெஜ தூரம் வயலுக்குள்ளே நடந்து மனோராவை அடைய வேண்டும். 'தள்ளு காற்று' அடித்தால் சேதுபாவா சத்திரத்திலிருந்து படகிலேயே சென்று மனோரா வாயிலில் இறங்கலாம்.

மனோரா என்பது தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன் கட்டிய மனோரம்மியமான ஒரு கோட்டை. 1814இல் நெப்போலியனைத் தோற்கடித்து ஆங்கிலேயர் வெற்றி அடைந்ததற்கு நினைவுச் சின்னமாக அமைக்கப் பெற்ற வெற்றிக் கோபுரம். இந்தக் கோபுரம் அமைந்துள்ள இடமே இயற்கைச் சிறப்புடையது. மனோராவுக்குத் தெற்கேயும் வடக்கேயும் ஒரு மைல் தொலைவுக்குக் கடல் உள்நாட்டுக்குள் பிள்ளையாரின் வயிறு போல் துருத்திக் கொண்டிருக்கிறது. இதனால் இந்த இடத்துக்குப் பிள்ளையார்குடா என்று பெயர்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் வெளிப்புறத்திலிருப்பதைப் போன்ற ஓர் ஆழகான அகழி, அகழிக்கு உள்ளே கற்கோட்டை, கோட்டையின் உள்ளேயிருந்து இயக்கக்கூடிய கனமான இரும்புச் சங்கிலிகளோடு கூடிய மடக்குப்பாலம், மடக்குப் பாலத்தைக் கடந்ததும் துப்பாக்கிகள் வைக்கக் கூடிய கொத்தளங்கள், அவற்றிற்கு அருகே போர்க்கருவிகள் வெடி மருந்து சேமிக்கும் இடம், போர் வீரர் பதுங்கி நிற்கவோ ஓய்வு கொள்ளவோ பயன்படும் வளைவு மண்டபங்கள், இவற்றுக்குட்பட்ட ஓர் இடத்தின் நடுவே

வானுயர்ந்து ஓங்கி நிற்கும் ஒரு கோபுரம். கீழிருந்து மேல்வரை எட்டுப்பட்டையாக அமைந்த இக் கோபுரமே மனோரா. இப்போது மனோராவைப் பார்ப்பவர் கண்களில் முக்கியமாகப் படுவது யார் யார் அந்த இடத்திற்கு வந்து சென்றிருக்கின்றனர் என்பதுதான். வருகை புரிவோர் தங்கள் பெயரையும் முகவரியையும் குறிக்கத்தனியான ஒரு பதிவேடு (Visitors Book) வைக்கப்படாததால் குருவிக்கரம்பை சுப்பையா முதல் பூனைக்குத்தி உயர் நிலைப்பள்ளி மாணவர் இறுதியாக எல்லோரும் சுவர் களிலும் கதவுகளிலும், தங்கள் பெயர்களைப் பெரிதும் முயன்று கிறுக்கியும் பதித்தும் வைத்திருக்கிறார்கள். மனோராவை அமைத்த சரபோஜியின் பெயர் மறைந்தா லும் இவர்கள் பெயர் மறையாது.

மனோராவின் மாடிகளுக்குச் செல்வதற்கு ஏணிப்படி இருக்கிறது. ஏணிப்படிவரை உள்ள உயரம் ஏறத்தாழ 33 அடி; அதற்கு மேலே உள்ள ஏழு மாடிகளின் உயரம் 80 அடி; 113 அடி உயரம் சென்று உச்சியை அடைய வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன் இங்கே நுழைவ தற்கு ஓர் அணைக் கட்டணம் வைத்திருந்தனர். அப்போது மனோராவின் சுவர்கள் கண்ணாடிபோல் பார்ப்பவர் முகத் தைக் காட்டின. இப்போது அவையும் பாழ்படுத்தப் பட்டிருக்கின்றன.

இந்த இடம் 150 ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறு துறைமுகமாக இருந்ததாகவும், கப்பல்களைப் பழுது பார்க்கும் தொழிற்சாலை இங்கு இருந்ததாகவும், இங் கிருந்து நாகூர், மீமிசல், கோடிக்கரை ஆகிய ஊர்களுக் குக் கப்பல்கள் சென்று வந்ததாகவும், மராத்திய மொழியி லுள்ள பல நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இத்தனை சீரும் சிறப்பும் பெற்ற இடம் இப்போது எங்கிருக்கிறது என்று கூடப் பலருக்குத்தெரியாது.

கடலோரத்தில் இருந்தபோதும், புயலால் ஒரு சிறிதும் பாதிக்கப்படாத பெருமைக்கு உரியது மனோரா. அது மட்டும் அன்று, புயற் காலத்தில் குடிசை இழந்தவர் களுக்கெல்லாம் தஞ்சம் தந்தது மனோரா. 1958-ல் மனோராவுக்கு அருகே ஒருவர் கிணறு வெட்டியபோது ஈராயிரம் இரும்புக் குண்டுகளை எடுத்தார்: அவை ஒவ்வொன்றும் 4 பவுண்டு, 12 பவுண்டு, 22 பவுண்டு, இத்தகைய எடைகள் உள்ளனவாக இருந்தன. மறை வாக விற்க முயன்றபோது அரசாங்க அலுவலர் அவற் றைக் கைப்பற்றினர். புதை பொருள் ஆராய்ச்சியாளரின் கடைக்கண் கடுகளவாவது மனோராவில் படுமானல் பல புதையல்களை எடுக்கலாம்; மனோராவையும் நல்ல நிலையில் வைத்திருக்கலாம். ஆனல் அதற்கு இடை யூருக இருப்பது மனோராவைப் பற்றிய உரிமைப் போர். தஞ்சை அரச குடும்பத்தின் வழித் தோன்றல்களைச் சேர்ந்தது மனோரா: நியாயமான ஒரு விலையை அவர் களுக்குக் சொடுத்து மாநில அரசியலார் மனோராவை ஒப்புக் கொண்டு, அதைப் பேணிச் செம்மையான முறையில் வைத்திருக்கவேண்டும். மனோரா 150 ஆண்டு களுக்கு முன்தான் கட்டப்பட்டதால் புராதனச் சின்ன மாகக் கருதுவதற்கில்லை என்றும், முழுதும் இடிய இன் னும் சில நூறு ஆண்டுகள் ஆகும் என்றும், அப்போது இதைப் புராதனச் சின்னமாகக் கருதி ஒப்புக்கொள்வ தாகவும் எண்ணுவது விந்தை! மனோராவைப் போன்ற ஒரு நினைவுச் சின்னம் அமெரிக்காவிலிருந்தால் அதைப் பேணுவதற்காகக் கணக்கற்ற பொருளைச் செலவிட் டிருப்பர். இப்போது மனோராவுக்குப் போவதற்குப் போக்கு வரத்து வசதிகூட இல்லை. தெரிந்த நண்பர்கள் இருந்தால்தான் இளநீராவது கிடைக்கும். நாம் இந்தி யாவில் இருக்கிறோம். அமெரிக்காவில் இல்லை.

## 4. அறந்தாங்கி வட்டம்*

இது தஞ்சை மாவட்டத்தின் தென் கோடியில் இராமநாதபுர மாவட்டம், முன்நாள் புதுக்கோட்டை அரசு ஆகியவற்றின் எல்லையில் இருக்கிறது. 1910–ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டை வட்டத்தின் ஒரு பகுதி அறந்தாங்கி வட்டம் ஆயிற்று. 1929-இல், இராமநாதபுர மாவட்டத்திலிருந்து 24 கிராமங்கள் இவ்வட்டத்தில் சேர்க்கப்பட்டன.

இவ்வட்டத்தின் பரப்பு 1000 சதுர கி. மீ. ; மக்கள் தொகை ஏறத்தாழ ஒன்றே முக்கால் லட்சம் ஆகும். இம்மாவட்டத்தில் மக்கள் நெருக்கடி குறைந்த வட்டம் இதுவே; இந்நிலைக்குக் காரணம் வளக் குறைவேயாகும்.

பாம்பாறு, வெள்ளாறு என்ற இரு காட்டாறுகள் மட்டும் இவ்வட்டத்தில் ஓடுகின்றன. பல ஆண்டுகளுக் கொருமுறை வெள்ளப் பெருக்கெடுப்பதும் ஏனைய ஆண்டுகளில் தண்ணீர் சிறிதுமின்றி வறண்டு கிடப்பதும் இந்த ஆறுகளின் இயல்பு.

பாம்பாறு, தஞ்சை-இராமநாதபுர மாவட்டங்களின் எல்லையாக இருக்கிறது. வெள்ளாறு, அறந்தாங்கி வட்டத்திலுள்ள அறந்தாங்கி வட்டாரம், ஆவுடையார் கோயில் வட்டாரம் ஆகிய இரண்டுக்கும் எல்லையாக அமைந்துள்ளது.

புது ஆறு என்று சொல்லப்படும் கல்லணைக் கால் வாய், மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு, இவ் வட்டத்தில் வெட்டப்பட்டது. இதனால் வடபகுதியில் 25,000 ஏக்கர் நிலம் பயனடைந்திருக்கிறது. பிற பகுதி களில், பாசன வசதிகள் ஒரு சிறிதும் இல்லை. ஆவுடை யார் கோயிலருகே, கருங்காடர் என்னுமிடத்தில் மூன்று

---

* இவ்வட்டத்தைப் பற்றிய சில செய்திகளை உதவியவர் திரு. அப்துல் குத்தா, எல். சி. ஈ.

இலட்சம் ரூபாய்ச் செலவில் ஓர் அணைகட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது. தண்டலை, திருமருதூர், மீமிசல், மணல்மேற்குடி என்னும் இடங்களிலும் சிறிய அணைகள் கட்டுவது பயன்தரும். மின்சார வசதியில்லாத சிற்றூர்கள் இவ்வட்டத்தில் ஏராளமாக உள்ளன. அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவு. பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறையிலும் இது பிற்பட்ட பகுதியாகும். எல்லா வகையிலும் அண்டையிலுள்ள இராமநாதபுர மாவட்டத்தின் சாயலை இங்கே காணலாம். பாலைவனம், பெருங்காடு, காரணிக்காடு என்னும் ஊர்ப் பெயர்களும் இயற்கை நில அமைப்பை இயம்புகின்றன.

இது கடலோர வட்டமாகும். எனவே உப்பங்கழிகள் மிகுதி. இவ்வட்டத்தின் கடற்கரை 33 கி. மீ. தொலைவு அளவினது. அம்மாபட்டினம், கட்டுமாவடி, கோட்டைப்பட்டினம், மணல்மேற்குடி, மீமிசல் என்னும் இடங்களில் சிறு துறைமுகங்கள் இருந்தன. அவை யாவும் இப்போது மூடப்பட்டுவிட்டன.

கடற்கரையோரமாக, இராமேசுவரச்சாலை செல்லுகிறது. இதைச் சீராக்கும் வேலை மூன்றும் திட்ட காலத்துக்குள் முடிவடைந்துவிடும். ஏறத்தாழ இருபது இடங்களில் இச்சாலைமீது பாலங்கள் கட்டியாக வேண்டும்.

மாவட்டத்தின் பிற பகுதிகளைப் பார்க்க இவ்வட்டத்தில் சாலைகளும் சாலைப் போக்குவரத்து வசதிகளும் குறைவாக உள்ளன. மாயூரத்திலிருந்து காரைக்குடிக்குச் செல்லும் இரயில் பாதை இவ்வட்டத்தின் வழியே அமைந்திருக்கிறது.- பாலங்கள் உறுதியாக இல்லாமையாலும் இரயில் இயந்திரங்கள் சிறிய அளவினதாக இருப்பதாலும், இவ்வழியில் செல்லும் இரயில்கள் ஆமை வேகத்தில் செல்லும் அருமை நாடறிந்ததாகும்.

அருகேயுள்ள இராமநாதபுர மாவட்டத்துக்கும் தொலைவிலுள்ள கேரளத்துக்கும் இவ்வட்டத்திலிருந்து நெல்லும் அரிசியும் செல்லுகின்றன. பல இடங்களுக்குச் செம்பூரான்கல் ஏற்றுமதியாகிறது. தேங்காய், வைக்கோல், விறகு, கருவாடு, உப்பு ஆகிய பொருள்கள் புதுக்கோட்டை, இராமநாதபுரம், மதுரைப் பகுதிகளுக்குச் செல்லுகின்றன. மிளகாய் விளைவு இங்கு மிகுதி. சந்தைகளில் சென்று வியாபாரம் செய்பவர்கள், இவ்வட்டத்தில் ஏராளமாக இருக்கின்றனர். மணல்மேற்குடி, அரசநகரி, வட்டாணம், தீர்த்ததானம் என்னும் ஊர்களில் பெரிய உப்பளங்கள் உள்ளன.

இவ்வட்டத்தில் குறிப்பிடத்தக்க ஊர் மாணிக்கவாசகரால் புகழ்பெற்ற திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயிலாகும். இக்கோயிலையொட்டி ஆவுடையப்பன் ஆவுடையம்மாள் என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன. மாணிக்கவாசகர் என்ற பெயர் ஆடவர்க்கும் மாணிக்கத்தம்மாள் என்ற பெயர் பெண்களுக்கும் மாணிக்கம் என்ற பெயர் இரு பாலார்க்கும் இடப்படுகிறது. இவ்வட்டத்தின் கடலோரப் பகுதிகளிலும் அறந்தாங்கி நகரிலும் முஸ்லிம்கள் ஓரளவு உள்ளனர். அரேபியாவிலிருந்து குதிரைகள் விற்பதற்குச் சோனகர் இங்கே வந்தனர் என்பது மாணிக்கவாசகர் வரலாற்றுல் அறியப்படுகிறது.

கடற்கரை நெடுக, தென்னையும் பனையும் மிகுதியாக உள்ளன. கலையழகு மலிந்த கலங்களை நிறுவிய பழங்கால ஓடாவிகளின் வழிவந்தவர் இங்கே வாழ்ந்து ஆழ்கடலில் மீன் பிடித்து வருகின்றனர்.

**அறந்தாங்கி** (மக்கள் தொகை *10,000*)

இவ்வூர் அறந்தாங்கி வட்டத்தின் தலைநகர். பட்டுக்கோட்டை, காரைக்குடி, புதுக்கோடடை ஆகிய நகரங்

களிலிருந்து இவ்வூரை அடையலாம். பட்டுக்கோட்டையிலிருந்து இவ்வூருக்கு 1903–இலும் காரைக்குடியிலிருந்து இவ்வூருக்கு 1953-இலும் இரயில் பாதை போடப்பட்டது. புதுக்கோட்டை இவ்வூரிலிருந்து 33 கி. மீ. தொலைவிலும், திருச்சி மாவட்டத்தின் எல்லை 6 கி. மீ. தொலைவிலும் இருக்கின்றன. வெள்ளாற்றின் கரையில் இவ்வூர் அமைந்திருக்கிறது. *

இவ்வூருக்குப் 'பொய்கை நல்லூர்' என்ற பெயரும் வழங்கி வந்திருக்கிறது. அறந்தை என்னும் அரசன் இவ்வூரை ஆண்டதாக ஆராய்ச்சியாளர் சதாசிவப் பண்டாரத்தார் கூறியிருக்கிறார்.

இவ்வூரில் ஓர் அரண் (கோட்டை) பாழ்பட்டுக் கிடப்பதால் கோட்டையைத் தாங்கியவன் என்ற பொருளில் அரண்தாங்கி என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் சிலர் கருதுவர். இக்கோட்டைக்குள் உள்ள இடத்தை 1910 அளவில் ஏலத்துக்கு எடுத்து, அங்கே சில நூறு வீடுகள் கட்டப்பட்டுள.

இராமேசுவரம், கன்னியாகுமரி போன்ற ஊர்களுக்குப் பாலை நிலமாகிய இவ்வழியே சென்றவர்களிடம் அறநெறிப்படி நடந்துகொண்டவர்கள் அறந்தாங்கி வாழ்வோர் ஆயினர் என்ற கருத்தும் வெளியிடப் பெற்றிருக்கிறது. நம்மாழ்வாரின் நான்காவது பாட்டனரின் பெயர் அறந்தாங்கியார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்தில் அறந்தாங்கியை 'அறந்தாங்கித் தொண்டைமான்கள்' என்ற சிற்றரசர்கள் ஆட்சி புரிந்தனர்; பாழடைந்துள்ள கோட்டையைக் கட்டியவர்கள் இவர்களே. அறந்தாங்கியில்

---

* தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வெள்ளாற்றின் கரையிலும் ஓர் அறந்தாங்கி உண்டு.

நடைபெற்ற ஒரு போரில் பல்லவர் படைத் தலைவரைப் பாண்டியவர் தோற்கடித்தனர்.

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சோழர் எழுச்சி பெற்றனர். இங்குள்ள இராஜேந்திரச் சோழீச்சுரம் அக்காலத்தில் கட்டப்பெற்றதாகும். 1514 முதல் 1569 வரை அறந்தாங்கியை ஆண்ட பொன்னம்பலநாத தொண்டைமான், ஈழநாட்டின்மீது படையெடுத்து அதனை ஏழு நாட்களுக்குள் வென்ற பெருமைக்குரியவன் ஆவான். 17-ஆம் நூற்றாண்டு முதல் ஆங்கில ஆட்சி அமையும்வரை இப்பகுதி இராமநாதபுரம் சேதுபதிகளுக்குட்பட்டிருந்தது.

## ஆவுடையார் கோயில்

ஆவுடையார் கோயில், ஆளுடையார் கோயில், திருப்பெருந்துறை என்ற பெயர்களுடைய இத்தலம் தமிழ் நாட்டில் இது ஒன்றேயாகும்.

இவ்வூர் அறந்தாங்கி இரயில் நிலையத்திலிருந்து 16 கி. மீ. தொலைவில் வெள்ளாற்றின் கரையில், கடற்கரையிலிருந்து 16 கி. மீ. தொலைவில் இருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்குமுன் இங்கு துறைமுகம் இருந்ததாகவும் அரபுக்குதிரைகள் இங்கேயே வந்திறங்கியதாகவும் காலப்போக்கில் நிலப்பகுதிகூடி, கடல் தள்ளிப் போய் விட்டதாகவும் சிலர் கூறுவர். தஞ்சையிலிருந்தும் காரைக்குடியிலிருந்தும் இவ்வூருக்குப் ‘பஸ்’ வசதி உண்டு.

இக்கோயிலின் தனிச்சிறப்புக்கள் கூர்ந்து காண வேண்டுவனவாகும். அவையாவன:

(1) சுவாமி, அம்மன், நந்தி உருவங்களும் கொடி மரமும் கிடையாது.

(2) சந்நிதியில் சூரிய ஒளி ஆண்டு முழுவதும் விழுகிறது.

(3) இங்கு மேளம் வாசிப்பது கிடையாது. அதற்குப் பதிலாக சங்கு, திருச்சின்னம் என்னும் இரட்டைப் பித்தளைக் குழாய் வாத்தியங்களை உவச்சர் வாசிக்கின்றனர்.

(4) பள்ளி அறை, பிறகோயில்களிற்போலத் தனி அறையாக இல்லாமல், வெளிப்பார்வையில் இருக்கிறது.

(5) நவக்கிரகங்கள் தூண்களிலேயே காணப்படுகின்றன.

(6) பல சாதியாரும் பூசை செய்யும் திருவுருவங்கள் உள்ளன. குருந்தமூல குருவுக்குச் சோழிய பிராமணரும், ஏனைய சந்நிதிகளுக்குச் சிவாச்சாரியாராகிய பிராமணரும், நரியைப் பரியாக்கிய குதிரைச் சேவகருக்கு ஓதுவாரும், வீரபத்திரருக்குக் கொத்தனும் பூசை நடத்துகின்றனர்.

(7) பிறகோயில்களில் பட்டை சாதத்துக்குப் பச்சரிசி சமைக்கின்றனர். இங்கு புழுங்கலரிசியைத்தான் பயன்படுத்துகின்றனர். நைவேத்தியத்துக்கு நாள் தோறும் 108 படி அரிசி செலவாகிறது.

(8) மடப்பள்ளியில் நாள்தோறும் புதிதாகத் தீ மூட்டுவதில்லை. பல ஆண்டுகளுக்குமுன் இடப்பட்ட நெருப்பே இன்னும் எரிகிறது.

சிவலிங்கத்தின்கீழே பீடமாக இருக்கும் பகுதிக்கு ஆவுடையார் என்று பெயர். லிங்கம் இன்றி ஆவுடையார் மட்டுமே இருப்பதால் இத்தலம் ஆவுடையார் கோயில் என்று பெயர் பெற்றது. இஃது மாணிக்கவாசகர் கட்டிய கோயில். இங்கேதான் அவர் உபதேசம் பெற்றார். இக்கோயிலில் வாயில் காவலரும் அவரே.

இங்குள்ள இறைவன் ஆத்மநாதர்; இறைவி யோகாம்பிகை. ஆனல் ஈசனே, அம்மையோ எவ்வித உருவத்திலும் இங்கே இல்லை. இதனல்தான்,

'அன்பருக் கன்பனே
யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே
தோன்ருப் பெருமையனே'

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடினர். திருவாசகம் எழுதுவதற்கு மூலகாரணமாக இருந்த தலம் இதுவே. சிவபெருமான் நரியைப் பரியாக்கியதும் இவ் வூரிலேயே யாகும்.

இக்கோயிலின் முக்கிய சந்நிதி மாணிக்கவாசகர் சந்நிதியே. அமைச்சர் கோலத்திலும் துறவுக்கோலத் திலும் அவருடைய உருவங்கள் உள்ளன.

சிற்பச்சிறப்பு: சிற்பக்கலையின் சிறப்பிடம் என்று ஆவுடையார் கோயிலைச் சொல்லலாம். ஒரே கல்லில் அமைந்த பெரிய குதிரைச்சிலையொன்று இருக்கிறது. உயரமும் அகலமும் மூன்றுமீட்டர் அளவினதாக இருந்தும் ஒவ்வொரு சிறுபகுதியும் மிக நுணுக்கமாக வேலை செய்யப்பட்டிருக்கிறது.

நடனமண்டபத்திலுள்ள நாட்டியப் பெண்ணின் உருவமும், வீரபத்திரனுடைய சிலையும், அவன் தோழன் ஒருவனுடைய சிலையும், சிறந்து விளங்கும் கலைச்செல்வங் களாகும். குறிசொல்லும் குறத்தியின் சிலை, ரதிமன்மதன் சிலை, செருப்பு – தலைமயிர் 'பாணி'கள் ஓராயிரம் ஆண்டு கட்கு முன் எவ்வாறிருந்தன என்பதைக் காட்ட இரண்டாம் பிரகாரத்திலுள்ள சிற்பம் ஆகியன உயிர் பெற்ற ஓவியங்களாகும்.

இவற்றுக்கெல்லாம் மிக உயர்ந்த வேலைப்பாடு **கொடுங்கை** என்ற எழுதகத்தில் காணப்படுகிறது.

உத்தரம், மேற்கூரை முதலிய யாவும் தனிக் கல்லில் பொளியப்பட்டுள்ளன. ஒட்டுப்பலகைபோன்றமென்மை யான மரத்தில் மட்டுமே செய்யக்கூடிய வேலைகளைக் கல்லில் செய்யும் வன்மைபெற்ற நுண்ணிய கலைஞர்கள் தமிழ்நாட்டில் இருந்தனர் என்ற உணர்வு கொடுங் கையைக் கண்டவுடன் ஏற்படும். சிற்பம், கோபுரவேலை பற்றிய உடன்பாடு எழுதும்போது, 'ஆவுடையார் கோயில் கொடுங்கை, திருவீழி மழலை வௌவால் நெற்றி மண்டபம் நீங்கலாக எந்த வேலையையும் செய்வோம்'' என்று பத்திரங்களில் குறிப்பிடுவர்.

'ஆவுடையார்கோயில் அடங்கலுக்குப் புறத்தி, என்ற பழமொழியும் நாட்டில் வழங்கி வருகிறது. அத் துணைச் சிறப்பான திருப்பணியும், அழகிய வேலைப்பாடு களும், (ஆன்மநாத மண்டபம், அருந்த மண்டபம் அமுது மண்டபம், சுந்தரபாண்டியன் மண்டபம், தில்லை மண்டபம், கனகசபை என்னும்) ஆறு மண்டபங்களும் இக்கோயிலில் உள்ளன.

**திருவிழாக்கள் :** ஆனித் திருமஞ்சனத்தில் திருக் கோவையார் திருவிழாவும், மார்க்கழித் திருஆதிரையில் திருவெம்பாவைத் திருவிழாவும் இங்கு நிகழும். உரிய நாட்களில் அந்தந்த நூல்களை ஓதுவார் படித்து முடித்த பிறகே தீப ஆராதனை நடைபெறும்.

மார்கழி ரோகணியில் மாணிக்கவாசகருக்குத் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. எல்லா விழாக்களிலும் மாணிக்கவாசகரின் திருவுருவத்தைத்தான் வலமாக எடுத்துச்செல்லுகின்றனர்.

**கட்டுமாவடி**

இது கடலோரத்தில் இருக்கிறது. இங்கு பல உப்பளங்கள் உள்ளன. இவ்வூர் உப்பு வெண்மை யானது. மீன்பிடி தொழிலும் இங்கு உண்டு.

**பஞ்சாத்தி**

அறந்தாங்கியிலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள ஊர். இங்கு பெரிய ஏரி இருக்கிறது. வளமான ஊராக இருப்பதால், இரண்டு போகம் நெல்விளையும் நிலங்கள் உள்ளன. பஞ்சத்தை ஆற்றிய ஊராகையால், பஞ்சாத்தி என்று பெயரேற்பட்டது.

**பொன்பற்றி**

இவ்வூரின் பெயர் பொன் பெயர்த்தி என்று அறிஞர் சிலர் கூறுவர். பழங்காலத்து அரசு ஒன்றின் கருவூலம் இங்கிருந்ததாகவும் இதிலிருந்த ஏராளமான பொன்னைப் பகைவீரர் பெயர்த்துக்கொண்டு சென்றதாகவும் அதனால் பொன் பெயர்த்தி என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் கருதப்படுகிறது. மக்கள் வழக்கில் பொன்பேத்தி என்றும் இவ்வூர் குறிப்பிடப்படுகிறது.

ஆவுடையார் கோயிலிலிருந்து திருப்புனல் வாயிலுக்குச் செல்லும் வழியில் இவ்வூர் இருக்கிறது.

இவ்வூரினரான புத்தமித்திரர், 11-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பிய தமிழ் நாட்டுப் பேரறிஞர் ஆவார்; வீர ராஜேந்திரச்சோழனின் வேண்டுகோளுக்கிணங்க, ‘வீரசோழியம்’ என்னும் இலக்கண நூலை இவர் இயற்றியுள்ளார். இவரால் குறிக்கப் பெற்ற பொன்பற்றிக் காவலன் என்ற சிற்றரசன் வாழ்ந்த கோட்டையின் சிதைவுகளை இவ்வூர்க்கு வெளிப்புறத்தே இன்றுங் காணலாம். வானம் பார்த்த பூமியாக இருந்தும் இவ்வூரில் ஓரளவு நெல் வேளாண்மை உண்டு.

**மணல்மேற்குடி**

கடற்கரையிலுள்ள ஊர்; மீனவர் வாழ்கின்றனர்; உப்புக் காய்ச்சும் தொழிலும் நடைபெறுகிறது. கூன்

பாண்டியனின் அமைச்சராக இருந்த குலச்சிறை நாயனர் பிறந்த ஊர் இதுவே.

**மீமிசல்**

இவ்வட்டத்தின் தென்கோடியில் கடற்கரையில் இராமநாதபுர மாவட்ட எல்லையில் இவ்வூர் இருக்கிறது. இவ்வூர்வரை பஸ்கள் செல்லுகின்றன. ஒருசில பாலங்களைக் கட்டினல் இங்கிருந்து 20 கி. மீ. தொலைவிலுள்ள தொண்டிக்குச் செல்லலாம்.

மீமிசல் என்பது மீன்பூசல் என்னும் சொல்லின் மருஉ. இங்குள்ள மீனவர் காற்றின் வேகத்தில் பெரிய பாய்களை உயர்த்தி இயந்திரப்படகுகளைவிட விரைவாகத் தங்களுடைய படகுகளை நுட்பமாக ஓட்டிக் கேலா, வஞ்சிரம், வாளை போன்ற மீன்களைப் பிடிக்கிறார்கள். எனவே மீன்பூசல் என்பது காரணப்பெயர் ஆகும்.

**வடக்கூர்**

ஆவுடையார் கோயிலருகே வெள்ளாற்றின் தென் கரையோரமாக வடக்கூர் கைலாசநாதர் கோயில் இருக்கிறது; கோயிலுக்கு எதிரிலுள்ள வயல் '**கீழ்நீர்காட்டி**' எனப்படுகிறது. பிற இடங்களில் தண்ணீர்த்தட்டு இருப்பினும் இங்கு இன்றும் என்றும் தண்ணீர் இருக்கிறது.

நம்பியார்களின் நிலத்தைக் குறும்ப அரசன் வந்து பற்றிக்கொண்டபோது அந்த நம்பியார்களின் குழந்தைகட்குப் பாடம் சொல்லிக்கொடுத்த கிழவேதியர் தம் நிலம் என்பதற்கு அடையாளம் கூற, 'வெட்டியவுடன் இங்கு தண்ணீர் வரும்' என்றாராம். இச்செய்தி திருப்பெருந்துறைப் புராணத்திலும் திருவிளையாடற் புராணத்திலும் முறையே மீனாட்சிசுந்தரம் பிள்ளையாலும் பெரும்பற்றப் புலியூர் நம்பியாலும் குறிக்கப்பெற்றுள்ளன. இதைப் பற்றிச் செப்புப்பட்டயங்களும் உண்டு.

## 5. கும்பகோணம் வட்டம்

### கும்பகோணம்

தமிழ் நாட்டின் மிகப் பழமையான ஊர்களுள் கும்பகோணமும் ஒன்று. இது ஏழாம் நூற்றாண்டில் தஞ்சை மாவட்டத்தின் தலைநகராக இருந்து வந்தது. 1866-இலேயே இங்கு நகராண்மைக் கழகம் ஏற்பட்டது. சென்னைக்கும் திருச்சிக்கும் இடையே இங்குதான் வியாபாரம் மிகுதியாக நடைபெறுகிறது. ஒரு லட்சம் மக்கள் இவ்வூரில் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் எந்த ஊரிலும் கும்பகோணத்தைப் போன்று சன நெருக்கடி கிடையாது. எட்டு கி. மீ. சுற்றளவுக்குள் 150 கோவில்களும் வளம் கொழிக்கும் நிலங்களும் இருப்பதால் இந்த ஊர் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

இவ்வளவு சிறப்புக்கள் இருந்தபோதிலும், இந்த ஊரின் பெயரைக் குறிப்பிடுவதற்குச் சிறிது தயக்கம் ஏற்படுகிறது. கும்பகோணம் என்ற சொல்லுக்கு "குறுக்கு வழியில் ஒரு செயலைச் சாதிப்பவன்", "நேர்மையில்லாதவன்", "பித்தலாட்டம்", "போக்கிரித்தனம்", "மோசம்" என்ற பொருள்கள் ஏற்பட்டுவிட்டன. சீமையில் விகான், அபர்டீன், கிரேடனு கிரீன் என்ற ஊர்களுக்கும் இப்படிக் கெட்ட பொருள் நிலவி வருகிறது. கும்பகோணத்தைப் பற்றிய தவறான கருத்து வின்சுலோ அகராதியிலும் வெப்ஸ்டர் அகராதி முதற் பதிப்பிலும் இடம் பெற்றிருக்கிறது. பலருடைய முறையீட்டுக்கிணங்கவே, இப்பொருள் தமிழ் லெக்சிகனிலிருந்து நீக்கப்பட்டது. தவறான பொருள்படக் கும்பகோணம் என்ற சொல்லைக் கையாளுவதற்குரிய நிகழ்ச்சி 1900–ஆம் ஆண்டு அளவில் நடைபெற்றது.

அந்நாளில் சீமைக்குச் செல்லும் ஆங்கிலேயர்கள் தூத்துக்குடி வழியே கொழும்புக்குப் போய் அங்கிருந்து

கப்பலேறி லண்டனுக்குச் செல்லுவர்; தூத்துக்குடிக்குச் செல்லும் போட்மெயில் அப்போது கும்பகோணம் வழியாகச் சென்றுகொண்டிருந்தது. அந்த இரயிலில் சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு ஓர் ஆங்கிலேயர் சென்றார். தூத்துக்குடியில் போய்ப் பார்த்தபோது, பெட்டிக்குள் அவருடைய பொருள்கள் ஒன்றுமில்லை. வேட்டி, துண்டு, பித்தளைப் பாத்திரங்கள் இருந்தன. அவர் இருந்த இரயில்பெட்டியில் இன்னொருவர் சென்னையில் ஏறினர். கும்பகோணத்துக்கு டிக்கட் வாங்கியிருப்பதாகச் சொன்னார். வேறு எவரும் அந்தப் பெட்டிக்கு வரவில்லை. கும்பகோணத்தார்தான் தம் பெட்டியை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அதைப்போல மற்றொரு பெட்டியை வைத்து விட்டுச் சென்றிருக்க வேண்டுமென்றும் முடிவு செய்தார். உடனே கும்பகோணம் இரயில் நிலையத்துக்குத் தந்தி அடித்தார். சென்னைப் பத்திரிகைகளுக்கும் தெரிவித்தார். இழந்த பொருள் வரவில்லை. லண்டனுக்குப் போய்ச்சேர்ந்ததும் "டைம்ஸ்" நாள் இதழில் இந்நிகழ்ச்சியைப்பற்றி எழுதினர். "திஸ் கும்பகோணம் பிசினஸ்" என்ற தலைப்பில் லண்டன் டைம்ஸ் அக்கடிதத்தை வெளியிட்டது. அன்று முதல் "கும்பகோணம் வேலையைக் காட்டாதே", "கும்பகோணம் பண்ணுதே" என்ற சொற்கள் வழக்கில் வந்து, அதற்கு "மூக்கு, முழி" வைத்துப் பல கதைகளும் விளக்கங்களும் வளர்ந்துள்ளன. ஏதோ ஒரு நிகழ்ச்சியை—அதுவும் நீதிமன்றத்தில் உறுதி செய்யப் படாதது—வைத்துக் கொண்டு ஒரு பெருநகரத்து மக்கள் அனைவரையும் அவர்களுடைய வழித்தோன்றல்களையும் இழிவுபடுத்த முயலுவது மிகத்தவறு. நகைச்சுவை வாழ்க்கைக்கு இன்றியமையாததுதான், ஆனால் அது பிறர் மனத்தைப் புண்படுத்தாமல் அமைய வேண்டும்.

வெள்ளைக்காரர்கள் கும்பகோணத்துக்கு வேறு பல பெயர்களையும் வழங்கியுள்ளனர். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி; அதில் படகோட்டி மகிழும் காட்சி; கூரிய அறிவும், கணித நூற்புலமையுடைய மக்கள் ஆகிய சிறப்புக்கள் இருப்பதால், அவர்கள் கும்பகோணத்தை "தென் இந்தியாவின் கேம்பிரிட்ஜ்" என்று குறிப்பிட்டுள்ளனர். அத்வைத தத்துவத்தைப் பரப்பிய சங்கராச்சாரிய சுவாமிகளின் மடம், மகாமகத் திருவிழா, எண்ணிறந்த கோயில்கள், சமஸ்கிருதக் கல்வி புகட்டும் நிலையங்கள் ஆகியவற்றையொட்டிக் கும்பகோணம் இந்து சமயத்தவர்க்குக் கேந்திரமான இடமாக இருப்பதால், இதைத் "தென்னிந்தியாவின் காசி" என்றும் இயம்பியிருக்கின்றனர். "கோவில்கள் மிகுந்த நகரம்" என்ற அடைமொழியையும் மேனாட்டார் இவ்வூருக்கு வழங்கியுள்ளனர். ஒரே கோயிலால் புகழ் பெற்று, அதைச்சுற்றி நகரம் அமைக்கப்பட்டிருப்பதால் மதுரையைக் "கோயில் நகரம்" என்று சிறப்பித்த ஐரோப்பியர் கும்பகோணத்தையும் காஞ்சியையும் "கோயில்கள் மிகுந்த நகரம்" என்று குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்கு உரியது.

கும்பகோணம் நகர எல்லைக்குள் எத்துணைக் கோயில்கள் உள்ளன என்று சொல்லுவது கடினம். ஒரு கோயிலின் கோபுரத்தை அடுத்த கோயிலிலிருந்து தான் பார்க்க வேண்டும். அவ்வாறு நெருக்கமாகவும் அடுத்தடுத்தும் ஆலயங்கள் அமைந்துள்ளன. 'திருவாரூர்த் தேரழகு, திருவிடைமருதூர்த் தெரு அழகு, மன்னார்குடி மதில் அழகு, வேதாரணியம் விளக்கழகு, கும்பகோணம் கோயில் அழகு' என்பது ஒரு பழமொழி. கும்பேசுவர சுவாமி கோயில், காசி விசுவநாதசுவாமி கோயில், நாகேசுவர சுவாமி கோயில் ஆகிய மூன்றும் சோமேசர் கோயிலும் (குடந்தைக் காரோணம்)

தேவாரப் பாடல் பெற்றவை. கும்பேசுவரசுவாமி கோயில் மகாமகத் திருவிழாபற்றிய புராணக் கதைத் தொடர்புடையது. ஒன்பது ஆறுகளின் பெயரால் அமைந்த கன்னிகைகளைச் சித்திரிக்கும் சிற்பங்களின் வேலைப்பாடும் ஒன்றுக்கொன்றுள்ள வேறுபாடும் உற்று நோக்கத்தக்கன. இங்குள்ள வெள்ளி வாகனங்கள் காணத்தக்கவை.

நாகேசுவரசுவாமி கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை 11, 12, 13 மூன்று நாட்களிலும் அதிகாலையில் இருபது நிமிடத்திற்குச் சூரியன் ஒளி மூலத்தானத்தின் மீது படுகிறது. அவ்வாறு கோயிலின் வாயில் அமைக்கப் பட்டிருக்கிறது. அம்பாள் தாளம் போட, வேணு கோபாலர் புல்லாங்குழல் வாசிக்க, நடராசர் ஆடுவதற்கு இக்கோயிலுக்குள் தனியே ஓர் உட்கோயில் இருக் கிறது. கழற்றிப் போடப்பட்ட சகடமும் 12 ராசிகள் செதுக்கப்பட்ட சக்கரமும் உள்ள கல்தேரும் சூரியனுக் குரிய தனிக்கோயிலும்; கருவறை வெளிப்புறக் சுவர்களி லும் மாடங்களிலும் வைக்கப் பெற்றுள்ள கற்சிலைகளின் வேலைப்பாடும் இங்கே காணத்தக்கன.

நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட சாரங்கபாணி கோயிலின் கோபுரம் 147 அடி (45 மீட்டர்) உயர முடையது. ஆறு ஆழ்வார்களால் மங்கள சாசனம் செய்யப் பெற்றது. சக்கரபாணி கோயில் பல்லவர் காலத்திலேயே இருந்ததாகக் கூறுகின்றனர். தூண் தோறும் சிற்பங்கள் இருப்பதும் நவராத்திரி விழாச் சிறப்பும் பட்டாபிஷேகக் கோலத்தில் இறைவனாக இராமர் இருப்பதும் இராமசாமி கோயிலுக்குரிய பெருமைகள்.

இலக்கியத் துறையிலிருந்து பார்த்தால் தக்கயாகப் பரணி கும்பகோணத்தில் எழுதப்பெற்றது. இந்நூலிலும்

யாப்பருங்கல விருத்தியிலும் கும்பகோணத்தைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. சோழரின் கருவூலம் இங்கே இருந்தது,

> ''கொற்றச் சோழர் குடந்தை
> வைத்த நாடுதரு நிதியினுஞ் செறிய
> கருங்கட் படிக்குவன் அறநில் யாமே''

என்ற அகநானூற்று வரிகளால் அறியப்படும்.

இலக்கியங்கள் இவ்வூரைக் குடந்தை என்றே குறிப்பிடுகின்றன. பேரூழியின்போது வைக்கப்பட்ட அமுத குடத்தை இறைவன் வேடவடிவு கொண்டுவந்து அம்பினல் அடிக்க உடைந்த மூக்கின் வழியே அமிர்தம் நாற்புறமும் பரவி நின்றதால் பெற்ற பெயர் 'குடமூக்கு' ஆகும். படைப்புக் காலத்தில் இறைவன் அமிர்த குடத்தில் எழுந்தருளியமையால் ஆதி கும்பேசுவரர் என்று பெயர் பெற்ருர்.

குடமூக்கு என்பதே ஆதிப்பெயர்; ஒரு நகரத்தின் மேற்குப் பகுதியாக இது இருந்திருக்க வேண்டும். குடம் என்பது மேற்கு. குணவாயில், குடவாயில், லண்டன் நகரின் 'வெஸ்டு எண்டு' என்ற பெயர்களை நோக்குக. உறையூர் உறந்தையானது போல, குடமூக்கு, 'குடந்தை' ஆயிற்று. தேவாரங்களிலும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் ஏனைய இலக்கியங்களிலும் குடமூக்கு அல்லது குடந்தை என்றே இவ்வூரின் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது.

திருவிதாங்கூர், மைசூர், பரோடா, சென்னை அரசாங்கங்களில் பணியாற்றி ஆட்சித்திறமை மிக்கவரெனப் புகழ்பெற்ற சேஷய்யா சாஸ்திரி, மாதவராவ், ரகுநாத் ராவ், பி. எஸ். சிவசாமி ஐயர், நாவன்மையால் உலகப் புகழ்பெற்ற மகாகனம் சீனிவாச சாஸ்திரி, கணிதமேதை இராமானுசம் ஆகியோர் கல்வி கற்றது இவ்வூரில்தான்.

"இட்ட அடி நொந்தும், எடுத்த அடி கொப் பளித்தும்" ஊர்ஊராகச் சென்று சங்க இலக்கியங்களைத் தேடிய சாமிநாத ஐயர் பணியாற்றிப் புகழ்பெற்றது கும்பகோணத்தில்தான். புல்லாங்குழல் சரப சாஸ்திரி, வயலின் இராசமாணிக்கம் பிள்ளை, திரைப்பட நடிகர் சாரங்கபாணி போன்ற கலைஞர்களைத் தமிழகத்துக்குத் தந்திருப்பது கும்பகோணம்தான். சென்னை மாநகர்க்கு வெளியே தமிழ் நாட்டில் அரசாங்கக் கல்லூரி முதலில் ஏற்பட்டது இவ்வூரிலேயே ஆகும்.

சிறந்த மாணவர்களும் கடமையில் ஆர்வமும் புலமை யில் ஆழமும் உடைய ஆசிரியர்களும் கொண்டு இக் கல்லூரி தென்னிந்தியாவெங்கும் புகழ்பெற்றிருக்கிறது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் போர்ட்டர் என்பார் பல்லாண்டுகள் இக்கல்லூரியில் முதல்வராக இருந்து பெரும்பணியாற்றினர். அவர் பெய ரால் ஒரு சிறந்த மண்டபமும், மற்ரொரு முதல்வரின் பெயரால் கோபால் ராவ் நூல்நிலையமும் இவ்வூர்ப் பொது மக்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. காவிரி யின் எதிர்க்கரையில் தஞ்சை அரசிகள் வாழ்ந்துவந்த 'வசந்த மண்டபம்' என்னும் மாளிகையில் இக்கல்லூரி நடைபெற்று வருகிறது. இம்மண்டபத்தின் மரத் தூண் களிலுள்ள வேலைப்பாடு கண்டின்புறத் தக்கது. இயற்கை எழில் மிக்க காவிரிக்கரையில், தோற்றப் பொலிவு டைய இந்த வசந்த மண்டபம் கி. பி. 1700 அளவில் மிக்க உறுதியாகக் கட்டப்பெற்றிருக்கிறது. அதன் பெருமையை நாம் நன்ருக உணருவதற்கான, 1955-இல் இன்றைய தமிழ்நாடு அரசாங்கத்தார் அந்த மண்டபத்திற்கு அருகே "கும்பகோணம் கல்லூரியின் நூற்ருண்டு விழா நினைவுக் கட்டிடம்" கட்டியுள்ளனர். காற்று வராதபடியும், மழைநீர் ஒழுகும்படியும்.

காவிரியும் அரசலாறும் இருபக்கம் மாலைபோட்டு ஊரைச்சுற்றி வருவதால், கும்பகோணம் நீர்வளம் நிறைந் திருக்கிறது. கட்டடங்களின் அடித்தளத்திற்குப் பெரும் பொருள் செலவிட வேண்டியிருக்கிறது. ஆறுகளால் ஊரின் எல்லை வரையறுக்கப்பட்டு விட்டதால், மக்கள் கூட்டம் பெருகிக் கொண்டே போகிறது. ஆறுகளின் மட்டத்தைவிட நகரத்தின் மட்டம் தாழ்வாக இருப்ப தால் கழிவு நீர் வெளிச்செல்ல ஆறுகள் ஊறு விளைக் கின்றன. காவிரியில் நீர் வந்தால் கொசு மிகுதியாகும்; கொசுவைத் தடைசெய்தால் மூட்டைப்பூச்சி, பல்லி, ஈ பெருகும்.

கும்பகோணத்தின் பெரிய திருவிழா 12 ஆண்டு களுக்கொருமுறை நடைபெறும் மகாமகம். 1933–இல் நடந்த மகாமகத்தின்போது, கும்பகோணத்துக்கு மின் சார விளக்குப் போடப்பட்டது. 1945 மகாமகத்தை ஒட்டி, சிறுஅளவில் குழாய்நீர் வசதி செய்யப்பட்டது. 1956 மகாமகத்தை ஒட்டி இரயில் நிலையம் நன்ருக அமைக்கப்பட்டது. இப்படி, ஏதாவது ஒரு நன்மை யைச் செய்ய வெண்டுமாயின் அதை அடுத்த மகாமகம் வரை ஒத்திப்போடுவது கும்பகோணத்தில் வழக்கமாக இருந்துவருகிறது. அரசாங்கத்தில்கூட, தேர்தல் சமயத் தில் ஏதாவது ஒரு நல்ல செய்தியைப் பொதுமக்களுக்கு அறிவிக்கலாமென்று நினைக்கிருர்கள் அல்லவா ?

கும்பகோணம் வட்டம் வளம் நிறைந்த பகுதியாக இருப்பதாலும், தஞ்சவூர் வாவட்ட மக்கள் அனைவரும் பொருள்கள் வாங்க இந்நகருக்கு வருவதாலும் இங்கு பஸ் போக்குவரத்து மிகுதி. இரு பெரிய பஸ் கம்பெனி களின் அலுவலகங்கள் இங்கு உள்ளன. 'ராமன் அண்டு ராமன்' என்ற பஸ் கம்பெனியாருக்குச் சொந்தமான ஒவ்வொரு வண்டிக்கும் ஒரு பெயர் உண்டு. பரசுராமன், ரகுராமன், ஜெயராமன், ராஜாராமன் இவ்வாறு

ஒவ்வொரு வாகனமும் ஒரு ராமன் பெயரைத் தாங்கிச் செல்லுகிறது. உலகில் வேறு எங்கும் இத்தகைய சிறப்பைக் காண இயலாது.

கும்பகோணத்தில் முக்கியமான சமூகம் பிராமணர்கள். அவர்களில் பெரும்பாலோர் அவ்வப்போது ஆண்ட அரசர்களின் வேண்டுகோளுக்கிணங்க, வெளியூர்களிலிருந்து குடியேறியவர்கள். பச்சையப்ப முதலியார் தெருவில் சோழர் ஆட்சியில் இங்கு வரவழைக்கப்பட்ட "வேதம் அறிந்த"வர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவர்களுடைய வழித் தோன்றல்களுக்கு இன்றளவும் தீபாவளிக் காலத்தில் பச்சையப்பர் அறநிலையக் குழுவினர் வேட்டி, சேலை முதலியவற்றை அன்பளித்து வருகின்றனர். சங்கராச்சாரியாரின் மடம், மைசூர் லிங்காயத் சமூகத்தாரின் பெரிய மடம், வைணவ மடங்கள் பலவற்றின் கிளை மடங்கள் ஆகியவை இவ்வூரில் உள்ளன. ஐதருக்கும் திப்புவுக்கும் அஞ்சிச் சோழநாட்டுக்கு வந்த சங்கராச்சாரியாருக்குத் தஞ்சம் தந்த டபீர் பெயரால் ஒரு தெருவும் ஒரு படித்துறையும் இவ்வூரில் உள்ளன.

அடுத்தபடி முக்கியமான சமூகம் கன்னார்கள். சிறு தொழில்கள் பெருகி வருவதால் இவர்கள் தொகையும் பன்மடங்காகி வருகிறது. கன்னார்களுள் மர வேலை செய்பவர் ஆசாரி, அவர் மகன் வைரம் அல்லது தங்க வேலை செய்தால் அவர் பத்தர். அவர் தம்பி விக்கிரகம் வார்ப்பவராயின் அவர் ஆச்சாரி—இவ்வாறு அவரவர் ஈடுபட்டிருக்கும் தொழிலுக்கேற்பப் பட்டப் பெயர் அமைந்திருக்கிறது.

தையல் வேலை, சாயத்தை நனைத்துத் துணியில் அச்சுக்குத்தும் அச்சடிகாரர் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தஞ்சாவூர் மராத்தா ராயர்களும் கும்ப

கோணத்தில் ஒரு முக்கியமான சமூகத்தினராக இருந்து வருகின்றனர். லேவாதேவி, வெள்ளி பவுன் வியாபாரம் காசுக்கடை நடத்துதல் இன்ன பிற தொழில்களில் மார்வாடிகள் முனைந்துள்ளார்.

கும்பகோணத்தைச் சுற்றிலும் நெசவுத் தொழில் பல்கிப் பெருகி வருகிறது. இப்பகுதியில் கைத்தறி நெசவாளர் 6,000 பேர் உள்ளனர். சௌராஷ்டிரர்களும் செங்குந்த முதலியார்களும் இந்தத் துறையில் பெரிதும் முன்னேறியிருக்கின்றனர். மைசூரிலிருந்து கோரா வாங்கி அதிலுள்ள முண்டு முடிச்சுக்களை எடுத்து முறுக்குப் பொட்டுப் பல நிறச்சாயம் சேர்த்துக் கைத்தறி நெசவாளர்க்கு—சேலை, பாவாடைத் துண்டுகள் நெய்வதற்கு—வழங்கும் வணிகர் பலர் கும்பகோணத்தில் உள்ளனர். கும்பகோணம் பகுதியில் "ஜெக்கார்டு" நெசவு நடைபெறுகிறது; நெய்ய விரும்பும் சேலையின் படத்தைச் சன்னக் கட்டங்களுள்ள "கிராப்" தாளில் கையால் எழுதி, அட்டையில் துவாரம் போட்டு அவற்றின் இடைவெளிக்கு ஏற்ப இழை விட்டு, கொக்கி வழியாக நூலை இழுத்துச் சரிகையை அதற்குள் கொடுத்து நெய்யும் இந்தத் தொழில் பிரான்சிலிருந்து இங்கு பரவியிருக்கிறது. சேலைகளில் பூ, இலை, உயிரினங்களின் வடிவங்கள் முதல் "ஸ்புட்னிக்" படம் வரை போட்டு வருகின்றனர். 80 நிர். 100 நிர். நூல்களில் துப்பட்டா துண்டுகளும், புடவைகளும், மடிசார் வைத்துக் கட்டுபவர்களுச்கு 9 கெஜம் சேலைகளும் இப் பகுதியில் நெய்யப்படுகின்றன. கதர், பட்டுப் நெசவு நிலையம் ஒன்று இந்நகரில் தமிழ்நாடு அரசாங்கத்தாரால் நடத்தப்படுகிறது.

செப்புப் பாத்திரங்கள் செய்வதில் சிறந்துவிளங்கும் கோவாக் கிறித்தவர்கள் சில ஆண்டுகளாகக் கும்ப கோணத்தில் குடியேறியுள்ளனர். தைத்தொழில் கற்கும்

பள்ளிகளையும் கொடுமையான தொத்துநோய்களைக் குணப்படுத்தச் சில மருத்துவ நிலையங்களையும் ஐரோப்பிய மிஷனரிகள் நடத்திவருகின்றனர்.

கும்பகோணத்தில் காணத்தக்கவை: 1887–இல் ஏற்பட்டு இன்றளவும் சீன்கள் எழுதுவது, வண்ணப் படங்கள் தீட்டுவது, விக்கிரகங்களைப் பார்த்து வரைவது ஆகிய கலைகளைக் கற்பிக்கும் நகராண்மைக் கழகப் பள்ளி; அரண்மனைத் தோட்டத்தில் நகராண்மைக் கழகத்தார் கட்டியுள்ள நாடக அரங்கு, கும்பகோணம் கல்லூரி நூல்நிலையத்திலுள்ள கணிதமேதை இராமானுசம் படித்த நூல்களும் குமாஸ்தா வேலை கேட்டு அவர் சென்னைத் துறைமுகத்துக்குப் போட்ட மனுவும், பாத்திர உற்பத்தியாளர்க்கு உதவும் அரசாங்கத் தொழிற்சாலை, மகாமகக் குளத்தின் வடகரையில் நாயக்க மன்னர் ஒருவர் கட்டியுள்ள துலாபார மண்டபம், இராமசாமி கோயிற் சிற்பங்கள்.

கும்பகோணத்தில் சிறந்து விளங்கும் தொழில்கள்:- பல வகைப் பாத்திரங்கள், கற் பலகை, கற்பலகைக் குச்சி, புகையிலைப் பொட்டலம், கொட்டைப் பாக்கு சீவல், சந்தனத் தைலம், சந்தனவில்லை, தகரப் பெட்டி, சாக்பீஸ் ஆகிய பொருள்களின் உற்பத்தி, விக்கிரக வார்ப்பு, வெள்ளி நகைகளுக்குக் கில்ட் கொடுத்தல், ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி.

கும்பகோணத்தில் இருப்பவை:- 20 ஏக்கர். பரப்பும் கரையில் 16 கோயில்களும் உள்ள மகாமகக் குளம், ஏராளமான மடங்கள், 500 மாட்டுவண்டி, 200 டெலிபோன், நூற்றுக்கணக்கான சோதிடர்கள், 6 திரைப்பட மாளிகைகள், ஏழு "டவுன் பஸ்" வழிகள், நான்கு கிறித்தவ ஆலயங்கள், ஆங்காங்கு முடிந்து விடும் சந்துகள், ஏராளமான மோரிகள் (சாக்கடை),

பகலில் பல லட்சம் ஈ, இரவில் லட்சக்கணக்கான கொசு.

கும்பகோணத்தில் இல்லாதவை :- சுகாதாரம், காலி இடம், குதிரை வண்டி.

கும்பகோணத்தில் மலிவாக இருப்பவை :- வாழைக்காய், வெள்ளரிக்காய், பாகக்காய், கொத்தரை, தக்காளி முதலிய காய்கறிகள்.

கும்பகோணத்தில் அல்லும் பகலும் முழங்கும் இசை :- " லொட்டு லொட்டு " என்று பாத்திரம் தட்டுபவர் வர்கள் இசைக்கும் ஒலி.

கும்பகோணம் வாசிகளின் ஆசை:- தங்கள் ஊரின் பெயர் திருக்குடந்தை என மாற்றப்பட வேண்டும் என்பது.

கும்பகோணத்தின் உடனடியான தேவை :- சீமைத்தகடு வராததால் கழிவு தகடுகள், துண்டுகள், உபயோகப்படுத்தப்பட்ட பாத்திரங்கள் இவற்றைச் சேகரித்துத் தகடு அடிக்கும் தொழிற்சாலை (ஸ்கிராப் மெட்டல் இண்டஸ்ட்ரி)

கும்பகோணத்தின் ஏற்றுமதிகள் :- நீதிபதிகள், வழக்கறிஞர்கள், இசைப்புலவர்கள், சிறந்த சமையல் காரர்கள், மகாமகக்குளத்தீர்த்தம், காவிரி வெற்றிலை, வெள்ளி செம்பு ஈயம் பித்தளை எவர் சில்வர் பாத்திரங்கள், டன்னக்கால் (யானைக்கால்) நோய்.

குறைபாடுகள் எத்துணையோ இருப்பினும், கும்பகோணம் பழமைப் பெருமையுடைய ஊர், வரலாற்றுச் சிறப்புடைய ஊர், அறிவொளி வீசும் - ஊர், கலைமணம் கமழும் ஊர், கைத்தொழில் சிறந்து விளங்கும் ஊர்.

**அம்மாச் சத்திரம்**

கும்பகோணத்திலிருந்து 5 கி. மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது. சரபோஜியின் மகள் பெயரால் அமைந்த

சக்ளவம்மாள் சத்திரம்என்பது சுருக்கமாகவும் மரியாதை யாகவும் **அம்மாச்சத்திரம்** ஆயிற்று. இங்கு பட்டு நெசவு மிகுதி.

தவுல், மிருதங்கம், ஜலதரங்கம் இவற்றை இசைப் பதில் தலைசிறந்து விளங்கிய கண்ணுச்சாமி பிள்ளை (*1869–1925*) இவ்வூரினர் ஆவார்.

## ஆடுதுறை

இவ்வூரின் முழுப்பெயர் திருத்தென்குரங்காடுதுறை என்பதாகும். திருநாவுக்கரசரும் சம்பந்தரும் இங்குள்ள கோயிலைப் பாடியுள்ளனர்.

அரசாங்கத்தார் நடத்திவரும் வேளாண்மைப் பண்ணையும் வாழை ஆராய்ச்சிப் பண்ணையும் இவ்வூரில் உள்ளன. இவை தவிர, ஏராளமான அரசாங்க அலுவல கங்கள் இவ்வூரில் உள்ளன; *1959*–இல் சில அலுவல கங்கள் திருவிடை மருதூருக்கு மாற்றப் பட்டுள்ளன.

சில ஆண்டுகளுக்கு முன், ஆடுதுறை சிறிய ஊராக வும் (இப்போது இவ்வூரின் பகுதியாக உள்ள) மருத்து வக்குடிக்கு உட்பட்ட சிற்றூராகவும் இருந்தது. மருத்து வக் குடியிலுள்ள அபிராமி அம்மன் கோயில் காணத் தக்கது.

ஆடுதுறையருகே சைதன்ய சுவாமிகளின் சமாதி இருக்கிறது.

## இன்னும்பூர்

திருப்புறம்பயத்துக்கு அருகேயுள்ள சிவத்தலம். இங்கே கோயில்கொண்டுள்ள இறைவனுக்கு எழுத் தறியும் பெருமான் என்று பெயர். மாமல்லபுரத்திலுள்ள கஜபிரஷ்டம் (யானையின் பின்பக்கம்) போன்ற தோற்றத் தின் அமைப்பில் இக்கோயிலும் கட்டப்பட்டிருக்கிறது.

**ஒப்பிலா அப்பன் கோயில்**

இது சிவத்தலமான திருநாகேசுவரத்தை அடுத்த வைணவப்பதி. இத்தலத்துக்கு, திருவிண்ணகர் என்ற பழம் பெயர் உண்டு. விஷ்ணு கிரகம் என்ற வடமொழிச் சொற்ருெடர் விண்ணகரம் ஆயிற்று. நம்மாழ்வார் இங்குள்ள பெருமாள் கோயிலை, "திரு விண்ணகர் சேர்ந்த அப்பன் தன் ஒப்பார் இல்லப்பன்" என்று பாடியுள்ளார். அதன்பயனுக இந்தப்பெருமாளுக்கு, "ஒப்பிலியப்பன்" (ஒப்பு, உவமை இல்லாத் தலைவன்) என்ற பெயர் வழங்கிற்று. இப்பெயர் தவருக உப்பிலியப்பன் என்று மருவி வழங்குகிறது; இறைவனுக்கு உப்பில்லாத நைவேத்தியம் வழங்கப்பட்டு வருகிறது.

**கீழ்அணை** (லோயர் அணைக்கட்டு)

அணைக்கரை என்றும் இந்த அணைக்குப் பெயர் உண்டு. இது கும்பகோணம் வட்டத்தில், தஞ்சை திருச்சி மாவட்டங்களின் எல்லையில் இருக்கிறது. திருப்பனந்தாளிலிருந்து 5 கி. மீ. தொலைவு.

திருச்சி மாவட்டத்தில் மேலணை (Upper anicut) கட்டப்பெற்ற பிறகு, கொள்ளிடத்தில் நீர்ப்பெருக்கு குறையலாயிற்று. பல ஆண்டுகளில் தென் ஆர்க்காடு மாவட்டத்து மக்களும் தஞ்சை மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள மக்களும் பாசனத்திற்குப் போதிய நீரின்றி அல்லற்பட்டனர். அக்குறையைப் போக்கக் கொள்ளிடத்தின் குறுக்கே இந்த அணை கட்டப்பெற்றது.

சிதம்பரம் பகுதியிலுள்ள நிலங்களுக்குப் பாசனவழி அளிக்கும் வீராணம் ஏரிக்கு இங்கிருந்துதான் தண்ணீர் விடப்படுகிறது.

**சாக்கோட்டை**

கும்பகோணத்துக்கு அருகே இவ்வூர் இருக்கிறது. சிவாஜியின் தந்தையாரான சகாஜி பெயரால் இங்கு ஒரு

கோட்டை கட்டப்பெற்றது. சகாஜிக்கோட்டை என்பதே இவ்வூரின் சரியான பெயர். மருத்துவமனையும் வேளாண்மைப் பள்ளியும் இவ்வூரின் குறிப்பிடத்தக்க நிறுவனங்களாகும். இவ்வூரருகே திருக்கலய நல்லூர் என்ற தேவாரப் பாடல் பெற்ற தலம் இருக்கிறது.

**சிவபுரம்**

தேவாரம் பெற்ற இச்சிவத்தலம். "சிவபுரத்தரசே" என்று மாணிக்கவாசர் திருவாசகத்திலும் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இவ்வூர் கும்பகோணத்திலிருந்து திருவாரூர்க்குச் செல்லும் வழியில் இருக்கிறது.

**சுவாமிமலை**

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருஏரகம், குன்றுதோருடல், பழமுதிர்ச் சோலை என்று திருமுருகாற்றுப்படை கூறும் ஆறுபடைவீடுகளுள் நான்காவதாகக் குறிப்பிடப்படும் திரு ஏரகம் என்பது இதுவே என்று மக்கள் கருதுகின்றனர். கி. பி. 15-ஆம் நூற்றுண்டில் இருந்தவராகக் கருதப்படும் அருணகிரிநாதர் திருவேரகம் என்பது சுவாமிமலையே என்று திருப்புகழ்ப் பாடல்கள் பலவற்றில் பாடியுள்ளார். "நதியிற் காவிரியாற்றுக்குள்ளே பயில்வளமைச் சோழ நன்னுட்டுக்குள் ஏரகநகர்" என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

சுவாமிமலைக்கு அண்மையிலுள்ள **ஏரகரம்** என்ற ஊரின் பெயரே இப்படி ஏரகம் என்று அமைந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். ஏரகம் என்பது மலைநாட்டுப்பதி ஒன்ருக இருக்கவேண்டுமென்ற கருத்து இருபதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பெரிதும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. திருவேரகம் என்பது நாகர்கோயிலுக்கு அருகேயுள்ள வேழிமலைக் குமரன்கோயில் என்று சிலரும், உடுப்பிக்கு அண்மையிலிருக்கும் உடுப்பி சுப்பரமணியர் கோயில் என்று வேறு

சிலரும் கூறியிருக்கின்றனர். ஏரகம் எதுவாயினும் ஆகுக. தஞ்சை மாவட்டத்தில் தலைசிறந்த முருகன் தலங்கள் எட்டிக்குடி, எண்கண், சிக்கல், வைத்தீசுவரன் கோயில், சுவாமிமலை என்னும் ஐந்தும் ஆகும்.

சுவாமிமலை முருகனுக்குச் சுவாமிநாதர் என்று பெயர் உண்டு. இக்கோயிலுக்கு, கும்பகோணம்—தஞ்சை வழியிலுள்ள சுவாமிமலை இரயில் நிலையத்திலிருந்து நேர் சாலை உண்டு; அரசலாறு, காவிரி ஆறு இரண்டையும் கடந்து, கோயில் வாயிலை அடையலாம். அல்லது, கும்பகோணம்-திருவையாறு பஸ்ஸில் சென்று கோயில் வாயிலிலேயே இறங்கலாம்.

"வெண் குன்று" என்று சிலப்பதிகாரத்தில் இத்தலம் குறிப்பிடப்பெற்றிருக்கிறது. ஆற்றோரம் அமைந்து மண் பெருகி அமைந்த மணற்குன்றே "குன்று" எனப்பட்டது. எனவே இது மலைபோன்றது. மலையே என்று சொல்லுவாருமுள்ளனர். "தஞ்சை மாவட்டத்தில் மலை இருக்கிறதா?" என்று யாரேனும் கேட்டால், "ஆம். சுவாமிமலை உண்டு" என்று நகைச்சுவையாக விடை கூறுவர்.

60 படிகள் ஏறி, மூலத்தானம் உள்ள இடத்தை அடைய வேண்டும். இப்படிகள் ஒவ்வொன்றுக்கும் தமிழ் ஆண்டுகளின் பெயர்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. இத்தலம், பிரபவ முதலான அறுபது ஆண்டுகளும் படியாக அமைந்த கட்டுமலை என்பது ஒரு வரலாறு.

மூலத்தானம் உயர்ந்த மேடையில் அமைந்திருப்பதாலும் கல்யாணமண்டபத்தில் மக்கள் கூட்டம் எந்நாளும் இருப்பதாலும் சுவாமிமலை பொலிவுடன் விளங்குகிறது. காது குத்தவும் முடி எடுக்கவும் காவடி தூக்கவும் திருமணம் முடிக்கவும் இத்தலத்துக்குத் திரளாக மக்கள் வருகின்றனர்.

வீணை வாசிக்கும் கோலத்தில் சரசுவதியின் அழகான விக்கிரகம் இக்கோயிலில் இருக்கிறது.

இந்த ஊரில் சிற்பத்தொழில், சித்தவைத்தியத் தொழில், நெசவுத்தொழில் மூன்றும் சிறந்து விளங்கு கின்றன.

நம்மைப் படைக்கும் இறைவனின் உருவத்தைப் படைக்கும் கலைஞராகிய ஸ்தபதிகள் பலர் இவ்வூரினர் ஆவர். இவர்களில் சிலர் இந்நாள் நிலைக்கேற்பக் கும்ப கோணத்தில் வாழ்கின்றனர். சுவாமிமலை ஸ்தபதிகளிட மிருந்து நடராச விக்கிரகங்களை வாங்கித் தொழில் செய்யும் வணிகர் தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெருநகர்களிலிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் இங்கு வருவர். புது விக்கிரகங்களை வாங்கி, வட இந்திய மண் ணில் சிலகாலம் புதைத்துவைத்திருந்து பழமையாக்கிப் பின்னர் அவற்றைச் சோழ விக்கிரகம் என்று கூறி அமெரிக்கருக்கு அதிகவிலைக்கு விற்கும் போலி வணிகர் சிலரும் மேற்கூறிய நகரங்களில் உள்ளனர்.

உலோகச் சிற்பத் தொழிலைப் பேணவும், விளக்கு கள் விக்கிரகங்கள் பூந்தொட்டிகள் போன்றவற்றைக் கலையழகுடன் செய்யவும் இத்தொழிலில் ஒரு சிலர்க் கேனும் முறையான பயிற்சிதர இவ்வூரில் ஒரு பயிற்சி நிலையத்தை அரசாங்கத்தார் நடத்திவருகின்றனர். வெண்கலத்திலும் பஞ்சலோகத்திலும் விக்கிரகங்கள் செய்வது, கிரந்தம் படிப்பது ஆகியவை இங்கு பயிலும் 15 மாணவர்க்குக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன அவர் களுக்கு அரசாங்கம் மாதம் 30 ரூபாய் உதவித்தொகை வழங்குகிறது.

விக்கிரகங்களைச் செய்து விற்கும் கூட்டுறவுத் தொழிற்சாலை ஒன்றை இவ்வூர்க் கம்மாளரும் ஸ்தபதி

களும் நடத்தி வருகின்றனர். இத்தொழிற்சாலையினர் பல வடிவங்களில் நடராச விக்கிரகங்கள் செய்து வருகின்றனர். இசை வேளாளர்க்கென நாகசுரப்பள்ளி ஒன்றை சுவாமிமலை சுவாமிநாதர் கோயில் ஆட்சியாளர்கள் நடத்தி வருகின்றனர்.

பழநிக் கோயிலிற்போல சுவாமிமலையிலும், கோயில் வருவாயைப் பெருக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றிருக்கின்றன. வழிபட வருவோர் நலங்கருதிப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. ஒரு நாளிலேயே ஏராளமான திருமணங்கள் நடத்துவதற்கு இங்கு வசதிகள் உள்ளன. இங்குள்ள இறைவன், தான் மணந்துகொள்ளாத நிலையிலிருந்தும் ஆண்டுதோறும் அவர் அருளால் அவர் சந்நிதியில் ஏறத்தாழ ஐயாயிரம் திருமணங்கள் நிகழுகின்றன. இதனால் என்றுமே இக் கோயில் விழாக்கோலம் பூண்டிருக்கிறது. விசாகம், கார்த்திகை, பூசம், சஷ்டி நாட்களிலும் வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்பான முறையில் பூசைகள் நடைபெறுகின்றன.

சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள முருகனை, ஒரு வணிகராக எண்ணி, ஒருவர் பாடிய தனிப்பாடலில் தத்துவ உண்மையுடன் நகைச்சுவையும் நிறைந்திருக்கிறது:—

"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை - மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே"

---

* வெங்காயம்-வெண்காயம்; உடல். வெந்தயம்-வெந்த அயம் (அயம் - இரும்பு). சரக்கு - உடம்பு
சீரகம் - சிறப்புள்ள வீடு; மோட்சம். பெருங்காயம் - பெரிய உடல்.

**சூரியனார் கோயில்**

கும்பகோணத்திலிருந்து 14½ கிலோமீட்டர் கிழக்கே யும் ஆடுதுறையிலிருந்து திருப்பனந்தாள் செல்லும் சாலை யில் 2 கி.மீ. தொலைவிலும் திருமங்கலக்குடி என்ற பாடல் பெற்ற தலம் இருக்கிறது. இதற்கு அணித்தேதான் சூரியனார்கோயில் இருக்கிறது. இது, முதல் குலோத் துங்கச் சோழனால் கி. பி 1110-இல் கட்டப்பெற்றது; குலோத்துங்கச்சோழ மார்த்தாண்டாலயம் என்ற பெயர் இக்கோயிலுக்கு உண்டு.

புகழ்பெற்ற கோயில் இங்கே இருந்தும், இவ்வூர் ஓராயிரம் மக்களே வாழும் சிற்றூராக இருப்பதாலும் இங்குவரச் சிறு தொலைவு நடக்கவேண்டியதிருப்ப தாலும், இக்கோயிலுக்கு வரும் மக்களின் தொகை மிகக் குறைவாகவே இருக்கிறது.

சூரியன், அவன் மனைவியரான (1) உமாதேவி (2) சாயை ஆகிய இருவரோடும் மூலத்தானத்தில் கல் திருப்பணியோடு இருப்பது இக்கோயிலின் சிறப்பு.

“ ஓங்கலிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் ”

சூரியனைத் தொழும் வழக்கம் பல்லாண்டுகளாகத் தமிழ் நாட்டில் இருந்து வந்திருப்பதாலும், சங்க இலக்கியங்க ளெல்லாம் சூரியனைச் சிறப்பிப்பதாலும் சூரிய மரபின ரான * சோழ மன்னன் ஒருவன் சூரியனுக்குக் கோயில் எடுப்பித்தது பொருத்தமே. உலகப் புகழ்பெற்றுள்ள கலிங்கநாட்டு (ஒரிசா) கொனரக் என்னுமிடத்திலுள்ள சூரியனார் கோயிலைப்போன்று இக்கோயிலும் தனிச் சிறப்புக்கு உரியது ஆகும்.

---

* சப்பானிய அரச குடும்பத்தினரும் தங்களைச் சூரிய மரபினர் என்று கருதுகின்றனர். அந்நாட்டு அரசரும் மக்களும் சூரியனை வழிபடுகின்றனர்.

12 - ஆம் நூற்றுண்டுக்குப்பின் சூரியன் சூரிய நாராயணசாமி ஆகிவிட்டதும், தனித்தனியே செங்கல் கட்டடங்கள் அமைக்கப்பெற்று சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகியோர்க்கும் சுற்றுக்கோயில்கள் அமைத்து இக்கோயிலே நவக்கிரகக் கோயிலாக்கி யிருப்பதும் அறியாமையின் விளைவுகள் என்றுதான் சொல்லவேண்டும்.

இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குக் கட்டுப்பட்டதெனினும், சூரியனுர்கோயில் சிவாக்கிர யோகிகள் ஆதீனத்தின் மேற்பார்வையில் இருந்து வருகிறது. தென்னுட்டிலுள்ள முக்கியமான சைவ மடங்களில் சூரியனுர்கோயில் ஆதீனம் ஒன்று.

**தந்தன் தோட்டம்**

குக்பகோணத்துக்குக் கிழக்கே 10 கி. மீ. தொலேவில் இவ்வூர் இருக்கிறது. இங்குள்ள நடனபுரீசுவரர் கோயிலில், தோண்டியெடுக்கப் பெற்ற 35 விக்கிரகங்கள் உள்ளன. இவற்றுள் வீணுதர தட்சிணுமூர்த்தி, ரிஷப வாகன மூர்த்தி, சண்டிகேசுவரர் ஆகியவை சோழர் காலத்துச் செப்பு விக்கிரகங்களாகும்.

**தாராசுரம்**

தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகியவற்றுக்கு அடுத்தபடி, சோழர் கோயில்களுள் பழமையும் பெருமையும் உடைய தலம் தாராசுரம். இது இரண்டாம் இராஜராஜச் சோழனுல் (1146—1173) கட்டப்பெற்றது.

இவ்வூர், கும்பகோணம் நகரின் மேற்கெல்லேயில் இருக்கிறது. ஒரு காலத்தில் சோழர் தலேநகராக இருந்தது; இன்று, சிற்றூராகக் காட்சி தருகிறது. கும்பகோணத்திலிருந்து இவ்வூருக்கு டவுன் பஸ் வசதி உண்டு. இரயில் நிலேயமும் இருக்கிறது.

இராஜராஜபுரம் என்பது சிதைந்து தாராசுரமாகி இன்று 'ராரரம்' என்றுகூட மக்கள் கூறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஹமில்டன் பிரிட்ஜ், அம்பட்டன் வாராவதியாகவும், மெயின் கார்டு கேட் மேங்காட்டுப் பொட்டலாகவும் மாறியும், கோபிநாதப் பெருமாள் கோயில் கோணப்பெருமாள் கோயிலாகக் கோணியும் இருக்கும் போது, இராஜராஜபுரம் தாராசுரம் ஆனதில் வியப்பில்லை.

இங்குள்ள முக்கியமான கோயிலுக்கு ஐராவதீசுவரசுவாமி கோயில் என்று பெயர். ஐராவதி என்பது பர்மாவின் பெரிய ஆறு; நம் காவிரியினும் பன்மடங்கு அகலமும் நீளமும் உள்ள அந்த ஆற்றில் கப்பல்கள் இன்றும் செல்லுவதால் அந்த ஆறு போக்குவரத்துக்கு உறுதுணையாக உள்ளது. அந்தப் பெயரை இக்கோயிலுக்கு வைத்திருப்பானேன் என்ற சிந்தனையில் ஐராவதியைக் கண்ட நான் இக்கோயிலுள் நுழைந்தேன். நீர் நிரப்பும் தீர்த்தவாரி ஒன்று மூலத்தானத்தின் பின்புறத்தில் இருக்கிறது. இறைவனுக்குக் குளிர்ச்சியாக இருப்பதற்காக வேனிற்காலத்தில் இங்கு நீர் நிரப்புவதை அறிந்து இன்புற்றேன். நீர் நிரம்பிய நிலையில் சோழர் அரசர்க்குப் பர்மியப் பேராறு நினைவுக்கு வந்தது போலும்.

ஐராவதம் (என்னும் இந்திரனுடைய பட்டத்து யானை) இங்குள்ள இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றதால் இங்கே கோயில் கொண்டிருக்கிற இறைவனுக்கு 'ஐராவதீசுவர்' என்ற பெயர் வந்தது என்பர்.

ஸ்ரீ ரங்கத்தைப் போல, தாராசுரமும் ஏழு மதில்களை உடையதாக இருந்தது என்பர். ஆனால், இப்போது அவை பாழடைந்து, இருக்கும் நிலைகூடத் தெரியாதவாறு அழிந்துவிட்டன; இராஜ கோபுரமும் இடிந்து விட்டது.

இதன் உட்கோயிலான அம்மன் கோயில் துவார பாலகர்கள் எந்தக் கோணத்திலிருந்து நாம் பார்த்தாலும் பார்ப்பவரை உற்று நோக்குவது போல அமைக்கப்பட்டுள்ளன.

சிற்பத் துறையில் ஈடுபாடு உள்ளவர்களுக்குத் தாராசுரம் கோயில் ஒரு கலைக் களஞ்சியம் ஆகும். இங்குள்ள சிற்பங்களில் பல மழையால் சேதப்பட்டும் மண்ணுக்குள் புதைந்தும் உள்ளன. இவற்றையெல்லாம் பேணும் முயற்சியைத் தொடங்குவது நன்று.

அலங்கார மண்டபத்தில் ஓரிழைகூட விடாமல் பல வகைச் சிற்பங்களைக் கடைந்தெடுத்திருக்கிறார்கள். கல்லால் செய்தனரோ? அன்றி, களி மண்ணால் செய்தனரோ என்ற உணர்ச்சி தோன்றுமாறு, முன்னைக் கலைஞரின் உயர்வை இச்சிற்பங்கள் காட்டுகின்றன. ஒரு தூணில் இரண்டு விரல் அகலமும், மூன்று விரல் உயரமும் கொண்ட ஒரு நர்த்தன விநாயகர் இருக்கிறார். எவ்வளவு நுண்ணிய வேலைப்பாடு? ஐந்து முகம் கொண்ட சுப்பிரமணியர் (கார்த்திகேயர்) உருவமும் காணத்தக்கது. நடராச மண்டபத்துப் படியில் ஒரு பக்கம் பார்த்தால் யானையாகவும் பிறிதொரு பக்கத்திலிருந்து பார்த்தால் காளையாகவும் தெரியுமாறு கல்வேலை செய்திருக்கின்றனர். இக்கோயிலுக்குப் பின்புறத்திலுள்ள படிக்கட்டில் யானைமீது பாயும் சிங்கத்தின் சிறந்த சித்திரம் செதுக்கப் பெற்றுள்ளது. ஒரு கரத்தில் அன்னக் கலசமும் பிறிதொரு கரத்தில் மலர் மொட்டும் ஏந்திய அழகான அன்னபூரணியின் கல்லோவியமும் கண்டு களிக்கத்தக்கது.

கல்வெட்டுக்களும் இக்கோயிலில் நிறைய உள்ளன. வரலாற்று ஆராய்ச்சிக்கு வற்றாத ஊற்றாகவும் வளமான கருவூலமாகவும் இவை இருக்கின்றன.

ஐராவதீசுரர் கோயிலுக்குப் பின்பக்கத்தில் வீரசைவ மடத்தைச் சேர்ந்த ஒரு கோயில் மிகக் கேவலமான நிலையில் இருக்கிறது. சோழ அரசர் மூவர்க்கு ஆசிரியராக விளங்கிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தராலேயே இவ்வீர சைவமடம் (ஏறத்தாழ 12-ஆம் நூற்றுண்டில்) கட்டப்பெற்றது என்பர். ஐராவதீசுவரர் கோயில் தஞ்சை அரண்மனைக்குரிய 90 கோயில்களில் ஒன்று.

இக்கோயில் வாயிலுக்கு எதிரிலுள்ள பலி பீடத்திற்கு ஏறிச் செல்லும் ஏழு படிகளும், ஏழு வகை ஓசைகள் (சப்த சுரங்கள்) கேட்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயிலுக்குள் உள்ள மகாமண்டபத்தின் அமைப்பு ரதம் போன்றது; அதனுள் உள்ள சிற்ப வேலைகள் மிக்க அருமையானவை.

மஹாராஷ்டிரத்தில் பம்பாய் நகருக்கு அருகேயுள்ள கல்யாண் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் சாளுக்கிய அரசர் ஒருவரைச் சோழர் வெற்றி கொண்ட நினைவாகக் கொண்டுவரப் பெற்ற துவாரபாலகச் சாளுக்கியச் சிற்பம் ஒன்று இவ்வாயிலின்முன் 1947 வரை இருந்தது. இப்போது இது தஞ்சைக் கலைக்கூடத்தில் வைக்கப்பெற்றிருக்கிறது. இச்சிலையின் பீடத்தின் கீழுள்ள கல்வெட்டு இச்செய்தியை விளக்குகின்றது.

பல தலைமுறைகளாகக் கல் தச்சர்களாக இருந்த ஸ்தபதிகள் ஆதரிப்பாரின்மையால், தம் கலையைக் கைவிட்டு விட்டனர். குடம், தவலைப்பானை போன்ற பொருள்களைச் செய்யும் பித்தளைப் பாத்திரக் கலைஞராகவும் நெல் ஏற்றுமதி செய்யும் வணிகராகவும் அவர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

தாராசுரம் இரயில் நிலையத்திற்குத் தென்மேற்கே ஒன்றரைக் கிலோ மீட்டர் தொலைவில் பட்டீசுரம் என்னும் பாடல்பெற்ற பதி இருக்கிறது.

**திரு ஆப்பாடி**

இது திருப்பனந்தாளுக்கு அருகேயுள்ள தலம்; சண்டிகேசுவர நாயனர் சிவபெருமானை வழிபட்ட இடம்; பாடல் பெற்ற பதி.

இதனருகேயுள்ள திருச்சேய்ஞலூர் சைவ உலகிலும் வைணவ உலகிலும் புகழ்பெற்ற ஊர்; நாயன்மார்களில் ஒருவரான சண்டிகேசுவரர் பிறந்த இடம்; வியாக்கியானச் சக்கரவர்த்தியான பெரியவாய்ச்சான் பிள்ளை பிறந்ததும் இவ்வூரிலேயே ஆகும்.

**திருந்துதேவன்குடி**

திருவியலூரிலிருந்து வயல் வழியே இவ்வூருக்குச் செல்லவேண்டும். இங்குள்ள பாடல் பெற்ற தலத்தில் நண்டு பூசை செய்ததாக வரலாறு உண்டு. 'நண்டு பூசை செய்த கோயில்' என்று சொன்னால்தான் இப்பகுதி வாழ்நருக்கு இவ்வூர் தெரியும்.

**திருநாகேசுவரம்**

மூவர் பாடலும் பெற்ற இச்சிவத்தலம் கும்பகோணத்திலிருந்து ஐந்து கி. மீ. (3 மைல்) தொலைவில் இருக்கிறது. "ஞாயிறும் திங்களும் கூடிவந்தாடு நாகேச்சுவரம்" என்று தீர்த்தப்பெருமை கூறப்பட்டிருக்கிறது. பாம்பு வழிபட்ட தலமாதலால் திருநாகேசுவரம் எனப் பெயர் பெற்றது. இங்குள்ள சிவன் கோயில் சேக்கிழாரால் திருப்பணி செய்யப்பெற்றது என்பர். தமிழ்நாட்டில் இக்கோயில் ஒன்றில்மட்டுமே சேக்கிழாரின் சிலை காணப்படுகிறது.

சேக்கிழார் இங்கு அடிக்கடி வந்தார்; சில ஆண்டுகள் இங்கேயே தங்கியிருந்தார். இவ்வூரில் தமக்கு உள்ள ஈடுபாட்டால், தம் சொந்த ஊரான (செங்கற்பட்டு மாவட்டத்துக்) குன்றத்தூரின் ஒரு பகுதிக்கு,

திருநாகேசுவரம் என்று பெயர் வைத்து இங்குள்ளது போன்ற சிவன்கோயில் அமைத்து, திருநாகேசுவரத்தில் நிகழ்வதுபோல விழாக்கள் நடத்தி வந்தார். இன்றும் அப்பகுதி, 'குன்றத்தூர்–திருநாகேசுவரம்' என்று வழங்கி வருகிறது.

நெசவுத்தொழிலில் சிறந்து விளங்கும் செங்குந்த முதலியார்கள் இவ்வூரில் வாழ்கின்றனர். திருநாகேசுவரம் வேட்டியும் நூல் சேலையும் தமிழ்நாடெங்கும் புகழ் பெற்றவை. திருப்பாதிரிப்புலியார் ஞானியாரடிகள் தோன்றிய ஊர் இதுவே.

**திருப்பனந்தாள்**

(மக்கள் தொகை *5,051 - 1951* இல்)

கும்பகோணத்துக்கு வடகிழக்கே *11* மைல், ஆடுதுறைக்கு வடக்கே *6* மைல் (*10* கிலோ மீட்டர்); அணைக்கரை(Lowcr Anieut)க்குத் தெற்கே மூன்று மைல் (5கிலோ மீட்டர்.) இந்தத் தலத்தின் விருட்சம் - பனை ; எனவே தலம் திருப்பனந்தாள் என்று பெயர் பெற்றது.

இவ்வூர்க்கோயிலின் பெயர் தாடகை ஈசுவரம் ; இதை வடமொழியாளர் அருணஜடேசுவரர் கோயில் என்பர். இது, சம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல்கள் பெற்றது. தாடகை என்ற அசுர மகள் நாள்தோறும் இந்த இறைவனை வழிபட்டாள்; ஒருநாள் அவளுடைய ஆடை நெகிழ்ந்தது; தாடகை தன் ஆடையை இரு முழங்கைகளாலும் இடுக்கிக்கொண்டு 'யாது செய்வேன் ; எவ்வாருயினும் இம்மாலையை ஏற்றுக்கொள்க' என்றதும் இறைவன் தாமே சாய்ந்து அம்மாலையை ஏற்றுக் கொண்டான் ; பிறகு அன்புக் கயிற்ருல் குங்கிலிய நாயனர் இறைவனை நிமிர்த்தியதாகப் புராணம் கூறும்.

*11* – ஆம் நூற்ருண்டில் இது கற்கோயிலாக அமைந்தது ; இங்குள்ள அறுபத்துமூவர் வடிவங்கள்

13 – ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டிருக்கக்கூடும். இக்கோயில் தருமபுர ஆதீனத்தின் ஆட்சியில் இருக்கிறது. கோயிலின் வெளிமண்டபத்திலுள்ள நடனச் சிற்பங்களும், உள்ளே காணப்படும் பெரிய புராணச் சிற்பங்களும் சுற்றுப் பிரகாரத்திலுள்ள காட்சிநாதர் வடிவமும் காணத்தக்கவை.

திருப்பனந்தாள் ஆதீனத்துக் கட்டிடங்களுக்குள் உள்ள கோயிலும், 100 பேருக்குச் சாப்பாட்டுத் திட்டம் இன்னது என்று கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றிருப்பதும், குமரகுருபரர் வாழ்க்கை வரலாற்றுச் சித்திரமும், நீராழி மண்டபத்தின் நடுவே வடநாட்டுப் பாணியில் கட்டப்பெற்ற காசி விநாயகர் கோயிலும் அதனுள் உள்ள வெண்பளிங்கு விநாயகர் கோயிலும் காணத்தக்கவை.

## திருப்புறம்பயம்

இவ்வூர், கும்பகோணத்துக்கு வடமேற்கே 8 கி. மீ. (5 மைல்) தொலைவில் இருக்கிறது. பல்லவர்களும் சோழர்களும் பாண்டியரை எதிர்த்துப் போர் நிகழ்த்திய ஊராதலால், இவ்வூர் வரலாற்றில் இடம் பெற்றதுஆகும். வரலாறு, கல்வெட்டாராய்ச்சித் துறைகளில் வல்லுநராக விளங்கிய சதாசிவப் பண்டாரத்தார் இவ்வூரினர் ஆவர்.

இவ்வூர்ச் சிவன் கோயில், சோழ மன்னர்களால் கட்டப்பெற்றது. இங்குள்ள "பிரளயம் காத்த பிள்ளையா"ருக்கு ஆவணி மாதத்தில் சதுர்த்தி நாளில் ஓர் ஆடம் தேன் அபிடேகம் செய்கின்றனர்.

## திருபுவனம்

வரலாற்றுத் தொடர்பும் கலைத்துறையில் புகழும் பெற்றது திருபுவனம் கோயில். இவ்வூர், கும்பகோணத்துக்குக் கிழக்கே 9 கி. மீ. தொலைவில் திருவிடைமருதூருக்குச் செல்லும் வழியில் உள்ளது. கல்வெட்டுக்கள் இவ்வூரை, 'திருபுவனவீரபுரம்' என்று குறிப்

பிடுகின்றன. 'திரிபுவனவீரேசுவரம்' என்ற பெயரும் இவ்வூருக்கு உண்டு. இது ஒரு 'வைப்புத்தலம்' ஆகும்.

சோழப்பெருநாடு நிலைபெறுவதற்கு மூன்றும் குலோத்துங்கன் (கி. பி. 1178 – 1218) செய்த போர்கள் பலவாகும். அவற்றுள் ஒன்றில் அவன் அடைந்த வெற்றியின் நினைவாக, அவன் வேலைப்பாடமைந்த சிவன்கோயில் ஒன்றை இவ்வூரில் அமைத்தான். தஞ்சைக் கோயிலிற் போல இக்கோயிலிலும் கர்ப்பக் கிரகத்தின்மீது உயரமான விமானம் கட்டப்பெற்றிருக்கிறது. இக்கோயில் தருமை ஆதீனத்தின் மேற்பார்வையில் இருந்து வருகிறது.

இங்குள்ள சிவலிங்கத்துக்கு, சரபர் என்று பெயர். இப்பெயர் சரபேந்திரன் என்று பெருவழக்காகப் பரவியிருக்கிறது. இறைவன் சரப பறவையாகத் தோன்றியதாக வரலாறு ஒன்று உண்டு. இச்சிவலிங்கம் மிகப் பெரியது; ஒரே கல்லால் ஆகியது. சரபர் சந்நிதியின் இருபுறங்களிலும் காணப்படும் தேவிகளின் சிலைகள் (வேலூர் - ஹய்சாள ஆகிய) கன்னட நாட்டுக் கலைஞர்களின் வேலைப்பாடுகளை ஒத்திருப்பதாகத் தக்கார் கருதுகின்றனர். இக்கோயிலின் கோபுரம் ஓங்கி உயர்ந்தது; சிற்ப அழகு நிறைந்தது. மநுநீதிச்சோழன் வரலாறும் இராமாயணக் கதை நிகழ்ச்சிகளும் இச்சிற்பங்களில் இடம் பெற்றுள்ளன.

சோழ மன்னர்கள் இவ்வூரில் நலமடைந்தனர் என்றும் அவர்கள் திரும்பிப் பார்த்ததும் இங்கிருந்த வனம் வளநாடாக ஆயிற்று என்றும் ஒரு வரலாறு உண்டு.

**திருந்துதேவன்குடி**

இப்போது வேப்பத்தூர் என வழங்கும் இவ்வூரில் கங்கை கொண்ட சோழேச்சுரம் என்ற சிவன் கோயில் இருந்ததாகக் கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது.

## திருமங்கலக்குடி

ஆடுதுறைக்கு அருகே இச்சிற்றூர் இருக்கிறது. இது பாடல் பெற்ற தலம். திருவாவடுதுறை ஆதீனத்துக்குட்பட்டது. முதற் குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன.

## திருவலஞ்சுழி

சோழ அரசர்களின் தலைநகரமாக விளங்கிய பழையாறை என்ற நகரம் ஐந்து மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் உடையதாக இருந்ததாகவும் சுந்தரப் பெருமாள் கோயில் (சுந்தரச் சோழப் பெருமாள் கோயில்), திருவலஞ்சுழி, இராஜராஜபுரம் (தராசுரம்), நாதன் கோவில் (நந்திபுர விண்ணகரம்), சோழ மாளிகை, பட்டீச்சுரம், சத்திமுற்றம் ஆகியவை அதன் பகுதிகளாக இருந்ததாகவும் கூறுவர். அவற்றுள் ஒன்றே திருவலஞ்சுழி.

கும்பகோணத்துக்கு மேற்கே நான்கு மைல் (ஆறரை கிலோ மீட்டர்) தொலைவிலும், சுவாமி மலைக்குத் தெற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது இச்சிற்றூர். இது ஒரு பாடல்பெற்ற தலம். பழமையும் பெருமையும் உடைய கோயிலாக இருந்தும், இக்கோயில் சுவாமிமலை ஊருக்கும் சுவாமிமலை இரயில் நிலையத்துக்கும் இடைப்பட்ட சாலைமீதே அமைந்திருந்தும்கூட, மக்கள் கூட்டம் ஒரு சிறிதும் இல்லாத கோயிலாக இது இருக்கிறது.

காவிரி ஆறு இவ்வூருக்கு அருகே வலஞ்சுழித்துப் பாதாளத்தில் புகுந்து விட்டபடியால் இந்தத் தலம் திருவலஞ் சுழி என்னும் பெயர்பெற்றது என்பர்.

காவிரி ஆறு வலமாகச் சூழ்ந்துவரும் இடம் ஆதலால், "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே"

என்ற சம்பந்தர் தேவாரத்தில் " மன்னுகாவிரி சூழ் திரு வலஞ்சுழி " என்று ஊர்ப்பெயர்க் காரணம் கூறப்பெற்றிருக்கிறது. காவிரியின் கிளையான அரசலாற்றின் கரையில் அமைந்திருக்கிறது திருவலஞ்சுழி.

இங்குள்ள இறைவனுக்குச் சடையமுனிநாதர் என்று பெயர். இக் கோயில் சுவாமிமலை தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. திருவலஞ்சுழி சடையமுனிநாதர் கோயில் மிகப் பெரிது, அழகானது, நுட்பமான வேலைப்பாடுடைய கல் விக்கிரகங்களை உடையது. சோழர் தலைநகராக இருந்த பழையாறையை அடுத்திருப்பதால் சோழ அரசர்களுடைய நேர் பார்வையில் நன்கு கவனிக்கப்பட்டு வந்தது. இன்று ஓரளவு பாழடைந்த நிலையில் இக்கோயில் இருக்கிறது. அர்ச்சகரைக்கூட நாம்தான் போய் அழைத்துவர வேண்டும்.

கோயிலுக்குள் நுழைந்தவுடனேயே ஓர் ஆள் உயரத்தில் புத்தரின் கற்சிலை, கண்டாரை வியப்பில் ஆழ்த்துகிறது. இன்னும் சற்று உள்ளே சென்றால், வெள்ளை விநாயகர் கோயில் இருக்கிறது. தென் வாயிலில் உள்ள பலகணி பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தின் கல் தச்சரின் கலைத் திறத்தையும் கைவன்மையையும் உலகுக்கு உணர்த்தி வருகிறது. மரச் சட்டக் கதவு போலக் கல்லால் செய்யப்பெற்று, பல கண்களை உடையதாக அது அமைந்திருக்கிறது. இரும்பு ஆணியின் குமிழ், அதன் அடியிலுள்ள இலை ஆகியவற்றைக்கூடக் கல்லில் செதுக்கியிருப்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

வெள்ளை விநாயகர் வடிவம் கடல் நுரையால் ஏற்பட்டது என்பர். இது, காணத்தக்கது. இவ் விநாயகரை வழிபடுவோர் சிலர் தம் மக்களுக்கு வெள்ளைவாரணர் என்று பெயரிடுவர். தஞ்சை மாவட்டத்தே சிறப்பாக வழங்கும் பெயர்களில் இதுவும் ஒன்று.

வெள்ளைவாரணர் கோயில் கல் திருப்பணி மதில் ஒன்றில் உருக்குலைந்த சில வடிவங்கள் உள்ளன. அவை உள்ளத்தை உருக்கும் தன்மையன. இன்னும் உள்ளே சென்றால், ஒன்பது வயிரவர்களையும் ஓர் ஆள் உயரமுள்ள ஷேத்திர தேவபாலர் உருவத்தையும் காணலாம். இந்தத் திருப்பணிகளையெல்லாம் முதல் இராஜ ராஜச் சோழனின் பட்டத் தரசியாகிய உலகமாதேவி செய்ததாக வரலாறு கூறுகிறது. சோழர்கள் இக்கோயி லுக்கு எல்லையற்ற பொன்னும் பொருளும் வழங்கின ரென்றும் மிகச் சிறந்த நிலையில் இக்கோயில் இருந்த தாகவும் கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம்.

**திருவிடைமருதூர்**

மூவர் தேவாரமும் பெற்றது இத்தலம். பட்டினத் தடிகளின் திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் புராணங்கள், மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய உலா. அனந்த பாரதியாரின் நொண்டி நாடகம் கருவூர்த் தேவரின் திருவிசைப்பா – இவற்றைப்பெற்ற சிறப்பும் உடையது இவ்வூர்.

பரிவார தெய்வங்கள் கோயில்கொண்டுள்ள தலங்க ளால் சூழப்பெற்றும் இறைவன் மகாலிங்கமாக அமைந்த பெருமையை உடையதாகவும் இருப்பது திருவிடைமரு தூர்க் கோயில் ஆகும். "திருவிடைமருதூர்த் தெரு வழகு" என்னுஞ் சொற்றொடரும் இத்தலத்தின் தொன் மையைத் தெரிவிக்கிறது.

இவ்வூர், கும்பகோணத்திலிருந்து 10 கி.மீ. (6 மைல்) தொலைவில் காவிரியின் தென்கரையில் இருக்கிறது. சைவ ஆதீனமுடைய திருவாவடுதுறை, வைணவப் பெரி யாரான பெரியவாச்சான் பிள்ளை பிறந்த சேய்ஞலூர்

ஆகிய இரு சிற்றூர்கள் இவ்வூருக்கு அண்மையில் உள்ளன.

திருவிடைமருதூர் என்ற பெயர்பற்றிச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. "இது பெருமானுக்கு விருப்பமான மருதமரத்தோடு தொடர்புடைய மூன்று சிவன்கோயில்கள் தென்னாட்டிலுள்ளன. இம் மூன்றனுள் வடக்கேயிருப்பது கிருஷ்ணைக்கரையிள்ள ஸ்ரீமல்லிகார்ஜுனம் தெற்கே இருப்பது தாம்பரபரணிக்கரையில் அம்பாசமுத்திரத்துக்கு அருகேயுள்ள திருப்புடைமருதூர்; இவை இரண்டுக்கும் இடைப்பட்ட நடுப்பகுதியில் காவிரிக்கரையில் இருப்பது திருஇடைமருதூர் என்பது ஒரு சாரர் கருத்து. அர்ஜுனம் என்பது மருத மரத்தின் வடமொழிப்பெயர்.

பாடல்பெற்ற பத்துத் தலங்கள் சுற்றிலும் அமைந்திருக்க, தான் நடுநாயகமாக விளங்கும் தனிச்சிறப்பு இத்தலத்துக்கு உண்டு. இதனாலேயே "திரு இடை மருதூர்" என்று பெயர்பெற்றதாகக் காரணங்காட்டுவர் பிறிதொரு சாரார். இத்தலத்துக்குக் கிழக்கே திருவாவடுதுறை (மாசிலாமணி ஈசுவரர்), தென்கிழக்கே திருவாரூர் (தியாகராசர்), தெற்கே திரு ஆலங்குடி (தட்சிணமூர்த்தி), தென்மேற்கே திருவலஞ்சுழி (விநாயகர்), மேற்கே சுவாமிமலை (சுப்பிரமணியர்), வடக்கே திருவாய்ப்பாடி (சண்டிகேசுவரர்), வடகிழக்கே மூன்று தலங்கள்—சீர்காழி (சட்டை நாதர்), சிதம்பரம் (நடராசர்), சூரியனார்கோயில் (சூரியன்) ஆகிய தலங்கள் இருப்பதும் இவற்றில் கோயில்கொண்டுள்ள கடவுளர்கள் புடைசூழக் காவிரிக் கரையில் மகாலிங்கம் அமைந்திருப்பதும் கருதத்தக்கது. இறைவன் தம்மைத்தாமே வழிபட்டு, வழிபடும் முறையினையும் புகட்டியது இத்தலத்திலேயே ஆகும். இதனால் பிற ஊர்களில் லிங்கம் பெரியதாக

இருந்துங்கூட, இங்குமட்டுமே இறைவனுக்கு மகாலிங்கம் என்ற பெயர் நிலவிவருகிறது.

வைகாசி உத்தரத்தில் திருக்கல்யாண விழாவும், தைமாதத்தில் பூசமும், பங்குனியில் அறுபத்துமூவர் விழாவும் இங்கே சிறப்பாக நடைபெறுகின்றன. இக்கோயிலைக் கண்காணித்துவரும் திருவாவடுதுறை ஆதீனத்தார் திருவிழாக்காலங்களில் இங்கே சமயச் சொற்பொழிவுகளும் பன்னிருதிருமுறைப் பாராயணங்களும் அறுபத்துமூவர் விழாவில் நாயன்மார்கள் ஒவ்வொருவருடைய வரலாற்றையும் பற்றிச் சீரிய சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்கின்றனர்.

இங்கு பட்டினத்தடிகளின் திரு உ்ருவம் காணத்தக்கது. சிறந்த ஸ்தபதிகள் பலர் இவ்வூரினர் ஆவர்.

**பட்டீச்சுரம்**

கும்பகோணத்துக்கு அருகேயுள்ள இத்தலம், சம்பந்தரை வெய்யிலின் கொடுமையிலிருந்து காக்கச் சிவபெருமான் முத்துப்பந்தலாகத் தோன்றியதால் பெரும் புகழ் பெற்றது. பல சிற்பங்களும் தஞ்சை நாயக்கர்களின் அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சிதர் உருவமும் இக்கோயிலில் காணத்தக்கன.

இக்கோயில் வடபகுதியில் இன்றும் தனியாக உள்ள துர்க்கையை, ‘கோட்டை வாயில் துர்க்கை’ என்று அழைக்கின்றனர். பழையாறைக் கோட்டையின் தலைமை வாயிலில் இருந்த துர்க்கையின் சிலை இதுவே என்றும் சோழர்களின் குலதெய்வம் துர்க்கையே என்றும் கூறுவர்.

இவ்வூரருகேயுள்ள ஊர்களின் பெயர்கள் உன்னி ஆராயத்தக்கன:-

| | |
|---|---|
| பம்பப்படை | புதுப்படை |
| ஆரியப்படை | மணப்படை |

இவை இந்நாளில் 'கண்டோன்மெண்டு'ப் பகுதிகள் போன்றும், விசயநகர் ஆட்சிக் காலத்தில் பாளையங்கள் போன்றும், சோழர் காலத்தில் படைவீரர் தங்கிய பகுதிகளாகச் சோழர் தலைநகரையடுத்து அமைந் திருந்தன.

**பந்தணைநல்லூர்**

குற்றாலம் (10 கி. மீ.) திருப்பனந்தாள் (10 கி. மீ.), வைத்தீசுவரன் கோயில் (25 கி. மீ.) ஆகிய ஊர்களுக் கருகே இவ்வூர் இருக்கிறது. இங்குள்ள பசுபதீசுவரர் கோயில் சம்பந்தராலும், அப்பராலும் பாடப்பெற்றது.

இக்கோயிலுள்ள பகுதி கோட்டை எனப்படுகிறது. கோட்டைக்குள் ஒரு பெருமாள் கோயிலும் இருக்கிறது. கோட்டையைச் சுற்றி அகழிகளும் நான்கு பக்கங் களிலும் பீரங்கி மேடுகளும் உள்ளன. கோயிலுக் கெதிரில் சிதைந்த நிலையில் காணப்படும் 'ராணி மாடம்' ஓர் அரசரின் அரண்மனையாக இருந்ததாகக் கருதப் படுகிறது.

கோட்டைப் பகுதியில் உருளையான வெள்ளைக் கற்கள் ஆயிரக்கணக்கில் கிடைக்கின்றன. இவற்றில் சில, இக்கோயிலில் சேமித்துவைக்கப் பெற்றுள்ளன. ஆர்க்கிமீடிஸ் என்ற விஞ்ஞான மேதை சைரக்யூசில் உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பலவகை இயந்தி ரங்களைக் கண்டுபிடித்தார் என்றும் அவை யவனப் பொறிகள் என்ற பெயரோடு தமிழகத்துக் கோட்டை களில் இடம் பெற்று விளங்கின என்றும் அவையே பந்தணைநல்லூரில் வைத்துச் சோழர்களால் இயக்கப் பட்டதாகவும் அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வூரில் வாழ்ந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பரதநாட்டியக் கலைக் குப் புத்துயிரூட்டிய பெரியார் ஆவார்.

## பழையாறை

உயர்வு தாழ்வு என்பது மனிதர்க்கு மட்டுமின்றி மரம், செடி, கொடி, ஆறு, குளம், கடல், காடு, மாட மாளிகை, நகரம், நாடு இவ்வாறு எல்லாவற்றுக்கும் பொருந்தி அமைவது வாழ்க்கையில் நாம் காணும் ஒரு விந்தையாகும். இந்த விந்தையின் வடிவாக விளங்கும் இடங்களில் ஒன்று பழையாறை.

சோழநாட்டின் இரண்டாம் தலைநகரான பழையாறை எழில் மிகுந்த ஒரு நகரமாக இருந்தது. முடிகொண்ட சோழபுரம் என்னும் அந்தப் பழையாறை நகர் நேற் றிருந்த கோலம் என்ன? இன்றிருக்கும் நிலை என்ன?

கும்பகோணத்திற்குத் தென்புறத்தில் இன்று எளிய சிற்றூராகப் பொலிவிழந்து நிற்கும் பழையாறை ஒரு மறைந்த மாநகரமாகும். சோழர் வரலாற்றின் "இருண்ட காலத்தை"க் கண்டு மருண்டு நிற்கும் ஆராய்ச்சி யாளர்க்கு ஒளிகாட்டும் விளக்கு இச்சிற்றூர்தான். இவ் வூர் 5, 6 நூற்றுண்டுகளுக்கு முன்பு சீருடனும் சிறப் புடனும் திகழ்ந்தது.

சோழர்கள் தம் வலிமைகுன்றியகாலத்து இவ்வூரைத் தலைநகராகக் கொண்டனர். அதனால் பல்லவர் ஆட்சி தமிழ்நாடெங்கும் பரவியபோது பல்லவ நாட்டின் தென் பகுதிக்கு இவ்வூரே தலைநகராயிற்று.

முதலாம் இராஜராஜனும் அவனுடைய அக்கா ளாகிய குந்தவைப் பிராட்டியும் முதலாம் குலோத்துங்க னும் அவனுடைய மகன் பேரன் ஆகியோரும் இங்கே தான் வாழ்ந்தனர். வந்தியத் தேவனும் குந்தவையும் சந்தித்து முதன்முதலாகத் தங்களிடையே துளிர் விட்டிருக்கும் காதலைக் குறிப்பால் உணர்த்திக் கொண் டதும் இப்பழையாறையில்தான்.

ஒட்டக்கூத்தர் பாடல்களிலும் வீரசோழிய மேற்கோள் பாடல்களிலும் நந்திக்கலம்பத்திலும் இந்நகரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. "தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து பாரில் நீடிய பெருமைசேர் பதி பழையாறை" என்று சேக்கிழார், திருத்தொண்டர் புராணத்தில் பாடியிருக்கிறார். இலக்கிய நூல்களிலும் தேவாரங்களிலும் கல்வெட்டுக்களிலும் பழையாறை என்றே இந்நகர் வழங்கப்பட்டுள்ளது. ஆரை, ஆறை என்ற சொற்கள் பழங்காலத்தில் மதில்களையுடைய கோட்டையைக் குறித்தன. ("வண் கிடங்கு சூழும் ஆரை"). சைவ நாயன்மார்களில் ஒருவராகிய அமர்நீதி நாயனார் பழையாறையில் தோன்றியவர் என்று கூறவந்த ஆசிரியர் சேக்கிழார் "ஆறை வணிகர் அமர்நீதி" என்று இந்நகரைக் குறிப்பிடுகின்றார். எனவே பழமையான கோட்டை என்ற பொருள் பழையாறை என்ற பெயருக்கு ஏற்புடையது. ஐயாறை (தலைமையான கோட்டை அல்லது அழகிய கோட்டை) என்பது ஐயாறு (திருவையாறு) எனவும், தெள்ளாறை என்பது தெள்ளாறு எனவும் தஞ்சாறை என்பது தஞ்சாவூர் எனவும் வழங்கிவருவது இங்கே சிந்திக்கத்தக்கது.

பழையாறை நகர் அக்காலத்தில் முடிகொண்டானாற்றுக்கும் அரசிலாற்றுக்கும் இடையே ஐந்து மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் கொண்ட பரந்த நகரமாக அமைந்திருந்தது. பம்பைப்படை, மணப்படை, ஆரியப்படை, புதுப்படை என நான்கு படை வீடுகள் இங்கு இருந்தன. மழவர் படை என ஒரு படை வீடும் இருந்தது என்பர். இக்காலத்தில் அங்குக் காணப்படும் கீழைப் பழையாறை, பழையாறை வடதளி, தென்தளி, மேற்றளி, முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்தி முற்றம், திருமேற்றளி, சோழமாளிகை, ஆரியப்படையூர், பம்பைப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், சுந்தரப்

பெருமாள் கோயில், திருவலஞ்சுழி, நாதன்கோயில், கோணப்பெருமாள் கோயில், தாராசுரம், கும்பகோணத்தின் மேற்குப் பகுதி இவையாவும் பழையாறை மாநகரின் பகுதிகளேயாகும். ஏழாம் நூற்றுண்டு வரையில் பழையாறை எனவும், எட்டாம் நூற்றுண்டில் நந்திபுரம் எனவும், ஒன்பது, பத்தாம் நூற்றுண்டுகளில் பழையாறை நந்திபுரம் எனவும், பதினென்றும் நூற்றுண்டில் முடிகொண்ட சோழபுரம் எனவும், பன்னிரண்டாம் நூற்றுண்டில் இராஜராஜபுரம் எனவும் வெவ்வேறு பெயர்கள் இந்நகருக்கு வழங்கப் பட்டுள்ளன.

வரலாற்றில் இடம் பெற்றுள்ள இப்பகுதியை நாம் நன்கு அறிய இம்மாநகரத்தை அகழ்ந்து ஆராய்ச்சி செய்யவேண்டும். இன்றைய நிலையை அறிய இங்குள்ள வறண்ட குட்டையைக் கண்டால் போதியதாகும்; மாடமாளிகை இருபுடை நெருங்க யாறு கிடந்தன்ன அகனெடும் வீதிகள் இருந்த இடத்தில் குடிசைகளும் குட்டிச்சுவர்களும் நிற்கின்றன; படைவீரர்களின் படைக்கல ஒலி முழங்கிய வீடுகள் இருந்த இடத்தில் அங்கொரு இல்லமும் இங்கொரு குடிசையும் உள்ளன.

நாதன் கோயில் உள்ள நந்திபுரம் ஆயிரத்தளி என வழங்கப்பட்டுள்ளது. வீரசோழியத்தில் ஆயிரம் தளி என்பதற்கு ஆயிரம் அறைகள் கொண்ட இடம் என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. (கல்கத்தாவில் பிரிட்டிஷ் வைஸ்ராயின் மாளிகை 800 அறைகளுடன் கட்டப் பட்டது.) இங்கேதான் சோழ மன்னர்களின் அபிஷேக மண்டபம் இருந்ததாகக் கூறுவர். “ஆடகப் புரிசை ஆயிரத்தளி சோழவளவன் அபிஷேக மண்டபம்” என்று கல்வெட்டுக் கூறுகின்றது. சோழநாடு முழுவதும் வென்ற முதலாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் இந்தப் பழையாறை மண்டபத்தில்தான் முடிசூட்டிக்

கொண்டான். நந்திவர்மன் கட்டிய அரண்மனை நாதன்கோயிலில் இருந்தது என்பர்.

தென் இந்தியாவில் கட்டப்பெற்ற முதற் கற்கோயில் பழையாறை வடதளி சிவன் கோயில் ஆகும்; இக் கோயிலுக்குத் திருநாவுக்கரசர் பாடலும் திருச்சத்தி முற்றம் பட்டீச்சுரம் சிவன் கோயில்களுக்குத் திருஞான சம்பந்தர் பாடலும், திருமேற்றளி சிவன் கோயிலுக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடலும் உள்ளன. நாதன் கோயில் நந்திபுரத்தில் உள்ள நந்திபுரவிண்ணகரம் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்தில் கட்டப் பட்டதாகும். இவ்வைணவ ஆலயத்திற்குத் திருமங்கை ஆழ்வார் பாடல் உள்ளது.

இங்குள்ள சைவ வைணவ ஆலயங்களில் அற்புத மான சிற்ப உருவங்கள் பல இருக்கின்றன. கைலாச நாதர் துர்க்கை சிலைகளைப் பார்ப்பதற்காகவே ஒரு முறை இங்குச் செல்லலாம். இவ்வாலயங்களுக்குச் சோழ மன்னர்கள் பல திருப்பணிகளைச் செய்து வாகனம், ஆடை, ஆபரணங்களை வழங்கியுள்ளனர்.

**நாச்சியார்கோயில்**

இம்மாவட்டத்தின் புகழ்பெற்ற வைணவத் தலங் களில் இதுவும் ஒன்று. இவ்வூர், கும்பகோணத்திற்குத் தெற்கே 10 கிலோ மீட்டர் (6 மைல்) தொலைவில் இருக்கிறது.

இங்குள்ள பெருமாள் கோயில் திருமங்கை ஆழ் வாருக்கு ஈடுபாடுள்ளது என்பதும் அவர் இத்தலத்தைப் பற்றிப் பல பாசுரங்களைப் பாடியிருக்கிறார் என்பதும் இத்தலத்தின் சிறப்பை உணர்த்துகின்றன. இக்கோயி லில் கல்லிலேயே கருடன் இருக்கிறது. இக்கருடனுக்கு நெய்வேத்தியம் செய்யப்படும் அமுதகலசம் என்னும்

மோதகம் குறிப்பிடத்தக்கது ; இது, கலசம் போன்ற அமைப்பை உடையது ; மாவினால் செய்து (பச்சைப் பயிறு, வெல்லம், தேங்காய் ஆகியவை சேர்ந்த) பூரணத் தைத் தன்னுள்ளே வைக்கப்பெற்றது.

நாச்சியார் கோயிலின் ஒரு பகுதியான திருநறையூர் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்ருகும்.

விக்கிரக வார்ப்புக் கலையில் பல ஆண்டுகளுக்கு முன் நாச்சியார் கோயில் சிறந்து விளங்கிற்று. இப்போது வெண்கலப் பாத்திரத் தொழில் பெருகி யிருக்கிறது. குத்து விளக்கு, சர விளக்கு, கூசா போன்ற பொருள் களைச் செய்வதில் பயிற்சிதரும் அரசினர் நிறுவனமும் அவற்றைச்செய்து விற்பதற்காகக் கூட்டுறவு முறையில் ஒரு தொழிற்சாலையும் முறையே *1958* இலும் *1960* இலும் அரசாங்கத்தாரால் தொடங்கப் பெற்றுள்ளன.

பித்தளைப் பாத்திரங்கள், தகரச் சாமான்கள், வேட்டி ஆகியவற்றின் உற்பத்தியிலும் இவ்வூர் புகழ் பெற்றிருக்கிறது. இவ்வூரின் மக்கள்தொகை ஏறத்தாழ ஐயாயிரம் ஆகும்.

**நீலத்தநல்லூர்**

இங்கு மாசி பங்குனி மாதங்களில் வண்டி மாடுகளும் பெருவிலையுள்ள பசுமாடுகளும் வாங்கலாம். கும்ப கோணத்தில் இவ் வியாபாரம் *12* மாதங்களும் நடை பெறுகிறது.

**விநாயகத்தெரு** (மக்கள்தொகை *2,000*)

இவ்வூர் கொள்ளிடத்திலுள்ள ஒரு தீவில் அமைந் தது. அணைக்கரையிலிருந்து செல்லும் பாலத்தின் வழி யாக இவ்வூரை அடையலாம். *1924* இலும் *1961* இலும் வெள்ளத்தால் இவ்வூரார் பல இன்னல்களை அனுப வித்தனர்.

## 6. பாபநாசம் வட்டம்

தஞ்சை வட்டத்தின் வடபகுதி, கும்பகோணம் வட்டத்தின் தென்பகுதி ஆகியவற்றைக்கொண்டு இவ் வட்டம் 1910இல் உண்டாக்கப்பட்டது.

பொன்னி நல்லாளான காவிரியின் கிளைகளின் அரவணைப்பில் பாபநாசம் வட்டம் வளம் பெற்று விளங்குகிறது. வழிவாய்க்கால், மோட்டு வாய்க்கால், பிராயடி வாய்க்கால், கொங்கன் வாய்க்கால், நடு வாய்க்கால், தென்பகுதி வாய்க்கால், கல்லுகுடிகாணி வாய்க்கால், திருவைகாவூர் வாய்க்கால் போன்ற பல வாய்க்கால்கள் இவ்வட்டத்திலுள்ளன. கிராம மக்களின் முயற்சியால் அரசாங்க உதவியோடு இவை மூன்ரும் திட்டக்காலத்தில் ஆழமாக வெட்டிச் செப்பனிப்பட்டுள்ளன; பாபநாசத்தையும் கபிஸ்தலத்தையும் இணைக்க ஒரு மைல் தொலைவுக்குள் 1960இல் அரசாங்கத்தார் நான்கு பாலங்கள் கட்டியுள்ளனர்.

கலைத்துறையில் புகழ்பெற்ற மிலட்டூர், வாழ்வாங்கு வாழ ஏற்ற சிற்றூரான வாழ்க்கை, தொண்டரடிப் பொடியாழ்வார் பிறந்த தலம் ஆகிய திருமண்டக்குடி (அண்டக்குடி) ஆகிய ஊர்கள் இவ்வட்டத்திலுள்ளன.

ஐயம்பேட்டை, பாபநாசம், வலங்கைமான் ஆகியவை இவ்வட்டத்திலுள்ள பெரிய ஊர்களாகும். ராஜகிரி சக்கரப்பள்ளி, பண்டாரவாடை போன்ற பல ஊர்களில் முஸ்லிம்கள் பெருந்தொகையாக வாழ்கின்றனர். இப்பகுதியில் வெற்றிலைக் கொடிகால் மிகுதி. இந்துக்களும் முஸ்லிம்களும் இப்பகுதிகளில் நெருங்கிப் பழகி ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

**பாபநாசம்** (மக்கள் தொகை *9,000*)

வட்டத் தலைநகரான இவ்வூரில் ஒரு வைணவக் கோயில் இருக்கிறது. இக்கோயில் 15ஆம் நூற்றாண்டில் விசயநகர அரசர்களால் புதுப்பிக்கப்பட்டது என்பர். *108* லிங்கங்களுள்ள ஒரு சிவாலயம் இவ்வூரில் இருக்கிறது ; இங்கு கோயில் கொண்டிருக்கும் இறைவனை இராமலிங்கம் இராமபிரானல் வழிபடப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இவ்வூரருகேயுள்ள திருப்பலாத்துறைக் கோயில் சோழ, விசயநகர் ஆட்சிகளின்போது சிறப்புற்றிருந்தது.

நெல்லை மாவட்டத்திலும் ஒரு பாபநாசம் உண்டு ; அருவியும் மின்சார நிலையமும் அவ்வூருர்க்குப் பெருமை தருகின்றன.

**ஆலங்குடி**

இது கும்பகோணம் – நீடாமங்கலம் சாலையிலுள்ள சிற்றூர். சிறந்த பாக்குவெட்டிகள் செய்யப்படுவதால் இவ்வூர் புகழ்பெற்றிருக்கிறது.

தேவாரம் இவ்வூரை ‘ இரும்பூளை ’ என்று குறிப்பிடுகிறது. இங்குள்ள தட்சிணமூர்த்தி கோயில், சம்பந்தர் பாடல் பெற்றது. இக்கோயிலுக்குள் செல்ல, தெற்குத் திருவாயில் வழியாகச் செல்லவேண்டும்.

இவ்வூரருகே உள்ள அமராவதி என்னும் மிகச்சிறிய ஊர், தலைசிறந்த ஆட்சியாளராக விளங்கித் திருவிதாங்கூரிலும் புதுக்கோட்டையிலும் புகழ்பெற்ற சர். ஏ. சேஷையா சாஸ்திரி (*1828-1903*) பிறந்த ஊராகும்.

**ஆவூர்**

பட்டீச்சுரத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவிலும் பாபநாசத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவிலும் இவ்வூர் உளது. சோழர் ஆட்சியில், ஆருர் ஒரு

கூற்றத்தின் தலைநகராக இருந்தது. இவ்வூரிலுள்ள பசுபதீச்சுரம் என்னும் கோயில் தேவாரம் பெற்றது.

### இரும்புதல்

இவ்வூரின் பெயர் இக்காலத்தில் இரும்புதலை என வழங்கிவருகிறது. இது ஒரு வைப்புத்தலம்.

### ஐயம்பேட்டை

இது தஞ்சையிலிருந்து வடகிழக்கே 15 கி. மீ. தொலைவிலிருக்கிறது. இவ்வூரில் 10,000 மக்களுக்கு மேல் வாழ்கின்றனர்.

பேட்டை என்னும் இறுதிச்சொல் தொழில் வளம் மிக்க ஊரைக் குறிக்கும். (சான்று : வண்ணாரப்பேட்டை, முத்துப்பேட்டை, திருநெல்வேலிப் பேட்டை). இவ்வூர் பட்டுச்சேலை நெசவுத் தொழிலால் சிறப்புற்றிருக்கிறது. தஞ்சை நாயக்க மன்னர்களின் அமைச்சராக இருந்த கோவிந்த ஐயன் என்னும் கோவிந்த தீட்சிதரின் திட்டப் படி கட்டப்பெற்ற பேட்டை யாதலால், இது ஐயம் பேட்டை எனப் பெயர் பெற்றது. தஞ்சை நகரிலுள்ள கடைத்தெரு இவ்வாறே இவர் பெயரால் ‘ஐயங்கடை’ என்று பெயர் பெற்றிருக்கிறது. தஞ்சைக்கு அண்மை யிலுள்ள அம்மன்பேட்டை என்பது அவர் மனைவியின் பெயரால் அமைந்ததாகும்.

இவ்வூரில் 1674இல் வெங்கோஜிக்கும் மதுரை நாயக்கர்களுக்கும் போர் நடைபெற்றது.

### கணபதி அக்கிரகாரம்

காவிரியின் வடகரையில் ஐயம்பேட்டையை யடுத்து நான்கு மைல் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. தெருச் சந்திகளிலெல்லாம் கோயில் கொண்டுள்ள கணபதி பெயரால் அமைந்த இவ்வூரில் கணபதிக்குச் சிறந்த கோயில் உண்டு. ஆவணி வளர்பிறைச் சதுர்த்தி நாளில்

இவ்வூரார் பெரிய அளவில் விநாயகருக்கு விழா எடுக்கின்றனர்.

**கபிஸ்தலம் (கபித்தலம்)**

(மக்கள் தொகை *3, 500*)

பாபநாசம் இரயில் நிலயத்திலிருந்து இரண்டரை கிலோ மீட்டர் தொலைவில் காவிரியின் வடகரையில் அமைந்தது கபிஸ்தலம்; இவ்வூரை, கண்ணன் கபிஸ் தலம் என்பர். 'பஞ்ச கிருஷ்ணஸ்தலம்' எனப்படும் கண்ணன் தலங்கள் ஐந்தனுள் இதுவும் ஒன்று. வைணவ ஆழ்வார்களின் மங்களசாசனம் இக் கோயிலுக்கு உண்டு. இவ்வூரருகேயுள்ள வடகுரங்காடு துறை, வாலி வழிபட்ட சிவத்தலம்; அங்கே கல்வடிவில் நடராச உருவம் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் கருங்கல் நடராசர் அது ஒன்றே. கஜேந்திரனுக்கு மகாவிஷ்ணு மோட்சம் கொடுத்த தலம் கபிஸ்தலமே என்று கருதப்படுகிறது.

வடகுரங்காடுதுறைக் கோயில் சம்பந்தர் தேவாரம் பெற்றது; செம்பியன் மாதேவியாரால் கட்டப்பெற்றது. கபிஸ்தலம் மூப்பனர் குடும்பத்தார் வழிவழியாகச் சத்திரங்கள் நிறுவியும் அன்னம் வழங்கியும் அறம் வளர்த்தும் அனைத்திந்தியாலும் தம் புகழைப் பரப்பி யுள்ளனர். இதனல் வடஇந்தியர் தஞ்சைப் பகுதியை 'மூப்பனர் தேசம்' என்று சொல்லிவந்தனர். 'மூப்பனர் தேசத்து அரசர்' என்று சரபோசியைக் காசி நகரத்து மக்கள் வாழ்த்தியதாகவும் அதன் பின்னரே சரபோசியும் சத்திரங்கள் நிறுவ மூப்பனர்களைப் போலவே முன்வந்ததாகவும் வரலாறு உண்டு.

**சுந்தரப்பெருமாள் கோயில்**

இது ஒரு வைணவத் தலம். காவிரி, அரசலாறு, திருமலைராசனறு, குடமுருட்டி ஆகிய நான்கும் இவ்வூ

ரருகே செல்லுகின்றன. இங்கு நெசவு மிகுதி. பாப நாசத்திலிருந்து சுந்தரப்பெருமாள் கோயில் நான்கு கிலோ மீட்டர்த் தொலைவு.

**சூலமங்கலம்**

இது பாபநாசத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் மேற்கே இருக்கிறது. பாகவத மேளாக் கலை இவ்வூரிலும் சிறந்து விளங்குகிறது. இக் கலையில் வல்லுனரான வைத்தியநாத பாகவதர் இவ்வூரினர். சூலமங்கை, பசுமங்கை, நந்தி மங்கை, புல்லமங்கை, அதிமங்கை என்ற தலங்கள் இப் பகுதியில் உள்ளன.

**திருக்கருகாவூர்** (திருக்களாவூர்)

பாபநாசம் இரயில் நிலையத்திலிருந்து 6 கி. மீ. தொலைவிலும், தஞ்சை நீடாமங்கலம் பகுதியிலுள்ள சாலியமங்கலம் இரயில் நிலையத்திலிருந்து 11 கி. மீ. தொலைவிலும் இவ்வூர் இருக்கிறது.

சைவ ஆகமப்படி திருக்கருகாவூர் லிங்கம் சிறப் பானது. இதற்குப் புனுகுச் சட்டம் சார்த்தப்படுகிறது; அபிடேகம் கிடையாது. சம்பந்தரும், திருநாவுக்கரசரும், சந்திரனும் வழிபட்ட தலம்.

இக்கோயிலையடுத்து, கர்ப்ப ரட்சகி அம்மன் கோயில் இருக்கிறது. இவ்வூரினரும் இங்கு வந்து வழிபடுபவரும் தொல்லையின்றிப் பிள்ளைப்பேறு பெறுவதால், இந்து சமயத்தாரல்லாதவரும் இங்கே வருகின்றனர். 'கரு வைக் காத்த ஊர்' என்னும் பொருளிலேயே இவ்வூர் திருக்கருகாவூர் என்று பெயர் பெற்றிருக்கிறது. இது வரை இங்கே கர்ப்பத்தோடு யாரும் இறந்ததில்லை என இவ்வூரினர் பலர் என்னிடம் கூறினர்.

**திருப்பாலத்துறை**

இது, பாலை மரங்கள் நிறைந்த ஊர். எனவே, இவ்வாறு பெயர் பெற்றது. திருநாவுக்கரசர் பதிகம்.

பெற்ற தலம். இறைவன் – பாலைவனநாதர். இறைவி – தவள வெண்ணகை.

**திருவைகாவூர்**

(மக்கள் தொகை ஏறத்தாழ 3,000)

திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம் பாபநாசத்துக்கு வடக்கே 11 கி. மீ. தொலைவில் கொள்ளிடத்தின் தென் கரையில் இருக்கிறது. இங்குள்ள நந்திகள் யாவும் திரும்பியே உள்ளன.

**நல்லூர்**

திருநல்லூர், ஆண்டாள் நல்லூர் என்னும் பெயர்களும் இவ்வூருக்கு உண்டு. சுந்தரப்பெருமாள் கோயில் இரயில் நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர்த் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. இங்குள்ள கலியாண சுந்தரேசுவரர் கோயில், அப்பராலும் சம்பந்தராலும் பாடப்பெற்றது; கோச்செங்கச் சோழனால் கட்டப்பெற்ற மாடக் கோயில்களுள் இதுவும் ஒன்று. இக்கோயில் மலைபோலுயர்ந்த இடத்தில் அமைந்தது; ஒய்சாளர் ஆட்சி பற்றிய கல்வெட்டுக்களை உடையது. அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டிய தலம் இதுவே, ஆனிப் பூரத் திருவிழா இவ்வூரில் சிறப்பாக நடைபெறுகிறது.

இங்குள்ள இறைவனின் உருவத்தில் ஆறு நாழிகைக்கு ஒருமுறை வெவ்வேறு விதமான ஐந்து வண்ணங்கள் தோன்றுவதால், இறைவனுக்குப் 'பஞ்சவர்ணேசுவரர்' என்ற பெயர் வழங்குகிறது.

**மிலட்டூர்**

(மக்கள் தொகை 6,000)

இவ்வூர்ச் சிவன்கோயில் முதலாம் இராஜராஜன் காலத்திலேயே புகழ் பெற்றிருந்தது. பாகவத மேளாக்

கலையில் மிலட்டூர் சிறப்பிடம் பெற்றிருப்பதை, 'கலைகள்' என்னும் பகுதியில் காண்க.

**முன்னியூர்** (முனியூர்)

இவ்வூர் சாலியமங்கலத்துக்கு அருகே இருக்கிறது. இவ்வூரிலும் வீரமங்கலத்திலும் சமணச் சிலைகள் உள்ளன.

**வலங்கைமான்**

(மக்கள் தொகை ஏறத்தாழ 6,500)

கும்பகோணத்துக்குத் தெற்கே 10 கி.மீ. தொலைவில் குடமுருட்டி ஆற்றின் கரையிலுள்ளது இவ்வூர்; இது 19ஆம் நூற்றாண்டில் ஒரு வட்டத் தலைநகராக இருந்தது. இவ்வூர்க் கோயிலில் சிவபெருமானின் வலதுகையில் மான் இருப்பதால், வலங்கைமான் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆழிசூழ் உலகெலாம் புகழுமாறு ஆங்கில மொழியில் நாவன்மை படைத்திருந்த மகாகனம் வ. ச. சீனிவாச சாஸ்திரியார் இவ்வூரினராவர்.

## 19. குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்

கி. பி. 850 தஞ்சை சோழப் பேரரசின் தலைநகர் ஆதல்.

985 - 1014 தஞ்சைக்கும் சோழப் பேரரசிற்கும் பொற்காலம்.

1009 பெரிய கோயில் இராஜராஜனால் கட்டி முடிக்கப்பெற்றது.

1014 - 1044 இதுவும் சோழப் பேரரசின் பொற்காலமே, ஆயின் தலைநகர் தஞ்சையிலிருந்து கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாறியதால் தஞ்சையின் முக்கியத்துவம் குறையலாயிற்று.

1279 சோழப் பேரரசு மறைவு; பாண்டியர் ஆட்சி துவக்கம்.

14-ஆம் நூற்றுண்டு: விசயநகரப் பேரரசின் ஆட்சி.

1532 - 1674 தெலுங்கு நாயக்க மன்னர்கள் ஆட்சி. சங்கீதமகால், தர்பார் மண்டபம் முதலிய கட்டடங்கள் கட்டப்பெற்றன. இக்காலத்தில்தான் ஐரோப்பியர் தஞ்சை மாவட்டத்தில் குடியேறுவதற்கு அனுமதிக் கப் பட்டனர்.

1620 முதல் தடவையாக ஒரு டேனிஷ் தளபதி தரங்கம்பாடியில் வந்திறங்கினுர்.

1660 – 1781 நாகப்பட்டினத்தில் டச்சு ஆட்சி.

1676 எக்கோஜி தஞ்சை மன்னன் ஆனுன். மஹாராஷ்டிரர் ஆட்சி துவங்கிற்று.

1676 - 1855 மகாராஷ்டிர அரசர்களின் ஆட்சி.

1706 கிறித்தவ மதத்தைப் பரப்ப ஜெர்மானியர் தரங்கம்பாடிக்கு வந்தனர்.

1707 சீகன்பால்கு பாதிரியார் முதல் தடவை யாகத் தமிழில் கிறித்தவ ஆராதனே செய்தார்.

1711 'புதிய ஏற்பாடு' தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது.

1713 தமிழில் அச்செழுத்துக்களேச் செய்ய ஜெர்மனியிலிருந்து பெர்லின், ஆட்லர் என்ற இருவர் தரங்கம்பாடிக்கு வந்தனர்.

1717 தரங்கம்பாடியில் புதிய ஜெருசேலம் தேவாலயத்துக்கு அடிக்கல் போடப் பட்டது.

1774 தரங்கம்பாடியில் ஐரோப்பியர் பெருந் தொகையாக வந்து ஊரை உருவாக்கினர்.

1779 ஸ்குவார்ட்ஸ் என்ற வெள்ளைக்காரப் பாதிரியார் தஞ்சாவூரில் தேவாலயம் கட்டினர்; இதுமுதல் மாவட்டமெங்கும் பிரிட்டிஷ் செல்வாக்குப் பெருகிற்று.

1781 மறைமுகமாகச் சில இடங்களிலும் நேரடியாகப் பல இடங்களிலும் மாவட்டமெங்கும் பிரிட்டிஷ் ஆட்சி அமைந்தது; தஞ்சையில் 'பிரிட்டிஷ் ரெசிடெண்டு' நியமிக்கப்பட்டார்.

1782 நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு, பிரிட்டிஷார் தஞ்சை மாவட்டத்தை ஆளத்தொடங்கினர்.

1798 இரண்டாம் சரபோசி மன்னனுன்; ஆனல் அதிகாரம் முழுவதும் ஆங்கிலேயர் கைக்கு மாறிற்று. பெயரளவில் மஹாராஷ்டிரர் ஆட்சி நடந்துவந்தது.

ஸ்குவார்ட்ஸ் தஞ்சாவூரில் காலமானுர்.

1801 தரங்கம்பாடியைப் பிரிட்டிஷார் கைப்பற்றினர்.

1806 மாவட்டம் நீதிமன்றம் நிறுவப்பட்டது.

1816 நெப்போலியனைத் தோற்கடித்துப் பிரிட்டிஷார் 1814இல் அடைந்த வெற்றியின் நினைவாக "மனோரா"வைச் சரபோசி மன்னர் கட்டினுர்.

1832 அறிவுக் கருவூலமாகவும் கலைக் காவலராகவும் விளங்கிய சரபோசிமன்னர் உயிர் நீத்தார்.

1839 கல்லணையை வெள்ளைக்காரர்கள் திருத்திக் கட்டினர்.

1844 நாகப்பட்டினத்தில் அர்ச். சூசையப்பர் கல்லூரி தொடங்கப் பெற்றது.

1845 டச்சுக்காரர்கள் தரங்கம்பாடியைப் பிரிட்டிஷாருக்கு விற்றனர். மாவட்டத் தலைநகரைப் பிரிட்டிஷார் நாகப்பட்டினத்திலிருந்து தரங்கம்பாடிக்கு மாற்றினர்.

1854 தரங்கம்பாடியிலிருந்து மாவட்டத் தலைநகரம் கும்பகோணத்துக்கு மாற்றப்பட்டது.

,, கும்பகோணத்தில் (இப்போது அரசாங்கக் கல்லூரி என்ற பெயரில் இருந்துவரும்) புரவின்சியல் ஸ்கூல் ஏற்பட்டது.

1860 மாவட்டத் தலைநகரம் தஞ்சாவூருக்கு மாற்றப்பட்டது.

,, இம்மாவட்டத்திற்கெனத் தனியாக 'சூப்பரிண்டன்டெண்டு ஆப் போலீஸ்' நியமிக்கப்பட்டார்.

1861 நாகப்பட்டினத்திலிருந்து தஞ்சாவூருக்கு இரயில்பாதை போடப்பட்டது.

1862 தஞ்சாவூரிலிருந்து திருச்சிக்கு இரயில் போக்குவரத்து தொடங்கிற்று.

1863 தஞ்சையில் மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்பட்டன; 1806 முதல் கும்பகோணத்தில் இருந்த மாவட்டச் சிறைச்சாலை தஞ்சாவூருக்கு மாற்றப்பட்டது.

1864 கும்பகோணம் "புரவின்சியல் ஸ்கூல்" கல்லூரியாயிற்று. ஸ்குவார்ட்ஸ் 1784இல் தொடங்கிய பள்ளி தஞ்சையில் "செண்ட் பீட்டர் கல்லூரி" ஆயிற்று.

1866 தஞ்சாவூர், நாகப்பட்டினம், கும்ப கோணம், மாயூரம், மன்னார்குடி ஆகிய ஐந்து ஊர்களில் நகராண்மைக் கழகங்கள் நிறுவப்பட்டன.

1867 கும்பகோணம் கல்லூரி முதல்தரக் கல்லூரியாயிற்று.

1872 மாயூரத்தில் "ஜில்லா முன்சீப் கோர்ட்டு" அமைக்கப்பெற்றது.

1874 சென்ட் பீட்டர் கல்லூரி முதல்தரக் கல்லூரியாக்கப்பட்டது.

1877 சீர்காழி – தஞ்சாவூர் இரயில் போக்கு வரத்து தொடக்கம்.

1879 சிதம்பரம்-சீர்காழி இரயில்பாதை திறக் கப்பட்டது.

1880 திருவையாற்றில் அரசர் கல்லூரி (வட மொழிக் கல்வி புகட்ட) தொடங்கப் பெற்றது.

1883 அர்ச். சூசையப்பர் கல்லூரி நாகப்பட்டி னத்திலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்டது.

1894 திருவாரூரில் நகராண்மைக் கழகம் ஏற்பட் டது. மாயூரத்திலிருந்து முத்துப்பேட் டைக்கு இரயில்பாதை போடப்பட்டது.

1895 வெஸ்லியன் மிசனைச் சேர்ந்த ரெவரண்டு பின்ட்லே 'பின்ட்லே கல்லூரி'யை நாகப் பட்டினத்தில் தொடங்கினார்.

1898 பின்ட்லே கல்லூரி நாகப்பட்டினத்தி லிருந்து மன்னார்குடிக்கு மாற்றப்பட்டது.

,, பேரளம் – காரைக்கால் நகரங்களுக் கிடையே இரயில்பாதை இணைப்பு ஏற் பட்டது.

1899 நாகப்பட்டினத்திலிருந்து நாகூருக்கு இரயில்பாதை நீட்டப்பட்டது.

1902 முத்துப்பேட்டை-பட்டுக்கோட்டை இரயில்பாதை ஏற்பட்டது.

1903 பட்டுக்கோட்டை-அறந்தாங்கி இரயில் பாதை ஏற்பட்டது.

1904 கொள்ளிடம் ஆற்றின்மீது ஆனைக்காரன் சத்திரத்திற்கு அருகே கட்டப்பெற்றிருந்த சாலைப்பாலம் உடைந்துபோயிற்று.

1906 வடுவூர் ஏரி உடைப்பு.

1907 கண்ணாறு ரெகுலேட்டர் உடைப்பு.

1908 செனட் பீட்டர் கல்லூரி மூடப்பெற்றது.

1910 தஞ்சை வட்டம் ஏற்பட்டது.

1911 கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றிற்று.

,, மாயூரத்தில் கோட்டஆட்சி அலுவலகம் அமைக்கப்பட்டது.

,, பட்டுக்கோட்டை வட்டத்தின் சிலபகுதிகள் அறந்தாங்கி வட்டம் என்ற பெயரில் புதுவட்டமாக ஏற்பட்டன.

1912 மாயூரம் வட்டம் தில்லையாடிக்கு மோ. க. காந்தி (பிற்காலத்தில் மகாத்மா காந்தியடிகள்) வருகை.

1914 திருவாரூரில் நகராண்மைக் கழகம் ஏற்பட்டது.

1915 நீடாமங்கலம்-மன்னார்குடி இரயில்பாதை போடப்பட்டது.

1919 திருத்தருப்பூண்டி – அகஸ்தியாம்பள்ளி இரயில்போக்குவரத்து தொடக்கம்.

,, தமிழ்ச் சுவிசேஷ லூத்தரன் திருச்சபை, உரிமைபெற்ற தனி நிறுவனமாயிற்று.

1920 சீர்காழியில் பெருவெள்ளம்.

1921 முகம்மது அலி சகோதரர்களும் மகாத்மா காந்தியும் தஞ்சை மாவட்டத்துக்கு வருகை.

1922 திருவாவடுதுறையில் பெருங் கலகம்.

1923 தருமபுர ஆதீனத்துத் தலைவர் கொலை செய்யப்பட்டார்.

1924 காவிரியில் பெருவெள்ளம்.

,, காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றி மைசூர் - சென்னை அரசாங்கங்களுக்கிடையே உடன்பாடு.

,, மாயூரம்-தரங்கம்பாடி பஸ் போக்குவரத்து ஏற்பட்டது.

1925 பட்டுக்கோட்டையில் இரயில் விபத்து.

1926 மாயூரம்-தரங்கம்பாடி இரயில் போக்குவரத்து ஏற்பட்டது.

1928 தென் இந்திய இரயில்வேயில் வேலை நிறுத்தம். தென் இந்திய இரயில்வேத் தொழிற்கூடம் நாகப்பட்டினத்திலிருந்து திருச்சி – பொன்மலைக்கு மாற்றப்பட்டது.

1930 வேதாரணியத்தில் உப்பு சத்தியாக்கிரகம்.

,, காவிரியில் பெருவெள்ளம்.

1931 தஞ்சைக்கோயிலிலுள்ள சோழர் காலத்துச் சுவரோவியங்களை வரலாற்றறிஞர் எஸ். கே. கோவிந்தசாமி உலகுக்கு அறிவித்தார்.

1933 கல்லணைக் கால்வாயின் நீர் பாசனத்துக்கு விடப்பட்டது.

1934 மன்னார்குடி பின்ட்லே கல்லூரி மூடப்பட்டது.

1936 அகஸ்தியாம்பள்ளியிலிருந்து கோடிக்கரை வரை இரயில்பாதை போடப்பட்டது.

1941 கரந்தையில் புலவர் கல்லூரி ஏற்பட்டது.

1942 பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் போக்கு வரவு தடைப்பட்டதால் ரெங்கூன் அரிசி இறக்குமதி நின்றுபோயிற்று. தஞ்சை மாவட்டத்து அரிசிக்கு தேவை பெருகிற்று.

,, "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் எதிரொலியாக இம்மாவட்டத்தில் நீடுர் போன்ற இடங்களில் இரயில் பாலங்களும் தண்டவாளங்களும் உடைக்கப் பட்டன.

1943 சென்னைநகரில் ஜப்பானியர் குண்டு போட்டனர். அங்கிருந்து பல்லாயிரம்பேர் தஞ்சைமாவட்டத்துக்கு ஓடிவந்தனர். அதனால் மாவட்டத்தின் மக்கள்தொகை பெருகிற்று. புதிதாகச் சில உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பெற்றன.

1944 திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி தொடங்கப்பெற்றது.

1946 தர்மபுரத்தில் தமிழ்க் கல்லூரி தொடங்கப் பெற்றது.

1948 நாணலூரில் கம்யூனிஸ்ட்டுகள் கலகம். 1951 வரை மாவட்ட மெங்கும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குப் பெருகிற்று.

1950 (1930இல் நடைபெற்ற) உப்பு சத்தியாக்கிரக நினைவுத்தூண் அகஸ்தியம்பள்ளியில் திறந்து வைக்கப்பட்டது.

1951 சிங்கிப்பட்டியில் நுரையீரல் மருத்துவ மனை அமைந்தது.

1952 இம்மாவட்டத்தினராகிய திரு. க. சந்தானம் விந்தியப் பிரதேசத்தின் கவர்னராக நியமிக்கப்பெற்ருர்.

,, பெரும் புயல்; இம்மாவட்டத்தின் பெரும் பகுதியில் சேதம் ஏற்பட்டது.

1952 தஞ்சைச் சாகுபடியினர் பண்ணையாட்கள் பாதுகாப்புச் சட்டம் மாநிலச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. கண்டுமுதலில் உரிமையாளருக்கு 3 பங்கும் உழுபவர்களுக்கு 2 பங்கும் என்று வரையறை செய்யப்பட்டது. பண்ணையாட்களின் கூலிகளும் வரையறுக்கப்பட்டன.

1953 அறந்தாங்கி – காரைக்குடி இரயில்பாதை திறக்கப்பட்டது.

,, நீதி, நிர்வாகம் என்ற தனித்துறைகள் ஏற்பட்டன.

,, தஞ்சை அரண்மனையில் கலைக்கூடம் தொடங்கப்பெற்றது.

1954 ஒரத்தநாடு வட்டம் உண்டாக்கப்பட்டது.

,, ஒரத்தநாட்டில் கால் நடைப்பண்ணை திறக்கப் பட்டது.

,, தஞ்சை மாவட்டத்திற்குள் உள்ள காரைக்கால், பிரெஞ்சு ஆட்சியிலிருந்து விடுபட்டு இந்திய யூனியனுடன் இணைந்தது.

,, தஞ்சை நகரையும் தஞ்சைப் பெரியகோயிலையும் பாதுகாக்கும் 190 அடி அகலமும் 20 அடி உயரமும், உள்ள கோட்டைச் சுவர்கள் 4 மைல் நீளத்துக்கு இருப்பது

புதைபொருள் ஆராய்ச்சியாளரால் கண்டு பிடிக்கப்பட்டது.

1955 அதிராம்பட்டினத்தில் காதர் மொகையதீன் கல்லூரி, மாயூரத்தில் அன்பநாதபுரம் வகையரு அறநிலையக்கல்லூரி, தஞ்சையில் ராஜா சரபோஜி கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகள் தொடங்கப் பெற்றன.

,, உய்யக்கொண்டான் கால்வாயிலிருந்து பாசனத்துக்கு நீர் விடப்பட்டது.

,, இந்தியாவின் தலைமை அமைச்சர் நேரு தஞ்சைமாநகருக்கு வருகை, தஞ்சையின் கொட்டகை அலங்காரக் கலைக்குப் பாராட்டு.

,, இரண்டாவது பெரும்புயல்; கடற்கரையோரப் பகுதிகளில் வெள்ளம்; தென்னைகள் சாய்ந்தன; போக்குவரத்து, சீர் குலைந்தது; பெருஞ்சேதம்.

,, கும்பகோணம் கல்லூரி நூற்றாண்டுவிழா.

1956 இம்மாவட்டத்தில் முதல்தடவையாக ஒரு சர்க்கரை ஆலை தொடங்கப்பெற்றது.

,, பூண்டியில் ஸ்ரீபுஷ்பம் கல்லூரி தொடங்கப் பெற்றது.

1957 தஞ்சை மாவட்டத்தில் நிலநன்கொடை இயக்கத் தந்தை வினோபா பாவே சுற்றுப் பயணம்.

,, தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சாலை வழி இணைப்பதற்கான பாலம் கொள்ளிடத்தின் மீது புதிதாகக் கட்டிமுடிக்கப் பெற்றது.

,, நாகப்பட்டினம் அருகே கடுவையாறு பாலம் கட்டி முடிக்கப் பெற்றது.

1958 தஞ்சை நகரில் 'பாலிடெக்னிக்' திறக்கப் பட்டது.

,, தஞ்சை மருத்துவக்கல்லூரிக் கட்டிடங் களுக்கு இந்தியக் குடியரசின் முதல் தலை வரான இராஜேந்திர பிரசாத் அடிக்கல் நாட்டினர்.

1959 ஒரத்தநாடு, தஞ்சை வட்டங்கள் அடங்கிய கோட்ட ஆட்சி அலுவலகம் தஞ்சை நகரில் அமைக்கப்பட்டது.

,, தஞ்சை நகரிலிருந்து வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் நாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டது.

1960 நெல் வேளாண்மையைப் பன் மடங்காக்கு வதற்கான "இணைப்புத் திட்டம்" இந்தி யாவில் ஏழு மாவட்டங்களில் அமலுக்கு வந்தது. தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டம் இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

,, தஞ்சை நகருக்கு அருகே ஒரு தொழிற் குடியிருப்பு ஏற்பட்டது.

1961 தஞ்சை நகருக்குள் கல்லணைக்கால்வாய் உடைப்பு; சில தெருக்களில் சிலமணி நேரம் வெள்ளம் பெருக்கெடுத்தது.

,, இசை அறிஞர் தியாகராசர் நூற்றாண்டு விழா ; அரசாங்கம் அஞ்சல் தலைகளில் தியாகராசர் படத்தைப் பொறித்தது.

,, தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி தொடக்கம்

,, தஞ்சை, பாபநாசம், கும்பகோணம் வட் டங்களில் 50 இடங்களில் காவிரியில் பெரு வெள்ளம். காவிரியும் அதன் கிளைகளும் உடைத்தன. திருவையாறும் கோயிலடி யும் காலி செய்யப்பட்டன. கல்லணைக் குச் சேதம் ஏற்படுமென்ற அச்சமும் இருந்தது. கோயிலடியில் கொள்ளிடம் ஆற்றின் உடைப்பு, இராணுவ வீரர்களின் அயராத முயற்சியால் 23 நாட்களுக்குப் பிறகு அடைக்கப்பட்டது.

**கும்பகோணம் மகாமகம் நடந்த ஆண்டுகள்**

*1885, 1897, 1909, 1921, 1933, 1945, 1956.*

## 20. பிற்சேர்க்கை

### எல்லைகள்

வடக்கே - திருச்சி, தென் ஆர்க்காடு மாவட்டங்களும் கொள்ளிடம் **ஆறும்.**

தெற்கேயும் மேற்கேயும் - திருச்சி, இராமநாதபுர மாவட்டங்கள்.

கிழக்கே - கடல்: (1) வங்காளக் குடாக்கடல் (2) பாக் ஜலசந்தி.

### அமைப்பு

குறுக்கை - *9·51°-க்கும், 11° 2.5°-க்கும் இடையே*
நெடுக்கை - *78° 45°-க்கும் 79° 50°-க்கும் இடையே*
பரப்பு - *9,569 சதுர கி.மீ. அல்லது 3,738 சதுர மைல்*
மழை - *1,143·2 மில்லி மீட்டர் (44·39 அங்குலம்)*

| வட்டங்கள் | பரப்பளவு சதுர கி. மீ. | பரப்பளவு சதுர மைல் | மக்கள் தொகை 1951இல் |
|---|---|---|---|
| தஞ்சை மாவட்டம் | 9569 | 3,740 | 29,82,670 |
| அறந்தாங்கி | 1019 | 398 | 1,41,387 |
| கும்பகோணம் | 542 | 212 | 3,48,104 |
| சீர்காழி | 437 | 171 | 1,63,891 |
| தஞ்சாவூர் | 1078 | 421 | 3,81,984 |
| திருத்தருப்பூண்டி | 1280 | 496 | 2,48,942 |
| நன்னிலம் | 745 | 291 | 2,48,487 |
| நாகப்பட்டினம் | 615 | 240 | 2,61,236 |
| பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு | 1787 | 698 | 4,01,818 |
| பாபநாசம் | 584 | 228 | 2,16,498 |
| மன்னார்குடி | 770 | 301 | 2,48,830 |
| மாயூரம் | 723 | 282 | 3,21,493 |

## 1961இல் எடுத்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பு விவரம்

| | |
|---|---|
| மாவட்டத்தின் மக்கள் தொகை | 32,49,960 |
| ஆடவர் | 16,12,973 |
| பெண்டிர் | 16,36,987 |

**வட்டங்களின் மக்கள் தொகை**

| | |
|---|---|
| அறந்தாங்கி | 1,55,952 |
| பட்டுக்கோட்டை | 2,90,656 |
| ஒரத்தநாடு | 1,94,308 |
| தஞ்சாவூர் | 3,63,261 |
| திருத்தருப்பூண்டி | 2,74,845 |
| நாகப்பட்டினம் | 2,78,950 |
| நன்னிலம் | 2,66,926 |
| கும்பகோணம் | 3,68,017 |
| மாயூரம் | 3,64,151 |
| பாபநாசம் | 2,33,088 |
| சீர்காழி | 1,85,808 |
| மன்னார்குடி | 2,73,998 |

குறிப்பு :—இப்புள்ளிகள் தோராயமானவை. சரியான புள்ளி விவரம் 1962-இல் வெளியாகும் இறுதி அறிக்கையிலேயே தெரியும்.

### நகராண்மைக் கழகங்கள்

**செலக்சன் கிரேடு**

தஞ்சை மாவட்டத்தில் செலக்சன் கிரேடு நகராண்மைக் கழகம் ஒன்றுமில்லை.

| **முதல் தரம்** | **மக்கள் தொகை (1961)** |
|---|---|
| 1. கும்பகோணம் | 92,554 |
| 2. தஞ்சாவூர் | 1,10,968 |
| **இரண்டாம் தரம்** | |
| 3. மாயூரம் | 51,403 |
| 4. நாகப்பட்டினம் | 59,100 |
| **மூன்றும் தரம்** | |
| 5. மன்னார்குடி | 33,554 |
| 6. திருவாரூர் | 30,143 |

**சிறு நகரங்கள்**

| | |
|---|---|
| சீர்காழி | 19,570 |
| திருமுல்லைவாயில் | 7,328 |
| வைத்தீசுவரன் கோயில் | 5,048 |
| குத்தாலம் | 8,512 |
| தரங்கம்பாடி | 14,705 |
| ஆடுதுறை | 8,590 |
| திருவிடைமருதூர் | 9,199 |
| தாராசுரம் | 4,148 |
| நன்னிலம் | 7,803 |
| குடவாயில் (கொடவாசல்) | 8,150 |
| ஐயம்பேட்டை | 9,625 |
| பாபநாசம் | 9,625 |
| வலங்கைமான் | 6,912 |
| அம்மாப்பேட்டை | 9,262 |
| திருவையாறு | 11,170 |
| திருக்காட்டுப்பள்ளி | 8,044 |
| வல்லம் | 9,612 |
| ஒரத்தநாடு | 7,154 |
| நீடாமங்கலம் | 4,892 |
| கூத்தநல்லூர் | 13,984 |
| வடக்குப் பொய்யூர் | 5,926 |
| திருத்தருப்பூண்டி | 13,482 |
| முத்துப்பேட்டை | 11,259 |
| வேதாரணியம் | 18,018 |
| பட்டுக்கோட்டை | 24,750 |
| அதிராம்பட்டினம் | 15,221 |
| அறந்தாங்கி | 10,246 |

## ஆட்சிப் பிரிவுகள்

| **கோட்டம்** | **அதைச் சேர்ந்த வட்டங்கள்** |
|---|---|
| தஞ்சாவூர் | - தஞ்சவூர், ஒரத்தநாடு |
| கும்பகோணம் | - கும்பகோணம், பாபநாசம் |
| மன்னார்குடி | - மன்னார்குடி, திருத்தருப்பூண்டி |
| நாகப்பட்டினம் | - நாகப்பட்டினம், நன்னிலம் |
| மாயூரம் | - சீர்காழி, மாயூரம் |
| பட்டுக்கோட்டை | - பட்டுக்கோட்டை, அறந்தாங்கி |

## கிழக்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்

| வட்டங்கள் | | வட்டாரங்கள் |
|---|---|---|
| மன்னார்குடி | - | நீடாமங்கலம், மன்னார்குடி, கோட்டூர் |
| திருத்தருப்பூண்டி | - | முத்துப்பேட்டை, திருத்தருப்பூண்டி, தலைஞாயிறு, வேதாரணியம் |
| மாயூரம் | - | மாயூரம், செம்பொன்னார் கோயில், குத்தாலம் |
| சீர்காழி | - | சீர்காழி, ஆனைக்காரன் சத்திரம் |
| நாகப்பட்டினம் | - | நாகப்பட்டினம், திருவாரூர், கீவளூர் |
| நன்னிலம் | - | திருமருகல், நன்னிலம், கொடவாசல், கொரடாச்சேரி |

## மேற்குத் தஞ்சாவூர் அபிவிருத்தி மாவட்டம்

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | - | தஞ்சாவூர், திருவையாறு, பூதலூர் |
| ஒரத்தநாடு | - | திருவோணம், ஒரத்தநாடு |
| பட்டுக்கோட்டை | - | பட்டுக்கோட்டை, சேதுபாவா சத்திரம், பேராவூருணி, மதுக்கூர் |
| அறந்தாங்கி | - | அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் |
| கும்பகோணம் | - | கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் |
| பாபநாசம் | - | அம்மாப்பேட்டை, வலங்கைமான், பாபநாசம் |

## இந்தியப் பாராளுமன்றத் தொகுதிகள் (4)

1. கும்பகோணம்
2. நாகப்பட்டினம்
3. மாயூரம்
4. தஞ்சாவூர்

## தமிழ் நாடு சட்டசபைத் தொகுதிகள் (20)

| | |
|---|---|
| அதிராம்பட்டினம் | பட்டுக்கோட்டை |
| ஆடுதுறை | சீர்காழி |
| அறந்தாங்கி | தஞ்சாவூர் |
| கந்தர்வகோட்டை | திருத்தருப்பூண்டி |
| கும்பகோணம் | திருவையாறு |
| மன்னார்குடி | பொறையார் |
| மாயூரம் | குடவாசல் |
| நாகப்பட்டினம் | திருவாரூர் |
| நன்னிலம் | வேதாரணியம் |
| பாபநாசம் | சாலியமங்கலம் |

## தஞ்சை மாவட்டம் பயனடைந்துள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள்

| பெயர் | ஆண்டு | செலவு ரூபாய் | ஏக்கர் |
|---|---|---|---|
| கீழ்க் கொள்ளிடம் (அணைக்கரை) அணைக்கட்டு | 1903 | 30 லட்சம் | 24,000 |
| மேட்டூர் அணையும் கால்வாய்களும் | 1934 | $7\frac{1}{4}$ கோடி | 2,65,000 |

## தஞ்சாவூர் அளவைகள்

2 படி – 1 மரக்கால் அல்லது குறுகணி
$\frac{1}{2}$ மரக்கால் – 1 பதக்கு
24 படி - 1 கலம்
144 சதுர அடி - 1 குழி
100 குழி – 1 மா
4 மா - 1 காணி
20 மா – 1 வேலி ($6\frac{74}{121}$ அல்லது ஏறத்தாழ $6\frac{5}{8}$ ஏக்கர்)
3 குழி - 1 செண்டு
300 குழி – 1 ஏக்கர்

ஒரு மைல் என்பதைக் குறிப்பிட 'முக்கால் நாழிகை வழி' என்பர்.

**பயனுள்ள செய்திகள் தெரிவித்து உதவியவர்கள்**

சர்தார் அ. வேதரத்னம், எம். எல். ஏ.

திரு. சுயம்பிரகாசம், பி. ஏ., பி. எல். முன்னாள் எம்.எல்.ஏ

திரு. எஸ். இராமச்சந்திர பத்தர், டிப்டி கலெக்டர்

திரு. ஏ. ஆர். மாரிமுத்து, எம். எல். ஏ.

திரு. அன்பு வேதாசலம், ஆசிரியர், "புதுமைக்குரல்", பட்டுக்கோட்டை

திரு. கே. ஆர். சம்பந்தம், எம். பி., மாயூரம்

திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் (தஞ்சை மாவட்டத்தின் முன்னாள் துணைக் கலெக்டர்)

திரு. டி. எஸ். கிருஷ்ண ராவ், சதர்ன் ரயில்வே மாகசின் ஆசிரியரும் தஞ்சை அரிமாச் சங்கச் செயலரும்

காப்டன் முருகையன், முதல்வர், சரபோசி கல்லூரி

திரு. எஸ். எம். கிருஷ்ணன், ஆசிரியர், பொறியியற் கல்லூரி, கிண்டி

திரு. பழ. மாணிக்கம், ஆசிரியர், பொருளாதாரத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

திரு. வை. சுந்தரேச வாண்டையார், கல்வெட்டாராய்ச்சிப் பேரறிஞர்

திரு. வாசுதேவ சாத்திரியார், ஆராய்ச்சிப் பேரறிஞர், சரசுவதி மகால், தஞ்சை

திரு. டி. என். காளிதாச ஐயர், வழக்கறிஞரும் தஞ்சை இரயில் பயணிகள் சங்கத் தலைவரும்

திரு. தி. கி. சுந்தரமூர்த்தி, தமிழாசிரியர், தியாகராசர் நன்முறை உயர்நிலைப்பள்ளி, மதுரை.

திரு. அரங்க நெடுமாறன் (அர. கலிய பெருமாள்), முன்னாள் மேலாளர், இராசாச் சத்திரம், தஞ்சை

திரு. கே. எம். வேங்கடராமையா, முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்

திரு. வெள்ளைவாரணம், விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்

திரு. செகன்னுதன், கோடிக்கரை

திரு. என். ஆர். இராமானுசம், ஆசிரியர், "காவேரி", கும்பகோணம்

திரு. செயராமன், நிருபர் "ஹிந்து", தஞ்சாவூர்

திரு. இராம கோபாலன், திரு. கிருட்டினன், மாணவர்கள், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்

திரு. ஏகாம்பரநாத நாட்டார், துணைத் தலைமையாசிரியர், வீரராகவ உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்

இசையரசு பேராசிரியர் எம். எம். தண்டபாணி தேசிகர்

திரு. T. சம்பத், எம். ஏ., எல். எல். பி., கல்வியமைச்சரவை, புதுடில்லி

திரு. உரோகிணி கிருட்டினன், செலாளர், தஞ்சை இலக்கியக் கழகம்.

திரு. வே. சண்முகம், அறந்தாங்கி.

திரு. R. கணேசன், பிரஸ் இன்பர்மேசன் பியூரோ, சென்னை.

திரு. S. சுவாமிநாதன், ஆசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, பாபநாசம்

திரு. இராமலிங்கம் பிள்ளை, சிக்கல்

திரு. நா. அண்ணுமலை, பி. காம். (ஆனர்ஸ்), நாகப்பட்டினம்.

திரு. வ. சுப. சொக்கலிங்கம், ஒரத்தனுடு.

புலவர் திரு. சிங்காரவேலன், பி. ஏ., முதல்வர், தருமையாதீனத்துத் தமிழ்க் கல்லூரி

திரு. கல்யாணசுந்தர தேசிகர், தருமையாதீனம்.

திரு. மாரியப்பன், ஒரத்தனுடு

திரு. ஏ. வெங்கட்டராமன், L.C.E, திருக்காட்டுப்பள்ளி

திரு. நாகராசன், திருக்காட்டுப்பள்ளி

திரு. கரு. ஆவுடையப்பன், திருப்பனந்தாள்

| நகரங்களுக்கிடையே உள்ள தொலைவு. (கி. மீ.) | அறந்தாங்கி | கும்பகோணம் | மன்னார்குடி | மாயூரம் | நாகப்பட்டினம் | நன்னிலம் | ஒரத்தநாடு | பாபநாசம் | பட்டுக் கோட்டை | சீர்காழி | தஞ்சாவூர் | திருவையாறு | திருவாரூர் | தரங்கம்பாடி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அறந்தாங்கி | — | 133 | 80 | 163 | 133 | 136 | 70 | 118 | 40 | 183 | 93 | 106 | 106 | 163 |
| கும்பகோணம் | 133 | — | 38 | 35 | 64 | 38 | 62 | 14 | 70 | 56 | 40 | 38 | 38 | 61 |
| மன்னார்குடி | 80 | 38 | — | 69 | 54 | 42 | 24 | 38 | 34 | 86 | 38 | 51 | 26 | 91 |
| மாயூரம் | 163 | 35 | 69 | — | 59 | 26 | 98 | 48 | 102 | 21 | 75 | 74 | 42 | 26 |
| நாகப்பட்டினம் | 133 | 64 | 54 | 59 | — | 32 | 106 | 80 | 85 | 80 | 83 | 96 | 22 | 25 |
| நன்னிலம் | 136 | 38 | 42 | 26 | 32 | — | 66 | 77 | 90 | 46 | 72 | 99 | 16 | 51 |
| ஒரத்தநாடு | 70 | 62 | 24 | 98 | 106 | 66 | — | 46 | 24 | 118 | 22 | 35 | 51 | 117 |
| பாபநாசம் | 118 | 14 | 38 | 48 | 80 | 77 | 46 | — | 72 | 70 | 26 | 37 | 58 | 75 |
| பட்டுக்கோட்டை | 40 | 70 | 34 | 102 | 85 | 90 | 24 | 72 | — | 126 | 46 | 58 | 59 | 115 |
| சீர்காழி | 183 | 56 | 86 | 21 | 80 | 46 | 118 | 70 | 126 | — | 96 | 110 | 62 | 32 |
| தஞ்சாவூர் | 93 | 40 | 38 | 75 | 83 | 72 | 22 | 26 | 46 | 96 | — | 13 | 58 | 101 |
| திருவையாறு | 106 | 38 | 51 | 74 | 96 | 99 | 35 | 37 | 58 | 110 | 13 | — | 70 | 99 |
| திருவாரூர் | 106 | 38 | 26 | 42 | 22 | 16 | 51 | 58 | 59 | 62 | 58 | 70 | — | 67 |
| தரங்கம்பாடி | 163 | 61 | 91 | 26 | 25 | 51 | 117 | 75 | 115 | 32 | 101 | 99 | 67 | — |